| (எ) | மூல ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படாத ரூபா36,659,356முற்கொடுப்பனவு மீதி 2004 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான நிலுவைகள் ஆவதுடன் இந்த மீதிகள் தொடர்பில் இனங்கண்டு நிதிக் கூற்றுக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 | முற்கொடுப்பனவு மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2004 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான முற்கொடுப்பனவு மீதி தொடர்பான தகவல் சேகரிப்பு குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும், போதிய சான்றுகளை திரட்ட முடியவில்லை. | 2024.10.11 வரைஅந்த முற்கொடுப்பனவு மீதிகளுக்கான போதியளவ சான்றுகள் சேககரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.17 இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம்

| | மொத்தச் சொத்துக்கள் | மொத்தப் பொறுப்புக்கள் | உரிமை | வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 2021 | - | - | - | - | - |
| 2022 | - | - | - | - | - |
| 2023 | - | - | - | - | - |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் வருடம் | கணக்காய்வு தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கை | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்பாட்டு நிலைமை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2003 ஒக்தோபர் 07 திகதிய CFC/GM/CIR/51 இலக்கங் கொண்ட கூட்டுத்தாபனத்தின் உள்ளக சுற்றறிக்கையின் மூலம் கடன் விற்பனவு உடனடியாக இடைநிறுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021.12.31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மொத்த மீன் விற்பனை பெறுமதி ரூபா 261,549,254 தொகையாக காணப்பட்டதுடன், இவற்றில் 5 வருடங்களுக்கு மிகையான வெளி கடன்பட்டோர் மீதி ரூபா 28,831,013 தொகையும் ஊழியர்களுக்கு மீன் விற்பனவில் தீர்க்கப்படாத கடன்பட்டோர் மீதி மற்றும் வைத்தியசாலை கடன்பட்டோர் மீதி ரூபா 17,497,325 தொகையும் காணப்பட்டது. | 2020/2021<br>கொடுக்கல் வாங்கல் அறிக்கை | உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் அதனை கடைபிடிக்காத உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிறுவனத்தின் விற்பனவு அதிகரிப்பதற்காக வெளித் தரப்பினருக்கு கடன் அடிப்படையின் மீது விற்பனை மேற்கொள்ளப்பட்டதுடன் நிறுவனத்தில் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு உள்ளக உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் உள்ளக சுற்றறிக்கையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அறிக்கையின் பரிந்துரைகள் செயல்படுத்தப்படாததடன்இது தொடர்பாக 2024.07.12தேதியிட்ட CFC/CH/DGMM/CIRCULAR/2024-01 ஆம் இலக்கபுதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எவ்வாறாயினும் சுற்றறிக்கைக்கு முரணாக கடனிற்காக மீன் விற்பனை செய்த உத்தியோத்தருக்கு எதிராக இது வரை நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை. | | | | |
| (ஆ) | 2022 ஒக்தோபர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய திறைசேரி பிணை முறிகள் மீது வங்கிக் கடன் மீதி ரூபா 158,623,208 தொகையாகக் காணப்பட்டதுடன் அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூபா 34,531,894 தொகை மற்றும் 1257 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கிக் கூற்றின் படி வங்கி மேலதிகப் பற்று ரூபா 25,491,592 தொகையாக காணப்பட்டதுடன் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டமடைவதினால் இந்த சீரற்ற நிதிநிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கு முடியாமல் இருந்தது. | 2020/2021<br>கொடுக்கல் வாங்கல் அறிக்கை | கூட்டுத்தாபனத்தின் எதிர்கால நிலைத் திருத்தல் தொடர்பாக ஆபத்து நிலைமை காணப்படுவதனால் முகாமைத்துவம் இது தொடர்பாக கடுமையாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | குறிப்பிட்ட திறைசேரி பிணைமுறியின் மீது பெற்றுக் கொண்டிருந்த வங்கிக் கடனை செலுத்துவதற்காக இலங்கை வங்கி மற்றும் திறைசேரியுடன் உயர் முகாமைத்துவத்தினால் கலந்துரையாடியிருந்ததுடன், உரிய செய்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 2024 யூலை 19 கணக்காய்வுத் திகதி வரையில் பொதத்திறைசேரியின் கருவூல உத்தரவாதத்தின் மீதான வங்கி மீதி ரூபா 158.6 மில்லியனாக இருந்ததடன் அன்றைய திகதியில் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 90.5 மில்லியனாக அதிகரித்துள்ளது .கணக்கு இலக்கம் 1257 இன் வங்கி மேலதிகப்பற்று 2024 பெப்ரவரி முதல் ஆகஸ்ட் 31 வரை ரூபா 29,807,261 ஆக மாறாமல் காணப்பட்டது. |
| (இ) | நிதிப்பிரமாணம் 103(இ) பிரகாரம் காணாமல் போதல், சேதமடைதல் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்பு சொல்ல வேண்டியவர்களை தீர்மானிக்க வேண்டியிருந்த போதிலும் காலி ஐஸ் இயந்திர அறையில் 2021.10.08 திகதிய இருப்புக்களின் பௌதீக பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட அமுக்கி இயந்திரத்தின் உதிரிப் பாகங்கள் | 2020/2021<br>கொடுக்கல் வாங்கல் அறிக்கை | இந்த நட்டத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானிப்பதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக தாபன மட்டத்தில் முறையான மற்றும் நிதி விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் காணாமல் போன உதிரிப் பாகங்களின் தற்போதைய சந்தைப் பெறுமதியின் மதிப்பீட்டு பெறுமதி பெற்றிருந்ததுடன் இந்த காணாமல் | 2024.07,24 அம் திகதி வரை நி.பி 103(இ) பிரகாரம் விசாரணைநடாத்தப்பட்டுபொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணாமல் போதல் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானித்தல் இது வரை மேற்கொண்டிருக்காததுடன் இந்த அமுக்கி இயந்திரத்தின் பெறுமதியும் கணக்காய்விற்க சமர்ப்பிக்கப்படவில்லை. | | | போதல் தொடர்பாக காலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளதுடன் , அதற்குரிய விசாரணை ஒன்று தற்போது நடாத்தப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுமதி கூட்டிய வரித் தொகை அனைத்து மாதங்களிலும் 20 திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 19,696,372 இற்கான தொகையொன்று அனுப்பப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | 2020/2021 கொடுக்கல் வாங்கல் அறிக்கை | இந்த வரித் தொகை உடனடியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். | பெறுமதி கூட்டிய வரித் தொகை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிரக்கவில்லை. | 2024.06.30 இல் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்குஅனுப்ப வேண்டிய மிதி ரூபா 19,696,372ஆன தொகையொன்றாக மாற்றமின்றி காணப்பட்டது. |
| (உ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் தேசத்தை கட்டியெழுப்பும் வரித் தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 94,316,489 இற்கான தொகையொன்று தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | 2020/2021 கொடுக்கல் வாங்கல் அறிக்கை | தேசத்தை கட்டியெழுப்பும் வரி தாமதமின்றி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிலில்தீர்மானிக்கப்பட்டுள்ளது நிலுவைத்தொகை மாதாந்தம் ரூபா 500,000 வீதம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | 2024.06.30 இல் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்குஅனுப்ப வேண்டிய மிதி ரூபா.87,295,794 ஆக இருந்தது. |
| (ஊ) | 2013 செப்தெம்பர 11 திகதிய 2013/2 இலக்கங் கொண்ட அரசதொழில் முயற்சிகள் | 2020/2021 கொடுக்கல் வாங்கல் | ஊழியர் சேமலாப நிதித் தொகை மற்றும் ஊழியர் | ஊழியர் சேமலாப நிதியத் தொகை பங்களிப்பு மற்றும் மிகைவிதிப்புக் | 2024 யூன்30 இல் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| சுற்றறிக்கையின் மூலம் நிலுவை ஊழியர் சேமலாப பங்களிப்புத் தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புத் தொகையை தீர்ப்பதற்காக கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தியிருந்ததுடன் சுற்றறிக்கையின் 3.7 இன் படி மேலும் நிலுவை பங்களிப்புத் தொகை தொடர்பாக உரிய அமைச்சுச் செயலாளருக்கு அறிவித்து திறைசேரி செயலாளருக்கு பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் திறைசேரி செயலாளருடன் கலந்துரையாடி தீர்வொன்றினை அணுகுதல் அமைச்சுச் செயலாளரின் பொறுப்பொன்றாக இருந்தது. அதே போல் சுற்றறிக்கையின் 3.9 பிரிவின் படி தொடர்ந்தும் நிலுவை பங்களிப்புத் தொகை அதிகரிக்காமல் இருப்பதற்காக தலைவர், பணிப்பாளர் சபை, பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் கூட்டாக மற்றும் தனித்தனியாக கடப்பாடு இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறாயினும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாமல் காணப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகை ரூபா 321,171,209 தொகையும் மிகைவிதிப்பாக ரூபா 165,835,868 தொகையும் ஊழியர் நம்பிக்கை | அறிக்கை | நம்பிக்கை பொறுப்பு நிதியம் உரிய முறையில் குறிப்பிட்ட காலத்தில் அனுப்பப்பட வேண்டும். | கட்டணம் செலுத்தப்படாததுடன் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான தற்போதைய நிலுவைத் தொகை செலுத்தப்பட்டுள்ளபோதிலும் முந்தைய ஆண்டுகளின் மீதியான ரூபா 17,753,613 இன்னும் செலுத்தப்பட வேணடியுள்ளது.இந்த நிலுவை மீதியை செலுத்த வரிசை அமைச்சின் மூலம் திறைசேரியிலிருந்து நிதியைப் பெறுவதற்கு கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | பங்களிப்புத் தொகை ரூபா 432,881,852 உம் மிகைவிதிப்பு கட்டணங்களாக ரூபா207,768,540 உம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையாக ரூபா 15,420,275 உம் மிகைவிதிப்பு கட்டணங்களாக ரூபா7,710,137 உம் செலுத்தப்பட வேண்டியதாக காணப்பட்டன. |

பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு என ரூபா 15,420,275 தொகையும் மிகை விதிப்பாக ரூபா 7,710,137 தொகையும் காணப்பட்டது.

## 3.18 அரச மரக் கூட்டுத்தாபனம்

| | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புகள் | மூலதனம் | வரிக்கு முன்னரான இலாபம் ரூபா | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 9,207,818,718 | 2,450,611,500 | 6,757,207,218 | 1,496,155,864 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 9,588,286,776 | 1,923,131,250 | 7,665,155,526 | 1,015,986,328 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 9,562,930,913 | 1,556,142,801 | 8,006,788,112 | 1,273,734,838 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கையின் திகதியில் உள்ளபடியாக பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார பெற வேண்டியவைகளின் கணக்கில் காணப்பட்ட ரூபா 966,058,091 மீதியில் காணப்பட்ட ஒரு வருடம் முதல் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 240,299,687 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023<br>2022 | பெறவேண்டிய பணத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ரூபா 966 மில்லியனான வியாபாரக் கடன் பட்டோரினுள் ரூபா 603 மில்லியன் இலங்கை புகையிரதத் திணைக்களத்திடமிருந்து சிலிப்பர் கட்டைகளை விநியோகிப்பதற்காக பெற வேண்டிய பணம் ஆகும். ருஹுனு பல்கலைக்கலகம், வ.பா.தி., நி.அ.தி. ஆகியவற்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | 2024 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 240,299,687 ஆன தொகையை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | உமா ஓயா கீழ் அபிவிருத்தி | 2023 | கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்த | 2024 செப்தம்பர் 30 ஆந் திகதி | விசாரணை குழுவை நியமிக்க |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வேலைத் திட்டங்களில் கும்புக் கந்தன் விற்பனையின் போது ஏற்பட்டதாக வெளிப்படுத்தப்பட்ட ரூபா 2,952,271 நட்டம் மற்றும் பண்டாரவளை பிரதேசத்தில் பிணைப் பணம் விடுவிக்கும் போது ஏற்பட்ட மோசடிகளின் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 685,109 ஆன நட்டம் முறையே 10 தவணைகளின் போது மற்றும் 07 தவணைகளின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கலந்துரையாடப்பட்ட போதிலும், பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்து நட்டத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | | நட்டத்தை அது தொடர்பான தரப்பினரிடம் இருந்து தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விசாரணைக் குழுவை நியமிப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட குழு உறுப்பினர்களின் பெயர்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளன. | ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. |
| (இ) | 2018 ஒக்டோபர் 10 ஆம் திகதிய இலக்கம் 422 என்ற நீதி சேவைகள் ஆணைக்குழுவின | 2023 | சுற்றறிக்கையின் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு மரங்களுக்கான | இலக்கம் 422 என்ற நீதிச் சேவை ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளும் | வனக் குற்றங்களால் மரங்களுக்கு ஏற்படக்கூடிய சேதங்கள் தொடர்பில் |

| | | | |
|---|---|---|---|
| ால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் வழிகாட்டலின் பிரகாரம் குற்றங்களின் மரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வன குற்றங்களில் மரங்களை அழித்தல், மர முகாமைத்துவம் மற்றும் களஞ்சிய வசதிகள் முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு வசதியீனமாக இருந்தமை போன்ற சீரற்ற நிலைமைகளை கூட்டுத்தாபனம் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்ததுடன், கண்டி பிரதேசத்திற்காக மாத்திரம் மரக் குற்றிகளின் கன டெசிமீற்றர் 159,904 மற்றும் கிழிக்கப்பட்ட மரங்களின் கன டெசிமீற்றர் 30.933 உக்கியிருந்தமையும் களஞ்சிய இட வசதிகள் காணப்படாதிருந்தமையும் | இழப்புக்களை தவிர்த்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீதிமன்றத்திற்கு எங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இந்த மரத்தை தக்கவைக்க மட்டுமே நீதிமன்ற தீர்ப்பு கிடைத்துள்ளது. சட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில், அரச மரக் கூட்டுத்தாபனம் இதுவரை மரங்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. | நீதிமனறத்திற்கு விளக்கமளித்து 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இலக்கம் 422 கொண்ட சுற்றறிக்கையின் படி செயற்படுமாறு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | | | |
| (ஈ) | நன்கொடையாக கிடைக்கின்ற மரங்களை அகற்றுவதற்காக உரிய திட்ட முறைமையொன்று ஸ்தாபிக்காமையின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் போது அகற்றுதல் 1,157 இற்காக ரூபா 41,854,672 தொகை தனியார் ஒப்பந்த காரருக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | 2023 | நன்கொடை மரங்களை அகற்றுவதற்காக முறையான திட்ட முறைமையொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். | நன்கொடையாக கிடைத்த மரங்களை அகற்றுதல் தொடர்பில் ஆண்டுக்கு சுமார் 1,200 சம்பவங்கள் அகற்றப்படுவதால், நவீன இயந்திரங்கள் மூலம் அதைச் செய்வதற்கான திறன் குறைவாக இருப்பதால், தனியார் ஒப்பந்ததாரர்களின் உதவி எடுக்கப்படுகிறது. ஆனால் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு நவீன இயந்திரங்களைப் பெறுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கு பணிப்பாளர் சபையின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்காலத்தில் இந்த மரங்கள் துரிதமாக அகற்றப்படும். | நன்கொடையாக கிடைத்த மரங்களை அகற்றும் பணியை ஒப்பந்ததாரர்களை கொண்டு செய்விக்காது, கூட்டுத்தாபன ஊழியர்கள் மற்றும் இயந்திரங்களை பயன்படுத்தி மேற்கொள்ளும் நடைமுறை ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பள்ளேகல உற்பத்தி கூடத்தில் Dust collector இயந்திரம் மற்றும் வன குற்றங்கள் தொடர்பாக | 2023 | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பில் அதிக கவனம் | இந்த இயந்திரங்கள் பயன்படுத்த முடியாத மற்றும் காலாவதியானவை என்பதுடன் மிகக் குறைந்த செயற்திறன் கொண்டவை மற்றும் | 2024 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் 02 மரம் அறுக்கும் ஆலைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நீதிமன்றத்தில் விடுவிக்கப்பட்ட 03 நடமாடும் மர இயந்திரம், பல வருட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்று துருப்பிடித்த இடமளிக்கப்பட்டிருந்தது. | | செலுத்துதல் வேண்டும். | தொழில்நுட்பக் குறைபாடுகளுக்கு உட்பட்டவை என்பதால் அவற்றைப் பயன்பாட்டில் இருந்து அகற்றி அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளேன். 01 அறுக்கும் ஆலை விளைக்கேள்வி கோரப்பட்டு அகற்றப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள பொருட்களை அகற்ற அடுத்த விலைக்கேள்வி கோரப்படவுள்ளது. | ல்லை. |
| (ஊ) | தேவைகளை உரிய பிரகாரம் இனங்காணாமல் 2023 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 13 பிரதேச அலுவலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 35,800,075 பெறுமதியான 100 சங்கிலிகளில் (chain saw) இருந்து 75 சதவீதத்திற்கு அதிகமான அளவு செயற்திறனாக பயன்படுத்துவத்றக | 2023 | தேவைகளை சரியான இனங்கண்டு கொள்வனவு செய்யும் செயற்பாடுகளை முறைமைப்படுத்தி நிறுவனத்திற்கு ஏற்படக் கூடிய இழப்பினை குறைத்தல் வேண்டும். | திட்டமிட்டபடி வெட்டுவதற்கு வனத்துறையிடம் இருந்து போதிய அளவு வனத்தோட்டங்கள் வனப் பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து கிடைக்காததால், தற்போது சில மரம் அறுக்கும் வாள்கள் வாடகை அடிப்படையில் நகரசபைக்கு வழங்கியமையால் வனக் குற்றங்கள் / வெகுமதிகளாக மரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக 165 ஹெக்டேர் | 2024 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் இந்த மரம் அறுக்கும் வாள்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன. |

ாக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்காமையின் காரணமாக குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

தேக்கு தோட்டங்களை கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதுட்ன, இதில் சில தோட்டங்களை கூட்டுத்தாபன உத்தேச திட்டங்கள் மூலம் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இந்த மரம் அறுக்கும் வாள்களின் பயன்பாடும் அதிகரித்துள்ளது.

ஒப்பந்ததாரர்களுக்கான வாடகை அடிப்படையில் மரம் அறுக்கும் வாள்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான ஒப்பந்தமும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அவர்களுக்கு இந்த அறுக்கும் வாள்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேவையான அறுக்கும் வாள்களில் அறுப்பவர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், தேவையான பணியாளர்களை மேன்பவர் நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொள்ள

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதன்பின்னர் இந்த அறுக்கும் வாள்களின் பயன்பாட்டை உச்சமாக பெற்றுக்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (எ) | கூட்டுத்தாபனத்திற்கு 2021 ஒக்டோபர் 25 ஆம் திகதி கிடைக்கப் பெற்ற ஹப்புத்தலை ஜயமினிபுர 01/003 என்ற பைனஸ் வேலைத் தளம் மற்றும் 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த வெல்லப்பிட்டிய பைனஸ் வன பயிர்ச் செய்கையின் முழுமையாக வெட்டும் நடவடிக்கைகளுக்காக கேள்வி கோரல் அங்கீகரிப்பதற்கு அசாதாரண காலம் எடுத்தமை, உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதில் தாமதம் மற்றும் | 2023 | பெறுகை நடவடிக்கைகளை செயற்திறனான நடவடிக்கைகளாகவும் முறையாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்காக உரிய திட்டமிடப்பட்ட வேலைத் திட்டமொன்றின் ஊடாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பெல்லப்பிட்டிய பைன் வனத் தோட்டத்தில் மர விநியோகத்திற்கான பெறுகை விலைமனுக்களை அழைக்கவும் விலைகளை அங்கீகரிக்கவும் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. வீதி நிர்மாணப் பணிகள் தொடர்பாக பிரதேச சபையின் அனுமதி கிடைக்கும் வரை பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. பிரதேச சபையால் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கேற்றவாறு மேலதிக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பெறுகை நடைமுறையை செயற்திறனாக மேற்கொண்டு செயல்பாட்டு நடவடிக்கைகளை முறையாக மற்றும் செயற்திறனாக மேற்கொள்ள உரிய முறையில் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இயற்கை மரங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி பொருத்தமான காலப்பகுதியின் பிரகாரம் வெட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையின் காரணமாக 2024 மார்ச் இறுதி வரையிலும் வெட்டும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கும் இரண்டாவது வேலைத் தளத்தில் 2024 பெப்ரவரி வரையும் வெட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்க முடியாதிருந்தது. | | | | |
| (ஏ) | 1982 பெப்ரவரி 05 ஆந் திகதிய 178/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு இடையே மரத்துடன் அண்மித்த பூர்த்தி | 2022 | கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான தந்திரேதாபாய திட்டங்களைத் தயாரித்து போதியளவு முறைமையொன்றும் கட்டுப்பாட்டு முறைமையொன்று | **01. பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்தல்**<br><br>அரச மரக் கூட்டுத்தாபன தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்காக அடையாளம் காணப்பட்ட நாடுகள் சீனா, ஐக்கிய அரபு | ஏற்றுமதிச் செயல்பாட்டைச் செயல்படுத்த போதுமான கட்டமைப்புகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் நிறுவப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட மற்றும் பூர்த்தி செய்யப்படாத பொருட்களை ஏற்றுமதி செய்தல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு முறைமை மற்றும் கட்டுப்பாட்டு முறையொன்றை தாபிப்பதற்கு தவறியிருந்தது. | ம் நிறுவப்பட வேண்டும். | இராச்சியம், தென் கொரியா, ஜப்பான், ஜெர்மனி, இந்தியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா இதுவரை, சியரா லியோன், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், இந்தியா, நோர்வே மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 76 க்கும் மேற்பட்ட தளபாடங்கள் (தோராயமாக ரூபா 4,357,311.50) ஆன பெறுமதிக்க 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரை தளபாட இறக்குமதிக்கு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளன.<br><br>**02. வெளிநாட்டு நிறுவனங்களுடனான ஒப்பந்தத்தின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்தல்**<br>இதனடிப்படையில் ஒரு நடைமுறைமை தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டதுடன், அதனை மேலும் திட்டமிட்டு விரிவாக முன்வைக்குமாறு பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஐ) | கொமதியகல 01/22 வேலைத் தளத்தில் 2017 ஆம் ஆண்டின் போது இடம்பெற்றிருந்த முறைகேடுகள் தொடர்பாக குற்றச்சாட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்த ஊழியர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமையால் அந்த உத்தியோகத்திற்கு பதவி உயர்வினை வழங்குவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருந்தது. | 2022 | முறைகேடுகளை மேற்கொள்வதை தவிர்ப்பதற்காக பலமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று மேற்கொள்வதற்கும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்ட ஊழியர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கும் பதவி உயர்வு வழங்குதலை முறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பணிப்பளர் சபையின் அறிவுறுத்தலின்படி, இது தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணை தற்போது நடைபெற்று வருகிறது. | முறையான ஒழுக்காற்கு விசாரணை நடத்தப்படவில்லை. |
| (ஒ) | 2020 ஜனவரி 09 ஆம் திகதி முதல் 2022 மார்ச் 10 வரை கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரால் பயன்படுத்தப்பட்ட Dell laptop ஒன்று Samsung Tab ஒன்று மற்றும் Samsung Mobile Phone 01 | 2022 | குறித்த சொத்துக்களை கையேற்பதற்கோ அல்லது சந்தை பெறுமதியை அறவிடு வதற்கு? தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதுவரை 532,949/- தொகை கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டதுடன், அது தொடர்பில் வழக்கு தொடர தேவையான ஆவணங்கள் தலங்கம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள | 2024 செப்டம்பர் 30 வரை, தொடர்புடைய சொத்துக்களை சுவீகரிப்பதற்கு அல்லது சந்தை பெறுமதி அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போன்வற்றை கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்காமல் இருந்ததன் காரணமாக அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கணக்கிடப்பட்ட ரூபா 529,199 ஆன சந்தை பெறுமதி மற்றும் மீண்டும் கையேற்பதற்கு செலவிட வேண்டிய செலவினத்தில் 25 சதவீதம் உட்பட மொத்தம் ரூபா 532,949 அறவிடப்பட்டு இருக்கவில்லை. | | | தாகவும் தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், இதுவரை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாததால், 2024.09.03 அன்று நுகேகொடைக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபருக்கு நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஓ) | பூஸ்ஸ தொழிற்சாலையின் இயலுமை உடன் கூடிய பொருத்தமான ஒப்பந்தகாரர்களுக்கு ஒப்பந்தம் கையளிக்காமை மற்றும் தொழிற்சாலையின் முறையற்ற திட்டமிடல் காரணமாக 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து | 2022 | நடைமுறை வேலைகளை விரைவில் முடித்து விற்பனை செய்வதற்கும், தேவையை கண்டறிந்து, உற்பத்தி பணிகளை திட்டமிட்டு, திறமையுடைய தகுந்த ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தங்களை ஒப்படைப்பதற்கும், விற்பனை செயற்பாடுகளை | தற்போது, பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தளபாடங்களின் பகுதியளவு உற்பத்தி நிறைவடைந்துள்ளதுடன், எதிர்காலத்தில் இந்நிலை ஏற்படாதவாறு தொழிற்சாலைப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2024 செப்டம்பர் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக நடைமுறை | பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தளபாடங்களின் உற்பத்தி பூர்த்தி செய்யப்படவில்லை என்பதுடன் போதுமான விற்பனை மேம்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வரும் நடைமுறை வேலைகளில் பெறுமதி ரூபா 21,689,756 ஆக இருந்ததுடன் காலத்துக்குரிய தேவைப்பாடு இணங்காமல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்தாமை காரணமாக 2022 ஜூலை 31 இல் உள்ளவாறு பயன்படுத்தாமல் காணப்படும் இருப்பின் பெறுமதி ரூபா 65.5 மில்லியனாக இருந்தது. | | ஊக்குவித்து, உற்பத்தியை செயற்திறனான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | வேலைகளின் பெறுமதி ரூபா 21,509,128.42 ஆகவும், அறுக்கப்பட்ட மர இருப்பு அளவு 139,425 கன மீட்டராகவும் உள்ளது. | |
| (ஈ) | வருடாந்த விற்பனை தேவைப்படின் அடிப்படையில் உற்பத்தி தேவைப்பாடு எதிர்வுகூறல் சிறந்த இருப்பு கட்டுப்பாட்டு முறையை பின்பற்றி முறையான மற்றும் போதிய அளவு களஞ்சியத்தை பேணுதல் செயற்திறனான உற்பத்தி செயற்பாட்டை நிறுவுதல் போன்ற | 2022 | வருடாந்த விற்பனைத் தேவைகள் அடிப்படையில் உற்பத்தி எதிர்வுகூறல் முறையான மற்றும் போதுமான களஞ்சியங்களைப் பராமரித்தல் மற்றும் திறமையான உற்பத்தி செயல்முறையை நிறுவுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக உயர் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட | அதிக கேள்வியுள்ள சந்தைப்படுத்தல் திட்டத்திற்குரிய தளபாடங்களே தற்போது உற்பத்தி செய்யப்படுவதால் எதிர்காலத்தில் இந்த நிலை ஏற்படாது. விற்பனைத் துறையிடம் இருந்து வரும் ஆர்டர்களின் அடிப்படையில் இதுவரை பாலிஷ் செய்யப்படாமல் இருந்த பர்னிச்சர்களின் அளவு பாலிஷ் செய்யப்பட்டு ஷோரூமுக்கு வெளியிடப்படுகிறது. | வருடாந்த விற்பனைத் தேவையின் அடிப்படையில், உற்பத்தி எதிர்வுகூறலை உருவாக்குதல், வழக்கமான மற்றும் போதுமான களஞ்சிய வசதிகளை பராமரித்தல் மற்றும் செயற்திறனான உற்பத்தி செயல்முறையை நிறுவுதல் ஆகியவற்றில் உயர் முகாமைத்துவத்தின் கவனம் |

| | | |
|---|---|---|
| விடயங்கள் தொடர்பாக உயர்மட்ட முகாமைத்துவ கவனம் செலுத்தாத காரணத்தினால் 2012 ஆம் ஆண்டு முதல் 2022 ஜூலை 31 ஆம் திகதி வரை உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 68,239,793 கிரயத்திலான மிகை தளபாட இருப்பொன்றும் 2022 ஆம் ஆண்டில் எவ்வித விற்பனை ஒன்றும் மேற்கொள்ளப்பட விருந்த ரூபா 7,152,896 பெறுமதியான 32 தளபாட உருப்படிகளும் மிகவும் மெதுவாக விற்பனை செய்யப்படும் ரூபா 3,132,100 பெறுமதியான 12 தளபாட உருப்படிகளும் 2012 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை உற்பத்தி செய்யப்பட்ட போதும் ஒப்பம் இடப்படாத ரூபா 20,474,207 பெறுமதியான | வேண்டும். | செலுத்தப்படல் மந்தகதியில் காணப்பட்டதுடன், 2024.09.30 ஆந் திகதியில் பூஸ்ஸ கண்காட்சி களஞ்சியத்தில் உள்ள தளபாடப் பொருட்களின் இருப்பின் பெறுமதி ரூபா 99,966,756.60 ஆகும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தளபாடங்கள் என்றும் பூஸ்ஸ காட்சியகத்தின் களஞ்சியத்திலும் தொழிற்சாலைகளிலும் காணப்பட்டன. | | | | |
| (க) | கூட்டுத்தாபனத்தினால் தளபாட உற்பத்திக்காக எடுக்கப்படும் உழைப்பு மணித்தியாலம் மதிப்பீடு செய்யப்பட்டு இருந்த போதும் உள்ளவராக செலவிடப்பட்ட உழைப்பும் மணித்தியாலங்களுடன் ஒப்பிட்டு உழைப்பாளிகளின் செயற்திறன் மற்றும் வினைத்திறனை அளவிடுவதற்கு நடைமுறை ஒன்று தயாரிக்கப்படாமை காரணமாக உழைப்பாளிகளின் செயற்திறன் மற்றும் வினைத்திறனை ஈடுபடுத்தியதாக உறுதிப்படுத்த முடியாது இருந்தது. | 2022 | பணியாளர்களின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அளவிடுவதற்கு ஒரு முறை உருவாக்கப்பட்டு தளபாடங்களை உற்பத்தி செய்வதற்கு எடுக்கப்படும் உண்மையான உழைப்பு மணித்தியாலத்தின் அடிப்படையில் தளபாடங்களின் கிரயத்தைக் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும. | கிரய மதிப்பீடுகளை தயாரிக்கும் போது, ஒரு நாளைக்கு 08 மணிநேரம் வேலை செய்வதைக் கருத்தில் கொண்டு ஊழிய கிரயம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஊழியக் கிரயம் என்பது தளபாடங்களின் உருப்படியின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறதுடன், ஒரு பொருளை உற்பத்தி செய்து நிறைவடையும் போது அவரின் நாளாந்த சம்பளத்திற்கு பொருந்தும் வகையில் அது உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை கருத்திற்கொள்ளும் இயலுமை உள்ளது. உற்பத்தி வரிசையொன்று (production line) மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு பணியாளரினால் மேற்கொள்ளப்படும் பணிகள் அளவீடு | ஊழிய செயற்திறன் மற்றும் ஆக்கபூர்வமான தன்மையை அளவீடு செய்வதற்காக, தளபாடங்களின் உற்பத்திக்காக எடுக்கும் உள்ளபடியாக ஊழிய மணித்தியாலங்களின் அடிப்படையில் தளபாட கிரயத்தினை கணிப்பீடு செய்வதற்கும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் நடைமுறையொன்று உருவாக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | செய்யப்பட்டு, பதிவு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தொழிற்சாலைகளை மீள்கட்டமைப்பு செய்வதற்காக கோப் குழவினால் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ள துடன், அதன் போது தொழிற்சாலை மனிதவள கணக்காய்வொன்று மற்றும் இயந்திரங்கள் மற்றும் பொறிகளின் வேலை காலம் தொடர்பில் குழுவொன்றின் மூலம் அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட வுள்ளது. குறித்த அறிக்கை கிடைத்த பின்னர் ISO தர முகாமைத்துவ முறைமைக்கிணங்க பின்தொடர்தல் மேற்கொள்வதற்காக நடைமுறையொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (எ) | அம்பாறை அரிமரத் தொழிற்சாலையில் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான | 2022 | பலகையாக மாற்றும் போது உயர் விளைச்சளை பெற்றுக்கொள்ளக் கூடிய நுட்ப முறைமையில், | 2023 மற்றும் 2024.01.01 முதல் 2024.09.30 வரை, பயன்படுத்தப்பட்ட மரத்தின் அளவு முறையே 531.01 கன டெசிமீட்டர்கள் | 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மரக்கழிவுகள் 50 சதவீதத்தைத் தாண்டியதால், மரக்கழிவுகளைத் தடுக்கவும், மர |

| | | | |
|---|---|---|---|
| காலப்பகுதியில் பலகைகளாக மாற்றுவதற்காக கொண்டு வரப்பட்டிருந்த மரங்களின் அளவு 3,512,926 கன டெசி மீட்டர் ஆக இருந்ததுடன் முடிவுப் பொருளாக பெற்ற பலகைகளின் அளவு 1,806,397 கன டெசி மீட்டராக இருந்தமையால் பலகையாக மாற்றும் போது இடம்பெற்றிருந்த விரயம் 1,706,529 கன டெசி மீற்றராக அதாவது 49 சதவீதம் ஆக இருந்தது. சில செயற்பாடுகளுக்காக தேவைப்பாட்டை மிகைத்து 32 சதவீதம் கூடுதலாக 454,496 கன டெசீ மீட்டர் அளவிலான பலகை வழங்கப்பட்டிருந்ததாகவும் அரியப்பட்ட ரூபா 295,712,614 பெறுமதியான 3,718,422 கன டெசி மீற்றர் | மரக்கழிவுகளைத் தடுக்கவும், உற்பத்தி செயற்திறனாக அதிகரிக்கவும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மற்றும் 177.21 கன டெசிமீட்டர்கள் மற்றும் அதன் வெளியீடு 265.68 கன டெசிமீட்டர்கள் மற்றும் 84.03 கியூபிக் டெசிமீட்டர்கள ஆகும். 2024.09.30 ஆந் திகதியில் உள்ளபடியாக அறிந்த மர இருப்பு 940.38 கன டெசிமீட்டராகவும், அதன் மதிப்பு ரூபா 82,634,655 ஆகவும் இருந்தது. | மாற்றத்தில் அதிகபட்ச மர உற்பத்தியை அடையக்கூடிய தகுந்த மரம் மற்றும் தொழில்நுட்பங்கைளப் பயன்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அளவிலான பாரிய பலகை இருப்பொன்று செயற்திறனான பயன்பாட்டிற்கு பொருத்தமான வேலை திட்டம் ஒன்று இல்லாமையால் குவிக்க வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | | |
| (උ) | 2006 இன் அரச பெறுகை வழிகாட்டி கோவையின் 6.2.2 வழிகாட்டலின் பிரகாரம் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய விலைகோரல் ஆகக் குறைந்தது 21 நாட்கள் கேள்விக் காலம் ஒன்று வழங்கப்பட வேண்டிய போதிலும் குருநாகல் பொல்பித்திகம கிராம பிட்டுவில் 6 ஹெக்டேயர் 01/008 C வேலை தளத்தில் 1720 தேக்கு மரங்களை வெட்டுவது தொடர்பாக 03 சந்தர்ப்பங்களில் கேள்வி கோரி 02 | 2022 | 2006 இன் அரச பெறுகை வழிகாட்டி கோவையின் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ஏற்படக்கூடிய முறைகேடுளைத் தவிர்ப்பதற்கு பலமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தாபிக்க வேண்டும். | இப்போதும் விசாரணைகள் தொடர்பான கோப்புகள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் சபையில் தக்கவைக்கப்பட்டுள்ளது. | இலஞ்ச, ஊழல் சாட்டுதல்கள் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விட குறைந்த கேள்வி காலம் வழங்கப்பட்டிருந்ததுடன் முதலாவது கேள்வி கோரலின் போது தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் உடன்படிக்கை செய்யப்படாத கேள்விதாரருக்கு மூன்றாவது கேள்வி கோரலின் போது அதுவரை அகற்றப்பட்டிருந்த 290 மரங்களுடன் மொத்த மரம் அளவையும் அகற்றுவதற்கு ஒப்பந்தம் வழங்கியிருந்தமை சர்ச்சைக்குரிய விடயம் ஒன்றாக அவதானிக்கப்பட்டது. | | | | |
| (ஏ) | அம்பாறை மனைப் பொருள் காட்சியகத்தில் கடன் விற்பனைகளிலிருந்து அறவீடு செய்ய வேண்டியுள்ள பணம் ரூபா 13,091,111 ஆக | 2021 | கடனை நாளது வரையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதுடன் அறவிடப்படாத கடனை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான | அம்பாறை மரச்சாமான்கள் வளாகம் மற்றும் அனுராதபுரம், மதவாச்சி களஞ்சியங்களிலிருந்து அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் கஹட்டகஸ்திலிய நீதிமன்ற தொகுதிக்காக | 2024 செப்டம்பர் 30 ஆந் திகதி வரை, கஹடகஸ்திகிலிய நீதிமன்ற வளாகத்தில் இருந்து பதிவழிக்கப்பட வேண்டிய ரூபா 3.5 மில்லியன் பதிவழிக்கப்படாமையால் ரூபா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இருந்ததுடன் அதில் ரூபா 7,767,938 தொகை 02 ஆண்டுகளை மிகைத்திருந்தது. இக்கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடனடிப்படையில் வழங்கப்பட வேண்டிய மரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 7,767,938 நிலுவைத் தொகையானது அந்த நிறுவனங்களினால் அறுக்கப்பட்ட பலகைகளை கொள்வனவு செய்ய வைப்புச் செய்யப்பட்ட ரூபா 3.5 மில்லியனான முற்பணத் தொகையில் தீர்க்கப்பட ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>பின்வரும் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய அனைத்துத் தொகைகளும் இதுவரை அறவிடப்பட்டுள்ளன.<br>ஆதார வைத்தியசாலை – மட்டக்களப்பு – ரூபா 1,250,782.00<br>ஆதார வைத்தியசாலை – பதுளை – ரூபா 1,335,319.00<br>உயர் நீதிமன்றம் – அம்பாறை – ரூபா 115,344.00 | 10,389,666 தொடர்ந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. |
| (ல) | 2018 ஆம் ஆண்டில் | 2021 | சபையின் ஒழுக்காற்று | – முறையான ஒழுக்காற்று | முறையான ஒழுக்காற்று |

| | | | |
|---|---|---|---|
| ரொப்கில் வேலைத்தளத்தில் யுகலிப்டஸ் வகையான 2172 மரங்களை முழுமையாக தயாரிக்கும் போது இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதனுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கோவையின் “4 ஆம் அத்தியாயத்தில்” குறிப்பிட்ட ஒழுக்காற்று நடைமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (இரண்டு புதிய விசாரணை உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.)<br>– உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிரான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன.<br>– சேதங்களை வசூலிப்பது தொடர்பான சட்டமா அதிபரின் அறிவுரைக்கமைய ஒப்பந்ததாரர்கள் தொடர்பாக தனித்தனி கோவைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான முதற்கட்ட சட்ட விவாதம் நடத்தப்பட்டுள்ளது.<br>– நி.பி. 104 இன் கீழ், கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தின் அளவைக் கணக்கிடுவதற்கு | விசாரணை இடம்பெற்றவாறு உள்ளது. |

ஒரு அமைச்சின் உத்தியோகத்தரை உள்ளடக்கிய நி.பி. குழு நியமிக்கப்பட்டுள்ளது.

### 3.19. மத்திய சுற்றாடல் அதிகாரசபை

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| நிதி விளைவுகள் | | | |
| மேலதிகம்/.(குறைபாடு) | (22,121,759) | (48,482,055) | 100,819,908 |
| மொத்த சொத்துக்கள் ரூபா. | 1,493,493,106 | 1,406,894,206 | 1,539,491,382 |
| மொத்த பொறுப்புக்கள் ரூபா. | 803,344,361 | 793,054,950 | 849,496,593 |
| சமபங்கு ரூபா | 690,148,745 | 613,839,256 | 689,994,789 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | அறிக்கையின் தினத்திற்கு பரிந்தரையின் அமுல்படுத்தல் நிலைமை. |
|---|---|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/2016 இன் கீழ் உரிமையற்ற நிவாரண கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி, அதிகாரசபையின் நிறைவேற்று அதிகாரி அல்லாதோருக்கு 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் செலுத்தப்பட்ட வண்ணமுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டிற்காக மட்டும் செலுத்தப்பட்ட அந்தக் கொடுப்பனவுத் தொகை ரூபா 27,849,400 ஆகும். | 2023 | சுற்றறிக்கைகளால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக வேறு கொடுப்பனவுகள் எதுவும் செலுத்தனக் கூடாது. | அதிகார சபையின் உழைப்பில் இருந்து இந்தக் கொடுப்பனவை செலுத்துதலும் பொது திறைசேரியில் இருந்து இதற்காக நிதி கோரப்படாதிருத்தலும் என்கிற அடிப்படையில் பயணச் செலவுகளின் கீழ் இதற்கு வருடாந்த ஒதுக்கீடு செய்யப்படுகிறது. | இந்த கொடுப்பனவுகள் இடைநிறுத்தம் செய்யப்படாமல் தொடர்ந்து செலுத்தப்படுகின்றது. |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 திகதிக்கு அதிகாரசபையின் நிதி நிலைமைக் கூற்றில் செலுத்தப்பட வேண்டியவை ரூபா.422,794,332 இல் தீர்க்கப்படாது 5 வருடங்களுக்கு மேல் காணப்படும் தொகை ரூபா.208,486,003 வும், 03-05 வருடங்களுக்கு இடையில் காணப்படும் | 2023 | செலுத்த வேண்டிய உள்ள மீதியை உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த மீதிகளுள் உள்ளடக்கப்பட்டுள்ள EIA செயற்றிட்ட முன்மொழிவாளர்களினால் செயற்றிட்ட அறிக்கைகளைப் பெறுவதற்கான வைப்புத் தொகையில் இருந்து மேலும் நடந்துகொண்டிருக்கும் செயற்றிட்டங்களை | 2023 டிசம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய கணக்குகளுள் உள்ளடக்கப்பட்ட மீதிகள் 2024ஆம் ஆண்டு செப்டம்பர் 26 வரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகை ரூபா.49,488,942 வும், 02-03 வருடங்களுக்கு இடையில் காணப்படும் தொகை ரூபா.33,518,659 ஆகவும் உள்ளது. | | | கருத்தில் கொண்டு, 2024 ஆம் ஆண்டில் கணக்குகளைச் சரிசெய்து, பல்வேறு தரப்பினரிடமிருந்து கேள்விப்பத்திர தடுவைப்பு, செயலாற்றுகை பிணைமுறி மற்றும் பல்வேறு வைப்புக்கள், நிருவாகப் பிரிவின் மூலம் விசாரிக்கப்பட்டு கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | தீர்க்கப்படவில்லை. |
| (இ) | தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் 2008 பெப்ரவரி 01ஆம் திகதிய இலக்கம் 1534/18 கொண்ட வர்த்தமானி இன் படி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும் என்றாலும் 2024 மே 21 ஆம் திகதிக்கு வட மத்திய மற்றும் மேல் மாகாண அலுவலகங்களிலும் கண்டி மற்றும் மொனராகலை மாவட்ட அலுவலகங்களிலும் மேற்பார்வையில் உள்ள 272 வணிகங்கள் அவ்வாறான அனுமதிப்பத்திரம் பெறாமல் நடாத்தப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் அதனுள் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பித்து 1 ½ வருடங்கள் முதல் 28 வருடங்கள் வரையிலான காலம்கடந்த வணிகங்களும் காணப்பட்டதுடன், மேலும் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பித்த வருடத்தை அடையாளம் | 2023 | சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறாமல் வியாபார நடவடிக்கைகளை புரிகின்ற வணிகங்கள் தொடர்பில் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதில் அனேகமான வியபார விடயங்கள் சூழல் பாதுகாப்பு செயற்பாட்டிற்குள் உள்ளடக்கி சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கைகளை நடைபெற்ற வண்ணமுள்ளது. | மேல் மாகாண அலுவலகத்தின் மேற்பார்வையில் உள்ள 11 வணிக நிறுவனங்களுள் 6 நிறுவனங்கள் இதுவரை சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுள்ளன. 01க்கு வழக்கு நடைபெற்ற வண்ணமுள்ளது. 02க்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் நிராகரிக்கப்பட்டுள்ளன. இன்னும் 02க்கு களப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளன. வடமத்திய மாகாண அலுவலகங்கள் மற்றும் கண்டி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணமுடியாத வணிகங்களும் காணப்பட்டன. இது தொடர்பில் அதிகார சபையினால் காலத்திற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | | | | மற்றும் மொனராகலை மாவட்ட அலுவலகங்களில் மேற்பார்வையின் கீழ் உள்ள வணிகங்களுக்கான அனுமதிப் பத்திரம் பெறுவதில் உள்ள முன்னேற்றம் பெறப்பட்ட வண்ணமுள்ளது. |
| (ஈ) | செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பித்து சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும், ஆனால் மாத்தளை, தம்புள்ளை, கொழும்பு, கண்டி, மொனராகலை மற்றும் அநுராதபுரம் பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 396 வணிகங்கள் 2024 மே 20 ஆம் திகதியாகும் போது, அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்படவில்லை. மேலும், 10 வணிக நிறுவனங்கள் 03 மாதங்கள் முதல் 02 வருடங்கள் வரை நீண்ட காலமாக தமது அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காமல் வர்த்தகம் செய்து பின்னர் தமது அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்துள்ளன. | 2023 | சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை தொடர்ந்து புதுப்பித்துக் கொள்வதற்கு தேவையான ஒழுங்கபடுத்தல்கள் செய்யப்பட வேண்டும். | அலுவலக தரவு தொகுதிக்கு பொறுப்பான உத்தியாகத்தருக்கு ஒவ்வொரு மாதமும் கடைசி வாரத்தில் அடுத்துவரும் 03 மாதங்களுக்குள் காலாவதியாகும் கைத்தொழில் பதிவேட்டை அனைத்து உத்தியோகத்தர்களுக்கு அனுப்புவதற்காக அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, EPL தரவு தொகுதி மூலம் தகவல் இற்றைப்படுத்தப்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் அது தொடர்பான நினைவூட்டல்கள் செய்யப்படும், அதே நேரத்தில் தொழில்துறையினருக்கு தொலைபேசி இணைப்பு மூலமாகவும் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | 2024 செப்டம்பர் 26 ஆம் திகதியாகும் போதும் இது தொடர்பில் பரிசோதிக்கப் பட்டு இருக்கவில்லை. |
| (உ) | சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காத மாத்தளை மற்றும் தம்புள்ளை பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 10 கறுங்கல் | 2023 | அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளாத தொழில்கள் தொடர்பாக, | சுற்றுச்சூழல் மாசுக்களைக் கட்டுப்படுத்த போதிய கால அவகாசம் இல்லாத சந்தர்ப்பங்களில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்தும், சுற்றுச்சூழல் | 2024 செப்டம்பர் 26 ஆம் திகதியாகும் போதும் இந்த வணிகங்கள் தொடர்பில் பரிசோதிக்கப் பட்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | டொலமைட் அகழ்வு தொழிற்சாலைகள், கழிவுநீர் நீர்த்தேக்கங்களுக்கு வெளியேற்றுகின்ற 03 தொழிற்சாலைகள், கழிவுநீரை மறுசீரமைப்பின்றி வெளிச் சூழலுக்கு வெளியேற்றிய 02 தொழிற்சாலைகள். உரிய தரம் மற்றும் ஒழுக்கநெறிகளுக்கு புறம்பாக செயற்பட்ட கொழும்பு மாவட்டத்தில் உள்ள 07 கைத்தொழில்கள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கைகள், அகழ்வு அனுமதிப் பத்திரம் போன்ற முன்கூட்டியே சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளை உரிய முறையில் சமர்ப்பிக்காத 25 கைத்தொழில்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியமை தொடர்பில் அதிகார சபை மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | சட்டத்தின்படி தேவையான நடவடிக்கைகள் சரியான நேரத்தில் எடுக்கப்பட வேண்டும். | பாதுகாப்பு அனுமதி முறையைத் திறம்பட பராமரிப்பது குறித்தும், உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன் தேவைக்கேற்ப நினைவூட்டல்கள் வழங்கப்பட்டு, தொழிலதிபர்களின் பதிலளிப்பின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய வணிகங்கள் தொடர்பில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இருக்கவில்லை. |
| (ஊ) | நிதிப் பிரமாணக் குறிப்பின் 756 (6) இன் பிரகாரம் மற்றும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கைகள் 2023 செப்டம்பர் 30 ஆம் திகதியாகும் போதும் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023<br>2022 | நிதிப் பிரமாணக் குறிப்பின் இன் பிரகாரம் குறிப்பிட்ட திகதியில் பொருட்கள் கணக்கெடுப்பு விடயங்களை நிறைவுசெய்து இன்வெண்ட்ரி பொருட்கள் தொடர்பில் உரிய உள்ளக கட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்தப்பட வேண்டும். | பொருட்கள் கணக்கெடுப்பு விடயங்களை உரிய தினத்தில் நிறைவுசெய்வதற்கு ஊழியர் பற்றாக்குறை நேரிடி தாக்கத்தை செலுத்தியது. | 2024 ஒக்டோபர் 3 ஆம் திகதிக்கு, 2022 ஆம் ஆண்டு தொடர்பான பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன் 2023 ஆம் ஆண்டு தொடர்பான பொருட்கள் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு இருக்கவில்லை. |
| (எ) | ஆதிகார சபையினால் திறைசேரி ஒதுக்கீடுகளைப் பெற்றிருந்த போதிலும், | 2023 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய உரித்து இல்லாத | உத்தியோகத்தர்களுக்கு மீதமுள்ள மருத்துவ விடுமுறைகளுக்கு | கணக்காய்வு ஐயவினாக்கள் விடுக்கப்பட்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2022 டிசம்பர 21 ஆம் திகதிய இலக்கம் PED08/2022 கொண்ட அரச வணிகச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு மாறாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சேமிக்கப்பட்ட விடுமுறை நாட்களுக்காக ரூபா.65,290,690 கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளது. | | செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் மீள அறவிடப்பட வேண்டும். | கொடுப்பனவுகளை செலுத்தி இருப்பது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதிய வழங்கப்பட்ட விசேட அங்கீகாரத்தின் அடிப்படையிலாகும். அதிகார சபையின் வருவாயில் இருந்து, மீதப்படுத்தப்பட்ட மருத்துவ விடுமுறைகள் அதிகபட்சமாக 21 நாட்களுக்கு உட்படுத்தப்பட்டு இது செலுத்தப்பட்டுள்ளது. | இருக்கின்ற வேளையில் சுற்றறிக்கையின் ஏற்பாடுக்கு அமைய உரித்து இல்லாத இக் கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஏ) | அதிகார சபையினால் 2016 டிசம்பர் 21 ஆம் திகதியிட்ட தனியார் நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி சுற்றுச்சூழல் மற்றும் சமூக செயற்றிட்டங்களுக்காக 03 வருடகாலத்திற்கு ரூபாய் மில்லியன் 150 மூலதன வழங்கல் ஒன்று 03 கட்டங்களைக் கொண்ட ஒரு செயற்றிட்டமாக வழங்குவதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பட்டின் அடிப்படையில் முதல் கட்ட செயற்றிட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மற்றும் பராமரிப்ப செலவாக ரூபா மில்லியன் 50 வழங்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டு டிசம்ப்ர் 20ஆம் திகதியுடன் முடிவுற்ற ஒப்பந்தகாலத்தை நீடித்துக் கொள்வதற்கு அதரிகார சபை நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் கிடைக்க இருந்த எஞ்சிய ரூபா மில்லியன் 100 தொகை இல்லாமல் போகியுள்ளது. | 2023 | புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, இணக்கம் தெரிவிக்கப்பட்ட பிரகாரம் அனைத்து ஒதுக்கீடுகளையும் பெற்று, குறித்த செயற்றிட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த வேண்டும். | இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீடித்துக் கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2023 ஜூன் 13 ஆம் திகதியிட்டு அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ரூபாய் மில்லியன் 100 மீதமுள்ள ஒதுக்கீட்டை நீர் தர முகாமைத்துவம் மற்றும் பின்னூட்டல் செயற்பாடுகளின் கீழ் உள்ள ஏனைய அத்தியாவசிய செயற்றிட்டங்களுக்குப் பயன்படுத்தும் தேவைப்பாடு முன்மொழியப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீண்டும் திருத்தப்பட்டு, தேவையான செயற்றிட்டங்களை உள்ளடக்கிய புதிய ஒப்பந்தத்திற்கு மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. | 2024 செப்டம்பர் 26 திகதி வரை புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஐ) | மனித வள தகவல் தொகதியை 03 மாதங்களுக்குள் ஸ்தாபிப்பதற்காக 2018 டிசம்பர் 27 ஆம் திகதி ரூபா.1,845,000க்கு தனியார் நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, ரூபா.369,000 முன்பணமாக வழங்கப்பட்டு 2023ஆம் ஆண்டாகும் போது, 05 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், குறித்த தொகுதி ஸ்தாபிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் அதற்கரிய வங்கி பிணை மற்றும் செயறலாற்றுகை பிணைமுறி காலாவதியாகி இருந்தன. இதற்குரிய ரூபா.184,500 தாமதக் கட்டணத்தையும் அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2023 | வங்கி பிணை மற்றும் செயறலாற்றுகை பிணைமுறி ஆகியவற்றை புதுப்பித்து தேவைக்கேற்ப தொகுதியை ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஏற்றவாறு மொடியூல்களை தயாரிப்பதற்காக மற்றும் கடந்த தொற்றுநோய் காலத்தில் தரவு உள்ளீட்டில் சில தாமதங்கள் ஏற்பட்ட காரணத்தாலும் வழங்குநர் மற்றும் அதிகார சபைக்கு இடையே இணக்கப்பட்டின் அடிப்படையில் குறித்த விடயங்கள் மேற்கொள்ளப்பட்டதால் தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை. இந்த தொகுதியில் காணப்படும் சிக்கல் நிலைமைகள் காரணமாக, வழங்குநருக்கு ஒப்பந்தத்தின்படி இந்த தொகுதி தொடர்ந்து முன்னோக்கி பராமரிக்கப்படுமா என்பது தீர்மானிக்கப்பட உள்ளது. | வங்கி பிணை மற்றும் செயறலாற்றுகை பிணைமுறி ஆகியவற்றை புதுப்பித்தோ அல்லது தொகுதி ஸ்தாபிக்கப்பட்டோ இருக்கவில்லை. |
| (ஒ) | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் தொடர்பான செயல்முறைகள் மற்றும் கள பரிசோதனைகளுக்காக ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்ட வாகனம், அந்த நோக்கங்களுக்குப் புறம்பாக தலைவரின் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ரூபா 105,165 செலவழித்து எரிபொருள் லீற்றர் 533.80 பயன்படுத்தி, 2,669 கிலோமீற்றர்கள் | 2022 | குறிப்பிட்ட வாகனம், கொடுக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு இணைக்கப்பட வேண்டும். | எரிபொருள் லீற்றர் 4538 இற்காக செலுத்தப்பட்ட ரூபா.824,486 தொகையை செலுத்துமாறு அறிவித்து 2024 மார்ம் 06ஆம் திகதியிட்டு சம்பந்தப்பட்ட தலைவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | 2024 செப்டம்பர் 30ஆம் திகதி வரையிலும் தலைவரினால் பணம் செலுத்தப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பயணித்து இருப்பதுடன் மேலும் ரூபா 719,321 செலவழித்து லீற்றர் 4004.38 எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட பயணங்கள் கடமை விடயங்களுக்காக என்பதை உறுதிப்படுத்தி இருக்கவில்லை. | | | | |
| (ஓ) | சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்கு பொருந்தாத வகையில் அந்த ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 2,030,000 செலவு செய்து Electric cart வண்டியை கொள்வனவு செய்து கதிர்காமம் பூஜை பூமியில் பாவனைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. | 2022 2021 | நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப நிதி பயன்படுத்தப்பட வேண்டும். | இந்தச் செயல்பாடு சுரகிமு கங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களுடன் தொடர்புடையது என்று தவறான கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களுடன் தொடர்புடையது என்று பயன்படுத்தப் படவில்லை. |
| (ஔ) | கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தொடர்பான ஒப்பந்தத்திற்கான செயலாற்றுகை உத்தரவாதம் பெறாமல் 2014 ஆகஸட் 8ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள போதிலும், செயற்றிட்டம் தொடங்கப்படாமல் இருந்ததடன் அதற்காக செலவ செய்யப்பட்ட தொகையான ரூபா. 64,356,400 வும், 2009 ஆம் ஆண்டில் பிலிசரு செயற்றிட்டம் மூலம் கொம்போஸ்ட் தலம் நிர்மாணிப்பதற்காக செலவு செய்ப்பட்ட ரூபா 13,071,372 தொகையும், குப்பைகளை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க வாங்கப்பட்ட இயந்திரங்களும் | 2022 | அரச கொள்வனவு வழிகாட்டுதல்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரிய அதிகாரத்தின்படி கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், முன் அங்கீகாரம் பெறாது செயற்பட்ட அதிகாரிகள் மீது தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதற்காக எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டள்ளது. | இதுவரை செயற்றிட்டம் அமுல்படுத்தல் நிலைக்கு கொண்டு வரப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பயனற்றுப் போயின. | | | | |
| (க) | சுரக்கிமு கங்கா தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திதுடன் நியமிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஒருவருக்கு 2021 ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை மாதாந்த சம்பளமும் எரிபொருள் கொடுப்பனவாகவும் ரூபா 170,000 செலுத்தப்பட்டுள்ளதுடன் இதற்காக அங்கீகாரம் பெறப்பட்டு இருக்கவில்லை. | 2021 | கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு முன்னர் அங்கீகாரம் பெற வேண்டும். | இந்தக் கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின்படி செலுத்தப்பட்டுள்ளது டன் அதற்காக அமைச்சரவைப் பத்திரம் ஒன்று 2021 டிசம்பர் 20ஆம் திகதி அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவை 2024 செப்டம்பர் 30ஆம் திகதியாகும் போதும் கூட அறவிடப்பட்டு இருக்கவில்லை. |

## 3.20. இலங்கை சூழல்சார் உயர் தொழிலாளர்கள் நிறுவனம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | மூலதனம் ரூபா | மிகை / (பற்றாக்குறை) | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 6,370,577 | 231,759 | 6,138,818 | 1,868,944 | முனைப்பழிவுள்ள |
| **2022** | 7,005,768 | 514,128 | 6,491,640 | 352,822 | முனைப்பழிவுள்ள |
| **2023** | 7,774,757 | 214,196 | 7,560,561 | 1,068,921 | முனைப்பழிவுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கையின் தினத்திற்கு பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| | 2021,2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக வருமான வரி பொறுப்புக்கள் கணிப்பிடப்படாது செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருத்தல். | 2023<br>2021 | வரி பதிவுசெய்தலை பெற்றுக்கொண்டு வருடாந்த வருமான வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செலுத்த வேண்டிய வரி 2020 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டுள்ளது. எனினும் நிறுவனத்தால் வரிப்பதிவு பெற்றுக் கொள்ளப்படவில்லை. | நிறுவனத்தால் வரிப்பதிவு இதுவரை பெற்றுக் கொள்ளப்படவில்லை. |
| (ஆ) | 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்று நிறுவப்பட்டு இருக்கவில்லை. | 2022 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்றை நிறுவி அமுல்படுத்தல் சம்பந்தமாக 2024 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்றை நிறுவுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) | PE/COP/POLI/Circular மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 என்ற பொது வியாபாரங்கள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. | 2023<br>2022 | குறித்துரைத்த திகதிக்கு வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தின் சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் நிறுவனத்தின் கவனத்தை செலுத்தி குறித்த படிமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தின் சபையில் சமர்ப்பிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

### 3.21. கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புகள் ரூபா | உரிமையாண்மை ரூபா | மிகை/ (பற்றாக்குறை) ரூபா | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 345,072,686.00 | 201,845,713.00 | 143,226,973.00 | (98,304,624.00) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 551,038,483.00 | 175,570,922.00 | 375,467,561.00 | 209,250,751.00 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 602,874,134.00 | 144,548,041.00 | 458,326,093.00 | 87,501,471.00 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்புகள் | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்விற்குட்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்டுள்ள தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாது துறைமுகங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு கழிவுப் பொருள் சேவை மீள்சுழற்சி வசதிகளுக்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை நாளொன்றிற்கு ரூபா 750 படி செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,951,550 தொகையான கொடுப்பனவு தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை நடாத்துமாறு 2021 திசெம்பர் 28 ஆம் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரை செயற்படுத்தி பொறுப்பு வாய்ந்த நபர்களிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கு 2023 பெப்ரவரி 14 வரையும் நடவடிக்கை | 2021 & 2022 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், அங்கீகாரமற்ற கொடுப்பனவுகள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர்கள் தொடர்பாக அவசியமான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் செயற்பட வேண்டும். | இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி விசாரணை குழு நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளது. எனினும், இது வரை உரிய விசாரணைக் குழுவின் முடிவு இந்த அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையிக்குரிய எந்த முடிவும் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.<br><br>பணம் செலுத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 2. | MV X Press Perl கப்பல் அனர்த்தத்திற்கு உரித்தாக சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருள் களஞ்சியப்படுத்துவதற்காக வத்தளையில் தற்காலிகமாக களஞ்சியசாலையில் இருந்து பமுனுகம களஞ்சிய பிரிவிற்குக் கொண்டுசெல்வதற்காக தாமதமானமையால் 40 கொள்கலன்களுக்காக தாமதக் கட்டணமாக ரூபா 17,934,000 தொகை மேலதிகமாகச் செலுத்த நேர்ந்தது. | 2021 & 2022 | காப்புறுதி நிறுவகனத்திடம் இருந்து சகல பணத்தொகையையும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | X Press Pearl என்ற கப்பல் விபத்துக்குள்ளானதால், கொள்கலன்களில் சேகரிக்கப்பட்ட கழிவுகள் கொள்கலன்களில் சேமிக்கப்பட்டு பமுனுகம கழிவு களஞ்சியத்திற்கு கொண்டு செல்லப்பட்டது, இது அதிகாரசபையின் தவறு அல்ல. ITOPF இன் அனுமதியைப் பெற்றவுடன் உடனடியாக போக்குவரத்து செய்யப்பட்டது. . அதற்காக செலவழிக்கப்பட்ட பணம் முழுவதையும் மீட்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இது வரை செலுத்திய தொகையை வசூலிப்பதற்காக காபபுறுதி நிறுவனத்துடன் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. |
| 3. | உணவுப் பொதிகளாகப் பெற்றுக்கொள்வதற்காக விலைக் கோரல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், உணவுப் பொருட்கள் வெவ்வேறாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக அச் செலவினங்கள் சிக்கனமானவை என உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும், 61 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களால் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் | 2022 | விலைக்கோரல்கள் பெறப்பட்ட விதத்தில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிதுடன் அதிகாரசபையின் பெயரில் விநியோகிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர் வெளிப்படையான நிலையில் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் பொறுப்பிற்கு உட்பட வேண்டும். | பெறுகை செயல்முறையின் படி மட்டுமே செயற்படுமாறு அனைத்து அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை செயல்முறையை முழுமையாக செயல்படுத்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தங்குமிடக் கட்டணங்களுக்காக ரூபா 23,154,710 கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உரித்தாக விநியோகிக்கப்பட்டிருந்த பட்டியல்களின் தொடர் இலக்கங்கள் மாற்றமடையாது தொடர்ச்சியாக உள்ளமை மற்றும் அதிகாரசபையின் பெயர் குறிப்பிடப்படாமையும், பற்றுச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்ட வழங்குனரின் பெயரிற்குப் பதில் வேறு பெயர்களில் காசோலைகள் வரையப்பட்டிருந்தமை போன்ற காரணங்களால் இக் கொடுப்பனவுகளின் சரியான தன்மை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. இச் சர்ச்சைக்குரிய தன்மையான விடயம் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 4. | MV X Press Perl கப்பல் அனர்த்தத்தினால் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது இரு சந்தர்ப்பங்களில் பெறுகை வழிகாட்டலிற்கு மாறாக வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 1,400 உம் ரூபா 1,500 படி செலுத்தப்பட்டு வாடகைக்குப் பெறப்பட்டிருந்த forklift இயந்திரத்தின் | 2022 | தேவைப்பாட்டை இனங்கண்டு பெறுகைச் செயற்பாடு பின்பற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவைக்கேற்ப பெறுகை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | பெறுகை செயல்முறையை முறையாக செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடன்படிக்கைக் காலம் 07 மாதங்கள் எஞ்சிய நிலையில் இருக்கையில் மீள 2022 மே மாதம் விலைகோரல்கள் கோரப்பட்டு அவ் வழங்குனரால் மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 2,900 படியான விலைக் கோரல்கள் அவ் இயந்திரம் உள்ள வத்தளை களஞ்சியத்தினூடாகப் பெறப்பட்டு ஏலம் முடிவுறுத்தப்பட்டு 03 நாட்களின் பின்னர் திறக்கப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயமாக அவதானிக்கப்பட்டது. இவ் இயந்திரத்திற்காக 2022 ஆம் ஆண்டிற்கு உரித்தாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,433,800 தொகையானதுடன் அதிகாரசபைக்கு நீண்ட காலமாக அவ் இயந்திரத்தின் தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு புதிய இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிராமையால் வருடாந்தம் பாரிய செலவை ஏற்க நேர்ந்துள்ளது. | | | |
| 5. | MV X Press Perl கப்பல் அனர்த்தத்தினால் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்படாது சந்தை விலைக் கோரல்கள் பின்பற்றப்பட்டு தொழிநுட்ப மதிப்பீடு இன்றி 25,000 சதுர அடி | தேவைப்பாட்டிற்கமைவாக பெறுகைத் தேவைப்பாட்டைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்புடைய கப்பல் விபத்தின் காலம் கொவிட் பரவிய காலகட்டம் என்பதாலும், வழமையான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத காலப்பகுதி என்பதாலும் | கழிவு சேமிப்பு களஞ்சியங்களின் அனைத்து கட்டணங்களும் கப்பல் உரிமையாளர்களிடம் இருந்து வசூலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு |

அளவிலான தேவைக்குப் பதிலாக 48,765 சதுர அடி அளவிலான விஸ்தீரணமான களஞ்சியம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு 2021 யூன் மாதம் முதல் 06 மாதங்களுக்கு தலா ஒரு மாதத்திற்கு ரூபா 1,706,775 தொகையும் இரண்டாவது 06 மாத காலத்திற்கு இதனை விட 40 சதவீதம் அதிகமாக தலா ஒரு மாதத்திற்கு ரூபா 2,400,000 ஆக கட்டணம் உயர்த்தி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இக் களஞ்சியத்திற்காக அரசாங்கத்தின் மாதாந்த மதிப்பீடு ரூபா 1,800,000 ஆகியமையால் இரண்டாவது 06 மாத காலத்திற்கு ரூபா 3,600,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 30,000 சதுர அடிக்காக மாதாந்தம் ரூபா 1,755,000 தொகையான விலை மனு நிராகரிக்கப் பட்டிருந்தமையால் ரூபா 3,580,650 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தமையும் அவதானிக் கப்பட்டது. மேலும், இச செயற்பாட்டிற்காக களஞ்சியம் ஒன்று ஒரு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெறப்படுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2022 திசெம்பர் 14 ஆம் திகதி நிறைவடைந்திருந்த போதிலும் இக் களஞ்சியத்தின் எதிர்காலத் தேவைப்பாடு, 2022 செப்தெம்பர் 06 ஆம் திகதியின் பின்னர் வாடகை

அதனை விரைவாகச் செய்ய வேண்டியிருந்ததாலும் சந்தை விநியோகத்திற்கேற்ப கழிவு சேமிப்புக் களஞ்சியங்கள் பெறப்பட்டன. அதன் பின்னர் இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

வருகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீளளிக்கப்படுவதில்லை என்ற கப்பல் நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கப்பட்டமை போன்ற விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. | | | | |
| 6. | திகாரசபையின் மோட்டார் வாகனம் ஒன்று 2021 யூன் 23 ஆம் திகதி யப்பானில் பயன்படுத்தப்பட்ட கியர் பெட்டியைப் பயன்படுத்தி ரூபா 381,450 செலவில் திருத்தப்பட்டிருந்த போதிலும் கியர் பெட்டியிலான தவறு காரணமாக ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாதிருந்தது. இத் திருத்த வேலைகள் தொழிநுட்ப உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிராததுடன் பழைய கியர் பெட்டி களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இத் திருத்தவேலைகளை அடுத்து மோட்டார் வாகனத்திற்காக கி.மீ. 30,000 உத்தரவாதக் காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மோட்டார் வாகனம் அந் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு முறையாக திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது 2021 யூன் 21 ஆம் திகதி முதல் வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டு இதற்காக 2023 மார்ச் 12 ஆம் திகதி வரை ரூபா 3,741,685 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2022 | இத் திருத்த வேலைகள் தொடர்பாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வாகனத்தை உாயி நிலைக்குக் கொண்டுவருவதற்கும், வாகனத்தை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டைக் கருத்திற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் விலகலின் போது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விசாரணை அறிக்கை கிடைத்த பின், தவறு நடந்திருந்தால், அதற்கேற்ப தீர்வு காணப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து தொகை வசூலிக்கப்படும். | ஒரு விசாரணை நடத்தப்பட்டு ஏஎம்சி பரிந்துரையின் படி மற்றொரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 7. | 2023 பெப்ரவரி 27 ஆம் திகதிய இல. அமப/23/0386/605/012-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, அதிகாரசபையின் பொது முகாமையாளரின் பதவி வெளிவாரியாகவும், ஏனைய பிரிவுகளின் 05 முகாமைத்துவப் பதவிகளுக்காக உள்ளக ரீதியாகவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும், அவ்வாறில்லாத விடத்து அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட திருத்தத்தை மேற்கொள்ளுமாறும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செயற்படாது சட்ட முகாமையாளர் உள்ளடங்கலாக 04 முகாமைத்துவப் பதவிகள் வெளிவாரி அடிப்படையிலும், பொது முகாமையாளரின் பதவி 2 ½ ஆண்டுகள் பதில்கடமை ஆற்றிய உத்தியோகத்தருக்கு உள்ளக ரீதியாகவும் 2024 ஏப்ரல் 3 ஆம் திகதி முதல் நிலையான அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. | 2023 | அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 44 பணியிடங்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு 12.02.2024 அன்று வழங்கப்பட்ட ஒப்புதலின்படி பொது முகாமையாளர் மற்றும் இதர பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனியான குழு நியமிக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே ஆட்சேர்ப்புக்கு அமைச்சரவை அனுமதி தேவை. | இலக்கம் DMS/1627/Vol-iv மற்றும் 01.11.2023 மற்றும் 12.02.2024 திகதியிடப்பட்ட நிர்வாக சேவைகள் திணைக்களத்தின் கடிதங்களின் படி, உள்ளக அடிப்படையில் இருந்து பணியமர்த்தப்பட்ட பொது முகாமையாளர், வெளிப்புற அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படாது தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | 2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதலை தடுப்பதற்கான அதிகாரச்சட்டத்தின் 17 (7) ஆம் பிரிவு<br><br>கடல் மாசடைதலை தடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக அதிகாரசபை அவசியமாகக் கருதும் நிபுணத்துவ அறிவைக் கொண்ட வெளித்தரப்பினரின் அறிவைப் பெற்றுக்கொள்ள இயலுமான போதிலும் அத்தகைய நிபுணத்துவ உதவியாளர்களது உதவியைப் பெறாமையால் சர்வதேச ரீதியாக நிலவும் நிர்ணய விதிகளின் படி இச் செயற்பாட்டை நீண்டகாலமாக மேற்கொள்கையில் ஏற்படும் சுற்றாடல் தேவைப்பாடு, கரையோர நிலைபேற்றுத் தன்மைக்கு ஏற்படும் தாக்கம் மற்றும் மேலும் தொடர்ந்து இச் செயற்பாட்டை எவ்வளவு காலத்திற்கு மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து தீர்மானிக்காது காப்புறுதிக் கம்பனியின் இணக்கப்பாட்டையும் பெறாது கரையோரத்தில் பிளாஸ்டிக் துகள்களின் சேகரிப்பு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 2021 ஒக்டோபர் முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சமூகப் பங்களிப்பில் 4 மாவட்டங்களில் கரையோர வலயங்களில் பிளாஸ்டிக் துகள்களின் சேகரிப்பில் ஈடுபடும் 158 பேருக்காக ரூபா | 2023 | அதிகாரசபை அவசியம் என கருதப்படும் நிபுணத்துவ அறிவைக் கொண்ட வெளிவாரியினரின் அறிவைப் பெற்று இச் செயற்பாட்டை நீண்ட காலமாக மேற்கொள்வதில் உள்ள சுற்றாடல் தேவைப்பாடு, கரையோர நிலைபேற்றுத் தன்மைக்கு ஏற்படும் தாக்கம் மற்றும் மேலும் இச் செயற்பாட்டை எவ்வளவு காலத்திற்கு மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து தீர்மானிப்பதற்கும் 2 வருடத்திற்கும் மேலான காலமாக தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த குடிமக்களின் சேவையைப் பெற்றுக்கொள்கையில் அக் குடிமக்களின் சேவைத் தேவைப்பாட்டை செயலாற்றல் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்கான நிபுணத்துவ அறிவு அதிகாரசபைக்கு தேவைப்பட்ட போதிலும், அதற்கான கட்டணம் செலுத்தும் முறைமை ஒன்று இல்லை. எனவே, கடற்கரையை சுத்தம் செய்ய பயன்படுத்தப்பட்ட ITOPF நிறுவனப் பரிந்துரைகளின் படி, நடவடிக்கைகள் சர்வதேச முறைப்படி மேற்கொள்ளப்படுகின்றன. ITOPF இன் பரிந்துரைகளின் படி வேலை செய்தால் மட்டுமே காப்புறுதி நிறுவனம் பணம் செலுத்தும்.<br><br>ITOPF உடன் ஆலோசனை செய்து அதிகாரசபை ஏற்பாடுகளை செய்துள்ளது. கப்பலில் இருந்து கடற்கரை வலயத்தில் சேகரிக்கப்படும் கழிவுகள் சுற்றுச்சூழலில் இருந்து அகற்றப்படும் வரை கடற்கரையை சுத்தம் செய்யும் பணி தொடர வேண்டும். | ITOPF இன் பரிந்துரைகளின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், கடற்கரையை சுத்தம் செய்யும் திறனின் அடிப்படையில் சமூகத்திற்கு ஊதியம் வழங்கப்படும் அல்லது எவ்வளவு காலம் இந்த செயற்பணியைச் செய்ய வேண்டும் என்பது தீர்மானிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 20,116,500 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | | |
| 9. | MV - X Press pearl கப்பல் அன்ர்த்தம் தொடர்பான இழப்பை மதிப்பிடுவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணத்துவக் குழுவிற்குச் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவின் அளவைத் தீர்மானிப்பதற்காக 2023 சனவரி 30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி 5 பேர் அடங்கிய குழுவின் மூலம் நாளொன்றிற்கு 8 மணித்தியாங்களிற்காக அ.டொ. 350 படி 584,500 அ.டொ. கள் நிபுணத்துவக் குழுவிற்குச் செலுத்தப்படுவதற்கு அக்குழுவிற்கு பெயரிடப்பட்டிருந்த தேசிய சம்பள ஆணைக்குழு உத்தியோகத்தரின் பரிந்துரை பெறப்படாது தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வாறே, நிபுணத்துவக் குழுவின் அங்கத்தவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட காலத்தை அளவிடுவதற்காகவும், பரிந்துரைக்கப்பட்ட அக் கட்டணங்கள் சர்வதேசக் கட்டணமாக உறுதிப்படுத்துவதற்காகவும் எந்த வித சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 2023 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது நிபுணத்துவக் குழுவிற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,475,000தொகையான கொடுப்பனவு | 2023 | நிபுணத்துவக் குழு அங்கத்தவர்கள் கடமையில் ஈடுபட்ட நேரத்தை அளவிடுவதற்கும், பரிந்துரைக்கப்பட்ட கட்டணங்கள் சர்வதேச கட்டணமாக உறுதிப்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவின் தீர்மானம் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சம்பள ஆணைக்குழு அதிகாரியின் பரிந்துரை பெறப்பட்டிராததுடன் பரிந்துரைக்கப்பட்ட கொடுபபனவு விகிதம் சர்வதேச விகிதம் என்பதும், நிபுணர் குழுவுக்கு வழங்கப்பட்ட ரூ.6,475,000 படிப்பணம் எவ்வாறு கணக்கிடப்பட்டது என்பதும் கணக்காய்விற்கு விளக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கணக்கிடப்பட்ட விதம் குறித்தும் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 10. | சமூகப் பங்கேற்புடன் MV - X Press Pearl கப்பலில் இருந்து சிதறிய துகள்களைச் சேகரிப்பதற்காக 2021 ஒக்டோபர் மாதம் முதல் 2023 திசெம்பர் வரை கொடுப்பனவாக ரூபா 248,192,250 தொகையும் உபகரணங்கள், போக்குவரத்து, உணவு மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 553,824,237 தொகையுமாக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நாளாந்தம் சேகரிக்கப்படும் மொத்த துகள்களின் அளவின் சாதாரண அளவு 2022 உடன் ஒப்பிடுகையில் கி.கி.44 முதல் 2023 ஆம் ஆண்டளவில் கி.கி.20 இற்குக் கிட்டிய அளவாகக் குறைவடைந்திருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் சமூகப் பங்களிப்பிற்காக ஏற்கப்பட்ட கிரயத்தில் குறைவு ரூபா 124 மில்லியனில் இருந்து ரூபா 106 மில்லியன் வரையான ரூபா 18 மில்லியன் ஆக மாத்திரம் காணப்பட்டது. | 2023 | சமூகத்தினரின் சேவையைப் பெற்றுக்கொள்கையில் அச் சமூகத்தின் சேவைத் தேவைப்பாட்டை செயன்முறை அடிப்படையில் முறையான நடைமுறைக்கமைவாக கண்காணித்து சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமூகத்தின் சேவையைப் பெற்றுக்கொள்ளல் வேலை மேற்கொள்ளப்படும் விதம் குறித்து மூன்றாம் தரப்பினரால் கண்காணிக்கப்படுவதனால் அந்த முறைமைக்குப் பொருந்தும் வகையில் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. | தினசரி சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் துகள்களின் அளவு 44 கி.கி. களில் இருந்து 20 கி.கி. ஆகக் குறைவடைந்திருந்த போதிலும், சமூகப் பங்கேற்பு குறைவின்றி மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 18 மில்லியனால் மட்டும் குறைவடைந்திருந்தமை கணக்காய்விற்கு திருப்திகொள்ள இயலாதிருந்தது. |
| 11. | அதிகாரசபையின் வங்கி நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய காசு மீதி ரூபா 290 மில்லியன் தொகையான போதிலும் ஆண்டின் இறுதியில் நிலவிய காசு மீதி ரூபா 364 மில்லியன் | 2023 | அதிகாரசபையின் வழமையான மாதாந்தக் கொடுப்பனவின் தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு மிகையான தொகை மிகவும் இலாபகரமான நிலையில் முதலீடு செய்யப்படுவதற்கு | எதிர்காலத்தில் அவ்வாறு செய்யப்படும். | எதிர்காலத்தில் அதிக இலாபம் ஈட்டத்தக்க முதலீடுகளில் இந்தப் பணம் முதலீடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையாகக் காணப்பட்டது. அதிகாரசபையின் வழமையான மாதாந்தக் கொடுப்பனவின் தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு மேலதிக தொகை மிகவும் இலாபகரமான விதத்தில் முதலீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது மிகவும் குறுகிய கால முதலீட்டில் ஈடுபடுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளக்கூடிய வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| 12. | 2011 ஆம் ஆண்டின் போது அனர்த்தத்திற்குள்ளான கப்பலின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 10 மில்லியன் தொகையான நட்டஈட்டுத்தொகையும் 2022 ஆம் ஆண்டின் போது தக்க வைத்த வருவாயில் இருந்து ரூபா 100 மில்லியன் தொகையும் பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகளின் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு நிதியத்தின் பெயரிலான கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டு இத் தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதலீட்டு வட்டி சேகரிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியில் அந் நிதியத்தின் மீதி ரூபா 119,486,831 ஆகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், கடல்சார் சுற்றாடல் மாசடைதலைத் | 2023 | 2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதலை தடுப்பதற்கான அதிகாரச்சட்டத்தின் 18 (2) ஆம் பிரிவின் படி, அதிகாரசபையின் அதிகாரத்தைப் பயன்படுத்துகையிலும் செயற்பாட்டை மேற்கொள்கையிலும் பணியை மேற்கொள்கையிலும் அதிகாரசபையால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் ஓர் செலவினத்தை ஏற்பதற்காக தேவையான முழுத் தொகையும் இந் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட வேண்டும். | இப் பணத்தொகையை விசேட சந்தர்ப்பங்களின் போது, கப்பல் விபத்துக்களுக்கு முகம்கொடுப்பதற்காகப் பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. | கடல் மாசடைவைத் தடுப்பதற்காக இந்த நிதி பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

தடுப்பதற்காக
தொடர்புபடுத்தக்கூடிய
பணிகளை
இனங்காணப்படாது இந்
நிதியம் விளைவற்றுக்
காணப்பட்டது.

### 3.22 கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை

| | மொத்தச் சொத்துக்கள் | மொத்தப் பொறுப்புக்கள் | உரிமை | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2021** | 692,164,748 | 111,703,480 | 580,459,268 | 206,261,703 | முனைப்பழியுள்ள |
| **2022** | 720,669,659 | 93,851,893 | 626,817,766 | 131,059,472 | முனைப்பழியுள்ள |
| **2023** | 636,032,380 | 100,674,362 | 535,358,018 | 154,721,745 | முனைப்பழியுள்ள |

| தொ.இ. | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் செயற்பாடு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ஒன்றென ரூபா 13,132,807 தொகை கடன்பட்டோர் மீதியொன்று காணப்பட்டது. அவற்றில் ரூபா 9,473,681 தொகை 05 வருடங்களை மிகைத்துள்ள கடன்பட்டோர் மீதிகளாகும். | 2021, 2022, 2023 | பெற வேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கம்பஹா வைத்தியசாலையினால் நிலுவைத் தொகை செலுத்துவதற்கு இணங்கியிருந்ததுடன், வரிசையமைச்சுச் செயலாளரினால் சுகாதார அமைச்சுச் செயலாளருக்கு அறிவுறுத்தியிருந்தது. | அறவீடு செய்திருக்கவில்லை. |
| 2. | **2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழல் முயற்சிகள் சுற்றறிக்கையின் அரச தொழில் முயற்சிகள் வழிகாட்டலின் பந்தி 6.2(இ)** அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் மிகை நிதியம், அழைப்பு வைப்புக்கள், குறுகிய கால | 2021, 2022, 2023 | சுற்றறிக்கைக்கு இணங்கியிருக்க வேண்டும். | வரிசையமைச்சுச் செயலாளரினால் மூலம் நிதியமைச்சுச் செயலாளரிடம் அங்கீகாரம் வேண்டிக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிதியமைச்சரின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வைப்புக்கள், திறைசேரி உண்டியல், நிலையான வைப்புக்கள் அல்லது வேறு ஏதேனும் வைப்புக்களை முதலீடு செய்யும் தொடர்பாக நிதி அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் முதலீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகாரசபையினால் 2023 ஆண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 506,686,028 இற்கான 05 நிலையான வைப்புக்கள் தொடர்பாக குறிப்பிட்ட அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | | | | |
| 3. | **2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்திய) சட்டத்தின் 05 ஆவது பந்தியின் பிரிவு (ஏ)** கூட்டு ஆதனங்களின் நுழைவுப் பாதைகள், தோட்டங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளிகளை பராமரிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சாட்டுதல், அதிகாரசபை குறிக்கோள் ஒன்றாக காணப்பட்ட போதிலும், | 2023 | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க வேண்டும். | சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சாட்டப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாளிகாவத்தை மற்றும் ஜல்தர வீடமைப்புத் திட்டங்களில் அந்தப் பராமரிப்பு அலுவல்கள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சாட்டப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 4. | **1982 இன் 45 ஆம் இலக்க இணைந்த வீடுகள் (திருத்திய) சட்டத்தின் பிரதான நியதிச் சட்டத்தின் இணைப்பின் அட்டவணையின் கீழ் அதன் பிரிவு 3(2) இற்கு இணங்க மற்றும் 2003 இன் 39 ஆம் இலக்க இணைந்த வீடுகளின் உரிமைகள் (திருத்திய) சட்டத்தின் பிரிவு 27(3) இற்கு இணங்க** முகாமைத்துவ அதிகாரசபைகளின் பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்ததுடன், அதன் 8(4)(அ) இன் படி முகாமைத்துவ அதிகாரசபைகளின் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த கணக்குகளின் பிரதிகள் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறாயினும், அதிகாரசபையில் காணப்பட்ட 1,014 முகாமைத்துவ அதிகாரசபைகளின் 586 மாத்திரம் பதிவு செய்யப்பட்ட நாள் முதல் வருடாந்த | 2021<br>2022<br>2023 | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி வருடாந்த பொதுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டியதுடன், அதிகாரசபையின் பொதுக்கூட்டங்கள் கண்காணிப்பு செய்யப்பட வேண்டும். | வருடாந்த பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொதுக்கூட்டம் முகாமைத்துவ அதிகாரசபைகளினால் நடாத்தியிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், மீதியான 428 அதிகாரசபைகளில் 403 இற்கு 2023 ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த கணக்குகள் அதிகாரசபைக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், கூட்டு ஆதன நில அளவைப் படங்கள் பதிவு செய்து 03 மாதங்களுக்குள் முகாமைத்துவ அதிகாரசபைகள் நிறுவப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 – 2023 காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்டிருந்த 39 ஆதனங்கள் தொடர்பாக முகாமைத்துவ அதிகாரசபைகள் நிறுவியிருக்கவில்லை. | | | | |
| 5. | 2013 – 2018 காலப் பகுதியில் ஆரம்ப இசைவுக் கடிதம் பெற்றுக்கொண்டிருந்த 400 ஆதனங்களுக்காக இறுதிச் சான்றிதழ் பெற்றிருக்காததுடன், அந்த ஆதனங்களின் செல்லுபடியாகும் காலத்தை மீண்டும் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், தற்காலிக கூட்டு ஆதன சான்றிதழ் பெற்றிருந்த 50 ஆதனங்களும், | 2021, 2022, 2023 | செல்லுபடியாகும் காலப் பகுதியில் சான்றிதழ்கள் வழங்குவதற்கு முறையான செய்முறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஆரம்ப இசைவு கடிதம் புதுப்பிக்கப்பட்டு இறுதிச் சான்றிதழ் வழங்குவதற்கு 2023 முதல் நடவடிக்கை எடுக்கப்படும். | அடிப்படை / அரை / தற்காலிக சான்றிதழ்கள் பெற்றிருந்த அபிவிருத்திகளுக்கு தேவையான சான்றிதழ்கள் பெற்றுக்கொள்வதற்கு அறிவுறுத்தி அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அரை கூட்டு ஆதனச் சான்றிதழ் பெற்றிருந்த 15 உம் இறுதிச் சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. 65 ஆதனங்களில் 20 ஆதனங்களும் உள்ளூராட்சி நிறுவனங்களின் இணக்கச் சான்றிதழ் பெற்றிருக்காமை அதற்கான காரணமாகும். | | | | |
| 6. | அதிகாரசபைக்கு கிடைத்திருந்த 1,387 முறைப்பாடுகளில் 67 தொகை 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. இந்த முறைப்பாடுகளில் அங்கீகாரமின்றி நிர்மாண வேலைகள் தொடர்பான 25 முறைபாடுகள் காணப்பட்டதுடன், 13 நீர் கசிதல் தொடர்பான முறைப்பாடுகளும் காணப்பட்டன. அவற்றில் 06 தொகை கிடைக்கப் பெற்று 2 – 5 வருடங்களை கடந்திருந்த காரணத்தினால் ஆதனங்கள் மற்றும் உயிர்களுக்கு ஆபத்து நிலைமையொன்று காணப்பட்டது. | 2021, 2022, 2023 | கிடைக்கும் முறைப்பாடு தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகள் படி செயற்பட வேண்டும். | முறைப்பாடுகள் கிடைத்த பின்னர் நுகர்வோர் பிரிவின் மூலம் தீர்ப்பதற்கு கூடிய முயற்சி எடுக்கப்படுவதுடன், அவ்வாறு முடியாதவை சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டு விசாரணைகள் நியாயமான காலப் பகுதியின் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முறைப்பாடு தொடர்பாக மெதுவாக நடவடிக்கை எடுக்கப்படும் நிலைமையொன்று காணப்படுகின்றது. |
| 7. | 1973 இன் 11 இலக்க இணைந்த வீடுகளின் உரிமைகள் சட்டத்தின் பிரிவு 5(2) இன் படி | 2023 | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து கூட்டு ஆதன சான்றிதழ்கள் பெற்றுக்கொள்வதற்கு |

| | |
|---|---|
| இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத ஆதனங்களின் நபரொருவர் வதிய முடியாத போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 21 கூட்டு ஆதனங்களுக்காக இறுதிச் சான்றிதழ் பெற்றிருக்காததுடன், அந்த மாடி வீடுகளில் 12,734 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். கூட்டு ஆதன சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமை காரணமாக இந்த வீட்டுத் தொடர் கட்டிடங்களின் முகாமைத்துவ அதிகாரசபைகள் நிறுவுவதற்கு முடியாமல் இருந்ததுடன், பராமரிப்பு அலுவல்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமை மற்றும் வீட்டு உரிமையாளர்களுக்கு உறுதிகள் வழங்குவதற்கு முடியாமல் இருந்தது. மேலும், இந்த கூட்டு ஆதனங்களில் காணப்பட வேண்டிய பொது வசதிகள் காணப்பட்ட போதிலும் மற்றும் இணைந்த வீடுகள் உரிமைகள் சட்டத்திற்கு இணங்க ஆதனங்களின் | விண்ணப்பித்திருக்கவில்லை. |

உரிமையாளர்களினால் நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பாக அதிகாரசபை எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. அதன்படி, அதிகாரசபை தனது பொறுப்பை புறக்கணித்து இருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

## 3.23 நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

| | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புகள் | மூலதனம் | வரிக்கு முன்னைய இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2021** | 3,002,005,992 | 1,201,018,549 | 1,800,989,443 | 784,619,371 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 3,453,241,801 | 157,531,964 | 3,295,709,837 | 364,721,747 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 3,791,675,600 | 101,556,356 | 3,690,119,244 | 210,588,736 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| தொ.இல. | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கையின் திகதியில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, நகர அபிவிருத்தி அதிகாரசபையானது சொத்து அபிவிருத்தியாளர்களிடமிருந்து சேவைக் கட்டணங்களை அறவிடுவதை நிறுத்தியதால், நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அந்த வருமான ஆதாரத்தை இழந்துள்ளது. சேவைக் கட்டணம் நிறுத்தப்பட்ட நேரத்தில், நகர அபிவிருத்தி அதிகாரசபையால் அறவிடப்பட்டிருந்த ரூபா 207.33 மில்லியனான சேவைக் | 2023<br>2022<br>2021 | சட்டத்தின் நோக்கங்களுக்கு இணங்க வேண்டும். | இது தொடர்பில் அமைச்சின் மேலதிக செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் பரிசோதிக்கப்பட்ட: அமைச்சின் செயலாளருக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இந்த சேவைக் கட்டணத்தை அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மேற்படி நிலுவைத் தொகைக்கு ஆதன பரிமாற்றமொன்றை மேற்கொள்ள வேண்டும் என உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அந்த முன்மொழிவு அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கட்டணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு பெறத் தவறியிருந்தது. | | | | அனுப்பப்பட்டுள்ளது. |
| 2 | (i) | 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம், நகர குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையை வகுத்து, கொள்கையை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்காக இந்த அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், அதிகாரசபை நிறுவப்பட்டு 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும் தேசிய கொள்கையொன்றை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரசபை தவறியுள்ளது. | 2023<br>2022<br>2021 | சட்டத்தின் நோக்கங்களுடன் இணங்கியிருத்தல் வேண்டும். | மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் நகர மற்றும் கிராம திட்டமிடல் திணைக்களத்தினால் இந்த பணியை மேற்கொள்ளுமாறு அதிகார சபை அமைச்சுக்கு கடிதம் அனுப்பியுள்ளது. | நகர்ப்புற குடியேற்ற அபிவிருத்திக்கு பொருந்தக்கூடிய தேசிய கொள்கையை உருவாக்குவதற்கான வரைவு விதிகள் மற்றும் பணிகள் (TOR) மேலும் அறிவுறுத்தல்களுக்காக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சின் பதில்களுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| | (ii) | 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம், அதிகார சபையினால் தலைவர் உள்ளிட்ட 14 அங்கத்தவர்களுக்கு மேற்படாத அலோசனைக் குழுவொன்றை 2017 ஏப்ரல் | 2023<br>2022<br>2021 | கூட்டுத்தாபன சட்டத்தின் நோக்கங்களிற்கு இணங்க வேண்டும். | அதிகார சபையின் நோக்கங்கள் மற்றும் எதிர்கால முன்மொழிவுகள், செயற்திட்டங்கள் மற்றும் செயல் நடவடிக்கை திட்டங்களை நடைமுறைப்படுத்த புதிய முகாமைத்துவத்தின் கீழ் புதிய ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. | புதிதாக நிறுவப்பட்ட ஆலோசனைக் குழுவிற்கு, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள உத்தேச திட்டங்களை உள்ளடக்கிய வணிகத் திட்டம் (Business Plan) சமர்ப்பிக்கப்பட்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாதமளவில் நியமிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் அதிகார சபையின் முன்மொழிவுகள், திட்டம், கருத்திட்டம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டம் போன்ற அதிகார சபையின் நோக்கத்துடன் தொடர்பான செயற்பாடுகளை இனங்கண்டிருக்கவில்லை. | | | | ள்ளதுடன், அது தேசிய திட்டமிடல் திணைக்களத்திடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 3 | மீளாய்வாண்டின் இறுதியில், அதிகாரசபையினால் புனரமைப்பு அடிப்படையிலும் விற்பனை அடிப்படையிலும் கட்டப்பட்ட 1714 வீடுகளில் 09 வீட்டுத்திட்டங்களுக்குரிய 588 வீட்டுக் கடன் அலகுகள் தொடர்பான உரித்துறுதிகளை வழங்கியிருந்த போதிலும், 1126 வீட்டு அலகுளுக்கான வீட்டுரிமையாளர்களுக்கு உரித்துறுதிகளை வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை. இதற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடையாதது மற்றும் கூட்டு ஆதன சான்றிதழ்கள் பெறுவதில் தாமதம் ஆகியவையே இதற்கு முக்கிய காரணமாகும். | 2023<br>2022<br>2021 | தொழில்நுட்ப சிக்கல்களை தீர்த்து, விரைவில் சொத்துக்களை முறையாக அகற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். | தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், உரிய முறையில் கூட்டு ஆதனச் சொத்துக்களை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கும், உரியதாக் பரிந்துரை வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | இது வரையிலும் சுவீகரிப்பு நிறைவு செய்யப்பட்டிராததுடன், வீடமைப்பு செயற்திட்டங்களை அதிகாரசபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| 4 | மீனவ மக்களுக்காக கட்டப்பட்ட அங்குலான அடுக்குமாடி குடியிருப்பில் சினிமாக்காரர்கள் மற்றும் விளையாட்டு | 2023<br>2022<br>2021 | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட | பூரண அளிப்புப் பத்திரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட 53 வீட்டுத் தொகுதிகள் | பூரண அளிப்பாக வீடுகளைப் பெற்ற 27 பயனாளிகள் விற்பனை அடிப்படையில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வீரர்களுக்கு பணம் வசூலிக்காமல் பூரண அளிப்புப் பத்திரத்தின் மூலம் ரூபா 62.87 மில்லியன் பெறுமதியான 53 வீட்டு அலகுகளின் உரித்து வழங்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நியாயமான தொகையொன்றை அந்த நலனாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி, மேலும் 38 வீட்டு அலகுகளில் இருந்து ரூபா 55.48 மில்லியன் பெறத்தக்கதாக இருந்தது. சட்டமா அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் பணம் செலுத்தாதவர்களின் பூரண அளிப்பினை இரத்துச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 15 வீடுகளை அகற்றும் பணிகளையும் அதிகார சபை மேற்கொண்டுள்ளது. | | வேண்டும். | தொடர்பில் அமைச்சரவை தீர்மானம் வழங்கியிருந்த போதிலும், கொரொனா தொற்று நிலைமை மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக கடமைகள் மிகக்குறைவாகவே மேற்கொள்ளப்பட்ட துடன், இந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடும் நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன. | ஒப்பந்தம் செய்து கடன் தவணை செலுத்தத் தொடங்கியுள்ளன துடன், 12 வீட்டு மனைகள் புதிய பயனாளிகளுக்கு கடன் அடிப்படையில் வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.<br><br>வீடுகளைப் பெற்ற 11 பயனாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன<br><br>மீதமுள்ள 03 வீட்டு மனைகளின் பயனாளிகளின் மேன்முறையீடுகள் நிலுவையில் உள்ளன. |
| 5 | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் மதிப்பீட்டு பெறுமதியில் 20 சதவீதம் சேர்த்து, விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனினும், அதற்கு நேர்மாறாக, பணிப்பாளர் சபைப் பத்திரத்தின் ஊடாக அரசாங்கத்தின் மதிப்பீடு மட்டுமே வசூலிக்கப்பட்டு அதிகாரசபையின் 24 ஊழியர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்ட காரணத்தால் | 2023<br>2022 | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முறையான நடைமுறைக்கமைவாக 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 03 ஆம் இலக்கத்தின் கீழ் சாட்டப்பட்டுள்ள முகாமைத்துவ அதிகாரங்களின்படி தகுதிவாய்ந்த 24 ஊழியர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. | 01/2021/15 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம், சராசரி விற்பனை விலையை தீர்மானிக்கும் போது சேகரிக்கப்பட்ட 20% சேவைக் கட்டணம் அறவிடப்படாது, ஆகக் கூடிய காலம் 25 வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்படும் வகையில் 2% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அரசாங்கத்திற்கு ரூபா 20.68 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் ஊழியர்களுக்கு விற்கப்பட்ட வீட்டுப் அலககளில் ரூபா 95.34 மில்லியன் அதிகாரசபைக்கு பெற வேண்டியதாக காணப்பட்டது. | | | | சதவீத வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் தகைமையுடைய 22 ஊழியர்களுக்கு வீடுகளை விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டது. |
| 6 | அதிகாரசபைக்கு சொந்தமான ரியல் எஸ்டேட் எக்ஸ்சேஞ்ச் பிரைவேட் லிமிடெட் கம்பனியால் கட்டப்பட்ட ரூபா 44.78 மில்லியன் பெறுமதியான 67 சஹஸ்புர வர்த்தக அலகுகள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத 57 சேவை அலகுகள் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் அதிகாரசபைக்கு குத்தகை வருமானம் ஈட்டக்கூடியதாக இருந்த போதிலும், பூரண அளிப்புப் பத்திரத்தின் மூலம் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் கீழுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்ததன் காரணமாக அந்த குத்தகை வருமானம் இழக்கப்பட்டுள்ளது. | 2023<br>2022 | வணிக அலகுகளில் இருந்து குத்தகை வருவாய் ஈட்டப்பட வேண்டும். | இந்த வீடமைப்பு முன்மொழிவு முறையை ஆரம்பித்த ரீல் கம்பனியால் உரிய வியாபார நிலையங்களின் வருமானம் முழுமையாக முகாமைத்துவ கூட்டுத்தாபன நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்த துடன், நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட அந்த நடைமுறையை சட்டரீதியாக்கல் மாத்திரம் ஆகும். | 05/2022/06 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்திற்கு கிடைத்த அங்கீகாரத்தின் பிரகாரம், இந்த வீடமைப்பு முன்மொழிவு முறைமையின் முகாமைத்துவ மற்றும் பராமரிப்பு பொறுப்புகளில் அபிவிருத்தி அதிகாரசபை முழுமையாக விடுதலை பெறும் நோக்கில் இந்த வணிக அலகுகளின் வருமானங்களை முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு பெற சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த வணிக மற்றும் சேவை நிலையங்களின் உரித்து இந்த அதிகாரசபைக்கு உரியது ஆகும். |
| 7 | அநுராதபுரத்தில் ரூபா 4.9 மில்லியன் செலவிடப்பட்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பத்தின் கீழ் | 2023<br>2022 | ஒரு செயற்திட்டத்தைத் தொடங்குவதற்கு முன், ஒரு சாத்தியவள கற்றை நடத்தப்பட | நிறுவனத்தின் தற்போதைய நிதி நிலைமை மற்றும் நிதி நம்பகத்தன்மையைக் கருத்தில் | அநுராதபுரம் கட்டுக்கலியாவ வீடமைப்புத் திட்டத்தில் புனரமைப்பு தொழில்நுட்பத்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (சுதாரகா தொழில்நுட்பம்) கட்டப்பட்ட 06 வீடுகள், மனிதர்கள் வாழ்வதற்கு பொருத்தமற்றது என தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (NERDC) மற்றும் அதிகாரசபையின் பொறியியலாளர் ஒருவரால் சான்றளிக்கப்பட்டது. இங்கு வீடுகள் கட்டப்பட்ட போதிலும், எதுவித பராமரிப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லைஎன்பதுடன், 2013 முதல் 2024 ஏப்ரல் வரை 11 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டது. இருப்பினும், 2018 முதல் ஒரு காவலாளி பணியமர்த்தப்பட்டு, அவரது சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்காக ரூபா 2.75 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டுள்ளது. | | வேண்டும். | கொண்டு, நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தால் இந்த வேலையை தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்யப்பட்டது. | டன் நிர்மாணிக்கப்பட்ட 6 வீடுகளுக்கு நீண்டகால வரிவிலக்கு வழங்குவதற்கான விலைமனுக்கைள அழைப்பது தொடர்பில் அதிகாரசபையின் உயர் முகாமைத்துவத்தினால் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், அதன்போது இந்த வீட்டு பெறுமதிகளின் கீழ் ஒரே தடவையில் பணம் பெற்று அகற்றுவதற்று மற்றும் எஞ்சிய வீடுகளை நிறுவனத்தின் தங்கும் விடுதிகளாக பராமரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. |
| 8 | அதிகாரசபைக்கு வரையறுக்கப்பட்ட ரியல் எஸ்டேட் எக்ஸ்சேஞ்ச் (தனியார்) கம்பனியை கையகப்படுத்தும் போது ஏற்பட்ட நிதி மோசடி தொடர்பாக, 2021 ஒக்தோபர் 28 ஆந் திகதி சட்டமா அதிபர் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி, நட்டம் தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை ஒதுக்க முடியுமா என்பதை பரிசீலிக்க நிதிப்பிரமாணம் 103 (அத்தியாயம் II) இன் | 2023<br>2022<br>2021 | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பில் முறையான சட்ட ஆய்வினை மேற்கொண்ட பின்னர், இந்த தொகை தொடர்பில் நிதிக்கூற்றுக்க ளில் வெளிப்படுத்தப்படவுள்ளது. | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம், ஆரம்ப விசாரணை மேற்கொள்ள குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |

கீழ் உரிய சம்பந்தப்பட்ட வரிசை அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு அது தொடர்பில் பொறுப்புள்ள நபர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பினை துல்லியமாக கணக்கிட வேண்டும் என்று கூறப்பட்டாலும், 2024 ஏப்ரல் மாதம் வரையிலும் வரிசை அமைச்சு அதற்கான பணிகளை மேற்கொள்ளவில்லை.

## 3.24 தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம்

| நிதிப் பெறுபேறு (ரூபா.) | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| இலாபம் / (மிகை) | 25,122,253 | | |
| நட்டம் / (குறைவு) | | 48,116,618 | 47,203,829 |
| மொத்த சொத்துக்கள் | 238,709,080 | 299,144,927 | 359,925,383 |
| மொத்த பொறுப்புக்கள் | 3,552,398 | 4,384,599 | 8,722,039 |
| மூலதனம் | 235,156,682 | 294,760,327 | 351,203,344 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | தொடர்பு இலக்கம் | கணக்காய்வாளரின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | 2009 இன் 38 ஆம் இலக்க தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவக அதிகாரச்சட்டத்தின் 3(1) (க) உப பிரிவின் பிரகாரம் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை தொடர்பான தேசிய நியமங்களை நிறுவுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் இந்த நியமங்கள் நிறுவப்பட்டிருக்கவில்லை. | 2021 – 154 (6) 1.6 (உ) | அதிகாரச்சட்டத் தி ன் பிரகாரம் செயற்பட வேண்டும். | தேசிய நியமங்களை நிறுவும் அதிகாரம் இலங்கை நியமங்கள் நிறுவகத்திற்கே உள்ளது. அதன் காரணத்தால், அந்த நிறுவனங்களுடன் இணைந்து நியமங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான உதாரணமாக Standard Practice Reparative Protection நியமங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. | சரி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இன்னமும் சரி செய்யப்படவில்லை. |
| 2 | 2009 இன் 38 ஆம் இலக்க தொழில் பாதுகாப்பு மற்றும் | 2022 – 154 (6) 1.6 (அ) (i) | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்க | அமைச்சின் கட்டளைகளை தயாரிப்பதற்காக இந்த | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவக அதிகாரச்சட்டத்தின் 20(1) உப பிரிவின் பிரகாரம் அமைச்சரினால் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிறுவனத்தின் எதேனும் பணியொன்று அல்லது அவை அனைத்தையும் மேற்கொள்ளும் பணிக்காக மற்றும் சட்டத்தின் நியதிகளுக்கு அதிகாரமளிக்கும் பணிக்காக கட்டளைகளை உருவாக்க இயலுமான போதிலும், அந்த கட்டளைகள் தயாரிக்கப்பட்டிரு க்கவில்லை. | | மை ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிகாரச்சட்ட த்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப் பட வேண்டும் என்பதால் தற்போது நிறுவனத்தினால் தொழில் அமைச்சின் ஊடாக புதிய திருத்தங்களுட னான அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு கௌரவ சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்படடுள்ளது என. | டு வருகின்றது. இன்னமும் சரி செய்யப்படவில்லை. |
| 3 | 11 ஆம் பிரிவிற்கமைய நிறுவனத்தின் செயற்திறனான நிர்வாகத்திற்கு தேவையான வகையில் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் எனும் ரீதியில் ஏதேனும் எண்ணிக்கையான நபர்கள் சபையினால் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கவி ல்லை. | 2022 – 154 (6) 1.6 (அ) (ii) | அதிகாரச்சட்டத் தின் ஏற்பாடுகளுக்க மை ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பில் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டு அது தொடர்பில் பணிப்பாளர் சபையின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க குறித்துக்கொள்ளப்பட் டுள்ளது என. | சரி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டு வருகின்றது. இன்னமும் குறித்த பணி நிறைவடையவில் லை. |
| 4 | நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 25 ஆக | 2022 – 154 (6) 3.1 | நிறுவனம் தனது பணியை நிறைவேற்ற | கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களில் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| காணப்பட்டதுடன், உள்ளபடியாக பதவியணி 16 ஆகும், நிறுவனத்தின் பணிகளை மேற்கொள்ளும் போது கட்டளைச் சட்டங்கள் மூலம் சாட்டப்படும் பணிகளுக்காகவும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் சாட்டப்படும் முகாமைத்துவ பணிகளை நிறைவேற்றுவதற்காகவும், அதனை நிறைவேற்றும் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் பதவியான பணிப்பாளர் நாயகம் பதவி ஒப்பந்த அடிப்படையில் சேவை பெற்றுக் கொள்ளப்படுவதாக அவதானிக்கப்பட்டது. நிறுவனத்தின் நிலவுகையுடன் தொடர்புடைய முக்கிய பணிப்பொறுப்பு சாட்டப்பட்டுள்ள பணிப்பாளர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு) பதவிக்காகவும் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையான போதிலும், தேவையான சந்தர்ப்பங்களில் வளவாளர்களின் சேவை பெற்றுக் | 2023 – 154 (6) 2.1 | இயலுமான வகையில் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும். | இருந்து பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட விரும்புகின்றேன். மேலும், கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு) பதவிக்கு, பணிப்பாளர் நாயகம் பதவியைப் போன்று ஒப்பந்த அடிப்படையில் எந்த சேவையும் பெறப்பட மாட்டாது என்பதை உறுதிப்படுத்துகிறேன். | அனுமதி கோரப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொள்ளப்பட்டவாறு காணப்பட்டது. | | | | |
| 5 | 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச் சட்டத்தின். 20 (1) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் செயல்பாடுகளில் ஏதேனும் அல்லது அனைத்தையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காகவும், சட்டத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காகவும் சட்டத்தின் விதிகளின் கீழ் அமைச்சர் கட்டளை பிறப்பிக்கப்பட இயலுமான போதிலும் கட்டளைகள். பிறப்பிக்கப்பட்டிருக்கவிலலை. | 2023 – 154 (6) 1.6 (அ) (i) | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்குடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | இதுவரையிலும் கட்டளைகள் பிறப்பிக்கப்படவில்லை. |
| 6 | 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் திறமையான நிர்வாகத்திற்கு அவசியமாக நிறுவனத்தின் பணிப்பாளர்களாக குறிப்பிட்ட | 2023 – 154 (6) 1.6 (அ) (ii) | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என. | தற்போது வரையில் பரிந்துரை செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கையிலான நபர்கள் சபையால் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவர்கள் அவ்வாறு பரிந்துரைக்கப்படவில்லை. | | | | |
| 7 | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 83 ஏ அத்தியாயம் 2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு வருமானம் (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டம. மற்றும் PED 01/ 2023 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணங்கள் தனிப்பட்ட வருமான வரிக்கணிப்பீட்டின் போது பதவிக்கு உரித்தான சம்பளம் மற்றும் படிகள் நீங்கலாக அந்தப் பதவிகளில் கடமைகளை நிறைவேற்றும் போது பெற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து படிகளும் உள்ளடங்களாக முற்பணங்கள் தனிப்பட்ட வருமான வரிக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், மதியரை கட்டணங்கள் வளப்பங்களிப்பு கட்டணங்கள் மற்றும் வருடாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 2023 – 154 (6) 1.6 (ஆ) | உள்நாட்டு வருமான அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அது தொடர்பில் இந்த விடயங்களை கோவைபடுத்தி அதன் செயலகத்திடம் வினவி அறிவுரை கோரப்பட்டுள்ளதுடன், கிடைக்கும் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு கணக்குகள் பிரிவிலிருந்து அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. | செலுத்தப்பட்டுள்ள தொகைக்கு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

போன்றவற்றை
கருத்தில் கொள்ளாது
முற்பண தனிப்பட்ட
வருமான வரி
கணிப்பீடு
மேற்கொள்ளப்பட்டிருந்
தது .

## 3.25 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

| நிதிப் பெறுபேறு (ரூபா.) | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| இலாபம் / (மிகை) | 13,109,428 | 18,874,140 | 11,095,652 |
| நட்டம் / (பற்றாக்குறை) | | | |
| மொத்த சொத்துக்கள் | 80,659,692 | 113,904,593 | 130,413,193 |
| மொத்த பொறுப்புக்கள் | 4,477,908 | 4,480,706 | 9,784,239 |
| மூலதனம் | 76,181,784 | 109,423,887 | 120,628,953 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | தொடர்பு இலக்கம் | கணக்காய்வாளரின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டம் 3(அ) உப பிரிவின் பிரகாரம் ஊழியர்களின் நலனை உறுதிசெய்யும் வகையில், அவர்களை வளர்ச்சிப் பணிகளில் தீவிரமாகப் பங்குபெறச் செய்ய எடுக்கப்பட்ட முறையான நடவடிக்கைகள் அவதானிக்கப்படவில்லை. | 2021 – 154 (6) 1.6 (அ) (i) | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியர்களை அபிவிருத்தி நடைமுறையின் செயற்பாட்டு பங்காளர்களாக்குவதற்கு தொழிலாளர் சட்டம், தொழில்துறை உறவுகள், மனித வள மேம்பாடு, பெறுகைகள், தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப்பிரமாணம் போன்றவற்றைப் புரிந்துகொள்வதன் மூலம் அவர்களின் பணி நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புடைய பாடங்களில் திறன் மேம்பாட்டு | விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் நடாத்தப்படும். ஒழுங்கான முறைமை தயாரிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நோக்கத்திற்காக குறுகிய கால மற்றும் நீண்ட கால பாடநெறிகள் நடாத்தப்பட்டதுடன், அவர்கள் வளர்ச்சி செயல்முறைக்கு எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டு , தொழிலாளர் சட்டம் மற்றும் தொழில்துறை உறவுகள் குறித்து முதலாளிகள் மற்றும் பணியாளர்கள் இருவருக்கும் விழிப்புணர்வை வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு ள்ளது. | |
| 2 | 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டம் 3(அ) உப பிரிவின் பிரகாரம் நூலகம் மற்றும் தகவல் சேவைகளை நிறுவுவதும் பராமரிப்பதும் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்தாலும், 2021 மார்ச் 31 வரை அத்தகைய நூலகம் | 2021 – 154 (6) 1.6 (அ) (iii)<br><br>2022 – 154 (6) 1.6 (i)<br><br>2023 – 154 (6) 1.5 (இ) | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2007ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை நூலகம் ஒன்று நிறுவப்பட்டதுடன், நாரஹேன்பிட்டியில் உள்ள தொழிலாளர் பொதுச் செயலாளரின் அலுவலகம் நிறுவப்பட்டு நவீனமயமாக்கப்பட்டதன் பின்னர் 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது | இலத்திரனியல வெளியீட்டை உள்ளடக்கிய இணையப்பக்கத்தை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் தகவல் சேவையை நிறுவனம் செயல்படுத்தவில்லை. | | | காலாண்டிலிருந்து நூலகத்தை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இணையத்தளம் மூலம் அணுகக்கூடிய இலத்திரனியல் நூலகத்தை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| 3 | 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டம் 3 (உ) உப பிரிவின் பிரகாரம் ஒத்த நோக்கங்களுடனான தேசிய மற்றும் வெளிநாட்டு அமைப்புகள் சங்கங்கள் மற்றும் சங்கங்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும், ஆனால் அத்தகைய திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படவில்லை. | 2021 – 154 (6) 1.6 (அ) (iv)<br><br>2022 – 154 (6) 1.6 (ii)<br><br>2023 – 154 (6) 1.5 (ஈ) | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்தியாவின் விவி கிரி தேசிய தொழிலாளர் அமைப்புடன் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நாளதுவரையாக்குவதற் காக ஆலோசிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புகளை பெற்று, அமைச்சரவையின் அனுமதியை பெற்று உடன்பாடு எட்டப்படும். சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்த சர்வதேச பயிற்சி நிலையத்துடன் ஒத்துழைப்பை ஏற்படுத்த | V V Giri National Labour Institute நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடுவதற்காக சட்டமா அதிபர ˙ திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள ˙ எது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஏற்கனவே 03 சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், தற்போது இயங்கி வரும் தொழிலாளர் சட்டங்கள் மற்றும் தொழில்துறை உறவுகளுக்கான டிப்ளோமா பாடநெறிக்கு நிறுவனத்தில் இருந்து வள பங்களிப்பைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த விவாதங்கள் முடிவடைந்துள்ளன. | |
| 4 | 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டம் 3 (ஊ) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஒத்த நிறுவனங்களுடன் நிறுவனம் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தாலும் (மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தவிர) பாடநெறிகள் நடாத்தப்பட்டு | 2021 – 154 (6) 1.6 (அ) (v) | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மனிதவள வேலைவாய்ப்பு முகவரகம் மற்றும் தொழில் வழங்குநர் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் ஆய்வு மற்றும் அவற்றில் தற்போதுள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து அதன் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அடையாளம் காணும் நோக்கில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து ஒரு | NVQ வழங்குவதற்கு கலந்துரையாடப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் அதன் பணிகள் நிறைவேற்றப்படவில்லை. |

| | |
|---|---|
| சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமா வழங்கப்படவில்லை. | ஆராய்ச்சிக்கான ஆரம்பக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. இலங்கை மதிப்பீட்டு சங்கத்துடன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு தொடர்பான டிப்ளோமா பாடநெறியை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் நோக்கில் முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட நிலையில், அரசுப் பணியாளர்களுக்கான தமிழ் மொழிப் புலமையைப் பெறுவதற்கான சான்றிதழ் பாடநெறியை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அரச கரும மொழிகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. தேசிய தொழிற் தகைமைகளை (NVQ) பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தல் தொடர்பாக ஏற்கனவே மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| 5 | 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டம் 4 (எ) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் நோக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒத்த நோக்கங்களைக் கொண்டுள்ள, இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள ஏனைய நிறுவனங்களுடன் ஆட்கள் பரிமாற்றம் மற்றும் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகள் மற்றும் பொதுவாக அவர்களின் பொதுவான நோக்கங்களை முன்னோக்கி கொண்டு செல்லல் தொடர்பான பணிகளுக்காக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவை அவ்வாறு செய்யப்படவில்லை. | 2021 – 154 (6) 1.6 (அ) (vi) | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்தியாவின் விவி கிரி தேசிய தொழிலாளர் அமைப்புடன் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நாளதுவரையாக்குவதற்காக ஆலோசிக்கப்பட்டுள்ளதுடன், அதற்குரிய அமைச்சரவையின் அனுமதியை பெற்று உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். | புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு அவதானிப்பிற்காக சட்டமா அதிபர திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டம் 16 (1) உப பிரிவின் பிரகாரம் இந்தச் சட்டத்தின் கீழ் கடமைகளைச் செய்வதற்குத் தேவையான குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழில்நுட்பக் குழுக்களை சபை நியமித்திருக்கலாம் என்றாலும், அத்தகைய குழுக்கள அதற்கேற்ப நியமிக்கப்படவில்லை. | 2021 – 154 (6) 1.6 (அ) (vii)<br><br>2022 – 154 (6) 1.6 (iii)<br><br>2023 – 154 (6) 1.5 (ஆ) | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிறுவனத்தின் எதிர்கால வாய்ப்புகள் மற்றும் எதிர்கால விஸ்தரிப்பு ஆகியவற்றுடன் செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பாக சட்டத்தில் இவ்வாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் அவ்வாறான தேவை ஏற்படாத காரணத்தினால் சபை தொழில்நுட்பக் குழுக்களை நியமிக்கவில்லை. எதிர்காலத்தில் நிறுவனத்தின் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு போதிய நிதித் திறன் இருக்கும்போது நிர்வாகக் குழுவின் ஆலோசனையின் பேரில் சட்டத்தின் இந்தப் பிரிவுகளின்படி தொழில்நுட்பக் குழுக்கள் எதிர்காலத்தில் நியமிக்கப்படும். | நிதித் திறன் மற்றும் நிர்வாகச் சபையின் அறிவுரையின் அடிப்படையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 7 | 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க | 2023 – 154 (6) | சட்டத்தின் ஏற்பாடுகள் | தேசிய தொழிற்கற்கைகள் | 2024 ஆம் ஆண்டில் 02 தடவைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகச் சட்டத்தின் பிரிவுகள் 5 (1) மற்றும் (2) இன் பிரகாரம் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, நிறுவகத்தின் அலுவல்களின் நிர்வாகமும், முகாமையும் கட்டுப்பாடும் நிறுவகத்தின் ஆளுநர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நிறுவகத்தின் அலுவல்களை நிர்வகிப்பதற்காக சட்டத்தினால் ஆளுநர் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள, விதித்துரைக்கப்பட்டுள்ள அல்லது சுமத்தப்பட்டுள்ள தத்துவம், கடமை மற்றும் பணிகளை செயற்படுத்துவதற்கு ஏற்புடையதாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே ஒருமுறை மற்றும் இரண்டு முறைகள் மட்டுமே நிறுவகத்தின் ஆளுநர் சபை ஒன்றுகூடியது. | 1.5 (அ) | பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். | நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டு பொருட்டு நியமிக்கப்பட்டிருந்த ஆளுநர் சபையின் உறுப்பினர்கள் பதவி விலகியுள்ளமையினால், 2022.06.02 ஆம் திகதியன்று புதிய ஆளுநர் சபையை நியமிக்குமாறும், ஆளுநர் சபை பொருட்டு பதவிவழியால் நியமிக்கப்படுகின்ற உயர் கல்வி அமைச்சின் உறுப்பினரை நியமிக்குமாறும் நிறுவகம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அது அவ்வாறு இருந்த போதிலும், நிறுவகக் குழுக் கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாக இருத்தல் வேண்டுமென நிறுவகச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால், ஆளுநர் சபையின் தலைவர் மற்றும் பதவிவழியிலான ஏனைய ஐந்து | மட்டுமே கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உறுப்பினர்களின் நடப்பெண் சகிதம் பணிப்பாளர் சபை 02 கூட்டங்கள் 2023ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன என. | |
| (கே) | அரச ஒசுகலைகளில் விற்பனை செய்வதற்காக கிரயம் ரூபா 3.9 மில்லியன் ஆன Bisoprolol Fumarate Tablets 5mg மருந்தை 30 அலகுகள் உறைகளுடன் 20,000 அலகுகள் கொள்வனவு செய்யும் பெறுகைக்கு வழங்குநரால் 250 அலகு போத்தல்கள் உறைகளில் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. திணைக்கள பெறுகைக் குழு அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் பெறுகை கையளித்திருந்தது. கேள்வி சமர்பிர்த ஒரே ஒரு கேள்விதாரர் கேள்வி திறக்கின்ற சந்தர்ப்பத்தின் போது கேள்வி பிணைமுறி மற்றும் மாதிரிகள் சமர்ப்பித்திருக்கவில்லை. | 2023 | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் அவ்வப்போது தற்காலிகமாக மேற்கொள்ளப்படுகின்ற அந்த திருத்தங்களுக்கு இணங்க பெறுகை முகாமைத்துவம் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஏற்படுகின்ற இழப்பு அல்லது நட்டம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து மிகைக் கட்டணமாக அறவிடப்படல் | காணப்படுகின்ற இருப்பின் பூச்சிய நிலைமையைக் கவனத்தில் கொண்டு ஒரேயொரு வழங்குனருக்கு கேள்வி கையளிக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. பெறுகைக் குழுத் தீர்மானம் காப்புறுதி செயலாற்றலின் அடிப்படையிலான நிபந்தனையின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த கட்டளைக்குரிய மீள்கையளித்தல் கடிதம் விநியோகிக்கப்படாமல் கட்டளை | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இந்த பெறுகைகளுக்குரிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.4 ஆம் பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பெறுகைக் குழுத்தீர்மானத்தின் பிரகாரம் செயலாற்றல் காப்புறுதி பெற்றுக்கொண்ட பின்னர் கேள்வி கையளிக்க வேண்டியிருந்த போதிலும் குழுத் தீர்மானத்தை கவனத்திற் கொள்ளாமல் செயலாற்றல் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு 11 நாட்களுக்கு முன்னர் கொள்வனவுக் கட்டளை விநியோகிக்கப்பட்ட போதிலும் 02 மாத தாமதத்துடன் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. | | வேண்டும். | வழங்கும் போது அந்தக் கட்டளையில் இருந்து 14 நாட்களுக்குள் உரிய காப்புறுதி வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (கை) | அரச ஒசுசலைகள் விற்பனை செய்வதற்காக கிரயம் ரூபா 15.26 மில்லியன் ஆன Bisoprolol Fumarate Tablets 2.5mg மருந்து 30 அலகுகளின் உறையை ரூபா 30,000 | 2023 | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைகள் முகாமைத்துவம் செய்யப்படாமையி | விடயங்களை வழங்கக்கூடிய கேள்விதாரர் மற்றும் விடயங்களை வழங்குகின்ற அலகுகளின் அளவினைக் | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உறைகள் கொள்வனவு செய்தல் கேள்வி ஆவணங்களின் பிரகாரம் மாதிரிகள் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் தெரிவு செய்யப்படட வழங்குநர் மாதிரிகள் சமர்ப்பித்திருக்கவில்லை. கூட்டுத்தாபனத்தால் தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.7.1 பிரிவின் பிரகாரம் மீளளித்தல் கடிதம் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே கொள்வனவுக் கட்டளையின் பிரகாரம் கட்டளை கிடைத்து 14 நாட்களுக்குள் செயலாற்றல் பிணைமுறி ஒன்று உரிய வழங்குநரால் வழங்க வேண்டியிருந்த போதிலும் கொள்வனவுக் கட்டளை வழங்குநருக்கு கிடைத்து 40 நாட்கள் தாமதத்தின் பின்னர் செயலாற்றல் பிணைமுறியொன்று கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | | ன் காரணமாக ஏற்படுகின்ற இழப்பு மற்றும் நட்டத்தை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிட மிருந்து மிகைக் கட்டணமாக அறவிடல் வேண்டும். தேவையான திருத்தங்கள் வழங்குனர் மேற்கொள்ளாமை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கவனத்தில் கொண்டு SPC இன் இருப்பு பூச்சிய நிலையின் கீழ் இரண்டாவது ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வி கையளிக்கப்பட்டிரு ந்தது. | |
| (கொ) | Triamcinolone acetonide (presentive free) inj மருந்தின் 1,500 அலகுகளை | 2023 | தாமதமாக இருப்பு வழங்குதல் தொடர்பாக இருப்பு | மாதிரிகளுக்கு இணங்காதிருந்தை ம மாத்திரம் நிராகரிக்கப்பட்டமை | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிரு |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொள்வனவு செய்யும் பெறுகைகளுக்குரிய கேள்வி சமர்ப்பித்த ஒரேயொரு வழங்குநருக்கு ஐ.அ.டொலர் 27,645 பெறுமதி கட்டளை கையளிக்கப்பட்ட போதும் வழங்குநரால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு முதலாவது இருப்பான 750 அலகுகள் 04 மாதங்கள் மற்றும் இரண்டாவது இருப்புக்களான 750 அலகுகள் 03 மாத தாமதத்துடன் வழங்கப்பட்டிருந்த போதிலும் பொருள் அனுப்பல் கோரிக்கையும் குறிப்பிடப்பட்ட முறையில் விடயங்கள் பெற்று வழங்கப்படாமல், ஆயுட் காலம் இலங்கைக்கு கிடைத்த பின்னர் 85 சதவீதத்தை விட குறைவடைந்தமை, விஷேட சந்தர்ப்ப முறைமை பின்பற்றப்படாமல் மற்றும் உற்பத்தியில் காலாவதியாகும் பொருட்கள் அடங்கியிருந்ததன் அடிப்படையில் மருத்துவ வழங்கல் பிரிவு இருப்பினை நிராகரித்திருந்தது. அதன் பிரகாரம் ரூபா 9.29 மில்லியன் பெறுமதியான இந்த | நிராகரித்ததன் அடிப்படையில் செலவிட வேண்டி ஏற்பட்ட சகல கிரயங்களையும் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மக்குக் காரணமாக இருந்தது. | க்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இருப்பு வாடகையை செலுத்தப்பட்ட களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. இந்த மருந்தின் மாதாந்த தேவையான 336 அலகுகளாக இருந்த போதிலும் 2023 மே 23 ஆம் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவின் இருப்பு மற்றும் தேசிய இருப்பு மட்டம் பூச்சிய நிலையில் காணப்பட்டது. | | | | |
| (கோ) | Lora Pam Tab 1mg மருந்தில் 1,500,000 அலகுகளைக் கொள்வனவு செய்யும் பெறுகைகளுக்கு உரிய கேள்வி சமர்ப்பித்த ஒரே ஒரு வழங்குநர் பெறுமதி ஐ.அ.டொலர் 315,000 தொகையில் 700,000 அலகுகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பொருள் அனுப்பல் கோரிக்கை வழங்குநருக்கு கையளிப்பதற்கு 05 வாரங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. மிகுதி இருப்பு அலகுகள் 800,000 இனை வழங்குவதற்குரிய 2022 ஒக்டோபர் 19 ஆந் திகதி பெறுகைக் குழுவினால் 500,000 அலகுகள் மற்றும் | 2023 | பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து தாமதக்கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 250,000 அலகுகள் வழங்குநருக்கு கையளிக்கப்பட்டு பொருள் அனுப்பல் கோரிக்கை இலக்கம் 02 விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 750,000 அலகுகள் 2022 திசம்பர் 31 ஆம் திகதி வரையும் வழங்க வேண்டியிருந்த போதிலும் 500,000 அலகுகள் 2.5 மாத தாமதம் மற்றும் 250,000 அலகுகள் 10 மாத தாமதத்துடன் வழங்கப்பட்டிருந்தது. | | | | |
| (கௌ) | Cefotaxime Injection 1g Vial மருந்திலிருந்து 367,656 தடுப்பூசிக் குப்பிகளைக் கொள்வனவு செய்வதற்குரிய போட்டியாளர் கேள்வி விலையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் சமர்ப்பிக்கப்பட்ட ஒரேயொரு கேள்விதாரருக்கு அலகொன்று ரூபா 301 வீதம் 367,656 அலகுகளுக்காக ரூபா 110.66 மில்லியன் தொகையில் கேள்வி கையளிப்பதற்கு திணைக்கள பெறுகைக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த விலை பொதுவான வழங்கல் | 2023 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் அவ்வப்போது நாளதுவரையாக்கப்பட்ட அதன் திருத்தங்களுக்கு இணங்க பெறுகைகள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். அதன் படி நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஏற்படுகின்ற இழப்பு அல்லது நட்டம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து மிகைக் கட்டணமாக அறவிட நடவடிக்கை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறையான சுயாதீன விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| விலையினை விட 07 மடங்கு அதிகமாகும். இது அவசர பெறுகைகளாக இருந்த போதிலும் வழங்குநர் அந்த மருந்தை செய்து வழங்கியதன் காரணமாக அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் அடிப்படையில் கேள்வி கோரப்பட்ட திகதியில் இருந்து 02 வருடங்கள் கடந்ததன் பின்னர் மருத்துவ வழங்கல் பிரிவின் சராசரி வழங்கல் விலையான தடுப்பூசிக் குப்பியொன்று ரூபா 42.43 வீதம் 367,656 தடுப்பூசிக் குப்பிகளுக்காக பொருள் அனுப்பல் கோரிக்கை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த இருப்பு வழங்கல் பிரிவில் கையேற்ற சந்தர்ப்பம் வரையிலும் காலாவதியாகுவதற்கு அண்மித்த நிலையில் காணப்பட்டது. அதாவது 2022 ஏப்ரல் 20, யூன் 03 மற்றும் யூலை 08 கையளிக்கப்பட்ட மருந்துகள் 2022 யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் காலாவதியாகுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. வழங்குநரால் கூட்டுத்தாபனத்திற்கு | எடுத்தல் வேண்டும். முறையான சுயாதீன பரிசோதனை நடாத்தி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறிவிக்கப்பட்ட 2020 யூலை உற்பத்தி செய்யப்பட்ட தொகுதி இலக்கம் VIH 032 இல் 37,156 தடுப்பூசிக் குப்பிகள் 2022 யூலை காலாவதியாக இருந்தது. எனினும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கும் போது தொகுதி இலக்கம் VIH 032 இல் உற்பத்தித் திகதி 2020 ஆகஸ்ட் மற்றும் காலாவதியாகும் திகதி 2022 ஆகஸ்ட் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கையளிக்கும் வரையில் காலாவதியான இருப்புக்களும் பிரச்சினைகளுடனாக இருந்தது. இந்த அறிவித்தல் இந்தக் கட்டளையின் 4,700 அலகுகள் கணக்காய்வுத் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| (ச) | Cefotaxime Injection 1g Vial மருந்து 250,000 அலகு தடுப்பூசிக் குப்பிகளைக் கொள்வனவு செய்யும் பெறுகைகளுக்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் | 2023 | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து தாமதக்கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து தாமதக்கட்டணத்தை அறவிடுவதற்கு |

| | |
|---|---|
| அதிகார சபை மூலம் ஒரே ஒரு கேள்விதாரர் அதாவது ஐந்தாவது கேள்விதாரரிடமிருந்து அலகொன்று ஐ.அ.டொலர் 0.95 வீதம் மொத்தப் பெறுமதி ஐ.அ.டொலர் 237,500 ஆன கொள்வனவு செய்யும் பொருள் அனுப்பல் கோரிக்கையின் பிரகாரம் 250,000 குப்பிகள் 2022 திசம்பர் 12 ஆந் திகதி வழங்க வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் இந்தக் கட்டளைக்காக நாணயக் கடிதம் 2023 பெப்ரவரி 14 ஆம் திகதி திறக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 மே 23 ஆந் திகதி இந்த வழங்கல் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. பொருள் அனுப்பல் கோரிக்கையின் படி இருப்பு வழங்க வேண்டிய திகதியில் இருந்து நாணயக் கடிதம் விநியோகித்தல் வரையான 02 மாதங்கள் இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்ட திகதி வரை 05 மாதங்களும் 12 நாட்களும் தாமதமடைந்திருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேலும் மருத்துவ வழங்கல் பிரிவின் வழங்கல் கால அட்டவணையான 2022 செப்டெம்பர் 26 ஆம் திகதி முதல் இருப்பு வழங்கப்பட்ட திகதி வரை 07 மாதங்களும் 27 நாட்களும் தாமதமடைந்திருந்தது. | | | | |
| (சா) | Furosemind injection 20mg/2ml மருந்தில் 1,800,000 தடுப்பூசிக் குப்பிகளைக் கொள்வனவு செய்யும் பெறுகைகளுக்குரிய ஆகக் குறைந்த கேள்வி விலையான அலகொன்று ஐ.அ.டொலர் 0.032 வீதம் சமர்ப்பித்த வழங்குநருக்கு கேள்வி கையளிக்கப்பட்ட போதும் கேள்வி கோரும் போதும் தவறொன்று ஏற்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டு அலகொன்று ஐ.அ.டொலர் 0.034 ஆக வழங்குநரால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பெறுகை செயற்பாடுகள் 126 நாட்கள் தாமதமடைந்திருந்தது. இந்த காரணத்தை அடிப்படையாகக் கொண்டு மூன்றாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த | 2023 | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் அவ்வப்போது நாளதுவரையாக்கப்படுகின்ற அதன் திருத்தங்களுக்கு இணங்க பெறுகைகள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். கேள்வி அழைப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

கேள்விதாரருக்கு அலகொன்று ஐ.அ.டொலர் 0.064 வீதம் 1,800,000 அலகுகளுக்காக ஐ.அ. டொலர் 115,200 பெறுமதியில் கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களின் பிரகாரம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் சட்டத்தரணி ஒருவர், சமாதான நீதவான் அல்லது நொத்தாரிசினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழின் பிரதிக்காக அவ்வாறான உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. தெரிவு செய்யப்பட்ட வழங்குநரால் வெளிவாரி சுயாதீன ஆய்வுகூட அறிக்கை யொன்று பெற்றுக்கொள்ளப்படாம ல் உற்பத்திக் கூடத்தில் பெற்றக்கொள்ளப்பட்ட தர அறிக்கையின் அடிப்படையில் முன்கொண்டு சென்று இந்தப் பெறுகைகள் மேற்கொண்டு செல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | லப்பட்ட போதும் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2023 யூன் 14 ஆம் திகதி ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக பெறுகைக் குழுவிற்கு கோவை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் குழுவினால் 2023 செப்டெம்பர் 04 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு மீண்டும் மதிப்பீடு செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் எந்வொரு பரிந்துரையும் இன்றி மீண்டும் திணைக்களப் பெறுகை குழுவின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு 2023 செப்டெம்பர் 26 ஆம் திகதி பெறுகைகள் பிரிவிற்கு கோவை வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்பாடுகளுக்காக 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும் இறுதித் தீர்மானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| (சி) | அவசரக் கொள்வனவாக Furosemind injection | 2023 | ஆரசாங்கத்தின் பெறுகைகள் | கருத்து தெரிவிக்கப்படவில் | இது தொடர்பாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 20mg/2ml மருந்தின் 209,000 தடுப்பூசி அலகுகள் ரூபா 14.63 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்யும் பெறுகையின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் பிரகாரம் எந்தவொரு கேள்விதாரரும் மாதிரி சமர்ப்பித்திருக்கவில்லை. தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் 47 நாட்கள் தாமத காலத்தின் பின்னர் 209,000 தடுப்பூசி அலகுகளை கையளித்திருந்த போதிலும் அதற்கு முன்னர் தடுப்பூசி இருப்பு இலங்கைக்கு கிடைத்திருந்தது. வழங்குநரால் தடுப்பூசி இருப்பு இலங்கைக்கு கிடைத்த பின்னரும் 11 நாட்கள் கடந்த பின்னரே இருப்பு கையளிக்கப்பட்டிருந்தது. | | வழிகாட்டிக் கோவை மற்றும் அவ்வப்போது நாளதுவரையாக்கப்பட்ட அதன் திருத்தங்களுக்கு இணங்க பெறுகைகள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். அதன்படி நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஏற்படுகின்ற இழப்பு அல்லது நட்டம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து மிகைக் கட்டணமாக அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (சீ) | Furosemind injection 20mg மருந்தின் அவசர கட்டளையாக 625,000 தடுப்பூசிக் குப்பிகள் கொள்வனவு செய்யும் பெறுகைகளுக்காக ஆகக் குறைந்த விலையான அலகொன்று ரூபா 16.50 வீதம் சமர்ப்பித்த வழங்குநருக்கு இருப்பு வழங்கல் 02 வார | 2023 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் அவ்வப்போது நாளதுவரையாக்கப்பட்ட அதன் திருத்தங்களுக்கு இணங்க பெறுகைகள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

காலம் கடந்திருந்தமையால் இருப்பை விரைவாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த இரண்டாவது கேள்வி விலையான அலகொன்று ரூபா 69 வீதம் 625,000 அலகுகளுக்காக ரூபா 43.12 மில்லியன் ஆன பெறுமதி சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வி கையளிப்பதற்கு சுகாதார அமைச்சின் அவசர பெறுகைக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த வழங்குநர் இருவரும் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. கேள்வி கையளித்தல் ஆவணங்களின் பிரகாரம் மருந்துகள் களஞ்சியப்படுத்தக்கூடிய வெப்பநிலை $28C^o$ - $32C^o$ இற்ககு இடையே காணப்படவேண்டியிருந்த போதிலும் தெரிவு செய்யப்பட்ட வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரியில் உறைகளில் களஞ்சியப் படுத்தக்கூடிய வெப்பநிலை $25C^o$ குறைவாக இருந்தமை காண்பிக்கப்டிருந்தது. 625,000 தடுப்பூசிக்

குப்பிகள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்க வேண்டி இருந்தமை கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும் அமைச்சின் பெறுகை B குழு இந்தக் கட்டளைக்குரிய பெறுகைகள் மேற்கூறப்பட்ட இந்த கடன் உத்தேசத் திட்டத்தின் கீழ் கட்டளை தொடர்பாக கவனத்திற்கொண்டு கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இந்தக் கட்டளை காத்திருத்தல் கட்டளையாக கூட்டுத்தாபனத்தின் முறைமையில் அவதானிக்கப்பட்டது. இந்த மருந்தின் மாதாந்த தேவை 272,063 அலகுகளாக இருந்த போதிலும் 2022 யூன் 23 ஆம் திகதி முதல் பெறுகை தீர்மான திகதியான 2022 நவம்பர் 21 ஆம் திகதி வரை மருத்துவ வழங்கல் பிரிவின் இருப்பு பூச்சிய நிலையும் தேசிய மட்டத்தில் இருப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாதாந்த தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாத நிலையில் காணப்பட்டது. | | | | |
| (சு) | Furosemind injection 20mg/2ml மருந்தின் 1,250,000 தடுப்பூசிக் குப்பிகள் கொள்வனவு செய்யும் பெறுகை தெரிவு செய்யப்பட்ட 25 வழங்குநர்களுக்கு அனுப்பப்பட்ட கேள்வி அழைப்புக்களில் 21 வெளிநாட்டு கம்பனிகளுக்கு அனுப்பப்பட்ட எந்தவொரு அறிவித்தலும் (Send) சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டு கேள்விதாரர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி மதிப்பீட்டின் பிரகாரம் ஆகக்குறைந்த இரண்டாவது விலை சமர்ப்பித்த வழங்குநருக்கு ஒரு தடுப்பூசிக் குப்பிக்காக ஐ.அ.டொலர் 0.065 விலைக்கும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட பதவியிலிருந்து விடுவிக்கும் சான்றிதழ் பெற்றுக் கொள்வதன் கீழ் பெறுகைகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கோவை | 2023 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் அவ்வப்போது நாளதுவரையாக்கப்பட்ட அதன் திருத்தங்களுக்கு இணங்க பெறுகைகள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். அதன் படி நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஏற்படுகின்ற இழப்பு அல்லது நட்டம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து மிகைக் கட்டணமாக அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

பெறுகை மேற் பார்வைப் பிரிவிற்கு கிடைத்து 21 நாட்கள் கடந்திருந்தது. தெரிவு செய்யப்பட்ட வழங்கு நரால் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அனுமதிப் பத்திரம் காலாவதியாகி இருந்தது. அவ்வாறே கேள்வி பதிவேடுகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வழங்குநரால் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவி ல்லை. தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் தமது முகவரி மாற்றப்பட்டிருந்ததாகவும் அந்த வழங்குநரின் உள்நாட்டு முகவரால் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது ன் கூட்டுத்தாபனத்தால் புதிய முகவரிக்காக செல்லுபடியான பதிவு சான்றிதழ் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டிருந்த போதிலும் அந்த சான்றிதழ் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. அதன் காரணமாக பெறுகைகளுக்குரிய மிகுதி செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந் தது. இந்த மருந்தின் மாதாந்த தேவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 299,415 அலகுகளாக இருந்த போதிலும் 2023 யூன் 02 ஆம் திகதி வரையில் மருத்துவ வழங்கல் பிரிவின் இருப்பு மட்டம் 135,601 ஆனமையால் அது மாதாந்த தேவையினைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாத நிலையில் காணப்பட்டது. | | | | |
| (சூ) | மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 26.225 மில்லியன் பெறுமதியான Trastuzumab (440 mg) தடுப்பூசி அலகுகள் 500 இனை கொள்வனவு செய்வதற்கு உரியதாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரினால் கேள்விகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் அந்த நிறுவனத்திற்காக விநியோகிக்கப்பட்ட சான்றிதழாக இல்லாதிருந்ததுடன் மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தும் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் மூலம் | 2022 | ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவு சான்றிதழுடன் வழங்குனருக்கு கேள்வி கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கொள்வனவு செய்யப்படுகின்ற நிறுவனங்களுக்கு அதிகாரம் கையளிக்கப்படுகின்ற ஆவணம் ஒன்று கேள்வி ஒன்றுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை வெளியிட்டிருந்த அறிவித்தலின் மூலம் கேள்வியின் செல்லுபடிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையுடன் இணங்குதல் மற்றும் இணங்காமைக்காக பெறுகைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது. | இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

சகல கொள்வனவுகளும் மீண்டும் அறிவிக்கும் வரை தற்காலிகமாக நிறுத்துமாறு அறிவித்து நிறுவனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்த சான்றிதழ் ஆகும். அவ்வாறே சமர்ப்பிக்கப்பட்ட பதிவுச் சான்றிதழும் காலாவதியாகியிருந்தது. கேள்வி விலை மதிப்பீட்டு தொழில்நுட்ப குழு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் விநியோகிக்கப்படுகின்ற செல்லுபடியான பதிவு சான்றிதழை சமர்ப்பிப்பதன் கீழ் மாத்திரம் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்வி தாரருக்கு கேள்வி சமர்ப்பிக்க வேண்டும் என பரிந்துரை செய்திருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரையினை கவனத்தில் கொள்ளாது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்காத கேள்விதாரருக்கு பெறுகைக் குழுவினால் கேள்வியை கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (செ) | மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைக்காக கிரயம் ரூபா 35,761,504 ஆன Furosemide Injection BP 20 mg/2 ml தடுப்பூசி மாத்திரைகளில் 5,845,000 அலகுகள் கொள்வனவு செய்யும் பெறுகைகளின் போது மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த 99,000 தடுப்பூசி மாத்திரைகளின் இருப்பை கையேற்கும் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகளின் காரணமாக இந்த இருப்புக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தமையும் அதற்கான உற்பத்தி தர அறிக்கை (Product Stability Report) வழங்குமாறு வழங்குனருக்கு மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் அடிப்படையில் வழங்குனரால் Accelerate Stability Report வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் குறிப்பிடப்பட்ட முறைக்குரிய மருந்துகளுக்கு தேவையான நியமம் மற்றும் மாதிரிகளுக்கு இணங்கியிருந்ததாக | 2022 | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகைகள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் ஏற்படுகின்ற இழப்பு அல்லது நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக மிகைக்கட்டணம் ஆக்கப்படல் வேண்டும். முறையான சுயாதீனப் பரிசோதனை நடாத்தி மிகுதி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறையான சுயாதீன விசாரணை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

உற்பத்தி கம்பனியால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு அறிவித்தல் வழங்கிய கடித தலைப்பு உற்பத்தி கம்பனி பயன்படுத்துகின்ற கடித தலைப்பினை விட தயாரிக்கப்பட்ட கடித தலைப்பாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இலங்கை சுங்க திணைக்களத்தின் ஆவணத் தரவுகளின் பிரகாரம் மேற்கூறப்பட்ட வழங்கல்களுக்கு உரிய வழங்குனரால் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையில் பதிவு செய்த உற்பத்தியாளர் இல்லாதிருந்த வேறு இரண்டு இறக்குமதி கம்பனிகள் மூலம் 3,898,900 தடுப்பூசி மாத்திரைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன், அந்த இரண்டு கம்பனிகளும் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்த கம்பனியாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. வழங்குனரால்

வழங்கப்பட்ட இந்த தடுப்பூசிகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட தேசிய மருந்துகளின் தரச் சான்று ஆய்வு கூடத்தின் (NMQAL) பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் பரிசோதனை செய்யப்பட்ட தடுப்பூசிகள் Sterility பரிசோதனையின் போது பிரித்தானிய மருந்து மாதிரிகளுக்கு இணங்காத வகையிலும், பரிசோதனைக்காக கிடைக்கப் பெற்ற தடுப்பூசிகளின் மாதிரிகள் மற்றும் பதிவு செய்வதற்காக தேசிய ஔடதங்கள் தரச் சான்று ஆய்வு கூடத்திற்கு (NMQAL) சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளில் உள்ளடக்கப்பட்ட உற்பத்தியின் மாதிரி உறைகள் ஒன்றுக்கொன்று வேறுபாடாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அது வரையில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய இருப்புகளில் காலாவதியாகும் திகதியை விஞ்சியிருந்தது. மேற்கூறப்பட்ட விடயங்களின்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காரணமாக வழங்குனர் கம்பனி கறுப்பு பட்டியலில் இடுவதற்கு சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்ட போதிலும், தேவையான நடவடிக்கைகள் இது வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | | | |
| (சே) | கிரயம் ரூபா 1.49 மில்லியன் ஆன Ceftriaxone Sodium for Injection BP 500mg அலகுகள் 79,500 தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் இன்றிய வழங்குனரின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட பெறுகை ஆவணங்களின் பிரகாரமும், இறக்குமதியின் போது சுங்க திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆவணங்களின் பிரகாரமும் தடுப்பூசிகளின் உற்பத்தியாளராக குறிப்பிடப்பட்ட கம்பனி இன்றி தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் | 2022 | முறையான சுயாதீனப் பரிசோதனை நடாத்தி மிகுதி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறையான சுயாதீன விசாரணை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

பதிவு செய்யப்படாதிருந்த கம்பனி ஒன்றின் மூலம் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. வழங்குனரால் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்பட்ட இருப்புக்கள் தொடர்பாக தேசிய ஔடதங்கள் பாதுகாப்பு பரிசோதனை ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்படிருந்த தர பரிசோதனையின் போது USP லேபல்களின் தேவை மற்றும் தற்போது காணப்படுகின்ற லேபல்களில் காணப்பட்ட வேறுபாடுகளின் காரணமாக உரிய பொருட்களின் இருப்பினை பாவனையில் இருந்து அகற்றுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. தேவையான மாதிரிகள் இணங்காமையினால் பாவனையில் இருந்து அகற்றப்பட்ட இருப்புக்களுக்காக செலவாகிய கிரயத்தை மீள செலுத்துமாறு கூட்டுத்தாபனத்தால் வழங்குனருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக ஏற்றுக்கொள்ளாத வழங்குனரை கறுப்பு பட்டியலில் இடுவதற்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்காமல் வழங்குனரிடமிருந்து கைவிடப்பட்டிருந்த கொடுப்பனவுகளில் தரத்தன்மை இன்றிய மருந்துகளை வழங்கியதன் காரணமாக ஏற்பட்ட ரூபா 1.86 மில்லியன் கிரயத்தை குறைத்து 2022 ஆகஸ்ட், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது ரூபா 273.6 மில்லியன் வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | | | |
| (சை) | அரச ஒசுசலைகளில் விற்பனைக்காக Diclofenac Potassium Tablates (50mg) மருந்தில் (5x10) அளவில் 48,000 உறையிடப்பட்ட அலகுகளை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட கட்டளைக்குரியதாக தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு பொதியிடல் அலகொன்று ஐக்கிய அமெரிக்க டொலர் 0.248 வீதம் ஐக்கிய அமெரிக்க டொலர் 11,904 தொகைக்கு கட்டளை கையளிக்கப்பட்டிருந்தது. இந்த பெறுகைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீடு | 2022 | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகைகள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் ஏற்படுகின்ற இழப்பு அல்லது நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக மிகைக்கட்டணம் ஆக்கப்படல் வேண்டும். முறையான சுயாதீனப் பரிசோதனை நடாத்தி மிகுதி | பெறுகை நடைமுறைகளுக்காக நீண்டகாலம் வழங்குனரை தெரிவு செய்வதற்கு பெறுகைக்குழு நீண்டகாலம் எடுத்ததன் அடிப்படையில் தாமதிக்கப்பட்டிருந்தமை மற்றும் வழங்குனரால் உரிய ஆவணங்கள் வழங்குவதற்கு நீண்டகாலம் எடுத்திருந்தமை. | இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் பெறுகை தீர்மானங்களை எடுப்பதற்காக 167 நாள் காலம் எடுத்திருந்தது. அவ்வாறே வழங்குனரை தெரிவுசெய்யும் சந்தர்ப்பம் வரையிலும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையில் அந்த வழங்குனரின் பதிவு முடிவடைந்திருந்த போதும் அதனை நீடித்துக் கொள்வதற்காக 258 நாள் காலம் எடுத்தமை கட்டளை தாமதமடைந்ததற்கு பிரதான காரணமாக இருந்தது. 2021 ஆம் ஆண்டின் முதல் 05 மாதங்களில் இந்த மருந்துகளின் மாதாந்த சராசரி விற்பனை அலகுகள் 5000 ஆக இருந்ததுடன், 2021 யூன் மாதம் முதல் அரச ஒசுசலைகளில் இந்த மருந்துகள் பற்றாக்குறையாக காணப்பட்டது. அதன் காரணமாக 2021 யூன் முதல் 2022 ஆகஸ்ட் மாதம் வரை கூட்டுத்தாபனத்திற்கு இழக்கப்பட்ட மொத்த விற்பனை அண்ணளவாக ரூபா 9.75 மில்லியன் ஆகும். | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | | |
| (சொ) | அரச ஒசுசலைகளில் 2022 விற்பனைக்காக | முறையான சுயாதீனப் பரிசோதனை | சில வழங்குனர்களுக்கு | முறையான சுயாதீன |

| | | | |
|---|---|---|---|
| Etoricoxilo Tablats 60(mg) மருந்தில் 30,000 உறையிடப்பட்ட அலகுகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த கட்டளைக்கு உரியதாக ஆகக் குறைந்த இரண்டாம் மற்றும் ஆகக் குறைந்த ஐந்தாவது கேள்விதாரருக்கு முறையே கட்டளையில் 25 சதவீதம் மற்றும் 75 சதவீதமாக கேள்வி கையளிக்கப்பட்டிருந்து. எனினும் மேற்கூறப்பட்ட இரண்டாவது ஆகக் குறைந்த விலையினை விட 153 சதவீத விலை அதிகரிப்புடன் ஐந்தாவது கேள்விதாரருக்கு இந்த பெறுகையில் 75 சதவீதம் கையளிப்பதற்கு நியாயமான காரணம் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. அவ்வாறே இந்த விடயத்தில் ஆகக் குறைந்த விலை மற்றும் ஆகக் கூடிய விலை அலகொன்றுக்கு ரூபா 345 விலை அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுன், அது சதவீதமாக 128 வீதம் ஆகும். இந்த பெறுகையில் 75 சதவீதம் இரண்டாவது | நடாத்தி மிகுதி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கையளித்தல் பெறுகைக்குழுவின் நியதிகளின் படியாகும். ஔடதங்கள் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் விலை தீர்மானித்தல் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. | விசாரணை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆகக் குறைந்த கேள்விதாரரினை நீக்கி ஐந்தாவது ஆகக் குறைந்த கேள்விதாரருக்கு கையளித்ததன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு மேலதிக கிரயமாக ரூபா 6.2 மில்லியன் செலவிடுவதற்கு ஏற்பட்டமையால் ஆகக் குறைந்த விலையில் மருந்து வழங்கும் கூட்டுத்தாபனத்தின் நோக்கமும் புறக்கணிக்கப்பட்டிருந்தது. | | | | |
| (சோ) | அரச ஒசுசலைகளின் விற்பனைக்காக Cetrize Syrup 5mg/5ml Bottle போத்தல்களில் உறையிடப்பட்ட 150,000 அலகுகளை கொள்வனவு செய்வதற்காக 2020 யூன் 26 ஆம் திகதி வழங்கப்பட்ட கட்டளைகளுக்குரிய ஆகக் குறைந்த விலையாக அலகொன்று ரூபா 29.25 சமர்ப்பித்த கேள்விதாரருக்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு சான்றிதழ் காணப்படாதிருந்தமை குறிப்பிடப்பட்டு அலகொன்று ரூபா 71.30 விலை சமர்ப்பித்த | 2022 | முறையான சுயாதீனப் பரிசோதனை நடாத்தி மிகுதி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சந்தையில் ஆகக்கூடிய கேள்வி காணப்படுகின்ற வழங்குனர்களே தெரிவு செய்யப்பட்டதற்குக் காரணம் ஆகும். | முறையான சுயாதீனப் பரிசோதனை ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

இரண்டாவது ஆகக் குறைந்த கேள்விதாரருக்கு அலகொன்று ரூபா 69.93 இற்கு கட்டளை கையளிக்கப்பட்டிருந்த போதிலும், ஆகக் குறைந்த கேள்விதாரரின் கேள்வி ஆவணங்களின் பதிவு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த கேள்விதாரர் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவினை புதுப்பித்துக் கொள்ளவோ அல்லது ஆகக் குறைந்த கேள்விதாரர் இந்த பெறுகைகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 6.06 மில்லியன் மேலதிக கிரயமொன்றை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக இந்த மருந்துகளின் கொள்வனவு கிரயம் ஆகக் குறைந்த கேள்வி பெறுமதியை விட 138 சதவீதத்தால் அதிகரித்து காணப்பட்டதுடன், அந்த விலையில் மருந்துகளை வழங்கும் நோக்கமும் தவறவிடப்பட்டிருந்தது. கேள்விதாரர் மருந்துகளில் 99,000

| | | | | |
|---|---|---|---|---|
| | அலகுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அரச ஒசுசலைகளில் இருப்பு காணப்படாத நிலைமையொன்று ஏற்பட்டிருந்து. | | | |
| (சௌ) | கூட்டுத்தாபனத்தின் 2022 இருப்புக்கள் மற்றும் கட்டுப்பாட்டு முகாமையாளரின் கொள்வனவு நடைமுறைகளின் பிரகாரம் Clonazepam Tablets (0.5mg) என்ற மருந்தின் உறைகளில் 48,000 அலகுகள் (25x10) ரூபா 20.07 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்தவற்குரிய ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த வழங்குனருக்கு 2020 செப்டம்பர் 04 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட இன்டெண்டுக்குரிய முதலாவது மருந்து இருப்பு 2021 பெப்ரவரி 08 ஆம் திகதியும், இறுதி இருப்பு 2022 சனவரி 12 ஆம் திகதியும் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. கொள்வனவு கட்டளை தயாரிக்கின்ற சந்தர்ப்பம் வரையும் இந்த | மீண்டும் கட்டளையிடும் மீள்கட்டளையிடும் இருப்பு மட்டம் தொடர்பாக கவனம் செலுத்தி களஞ்சியத்திற்குப் தேவையான மருந்து இருப்புக்களைக் கட்டளையிடல் வேண்டும். | இருப்புக்கள் சில மாதங்களுக்குப் போதியளவான பிரகாரம் ஒசுசலை களஞ்சியங்களில் இருப்பு மட்டம் பேணிச் செல்லப்பட்டதுடன் சில மாதங்கள் பிரதார களஞ்சியத்தின் இருப்பு பூச்சியமாக இருந்த போதும் ஒசிசலைகளில் இந்த மருந்து அளவு போதியளவில் காணப்பட்டது. கொரோனா தொற்று நோய் நிலைமையின் இடையே இந்த மருந்துகளின் அளவும் களஞ்சியத்திற்கு கிடைப்பதில் தாமதமடைந்திருந் தது. எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட ஒசிசலைகள் சிலவற்றின் இருப்பு | இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிரு க்கவில்லை. |

மருந்துகளில் 04 மாதங்களுக்கு முன் இருப்பு முடிவடைந்திருந்ததுடன், இந்த மருந்தின் மீள்கட்டளை இருப்பு மட்டம் தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் கட்டளையிடப்பட்டதன் காரணமாக தொடர்ச்சியாக 3, 4 மாதங்கள் இரத்மலானை களஞ்சியத்தில் இருப்பு காணப்படாத நிலைமைக்கு உட்பட்டிருந்தது. மருந்துகளின் விற்பனை எதிர்வுகூறலின் பிரகாரம் வருடாந்த தேவைக்கு இணங்கும் வகையிலும், இருப்பு பூச்சியமாக காணப்பட்டுகின்றமையினால் பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க கூடிய விரைவில் மருந்துகள் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்தமையும் கொள்வனவு கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட திகதி முதல் மொத்த மருந்து இருப்பு அளவும் களஞ்சியத்திற்கு கிடைப்பதற்காக 02 வருடத்திற்கு அண்மித்த காலம் எடுக்கப்பட்டிருந்தது. 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரையும் ஒரு வழங்குனரிடம் இருந்து

அறிக்கையின் பிரகாரம் மருந்தில் பற்றாக்குறையொன்று அறிக்கையிடப்படவில்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இந்த மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இன்டெண்டுவில் குறிப்பிடப்பட்ட திகதியிலும் மருந்துகளை வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் தவறியமையால் 2019 மார்ச் முதல் 2022 ஆகஸ்ட் வரை 06 சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்கு அதிகமான காலம் மருந்துகளின் விற்பனை பூச்சியமாக இருந்தமையினால் அந்த காலப்பகுதியில் கூட்டுத்தபானத்திற்கு விற்பனை வருமானமும் கிடைத்திருக்கவில்லை. | | | | |
| (ட) | மருத்துவ வழங்கல் பிரிவின் தேவையின் அடிப்படையில் Cefotaxime Injection USP 1g தடுப்பூசி குப்பிகள் 250,000 உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்வதற்காக ரூபா 70.70 ஆக ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கட்டளை வழங்கக் கூடிய கால எல்லை நீண்டதாக இருந்ததாக குறிப்பிட்டு இந்த கட்டளை இரத்துச் | 2022 | முறையான சுயாதீனப் பரிசோதனை நடாத்தி மிகுதி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பெறுகை குழு தீர்மானம் எடுத்துள்ளது. | முறையான சுயாதீனப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்க வில்லை. |

செய்யப்பட்டு மீண்டும் கேள்வி கோருவதற்கு பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது, அதன் பிரகாரம் அலகொன்றின் விலை ரூபா 540 ஆக சமர்ப்பித்த கேள்விதாரருடன் விலைகள் கலந்துரையாடப்பட்டு (தடுப்பூசி 65,000 இலவசமாக வழங்கும் அடிப்படையில்) தடுப்பூசிகள் வினைத்திறனான விலையாக ரூபா 399.60 விலையில் கொள்வனவு செய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. தடுப்பூசி குப்பியொன்றின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை ரூபா 45.71 ஆகவும், முதலாவது தெரிவு செய்யப்பட்ட வழங்குனரின் அலகொன்றின் விலை ரூபா 70.70 ஆகவும் இருந்தமையால் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரின் விலைகளில் முறையே 774 சதவீதம் மற்றும் 465 சதவீதம் அதிகரிப்பாக இருந்தது. இரண்டாவது சந்தர்ப்பத்தில் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் முதலாவது சந்தர்ப்பத்தின் போதும் கூறுவிலைகள்

சமர்ப்பித்திருந்ததுடன், அதன் விலை ரூபா 235 ஆக இருந்த போதிலும், 02 மாதங்களை விட குறைந்த காலத்தின் போது இரண்டாவது தடவை கோரும் போது கேள்விதாரரினால் விலை ரூபா 540 ஆக தீர்மானிக்கப்பட்டமை தொடர்பில் பெறுகை குழு அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் கட்டளையினை கையளித்திருந்தது. இரண்டாவது கேள்வி கோரலின் போது தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு 2019 திசெம்பர் 13 ஆம் திகதி வரையில் மருந்துகளை வழங்குவதற்கு தவறியிருந்த போதும், முதலாவது கேள்வி கோரலின் போது தெரிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரரால் 45 நாட்களுக்குள் தடுப்பூசி அலகுகளுள் 250,000 வழங்குவதாக குறிப்பிடப்பட்ட போதும் அது நிராகரிக்கப்பட்டு மீண்டும் ஒரு தடவை கேள்வி கோரி தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் 30 நாட்களுக்குள் மருந்துகளை வழங்குவதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| | தவறியிருந்தார். | | | |
| (டா) | மருத்துவ வழங்கல் 2022 பிரிவினால் Ipratropium Pressurized Inhalation BP 20 Mcg/Puff மருந்தின் அலகுகள் 130,000 பெறுகைகளுக்குரிய மூன்று சந்ர்ப்பங்களின் போது கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் முதலாவது சந்தர்ப்பத்தின் போது வழங்குனருக்கு நாணயக் கடிதம் திறக்கப்பட்டிருக்கும் போது மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரின் அறிவித்தலின் பிரகாரம் அந்த வழங்கல் 09 மாதங்கள் தாமதித்து வழங்க வேண்டிருந்தமை அறிவிக்கப்பட்டதன் மூலம் இந்த வழங்கல்கள் அவசரத் தேவையாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. பெறுகைகளுக்குரிய மூன்றாவது கேள்வி கோரும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்த கேள்விதாரர் வழங்குனரின் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவுச் சான்றிதழ் காலாவதியாக இருந்த போதும் பதிவுச் | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகைகள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் ஏற்படுகின்ற இழப்பு அல்லது நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக மிகைக்கட்டணம் ஆக்கப்படல் வேண்டும். முறையான சுயாதீனப் பரிசோதனை நடாத்தி மிகுதி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கால எல்லையில் திருத்தப்பட்ட மருத்துவ வழங்கல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை பரீட்சித்து கையேற்றல் மருத்துவ வழங்கல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. கேள்விகளில் குறிப்பிடப்பட்ட கூறுவிலைகள் கேள்விதாரரின் உற்பத்தியாளரின் விலையுடன் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறையான சுயாதீனப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

சான்றிதழ் மீண்டும் பெறப்படும் அடிப்படையிலும், 1987 இன் 03 ஆம் இலக்க பொது உடன்படிக்கை சட்டத்தின் கீழ் பதிவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் நிபந்தனைகளின் கீழும் பெறுகைக் குழுவினால் 2017 செப்டெம்பர் 29 ஆம் திகதி அலகொன்று ரூபா 705.40 வீதம் 130,000 அலகுகளுக்காக ரூபா 91.7 மில்லியன் ஆன பெறுமதியில் கட்ளைகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை சுங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரம் வழங்குனரால் மருந்து அலகொன்று ரூபா. 14.13 வீதம் 130,000 அலகுகள் ரூபா 1.84 மில்லியன் தொகையில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யாத கம்பனியினால் இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு 4892 சத வீதத்திற்கு அதிகமான விலையில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. வழங்குனரால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை வழங்குவதற்கு முன்

அந்த மருந்துகளின் உறைகள், லேபல் மற்றும் அரசாங்க இலட்சிணைக்காக மருந்து வழங்கல் பிரிவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கட்டளைக்குரிய முதலாவது இருப்பு (அலகுகள் 6500) இறக்குமதி செய்யப்பட்ட திகதி முதல் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குவதற்காக ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 106(1) ஆம் பிரிவிற்கு முரணாக வழங்குனரால் அரச மருந்தகக் கூட்டத்தாபனத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட இந்த மருந்துகள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளர் அன்றி வேறு உற்பத்தியாளரின் மூலம் இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு மருந்து உறைககளில் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளர் விபரங்கள் அச்சிடப்பட்டிருந்தன. வழங்குனரால்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளைப் பதிவு செய்வதற்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளில் உள்ளடக்கப்பட்ட மருந்துகளின் மாதிரி உறைகள் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்ட மருந்துகளின் உறைகளில் நோயாளர் ஆலோசனைக் குறிப்பில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் மருந்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட தகவல்களுக்கு இடையிலும் மற்றும் வழங்குனரால் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களிலும் இணங்கமின்மை அவதானிக்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் வழங்குனரால் இருப்புக்கள் வழங்குவதற்காக 05 மாதங்கள் முதல் 08 மாதங்கள் வரையான தாமத காலம் எடுக்கப்பட்டிருந்தது. | | | | |
| (டி) | மருத்துவ வழங்கல் முகாமைத்துவத்திற்காக 2015 ஆம் ஆண்டு | 2021 | சுகாதார அமைச்சினதும், மருத்துவ | கணனி முறைமையூடாக கட்டளை | இதுவரை சரிசெய்யப்பட |

முதல் அறிமுகப்படுத்தப்பட்ட மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் முறைமை (MSMIS) சரியான பிரகாரம் பயன்படுத்தப்படாதிருந்தமை, மருந்து கட்டளையிடல் முதல் இருப்பு கிடைக்கின்ற சந்தர்ப்பம் வரை ஒவ்வொரு படிமுறைகளும் முறைமையில் உள்ளடக்கி (Status) உரிய கட்டளை தொடர்பாக செயல்முன்னேற்றம் நாளதுவரையாக்கும் வசதிகள் அந்த கணனி முறைமையின் மூலம் வழங்கப்பட்டிருந்த போதும் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் கட்டளைக்குரிய தகவல்கள் 07 வருட காலமாக காணப்பட்ட தொழில்நட்ப பிரச்சினையின் காரணமாக முறைமையில் உள்ளடக்காதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தால் கட்டளையிடுவதற்குரிய தகவல்கள் ஏனைய கணனி முறைகளில் (Excel) ஊடாக

வழங்கல் பிரிவினதும் ஆலோசனை மற்றும் அதனுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் கூட்டுத்தாபனம் pronto கணனி முறைமையில் நாளது வரையாக்கல் வேண்டும். அதற்காக ஏற்பட்ட இடையூறுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட்ட போதும் அந்தக் கட்டளைகளின் சட்டரீதியான செல்லுபடித் தன்மையை உறதிப்படுத்துவதற்கு மருத்துவ வழங்கல் பிரிவின் உத்தியோத்தர்களின் கையொப்பம் காணப்படவில்லை. மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்டளையை மாற்றுவதற்கோ அல்லது முறைமையிலிருந்து நீக்குவதற்கு இயலுமை உள்ளது. அதனால் பெறப்பட்ட மென்பொருள் பிரதியை அடிப்படையாகக் கொண்டு பெறுகைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வில்லை.

களஞ்சியப்படுத்தப்பட்ட மையினால் கேள்வியொன்றின் தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட திகதி, பெறுகைக் குழு தீர்மானம் வழங்கிய திகதி, நாணயக் கடிதம் திறக்கப்பட்ட திகதி போன்ற தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியாமையின் காரணமாக பெறுகையின் தாமதத்திற்கு பொறுப்பு வாய்ந்தவர்கள் யார் என பரீட்சிப்பதற்கும், தீர்மானிப்பதற்கும், கட்டளையின் தற்போதைய செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கும் அதிக காலம் எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மருத்துவ வழங்கல் பிரிவினால் அந்தந்த ஆண்டுகளிற்குரிய கட்டளை பட்டியல்கள் 11 மாதங்கள் வழங்கல் காலத்துடன் (Lead Time) கூட்டுத்தாபனத்திற்கு இந்த கணனி முறைமையூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற போதும் கூட்டுத்தாபனத்தால் உடனடியாக அந்த

கட்டளைகளுக்குரிய பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாதிருந்தமையும், கட்டளை பட்டியலின் எழுத்துமூல பிரதி கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் வரை பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பித்தல் தாமதிக்கப்பட்டமையும், கணனி முறைமை ஊடாக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்ட கட்டளைகளின் எழுத்துமூல பிரதிகள் கூட்டுத்தாபனத்தின் இறக்குமதி பிரிவிற்கு அனுப்புவதற்கு 18 நாட்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்ததுடன் அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமையால் 11 மாதங்களான வழங்கல் காலஎல்லையில் கவனத்தில் கொள்ளக்கூடிய காலம் கட்டளை விநியோகித்தல் மற்றும் கட்டளை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளுக்காக எடுத்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(஡) கூட்டுத்தாபனம் தமது 2021 புதிய தொழில் மிகவும் இந்த

| | | | |
|---|---|---|---|
| செயற்பாடுகள் மற்றும் நிர்வாகப் பணிகளுக்காக 14 முகாமைத்துவ தகவல் முறைமைகளை (MIS) பயன்படுத்துவதுடன் அதில் 12 முறைமைகளில் நிறைவேற்றுகின்ற பணிகள் ஒவ்வொரு முறைமயின் மூலம் நிறைவேற்றுவதற்காக புதிய தொழில்முயற்சி வளங்கள் திட்டமிடும் முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்த்து ஒப்பந்த உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்த போதும் பொருத்தமான ஒப்பந்ததாரரை தெரிவு செய்வதற்கு முடியாதிருந்தமையின் அடிப்படையில் ஏற்பட்ட நலிவான செயல்முன்னேற்றத்தின் காரணமாக 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது கிரயம் ரூபா 32.36 மில்லியன் ஆன 09 கணனி உபபாகங்களின் விடயங்களில் 497 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக | வழங்கல் முறைமையைக் கட்டியொழுப்புதல் மற்றும் அமுல்படுத்துவதற்கு துரிதப்படுத்துதல் வேண்டும். | வினைத்திறனான புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பயன்படுத்த முடியாத கிரயம் ரூபா 26.11 மில்லியன் ஆன 09 விடயங்களில் 375 அலகுகள் கூட்டுத்தாபனத்தின் ஏனைய பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. தற்போது பயன்படுத்துகின்ற 12 முறைமைகளை பயன்படுத்துகின்ற வாசகர்களின் எண்ணிக்கை 324 ஆக இருந்த போதிலும் புதிய முறைமையை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வாசகர்களின் எண்ணிக்கை 1,399 ஆனமையால் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமை கூட்டுத்தாபனத்தின் சகல பிரிவு நடவடிக்கைகளிலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | | | | |
| (டு) | சராசரியான மாதாந்த விற்பனை அளவு உறைகளின் அலகு 1,159 ஆக இருந்தமையால் வருடாந்த விற்பனை தேவை உறை அலகுகள் 13,908 ஆக இருந்த போதும் அதனை கவனத்தில் கொள்ளாமல் மற்றும் | 2021 | முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு குற்றப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. | முறையான ஒழுக்காற்று விசாரணைக்கான பரிசோனை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். |

முன்னைய கட்டளைகளின் உறைகளின் அலகுகள் 40,000 கூட்டுத்தாபனத்திற்கு கிடைப்பதற்கு இருந்த போதும் அது தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளாமல் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக 2019 ஆம் ஆண்டின் போது Levofloxacin Tablets (500 mg) மருந்தில் (3x10) அளவில் 72,000 உறை அலகுகள் கட்டளையிடப்பட்டு அதில் 36,000 உறை அலகுகள் ரூபா 5.52 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. முன்னைய கட்டளைகளில் வழங்கப்பட்டிருந்த 9,092 உறை அலகுகள் மற்றும் 36,000 உறை அலகுகளில் 22,357 உறை அலகுகள் என்பன 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் விற்பனை செய்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் அது வரையில் 45,092 உறை அலகுகள் காலாவதியாகியதன் காரணமாக ரூபா 5.24 மில்லியன் நட்டமொன்று

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏற்பட்டிருந்தது. எனினும், அந்த நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| (டு) | கொவிட் 19 தொற்றுநோயுடன் ஏற்பட்டிருந்த அவசர பெறுகைகளாக இனங்காணப்பட்டு நேரடிக் கொள்வனவு முறைமை பின்பற்றப்பட்டு எந்தவொரு தொழில்நுட்ப மதிப்பீடும் மேற்கொள்ளப்படாமல் ஒரு வழங்குனரினால் சமர்ப்பிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் பெறுகைகள் மேற்கொண்டு கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 14.27 மில்லியன் செலவில் ஒன்று ரூபா 1,400 வீதம் 10,000 Safety Goggles மற்றும் ஒன்று ரூபா 1,350 வீதம் 200 Safety Goggles கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 | 2021 | முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் எதிர்வுகூறப்பட்ட அவசர தேவையின் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு அத்தியாவசியமான விடயமாக இனங்காணப்பட்டு இந்தக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனை மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தத்தின் மொத்த பெறுமதியில் 20 சதவீத முற்பணமொன்று செலுத்த முடியுமாக இருந்த போதும் அதற்கு முரணாக 50 சதவீத முற்பணமாக ரூபா 07 மில்லியன் வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட விலையில் கொள்வனவு கட்டளை மற்றும் பொருட்கள் பெறுவனவு பத்திரங்களின் பிரகாரம் Seals Safety Goggles வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு பதிலாக 10,200 Swimming Goggles வழங்கப்பட்டிருந்தமை மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. தேவையினை சரியாக இனங்காணாமல் மற்றும் உரிய விற்பனை எதிர்வுகூறல் இன்றி கொள்வனவுகள் செய்யப்பட்டதன் காரணமாக 10,200 Swimming Goggles இல் 54 மாத்திரம் ஒன்று ரூபா 1,610 வீதம் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் மொத்தக் கிரயம் ரூபா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 13.92 மில்லியன் ஆன 9,945 Swimming Goggles எஞ்சி காணப்பட்டமையும், மொத்தக் கிரயம் ரூபா 281,400 ஆன 201 Goggles பற்றாக்குறையொன்று காணப்பட்டமையும் 2021 நவம்பர் 09 மற்றும் 24 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது. | | | | |
| (டெ) | மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைக்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 21.49 மில்லியன் கிரயமான நபர்களின் பாதுகாப்பு உபகரணங்கள் (Personal protective equipment-(PPE)) 5,000 தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவினால் அல்லது கூட்டுத்தாபனத்தால் PPE தொகுதிகளுக்காக தேவையான மாதிரிகள் தயாரிக்கப்படாதிருந்தது டன் எந்தவொரு முறையில்லாவது கூறுவிலை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளாமல் ஒரு | 2021 | முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் பிரகாரம் இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கையளிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்ட போதும் இதுவரை கையேற்கப்பட்டிரு க்க வில்லை. | முறையான பரிசோதனை மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைக ள் எடுக்கப்பட்டிரு க்கவில்லை. |

வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட Profoma Invoice அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கட்டளையிடப்பட்ட PPE 5,000 தொகுதிகளில் 2,000 தொகுதிகளின் இருப்பு கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்து மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்ட போதும் "Isolation Gown" மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட கட்டளைகளில் குறிப்பிடப்பட்ட "PPE Set" ஆக இருந்தமை குறிப்பிட்டு உரிய இருப்பை கையேற்றல் நிராகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது PPE 3,000 தொகுதிகளை உள்ளடக்கிய இரண்டாவது இருப்பும் வழங்குனரிடம் இருந்து கையேற்று மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அனுப்பப்பட்ட போதும் முன்னர் காண்பித்த காரணங்களை காண்பித்து அந்த இருப்பும் நிராகரிக்கப்பட்டிருந்தது. வழங்குனருக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்ட ரூபா 21.49 மில்லியன் தொகை மற்றும் சேவைக் கட்டணம் ரூபா 8.13 மில்லியன் மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து மீளளிப்புச் செய்து கொள்வதற்கு முடியாமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 29.62 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது PPE தொகுதிகள் 4,997 களஞ்சியத்தில் காணப்பட்டமையும் 03 தொகுதிகளின் பற்றாக்குறை காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| (டே) | மருத்துவ வழங்கல் பிரிவினால் 2021 ஆம் ஆண்டின் தேவையாக இனங்காணப்பட்டிருந்த Papaverine HCL injection 60mg/2ml தடுப்பூசிகளின் 1,560 அலகுகள் ரூபா 68.59 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த பெறுகைகளுக்காக கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு தேசிய திறந்த போட்டிக் கேள்வி கோரலின் | 2021 | முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பெறுகைக் குழு தீர்மானத்தை சரியாக எடுக்கப்படாமல் நாணயக்கடிதம் விநியோகித்ததன் காரணமாக அந்த கோவைக்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் சம்பள அதிகரிப்பை ஒரு வருடத்தால் பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . | முறையான பரிசோதனை மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

பிரகாரம் ஒரு கேள்விதாரர் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்திருந்தமையும், ஒரு தடுப்பூசி அலகின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை ரூபா 255.07 ஆக இருந்த போதிலும் ஒரு அலகிற்கான கேள்வி ரூபா 40,868.98 ஆக இருந்தமையாலும் மீண்டும் கூறுவிலை கோரப்பட வேண்டியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் திணைக்கள பெறுகைக் குழுவினால் இந்த தடுப்பூசி அலகு ஒன்று ரூபா 40,868.98 வீதம் 3,125 தடுப்பூசி அலகுகள் ரூபா 127.71 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமனம் தொடர்பாக கூட்டுத்தாபனம் பின்பற்றுகின்ற நடைமுறைகளின் பிரகாரம் ரூபா 50 மில்லியனை விஞ்சுகின்ற பெறுகைகளின் மதிப்பீட்டிற்காக 05 நபர்களை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று சுகாதார

அமைச்சினால் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 03 நபர்களை மாத்திரம் உள்ளடக்கிய கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்வி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நாணயக் கடிதம் திறப்பதற்கு முன்னர் காணப்படுகின்ற இருப்பு மட்டத்தை கவனத்தில் கொண்டதன் பின்னர் அல்லது அது தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் அல்லது கட்டளையிட வேண்டியமை மருத்துவ வழங்கல் பிரிவினால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் கூட்டுத்தாபனம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே திணைக்கள பெறுகை குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் வருடாந்த பாவனை தடுப்பூசி அலகுகள் 650 வீதம் மொத்த தடுப்பூசி அலகுகளின் அளவில் 40 சதவீதம் அதாவது 1,250 அலகுகளிற்காக மாத்திரம் நாணயக் கடிதம் திறக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்கள

பெறுகைகள் குழு அங்கீகாரத்தை மீறி 1,563 தடுப்பூசி அலகுகளுக்காக ரூபா 68.72 மில்லியன் தொகையான நாணயக் கடிதம் திறக்கப்பட்டிருந்தது, 2021 யூலை 18 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட 1,560 தடுப்பூசி அலகுகளில் 1,421 தடுப்பூசி அலகுகள் 2022 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையிலும் எஞ்சியிருந்ததுடன் அவை 2023 பெப்ரவரி மாதத்தின் போது காலாவதியாகின்றமை அவதானிக்கப்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கை 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டத்தின் கீழ் பதிவு செய்து பதிவினை உறுதிப்படுத்தும் பதிவுச் சான்றிதழ் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.35. அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்

| | 2021 | 2022 (மீளக்குறிப்பிடப்பட்டது) | 2023 |
|---|---|---|---|
| **நிதி விளைவுகள்** | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் (ரூபா.) | 1,235,327,457 | 2,391,594,478 | 2,173,308,106 |
| ஆண்டிற்கான வரி (ரூபா.) | (229,141,993) | (717,249,696) | (654,752,799) |
| வரிக்கு பின்னரான இலாபம் (ரூபா.) | 1,006,185,464 | 1,674,344,783 | 1,518,555,306 |
| மொத்த சொத்துக்கள் (ரூபா.) | 8,680,301,991 | 14,700,781,968 | 16,517,179,749 |
| மொத்த பொறுப்புக்கள் (ரூபா.) | 3,400,224,795 | 7,307,335,839 | 5,038,205,788 |
| மூலதனம் (ரூபா.) | 5,280,077,196 | 7,393,446,129 | 11,478,973,961 |
| **கணக்கய்வு அபிப்பிராயம்** | | | |
| முனைப்பழியற்ற/ முனைப்பழியுள்ள / பாதகமான அபிப்பிராயம் / மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | பொது பரிசோதனை ஆய்வு கூடம் மற்றும் பயிற்சி பாடசாலை ஒன்றை ஸ்தாபிக்கும் நோக்கில் புளத்சிங்கள பிரதேசத்தில் அமைந்துள்ள நான்கு மாடிக் கட்டிடம் ஒன்று 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு | 2021<br>2023 | கட்டிடத்தை விரைவாக எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். | கட்டிடத்திலுள்ள நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் கேட்போர் கூட கதிரிகள் 30 மற்றும் கையுள்ள 10 கதிரைகள் | புலத்சிங்கள பிரதேசத்தில் அமைந்துள்ள நான்கு மாடிக் கட்டிடம் தற்போது களஞ்சிய திணைக்களமாக இயங்கி வருகின்றது. இப்போது பயன்பாட்டில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு வரையிலும் அந்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் மேற்கூறப்பட்ட நோக்கங்களுக்காக பெறப்பட்ட கேட்போர்கூடத்தின் 30 கதிரைகள், கையுடனான 10 கதிரைகள் என்பன 04 வருட காலத்தில் இருந்து பயன்படுத்தப்படாதிருந்ததுடன், இந்த பொருட்கள் அழிவடையும் நிலையில் காணப்பட்டது. | | | தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொண்டதன் பின்னர் மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | இல்லாத இயந்திரங்கள் மற்றும் பிற பொருட்கள் அங்கு சேமிக்கப்படுகின்றன. |
| 2. | 1997 பெப்ரவரி 03 ஆம் திகதி இலக்க 6/97 அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின்படி, பதிற்கடமைக் காலம் 3 மாதங்கள் அதி உச்ச அளவின் கீழாக இருக்க வேண்டிய போதிலும், பிரதி பொது முகாமையாளர் உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சி பதவிக்காக தொடர்ச்சியாக 05 வருடங்களுக்கு மேற்பட்ட | 2021<br>2022<br>2023 | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விண்ணப்பம் கோரப்பட்டுள்ள பொது முகாமையாளர் பதவிக்காக நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பொது முகாமையாளர் பதவிக்காக ஆட் சேர்க்கப்பட்டவுடன் பதவிக்கான விண்ணப்பங்கைளை கோருதல் பொருத்தமானது என முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் | எதிர்கால ஆட்சேர்ப்புக் காக செய்தித்தாள் விளம்பரங்கள் வெளியிடப்பட உள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பதிற்கடமை அடிப்படையில் ஊழியர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார். | | | போது தீர்மானிக்கப்பட்டது. | |
| | வழங்குவதும், அந்த வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதும் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட முக்கிய பணிகள் ஆகும். சபையானது தற்போது மசாலாப் பொருட்களை பதப்படுத்துதல் மற்றும் வர்த்தகம் செய்வதில் மட்டுமே தனது கவனத்தை செலுத்தியுள்ளது மற்றும் சபையானது நிறுவப்பட்டு 02 வருடங்கள் கடந்துள்ள போதிலும் கூட்டுத்தாபன திட்டத்தைத் தயாரித்து தேவையான பணியாளர்களை அடையாளம் காணவும், ஆட்சேர்ப்புகளைச் மேற்கொள்ளவும் தேவையான விதிமுறைகளைத் தயாரிக்கவும் சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | | | செயல்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள் ளன. | |
| (ஆ) | சபையின் அனைத்து 07 சிரேஷ்ட மட்டத்தில் உள்ள பதவிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வெற்றிடமாக | 2021 | சிரேஷ்ட மட்டத்தில் உள்ள பதவிகளில் வெற்றிடமாக உள்ள பதவிகளை நிரப்புவதற்கு கால தாமதமின்றி நடவடிக்கை | சபையில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள ஆட்சேர்ப்பு செய்வதற்கு அங்கீகாரம் | சிரேஷ்ட மட்டத்தில் உள்ள 06 பதவிகளுக்கு இதுவரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது . |

| | | |
|---|---|---|
| காணப்பட்டன மற்றும் சிரேஷ்ட நிலை அதிகாரிகள் இல்லாத காரணத்தினால் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் எடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்று மட்டத்திற்கு கீழ் உள்ள உத்தியோகத்தர்களால் செயல்படுத்தப்படுகின்றன. சபையின் உத்தியோகத்தர்களின் செயல்பாடுகள் போதிய அளவில் கண்காணிக்கப்படாமல் இருப்பதனையும் அவதானிக்க முடிந்தது. இதன்காரணமாக, சபையில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை காணப்படவில்லை என்பன கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது | எடுக்கப்படல் வேண்டும். | கோரப்பட்டுள்ளது |

## 3.40. இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை

| | 2021 (ரூபா.) | 2022 (ரூபா.) | 2023 (ரூபா.) |
|---|---|---|---|
| <u>நிதி விளைவு</u> | | | |
| வரிக்கு முன் மிகை/ (பற்றாக்குறை) | 15,873,555 | 6,367,158 | (70,609,994) |
| வரி | - | - | - |
| வரிக்கு பின் மிகை/ (பற்றாக்குறை) | 15,873,555 | 6,367,158 | (70,609,994) |
| மொத்த சொத்துக்கள் | 1,057,300,205 | 5,203,810,817 | 5,093,101,227 |
| மொத்த பொறுப்புகள் | 214,579,619 | 196,003,328 | 160,610,257 |
| உரிமை | 842,720,586 | 5,007,807,489 | 4,932,490,970 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வு அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படும் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4.7 ஆம் பிரிவின் பிரகாரம் கல்விச் செயற்பாடுகளுக்காக சம்பளத்துடன் கூடிய விடுமுறையை எடுத்ததன் பின்னர் பிணைமுறி நிபந்தனைகளை மீறிய 05 உத்தியோகத்தர்களி | 2023 | தாபனக் விதிக்கோவையின் பிரகாரம் பிணைமுறி நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அல்லது உத்தரவாதமளித்தவர்களிடமிருந்து உரிய தொகைகள் அறவீடு செய்யப்படல் வேண்டும். | ஒரு உத்தியோகத்தரிடமிருந்தான நிலுவைத்தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்களினால் செலுத்த வேண்டிய தொகை, தவணை அடிப்படையில் செலுத்தப்படுகின்றது. ஏனைய இரண்டு நிலுவைகள் தொடர்பில் சிக்கலான நிலைமை | 2024 ஒக்தோபர் 18 இல் உள்ளவாறு பிணைமுறி நிபந்தனைகளை மீறிய 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா. 4,166,552 திரும்பப் பெற வேண்டியிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | டம்.இருந்து 01 வருடங்கள் முதல் 33 வருடங்கள் வரையான காலப்பகுதிக்காக சபையினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 4,256,552 மொத்த தொகை 2024 யூலை 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | ஏற்பட்டுள்ளமையினால், அந்த விடயங்கள் நிறுவனத்தின் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவினால் பரிசீலிக்கப்படும். | |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையிடம் காணப்படும் ரூபா.5,285,109,496 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்கு நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | நாளது வரையாக்கல் செய்யப்பட்ட அடிப்படையில் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். | நிறுவனத்தின் நிலையான சொத்துப் பதிவேட்டினை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பூரணப்படத்தப்பட்ட மற்றும் நாளதுவரையாக்கல் செய்யப்பட்ட நிலையான சொத்துகள் பதிவேடொன்று இன்னும் தயாரிக்கப்படவில்லை. |
| (இ) | “வரையறுக்கப்பட்ட உறுப்பு பகுப்பாய்வு உருவகப்படுத்தல் நிலையத்தின்” (FEAS CENTRE) செயல்பாடுகளிலிருந்து, இறப்பர் தயாரிப்புக்களின் செயலாற்றலை பொதுத் தனியார் பங்குடமையின் கீழ் வணிக மாதிரியாக | 2023 | பொதுத் தனியார் பங்குடமைக்கு இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பிரகாரம் நிறுவனத்தின் செயல்பாடுகள் முறையான ஆய்வுடன் திட்டமிட்டு செயல் படுத்தப்படல் வேண்டும். | 2023 ஒக்தோபர் இல் மென்பொருள் பிரச்சனை காரணமாக இந்த மையத்தின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டன மற்றும் மென்பொருள் வழங்குநர்களுக்குத் இதனை தெரிவித்த பின்னர், 2024 சனவரி முதல் இது | இந்த உறுப்பு பகுப்பாய்வு உருவகப்படுத்தல் நிலையத்தின்” (FEAS CENTRE) செயல்பாடுகள் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. |

வடிவமைத்து மதிப்பிடுவதற்காக ரூபா 49.7 மில்லியன் கிரயத்தில தொடங்கப்பட்ட இந்த திட்டம் 2023 ஒக்டோபர் முதல் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. ரூபா.38,918.694 பெறுமதியான தொடர்புபட்ட கட்டிடம் மற்றும் அனைத்து கணினிகள் மற்றும் மென்பொருள், இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் உபயோகிக்கப்படாமல் காணப்பட்டன. அதன்பிரகாரம் , இறப்பர் உற்பத்திகளின் வடிவமைப்பு மற்றும் உருவகப்படுத்துதலுக்காக FEAS இனை பயன்படுத்துவதற்குத் தேவையான திறன்களை மேம்படுத்துவதற்கும், பிராந்தியத்திற்கு FEAS ஆனது சேவைகளை வழங்குவதில் சிறந்த மையமாக மாறுவதற்கும், இலங்கையின் இயற்கை மற்றும் செயற்கை

மீட்டெடுக்கப்பட்டிருந்த போதிலும் , 2024 ஆகஸ்ட் 10 ஆம் திகதி முதல் இந்த மையத்தின் நிர்வாகத்திலிருந்து பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனம் விலக்கப்படும் என்று தெரிவித்திருந்தது. எனவே, இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் தலைமையிலான குழு ஒன்று கூடியது. அதன் பிரகாரம், இந்த மையத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கான ஒரு கூட்டு முன்மொழிவாக ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான திறந்த அழைப்பிதழை வழங்குவதன் மூலம் இந்த திட்டத்தை மற்றொரு தொழில்துறை நிறுவனத்துடன் செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இறப்பருக்கு மதிப்பு சேர்க்கும் வகையில் உலக சந்தையில் திறம்பட போட்டியிடுவதற்கும் நிறுவப்பட்ட மையத்தின் நோக்கங்களினை அடைய முடியவில்லை | | | | |
| (ஈ) | மொனராகலையில் உள்ள குமாரவத்தை தோட்டம் மற்றும் அலவ்வவில் உள்ள நாரம்பொலவத்தை தோட்டம் என்பன 2024 யூலை 03 ஆம் திகதி வரையிலும் கூட இறப்பர் ஆராய்ச்சி சபையினால் கையகப்படுத்தப்படவில்லை. | 2023 2022 | காணியினை பரிமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும். | மொனராகலை குமாரவத்தை தோட்டத்தையும் அலவ்வ நாரம்பொலவத்தை தோட்டத்தையும் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணிகளை உரிமை மாற்றும் நடவடிக்கைகள் இன்னும் நிறைவடையவில்லை. |
| (உ) | இறப்பர் சிறு உரிமையாளர்களுக்கு உயிர் எரிபொருள் மர வகைகளை அறிமுகப்படுத்தும் முன்னோடித் திட்டத்தை வெற்றிகரமாக முடிக்காத காரணத்தால், திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா.10,457,200 தொகையில் ரூபா.4,283,644 தொகை அல்லது 40 | 2023 | ஒப்பந்தம் செய்யப்பட் பணிகளினை உரிய காலத்திற்குள் நிறைவு செய்தல் வேண்டும். | இந்த செயற்திட்டத்தின் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை தொடர்பில் தற்போது அமைச்சு மட்டத்தில் உள்ளக கணக்காய்வு நடத்தப்பட்டு வருகின்றது. | செயற்திட்டத்தின் பணிகள் இன்னும் நிறைவு செய்யப்படவில்லை மற்றும் எந்த விளைதிறனான முதலீட்டிலும் குறித்த தொகைகள் பயன்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சதவீதம் 2023 திசெம்பர் 31 இல்உள்ளவாறு மீதமாக காணப்பட்டது. இதற்காக 2017 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் ஒப்பந்தம் செய்யப்பட்டதுடன் , 2022 ஆம் ஆண்டு நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | | | | |
| (ஊ) | இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி 04 வருடங்களுக்கு மேலாக வெற்றிடமாக காணப்படுகிறது மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களில் இல்லாத இளநிலை உதவி கள உத்தியோகத்தர் மற்றும் பொது ஊழியர்கள் பணியிடங்களுக்கு 26 பேர் பணிக்மர்த்தப்பட்டுள்ளனர். | 2023<br>2022<br>2021 | முறையான அனுமதியின் பேரில் மட்டுமே ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்கு பதில் அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். சம்பளம் கொடுப்பதற்காக ஈட்டப்படும் பணத்தைப் பயன்படுத்தி தோட்டத் திணைக்களத்திற்கு சுழற்சி அடிப்படையில் பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். நிறுவனத்தின் தேவைகளுக்காக தோட்டத் திணைக்களத்தினால் பெறப்படும் ஊழியர்களின் சேவைகளும் | பதில் அடிப்படையில் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்கு வேறு நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் முறைசாரா முறையில் நியமிக்கப்பட்டுள்ளார். அதன் பிரகாரம், பரிந்துரையை அமல்படுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பெற்றுக்கொள்ளப்படும். | |
| (எ) | 12 திணைக்களங்களில், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தில் நேரடியாக ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 05 பிரிவுகளின் தலைமை பதவிகள் 04 மாதங்கள் முதல் 33 வருடங்கள் வரை வெற்றிடமாக இருந்ததுடன், அந்த பதவிகளில் செயல்படுவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. | 2023 | சபையின் அத்தியாவசியப் பணிகளுக்கான ஆட்சேர்ப்புகள் விரைவுபடுத்தப்படல் வேண்டும். | 28.02.2024 அன்று நடைபெற்ற பணிப்பாளர்கள் சபை கூட்டத்திற்கு இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான சபைப் பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான உத்தியோகபூர்வ அனுமதி கிடைக்கப்பெறும் வரை அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பதில் அடிப்படையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். | பரிந்துரையானது இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. அத்தியாவசிய பதவிகளுக்கு இதுவரை ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படவில்லை. |

## 3.41. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| **நிதிப் பெறுபேறு** | | | |
| இலாபம்/மிகை/(நட்டம்)/பற்றாக்குறை ரூபா | 19,202,306 | 8,548,607 | 399,851 |
| மொத்த சொத்துக்கள் ரூபா | 1,085,474,337 | 1,130,567,268 | 1,613,362,696 |
| மொத்த பொறுப்புகள் ரூபா | 39,942,649 | 33,082,073 | 85,451,825 |
| மூலதனம் ரூபா | 1,045,531,688 | 1,097,485,196 | 1,527,910,871 |
| **கணக்காய்வு அபிப்பிராயம்** | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| கணக்காய்வு அவதானிப்புகள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கையின் திகதியில் உள்ளபடியாக பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) நிறுவனத்தின் நூலக நிர்வாகத்தை தானியக்கமாக்குவதற்கு ரூபா 248,000 செலவில் 2020 ஆம் ஆண்டில் மென்பொருள் அமைபொன்று (KOHA) நிறுவப்பட்டிருந்த போதிலும் மென்பொருள் அமைப்பின் முழுமையான செயல்பாட்டிற்கு தேவையான வன்பொருள் பற்றாக்குறை மற்றும் மின்வெட்டு நேரங்களில் மென்பொருள் அமைப்பை செயற்படுத்துவதற்கு இயலாமை ஆகிய காரணங்களால் 2020 யூன் 19 முதல் கணக்காண்வுத் திகதியான 2024 மே 27 வரை | 2023 | நூலக முகாமைத்துவ தகவல் அமைப்பிற்குத் தேவையான ஏனைய வன்பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு மற்றும் தேவையான மனித வளங்களைப் பயன்படுத்தி எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மினசாரத் தடையின் போது மென்பொருள் கட்டமைப்பை இயக்க இயலாமை, இந்த கட்டமைப்பின் உத்தரவாதக் காலம் விஞ்சியுள்ளமை, பொருளாதார நெருக்கடியின் மத்தியில் நிறுவனத்திற்கு பொது திறைசேரியால் வழங்கப்படும் பணம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் மென்பொருள் கட்டமைப்பை அபிவிருத்தி செய்ய பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு சிரமமானதாக காணப்படல் மற்றும் நிறவனத்தினுள் தொழில்நுட்பத்திற்கான சேவைகளைப் பெறுவதற்கு நிரந்தர உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. | நூலக முகாமைத்துவ தகவல் அமைப்பிற்குத் தேவையான ஏனைய வன்பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு மற்றும் தேவையான மனித வளங்களைப் பயன்படுத்தி எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மென்பொருள் அமைப்பு விளைவற்றதாக காணப்பட்டது. | | | | |
| (ஆ) | நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் பதவியணி அங்கத்தவர்கள் ஓய்வு பெறுகையில் வழங்குவதற்காக 22 கரட் தங்கப் பவுணிலான 13.5 கிராம்கள் கொண்ட 10 தங்க நாணயங்கள் 2019 மே 30 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து ரூபா 851,800 தொகைக்கு கொள்வனவு செய்து செலவாக பதிவழிக்கப்பட்டிருந் தது. நிறுவனரீதியான மற்றும் நிதி ரீதியான காரணங்களின் அடிப்படையில் இந்த தங்க நாணயங்கள் பகிர்ந்தளிக்கப்படாது 3 ஆண்டுகள் காலமாக நிறுவனத்தின் பாதுகாப்பு பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது டன் 2022 ஆம் ஆண்டில் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியிலும் 10 தங்க நாணயங்கள் இருந்த போதிலும் அந்த தங்க நாணயங்கள் 22 கரட் பவுண் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் | 2023 | நிறுவனத்தின் நோக்கங்கள் தொடர்பான செலவுகள் மட்டுமே செய்யப்பட வேண்டியதுடன் இந்த தங்க நாணயங்களின் சரியான பெறுமதியை மதிப்பிட்டு கணக்கிடப்பட வேண்டும். மேலும், இந்த இருப்பு முறையான அங்கீகாரத்தின் பேரில் அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தங்கத்தின் பெறுமதி மற்றும் கலவை குறித்து பரிசோதிப்பதற்காக இரத்தினங்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை மூலம் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | தங்கத்தின் பெறுமதி மற்றும் கலவை குறித்த பரிசோதனை அறிக்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையினால் பெறப்படவில்லை. |

பெறுமதி
மதிப்பிடப்பட்டு
நிதிக்கூற்றுக்களில்
சீராக்குவதற்கு
நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கவி
ல்லை.

### 3.42. தென்னை பயிர்ச் செய்கை சபை

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| **நிதிப் பெறுபேறு** | | | |
| இலாபம்/மிகை/(நட்டம்)/பற்றாக்குறை ரூபா | 611,134,769 | 389,622,417 | (62,743,429) |
| மொத்த சொத்துக்கள் ரூபா | 3,957,522,526 | 6,210,764,808 | 5,767,450,193 |
| மொத்த பொறுப்புகள் ரூபா | 619,657,256 | 463,966,797 | 486,431,007 |
| மூலதனம் ரூபா | 3,337,865,270 | 5,746,798,011 | 5,281,019,186 |
| **கணக்காய்வு அபிப்பிராயம்** | மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | |

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **அறிக்கையின் ஆண்டு** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **அறிக்கையின் திகதியில் உள்ளபடியாக பரிந்துரையின் செயற்பாட்டு நிலைமை** |
|---|---|---|---|---|
| தென்னை பயிரிடக் கூடிய காணிகளைத் தெரிவு செய்து அவற்றில் தென்னை பயிர்ச் செய்கையை புதிதாக ஆரம்பித்து அக்காணிகளை வணிக ரீதியான தென்னங் காணிகளாக மாற்றுதல் மற்றும் தற்பொழுது காணப்படுகின்ற தென்னங் காணிகளின் அளவினை அதிகரிப்பதும் அதன் மூலம் தேங்காய் விளைச்சலினை அதிகரிக்கும் குறிக்கோளில் தரிசான 2500 ஏக்கர் வயல் காணிகளை வினைத்திறனான வணிகப் பிரிவாக மாற்றுவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது அரசாங்க அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 100,000,000 பணம் சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்னர் 380 ஏக்கர்கள் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை 03 ஏக்கர அரசாங்க காணியும் | 2021 | முறையாக திட்டமிட்ட இலக்குகளுடன் தற்பொழுது காணப்படுகின்ற தென்னங் காணிகளின் அளவினை அதிகரிப்பதற்கு விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டத்துடனான செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். | வயல்களில் தென்னைச் செய்கை போன்ற பல்லாண்டு பயிர்களை பயிரிடுவதற்கு விவசாய சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியது அவசியமானதால், அனைத்து விண்ணப்பங்களும் விவசாய சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டில், 3.25 ஏக்கர் மட்டுமே விவசாய சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டது. எஞ்சியுள்ள அளவிற்கு அனுமதி கிடைக்காததால், இத்திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை. | தற்போதுள்ள தென்னை காணிகளை திட்டமிட்ட இலக்குகளுடன் அதிகரிக்க விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் முறையான திட்டத்துடன் செயற்திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 27.5 ஏக்கர் தனிப்பட்ட காணியுமாக எதிர்பார்த்த அளவில் 8 சதவீத செயல்முன்னேற்றம் மாத்திரம் சபையினால் அடைந்து கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு தென்னை நாற்றுக்களும் ஒரு ஏக்கருக்கு ரூபா 80,000 பண நிவாரணமும் வழங்குதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் இச்செயற்திட்டத்தினை மேற்கொள்வதற்கும் சபைக்கு முடியாதிருந்தது. | | | | |
| ஆ) | செவ்விளநீர் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக தென்னை அபிவிருத்தி அதிகாரசபையினால் தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு 2020 ஆம் ஆண்டின் போது வழங்கிய ரூபா 25 மில்லியன் தொகை உரிய செயற்பாடுகளுக்காக | 2021 | செவ்விளநீர் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்காக கிடைக்கும் நிதியை அச்செற்திட்டம் வெற்றியளிப்பதற்கு பயன்படுத்துதல் வேண்டும். | செவ்விளநீர் ஊக்குவிப்பு பணிக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 25 மில்லியன் நிதியேற்பாடு 2023 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத்திட்டத்தின் கீழ் பயன்படுத்த திட்டமிடப்பட்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த செயற்திட்டத்தின் கீழ் செவ்விளநீர் கன்றுகளை விநியோகிக்க 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான இலக்கிடப்பட்ட எண்ணிக்கையான 83,787 மரக்கன்றுகளில் 2024 ஒக்தோபர் 5 ஆம் திகதியில் உள்ளபடியாக 25,140 செவ்விளநீர் மரக்கன்றுகள் மட்டுமே விநியோகிக்கப்பட்டுள்ளன. |
| | மீளாய்வாண்டின் போது கடன் வழங்குவதன் கீழ் 1,122 ஏக்கர் தென்னங் காணிகளில் நீர்ப்பாசன முறைமையை ஸ்தாபிப்பதற்கு ரூபா 59,610,000 பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்தவாறு திட்டமிட்ட 15 பிராந்திய அலுவலகங்களில் 508 ஏக்கர்களில் நீர்ப்பாசன முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | உத்தேச நீர்ப்பாசன முறைமையானது தாமதமின்றி பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக, அரசாங்க அலுவலக வங்கி கட்டமைப்புகள் மற்றும் விவசாயிகள் இந்த தொற்றுநோய் சூழ்நிலையில் கடன் வாங்க தயங்குகின்ற காரணத்தால் தொடக்கத்தில் திட்டமிட்டபடி செயல்படவில்லை. தற்போது கட்டுமானப் பணிகள் | 2021 ஆம் ஆண்டில் நீர் வழங்கல் கட்டமைப்புகளை அமைப்பதற்காக, 1122 ஏக்கர் இலக்கில் 321 ஏக்கரில் எந்த முன்னேற்றமும் அடையப்படவில்லை. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நடைபெற்று வருகின்றன. | |
| | 2003 யூன் 02 ஆந்திகதிய பீ.ஈ.12ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.8.2 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி சபையின் தலைவர் மற்றும் சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களை உள்ளடக்கி 27 உத்தியோகத்தர்களுக்கு 2011 நவம்பர் மாத்திலிருந்து 2015 சனவரி மாதம் வரை ரூபா 17,186,549 தொகை தொழில்படி பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. இதன் மூலம் சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை இன்று வரை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | | திறைசேரியின் அங்கீகாரமின்றி பெற்றுக்கொள்ளப் பட்ட தொழில் படியினை மேலும் தாமதிக்காது உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டியதுடன் அப்படியினைச் செலுத்துவதற்கு சான்றுபடுத்திய மற்றும் அங்கீகரித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொழிலாளர் படிகளை அறவீடு செய்வதை எதிர்த்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் ரிட் கட்டளை பெறுவதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | இந்த வழக்கு தொடர்பான சத்தியப்பிரமாணப் பத்திரங்கள் சட்டமா அதிபரிடம் ஒப்படைப்பதற்காக அமைச்சின் சட்ட அதிகாரிகளால் ஆராயப்பட்டு, சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த பணம் இதுவரை மீட்கப்படவில்லை. |
| ) | 2012 ஆம் ஆண்டின் போது அனுராதபுரம் கட்டுகெலியாவவில் சுற்றுலா விடுதியினை நிர்மாணித்தலானது ஒரு தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த கிரயம் ரூபா 11,809,918 ஆகும். நிர்மாண வேலைகள் முடிவடைந்து 04 ஆண்டுகள ஆகிய குறுங்காலத்திற்குள் கட்டிடத்தின் கீழ் மாடியில் 22 உடைவுகள், கீழ் மாடியின் ஒரு அறையில் டயில்களுடனான சுவரில் 06 வெடிப்புக்களும் ஏற்பட்டு பாதிப்படைந்துள்ளதனைப் போல ஆபத்தான நிலையில் காணப்பட்டதுடன் கட்டிடத்தின் அத்திவாரத்தினை திட்டமிடும் போது அந்த நிலத்தில் | 2021 | | சரியான பெறுகை நடைமுறையினைப் பின்பற்றி நிர்மாணங்களை உரிய முறைமையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிய தொழில்நுட்ப அறிக்கையில் இந்த விரிசல் அபாயகரமான நிலையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. | அநுராதபுரம் மாகாண பொறியியலாளர் திணைக்களத்திடம் பழுதுபார்க்க மதிப்பீடு பெறப்பட்டு, அதற்கேற்ப திருத்தப்பணிகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணப்படுகின்ற மண்ணை பற்றி கவனம் செலுத்தாமையும் நிர்மாணம் நியம தரதத்தில் மேற்கொள்ளப்படாமையும் இந்நிலைமைக்கு காரணமாக இருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | | | |
| ) | 2020 ஜனவரி 27 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 02 ஆம் பிரிவு, பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 1/2015 இன் 2.3 ஆம் பந்தி மற்றும் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளரின் 2023 மார்ச் 20 திகதிய PED/P/02/15(i) temp 3 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் செயற்பாட்டில் உள்ள பணிப்பாளர் பதவியில் புதிய நியமனம் ஒன்றினை வழங்குவதிலிருந்து தவிர்த்து இருக்குமாறு தற்போது நியமனம் வழங்கப்பட்டிருப்பின், கூட்டிணைக்கப்பட்ட அதிகாரச் சட்டத்தின் கீழ் அந்த பதவி காணப்படும் எனின் அதிகாரச் சட்டத்தினை திருத்துவதற்கும் அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஒக்தோபர் 12 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத செயற்பாட்டு பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு சாரதியுடன் ஒதுக்கப்பட்ட வாகனம் ஒன்று மற்றும் மாதம் ஒன்றுக்கு எரிபொருள் 115 லிட்டர்களும் ரூபா 60,650 தொகையான மாதாந்த படியும் செலுத்தப்பட்டிருந்தது. | 2022 | பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தென்னை பயிர்ச்செய்கை சபையின் செயற்பாட்டு பணிப்பாளர் பதவிக்கும் செயற்பாட்டு பணிப்பாளர் ஒருவரை அமைச்சர் நியமித்திருந்தார். அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தென்னை பயிர்ச்செய்கை சபையின் இந்த இரு பதவிகளுக்கும் நியமிப்பதற்கும் அகற்றுவதற்கும் அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது. | செயற்பாட்டு பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் 2024.09.11 முதல் சேவையிலிருந்து ராஜினாமா செய்துள்ளார். அந்த உத்தியோகத்தருக்கு 2022 ஒக்தோபர் மாதம் முதல் 2024 ஆகஸ்ட் வரை ரூபா 1,216,090 மாதாந்த உதவித்தொகையும், மொத்தம் ரூபா 834,295 எரிபொருள் கொடுப்பனவு, அவருக்கு ஒதுக்கப்பட்ட ஓட்டுநருக்கு பயணச் செலவுகள் ரூபா 436,829 மற்றும் மேலதிக நேர செலவுகள் ரூபா 494,556 செலுத்தப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| சபைக்கு சொந்தமான 12 மாதிரி தென்னந்தோப்புகளில் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட CRIC 65 (பச்சை), CRIC 65 (மஞ்சள்), TSR, கப்ருவான, கப்சுவய, கப்சேத மற்றும் DT கலப்பினச் செடிகள். மற்றும் செவ்விளநீர் கன்றுகள் எதுவும் நடப்படவில்லை மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரைக்கப்பட்ட கன்றுகளில் இல்லாத PP2 செடிகள் 2021 ஆம் ஆண்டில 86,499 எண்ணிக்கையும் மற்றும் 2022 ஆம் ஆண்டில் 195,703 எண்ணிக்கையும் சபையின் தென்னந்தோப்புகளில் நடப்பட்டன. | 2022 | தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் பரிந்துரைக்கும் உயர்தர விதைகளை பெற்று நாற்றுகளை தயார் செய்ய வேண்டும். | தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தால் தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு உயர்தர விதை தேங்காய்கள் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் மிகக் குறைந்த அளவில் அந்த விதை தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுவதால், 2021, 2022 ஆண்டுகளில் மாதிரி தென்னந்தோப்புகளில் நாற்றுமேடைகளக்க விதை தேங்காய்கள் கிடைக்கவில்லை. | தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தென்னை பயிர்ச்செய்கை அதிகாரசபை இணைந்து சான்றுபடுத்திய உயர்தர நாற்றுகள் பற்றாக்குறையாக காணப்பட்டமையால் இந்த நாற்றுகள் பயிர்ச்செய்கை இதுவரை வெற்றி அளிக்கவில்லை. |
| பெருந்தோட்ட அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு, தென்னை அபிவிருத்தி அதிகார சபை, நிதி அமைச்சு மற்றும் இரண்டாவது விவசாய செயற்திட்டத்திற்குச் சொந்தமான ரூபா 30,202,375 பெறுமதியான 17 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வாகனங்களை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அவற்றுள் 7 வாகனங்களுக்கு பழுதுபார்க்கும் செலவுகள் ரூபா 3,207,905 மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. இதில் 4 வாகனங்கள் ஓட்ட நிலையில் காணப்படவில்லை. | 2022 | சபை பயன்படுத்தும் வாகனங்களை முறையாக கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வாகனங்களின் ஆவணங்களை சோதனையிட்டு 09 வாகனங்களை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் பெயரில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. | சபை பயன்படுத்தும் வாகனங்களை முறையாக கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 3.43. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| **நிதிப் பெறுபேறு** | | | |
| இலாபம்/மிகை/(நட்டம்)/பற்றாக்குறை ரூபா | (18,945,738) | 98,651,996 | 170,788,322 |
| மொத்த சொத்துக்கள் ரூபா | 1,872,467,192 | 2,163,687,015 | 2,087,672,307 |
| மொத்த பொறுப்புகள் ரூபா | 407,846,380 | 263,909,505 | 356,348,737 |
| மூலதனம் ரூபா | 1,464,620,812 | 1,899,777,510 | 1,731,323,570 |
| **கணக்காய்வு அபிப்பிராயம்** | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்புகள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கையின் திகதியில் உள்ளபடியாக பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| (அ) | சனாதிபதி பதவியேற்பு இரண்டாம் வருட பூர்த்தியிற்கு பாராட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்றை வடிவமைக்க ரூபா 75,600 தொகை செலவிட்டமை, வரிசை இராஜாங்க அமைச்சினால் அச்சிட்டு "அபோக்ஷா கப்ருக" எனும் புத்தகத்தின் 150,000 பிரதிகளை அச்சிட ரூபா 8,181,000 கொடுப்பனவு செய்தமை அதிகார சபையின் நோக்கத்திற்கு மாற்றமானது என அவதானிக்கப்பட்டது. | 2021 | அதிகார சபையின் நோக்கத்திற்கு இணங்காத செலவுகளை செய்யக் கூடாது. விடய பொறுப்பு அமைச்சின் செலவுகள் அவ்வமைச்சிற்கு ஒதுக்கியுள்ள ஏற்பாடடிலிருந்து மேற்கொள்ள வேண்டும். | விடய பொறுப்பு அமைச்சினால் தென்னை பயிரிடல் மற்றும் தெங்கு கைத்தொழிற்துறை தொடர்பாக பொது மக்கள் அறவூட்டப்பட்டுவதற் காக "அபோக்ஷா கப்ருக" எனும் புத்தகத்தின் 150,000 பிரதிகளை அச்சிடப்பட்டுள்ளன. | வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக இந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் "வாழ்த்து" ஆகியவற்றுக்கு செலவிடப்பட்ட செலவினம் தொடர்பில் திருத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில் லை. |
| (ஆ) | அதிகார சபையின் நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகத்தின் முன்பக்கமாக தலைவரிற்கு ஒரு | 2021 | இச் செயற்பாட்டை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். அதனை செய்ய முடியவில்லை | 2023 ஆண்டு செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கி அதிகார சபையின் உள்ளக வருமானமீட்டல் | நிர்மாணங்களுக்குரி ய ஆரம்ப பணிகளை மேற்கொள்வதற்காக ரூபா 300,000 ஆன தொகை மதியுரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பகுதியை சேர்த்தல் மற்றும் கொழும்பு கோட்டையில் நடாத்திச் செல்லப்படும் அலுவலகத்தில் விற்பனை நிலையமொன்றை அமைக்க ஏற்பாடு இல்லாதிருக்கையில் அதற்காக திட்டத்தை தயாரிக்க இணங்கியிருந்த ரூபா 1,200,000 தொகையான மதியுரை கட்டணத்தின் முதலாம் தவணையாக தனியார் மதியுரை நிறுவனமொன்றிற்கு செலுத்தியிருந்த ரூபா 300,000 தொகை அக் செயற்திட்டத்திற்காக திறைசேரியின் அங்கீகாரம் வழங்கப்படாததால் குறித்த நிர்மாணத்தை மேற்கொள்ள முடியாதிருந்தது. | | எனின் செலவுவை பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அறவிட வேண்டும். | அல்லது உள்ளக சேமிப்பை பயன்படுத்தி இச் செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளது. இதனை விசேட முதலீட்டு கருத்திட்டமொன்றாக தனியார் துறையினரின் உதவியுடன் நடாத்திச் செல்ல முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | கம்பனியொன்றுக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், நிர்மாணப் பணிகள் தற்போது வரை மேற்கொள்ளப்படவில்லை. செலவிடப்பட்ட பணமும் அறவிடப்படவில்லை. |
| (இ) | தெங்கு உற்பத்திகளை நுகர்வோர்களிற்கு இடையில் பிரபள்ளியப்படுத்தும் வேலைத் திட்டத்திற்காக 2014 ஆண்டில் இலங்கை ரூபவாஹிணி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9,344,832 செலுத்தியிருந்த போதும், பிரசார நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் மீள் செலுத்த வேண்டிய ரூபா 7,060,032 ஆன தொகையை மீளாய்வாண்டு இறுதிவரையும் | 2021 | மேற்கொண்ட விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பாக கண்டறிந்து தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். | இத் தொகையை அறவிட தொடரந்தும் நடவடிக்கை எடுக்கப்படும். | தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையால் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துடன் 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பொதியிலடைக்கப்பட்ட தேங்காய் பால் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நிலுவைத் தொகைக்கு உரிய அறிவித்தளை ஒளிபரப்புவதற்கு இலங்கை மூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடிய பேரிதிலும், |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறவிட முடியாதிருந்தமை சர்ச்சைகுரிய விடயமொன்றானதுடன் இப் பிரசார கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது நிதி மோசடியொன்று ஏற்பட்டுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் முறைப்பாட்டு ஆணைக்குழு மற்றும் சனாதிபதி பலனாய்வு அலகினால் 2016 ஆண்டில் மேற்கொண்ட புலனாய்வுகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் கண்டறிந்திருக்கவில்லை. செலவிட்ட ரூபா 2,284,800 தொகையில் ரூபா 2,280,000 தொகை 06 பிரசார தட்டுகளை உற்பத்தி செய்வதற்கான போதும், அப் பிரசார தட்டுகள் ஒலிபரப்பப்படாததால் அத் தொகையும் சிக்கனமற்ற செலவொன்றாக இருந்தது. | | | | 2024.09.11 ஆந் திகதி வரையிலும் இந்த ஒளிபரப்புக் காலத்தினை பயன்படுத்த அதிகாரசபையால் முடியாதிருந்தது. |
| (ஈ) | அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட தேங்காய் ஆலைகளின் உரிமையாளர்களிடமிருந்து வெட்டப்பட்ட தேங்காய் பரிசோதனைக் கட்டணம் மற்றும் நீர் மாதிரி பரிசோதனைக் கட்டணங்கள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா | 2022 | இந்த நிலுவைத் தொகைகள் உடனடியாக வசூலிக்கப்பட வேண்டும் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு முன்னர் பணத்தை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலுவையில் உள்ள கட்டணங்களில் சில நேரடி வைப்புத்தொகை மூலம் செலுத்தப்பட்டுள்ளன. அவற்றை அடையாளம் காண்பதற்கான உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு தொழில்துறைகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. சில | 2023 ஆம் ஆண்டு முதல், சேவையை வழங்குவதற்கு முன் பணம் வசூலிக்கும் முறை பயன்படுத்தப்படுவதுடன், 2024 ஒக்டோபர் 16 வரை இனங்காணப்படாத மற்றும் அறவிட வேண்டிய மீதியாக 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 685,118 உம், 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 4,047,153 உம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 5,814,594 உம் தென்னை நார் அடி மூலக்கூறு பரிசோதனைகளுக்கு ரூபா 211,938 உம் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய்ப்பால் பரிசோதனைகளுக்கு 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 1,180,985 உம் உட்பட மொத்தம் ரூபா 7,207,517 ஆன கட்டணம் மீளாய்வாண்டின் இறுதி வரை வசூலிக்கப்படவில்லை. | | | தொழிலதிபர்களின் செயல்திறன் இந்த ஆண்டு குறைவாகக் காணப்பட்டதால் நிலுவைக் கட்டணத்தை வசூலிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | ஆக ரூபா 4,732,271 ஆன தொகை காணப்பட்டது.. |
| (உ) | தென்னை நார் தொழில் வளர்ச்சிக்கு தேவையான அறிவு மற்றும் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் மற்றும் உற்பத்தி முறைகள் குறித்து தொழில்துறையினர், புதிய தொழில் முனைவோர், மாணவர் சமூகம் போன்றோருக்கான பயிற்சி நிலையமாக 2006 ஆம் ஆண்டில் துங்கன்னாவ தென்னை நார் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டதுடன் தென்னை நார் தொழில்துறைக்கு புதிய அறிவையும் தொழில்நுட்பத்தையும் வழங்குவதன் மூலம் உயர்தர தென்னை நார் உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது. | 2022 | துங்கன்னாவ பயிற்சி நிலையத்தின் பணிகள் செயற்பாடுகளை ஆரம்பிப்பதன் மூலமோ அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான வேலைத்திட்டத்தைப் பயன்படுத்துவதன் மூலமோ செயற்படுத்தப்பட வேண்டும். | 2022 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில், தென்னை நார் ஆலையை குறைந்தபட்ச செலவில் நிலையத்தில் இயககுவதற்க ரூபா 2.48 மில்லியன் ஒதுக்கப்பட்டு பழுது பார்க்கும் பணிகளை மீண்டும் செய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | தேங்காய் நார் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் உள்ள இயந்திரங்கள் எதுவும் பழுதுபார்க்கப்படவில்லை மேலும் அபிவிருத்தி பயிற்சி நிலையம் தற்போது செயலிழந்துள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆயினும்கூட (2020 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய CDA/PD/FM/2020/ Program -003 ஆம் இலக்க பணிப்பாளர்-திட்டமிடல் அபிவிருத்தி வெ.ப.ஹே கடிதத்தின்படி) வெளி தரப்பினரக்கு குத்தகைக்கு விடும் நோக்கத்தில் 2020 செப்டம்பர் 01 முதல் தென்னை நார் அபிவிருத்தி தொடர்பான தொழிற்சாலையின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன. 2023 ஜூன் 02 அன்று நடாத்தப்பட்ட சுயாதீன கணக்காய்வு பரிசோதனைப் பிரகாரம் அந்த 18 இயந்திரங்களில் 14 செயலிழந்திருந்தமையாலும் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் இயந்திரங்களும் திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்தமையாலும் பயிற்சி நிலையத்தின் செயல்பாடுகள் மீண்டும் தொடங்கப்படுதல் அல்லது தென்னை நார் தொழிற்சாலை வெளித் தரப்பினருக்கு குத்தகைக்கு விடப்படுதல் மேற்கொள்ளப்படவில்லை.. | | | | |
| (ஊ) | 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 33(4) ஆம் பிரிவின் | 2023 | அறவிடப்பட வேண்டிய செஸ் வரியின் நடவடிக்கைகள் குறித்து அதிகாரசபையால் | 2023 ஆம் ஆண்டில், ஆலை உரிமையாளர்களின் பாதுகாப்பு வைப்புத்தொகையிலிருந்து ரூபா | தேங்காய் மீதான செஸ் வரி விதிப்பு, அறவீடு, அமுலாக்கம் மற்றும் செலுத்துதல் ஆகியவற்றுக்கு |

| | | | |
|---|---|---|---|
| பிரகாரம் தேங்காய் மீது செஸ் வரி விதித்தல், அறவிடல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் செலுத்துதல் ஆகியவற்றுக்குத் தேவையான அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்தாலும், அதிகாரசபை இது தொடர்பாக எந்த உத்தரவையும் தயாரிக்கவில்லை. எவ்வாறாயினும், 2007 ஆம் ஆண்டு வரை ஆலை அபிவிருத்தி நிதியத்திற்கு செஸ் வருமானத்திலிருந்து மற்றும் அடுத்தடுத்த ஆண்டுகளில திறைசேரியின் மானியங்களில் இருந்து பெறப்பட்ட ஏற்றுமதி செய்யப்பட்ட ஒவ்வொரு 1 கிராமுக்கு 20 சதம் என்ற அளவில் ஏற்றுமதி செய்யும் ஆலை உரிமையாளர்களின் பெயரில் கணக்குகள் பராமரிக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் 58 கணக்குகளில் ரூபா 44,000,497 மீதியொன்று இருந்தது. 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை, அந்தக் கணக்குகளில் இருந்து அந்தந்த ஆலை உரிமையாளர்களுக்கு ரூபா 11,814,955 திருப்பிச் | கட்டளைகளை தயாரித்து முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். | 2,471,259 விலக்கு அளிக்கப்பட்டுள்ளதுடன், வருமானத்திலிருந்து எந்தத் தொகையும் விலக்கு அளிக்கப்படவில்லை. பிணை வைப்பு கணக்கில் மீதமுள்ள மீதிகள் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக செயலில் உள்ள ஆலைகளில் தேவைக்கேற்ப விடுவிக்கப்படும். | தேவையான அனைத்து விடயங்கள் குறித்தும் அதிகாரசபை எந்த கட்டளையையும் தயாரிக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்டது. | | | | |
| (எ) | 1975 இன் 24 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் 51 ஆம் பிரிவு மற்றும் 1979 திசெம்பர் 31 ஆந் திகதிய 69/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் முதலாவது பட்டோலையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்றுமதி செய்யப்படும் தேங்காய் உற்பத்திகளின் தரத் நியமங்களை அமைத்து பராமரிகத்தல் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், 2023 ஆம் ஆண்டில், ஐ.அ.டொலர் 277,510 மதிப்புள்ள தேங்காய் தொடர்பான உற்பத்திப் பொருட்கள் (புதிய தேங்காய் தவிர) ஐ.அ.டொலர் 172,685 இற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட போதிலும், அது தொடர்பில் எந்தவொரு பரிசோதனையும் மேற்கொள்ளப்படவில்லை. | 2023 | அதிகாரசபையால் ஏற்றுமதி செய்யப்படும் தேங்காய் உற்பத்திகளின் தரம் தொடர்பான நியமங்களை தயார் செய்து, பேணிச்செல்லல் மற்றும் கண்காணித்தல் வேண்டும். | வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப முறைகள் மற்றும் அறிவின் மத்தியில் ஒரு பொருளின் தரம் தொடர்புடைய அமைப்புகளின் சான்றிதழால் தீர்மானிக்கப்படுகிறது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இங்கே தயாரிப்புகள் அல்ல, தொடர்புடைய உற்பத்தி முறை சான்றிதழுக்கு உட்படுகின்றது. இந்த கட்டமைப்பு சான்றிதழின் மூலம், தயாரிப்பு செயல்பாட்டின் போது தயாரிப்புகளின் தரத்திற்கு தீங்கு விளைவிக்கும் அனைத்து நிபந்தனைகளும் தடுக்கப்படும் அல்லது கட்டுப்படுத்தப்படுவதால், முழு தயாரிப்பின் தரமும் பாதுகாக்கப்படும். | ஏற்றுமதி செய்யப்படும் தென்னை உற்பத்திகளின் தரத்தை அதிகாரசபை நிர்ணயித்து பராமரிக்க வேண்டும் என்றாலும், அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஏ) | "தேங்காய் உற்பத்திகளை மொத்தமாக கொள்முதல் செய்து, விலை தளம்பலுக்கு ஏற்ப சந்தைக்கு விடுவித்தல்" என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் விலை ஸ்திரப்படுத்தும் நிதியத்தின் செயல்பாடுகள் சுமார் 37 வருடங்களாக இலக்குகளை அடைய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | 2023 | நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் | இந்த நிதியத்தில் காணப்படும் பணம், தெங்கு தொழில்துறையை மேம்படுத்துவதற்காக தொழில்துறையினருக்கு நிதி வசதிகளை வழங்குவதற்காக இரண்டு கடன் திட்டங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவைக்கு ஏற்ப கடன் பணம் விடுவிக்கப்படும் வரை இவ்வாறு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. | தேங்காய் எண்ணெய் விலையை கட்டுப்படுத்த இந்த நிதி நேரடியாக பயன்படுத்தப்படவில்லை. |
| (ஐ) | அதிகாரசபையால் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களின் தேங்காய் எண்ணெய் பொருட்களில் அஃப்லாடாக்சின் இல்லை என்பதை மற்றும் எந்த இரசாயனமும் சேர்க்காமல் இயற்கையாக உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதையும் ஒட்டுமொத்த உற்பத்தி நடைமுறையும் நியமத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்படுவதாகவும் பரிசோதனை நடாத்தி வழங்கப்படும் 5 நட்சத்திர சான்றிதழ்கள் 25 இனை 2022 ஆம் ஆண்டில் 11 தேங்காய் தொடர்பான உற்பத்தி நிறுவனங்கள் பெற்றிருந்தாலும், அவை. 2022 ஆம் ஆண்டில் 5 நட்சத்திர சான்றிதழ்களைப் பெற்ற 7 நிறுவனங்கள் 2023 | 2023 | நுகர்வோருக்கு மலிவு விலையில் தரமான பொருட்களை வழங்குவதற்கு, தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களின் உற்பத்திச் செலவைக் குறைக்க, அவர்களுக்கு நிதியுதவி, அறிவு மற்றும் பிற வசதிகளை அதிகாரசபை வழங்க வேண்டும். | 2022-2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், நுகர்வோர் சந்தையில் குறைந்த விலையில் தேங்காய் எண்ணெய் பொருட்களை மட்டுமே வாங்குவதால், ஐந்து நட்சத்திர இலட்சினை கொண்ட தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் அந்த தேங்காய் எண்ணெய் உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்தி, ஐந்து நட்சத்திரங்கள் இல்லாமல் தேங்காய் எண்ணெய் தயாரிக்க முற்பட்டுள்ளனர். இந்நிலையில், தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பரிசோதனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | ஐந்து நட்சத்திர உற்பத்திப் பொருட்களை நுகர்வோர் அதிக விலைக்கு கொள்வனவு செய்யாத காரணத்தினால் உற்பத்திப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த அதிகாரசபை முறையான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆம் ஆண்டில் 5 நட்சத்திர சான்றிதழ்களை 3 நிறுவனங்கள் மட்டுமே பெற்றுள்ளன. இதனால், உயர்தர தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்தும் ஆர்வம் குறைந்து வருவதை அவதானிக்க முடிந்தது. | | | | |
| (ஒ) | அதிகாரசபையின் 1,162 சதுர அடி பரப்பளவான தரை தளத்தைப் பயன்படுத்தி நிறுவப்பட்ட வணிக சேவை நிலையத்தின் ஊடாக வாடிக்கையாளர் பிரச்சனைகளை தொலைபேசியில் தீர்க்க ஒரு தொலைபேசி அழைப்பு பிரிவு, வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக வைரம், பிளாட்டினம், தங்கம் மற்றும் வெள்ளி உறுப்பினர் அட்டைகளை அறிமுகப்படுத்தி வெளிநாட்டு வாடிக்கையாளர்களை அடையாளம் காண வாடிக்கையாளர் பராமரிப்பு பிரிவு, அதிகாரசபையால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு தேங்காய் தொடர்பான தரவுகளை வழங்குவதற்காக சந்தைப்படுத்தல் நுண்ணறிவுப் | 2023 | முறையான சாத்தியக்கூறு ஆய்வுக்குப் பிறகே திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டங்களை திறம்பட செயல்படுத்த வேண்டும். | தேங்காய் தொடர்பான உற்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் உடனடி சேவையாக வழங்கப்படுவதுடன், சர்வதேச சந்தையில் இலங்கையின் தேங்காய் தொடர்பான உற்பத்திகளுக்கு தனித்துவமான வர்த்தக நாமம் வழங்கப்படும் எனவும் இதன் மூலம் மேலும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தற்போதைய சூழ்நிலையால் பல தொழில் முயற்சியாளர்கள் தங்கள் சேவைகளை இணையதளத்தில் பெற வேண்டும் என்ற ஆர்வத்தால் இந்த நிலையத்திற்கு வருகைதரும் எண்ணிக்கை குறைவடைவதை காணக்கூடியதாக உள்ளது. வந்துள்ளனர். | தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் சேவைகளை பெற்றுக்கொள்ளும் மற்றும் பெற ஆர்வமுள்ள வாடிக்கையாளர்களை இலகுவாக சென்றடையவும், தேவையற்ற காலதாமதங்களை தவிர்க்கவும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் கோட்டை அலுவலகத்தின் தரை தளத்தில் இந்த வர்த்தக சேவை நிலையம் நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், எந்த பணியும் நடைபெறவில்லை. |

பிரிவையும், தரமான பாதுகாப்பு, செயலாக்க மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகளின் தகவல்களை வழங்குவதற்கும் தகவல்களைச் சேகரிப்பதற்கும் ஒரு தகவல் தொழில்நுட்ப பிரிவையும், இந்த நிலையத்தின் அனைத்து செயற்பாடுகளையும் திட்டமிடுவதற்கு திட்டமிடல் பிரிவையும் உள்ளடங்களாக 5 அலகுகளை கொண்டதாக இந்த நிலையத்தின் பணிகளை மேற்கொள்ள அதிகாரசபை திட்டமிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் மேற்கூறிய பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

## 3.44. இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்

| ஆண்டு | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| நிதிப் பெறுபேறுகள் | | | |
| இலாபம் / (நட்டம்) | (231,197,596) | 19,671,760 | (92,673,903) |
| மொத்த சொத்துக்கள் ரூபா | 6,288,814,458 | 6,654,762,290 | 6,737,098,854 |
| மொத்த பொறுப்புகள் ரூபா | 2,521,969,686 | 2,841,234,612 | 2,955,759,630 |
| மூலதனம் ரூபா | 3,766,844,772 | 3,813,527,678 | 3,781,339,224 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | பாதகமான அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் செயற்பாட்டு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான அலுவலகத்தின் வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியான ரூபா 442,622,983 தொகையில் 10 வருடங்களை விஞ்சிய 05 அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 228,561,009 கடன் மீதியைத் தீர்த்துவைப்பதற்கு இதுவரை நடவடிகையை எடுத்திருக்க வில்லை. | 2023 | செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் வட்டிகளை தீர்த்துவைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | லங்கா மினரல் சென்ஸ் கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை தொடர்பாக கொழும்பு நீதி மன்றத்தில் உள்ள வழக்கு சமசரசத்திற்கு கொண்டு வருவதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எங்களின் 2024.05.16 ஆம் திகதிய கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. லங்கா உரக் கம்பனிக்கு 2023.12.31 இல் உள்ளாவறு லெுத்த வேண்டிய தொகைக்கா எமது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான நிலையான சொத்தொன்றைக் கையளிப்பதற்கான அந்த நிறுவனம் இணங்கியிருந்ததுடன் அவ்வாறு இல்லையாயின் | இந்த பிரச்சினை இதுவரை தீர்க்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அந்த பதிவழிக்குமாறு கோருமாறு எங்களின் 2024.06.10 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அரச வழங்கல் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம், சிலாபனம் பெருந்தோட்டக் கம்பனி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் செலுத்த வேண்டிய தொகைகளை பதிவழிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | |
| 02 | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு மக்கள் வங்கி மேலதிகப் பற்று ரூபா 135.391 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக மேலதிகப் பற்று வட்டி ரூபா 36.729 மில்லியன் ஆகும். 2020 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 100 மில்லியன் கடன் தொகையில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 20.69 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான வட்டி ரூபா 18.60 மில்லியனும் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 20.054 மில்லியனும் ஆகும். | 2023 | செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் வட்டிகளை தீரத்து வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது மக்கள் வங்கிலிருந்து பெறப்பட்ட ரூபா 100 மில்லியன் கடன் தொகையில் 2023.12.31 ஆந் திகதி வரையில் செலுத்துவதற்கு மீதியாக இருந்த ரூபா 79.31 மில்லியன் மற்றும் அத்திகதியில் வங்கி மேலதிகப் பற்று ரூபா 135.39 மில்லியன் மற்றும் அதற்குரிய செலுத்த வேண்டிய வட்டி வங்கியுடன் கலந்துரையாடப்பட்ட பின்னர் ஒரு வருடம் நீடிக்கப்பட்ட கடனாக்குவதற்கு 2024 பெப்ரவரி மாதத்தின் போது மாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது எங்களால் அந்தக் கடனுக்கு தவணைப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்பட்டுள்ளது | இந்த செலுத்த வேண்டிய வங்கி மேலதிகப்பற்று மற்றும் வட்டி சேர்க்கப்பட்டு 2024 பெப்ரவரி ரூபா 237 மில்லியனுக்கு 5 வருட நீண்ட கால கடனாக மாற்றப்பட்டு தவணைகளாக (வட்டி மற்றும் தவணை) ரூபா 35.08 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 03 | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் நலன்புரிய நிதிய அதிகாரச்சட்டத்தின . 15 மற்றும் 16 ஆம் பிரிவுகள் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின . II ஆம் பிரிவின் 16(i) மற்றும் 27 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 689,241,182 ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு பணம், ரூபா 49,732,429 ஆன ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் அதற்கு மேலதிகமாக தோட்டப் பதவியணியினரின் சேமலாப நிதியத்திற்கான ரூபா 73,313,020 தொகையும், லங்கா கறுவாத் தோட்ட ங்களில் இருந்து சேமலாப சங்கத்திற்கு ரூபா 18,160,269 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு | 2023 | தற்போது பங்களிப்பு பணம் மற்றும் நிலுவைப் பங்களிப்பு பணத்துடன் தொடர்பான பிரச்சினை களை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீண்ட காலமாக கூட்டுத்தாபனத்தில் காணப்படும் அதிக நிதி நெருக்கடி காரணமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (EPF), இலங்கை பெருந்தோட்டக்காரர் களின் நலன்புரி நிதியம் (CPPS) தோட்ட பதவியணியின் நலன்புரி நிதியம் (ESPS) ஆகிய நலன்புரி நிதியங்களுக்கு மற்றுமு் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் (ETF) செலுத்த வேண்டிய பங்களிப்பு பணத்திற்காக வழக்கு தீர்ப்புகளுக்கு உரியதாக பணம் செலுத்தப்பட்டவாறு உள்ளது. | நிலுவை நியதிச்சட்ட படிகளை தீர்ப்பனவு செய்வதற்கு பொது திறைசேரியிலிருந்து மாதாந்தம் ரூபா 21.3 மில்லியன் கிடைப்பதுடன், அந்த பணத்தில் நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்கு உரியதாக வழக்குகளுக்கு தவணைகள் செலுத்தப்பட்டவாறு உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஊழியர் சேமலாபம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களுக்காக செலுத்த வேண்டிய தோட்டப்பிரிவின் மிகை கட்டண பெறுமதி முறையே ரூபா 78,378,572 மற்றும் ரூபா 9,295,631 ஆகும். | | | | |
| 04 | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் அதிகாரச்சட்டத்தின. 02 ஆம் பிரிவில் 5(1) பிரிவின் பிரகாரம் ஊழியர் ஓய்வு பெற்றுச் செல்லல் அல்லது மரணமடைந்த திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடை கொடுப்பனவுகள் மேற் கொள்ளவேணடியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டையும் உள்ளடக்கி 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பணிக்கொடை பெறுமதி ரூபா 629,252,704 தொகையும், மிகைக் கட்டணம் ரூபா 25,843,582 தொகையும் செலுத்த வேண்டியிருந்தது. மேற்கூறப்பட்ட நிதியம் செலுத்தாமையினால் அது | 2023 | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடைகளின் பொறுப்பு உரிய பிரகாரம் தீர்த்து வைப்பதன் மூலம் சிக்கனமற்ற செலவினங்களை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீண்ட நாட்களாக கூட்டுத்தாபனத்தில் நிலவும் கடும் நிதி நெருக்கடியால், ஊழியர் பணிக்கொடையை முறையாக செலுத்த முடியாமல், அதிக கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த நிலுவைத் தொகையை வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தற்போது கிடைத்துள்ளது. | பொது திறைசேரியின் மூலம் ரூபா 1,445.5 மில்லியன் தொகையை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள போதிலும், இதுவரை பணம் கிடைக்கப்பெறவில்லை. 4,941 ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய பணிக்கொடை தொகை கணக்கிடப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொடர்பான வழக்கிற்காக 2023 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 1,933,000 சட்டத்தரணிக் கட்டண செலுத்துதலும் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. | | | | |
| 05 | 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(அ) பந்தி மற்றும் 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 122 வாகனங்களில் ஓட்ட நிலையில் காணப்படாதிருந்த 75 வாகனங்கள் காணப்பட்டதுடன் அதில் பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத 57 வானங்கள் காணப்பட்ட போதும் அந்த வாகனங்களை விற்று தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் பழுதுபார்த்து பயன்பாடடுக்கு எடுக்கக் கூடிய 18 வாகனங்களும் பழுது பாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பயன்படுத்துவதற்கு முடியாதுள்ள வானங்களைவிற்றுத் தீர்ப்பதற்கும் பழுது பார்க்கக் கூடிய வாகனங்களை உரிய பிரகாரம் பழுது பார்த்த பின் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் உள்ள 75 வாகனங்களில், பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்த முடியாத 25 வாகனங்களில் 12 வாகனங்களின் பதிவு இரத்து செய்யப்பட்டுள்ளது. பதிவு இரத்து செய்யப்படாத மீதமுள்ள 50 வாகனங்களில், பழுதுபார்த்து பயன்படுத்தக்கூடிய 18 வாகனங்கள் நிறுவனத்தின் தற்போதைய நிதி நிலைமையின் அடிப்படையில் முறையாக பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. | ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் இருந்த 75 வாகனங்களில் ஒரு வாகனம் பழுது நீக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன், ஏனைய 74 வாகனங்களை அப்புறப்படுத்த 03 மதிப்பாய்வுச் சபைகள் நியமிக்கப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டுகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 06 | தற்போது வரையில் கூட்டுத்தாபனத்தின் 09 தேயிலை தொழிற்சாலைகள் காணப்பட்ட போதிலும் அதில் 03 தொழிற்சாலைகள் மாத்திரம் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் 05 தொழிற்சாலைகள் நீண்டகாலம் முதல் மூடப்பட்டிருந்தமையும் ஒரு தேயிலை தொழிற்சாலை 2022 ஒக்டோபர் முதல் பராமரிப்பு நடவடிககைகளுக்காக மூடப்பட்டிருந்தது. அவ்வாறே பயன்படுத்தப்படாத கோமர தோட்டயாயத்தின் நக்கீல்ஸ் பங்களா பார்வையிடும் நிலையங்கள் சிலவற்றிற்கு மத்தியில் காணப்பட்ட போதும் அந்த பங்களாவை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | மூடப்பட்டுள்ள தேயிலை தொழிற்சாலை முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் பயன்பாட்டிற்கு எடுத்து பணிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீண்ட காலமாக செயலிழந்திருந்த 05 தொழிற்சாலைகள் சந்தைக்கு ஏற்ற வகையில் தரமான தேயிலையை உற்பத்தி செய்ய முடியாமல் நீண்டகாலமாக மூடப்பட்டுள்ளது. ரங்கல தேயிலை தொழிற்சாலையின் தேயிலை உலர்த்தும் இயந்திரத்தின் உலைப் பகுதியை (Furnace) அகற்றி திருத்துவதற்கான ஆரம்பகட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், கடந்த ஆண்டில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை காரணமாக இந்த இயந்திரங்களை கொள்வனவு செய்வதை ஒத்திவைக்க பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. | நீண்ட நாட்களாக மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் இயந்திரங்கள் பட்டியலிடப்பட்டு, மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ரங்கலா தொழிற்சாலையில் பழுது நீக்கும் பணிகள் தொடங்கியுள்ளன. |
| 07 | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 280 தோட்டப் பிரதேசங்களில் 20 தோட்டக் கம்பனிகளுக்கு 53 வருட நீண்ட கால வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த | 2023 | கூட்டுத் தாபனத்தில் முதலீடு செய்யப்பட்ட ஆதனங்களின் வருமானம் நிதிக் கூற்றுக்களில் சரியாக கணக்கீடு | ஒப்பந்தத்தின் நிபந்தனையின் பிரகாரம், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் ஊடாக திறைசேரிக்கு குத்தகைப் பணம் வழங்கப்படுவதால், அந்த பணம் இந்தக் | குத்தகைப் பணம் பெருந்தோட்ட அமைச்சின் ஊடாக திறைசேரிக்கு அனுப்பப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | துடன் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 1,611,520,641 முதலீடு செய்யப்பட்ட ஆதனமாக காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த முதலீட்டுச் சொத்துக்களில் கிடைக்கின்ற வருடாந்த வருமானம் உடன்படிக்கையின் படி பொதுத் திறைசேரிக்கு அனுப்புகின்றமையினால் கூட்டுத்தாபனத்திற்கு வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | செய்ய வேண்டியிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் வருமனத்தை உழைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்கில் செலவு வைக்கப்படவில்லை. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சொத்தின் வருமானம் கூட்டுத்தாபனத்தின் கணக்கில் உள்ளடக்கப்படாத பிரச்சினை குறித்து மீண்டும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | |
| 08 | 2023 ஆம் ஆண்டின் போது கூட்டுத் தாபனத்திற்குரிய சகல தோட்டங்களிலும் தேயிலை விளைச்சல் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 07 சதவீதம் 41 சதவீதம் வரையிலான வீழ்ச்சில் குறைவடைந்திருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் மொத்த தேயிலை விளைச்சல் கிலோ கிராம் 5,089,282 ஆக இருந்ததுடன் அது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 24 சதவீத வீழ்ச்சியாகும். அவ்வாறே 2023 ஆம் ஆண்டின் போது தேயிலை கிலோ கிராம் | 2023 | ஆகக் குறைந்த உற்பத்தி கிரயத்தின் தேயிலை விளைச்சல் மற்றும் தரத்தைக் கட்டியெழுப்புவதற்கு தேயைவான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டில் வருமானம் ஈட்டும் தேயிலைத் தோட்டங்களுக்கு போதுமான உரங்களைப் பயன்படுத்தியதால் 2022 ஆம் ஆண்டில் விட 2023 ஆம் ஆண்டில் அதிக தேயிலை கொழுந்து விளைச்சல் கிடைத்துள்ளது. ஆனால் இந்த சூழ்நிலை காரணமாக, 2023 ஆம் ஆண்டின போது கொழுந்து விளைச்சல் கிடைக்கும் தோட்டங்களுக்கு தேவையான உரத்தின் அளவினை வழங்குவதற்கு 20% இற்கு மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் ஒப்பீட்டு ரீதியில் அனைத்து தோட்டங்களினதும் தேயிலை | உற்பத்தி கிரயத்தை குறைப்பதற்கும் தேயிலை விளைச்சல் மற்றும் தரத்தை அதிகரிப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அவதானிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 9,170,548 விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 55 சதவீத இலக்கு மாத்திரமே அடையப் பெற்றிருந்தது. வெளித் தோட்டங் களுக்கு வழங்கப்பட்ட நில அளவில் தேயிலை கிலோ கிராம் 940,151 விளைச்சல் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் உள்ளபடியாக கிலோ கிராம் 364,597 மாத்திரமே கிடைத் திருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட தேயிலை விளைச்சலுடன் ஒப்பீடு செய்யும் போது 61 சதவீத குறைவாகும். கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 14 தோட்டங்களில் 13 தோட்டங்களை 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் தேயிலை கிலோ கிராம் அலகு உற்பத்திக் கிரயம் 03 சதவீதம் முதல் 444 சதவீதம் வரை உயர்வடைந்திருந்தது. | | | விளைச்சல் 7% முதல் 41% வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த தேயிலை விளைச்சல் குறைவடைவதற்கு அந்த தோட்டங்களின் இருப்பிடம் மற்றும் பருவமழையின் முறை மற்றும் தோட்டங்களின் வளம் ஆகியவை பிரதானமாக தாக்கமளித்துள்ளன. | |
| 09 | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 16 தோட்டங்களில் 8 தோட்டங்கள் மீளாய்வாண்டின் போது நட்ட நிலைமையில் | 2023 | ஆகக் குறைந்த உற்பத்திக் கிரயத்தின் கீழ் தேயிலை விளைச்சல் மற்றும் | கோமர தேயிலை தொழிற்சாலையை நவீனமயமாக்குவதற்கான மூலதனச் செலவு உட்பட நட்டம் அதிகரித்துள்ளது. | கோமர மற்றும் கெலேபொக்க ஆகியவற்றில் 2024 ஆகஸ்ட் மாதமளவில் முறையே ரூபா 28,683,547 மற்றமு் |

| | | | |
|---|---|---|---|
| காணப்பட்டதுடன் கோமர மற்றும் கெலேபொக்க தோட்டத்தில் 2022 ஆம் ஆண்டில் முறையே ரூபா 8,974,150 மற்றும் ரூபா 31,396,561 இலாபம் பெறப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 46,723,873 மற்றும் ரூபா 16,805,293 நட்டம் பெறப்பட்டிருந்தது. கூட்டுத்தாப னத்தின் ஊழியர் கிரயம் மொத்தக் கியத்துடன் ஒப்பீடு செய்யும் போது 50 சதவீதத்திற்கு அதிகரித்த பெறுமதி யைக் கொண்டிருந்ததுட ன் ஹெயா பாக் தோட்டத்தில் ஊழியர் கிரயம் மொத்தக் கிரயத்தில் 98 சதவீதம் ஆகவும் அதன் விற்பனைக் கிரயத்துடன் ஒப்பீடு செய்யும் போது 112 சதவீதத்தை கொண்டிருந்தது. புன்னங்கிரிய, ரங்கல, ஹாகெல மற்றும் உட்சைட் என்ற தோட்டங்களில் ஊழியர் கிரயம் அந்த தோட்டங்களில் மொத்தக் கிரயத்தில் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட நிலையில் காணப்பட்டமை தோட்டங்களின் நட்டத்திற்கு நேரடியாக | தரமான உயர்தர தேயிலையை கட்டியெழுப்புவ தற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கொட்டகங்க மற்றும் விகாரகல தோட்டங்கள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான குறைந்த வளமான தோட்டங்களாக காணப்படுவதுடன், தேயிலை உற்பத்திக்கான பச்சை தேயிலை கொழுந்தின் தரம் குறைவதால், 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 இன் விற்பனை விலை (NSA) குறைந்துள்ளது. அதன்படி, 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டு நட்டம் அதிகரித்துள்ளது. | ரூபா 34,964,561 ஈட்டப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தாக்கமளித்திருந்தமை கணக்காய்வின் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 10 | கெலேபொக்க, மிட்லென்ட், ரங்கல மற்றும் கோமர தேயிலை தொழிற்சாலைகளில் வருடாந்தம் பூர்த்தி தேயிலை உற்பத்தி சராசரி இயலளவு முறையே கிலோ கிராம் 706,452, 549,462, 549,462 மற்றும் 423,871 ஆக இருந்த போதிலும் கெலே பொக்க தேயிலை தொழிற்சாலையின் இயலளவு குறைவாக பயன்படுத்தப்பட்டு 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்வரையும் 43 சதவீதத்திற்கு மேற்பட்ட மட்டத்தில் காணப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டின் போது 94 சதவீத குறைவான மட்டத்தில் காணப்பட்டது. ரங்கல மற்றும் மிட்லென்ட் தொழிற்சாலைகளின் இயலளவு 73 சதவீதத்திற்கு அதிகமாக குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | 2023 | தேயிலைக் கொழுந்து விளைச்சலை அதிகரித்துக் கொள்வதன் மூலம் இயலளவின் பயன்பாட்டை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2023 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மோசமான காலநிலை மற்றும் 2022 இல் இரசாயன உரங்களுக்கு தடை விதிக்கப்பட்ட பிறகு, உரங்களின் விலை வேகமாக உயர்ந்ததால், தொழிற்சாலைகளுக்கு கிடைக்கும் பச்சை தேயிலை கொழுந்தின் அளவு வெகுவாக குறைந்துள்ளது. | தேயிலை கொழுந்தின் விளைச்சலை அதிகரிக்கவும், திறன் பயன்பாட்டை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 11 | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தோட்டங்களின் மொத்த பரப்பளவு 147,559 ஹெக்டேயர்களாக | 2023 | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளின் விவரங்கள் உள்ளடக்கப்பட் | காணிகள் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அரசிடம் இருந்து கையகப்படுத்தி அதன் பின்னர் | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளின் பதிவேடு இது வரை தயாரிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணப்படுவதுடன், ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டில் காணப்படும் காணிகளின் அளவு 141,900 ஹெக்டேர் மாத்திரம் என்பதால் 5,659 ஹெக்டேர் காணி தொடர்பாக எந்த சான்றும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அந்த காணிகளின் நிலவுகை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தவில்லை. | | டு காணிகள் பதிவேடு பராமரிக்க வேண்டும். | வர்த்தமானி மூலம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதன் மூலம் வழங்குவதன் மூலம் ஏராளமான தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று (Land Register) காணப்படவில்லை. | |
| 12 | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகளுக்கான வழிகாட்டியின் 3.2 பந்தியின் பிரகாரம் ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் ஆரம்ப பதவிகளுக்கு தவிர 2023 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கூட்டுத்தாபனம் அங்கீகரித்திருக்கவில்லை. | 2023 | ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளை விரைவாக அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கூட்டுத்தாபனத்திற்காக தயாரிக்கப்பட்ட ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் வரிசை அமைச்சின் மூலம் 2021 மார்ச் மாதம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. அது மீண்டும் திருத்தப்பட்டு 2022 சனவரி மற்றும் 2023 மே மாதம் வரிசை அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் பதவி தொகுதியாக அங்கீரித்து எமது கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை. |

### 3.45. அபிவிருத்தி லொத்தர் சபை

| | மொத்த சொத்து ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | உரிமை ரூபா. | இலாபம் ரூபா. | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 3,405,627,719 | 1,771,423,469 | 1,634,204,250 | 2,870,088,373 | முனைப்பழிவுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 3,610,533,182 | 1,931,966,403 | 1,678,566,779 | 3,210,687,041 | முனைப்பழிவுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 5,465,675,603 | 2,364,269,837 | 3,101,405,767 | 3,622,506,725 | முனைப்பழிவுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு உருவகங்கிளனால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறான பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01. | தற்போது பயன்படுத்தப்படுகின்ற உணவு அறை, களஞ்சிய அறை மற்றும் சுவரை மீண்டும் அமைத்தல் என்பவற்றுக்காக 2018 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட முறையே ரூபா 1,336,676 தொகை, ரூபா 246,918 தொகை மற்றும் ரூபா 145,290 தொகை என்பவற்றின் மொத்தம் ரூபா 1,728,884 தொகை நடைமுறை வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த உருப்படிகள் மூலதனமாக்கப்பட்டு பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | பூர்த்தி செய்யப்பட்ட சொத்துக்களாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திட்டமிடப்பட்ட நிர்மாணங்களை மேற்கொள்ளும் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது. எனினும் பல சந்தர்ப்பங்களின் போது அந்த நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அதனை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. எனினும் இந்த நடைமுறை வேலையை பூர்த்தி செய்வதற்காக இந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலமும் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 03/2022 ஆம் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் படி | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அத்தியவசியமற்ற நிர்மாணங்களை தற்காலிகமாக கைவிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த ஆண்டிலும் இந்த நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் மேற்கூறப்பட்ட சுற்றுநிருபம் வறிதாக்கப்பட்டதன் பின்னர் உரிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படும். | |
| 02. | சபையினால் வொக்ஸ்ஸோல் வீதியில் இலக்கம் 234 என்ற கட்டிடம் 2006 ஒக்தோபர் முதல் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை ஒரு தரப்பினரால் மீறப்பட்டிருந்தது. இதனால் வைப்பு பணமாக செலுத்தப்பட்ட ரூபா 723,780 தொகை மற்றும் அந்த ஆண்டிற்காக செலுத்தப்பட்ட வாடகை தொகையில் ஒரு பகுதியான ரூபா 4,976,220 தொகை என்பவற்றின் மொத்தம் ரூபா 5,700,000 தொகை தற்போது 16 வருட காலம் முழுவதும் அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | 2021 | உரிய தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இவ்விடயம் தொடர்பாக பரீட்சிப்பதற்கு நிதி அமைச்சு குழு ஒன்றினை நியமித்ததுடன் அதன் பரிந்துரையை அமுல்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | உரிய பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 03. | 1990 ஆம் ஆண்டில் வோர்ட் பிரதேசத்தில் நபரொருவருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 2,520,000 தொகையான கட்டிட வாடகை வைப்பு தொகையினை அறவிடுமாறு கோரி 23 வருடங்களுக்கு முன்னர் தொடரப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு 2016 சனவரி 11 ஆந் திகதி கிடைத்திருந்தது. உரிய தொகையினை அறவிடுமாறு வழக்கு தீர்ப்பு வெளியிடப்பட்டு 06 வருடங்களுக்கு | 2021 | உரிய தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்தப் பணத்தை அறவிடுவதற்காக நேரடியான தரப்பினர் தற்போது மரணமடைந்திருந்தமையால் அவரின் மகன் மற்றும் மனைவி இந்த வழக்கில் தொடர்புபடுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அவர்களுக்கு இந்த பணத்தை செலுத்துமாறு அழைப்பாணை சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. | உரிய பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அண்ணளவான காலம் கடந்திருந்த போதும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | | | | |
| 04. | சபையினால் 2012 ஆம் ஆண்டின் போது திரைக்கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 38,752,448 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டு வரையிலும் திரைக்கூடத்தினை நிர்மாணிப்பதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாமல் அது விளைவற்றுக் காணப்பட்டது. | 2021 | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுகின்ற வகையில் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். | தற்போது தாபிக்கப்பட்டுள்ள திரைக்கூடங்களில் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மேலும் கணிசமான கிரயமொன்றை செய்ய வேண்டி ஏற்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கிரய நலன் பகுப்பாய்வை மேற்கொள்வதற்காக தேசிய தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் 2021.01.29 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள திரைக்கூடத்தை கேட்போர் கூடமாக நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இந்த திரைக்கூடத்தில் தேசிய தொலைக்காட்சி லொத்தர் சீட்டிழுப்பு பதிவு செய்வதற்கு பூரண வசதிகள் இன்மையினால் இந்த திரைக்கூடமானது கேட்போர் கூடமாக இயங்குகின்றது. |
| 05. | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஆரம்பம் முதல் நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான பணி நடைமுறை கோவையொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அந்தப் பணிகளுக்காக 2016 ஆம் ஆண்டின் போது தகைமை பெற்ற ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். உரிய தரப்பினரால் தற்போது காணப்பட்ட சட்டங்கள், விதிகளை ஆய்வு செய்து உரிய பணி நடைமுறை கோவை தயாரித்து 2019 ஒக்தோபர் 14 ஆந் திகதி அபிவிருத்தி லொத்தர் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | 2021 | சட்டத்தின் பிரகாரம் சபைக்குத் தேவையான பிரமாணங்களை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். | சபை தற்போது காணப்படும் முறைக்கு இணங்காமல் இந்த நடைமுறை கோவை தயாரிக்கப்பட்டுள்ளது என தீர்மானித்து தொடர்புடைய தரப்பினருக்கு பணம் செலுத்துதலை இடைநிறுத்தியுள்ளது. | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இந்த பணிக்காக ரூபா 4,500,000 தொகை உரிய தரப்பினருக்கு செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,700,000 தற்போது இதுவரையில் செலுத்தப்பட்டுள்ளது. அவரால் உரிய பணி நடைமுறை கோவையின் பகுதி இரண்டாக சபைக்கு சமர்ப்பித்திருந்த போதிலும் சபையில் தற்போது காணப்படுகின்ற முறைமைக்கு இணங்காத வகையில் இந்த பணி நடைமுறைக் கோவை தயாரிக்கப்பட்டமைக்கு காரணம் காண்பித்து மிகுதி தொகையை செலுத்துதல் கைவிடப்பட்டிருந்தது. மேலும் இந்த பணிக்காக கையொப்பமிட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட் ‘‘லொத்தர் மற்றும் சீட்டிழுப்பு நடவடிக்கைகளின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள்’’ இற்காக விதிகளை தயாரித்தல் போன்ற பணிகள் கைவிடலாக சபையினால் அதனை தயாரித்து உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய பணிகள் தற்போது வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட தொகை பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்களாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. | | | | |
| 06. | கொரோனா போன்ற தொற்றுநோய் காலப்பகுதியின் போது பௌதீக ரீதியில் லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்வதில் காணப்பட்ட கஷ்டங்களுக்கு ஒரு தீர்வாக E டிக்கட் சீட்டுக்கள் | 2021 | E லொத்தர் சீட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்தி விற்பனைகளை அதிகரித்துக் | எங்களின் இலக்கு நுகர்வாளர்களினை இந்த App இற்கு பழக்கப்படுத்துவதற்கு அவர்களிடம் சென்று இந்த செயலியை கையடக்கத் தொலைபேசியில் நேரடியாக உள்ளடக்கப்படல் வேண்டும். | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எண்ணக்கரு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டின் போது ஒவ்வொரு லொத்தர் சீட்டுக்களும் விற்பனை செய்யப்பட்ட மொத்த லொத்தர் சீட்டுக்களின் அளவில் சசிறி லொத்தர் சீட்டுக்களில் 0.2 வீதமும் லக்ன வாசான லொத்தரில் 0.2 சதவீதமும் சுப்பர் போல் லொத்தரில் 0.3 வீதமும் சனிதா வாசனாவ லொத்தர் சீட்டில் 0.2 வீதமும் ஆக E-லொத்தர் சீட்டுக்கள் விற்பனை குறைந்த சதவீதத்தில் அறிக்கையிடப்பட்டமையால் E டிக்கட் சீட்டு எண்ணக்கரு தோல்வியடைந்திருந்தது. | | கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதற்காக நாட்டில் காணப்பட்ட சுகாதார நெருக்கடிகளின் அச்சுறுத்தலாக இருந்தது. அதனால் இந்த செயலியை தொடர்ந்தும் மக்களுக்கிடையே பரவலாக்குவதில் நடைமுறை ரீதியில் பிரச்சினைகள் காணப்பட்டது. | |
| 07. | 2019 டிசம்பர் 17 ஆம் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதி திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசு கூட்டுத்தாபனங்கள் உள்ளடங்களாக அரச நிறுவனங்கள் www.promise.lk வலைதளத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் அரச பெறுகைகள் நடைமுறையின் (e - GP) இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அபிவிருத்தி லொத்தர் சபையின் வழிமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்டிராமையால் அதற்கமைய பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. | 2022 | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது இந்த நிறுவனம் இலத்திரனியல் அரச பெறுகைகள் வழிமுறையின் (e - GP) இன் கீழ் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளது. இந்த பதிவினை மேற்கொண்ட பின்னர் இந்த நிறுவனத்திற்கு அந்த பெறுகை வழிமுறையை பின்பற்றக்கூடிய இயலுமை காணப்படுகின்றது. | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| 08. | முன்னாள் தலைவரினால் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த கப் வண்டி ஒன்றிற்காக அந்த நிறுவனத்திற்கு கப் வண்டியின் பெறுமதி மற்றும் அந்த தொகைக்கு உரிய சட்டரீதியான வட்டியாக ரூபா 14,923,369 தொகையும் | 2022 | சட்ட நடவடிக்கைக ளின் ஊடாக சபைக்கு ஏற்பட்ட நிதி ரீதியான நட்டத்தை உரிய தரப்பினரிடமி | சபைக்கு கொள்வனவு செய்யப்பட்ட WP-PB 6024 ஆம் இலக்கமுடைய கெப் வண்டியொன்று முன்னாள் தலைவர் ஒருவர் எடுத்துச் சென்றிருந்த காரணத்தால், வாகனத்தை கொள்வனவு செய்த நிறுவனத்திற்கு சபை | இது தொடர்பாக நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் உரிய வழக்கு 2025 மே 20 வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் வழக்கறிஞர் கட்டணமாக ரூபா.245,000 தொகையுமாக மொத்தம் ரூபா 15,168,369 தொகையினை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் சபையினால் தொடுக்கப்பட்ட வழக்கு 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிறைவடைந்திராததுடன் இது தொடர்பில் சபைக்காக ஆஜராகிய சட்டத்தரணிக்கு ரூபா 1,674,185 ஆன தொகையும் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த நிகழ்வு தொடர்பில் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த செலவினம் ரூபா 16,842,554 ஆகும். | | ருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணம் செலுத்தாத காரணத்தால் அந்த தனியார் நிறுவனத்தினால் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்த காரணத்தால் சபையினால் அந்த நிறுவனத்திற்கு ரூபா 15,168,367 ஆன தொகை செலுத்த நேர்ந்தது. அதன் காரணமாக கெப் வண்டியின் பெறுமதி, சட்ட வட்டி, குறித்த நிறுவனங்கள் மேற்கொண்ட சட்டத்தரணி கட்டணம் மற்றும் சபையீன் சட்டத்தரணிக்கான கட்டணமாக ரூபா 1,674,185 ஆன நட்டமொன்று சபைக்கு நேர்ந்திருந்தது. இந்த பணத்தை அறவிடுவதற்காக உரிய சட்ட நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் எடுக்கப்பட்டுள்ளதுடன், இந்த வழக்கிற்கரிய முதலாவது நீதிமன்ற திகதி 2022 மே 06 ஆந் திகதி இடம்பெற்றதுடன், இரண்டாவது நீதிமன்ற திகதியாக 2023 ஏப்ரல் 07 ஆந் திகதி இடம்பெற்றது. | |
| 09. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் படி இருப்புக்கள், கிரயம் அல்லது தேறிய நிகரப் பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதி பௌதீக ரீதியாக களஞ்சியத்தில் காணப்படாத கிரயம் ரூபா 443,609 தொகைக்கான நிகர தேறிய பெறுமதி காணப்படாத 2883 ஷனிக்க லொத்தர் சீட்டுக்களுக்கான இருப்பு ஒன்று கொள்வனவு கிரயத்திற்கு இறுதி இருப்பில் உட்படுத்தப்பட்டிருந்தமையால் நிறுத்தி வைக்கப்பட்ட வருமான ஒதுக்கம் மற்றும் ஷனிக்க லொத்தர் சீட்டு இறுதி இருப்பு அந்த | 2023 | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். | லொத்தர் டிக்கட் புத்தகங்களுக்காக செயற்பாட்டு ரீதியாக தேறிய நிகரப் பெறுமதி ஒன்று காணப்படாமையால் லொத்தர் டிக்கட்களின் கொள்வனவு பெறுமதிக்கு மதிப்பிடப்பட்டுள்ளது. | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | | | | |
| 10. **1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டம்** | | | | |
| i. பிரிவு 17(5)<br><br>பரிசு பெறுவோர் உரிமை கோராத, 06 மாத காலவரையறையை மிகைத்துள்ள பரிசுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணம் முதலில் நிதியத்திற்கும், அதன் பின்னர் ஜனாதிபதி நிதியத்திற்கும் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 மற்றும் 2020 ஆண்டுகளின் போது பரிசுகள் வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூபா 779,750 தொகைக்கான மூன்று மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்து அந்த சட்டத்தின் பிரகாரம் ஈடுபடுத்துவதற்கு 2022 ஆண்டு மே 31 திகதி பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட அலுவல்கள் தற்போது வரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2023 | அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் படி செயற்பட வேண்டும். | 2018 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளின் போது சுபர்போல் மற்றும் கோடிபதி சனிதா லொத்தர் பத்திரங்களில் சீட்டிழுப்பு பரிசுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 3 மோட்டார் சைக்கிள்களை அப்புறப்படுத்தி அந்த தொகையினை ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்புவதற்கு 2022 மே 31 திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்திருந்தது.<br><br>அதன்படி அந்த 03 மோட்டார் சைக்கிள்களையும் முறைப்படி மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், மதிப்பீடு செய்த பின்னர் தொடர்ந்து வரும் 02 மாதங்களில் முறையான அப்புறப்படுத்தல் செய்முறை ஒன்றிற்கு ஆளாக்கி அந்த நிதியை ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரகாரம் செயற்படவில்லை. |
| ii. பிரிவுகள் 19(1) மற்றும் 19(2)<br><br>விதிக்கப்பட்டுள்ளது என இந்த சட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ள அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள | 2023 | அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் படி செயற்பட வேண்டும். | தற்போது வரைவு செய்யப்பட்டுள்ள விதிகள் அடங்கிய பதிவேடு ஒன்று பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதில் கணினி முறைமைக்கு உரிய விதிகள் கொழும்புப் | அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரகாரம் செயற்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் சபையினால் விதிகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கில்லை. | | | பல்கலைக்கழக கணினிப் பிரிவின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலும் சபையின் பிரிவுகள் இடையேயுள்ள அலுவல்கள் தொடர்பாக உட்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் அடங்கிய திருத்தப்பட்ட வரைவு எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்படவுள்ளது. | |
| 11. | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம்2023 ஆம் ஆண்டிற்கான விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | 2023 | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் மீது செயற்பட வேண்டும். | ஒவ்வொரு பெறுகை விடயங்களுக்குரிய கட்டங்கள் தொடர்ச்சியாக திருத்தப்படுவதனால் விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |
| 12. | அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் 2015 மே 25 திகதிய PED/1/2015 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரிமையில்லாத ஐந்து உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கியிருந்ததுடன், அதற்கான எரிபொருள் செலவாக 2023 ஆம் ஆண்டின் போது மொத்தம் ரூபா 2,913,410 தொகையுடைய செலவொன்று மேற்கொண்டிருந்தது. | 2023 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2023 ஜுலை 09 திகதிய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் அனுப்பியிருந்த கடிதத்தின் பிரகாரம் செயற்படுவதற்காக தேசிய லொத்தர் சபை கடைபிடிக்கும் செய்முறைக்கு ஒத்த செய்முறையொன்று அபிவிருத்தி லொத்தர் சபையும் கடைபிடித்து உதவிப் பொது முகாமையாளர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு 2024 மே 20 திகதி நடைபெறும் 294 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு பணிப்பாளர் சபைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளின் படி தயாரிக்கப்பட்ட பணிப்பாளர் சபைப் பத்திரத்திற்காக அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், அந்த | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | புதிய செய்முறை 2024 ஜூன் மாதம் முதல் செயற்படுத்தப்படும். | |
| 13. | 2016 மே 30 திகதிய 04/2016 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரிமையில்லாத உத்தியோகத்தர் ஒருவருக்கு செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் சபையினால் பெற்றிருந்த மோட்டார் வாகனமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த மோட்டார் வாகனத்திற்காக 2023 ஆம் ஆண்டின் போது செயற்பாட்டு குத்தகையாக ரூபா 2,028,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2023 | சுற்றறிக்கையின் எற்பாடுகள் பிரகாரம் செயற்பட வேண்டும். | சபையில் மோட்டார் வாகனங்களுக்கு காணப்படும் தட்டுப்பாடு காரணத்தினால் செயற்பாட்டுக் குத்தகை முறையின் கீழ் 03 வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. அந்த மோட்டார் வாகனங்களில் 02 மோட்டார் வாகனங்கள் பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளருக்கு இணைக்கப்பட்டிருந்தது. | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |
| 14. | 1997 இன் 20 இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் பிரிவு 17(5) இன் படி அபிவிருத்தி லொத்தர் ஒன்றின் பரிசு பெறுவோரை தீர்மானிக்கப்பட்ட நாள் முதல் கணக்கிடப்படும் 06 மாத காலப் பகுதியை மிகைத்த பின்னர் அந்த லொத்தரின் அந்த பரிசுக்கு உரிமை கோரும் நபரை கண்டிறிய முடியாமையின் காரணத்தினால் அந்த லொத்தரின் பரிசு வழங்கப்படாத விடத்து ஏதேனும் பரிசொன்று, அரச உடமையாக்க வேண்டியதுடன், அதன் பின்னர் அது ஜனாதிபதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அபிவிருத்தி லொத்தர் சபையின் உதவி பொது முகாயையாளருக்குரிய 06 மாத கால வரையறையை மிகைத்திருந்த 05 வகையான 27 லொத்தர் பத்திரங்களுக்கு உரிய | 2023 | சீட்டிலுக்கப்பட்ட நாள் முதல் 06 மாதங்களை மிகைத்துள்ள லொத்தர் பத்திரங்களுக்காக பரிசுத் தொகை செலுத்தாமல் இருக்கக்கூடிய வாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்த வேண்டும் மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் சட்டத்தின் படி செயற்பட வேண்டும். | இவ்வாறான முறையில் எதிர் காலத்தில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு தேவையான தலைவர் / பணிப்பாளர் சபையின் விஷேட அங்கீகாரம் இன்றி மேற்கொள்ள முடியாதவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை வலுப்படுத்தப்பட்டுள்ளது. | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் ரூபா 11,000 தொகைக்கான பரிசுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், சபையின் லொத்தர் முகாமைத்துவ முறைமையின் சீட்டிலுப்பு நாள் முதல் 06 மாத செல்லுபடியாகும் காலத்தை மிகைத்துள்ள லொத்தர்கள் ஸ்கேனிங் மேற்கொள்ளும் போது செல்லுபடியாகாத லொத்தர் ஒன்றென இரத்தச் செய்யப்பட்ட போதிலும் இந்த 27 லொத்தர் பத்திரங்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு இயலுமான வகையில் கணினி முறைமையையும் மாற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | | | |
| 15. | அபிவிருத்தி லொத்தர் சபையினுள் லொத்தர் செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ செய்முறை வெளி சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் முறைமையொன்று தயாரித்தல் மற்றும் நிறுவுதல், பதவியணியினருக்கு பயிற்சி வழங்குவதற்காக தகைமையுடைய வழங்குனர் ஒருவரை தெரிவு செய்வதற்காக தேவையான விலைகூறல் ஆவணங்கள் தயாரிக்கும் அலுவல்கள் 2020 ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் அந்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு இறுதி வரை மாதாந்த சேவைக் கட்டணம் 68 சதவீத அதிகரிப்புடன் சேவை உடன்படிக்கையின் காலம் நீடிக்கப்பட்டு போட்டி | 2023 | லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் முறைமையொன்று தயாரித்து நிறுவி பதவியணியினருக்கு பயிற்சி வழங்குவதற்காக வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யும் செய்முறை 03 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், பூர்த்தி செய்யப்படாமையால் அதனை விரைவாக மேற்கொள்ள வேண்டும். | சபைக்கு லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் முறைமையொன்று நிறுவுவதற்காக 2019 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பெறுகைக்குரிய விடயப் பரப்பினை திருத்தி மீண்டும் விலைகூறல் அழைப்பதற்கு 2020 ஆண்டின் போது பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. அதன்படி, இந்த நிறுவனத்திற்கு முழுமையாக சபைக்கு உரிமை கிடைக்கக்கூடியவாறு (With Source Cord) லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் முறைமையொன்று தயாரித்தல் மற்றும் அதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்கும் நிறுவனத்தினால் மென்பொருள் முறைமை நிறுவப்பட்ட பின்னர் நாளாந்தம் அதன் செயலாற்றுகை செய்முறையை நிறைவேற்றுதல் சபையின் பதவியணியினருடன் இணைந்து மேற்கொள்ளல் இந்த விடயப் பரப்பிற்கு உட்படுத்தப்பட்டது. | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

ரீதியான டென்டர் நடைமுறையொன்றுக்கு புறம்பாக மென்பொருள் சேவை வழங்கும் கம்பனியொன்று தெரிவு செய்யப்பட்டு லொத்தர் செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ மென்பொருள் சேவை பெற்றுக்கொண்டிருந்தமையால் 2020 ஆண்டு முதல் 2023 ஆண்டு இறுதி வரை ரூபா 73,221,351 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

அதன்படி, அந்த மென்பொருள் முறைமை தொடர்பாக சபையின் பதவியணியினர், சேவை நிறுவனத்தின் உத்தியோகத்தினருடன் இணைந்து செயற்படும் போது சபையின் பதவியணியினருக்கு புரிந்துணர்வொன்று கிடைப்பதனால் அவ்வாறு விடயப்பரப்பு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், லொத்தர் முகாமைத்துவ மென்பொருள் முறைமை நிறுவுதல் மற்றும் செயலாற்றுகை அலுவல்களுக்காக பயன்படுத்துதல் அதற்குப் பொருத்தமான தகைமையுடைய தகவல்கள் தொழில்நுட்ப நிபுணர்களினால் அடங்குதலாக மேற்கொள்ள வேண்டிய கருமம் ஒன்றாக இருப்பதனால் மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு அதற்குரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் மென்பொருள் சேவை வழங்கும் கம்பனியிடையே 2009 ஆகஸ்ட் 18 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் மென்பொருள் சேவை வழங்கும் கம்பனியினால் வழங்கும் சேவைகள் தொடர்பாக முறைமைக் கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | மென்பொருள் சேவை வழங்கும் கம்பனியுடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இது தொடர்பாக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது, LMS மூலம் பெற்றுக்கொண்டு செயற்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்ப முறைமைக்கு பதிலாக புதிய தகவல் தொழில்நுட்ப முறைமையொன்று பெற்றுக்கொள்வதற்கு பெறுகை செயன்முறையின் மூலம் தெரிவு செய்யும் ஆரம்ப அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமைக் கணக்காய்விற்காக மேற்கொள்ள நேரிடுகின்ற பாரிய கிரயம் தொடர்பாக கவனம் செலுத்தி எதிர் காலத்தில் இதற்காக தீர்மானம் எடுப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |
| 17. | அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட செயற்பாட்டு கையேட்டின் படி அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு நடைமுறையின்றி அபிவிருத்தி லொத்தர் சபையினால் 2023 ஆம் ஆண்டின் போது மொத்தம் ரூபா 105,739,646 தொகையினை ஊக்குவிப்பு தொகையாக பதவியணியினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | 2023 | ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்காக முறையான செயற்பாடு முறைமை தயாரிக்கப்பட்டு அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெறுக்கொள்ள வேண்டும். | சபையினால் ஊக்குவிப்பு கொடுப்பனவு செய்யும் செய்முறையை அடங்கிய புதிய செய்முறையொன்று தயாரிக்கப்பட்டு 2024 மே 20 திகதி நடைபெற்ற 294 ஆம் இலக்க பணிப்பாளர் சபை கூட்டத்தில் பணிப்பாளர் சபைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், எதிர் காலத்தில் அதற்காக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்படும். | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |
| 18. | ஒவ்வொரு பதவியணி அங்கத்தவர்களின் கடமையின் தன்மை, அனுபவம் மற்றும் செயலாற்றுகை போன்ற காரணிகள் தொடர்பாக மதிப்பாய்வு செய்வதற்கு | 2023 | பதவியணி அங்கத்தவர்களின் செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்வதற்கு | 2024 மே 20 திகதி நடாத்தப்பட்ட 294 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செய்யும் செய்முறை தொடர்பாக தயாரிக்கப்பட்ட பணிப்பாளர் | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தேவையான நெறிமுறை உட்படுத்தப்பட்டு ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தும் செய்முறையொன்று தயாரித்தல் பொருத்தமாக இருந்த போதிலும், ஒரு மாதத்தில் 18 அரச கடமை நாட்கள் கடமை மேற்கொள்ள வேண்டுமென்ற நெறிமுறையின் மீது மாத்திரம் என்ற அடிப்படையில் பதவியணியினருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | | தேவையான நெறிமுறை அடங்கிய ஊக்குவிப்பு கொடுப்பனவு முறையொன்று நிறுவப்பட வேண்டும். | சபைப் பத்திரம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி, எதிர் காலத்தில் நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்படும். | |
| 19. | 2020 ஆண்டின் போது காணாமல் போயிருந்ததென கணிக்கப்பட்டிருந்த 2945 ஷெனிக லொத்தர் பத்திர டிக்கட் புத்தகங்கள் தொடர்பாக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,673,875 இற்கான தொகையினை அறவீடு செய்யப்படாமை தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் போது ஆரம்ப விசாரணையொன்று நடாத்தியிருந்ததுடன், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் தொகுதி II, அத்தியாயம் XLVIII பிரிவு 13.2 இன் படி ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் முடிவாக்கப்பட வேண்டியிருந்ததுடன், மேலதிக காலம் தேவைப்படின், போதியளவு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு கால நீடிப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ஆரம்ப விசாரணையை பூர்த்தி செய்வதற்காக 30 மாதங்களை விட மிகையான காலம் எடுத்திருந்ததுடன் கால தாமதத்திற்காக விசாரணை உத்தியோகத்தரினால் | 2023 | பெற வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு தேவையான சட்ட செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். | காணாமல் போயிருந்த 2945 ஷெனிக லொத்தர் டிக்கட் புத்தகங்களில் 2471 புத்தகங்கள் ஏதேதும் தரப்பினரினால் விண்ணப்பிப்பதற்கு கோறியதாகவோ ஏதேனும் தரப்பினருக்கு வழங்கப்பட்டதாகவோ அல்லது ஒப்புக்கொள்ளப்பட்டதாகவோ குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஆவணங்கள் கண்டறிய முடியாதிருந்தது. அதேபோல் தற்போது அறவிடப்பட வேண்டும் என இனங்கண்டிருந்த தரப்பினரிடம் இந்தத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் காணாமல் போயிருந்த லொத்தர் டிக்கட் புத்தகங்களின் கனிஷமான தொகையொன்று அறவீடு செய்வதற்கு இயலுமை கிடைக்கின்றது. | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

போதியளவு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பித்து காலநீடிப்பு பெற்றுக் கொள்ளலும் மேற்கொண்டிருக்கவில்லை. அதேபோல், நிச்சயிக்கப்பட்ட செய்முறையொன்றின்றி அந்த விசாரணை உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2014 மே 30 திகதிய 14/2014 இலக்கம் கொண்ட ஆரம்ப விசாரணைக்கான கொடுப்பனவு மேற்கொள்வதற்குரிய பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 ஜூலை 31 திகதி 18/2018 இலக்கம் கொண்ட ஒழுக்காற்று விசாரணைக்காக கொடுப்பனவுக்குரிய பொது நிருவாக சுற்றறிக்கையின் உச்ச மட்ட ரேட்கள் பிழையாக பயன்படுத்தி கூட்டுத்தொகை 683,971 தொகை 2023 ஆம் ஆண்டின போது செலுத்தியிருந்தது.

காணாமல் போனதென கணிக்கப்பட்டிருந்த 2945 டிக்கட் புத்தகங்களில் 2471 டிக்கட் புத்தகங்கள் ஏதேனும் தரப்பினர் ஒருவர் விண்ணப்பித்திருந்தமை அல்லது ஏதேனும் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததென்பதற்கு அல்லது ஒப்படைக்கப்பட்டிருந்ததென்பதற்கு, எழுத்துமூல சான்றுகள் அபிவிருத்தி லொத்தர் சபையிடம் காணப்படாமையால் ஷெனிக லொத்தர் டிக்கட் புத்தகங்களுக்காக அறவிடப்பட வேண்டிய தொகையில் 83 சதவீதமாகிய ரூபா 2,191,785

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இற்கான தொகையினை அறவீடு செய்து கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | | | | |
| 20. | 2023 ஆம் வருடத்தின் திசெம்பர் 01 திகதி முதல் திசெம்பர் 10 திகதி வரை சீட்டிழுக்கப்பட்ட கப்ருக லொத்தர் பத்திரங்கள் அச்சிடும் போது அங்கு சுபிரி ஜயமல்ல ஆகிய ரூபா 470 மில்லியன் தொகை லொத்தர் பத்திரத்தின் முகப் பக்கத்தில் வலது பக்க மேல் மூலையில் சித்திர பதிவில் ‘‘ஸிஷின ஜயமல்ல ரூபா 47000 இலட்சம்’’ என பிழையாக அச்சிடப்பட்டிருந்ததுடன், வரைவு கலைப் படிவம் (Art Work) மற்றும் அச்சிடப்பட்ட லொத்தர் பத்திரங்கள் தெரிவு பரிசோதனைக்காக சபையினால் நிருவப்பட்டிருந்த உள்ளகக் கட்டுப்பாட்டுச் செய்முறையில் காணப்பட்ட பலவீனங்கள் மற்றும் அச்சீட்டுப் பிழையை இனங்காண்பதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த விற்பனை பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் தரப் பரிசோதனை சபை உத்தியோகத்தர்களினால் இந்த வழுக்களை இனங்காண்பதற்கு முடியாமல் இருத்தல் ஆகிய விடயங்களினால் அச்சுப் பிழையுடனான 4,392,010 தொகையான லொத்தர் பத்திரங்கள் சந்தைக்கு வினியோகிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த அச்சுப் பிழை மற்றும் அதனை சரி செய்ய வேண்டிய முறை தொடர்பாக நுகர்வோரை அறிவுருத்துவதற்காக செய்தித்தாள் பிரசுரித்தலுக்காக ரூபா 22,873 தொகையொன்று சபைக்கு செலவிடுவதற்கு | 2023 | அச்சுப் பிழையுடனான லொத்தர் டிக்கட் புத்தகங்கள் சந்தைக்கு வழங்க முன்னர் அவற்றை இனங்காண்பதற்காக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களினால் உரிய முறையில் கடமை மேற்கொள்ளப் படாமை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.. | இதற்காக 2023 திசெம்பர் 06 திகதி பல செய்தித்தாள் அறிவித்தல்கள் மூலம் நுகர்வுப் பொதுமக்களுக்கு அறிவித்தல் ஊடாக சரி செய்தல் மேற்கொள்ளப்பட்டது. எதிர் காலத்தில் இவ்வாறான தவறுகளிலிருந்து தவிர்ந்து கொள்வதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை வலுப்படுத்தப்பட்டுள்ளது. | 2024 மே 02 முதல் இயந்திரத்தின் மூலம் சீட்டிழுப்புக்கள் முன்னெடுக்கப்படவில்லை. |

நேரிட்டிருந்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | சுபிரி தன சம்பத லொத்தர் சீட்டிழுப்பு அலுவல்களை கணினி மென்பொருளொன்றை பயன்படுத்தி தேசிய தொலைக்காட்சி வளாக திரைக்கூடத்திற்கு வெளியே காணப்படும் அறையொன்றில் மேற்கொள்ளப்படுவதுடன், தொலைகாட்சி மூலம் ஒலிபரப்பு செய்யும் போது சீட்டிழுக்கப்பட்ட உண்மையான நிலைமையை காணாதவாறு வீடியோ நேர் ஒளிபரப்பு மென்பொருளொன்று (Game Animation Software) பயன்படுத்தி சீட்டிழுப்பு இயந்திரமொன்றின் மூலம் பந்துகளை குழுக்கல் செய்து அவற்றில் எதேர்ச்சையாக பந்தொன்று தெரிவு செய்தல் மேற்கொள்ளும் விதத்தில் வீடியோவொன்று தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றது. இந்த வீடியோ நேர் ஒலிபரப்பு மென்பொருள் தயாரிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு சபையினால் ரூபா 3,350,000 இற்கான தொகையொன்று 2023 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன், 2024 ஆண்டு முதல் சேவைகள் வழங்குவதற்காக நாளாந்தம் ரூபா 5,000 வீதம் வருடாந்தம் ரூபா 1,860,000 தொகை செலுத்துவதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த லெத்தர் சீட்டிழுப்பு செய்முறை 2024 மே 02 திகதி முதல் சீட்டிழுப்பு இயந்திரம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | 2023 | நுகர்வோரின் நம்பிக்கை ஏற்படக்கூடிய வாறு சீட்டிழுக்கப்பட்ட உண்மையான முறை தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்பட வேண்டும். | சுபிரி தன சம்பத சீட்டிழுப்பு செய்முறைக்காக புதிய இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்கு சுமார் 06 மாத காலம் செலவிட நேரிடுவதனால் 2023 ஆண்டின் போது எதிர்பார்த்த வருமானத்தை உருவாக்கிக் கொள்ளும் குறிக்கோளுடன் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக அதிஷ்ட இலக்கம் தெரிவு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. அங்கு தயாரிக்கப்பட்ட03 மென்பொருட்கள் ஊடாக மொத்த சீட்டிழுப்பு செய்முறை மேற்கொள்ளப்படுவதுடன், அங்கு அதிஷ்ட இலக்கம் உருவாக்கலுக்கான மென்பொருள் முழுமையான கணக்காய்வொன்றுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு சீட்டிழுப்பு இயந்திரத்தின் உண்மையான தன்மைக்கு சமமான வீடியோ அனிமேஷன் ஒன்றின் மூலம் சுகர்வோருக்கு சீட்டிழுப்பு இயந்திரம் ஒன்று தன்மைக்கு சமமான தோற்றம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் நுகர்வோரின் கவர்ச்சியை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது புதிய இயந்திரம் கொள்வனவு செய்த பின்னரும் லொத்தர் சீட்டிழுப்பு செய்முறை மாறாத வகையில் ஒரே தன்மையுடன் பேணிச் செல்வதற்கு இயலுமாக இருப்பதனால் ஆகும். அவ்வாறன்றி லொத்தர் டிக்கட் பத்திரங்கள் அறிமுகப்படுத்திய ஆரம்ப சந்தர்ப்பத்தில் ஒரு | 2024 மே 02 முதல் இயந்திரத்தின் மூலம் சீட்டிழுப்புக்கள் முன்னெடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | முறையிலும், சீட்டிழுப்பு இயந்திரம் கொள்வனவு செய்த பின்னர் வேறொரு முறையிலும் லொத்தர் சீட்டிழுப்பு செய்முறை மேற்கொள்ளப்படின் அதன் மூலம் நுகர்வோரின் நம்பிக்கைக்கு தாக்கம் ஒன்று ஏற்படும் என அவதானிக்கப்பட்டமையினாலே ஆகும். | |
| 22. | அபிவிருத்தி லொத்தர் சபையினால் 2020 ஆண்டில் சந்தைக்கு அறிமுகப்படுத்திய ஸஸிரி லொத்தரின் சீட்டிழுப்பு அலுவல்கள் தேசிய தொலைக்காட்சி வளாக திரைக்கூடத்திற்கு வெளியே உள்ள அறையொன்றில் மேற்கொள்ளப்படுவதுடன், தொலைக்காட்சி மூலம் ஒலிபரப்பின் போது சீட்டிழுக்கப்பட்ட உண்மையான முறை காட்டப்படாமல் வீடியோ நேர் ஒலிபரப்பு மென்பொருளொன்று பயன்படுத்தி வீடியோவொன்று தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றது. மேலும், இந்த சீட்டிழுப்பு செய்முறைக்காக பயன்படுத்தப்படும் மென்பொருள் முறைமை தொடர்பாக 2021 ஆண்டில் தனியார் கணக்காய்வு நிறுவனம் ஒன்றினால் முறைமைக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இனங் காணப்பட்டிருந்த 04 முறைமை வழுக்கள், 04 முறைமை வரையறை வழுக்கள், 03 கட்டமைப்பு சார் வழுக்கள், 03 பயனர் இடைமுக வழுக்கள் மற்றும் 01 கட்டுப்பாட்டு பற்றாக்குறை வழுக்களாக ஆக மொத்தம் 15 பல்வேறு வழுக்களை 2023 ஆம் ஆண்டு இறுதி அளவிலும் சரி செய்வதற்கு நடவடிக்கை | 2023 | இனங் காணப்பட்ட 15 பல்வேறு வழுக்களை விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நுகர்வோரின் நம்பிக்கை ஏற்படக்கூடிய வாறு சீட்டிழுக்கப்பட்ட உண்மையான முறை தொலைக்காட்சி மூலம் ஒலிபரப்பப்பட வேண்டும்.. | நாளாந்தம் லொத்தர்களை நடாத்திச் செல்வதற்காக தேவைப்படாதது போலவே தற்போது முறைமையில் பயன்படுத்தப்படாத விடயங்களுக்குரிய மற்றும் முறைமையை விரிவாக்கள் மேற்கொள்ளும் போது தாக்கம் ஏற்படுத்தாத வரையறைகள் தொடர்பாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வழுக்கள் காணப்படுகின்றது. இந்த வழுக்களை சரி செய்தல் மற்றும் முறைமையை விரிவாக்கல் இரண்டாம் கட்டத்தில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

எடுத்திருக்கவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| 23. **சுபிரி தன சம்பத லொத்தரின் 49 ஆவது சீட்டிழுப்பு தடவை** | | | | |
| (i) சுபிரி தன சம்பத சீட்டுழுப்பு செய்முறையில் காணப்பட்ட தொழில்நுட்ப மற்றும் கட்டுப்பாட்டு பலவீனங்களினால் 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் 27 திகதி சீட்டிழுக்கப்பட்ட சுபிரி தன சம்பதவின் 49 ஆவது சீட்டிழுப்பு தடவையின் சீட்டிழுப்பு மென்பொருள் மூலம் வழங்கியிருந்த 06 அதிஷ்ட இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்திற்கு பதிலாக பிழையான இலக்கம் ஒன்றுடனான உத்தியோகபூர்வ பெறுபேறு வழங்கப்பட்டு அந்த பிழையான இலக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அதிஷ்டசாளிகளுக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது. | 2023 | நுகர்வோர் நம்பிக்கையை மீறாத வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை வழுப்படுத்தப்பட வேண்டியதோடு பிழையான இலக்கங்களைக் கொண்ட உத்தியோகபூர்வ பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களிடம் சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். | அபிவிருத்தி லொத்தர் சபையின் லொத்தர் சீட்டிழுப்பு செய்முறையில் ஏற்பட்டிருந்த சில தவறுதல்கள் காரணமாக சரியான இலக்கத்திற்கு பதிலாக பிழையான இலக்கம் ஒன்று உத்தியோகபூர்வ பெறுபேறு என வெளியிடப்பட்டிருந்தது. இந்த பெறுபேறின் அடிப்படையில் சீட்டிழுப்பிற்குரிய அதிஷ்டசாளிகள் சீட்டிழுக்கப்பட்ட தினத்திற்கு அடுத்த தினம் முதல் தமது வெற்றிப் பரிசுத் தொகையினை பெற்றுக்கொள்வதற்காக முன்வருவார்கள். வழமையான முறையின் கீழ் நாளாந்த சீட்டிழுப்பின் போது LMS முறைமைக்கு உட்படுத்தப்படுகின்ற அதிவிஷேட தகவல்கள் அடங்கிய கோவையின் படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட சிக்கல் அவதானிக்கப்பட்டவுடன் இது தொடர்பாக அனுப்பப்பட்ட 2024 ஜனவரி மாதம் 05 திகதி நடைபெற்ற 289 ஆவது பணிப்பாளர் சபையின் அறிக்கையின் படி அச் சந்தர்ப்பத்திலும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் அதிவிஷேட தரவுக் கோவைக்கு மேலும் கொடுப்பனவு மேற்கொள்ளல் காலத்திற்கு பொருத்தமானதென அவதானிக்கப்பட்டது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டது | வாடிக்கையாளரின் நம்பிக்கையை மீறிய அலுவலர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன் சபைக்கு ஏற்பட்ட நட்டத்தினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஏதேனும் காரணத்தினால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ பெறுபேறு சரியானதல்ல என வெளியிடப்பட்டால் நுகர்வோர் நம்பிக்கை முறிடைவதுடன், அதன் மூலம் லொத்தர் துறைக்கு பாரிய தாக்கம் ஒன்று ஏற்படுக் கூடும் என்பதனாலே ஆகும்.<br><br>இவ்வாறான சம்பவமொன்று முதற் தடவையாக ஏற்பட்டிருந்த காரணத்தினால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக செய்முறையொன்று அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. இதனால் தேவையான அறிவுரைகளை பெற்றுக்கொள்வதற்காக 2024 ஜனவரி மாதம் 05 திகதி உடனடியாக பணிப்பாளர் சபை கூடி தேவையான தீர்மானங்கள் மற்றும் உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது.<br><br>எவ்வாறாயினும், மேலும், இவ்வாறான சிக்கல்கள் எதிர் காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்ந்தும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இதற்கு தேவையான மனிதவளப் பயிற்சியும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ii) | சுபிரி தன சம்பத 49 ஆவது சீட்டிழுப்பு தவணையின் போது சீட்டிழுப்பு மென்பொருளின் மூலம் வழங்கியிருந்த 06 சரியான அதிஷ்ட இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்காக கொடுப்பனவு மேற்கொள்வதற்காக 2024 ஜனவரி 05 திகதி | 2023 | கணினி முறைமையை உரிய நேரத்தில் நாளதுவரை ஆக்கப்படல் மற்றும் நுகர்வோரின் நம்பிக்கை ஏற்படக்கூடிவாறு செயற்பட | சரியான இலக்கத்திற்கு மற்றும் வெளியிடப்பட்ட இலக்கம் ஆகிய இரண்டிற்கும் செலுத்த வேண்டி நேரிட்டிருந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாக இருந்தமையால் அதற்கான கொடுப்பனவு மேற்கொள்ள பொருத்தமானவாறு கணினி முறைமையில் மேற்கொள்ளப்பட வேண்டிய | கணினி முறைமை சரியான நேரத்தில் புதுப்பிக்கப்படாததால் சரியான வெற்றியாளர்களுக்கு பரிசுத் தொகை இழக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடைபெற்ற 289 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அதனை 2024 ஜனவரி 10 திகதி செய்தித் தாள் அறிவித்தல் ஒன்றின் மூலம் வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2024 ஏப்ரல் 24 திகதி வரையும் அந்த கொடுப்பனவு மேற்கொள்தற்கு இயலுமானவாறு சபையின் கணினி முறைமையினை நாளதுவரையாக்கி கொடுப்பனவு செய்திருக்கவில்லை. | | வேண்டும். | வித்தியாசங்கள் மேற்கொள்வதற்கு நியாயமான காலமொன்று எடுக்க நேரிடுகின்றது. அதன் காரணமாக சபையினால் வேண்டுமென்றே சரியான இலக்கத்திற்கு கொடுப்பனவு மேற்கொள்ளலை தாமதித்தல் மேற்கொள்ளப்படாததுடன், சபை லொத்தர் நுகர்வோருக்கு நிலவும் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக் கூறல் காரணத்தினால் ஏதேனும் தரப்பினருக்கு அநியாயமொன்று ஏற்படாதவாறு முறைமையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் அதற்காக நியாயமான காலமொன்று எடுக்க நேரிட்டது. தற்போது முறைமை நாளதுவரை ஆக்கல் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றமையால் கொடுப்பனவு மேற்கொள்ளல் போலவே பரிசுத் தொகை பெற்றுக்கொள்வதற்கும் இயலுமாக உள்ளது. | |
| (iii) | சுபிரி தன சம்பத லொத்தர் பத்திரத்தின் 49 ஆவது சீட்டிழுப்பு தடவையின் சீட்டிழுப்பு மென்பொருளினால் வழங்கியிருந்த சரியான அதிஷ்ட இலக்கம் 06 உம் முறையே பொருந்தக்கூடிய ரூபா 2,500,000 இற்கான தொகையொன்று வெற்றியளித்துள்ள லொத்தர் பத்திரமொன்று விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் சீட்டிழுப்பு செய்முறையின் போது ஏற்பட்டிருந்த இந்த வழுவினை சரி செய்வதற்கு சபைக்கு இயலாமல் இருந்தமையால் அந்த | 2023 | நுகர்வோரின் நம்பிக்கை ஏற்படக் கூடியவாறு செயற்பட வேண்டும். | சுபிரி தன சம்பத 49 ஆவது சீட்டிழுப்பு தடவையின் ஆரம்ப பெறுபேற்றுப் பதிவேடு வெளியிடப்பட்ட பின்னர் மற்றும் சரியான இலக்கத்துடனான பெறுபேறு வெளியிடுவதற்கு முன்னர் மேற்கூறிய ரூபா 2,000 இற்கான உரிமையை பெற்றுக்கொண்ட டிக்கட் பத்திரம் பரிசுத் தொகை பெற்றுக்கொள்வதற்காக மாவட்ட விற்பனை முகவர் வரை சமர்ப்பிக்கப்பட்டு, அதனை சபையினாலும் மீளளிப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. சரியான இலக்கத்தையுடைய அதிஷ்ட தரவுக் கோவையின் படி அந்த டிக்கட் பத்திரத்திற்கு ரூபா 2,500,000 பரிசுத் | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | லொத்தர் பத்திரத்தை கொள்வனவு செய்திருந்த நுகர்வோருக்கு ரூபா 2,000 தொகையொன்று மாத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | | | தொகையொன்று உரித்தாகியிருந்த போதிலும், அது மாவட்ட விற்பனை முகவர் வரை சமர்ப்பிக்கப்பட்டிருந்த டிக்கட் பத்திரமொன்றாக காணப்பட்டமையால் அதன் உண்மையான அதிஷ்டசாலியை கண்டறிய முடியாமையால் சபை லொத்தர் நுகர்வோருடன் காணப்படும் பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூறல் அடிப்படையில் அது ரூபா 2,000 கொடுப்பனவு என கணித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூறலின் கீழ் குறிப்பிட்ட அதிஷ்டசாலி உட்பட அனைத்து தரப்பினருக்கும் நியாயமொன்று செய்தல் குறிக்கோளுடன் கொண்டு 2024 ஆண்டு ஜனவரி 10 திகதி மும்மொழிகளிலும் செய்தித்தாள் அறிவித்தல் ஒட்டுமொத்த பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | |
| 24. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது அபிவிருத்தி லொத்தர் சபைக்காக தொழில்முயற்சிகள் வள திட்டமிடல் (ERP) செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு 2019 ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் முதற் கட்டமாக கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்று நிறுவும் கருமம் 2020 ஆண்டு முதல் எல்லா வருடங்களிலும் பெறுகை திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த பெறுகை அலுவல்கள் மீளாய்வாண்டு இறுதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2023 | பெறுகை திட்டத்தின் படி செயற்பட வேண்டும். | ERP முறைமையொன்று நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி, சபையின் ஒட்டுமொத்த செயற்பாட்டு செய்முறைக்குரிய தேவைப்பாட்டினை தீர்மானித்து ஒவ்வொரு பிரிவு மட்டத்தில் நிறைவேற்றப்படும் செய்முறையை ஆய்வு செய்து அதன் அந்த விடயப் பரப்பிற்கு உள்ளடங்கிய அறிக்கையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த செயற்திட்டத்தின் முதற் கட்டமென கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்று நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. |

.

அந்த விடயம் 2023 ஆண்டில் ஆதர் சீ கிலாக் மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நிறுவனம் பின்னர் அவ்விடயத்தை நிறைவேற்றுவதற்கு மறுத்திருந்தமையால் பின்னர் இதற்காக மீண்டும் போட்டி சார் விலை கூறல், கூறுவிலைகள் அழைக்கப்பட்டு தகைமையுடைய வழங்குனர் ஒருவர் தெரிவு செய்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.

## 3.46. தேசிய லொத்தர் சபை

| | மொத்த சொத்துக்கள ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | இலாபம்/மிகை/ (நட்டம்)/(குறைவு) ரூபா | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 8,651,301,582 | 2,620,059,722 | 6,031,241,859 | 960,349,617 | முனைப்பழிவுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 9,231,683,150 | 3,010,035,640 | 6,221,647,509 | 1,085,769,648 | முனைப்பழிவுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 10,278,152,465 | 3,943,441,389 | 6,334,711,076 | 650,877,152 | முனைப்பழிவுள்ள அபிப்பிராயம் |

**தேசிய லொத்தர் சபை – 2021, 2022 மற்றும் 2023 ஆம் வருடங்களுக்கான மூன்றாண்டு அறிக்கை**

**பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்பட்டு உருவகங்கிளனால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறான பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01. | 2023 திசெம்பர் 31 திகதியன்று 94 விற்பனை முகவர்களிற்கு ரூபா 166,615,583 ஆனபெசிவ் லொத்தர் சீட்டுக்களை கடனிற்கு விற்பனை செய்திருந்தபோதும், அவற்றில் 48 கடன்படுனர்களிடம் இருந்து மாத்திரம் ரூபா 59,525,000 பெறுமதியுடைய வங்கி பிணைமுறிகள் பெறப்பட்டிருந்தது. 46 விற்பனை முகவர்களிடம் இருந்து வங்கி பிணைமுறி அல்லது வேறு போதுமான காப்பொன்றை பெற்றுக் | 2023 | சுபையினால ̇கடனிற்கு விற்பனை செய்யும் லொத்தர ̇சீட்டு விற்பனை பெறுமதியை உள்ளடக்கும் வகையில் பாதுகாப்பு பிணைமுறி பெறப்பட வேண்டியதுடன் சபைக்கு அறவிட வேண்டிய நிதியை விரைவில் அறவிட நடவடிக்கை | தேசிய லொத்தர் சபையினால் போட்டிச் சந்தையினுள் விற்பனையை மேம்படுத்தும் நோக்கில் சீட்டிழுக்கும் லொத்தர் பத்திரங்களிற்காக விஷேட சீட்டிழுப்பு தடவைகளை செயற்படுத்துவதுடன ̇அங்கு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீதுவிஷேட சீட்டிழுப்பு தடவைகளை | சபையினால் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்படும் லொத்தர் பத்திரவிற்பனை பெறுமதியை உள்ளடக்கும் வகையில் பாதுகாப்பு பிணைமுறிகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொள்ளாது லொத்தர் சீட்டுக்கள் கடனிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டு இறுதியில் அந்தவிற்பனை முகவர்களிடம் இருந்துரூபா 85,406,299 தொகை அறவிடவேண்டியதாக இருந்தது. மேலும், 05 விற்பனை முகவர்களிடமிருந்து ஓராண்டை விஞ்சிய மீதி ரூபா 7,341,195 தொகையும், 05 ஆண்டுகளை விஞ்சிய மீதிரூபா 1,446,198 தொகையும் காணப்பட்டன. | | எடுக்கப் படவேண்டும். | செயற்படுத்தும் போது மாவட்ட விற்பனை முகவர்களிற்கு கடன் அடிப்படையில் லொத்தர பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. | |
| 02. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக 75 மாவட்ட விற்பனை முகவர்களிற்கு ரூபா 59,043,386 தொகையுடைய உடனடி சீட்டுக்களை கடனிற்கு விற்பனை செய்திருந்ததுடன், அவற்றில் 05 கடன்படுனர்களிடம் இருந்து மாத்திரம் ரூபா 4,300,000 ஆன வங்கி பிணைமுறி பெறப்பட்டிருந்தது. 70 மாவட்ட விற்பனை முகவர்களிடம் இருந்து வங்கி பிணைமுறி அல்லது வேறு போதுமான | 2023 | சபையினால கடனிற்கு விற்பனை செய்யும் லொத்தர சீட்டுக்கள் விற்பனை பெறுமதி உள்ளடக்கும் வகையில் பாதுகாப்புபிணை முறிபெறப்படவேண்டியதுடன் சபைக்கு அறவிடவேண்டிய நிதியை விரைவில் அறவிட நடவடிக்கை | 2023 திசெம்பர் 31 திகதியன்று அறவிடவேண்டிய கடன் தொகையிலிருந்து தற்போது ரூபா 39,180,912 தொகை செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது. | சபையினால் கடனிற்கு விற்பனை செய்யப்பட்ட உடனடிலொத்தர் சீட்டுக்களின் பெறுமதியை உள்ளடக்கிபாதுகாப்புபிணை முறிகளை பெறுவதற்கு எவ்வித படிமுறைகளும் எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காப்பொன்றை பெற்றுக் கொள்ளாது லொத்தர் சீட்டுக்கள் கடனிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன மீளாய்வாண்டின திசெம்பர் 31 திகதியன்று அந்த விற்பனை முகவர்களிடம் இருந்து ரூபா 54,875,636 தொகை அறவிடவேண்டியதாக இருந்தது. மேலும், 17 விற்பனை முகவர்களிடமிருந்து ஓராண்டை விஞ்சிய அறவிடவேண்டிய மீதி ரூபா 7,917,747 தொகை காணப்பட்டது. | | வேண்டும். | | |
| 03. | சபையில் கடமையாற்றிய 5 அலுவலர்களிற்கு வழங்கியிருந்த இடர் கடன் தொகையினை 2012, 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளிலிருந்து குறித்த அலுவலர்களினால் மீளசெலுத்த தவறியுள்ளது. அதன் படிமொத்தம் ரூபா 713,393 ஆன அறவிடவேண்டிய கடன் மீதியை 2023 திசெம்பர் 31 வரை அந்த அலுவலகர்ளிடமிருந்து அறவீடுசெய்வதற்கு சபை தோல்வியடைந்துள்ளது. | 2023 | தாமதமின்றி அறவிடவேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 04. | சபையில் கடமையாற்றிய இரண்டு அலுவலர்களிற்கு | 2023 | தாமதமின்றி அறவிடவேண்டிய தொகையை | இரண்டு அலுவலர்களிற்கு வழங்கியிருந்த | இது வரை அறவீடு செய்ய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்கியிருந்த வீடமைப்புக் கடன் தொகையிலிருந்து மொத்தம் ரூபா 1,519,920 தொகையுடைய கடன் மீதிகள் 2006 ஆண்டு முதல் மற்றும் 2016 ஆண்டு முதல் மீள் செலுத்த குறித்த அலுவலர்கள் தவறியுள்ள போதும், 2023 திசெம்பர் 31 வரை அந்த அறவிடவேண்டிய கடன் தொகையை அறவிட சபை தோல்வியடைந்துள்ளது. | | அறவிடநடவடிக்கை எடுக்க வேண்டும். | வீடமைப்புக் கடன் தொகையை செலுத்த அவர்கள் தவறியிருந்த பின்னர் சபைக்கு அறவிடவேண்டியதாக காணப்படும் மீதியை அறவிட தேவையான சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முடியவில்லை. |
| 05. | 1963 இன் 11 இலக்க நிதி சட்டத்தின் 17(2) பிரிவின் பிரகாரம் லொத்தர் வருமானத்தில் இருந்து சட்டத்தில் நிச்சயித்துகுறிப்பிட்டுள்ள செலவுகளை கழித்த பின்னர் வரும் மீதியை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கவேண்டியபோதும், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் நிறுத்திவைத்த இலாபம் மொத்தம் ரூபா 3,603,093,604 தொகையினை திரண்ட நிதியத்திற்கு செலவுவைக்காது, 2023 திசெம்பர் 31 திகதி வரைசபையினுள் நிறுத்திவைக்கப பட்டிருந்தது. | 2023 | குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். | திரண்ட நிதியத்திற்கு நிதியை வழங்குவதற்காக தேசிய லொத்தர் சபை நிறுவப்பட்டதனால் திறைசேரி பிரதிச் செயலாளரினால் கட்டளையின் பிரகாரம் லொத்தர் விற்பனையால் நேரடி பங்களிப்பொன்று திரண்ட நிதியத்திற்கு வழங்கப்படுகின்றது. 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான லொத்தர் சீட்டுக்கள் விற்பனையில் இருந்து நேரடி பங்களிப்பாக | சபையினால் மஹஜன சம்பத லொத்தர் வருமானத்தில் இருந்து 16.5 சதவீதமும் மற்றும் ஏனைய லொத்தர்களின் விற்பனையில் இருந்து 10 சதவீதமும் திறட்டு நிதியத்திற்கு வழங்குவதற்கு சபை செயற்பட்ட போதிலும் சபையின் வருடாந்த தேறிய இலாபம் திறட்டிய நிதிக்கு செலவு வைக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | திறட்டு நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்ட தொகை 3,841,947,982 ஆகும். | |
| 06. | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 71 மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்டுள்ள செயற்பாட்டு கைநூலின் (Operational Menual) 3.2(i) ஏற்பாடுகளுக்கு முரணாக சபையினால் பொது திறைசேரியின் முகாமைத்துவ திணைக்களத்தின் முன் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது, பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் மாத்திரம் சபையின் 341 அலுவலர்களிற்கு 2023 ஒக்டோபர் மாதம் முதல் முன்நோக்கி 06 சம்பள ஏற்றங்கள் வீதம் வழங்கியிருந்தது. 2023 நிதியாண்டிற்கு உரியதாக மாத்திரம் அந்தசெலவினம் ரூபா 3,107,820 ஆகும். அதேபோன்று, சபையில் கடமையாற்றும் அனைத்து அலுவலர்களிற்கும் 2023 ஆண்டில் மாத்திரம் | 2023 | சுற்றறிக்கையின ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2006 ஆண்டில் வெளியிடப்பட்ட 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின பிரகாரம் அரச கூட்டுத்தாபனம், நியதிச் சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுடமை கம்பனிகளின் ஊழியர் சம்பள திருத்தத்தின் போது உயர் முகாமைத்துவ சம்பளத்தை விட அதற்கு கீழுள்ள சம்பள தொகுதிகளில் (Management Asistant/ Primary Level) சம்பள அளவுகளிற்கு இடையே பாரிய வித்தியாசம் காணப்பட்டமையால் அந்த வித்தியாசத்தை தீர்ப்பதற்காக கீழ் சம்பள தொகுதிகளின் சபையின் ஊழியர்களிற்குஆறு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இது வரை உரிய அங்கீகாரம் பெறப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கடமை படிகள், அபாய படிகள், சீருடை படிகள், உற்பத்திப் படிகள், கருணை படிகள், இலக்கு வைக்கப்பட்ட ஊழியர் ஊக்க நலன்கள், வேன் வண்டிகளில் விற்பனையின் மீது கடமை படிகள் மற்றும் ஊழியர்களிற்கு பணப் பரிசில்களாக மொத்தம் ரூபா 205,608,174 தொகையுடைய படிகள் பொது திறைசேரியின் முகாமைத்து சேவைகள் திணைக்களத்தின் அனுமதியினை பெற்றுக்கொள்ளாது செலுத்தப்பட்டிருந்தன. | | | சம்பள ஏற்றம் 06 இனை வழங்க வழங்குவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் செயல்பட்டன. சபையில் கடமை புரியும் ஊழியர்களுக்கு கொடுப்பனவை வழங்குவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் செய்யப்பட்டுள்ளது. | |
| 12. | 2023 யூலையில் இடம்பெற்ற ராய் (TAAI) மாநாட்டிற்காக ரூபா 10,120,000 கிரயத்தில் அச்சிடப்பட்ட "இலங்கைக்கு விஜயம் செய்க" என பெயரிடப்பட்ட 500 கொடிகளிற்காக எந்தவித பெறுகைச் செயன்முறையோ அல்லது சபை அனுமதியோ மற்றும் தலைவரின் அங்கீகாரத்தின் கீழோ பெறப்பட்டிருக்கவில்லை. எனினும், தரம் மற்றும் குறிப்புரைகள் பேணப்பட்டிருக்காததுடன் திருப்திகரமான அறிக்கை குறித்த திகதிக்கு | 2023 | வேறுபாடுகளிற்காக முன் அனுமதி பெறப்பட வேண்டியதுடன் தற்போதுள்ள வழிகாட்டல்களுடன் இணங்கப்பட வேண்டும். | கொடிகளானது வரையறுக்கப்பட்ட எம்/எஸ் சலசினே லிமிட்டட் கம்பனியிடமிருந்து திணைக்கள குழுத் தீர்மானத்தினூடாக கொள்வனவு செய்யப்பட்டது என உறுதிப்படுத்த விரும்புகின்றோம். கொடிகளுக்கான கொடுப்பனவு அளவு வேறுபாட்டை சரிசெய்த பின்னரும், விலை பேச்சுவார்த்தைக்குப் பின்னரும் சபை அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டது. | கொடிகளின் அளவு வித்தியாசத்தை சரிசெய்து மற்றும் விலை தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்திய பிறகு, சபை அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் பணம் செலுத்தப்பட்டது. |
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு கொடிக்கு வற் இல்லாமல் ரூபா.17,600 ஆகவிருந்ததுடன் இது மதிப்பீட்டை விட அதிகமாகவிருந்தது. | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | ஜேர்மனி மற்றும் சீனாவில் 2023 இல் இடம்பெற்ற மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியவர்களுக்காக விமானச்சீட்டுக்களை கொள்வனவு செய்யும் போது குறித்த நேரத்தில் பெறுகைச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் விலைமனு அழைப்பிற்காக குறைவான நேரம் கொடுக்கப்பட்டமை மற்றும் மதிப்பீட்டை விஞ்சி அனுமதி பெறாமல் கொடுப்பனவு மேற்கொண்டமை சமரசங்கள் மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது. | 2023 | அரசாங்க பெறுகை வழிகாட்டியுடன் இணங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் பொருளாதாரப் பிரச்சனையால் இறுதியில் நிகழ்ச்சித்திட்டங்களை முடிவுறுத்தல் மற்றும் அனுமதியைப் பெற காலதாமதம் ஏற்பட்டமை காரணமாகவிருந்தது. | செலவுகளை குறைக்கும் வகையிலும், திட்டங்களுக்கு அனுமதி பெறுவதில் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்கும் வகையிலும் விமான டிக்கெட்டுகளை விரைவாக வாங்குவதற்கான நடைமுறை இன்னும் செயல்படுத்தப்படவில்லை. |

## 3.50. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

| | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புகள் ரூபா. | ஊரிமை ரூபா. | வரிக்கு முன் மிகை / (பற்றாக்குறை) ரூபா. | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 5,265,351,712 | 866,816,526 | 4,398,535,186 | -88,331,709 | கருத்துரிமை மறுப்பு அபிப்பிராயம் |
| **2022** | 5,928,031,453 | 968,063,847 | 4,959,967,606 | 602,476,875 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 11,154,144,728 | 473,135,490 | 10,681,009,238 | 786,525,231 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வு அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட் படும் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 . | வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக முச்சக்கர வண்டி சாரதிகளுக்கான அதிகாரசபையின் ”ருக் ருக் நிகழ்ச்சித்திட்டத்திற்கான” நிதிப் பங்களிப்பை மீள்நிரப்பு செய்வதற்கு சுற்றுலா அமைச்சு இணங்கியிருந்தது. எனினும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ரூபா 13,227,648 தொகை 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | தொடர்புடைய நிதிப் பங்களிப்பினை அமைச்சிடமிருந்து இருந்து மீள்நிரப்பு செய்யப்படல் வேண்டும் | அமைச்சுடன் கலந்துரையாடல் செய்து இறுதி முடிவு எடுக்கப்படும். | உரிய தொகை 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 2. | சுற்றுலா அமைச்சின் செயலாளர் 2021 நவம்பர் 30 முதல் திசெம்பர் 03 வரை ஸ்பெயினில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பின் வருடாந்தக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்ததுடன் அதிகாரசபையால் செலவிடப்பட்ட ரூபா 1,398,426 தொகையான கிரயம் 2022 செப்தெம்பர் 05 வரையிலும் | 2021 | சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட நிதிப் பங்களிப்பை அமைச்சிடம் இருந்து மீள்நிரப்பு செய்யப்படல் | 2021 நவம்பர் 9 இல் ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு (UNWTO) , சுற்றுலா அமைச்சின் செயலாளர் மற்றும் சுற்றுலா அபிவிரத்தி அதிகாரசபையின் | உரிய தொகை 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட மீள்நிரப்பு செய்யப்பட்டிருக் கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமைச்சினால் மீள்நிரப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். | பணிப்பாளர் நாயகம் ஆகியோரை அமைப்பின் வருடாந்திர கூட்டத்தில் பங்கேற்க எழுத்து மூலம் அழைத்தார். அதன் பிரகாரம் நாங்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கும் , சனாதிபதி செயலாளரின் அங்கீகாரத்திற்கும் உட்பட்டு தேவையான பணிகளைச் செய்தோம். கடந்தகாலங்களில் அவ்வாறு நடைபெற்ற நிகழ்வுகளுக்கு நிகரான கிரயத்தை இந்த அதிகாரசபை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அமைச்சின் செலவினக் குறியீடுகளில் இருந்து அத்தகைய விஜயங்களுக்கான செலவினங்களை ஈடுசெய்வதற்கு அமைச்சிற்கு அறிவிக்கப்படும். | |
| 3 . | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் 6.1 (அ) மற்றும் (ஆ) பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக முன்மொழியப்பட்ட நீண்டகால இலக்குகள் மற்றும் நான்கு வருடத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக முன்மொழியப்பட்ட நீண்டகால இலக்குகள் மற்றும் நான்கு வருடத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | 2020 முதல் சுற்றுலாத்துறைக்கான தேசிய கொள்கையை அமைச்சு தயாரிக்கத் தொடங்கியது. நிறுவன ரீதியான திட்டங்களைத் தயாரிப்பதற்கு | நீண்டகால இலக்குகள் மற்றும் நான்கு வருடத் திட்டம் என்பன 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட தயாரிக்கப்பட்டி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் நாங்கள் நிறுவன ரீதியான தயார்படுத்தலில் இருந்தோம். முன்மொழியப்பட்ட கொள்கையை உருவாக்குவது இறுதி கட்டத்தில் இருக்கும் நிலையில், நாங்கள் அமைச்சுடன் இணைந்து திட்டத்தைத் தயாரிப்பதில் ஈடுபட்டு வருகிறோம், அதற்கமைவாக நீண்ட கால திட்டம் மற்றும் இலக்குகளை அமைச்சருக்கு வழங்குவோம் என்று நாம் நம்புகிறோம். | ருக்கவில்லை. |
| 4. | துன்ஹித எல்ல செயற்திட்டம் 20 சுற்றுச்சூழலுக்கு உகந்த கடைகள், கடையொன்றிற்கு 02 இருக்கைகள், பாதுகாப்பு வேலி மற்றும் பெயர் பலகை ஆகியவற்றை ரூபா 7,488,133 பெறுமதியில் நிர்மாணிக்கும் நோக்கத்துடன் 2017 பெப்ரவரியில் தொடங்கப்பட்டதுடன் 2017 திசெம்பர் 15 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2018 சனவரி 22 இல் உள்ளவாறு 10 கடை அறைகள் மற்றும் பெயர் பலகை மாத்திரமே ரூபா 2,864,289 மொத்த கிரயத்தில நிர்மாணிக்கப்பட்டதுடன் பணிகள் நிறுத்தப்பட்டன. எனினும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 2,350,000 கிரயத்தில் துன்ஹிந்த செயற்திட்டம் - கட்டம் II இன் கீழ் மேலும் 5 கடைகளை நிர்மாணிப்பதற்கு அதிகாரசபை தீர்மானித்திருந்தது, | 2021<br>2022<br>2023 | எல்ல அதிக சுற்றுலாத்தலங்களைக் கொண்ட பிரதேசமாக இருப்பதால், உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதும், திட்டமிட்டவாறு பணிகளை பூர்த்தி செய்ய வேண்டியதும் அதிகாரசபையின் பொறுப்பாகும். | முதற் கட்டமாக சொர்ணதோட்டை பிரதேசசபையினால் 5 கடை அறைகள் நிர்மாணிக்கப்பட்டன. எஞ்சிய பகுதியை கட்டுவதற்கு உள்ளுராட்சி சபையிடம் பணம் இல்லை என தெரிவிக்கப்பட்டது. இல் பணிப்பாளர் சபையிடமிருந்து பெறப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இரண்டாம் கட்டமாக 05 சூழலுக்கு உகந்த கடைகளை நிர்மாணிப்பதற்கு ஊவாமாகாண சுற்றுலா | எதிர்பார்த்ததன் பிரகாரம் செயற்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதற்கு 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆரம்பதிட்டத்தில் 5 அறைகளின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. மேலும், அப்போது அறை ஒன்றுக்கான கிரயம் ரூபா 272,429 ஆக இருந்தது. 4 ஆண்டுகள் தாமதம் காரணமாக, அறை ஒன்றுக்கான கிரயம் ரூபா 470,000 ஆக உயர்த்தப்பட்டது,இது 72 சதவீத அதிகரிப்பாகும். | | | பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டது. அந்த நேரத்தில் கொரோனா தொற்றுநோய், பயணக்கட்டுப்பாடுகளை விதித்தல், மாகாணங்களைத் தனிமைப்படுத்துதல் மற்றும் விலைகளில் உயர்வு காரணமாக ஒப்பந்ததாரர்களைத் தெரிவுசெய்வதில் சிரமம் இருப்பதாக பணியகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், அவ்வப்போது மாகாணங்களை தனிமைப்படுத்த எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், மாகாணசபை பெறுகையை தாமதப்படுத்தியதுடன், ஒதுக்கப்பட்ட பணம் அதற்குப் போதுமானதாக இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது | |
| 5 . | 2018 ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரை அமுலாக்கல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டவிசாரணைகளின் பிரகாரம் சுற்றுலா நிறுவனங்கள் அல்லது சுற்றுலா சேவைகளாகச் செயற்படும் 640 பதிவுசெய்யப்படாத நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டன. இருப்பினும், அவற்றில் 20 நிறுவனங்கள் மாத்திரமே 2022 யூலை 03 வரையிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதன்பிரகாரம் சுற்றுலாத் | 2021<br>2022<br>2023 | அமுலாக்கல் பிரிவு<br>2018 ஆகஸ்ட் முதல்<br>2022 யூலை வரை<br>செயற்பாட்டில்<br>இருந்ததால்,<br>ஒழுங்குமுறை<br>நடவடிக்கைகளும் | அதன் பிரகாரம் 15% இற்கும் அதிகமான நிறுவனங்கள் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் 32 நிறுவனங்களின் பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. நிறுவனத்தின் உரிமைத்துவத்தை நிரூபிக்கும் சட்ட ஆவணம் இல்லாதமை, | சுற்றுலா சேவைகளாக வணிகத்தினை மேற்கொள்ளும் பதிவு செய்யப்படாத நிறுவனங்களின் பதிவு வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . |

| | | |
|---|---|---|
| துறையில்முறைசாரா வணிகத்தை மேற்கொண்ட நிறுவனங்களுக்காக அமுலாக்கல் பிரிவினால் நடாத்தப்பட்ட ஒழுங்குமுறைகள் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இந்த பிரிவின் செயலாற்றல் குறித்துமுகாமைத்துவம் போதுமான மதிப்பீட்டைச் செய்திருக்கவில்லை. மேலும் 2018 ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரை அந்த பிரிவின் ஆலோசகர், விசாரணை உத்தியோகத்தர் மற்றும் சட்டஆலோசகர் ஆகியோருக்கான படிகளாக மாத்திரம் ரூபா 13,397,500 கூட்டுமொத்த தொகைசெலுத்தப்பட்டுள்ளது. | அதனுடன் இணைந்து செயற்படுத்தப்படல் வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டம் இல்லாதமை, தீப்பாதுகாப்புச் சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு நிதித்திறமை இல்லாதமை மற்றும் தேவையான பயிற்சியை வழங்குவதில் நடைமுறை சிக்கல்கள், சுற்றுச் சூழல்பாதுகாப்பு அனுமதிகளை விரைவாகப் பெற்றுக்கொள்ள இயலாமை மற்றும் தற்போதைய சூழ்நிலை காரணமாக உரிய களப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு சிறிது கால அவகாசம் எடுத்துக் கொள்ளப்படுதல் மற்றும் அதற்கான கட்டணத்தை செலுத்த இயலாமை என்பன பதிவுசெய்ய முடியாதமைக்கான சில காரணங்களாகும். பொதுவாக சேவை வழங்குநர்கள் அரசாங்கத்திற்கு வரிகளை செலுத்துவதற்கான எதிர்மறையான எதிர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | செயற்பாடும் அதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. | |
| 6 . | 2023 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்த வியாபாரக் கடன்பட்டோரில் 25 சதவீதமாக இருந்த ரூபா 70,008,231 கூட்டுமொத்தமான வியாபார கடன்பட்டோர் 03 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | கடன்பட்டோரை கடன் காலத்துக்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் காலதாமதமான கடன்பட்டோரிற்கு மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட வேண்டும். | பணிப்பாளர் நாயகம் நிலுவைகளை அறவிடுவதற்கு நிதி முகாமைத்துவ பணிப்பாளர், சட்டம், அபிவிருத்தி மற்றும் ஏனைய விசேட ஊழியர்களைக் கொண்ட குழுவை நியமித்துள்ளார். | கடன் அறவீடு செய்யப்படுகின்றது. |
| 7. | 2023 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு 34 விருந்தினர் இல்லங்களிலிருந்து பெறப்பட வேண்டிய நிலுவை வாடகை வருமானத்தின் மொத்த பெறுமதி ரூபா 29,831,815 ஆகும். இதில் 4 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக உள்ள வாடகை வருமானம் ரூபா 10,167,445 அல்லது மொத்த நிலுவையில் 34 சதவீதமாகும். மேலும் அறவீட்டு செயன்முறை திருப்திகரமான அளவில் இல்லை. மேலும் 04 வருடங்களுக்கு மேலாக வெற்றிடமாக இருந்த 07 விருந்தினர் விடுதிகள் நாளதுவரை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | வாடகை வருமான நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 8. | நுவரெலியா பிரதேசத்தில் உள்ள 106 சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களின் மாதிரிகளில், 62 சதவீதமான 66 நிறுவனங்கள் அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. உண்மையில் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா | 2023 | சுற்றுலா பயணிகளுக்கு சேவை வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முறைசாரா துறை தொடர்பாக முறைசாரா துறையின் மீதான தாக்கத்தை தணிப்பதற்கு மூன்று வருட காலத்திற்குள் விசேட பிரிவொன்றை | இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நுவரெலியா பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன 2024 ஆம் ஆண்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிறுவனங்களில் 81 நிறுவனங்கள் மாத்திரமே இருந்த போதிலும் வெளிநாட்டு இணையதளங்களில் பதிவு செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான சுற்றுலா நிறுவனங்கள் இருந்தன. | | | நிறுவுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் (ADB) அதிகாரசபை கோரியது. எனினும், தற்காலிக பதில்களைத் தவிர, சட்டத் துறைக்கு கூட பணியை செயற்திறனாக கையாளுவதற்கு தேவையான திறன் காணப்படவில்லை. மேலும், முறைசாரா துறைக்குள் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கான சில பொறுப்புக்களை சுற்றுலா பொலிஸாருக்கு அதிகாரசபை வழங்கியுள்ளது. | இடம்பெற்றது. |
| 9 . | நிதி அமைச்சின் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) இற்கு முரணாக அதிகாரசபையால் 2023 ஆம் ஆண்டில் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 27 சந்தர்ப்பங்களில் ரூபா 7,571,560 கூட்டுமொத்தமான செயல்நிமித்த உப கட்டுநிதி ரூபா 100,000 வரம்பை மீறி வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2023 நவம்பர் 06 இல் 960 சபரி ஜீப் சாரதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெறப்பட்டிருந்த ரூபா 2,432,000 தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி நாளதுவரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 | முறையான அங்கீகாரமின்றி ரூபா 100,000 இற்கு மேல் உப கட்டுநிதி விடுவிக்கப்படக்கூடாது. அசல் மற்றும் நம்பகமான விலைப்பட்டியல்கள் மற்றும் விலைச்சிட்டைகள் காணப்படும் போது மாத்திரமே தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அசல் விலைப்பட்டியல்கள் நம்பகத்தன்மை இல்லாவிட்டாலும் நிதிப் பிரிவு கலந்துரையாடலில் உள்ளதுடன் மீதமுள்ள 50 சதவீதம் இன்னும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா. 2,432,000 க்கான ‘‘செயல்நிமித்த’’ (Ad hoc) உப கட்டுநிதி 2024 செப்டம்பர் 30 வரையிலும் கூட தீர்ப்பனவு செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | யால சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் 2014 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 7 கம்பனிகளுக்கு முறையே 35 ஏக்கர் மற்றும் 16.8 ஏக்கர் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் குத்தகைக்கு வழங்கப்பட்ட 7 கம்பனிகளில் 2 கம்பனிகளே செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. இந்த நிலையில், இயங்காத செயற்பாடுகள், குத்தகை வாடகை நிலுவைகள் மற்றும் குத்தகை ஒப்பந்தத்தை நிறுத்துதல் தொடர்பாக இந்த இயங்காத கம்பனிகளுக்கு எதிராக அதிகாரசபை வழக்கு நடவடிக்கையை எடுத்திருந்தது. குத்தகைதாரர் கம்பனியும் உடன்படிக்கைகளை முடிவுறுத்துவது தொடர்பாக அதிகாரசபைக்கு எதிராக வழக்கைத் தாக்கல் செய்திருந்தது. இந்த அனைத்து வழக்குகள் தொடர்பாகவும் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளாமல், தனியார் சட்டத்தரணிகளின் சேவைகள் பெறப்பட்டு, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சட்டக் கட்டணங்களாக ரூபா 3,475,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2021<br>2022<br>2023 | செயற்திட்டங்களின் செயலாற்றல் நெருக்கமாகக் கண்காணிக்கப்பட வேண்டியதுடன் வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். | இந்த முதலீட்டாளர்களில் மூன்று பேர் ஏற்கனவே ஹோட்டல் செயற்திட்டங்களை தொடங்கி செயற்பட்டு வருகின்றனர். ஒரு கம்பனி 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கிறது. ஏனைய இரண்டு முதலீட்டாளர்களில் ஒருவர் கடந்த 3 ஆண்டுகளில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் 30% நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்துள்ளார். அதிகாரசபையின் முதலீட்டாளர் உறவுப் பிரிவு (IRU) மூலம் புதிய வடிவமைப்புக்களுக்கான புதிய அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதை அதிகாரசபை மீண்டும் ஆரம்பித்துள்ளது. நீதிமன்ற வழக்குக்கான தனியார் சட்ட சேவைகள் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பெறப்பட்டன. மேலும், நியமிக்கப்பட்ட தனியார் சட்டத்தரணிகள் | சட்டமா அதிபரின் ஆலோசனை 2024 செப்தெம்பர் 30 வரையிலும் கூட பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில், 2020 ஒக்தோபரில் அமைச்சரவை அங்கீகரித்த முதலீட்டாளருடன் அதிகாரசபை புதிய குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள் ளது. | |
| 11. | அதிகாரசபைக்கு சொந்தமான 05 தேசிய விடுமுறை விடுதிகள் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் முறையே ரூபா 50,067,245 மற்றும் ரூபா 51,269,048 நட்டத்தைச் சந்தித்திருந்த போதிலும் அந்த விடுதிகளின் நட்டத்தைக் குறைப்பதற்கு அதிகாரசபை போதிய கவனத்தை செலுத்தியிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | தேசிய விடுமுறை விடுதிகளை இலாபகரமாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உல்லாச விடுதி முகாமைத்துவ பிரிவு, உற்பத்தித்திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பணியாளர்களின் மாற்றம், வாடிக்கையாளர் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கும் விற்பனையை அதிகரிப்பதற்கும் மெனுக்களை மாற்றுதல் போன்ற பல நடவடிக்கைகளை அமுல்ப்படுத்தியுள் ளது, மேலும் தூய்மையான மற்றும் ஒழுங்கமைக்கப்ப ட்ட பணிச்சூழலை உறுதிப் படுத்துவதற்காக 5S இனை அமுல்ப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டது . | 2024 செப்தெம்பர் 30 வரையிலும் கூட விடுதிகள் நட்டத்தில் இயங்கி வந்தன. |
| 12. | 2020 ஆம் ஆண்டில் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திடமிருந்து தலைவர் அலுவலகத்தின் அலுவலக உதவி உதவியாளரால் கோரப்பட்ட ரூபா 1,072,102 | 2021<br>2022<br>2023 | CCTV முறைமையை முறையாக மீளாய்வு செய்வதற்கும், உள்ளகக் கட்டுப்பாட்டு | அதிகாரசபை மற்றும் SLTPB பொது களஞ்சியங்களில் திருடப்பட்ட ரோணர்கள் மற்றும் நகல்பிரதி | 2024 செப்தெம்பர் 30 வரையிலும் கூட நட்டங்கள் மீள அறவீடு செய்யப்பட்டிருக் |

| | | |
|---|---|---|
| தொகையான ரோணர்கள் கிடைக்கப்பெற்றிருக்காத போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அது தொடர்பாக உள்ளக விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், 2021 ஆகஸ்ட் 05 இல் குறித்த அலுவலக உதவியாளரும் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு இணைக்கப்பட்ட அலுவலக உதவியாளரும் களஞ்சியங்களில் இருந்த ரூபா 1,234,540 பெறுமதியான நகல்பிரதி தாள்களையும் ரோணர்களையும் திருடிச் சென்றுள்ளனர். புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 198,500 பெறுமதியான மடிக்கணனி 2022 ஆகஸ்ட் 24 இல் உல்லாச விடுதி முகாமைத்துவ பிரிவில் காணாமல் போயிருந்தது. அதன் பிரகாரம், ஆரம்ப முறைப்பாடுகள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் பலவீனங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் தீவிர தலையீடு இல்லாததால் மோசடிகள் தொடர்ந்து நிகழும் சூழல் அதிகாரசபையில் உருவாக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகிறது. | முறைமையை பலப்படுத்துவதற்கும் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தாள்கள் சம்பவம் கவில்லை. தொடர்பாக அதிகாரசபையில் ஏற்கனவே ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், அளுத்கடை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. சம்பவத்திற்குப் பின்னர், CCTV முறைமை பலப்படுத்தப்பட்டமை மற்றும் பொறுப்புகள் ஒதுக்கப்பட்டமை, பாதுகாப்புப் பணியாளர்களுக்கு விரிவான வழிகாட்டுதல் வழங்கப்பட்டமை என முக்கியமான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, உல்லாச விடுதி முகாமைத்துவ பிரிவில் உள்ள மடிக்கணனி காணாமல் போன சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அலட்சியத்தின் அடிப்படையில் பொறுப்பான அதிகாரிகளுக்கு குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு, ஒழுக்காற்று விசாரணை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தொடங்கப்பட்டது. | |
| 13. | பாசிகுடா தேசிய உல்லாச விடுதி வளாகத்தில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு கழிவுநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவுவதற்கு 2011 யூன் 18 இல் தனியார் கம்பனியொன்றுடன் அதிகாரசபை உடன்படிக்கையொன்றை செய்திருந்தது. முறைமையைப் பராமரித்தல், வளாகத்தில் அமைந்துள்ள 14 ஹோட்டல்களில் இருந்து கட்டணத்தை அறவிடுதல் மற்றும் அறவிடப்பட்ட தொகையை மேற்படி தனியார் கம்பனிக்கு செலுத்துதல் என்பன அதிகாரசபையின் பொறுப்புக்களாக இருந்தன. செயற்திட்டத்திற்குத் தேவையான 118 பேர்ச்சஸ் காணியை அதிகாரசபை வழங்கியிருந்தது. 14 ஹோட்டல்களில் இருந்து கம்பனிக்கான கட்டணங்களை அறவிடுதல் மற்றும் பணம் செலுத்துதல் அதிகாரசபையிடம் இருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டு முதல் நாளதுவரை அறவிடப்படாத மீதி ரூபா 412,765,334 ஆகும். எனினும், பெறவேண்டிய தொகையை விஞ்சி ரூபா 421,113,524 தொகையை அதிகாரசபை செலுத்த வேண்டியிருந்தது. 2021 ஏப்ரல் 20 இல் ரூபா 1,644,750 கிரயத்தில் அதிகாரசபைக்கு முறைமையை கையகப்படுத்துவதற்கான மலிவுத்தன்மை பற்றி நிதி ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு தனியார் துறையின் கூட்டுமுயற்சியொன்றிற்கு சலுகைக் கடிதம் வழங்கப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இறுதி முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | விரைவில் இறுதி முடிவுக்கு வந்து, அதிகாரசபைக்கு ஏற்படும் நட்டங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இறுதி அறிக்கை 2023 இல் பெறப்பட்டது. ஆலையை அதிகாரசபை கையகப்படுத்துவதற்கு அறிக்கை ஆதரவளிக்காததால், அறிக்கை கண்டுபிடிப்புக்கள் உள்நாட்டில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. பின்னர் லக்கியத மற்றும் அனைத்து ஹோட்டல் உரிமையாளர்களுடனும் ஒரு சாத்தியமான தீர்வை எட்டியது. | ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. | குச்சவெளியில் அமைந்துள்ள 510.086 ஏக்கர் காணி 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக அதிகாரசபையால் கையகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இவற்றில் 35 ஏக்கர் காணிகள் மாத்திரமே 2020 ஆம் ஆண்டில் 2 கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் 14 ஏக்கர் காணிகள் 2021 மே மாதத்தில் மற்றொரு கம்பனிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. எனினும், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு 3 குத்தகை கம்பனிகளில் ஒரே ஒரு கம்பனி மாத்திரமே செயற்பாட்டில் இருந்தது. | 2021<br>2022<br>2023 | குத்தகை காணிகளுக்கு திறமையான முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும், செயற்பாடுகளை முன்கூட்டியே தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், முதலீட்டாளர்கள் தங்கள் செயற்திட்டங்களை முன்கூட்டியே தொடங்குவதற்கு அத்தியாவசிய வசதிகள் வழங்கப்பட வேண்டும். | குறிப்பிட்டவாறு அதிகாரசபையுடன் குத்தகை உடன்படிக்கைகளை செய்துள்ள 3 கம்பனிகளைத் தவிர, இந்த ஆறு முதலீட்டாளர்களுக்காக மொத்தம் 79 ஏக்கர் ஒதுக்கப்பட்ட 3 புதிய முதலீட்டாளர்களுடன் மேலும் 3 குத்தகை உடன்படிக்கைகளையும் அதிகாரசபை கைச்சாத்திட்டது. அதுமட்டுமின்றி, முறையான நடைமுறையைப் பின்பற்றி மேலும் 36 ஏக்கர் காணியை மேலும் 3 முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளன. தற்போது, ஒரு முதலீட்டாளர் ஹோட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார், மேலும் அவர்களது செயற்திட்டங்களைச் அமுல்ப்படுத்துவதற்கு ஏனைய 5 ஒப்பந்த முதலீட்டாளர்களுடன் நாங்கள் தொடர்ந்து கலந்துரையாடி வருகிறோம். குச்சவெளி கடற்கரை உல்லாச விடுதிப் | நிலைமை அவ்வாறே காணப்படகின்றது மற்றும் குச்சவெளி கடற்கரை ஓய்வு விடுதிகளுக்கு 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட நீர் வழங்கல் மீளமைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பகுதிக்கு நீர் வழங்கல் இல்லாமையே இங்கு எழும் பிரதான பிரச்சனையாகும். இதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடம் (NWSDB) கோரிக்கை விடுத்துள்ளோம். | |
| 15. | 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கல்பிட்டியவின் 12 தீவுகளில் 2056.73 ஏக்கர் காணிகளை சுற்றுலா நடவடிக்கைகளுக்காக இலவச மானியமாக அதிகாரசபை பெற்றுள்ளது.<br><br>அந்த 12 தீவுகளில், 2010, 2011, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 10 தீவுகளுக்குச் சொந்தமான 668.69 ஏக்கர் காணிகள் மாத்திரமே 07 கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. எனினும், 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் அந்த கம்பனிகள் எதுவும் செயற்படத் தொடங்கியிருக்கவில்லை. மேலும், 2018 முதல் 2024 வரை கல்பிட்டியவில் குத்தகைக்கு விடப்பட்ட 10 தீவுகள் தொடர்பான ஏழு குத்தகைதாரர்களிடமிருந்து ரூபா 92,959,827 தொகையை அதிகாரசபை அறவிடத் தவறியிருந்தது. | 2021<br>2022<br>2023 | குத்தகை தீவுகளுக்கு திறமையான முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும், உரிய அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுடன் கூட்டிணைவதற்கும் மற்றும் செயற்பாடுகளை முன்கூட்டியே தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முதலீட்டாளர்கள் தண்ணீர் பங்களாக்களுக்கு உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாதமை, மீனவ சமூகங்களின் பிரச்சனை, தீவுகளின் அளவு போதுமானதாக இல்லாதமை போன்ற காரணங்களால் செயற்திட்டங்கள் தாமதமாகியிருந்தன. 2023 மே மாதத்தில் SLTDA 4 முதலீட்டாளர்களுடன் மேலும் 4 குத்தகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தது.<br><br>எனினும், உட்கட்டமைப்பு வரம்புகள் மற்றும் அங்கீகாரங்களில் தாமதங்கள் காரணமாக, தொடங்கப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் எதிர்பார்த்ததை விட மெதுவாக | 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உள்ளது. | |
| 16. | அதிகாரசபையினால் 2019 இல் ரூபா 61,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மன்னாரில் உள்ள காணியின் உரிமைத்துவத்தை சுவீகரிப்பதற்கு நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 2022 2023 | காணி கையகப்படுத்தும் செயன்முறை பின்தொடரப்பட்டு காணி முன்கூட்டியே கையகப்படுத்தப்பட வேண்டும். | இந்த ரூபா 61,000,000 தொகை DS மன்னாரில் உள்ள தீம் உல்லாச விடுதியை அபிவிருத்தி செய்வதற்காக அதிகாரசபையால் இனங்காணப்பட்ட காணியை கையகப்படுத்தும் நடவடிக்கையை ஆரம்பிக்கும் நோக்கத்திற்காக DS மன்னார் நகரத்தில் வைப்பிலிடப்பட்டது. தற்போது பிரிவு 2 அறிவிப்பு வெளியிடப்பட்டதுடன் தடயமறிதல் கணக்கெடுப்பும் பூர்த்தியடைந்திருந்தது. காணி அமைச்சின் செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்க DS மன்னார் நகரமானது முன்னோக்கி செல்லும் வழிகள் தொடர்பான மேலதிக தகவல்களை வழங்கியிருந்ததுடன் இந்த விடயம் தொடர்கிறது, அதனை நாங்கள் நெருக்கமாக பின்தொடர்ந்து வருகிறோம். | 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட கையகப்படுத்தல் செயல்முறை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 17. | ரூபா 39,227,275 தொகையான காணியை கையகப்படுத்துதல் மற்றும் ரூபா 12,264,582 தொகையான கட்டிடங்களின் நிர்மாணம் தொடர்பாக 04 ஆண்டுகளுக்கு முன்னர் | 2021 2022 2023 | கொடுக்கப்பட்ட பணி பூர்த்தியடைந்ததும் முற்பணத்தை உடனடியாக தீர்ப்பனவு | இந்த முற்பணங்கள் சுற்றுலா வலய அபிவிருத்தி முற்பணக் கணக்கு - 633 | முன்பணங்கள் 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட தீர்ப்பனவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்ட முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இல் உள்ளன. தெட்டுவ லேக் உல்லாச விடுதி செயற்திட்டம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. எனினும், DS பெந்தோட்டை மற்றும் CEA இடமிருந்து செயற்திட்டப் பணி நிறைவடைந்ததைக் குறிக்கும் உறுதிப்படுத்தல் கடிதங்களை நாங்கள் இன்னும் பெற்றுக்கொள்ளாததால் இந்தக் கணக்கில் ரூபா 1,109,000 கூட்டுமொத்தம் உள்ளது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏனைய செயற்திட்டங்கள் பூர்த்தியடையும் வரை அவற்றை மூலதனமாக்க முடியாது. இறுதி செய்யப்பட்டவுடன் அவை அதற்கேற்ப மூலதனமாக மாற்றப்படலாம். | செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 18. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2018 யூன் 06 இல் ரூபா 39,151,500 கூட்டுமொத்த கிரயத்தில் 18 மாதங்களுக்குள் 07 எண்ணிக்கையிலான சுற்றுலா அபிவிருத்தி வலயங்களின் பிரதான திட்டங்களை தயாரிப்பதற்காக 2019 பெப்ரவரி 13 இல் அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை (MOU) மேற்கொண்டிருந்தது. எனினும், எல்ல மற்றும் அருகம்பே ஆகியவற்றுக்கான இரண்டு | 2023 | சுற்றுலா அபிவிருத்தி பிரதான திட்டங்களை முன்கூட்டியே தயாரித்து இறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தற்போது, இந்த சிக்கல்களில் பெரும்பாலானவை தீர்க்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் UDA மூலம் பணியை பூர்த்திசெய்வதற்கு உத்தேசித்துள்ளோம். ஒவ்வொரு TDMP இலும் அமுல்ப்படுத்துவதற்காக குறுகிய | வேலைகள் 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரதான திட்டங்கள் மாத்திரமே அத் திகதியில் உள்ளவாறு முறையே 2020-2030 மற்றும் 2021-2030 காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டிருந்தன. UDA இற்கு 05 திட்டங்களை தயாரிப்பதற்காக ரூபா 18,400,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மேற்படி திட்டங்களில் செயற்பாடுகள் மற்றும் இலக்குகளுக்கு எதிராக ஒரு திட்டவட்டமான காலப்பகுதி உருவாக்கப்பட்டிருக்காததுடன் இதற்காக அமைச்சகங்களுக்கு இடையிலான குழு நாளதுவரை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த சுற்றுலாப் பகுதிகளில் நீண்டகாலமாக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு பராமரிக்கப்படாமல் இருந்தது. | | | கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை தெளிவாக இனங்காணுமாறு UDA இற்கு கோரிக்கை விடுத்துள்ளோம். TDMPs இன் பிரகாரம் குறித்த பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணங்கள் மூலதனச் செலவினங்களில் அரசாங்கத்தின் கட்டுப்பாடு.: தடுப்பு மற்றும் அமுல்ப்படுத்தும் பெரும்பாலான நிறுவனங்களில் நிதி / நிதி பற்றாக்குறை என்பனவாகும். ருனுயு இற்கான கொடுப்பனவுகள் தொடர்பாக, மேற்கொள்ளப்படும் பணியின் அடிப்படையில் மாத்திரமே கொடுப்பனவுகள் விடுவிக்கப்படுகின்றன என்பதை குறித்துக் கொள்ளவும். | |
| 19. | அனுராதபுர தேசிய விடுமுறை விடுதி சமீபத்தில் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும் சுவர்களில் அதிகமான நீர் கசிவுகள், தரம் குறைந்த குளியலறை பொருத்துக்களை பயன்படுத்துதல், சேதமடைந்த கதவுகள் மற்றும் உட்கூரைகள் போன்றவற்றின் காரணமாக, கணக்காய்வில் அந்தக் | 2023 | உல்லாச விடுதியின் தரத்தை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பு பிரச்னைகளை தீர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | NHR - அநுராதபுரம் உல்லாச விடுதியுடன் படிப்படியாக பராமரிப்பு மற்றும் தர பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதற்கு குறிப்பிடத்தக்க | உல்லாச விடுதியின் தரத்தை மேம்படுத்தவும், பராமரிப்பு பிரச்னைகளை தீர்க்கவும் தேவையான நடவடிக்கைகள் இன்று வரையிலும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கட்டிடத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை உத்தரவாதமளிக்க முடியவில்லை. மேலும், 2020 ஆம் ஆண்டு முதல் பல்பணி தொழில்நுட்ப வல்லுநர்கள் இல்லாத காரணத்தால் உல்லாச விடுதியின் பராமரிப்பு சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், உல்லாச விடுதியில் 52 அறைகள் காணப்படுகின்ற போதிலும் CCTV முறைமை மற்றும் மின்பிறப்பாக்கி நிறுவப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உல்லாச விடுதியின் செயற்பாட்டில் ரூபா 8,321,156 நட்டம் ஏற்பட்டிருந்தது. | | | நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். பராமரிப்புப் பணிகளைத் திறமையாகக் கையாள்வதற்கு பல்தர கடமை தொழில்நுட்பவியலாளர் ஒருவரை நியமிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி மனிதவள பிரிவிற்கு பலமுறை தெரிவிப்பதும் இதில் உள்ளடங்குகிறது. மேலும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக வெளித் தரப்பினரை பணிக்கமர்த்தும் செயன்முறையில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம், இது ஒட்டுமொத்த பராமரிப்புத் தரத்தை மேம்படுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டைக் குறிக்கிறது. | எடுக்கப்படவில்லை. |
| 20. | பண்டாரவளை தேசிய விடுமுறை விடுதி அதிகாரசபையின் கீழ் பதிவுச் சான்றிதழைப் பெற்றிருந்த போதிலும் பதிவு செய்வதற்குத் தேவையான தேவைப்பாடுகளை இது பூர்த்தி செய்திருக்கவில்லை. மேலும், இந்த உல்லாச விடுதி சரியான முறையில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. குடிசை வீடுகள், சமையலறை, பிரதான கட்டிட சிறுவர் பூங்காவின் முகப்பு மற்றும் தோட்டம் என்பன நீண்ட காலமாக திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. தளபாடம் மற்றும் உபகரணங்களும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலை | 2023 | உல்லாச விடுதியை தரம் உயர்த்தி இலாபம் ஈட்டும் அலகாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது உல்லாச விடுதி முகாமைத்துவ பிரிவு (வியாபார உல்லாச விடுதிகள்) சான்றிதழை பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் உள்ளது. உல்லாச விடுதிகளை புதுப்பிப்பதன் மூலம் தரத்தை உயர்த்துவதற்காக நாங்கள் தற்போது CECB (மத்திய பொறியியல் | 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏற்பட்டுள்ளது. இது அதிகாரசபைக்கு மோசமான பிம்பத்தை உருவாக்கியிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்கு ரூபா 3,198,422 நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. | | | உசாத்துணைப் பணியகம்) இடமிருந்து சேவைகளைப் பெற்றுள்ளோம். | |
| 21. | எல்ல சுற்றுலா வலயத்தின் முக்கிய புள்ளிகளில் தேவையான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பது தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ராவண எல்ல பிரதேசத்தில் விளக்குகள் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், எல்ல புகையிரத நிலையத்தில் போதுமான இருக்கை வசதிகள், சுகாதார வசதிகள், சுற்றுலாப் பயணிகளுக்கான தொலைபேசி சார்ஜ் செய்யும் அலகு மற்றும் புகையிரத நேர அட்டவணை காட்சிப்படுத்தல் என்பன காணப்படவில்லை. | 2023 | எல்ல சுற்றுலா அபிவிருத்தி பகுதியில் வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 22. | அதிகாரசபைக்கு சொந்தமான 37 விருந்தினர் இல்லங்களில், 9 விருந்தினர் இல்லங்கள் இரண்டு முதல் எட்டு ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கவில்லை, எனவே சொத்து குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | 2021<br>2022<br>2023 | முதலீட்டு சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | இது 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட குறைபயன்பாட்டில் உள்ளது. |
| 23. | தெட்டுவவில் உள்ள சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான காணி சுவீகரிப்பு தொடர்பாக ரூபா 173,159,909 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் காலி மாவட்ட செயலாளரின் 2017 யூன் 20 ஆம் திகதிய டிபிஎஸ்/எல்என்டி/03/பீஏஎன்/பொது ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் செயன்முறை பூர்த்தி | 2021<br>2022<br>2023 | முதலீட்டு சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கட்டம் 1 இல் ரூபா 500,000,000 ஐ இலங்கைக்கு மாற்றுவதற்கு அப்போதைய பிரதமர் மற்றும் சுற்றுலா அமைச்சின் நிபந்தனையை நிறைவேற்றத் தவறியதால் | அபிவிருத்தி திட்டங்கள் 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்கள் அங்கு 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | மலேசிய முதலீட்டாளர் செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டது. மேலும், முதலீட்டாளர்களை கவரும் வகையில் எல்லை நிர்ணய அனுமதி மற்றும் அத்துமீறலைத் தவிர்ப்பது தொடர்பாக அதிகாரசபை தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. | |
| 24. | பிபில ஓய்வு இல்லம் 17 ஆண்டுகளுக்கும் மேலாக ஆக்கிரமிப்புக்கள் மற்றும் வளாகத்தின் பாதுகாப்பு குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் கைவிடப்பட்டிருந்தது. அதன் மூலம், 2016 நவம்பர் 02 முதல் 2023 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் முதலீட்டாளரிடமிருந்து பெறப்படக்கூடிய ரூபா 10,462,466 தொகையான மொத்த வாடகை வருமானம் மற்றும் ரூபா 40,000,000 பெறுமதியான முதலீடு என்பன அதிகாரசபையால் இழக்கப்பட்டிருந்தன. | 2023 | ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, ஓய்வு இல்லத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும், ஓய்வு இல்லத்தை முறையாக குத்தகைக்கு விடல் வேண்டும் அல்லது இலாபகரமாக செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 25. | 1993 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்த றாகல ஓய்வு இல்லம், 1998 ஆம் ஆண்டில் தனியார் தரப்பினருக்கு ரூபா 5,167 மாதாந்த வாடகையில் குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் இதில் 2001 ஆம் ஆண்டு முதல் குத்தகைதாரரால் செலுத்தப்படாத ரூபா 697,546 தொகையான மொத்த வாடகை பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் பதிவழிப்பு செய்யப்பட்டிருந்தது. 2010 இல் | 2023 | ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, ஓய்வு இல்லத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும், ஓய்வு இல்லத்தை முறையாக குத்தகைக்கு விடல் வேண்டும் அல்லது இலாபகரமாக செயற்திறனாக பயன்படுத்த | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இந்த வளாகம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, ஓய்வு இல்லத்தின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டது. அதே நேரம், ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கு 2022 இல் நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 23 இல் கணக்காய்வால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது ஆக்கிரமிப்பு இன்னும் அகற்றப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வின் போது ஓய்வு இல்லத்தின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முடியாதிருந்தது. | | வேண்டும். | | |
| 26. | 2021 ஜனவரி 01 இல் யால நுழைவு வாயில் மற்றும் உல்லாச விடுதி அலுவலக கட்டிடத்தை ரூபா 55,000,000 கிரயத்தில் நிர்மாணிப்பதற்கு அதிகாரசபை திட்டமிட்டிருந்தது. வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் முன் அனுமதி இல்லாத காரணத்தினால் அதனை ஆரம்பிக்க முடியவில்லை. | 2022<br>2023 | மூலதன செயற்திட்டங்கை ள நெருக்கமாகப் பின்தொடர்ந்து பயனுள்ள முறையில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, அனைத்து CAPEX செயற்திட்டங்களு ம் அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்டதால் , இந்த செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. தற்போது 2024 ஆம் ஆண்டில் நுழைவாயிலின் கட்டமைப்புடன் செயற்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளோ ம். நுழைவு கட்டமைப்பிற்குப் பின்னர் அலுவலக கட்டிடம் 2025 இல் திட்டமிடப்படும். | ஒப்பந்தத்தில் எவ்வித பௌதீக ரீதியாக முன்னேற்றமும் அடையப்பட்டிரு க்கவில்ஹைல. |

### 3.51. சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புகள் ரூபா. | மூலதனம் ரூபா. | வரிக்கு முன் - மிகை / (பற்றாக்குறை) ரூபா. | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 1,113,115,238 | 105,647,876 | 1,007,467,362 | -176,422,955 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 1,216,711,648 | 98,155,947 | 1,118,555,701 | 125,872,269 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 1,534,824,128 | 85,861,665 | 1,448,962,463 | 417,479,936 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வு அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய பிஈடி 03/2018 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2021 திசெம்பர் 15 ஆம் திகதிய பிஈடி 03/2021 இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் , 2021 ஆம் நிதியாண்டில் நட்டம் அறிக்கையிடப்பட்டு 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்த நட்டம் குறைவடைந்துள்ள நிறுவகங்களின் ஊழியர்களிற்கு ரூபா 5000 மிகையூதியம் வழங்கப்பட முடிந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு ஊழியருக்கும் ரூபா. 13,500 தொகை வீதம் மிகையூதியமாக ரூபா 2,493,000 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டுள்ளது. | 2021 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டில் ஊழியர்களின் பொருளாதாரச் சிரமங்கள், ஊழியர் சங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் மற்றும் நிறுவகத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அந்தப் பணத்தை வழங்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. | கூடுதல் கட்டணம் இதுவரை வசூலிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் 13 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் நிறுவகத்தினால் பயன்படுத்தப்பட்டு வரும் கொழும்பு மற்றும் அனுராதபுரத்தில் உள்ள இரண்டு காணிகளுக்கு நியாயமான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்தக் காணிகளின் உரிமைத்துவத்தை நிறுவகத்தின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை அல்லது 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்படி காணிகள் தொடர்பான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022<br>2023 | அந்த காணிகளின் உரிமைத்துவத்தை SLITHM இற்கு மாற்றுவதற்கும், காணியின் பெறுமதிகளை முன்கூட்டியே கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணிகளை உரிமையில்லாமல் சொத்துகளாக அங்கீகரிக்க முடியாது. | காணிகளின் உரிமை இன்னும் மாற்றப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | மீளாய்வாண்டில் ஹோட்டல் பாடசாலையின் பல்வேறு கற்கைநெறிகளுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 11,788 ஆக இருந்ததுடன் 5,912 விண்ணப்பதாரர்கள் அல்லது 50 சதவீத விண்ணப்பதாரர்கள் கற்கைநெறிகளுக்கு பதிவு செய்யப்பட்டிருந்தனர். வகுப்பறைகளுக்கான இடப்பற்றாக்குறையே இந்நிலைமைக்கு முக்கிய காரணம் என்பது கணக்காய்வின்போது அவதானிக்கப் பட்டது. இருப்பினும், தீர்வொன்றை இனங்கண்டு அதிக கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நிறுவனத்தின் நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.மேலும், கிராமப்புறங்களில் உள்ள ஹோட்டல் பாடசாலைக் கிளைகளுக்கு அந்த வகுப்பறைகளில் முழுமையாக இடமளிக்கும் வகையில் விடுதி வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | விடுதிகள் உள்ளிட்ட திறன் மேம்பாட்டுடன் பாடசாலையின் வசதிகளை மேம்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வார நாள் மற்றும் வார இறுதி கற்கைநெறிகள் எனப் பல்வேறு நிறுவனங்களால் கோரப்படும் சில கற்கைநெறிகள் எமது நிறுவனத்தில் உள்ள விரிவுரையாளர்களால் எமது நிறுவனத்தில் உள்ள இடத்தை அதிகபட்சமாகப் பயன்படுத்தி, அவர்களது நிறுவன வளாகத்திற்குள் நடாத்தப்படுகின்றன. எமது நிறுவனத்தினால் நடாத்தப்படும் பிரதான பாடநெறிகளுக்கு மேலதிகமாக குறுகிய கால பாடநெறிகளை அறிமுகப்படுத்தி பிராந்திய பாடசாலைகளுக்கு தேவையான பௌதீக வளங்களை வழங்கி எமது நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்காக செயற்பட்டு வருகின்றோம். | இதுவரை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 4. | மீளாய்வாண்டின் போது மாணவர்களுக்கான செய்முறை பயிற்சிக்காக பயன்படுத்தப்படும் சமுத்ரா ஹோட்டலுக்கான சந்தைப்படுத்தல் திட்டத்திற்கான தயாரிக்கப்படவில்லை மற்றும் சமுத்ரா ஹோட்டலில் அறைகளின் வசதிகள் மற்றும் சௌகரியம் என்பன திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. | 2023 | சமுத்ரா ஹோட்டலுக்கான சந்தைப்படுத்தல் திட்டமொனறு தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் அறைகளின் வசதிகள் மற்றும் சௌகரியம் என்பன மேம்படுத்தப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இன்றுவரை தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 5. | இது 494 இரவு அறைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டது, அதாவது 2023 ஆம் ஆண்டில் மொத்தம் 4,380 இரவு அறைகளில் 11 சதவீதம் பயன்படுத்தப்பட்டது. | 2023 | வருமானத்தை ஈட்டுவதற்கு ஹோட்டல் பொருளாதார ரீதியாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தப்படல் | திருத்தம் செய்யும் பணிகள் 2023 ஆம் ஆண்டில் நிறைவடைந்தது. | இன்று வரையிலும் ஹோட்டல் பொருளாதார ரீதியாகவும் விளைதிறனாகவும் வருமானத்தை ஈட்டுவதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வேண்டும். | | பயன்படுத்தப்படவில்லை. |
| 6. | 2014 இல் சுற்றுலாத்துறை பொலிஸ் பிரிவிடமிருந்து பெற வேண்டிய ரூபா. 3,192,000<br><br>தொகையான வாடகை வருமானம் வருமானமாக இனங்காணப்பட்டு பெறவேண்டிய கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் இந்தத்<br><br>தொகையின் அறவீட்டுத் தன்மை நிச்சயமற்றதொன்றாக காணப்பட்டது. எனினும், அதற்கான நட்டக்கழிவு பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், அவர்கள் வளாகத்தைப் பயன்படுத்தியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை வாடகை வசூலிக்கப்படவில்லை. | 2021<br>2022<br>2023 | கணக்குகளில் சரியான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும் மற்றும் குறிப்பிட்ட விடயங்களை தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | AMC பரிந்துரையின் பிரகாரம், 2013-2014 இற்கான வாடகை நிலுவை மற்றும் 2015-2022 இற்கான செலவுகளையும் அறவிடுவதற்காக கோரிக்கை கடிதம் SLTDA இற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அந்தத் தொகையானது இன்று வரை மீள அறவீடு செய்யப்படவில்லை. |
| 7. | சலவைக் கடன்பட்டோரிடமிருந்து ரூபா. 305,350 மற்றும் சமுத்ரா ஹோட்டல் கடன்பட்டோரிடமிருந்து ரூபா. 25,678,878 ஆன பெற வேண்டியவைகள் மீளாய்வாண்டின் இறுதியில் கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. ரூபா. 25,984,228 ஆன தொகை 24 மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் இருந்த போதிலும், மேற்படி பெற வேண்டிய நிலுவையில் நிதி அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளரிடமிருந்து ரூபா. 4,068,000, பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து ரூபா. 5,140,571, SLTDA இலிருந்து ரூபா. 3,583,010 மற்றும் SLTPB இலிருந்து ரூபா. 5,723,382 என்பன அடங்கி இருந்தன. | 2021<br>2022<br>2023 | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தற்போது மீள அறவிடும் செயல்முறை நடைபெற்று வருகின்றது. உள்ளக நிறுவனங்களுக்கு இடையே நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மீதிகளுக்கான கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. | இதுவரை மீள அறவீடு செய்யப்படவில்லை. |
| 8. | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்காமல், சலவை மற்றும் விரிவுரைகளை மேற்பார்வையிடுவதற்காக | 2023 | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு தேவையான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வருகை தரும் விரிவுரையாளர் பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூபா. 500 வீதம் ஒரு நாளைக்கு அதிகபட்சம் 6 மணிநேரத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையின் அங்கீகாரத்தின் கீழ் அதிகபட்ச மாதாந்த உச்சவரம்பு ரூபா. 300,000 வரையாக இந்த மணிநேர வீதம் ரூபா 3100 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனால் அவருக்கு ரூபா. 300,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. | | தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 9. | 2014 இல் தகவல் முறைமையினை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா. 3,771,216 செலவிடப்பட்ட போதிலும், நிறுவனத்தின் தேவைப்பாடுகளுடன் பொருந்தாத காரணத்தால் அது கைவிடப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதியிலும் கூட அப்பெறுமதியை நடைமுறை வேலை கணக்கிலிருந்து அகற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | 2021<br>2022<br>2023 | கணக்ககளில் சரியான சீராக்கங்கள் செய்யப்பட்டு மீள அறவீட செய்யப்படல் வேண்டும். | ஏற்பட்டுள்ள தொகை ரூபா. 3,771,216 என பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த தொகையில் ரூபா. 508,486 கொடுப்பனவு செய்யப்படவில்லை (பொறுப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) மற்றும் முறைமையினை (சிஸ்டம்) வெற்றியடையாததால், வழங்குனரிடமிருந்து எவ்வித பதில்களும் வராமையினால், அதையே திரும்ப எழுதுவதற்கு நடவடிக்கை எடுப்போம்.<br><br>முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் நிலுவைத் மீதியான ரூபா.2,262,730 இனை அகற்றல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இது 2023 ஆண்டு கணக்குகளில் சரிசெய்யப்படும். | கணக்குகளில் உரிய சீராக்கங்களை மேற்கொண்டு நட்டத்தை மீள அறவீட செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

### 3.52. இலங்கை மாநாட்டுப் பணியகம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புகள் ரூபா. | ஊரிமை ரூபா. | நிதி விளைவு (மிகை / பற்றாக்குறை) (வருமான வரி இல்லை) ரூபா. | கணக்காய்வு அபிப்பிராயம |
|---|---|---|---|---|---|
| 2021 | 381,446,163 | 8,511,991 | 372,934,172 | 13,133,911 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 2022 | 487,683,357 | 19,366,749 | 468,316,608 | 95,382,436 | முனைப்பழி அற்ற அபிப்பிராயம் |
| 2023 | 524,488,862 | 9,268,936 | 515,219,926 | 36,103,317 | முனைப்பழி அற்ற அபிப்பிராயம |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வு அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்திஜனால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 . | 2019 ஆம் ஆண்டின்போது விபத்தொன்றில் சிக்கிய சுற்றுலா அமைச்சிற்குச் சொந்தமான ஜீப்பொன்றை பழுதுபார்க்கும் செலவிற்காக காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட இழப்பீட்டிற்கு மேலதிகமாக பணியகத்தினால் 2023 நவம்பர் 23 இல் ரூபா 11,516,808 செலுத்தப்பட வேண்டி இருந்தது. பணியகத்திற்கு குறிப்பிட்ட வாகனத்தை கையகப்படுத்தியதன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது, ஆனால் இது தொடர்பாக முன் ஒப்பந்தம் அல்லது கிரயப் பயன் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இவ்விடயம் தொடர்பில் இரு | 2023 | ஏனைய நிறுவனங்களின் சொத்துக்கள் நிதி ரீதியாக தகுதியானதாக இருந்தாலும் அதைப் பயன்படுத்துவதைத் தவிப்பதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனத்தை 5 வருட காலத்திற்கு ரூபா. 11.5 மில்லியனுக்கு பெற்றுக்கொள்வது நிதி ரீதியாக இலாபகரமானது. | வாகனம் இன்னும் பயன்படுத்தப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தரப்பினருக்குமிடையே இதுவரை சரியான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படவில்லை எனவும் அமைச்சின் செயலாளரின் MT/ADM/01/22/2021/CAU-4004 ஆம் இலக்க 2024 பெப்ரவரி 27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிட்ட ஜீப் 05 வருட காலத்திற்கு பணியகத்தின் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. | | | | |
| 2. | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டியின் 2.3 ஆம் பந்திக்கமைய, ஐந்து வருடங்களுக்கு மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும், வியாபார மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு வருடமும் திட்டம் நாளதுவரையாக்கப்பட வேண்டியதுடன், அதற்கடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் , பணியகத்திற்கான மூலோபாயத் திட்டமொன்று 2020-2023 எனும் நான்கு வருட காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்ததுடன், இது இதுவரையிலும் நாளதுவரையாக்கப்படவில்லை | 2022<br>2023 | ஐந்து வருடங்களுக்கு மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வருடமும் நாளதுவரையாக்கப்பட்டு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் | அடுத்துவரும் ஐந்து வருடங்களுக்கான மூலோபாயத் திட்டத்தை தயாரிப்பதற்கும் மற்றும் வியாபார சூழல் மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு வருடமும் திட்டம் நாளதுவரையாக்கல் செய்வதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | திட்டம் இன்றைய திகதி வரையிலும் நாளதுவரையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3.53. இலங்கை முதலீட்டுச் சபை

| | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புகள் ரூபா. | ஊரிமை ரூபா. | வரிக்கு முன் மிகை ரூபா. | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 64,533,067,276 | 1,748,208,899 | 62,784,858,377 | 1,442,548,920 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 68,662,402,758 | 2,175,087,944 | 66,487,314,814 | 3,293,713,748 | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **2023** | - | - | - | | - |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வு அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படும் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | திறைசேரியின் அங்கீகாரமில்லாது 2021 ஆம் ஆண்டின் போது போது ரூபா 666,716,143 தொகையான 10 படிகள் மற்றும் ரூபா 420,800,245 தொகையான 13 கடன்களும் நலன்புரித் திட்டங்களும் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. | 2021 | வேண்டப்பட்ட அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். | 2023 ஒக்தோபர் 11 அன்று, படிகள், கொடுப்பனவுகள் மற்றும் பணியாளர் நலன் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளுக்கு பொது முயற்சிகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் கோரி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் மூலம் கடிதமொன்று அனுப்பப்பட்டது. மேலும், 2024 யூலை 19 அன்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் மூலமாகவும் இந்த விடயம் தொடர்பான நினைவூட்டலொன்று அனுப்பப்பட்டது. | தேவையான அங்கீகாரம் இன்றுவரை கிடைக்கவில்லை. |
| 2. | 2015 மே 25 ஆந் திகதிய PED/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 3.1, 2016 ஒக்தோபர் 26 ஆந் திகதியிட்ட PED/2015(i) ஆம் இலக்க மற்றும் 2020 சனவரி 27 ஆந் திகதிய PED | 2021 | சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றுதல் வேண்டும். | பணிப்பாளர்கள் சபை தொடர்புபட்ட PED சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிகாட்டிகளுக்கு ஏற்ப எரிபொருள் வரம்புகளை நிர்ணயித்துள்ளது. | தேவையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை<br><br>(i) சுற்றறிக்கைக்கு முரணாக எரிபொருள் வரம்புகளானது பின்வருமாறு மாற்றப்பட்டிருந்தது.<br><br>தலைவர்- வேண்டப்பட்டவாறு<br><br>பணிப்பாளர்- 300 லீட்டர்கள்<br><br>நிறைவேற்றுப் பணிப்பாளர்- 170 லீட்டர்கள்<br><br>பணிப்பாளர்- 140 லீட்டர்கள் | | | | |
| | (ii) சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமைபெபற்றுள்ள 33 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 11,134,215 கூட்டு மொத்தமான ரூபா 35,000 மாதாந்த சராசரிப்படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | | சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றுதல் வேண்டும். | 2023 ஒக்தோபர் 11 அன்று, படிகள், கொடுப்பனவுகள் மற்றும் பணியாளர் நலன் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளுக்கு பொது முயற்சிகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் கோரி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் மூலம் கடிதமொன்று அனுப்பப்பட்டது. மேலும், 2024 யூலை 19 அன்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் மூலமாகவும் இந்த விடயம் தொடர்பான நினைவூட்டலொன்று அனுப்பப்பட்டது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 3. | PED/12 ஆம் இலக்க 2003 யூன் | 2021 | ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள | அதிக திறமை கொண்ட தொழில் | 2022 மே 23 அன்று நடைபெற்ற |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 02 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவுக்கு முரணாக ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள ஏற்பாடுகளைக் கருத்தில் கொள்ளாது 2021 ஆம் ஆண்டின் போது ‘‘விசேட அலகு’’ ஒன்றினைத் ஸ்தாபிப்பதற்காக ஒன்பது உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டு அவர்களின் சம்பளங்களானது ‘‘சம்பளங்கள் பேசித் தீர்க்கக்கூடியது’’ என விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது | | நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும். | வல்லுனர்களைக் கவரச் செய்வதனாலும் தொழிலின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு சமாந்திரமாக இருப்பதனாலும் முதலீட்டு சபையின் (BOI) விசேட அலகிற்கு பதவியினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு பிரசுரித்த பத்திரிகை விளம்பரமானது ஊதியம் பேசித் தீர்க்கக்கூடியது மற்றும் சந்தை விலைக்கு சமமானது என்பதனைச் சுட்டிக் காட்டுவதுடன் இப்பதவிக்கு நியமிப்பவர்களுக்கு கொடுப்பதாகத் தெரிவிக்கின்ற சம்பளங்களும் ஏனைய நலன்களும் அரசாங்கத் துறையிலுள்ளவர்களின் சம்பளங்களையும் நலன்களையும் விட அதிகமானது என்பதனை வெளிப்படுத்துகின்றது. | அமைச்சரவைக் கூட்டத்தில், சிறப்புப் பிரிவைக் கலைக்கவும், அதன் அதிகாரிகளின் ஒப்பந்தங்களை நிறுத்தவும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதன்காரணமாக அந்த பிரிவு கலைக்கப்பட்டது. இந்த பிரிவினை நிறுவுவதற்கான நோக்கங்கள் சபையின் ஊழியர்களால் நிறுவப்பட்டதற்கு முன்னரும் பின்னரும் மேற்கொள்ளப்பட்டதால் சிறப்புப் பிரிவை உருவாக்கியதன் நோக்கம் நிறைவேறவில்லை. |
| 4. | 02/2016 ஆம் இலக்க 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 14.1 ஆம் பிரிவுக்கு முரணாக 21 மூன்றாம் மட்ட பதவிகளிலுள்ள 242 உத்தியோகத்தர்களுக்கு விசேட படியாக ரூபா 10,704,620 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது செலுத்துவதற்கு தகமையற்றதாகும் | 2021 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும். | 2023 ஒக்தோபர் 11 அன்று, படிகள், கொடுப்பனவுகள் மற்றும் பணியாளர் நலன் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளுக்கு பொது முயற்சிகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் கோரி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் மூலம் கடிதமொன்று அனுப்பப்பட்டது. மேலும், 2024 யூலை 19 அன்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் மூலமாகவும் இந்த விடயம் தொடர்பான நினைவூட்டலொன்று அனுப்பப்பட்டது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 5. | மல்வத்தை வலயத்திலுள்ள 02 | 2021 | விடயங்கள் தீர்த்துவைக்கப்பட்டு | BOI உடன் ஒரு | BOI இன் சட்டப் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏக்கர் பரப்பளவான காணியும் 3906 சதுர மீட்டர்கள் அளவிலான கட்டிடமும் 2012 ஆம் ஆண்டில் ஒரு கம்பனிக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகவே ரூபா 24.1 மில்லியன் தொகையான தளவாடகை, காணிவட்டம், நீர் மற்றும் கழிவு நீர் கட்டணங்கள் 2014 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | | உடன்படிக்கை செய்வதன் மூலம் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உடன்படிக்கையை செய்து கொள்வதற்கு முதலீட்டாளருக்கு BOI அறிவித்திருந்த போதிலும் முதலீட்டாளர் அதை செய்திருக்கவில்லை. | பிரிவானது சொத்துக்களை உடமையாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது மற்றும் அகற்றல் செய்வதற்கான அறிவித்தல் BOI இன் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 6. | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மிலேனியாவில் ஒரு ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தினை ஆரம்பிப்பதற்கு அப்போதைய முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ரூபா 1,988 மில்லியன் தொகையினை சபைக்கு வழங்கியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | கூட்டுத்தாபன திட்டத்தில் திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.. | 2019 மே 24 முதல் மிலேனியா வலயத்திற்கான உட்கட்டமைப்புகளை வழங்கும் திட்டங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. | 2019 மே 24 அன்று நிலம் உடமையாக்கப்படுவதினை தடுக்கும் வகையில் அமைச்சுக்கு (திறமுறை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு) எதிராக ஹொரணை பிளான்டேஷன் பிஎல்சி வழக்குத் தாக்கல் செய்துள்ளது. |
| 7. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினூடாக (NWS & DB) உரிய | 2021 | நீர் பவுஸர்களுக்கான வாடகைக் கட்டணமானது குறிப்பிடத்தக்க | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் திட்டமிட்டபடி கரசனாகல நீர் வழங்கல் திட்டத்தை | ரன்பொகுனுகம நீர் வழங்கல் முன்மொழிவின் மூலம், வத்துபிட்டிவல |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வேளைக்கு நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக தண்ணீர் பவுசர்களினூடாக வதுபிடிவல வலயத்திற்கு நீரை வழங்குவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது சபை ரூபா 4,384,440 தொகையினைச் செலுத்தியிருந்தது. | | அளவான தொகையாக இருப்பதனால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து (NWS & DB) நீரை பெற்றுக்கொள் வதற்கு ஒழுங்குகள் செய்தல் வேண்டும். | நிறைவு செய்ய முடியவில்லை. | ஏற்றுமதி செயலாக்க வலயத்திற்கான விநியோகம் நாளொன்றுக்கு 400m$^3$ இலிருந்து 700-800m$^3$ ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. |
| 8. | தொடக்கத்திலிருந்து சபையின் 14 வலயங்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடன்படிக்கை செய்திருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 740 ஆக இருந்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மூடப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட, அல்லது உடன்படிக்கை நிராகரிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 440 ஆகும். ஆகவே தொடக்கத்திலிருந்து 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் 285 நிறுவனங்கள் மாத்திரம் செயற்பட்டு வருகின்றன. | 2021 | மூடப்பட்ட, இடநிறுத்தப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 50 சதவீதத்திற்கு அண்மித்ததாகக் காணப்பட்டதனால் இதனை மீளாய்வு செய்து குறைப்பதற்கான பரிகார நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொடக்கத்திலிருந்து இன்றுவரையான 43 ஆண்டுகள்காலத்தில் (1978-2021) மேலே கூறப்பட்ட செயற்திட்டங்களின் 440 உடன்படிக்கைகள் நிராகரிக்கப்பட்டது, மூடப்பட்டது அல்லது செயற்பாடு இடைநிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடதக்கதாகும். மற்றுமொரு கம்பனியுடன் இணைக்கப்பட்ட அல்லது மற்றொரு கம்பனியால் பெறுப்பேற்க்கப்பட்ட 86 செயற்திட்டங்களையும் இந்த 440 செயற்திட்டங்கள் உள்ளடக்குகின்றன. இதன்கருத்தாவது அவை தொழில்நுட்ப ரீதியாக செயற்பாட்டிலுள்ளவைகளாகும். உடன்படிக்கைகளுடன் இணங்கியிருக்காமை,கட்டளைகளைப் பின்பற்றாமை, நிதித்தட்டுப்பாடுகள், கம்பனிகளை கலைத்தல் என்பனவே மிகுதி 354 செயற்திட்டங்களின் உடன்படிக்கைகள் நிராகரிக்கப்படல், மூடப்படல் அல்லது | பலவீனமான கம்பனிகளை அடையாளம் காண்பதற்கு கம்பனிகளின் முன்னரான செயல்திறன் மதிப்பீட்டை BOI மேற்கொண்டது. BOI உடன்படிக்கையில் ஏதேனும் இணக்கமின்மை காணப்பட்டால் நியாயமான காலக்கெடுவுக்குள் இந்த சிக்கல்களை சரிசெய்யுமாறு கம்பனிக்கு தெரிவிக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | செயற்பாடுகள் இடை நிறுத்தப்படுவதற்கு காரணமாகும். இவைகள் BOI இன் வசதியளித்தல்களுக்கு அப்பாற்பட்டவைகளாகும். | |
| 9. | ஒருங்கிணைந்த கணக்கீட்டு மென்பொருள் முறைமையினைப் பொருத்துதல் 2019 ஏப்ரல் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் இது 2023 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,750,000 மேலதிக செலவினை செலவு செய்ய வேண்டி இருந்தது. | 2021 | செயற்திட்டங்கள் உரிய காலத்தில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். | கோவிட்-19 தொற்றுநோய், பணியாளர்கள் பற்றாக்குறை மற்றும் BOI இல் உள்ள வணிக மாதிரியின் சிக்கல் தன்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அமுல்படுத்துவது கால தாமதமானது. | 2019 ஏப்ரலில் BOI இனால் பூர்த்தி செய்யப்படவிருந்த கணக்கீட்டு முறைமையானது 2021 ஆம் ஆண்டுக்குள் ரூபா 3,750,000 தொகையான கூடுதல் செலவுடன் முடிக்கப்பட்டு 2024 மார்ச் முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. |
| 10. | பிங்கிரிய வலயத்தின் மேற்கு எல்லைப் பகுதியினூடாக சங்கிலி - இணைப்பு வேலியை நிர்மாணிக்கும் ஒப்பந்தமானது ஒப்பந்த காலம் 4 மாதங்கள் எனக்குறிப்பிட்டு ரூபா 32,087,075 கிரயத்திற்கு 2019 ஏப்ரல் 29 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. ரூபா 31,814,285 தொகை செலவு செய்யப்பட்டு 20 மாதங்கள் தாமதத்துடன் செயற்திட்டம்சபைக்கு கையளிக்கப்பட்டிரு | 2021 | பணத்திற்கான பெறுமதியை பெற்றுக் கொள்வதற்காக திட்டமிட்டவாறு செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். | பொது வீதி நிர்மாணத்தினை ஆரம்பிப்பதற்காக BOI இற்கு பெறப்பட்ட வயல் காணியின் பௌதீக உடைமையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் (RDA) ஒப்படைக்கப்பட்டது. வரிசை அமைச்சிடமிருந்து பணிக்கு தேவையான நிதிக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை காத்திருக்கிறது. | பிரதேசம் முழுவதும் உள்ள பொது வீதியான தும்மலசூரிய-பிங்கிரிய வீதியை தடை செய்ய முடியாத நிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அந்த வீதிக்குப் பதிலாக புறவழிச் சாலையினை பூர்த்தி செய்த பின்னர் வேலியின் மீதியை ஆரம்பிக்க முடியும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ந்தபோதிலும் பல இடங்களில் வேலியை நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் முறையாகப் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது பௌதீக தெரிவுப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் கிழக்கு எல்லையை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும் பெறுகை நடைமுறையேனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே செயற்திட்டத்தின் குறிக்கோளான காணியைப் பாதுகாத்தல் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 11. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லன்வா சன்ஸ்தா சீமெந்து கூட்டுத்தாபனத்திடத்திடம் இருந்து (தனியார்) பெறவேண்டிய தொகை ரூபா 152,842,821 தொகையாகவிருந்ததுடன் இது செலுத்தப்படாது 2019 இலிருந்து பல வருடங்களாகவிருந்தது. | 2021<br>2022 | -மேற்படி- | இந்த நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, இந்த தொகையை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மொத்த பற்றாக்குறைத் தொகையிலிருந்து ரூபா.30,000,000 மட்டுமே ஈடுசெய்யப்பட்டது. |
| 12. | கூட்டு ஆட்சி மீதான வழிகாட்டிகள் | 2022 | பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை | நிறைவேற்றுப் பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளிற்கான (எஸ்ஓஈ) வழிகாட்டியின் பிரிவு 2.6 இற்கு முரணாக நிறைவேற்றுப் பணிப்பாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம் இயக்குனர் சபையின் செயலாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். | | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | | நிர்வாகம்) இயக்குநர்கள் சபையின் செயலாளர் பதவியில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். |
| 13. | அரச உடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகளின் செயற்பாட்டுக் கையேடு பிரிவு 3.1 மற்றும் 3.2 இற்கு முரணாக சபையானது பொது திறைசேரியின் அனுமதி இல்லாமல் 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 544,263,823 மற்றும் ரூபா 68,039,960 மிகையூதியங்களை செலுத்தியிருந்தது. | 2022 | -மேற்படி- | 2023 ஒக்தோபர் 11 அன்று, படிகள், கொடுப்பனவுகள் மற்றும் பணியாளர் நலன் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளுக்கு பொது முயற்சிகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் கோரி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் மூலம் கடிதமொன்று அனுப்பப்பட்டது. மேலும், 2024 யூலை 19 அன்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் மூலமாகவும் இந்த விடயம் தொடர்பான நினைவூட்டலொன்று அனுப்பப்பட்டது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 14. | சட்டத்திலுள்ள பிரமாணத்தின் பிரகாரம் சூழல் பாதுகாப்பு உத்தரவாதமானது மீள்புதுப்பிக்க வேண்டியபோதும் மீள்புதுப்பிக்க வேண்டிய அனுமதிப்படிவம் உத்தரவாதம் காலாவதியாகும் திகதியிலிருந்து 03 மாதங்களுக்கு முதல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2022 | சூழல் பாதுகாப்பு உத்தரவாதம் புதுப்பித்தல் செய்முறை பின்பற்றப்பட வேண்டும். | சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமத்தினை புதுப்பிக்கும் பணியை உன்னிப்பாகக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது, சட்டத்தின் பிரகாரம் அனைத்து ஏற்றுமதி செயலாக்க வலய நிறுவனங்களுக்கும் புதுப்பித்தல் செயல்முறை நடைபெற்று வருகிறது. | தற்போது, சட்டத்தின் பிரகாரம் அனைத்து ஏற்றுமதி செயலாக்க வலய நிறுவனங்களுக்கும் புதுப்பித்தல் செயல்முறை நடைபெற்று வருகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எனினும், BOI நடவடிக்கையை பின்தொடருவதற்கு தவறியிருந்தது. ஆகையால், சீதாவாக்கை ஏற்றுமதி செயன்முறை வலயத்திலுள்ள 06 தொழில்முயற்சிகள் மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்க தவறியிருந்தது. | | | | |
| 15. | செப்ஸ் பாதுகாப்பு நிறுவனமானது 2022 யூலை , ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் தெரிவு செய்யப்பட்ட மாதங்களிற்காக பாதுகாப்பு உடன்படிக்கையின் 03 ஆம் உறுப்புரிமையின் பிரகாரம் தேவையான பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துவதற்கு தவறியிருந்தது. மேலும், 12 மணித்தியாலங்கள் சிப்ட்கள் வழங்கப்பட வேண்டியபோதும் பற்றுச்சீட்டுக்களின் பிரகாரம் 24 இற்கு மேலதிகமான சிப்ட்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. இது வலயத்தின் பாதுகாப்பை பாதகமாக பாதிக்கும். | 2022 | வலயத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும். | பாதுகாப்பு அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ், முதலீட்டு சபையின் மற்றும் தனியார் பாதுகாப்பு அதிகாரிகள் பிராந்தியத்தில் பாதுகாப்பை மேம்படுத்துகின்றனர். 24 மணி நேரத்திற்கும் மேலாக பாதுகாப்பு படையினரை நிலைநிறுத்துவது போன்ற சூழ்நிலைகளில் அபராதம் விதிப்பது போன்ற பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பாதுகாப்பு போதுமான அளவு அதிகரிக்கப்படவில்லை |
| 16. | ரூபா 2,460 மில்லியன் | 2022 | | | |

| | | | |
|---|---|---|---|
| மதிப்பிடப்பட்ட முதலீட்டுடன் 400 ஏக்கர்களுக்கு மேலாக பரந்துள்ள அரபோக்காவிலுள்ள மருந்து உற்பத்தி வலயத்தினை அமைப்பதற்கு சபையானது 2020 ஆம் ஆண்டில் திட்டமிட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |
| (i) இந்தச் செயற்திட்டத்திற்கு காணி மானியமாக கிடைக்கப்பெற்றமையால் சாத்தியவளக் கற்கைகைய மேற்கொள்ளாமல் தந்திரோபாய சூழல் மதிப்பீடு அறிக்கையினை மாத்திரம் நடாத்துவதன் மூலம் செயற்திட்டத்திற்கு இந்தக் காணி பயன்படுத்தப்பட்டிருந்தது. | முதலீட்டுச் செயற்திட்டமொன்றை தொடங்குவதற்கு முன்னர் சாத்தியவளக் கற்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சமூக-பொருளாதாரத் துறை உட்பட, ஒரு வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கான இடத்தின் பொருத்தம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை நடத்துவதன் மூலம் மூடப்பட்டுள்ளது. | கூடுதல் செலவு ஏற்படும் என்பதன் காரணமாக இதுவரை சாத்திய ஆய்வு நடத்தப்படவில்லை. |
| (ii) 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் கட்டமைப்பின் ஏற்பாடானது பூர்த்திசெய்யப்பட வேண்டியதுடன் 2022 ஒக்தோபர் அளவில் மின்சார வசதிகளின் ஏற்பாடானது | செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021/2022 ஆம் ஆண்டின்போதான கொவிட்-19 பரம்பல் மற்றும் பொருளாதார மந்தம் மற்றும் அரச செலவுகளை கட்டுப்படுத்துவதற்கான அரச கொள்கைகள் போன்ற காரணங்களால் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. | மின் வினியோகத்திற்காக மின் கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் மின் கம்பிகளும் அமைக்கப்பட்டுள்ளன ஆனால் மின்மாற்றிகள் பொருத்தப்படவில்லை. தற்காலிக குடிநீர் இணைப்பு மட்டுமே காணப்பட்டது. உள்ளக கிராவல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 70 சதவீதமாகவும் நீர் வசதிகளின் ஏற்பாடானது 0 சதவீதமாகவும் இருந்ததுடன் நெடுஞ்சாலை வசதிகளிற்கான ஏற்பாடானது மிகவும் மெதுவாகவிருந்தது. | | | | வீதியின் நிர்மாண பணிகள் நிறைவடைந்துள்ளன. |
| | (iii) பிரதேசத்தில் BOI ஆனது முதலீட்டாளர்களை கவருவதற்கு ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடாத்தி அதில் சில முதலீட்டாளர்கள் பங்குபற்றியிருந்த போதிலும் எந்தவொரு முதலீட்டாளரும் முதலிடுவதற்கு முன்வரவில்லை. | | முதலீட்டாளர்களை கவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வலயத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் முதலீட்டாளர்களை ஈர்க்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | BOI ஆனது தற்போது மருந்துத் துறைக்காக ஒதுக்கப்பட்ட 100 ஏக்கர் நிலத்தில் செயலில் உள்ள மருந்துப் பொருள் (API) வலயத்தை நிறுவுவது குறித்து ஆலோசித்து வருகிறது. |
| 17. | ரூபா 4,770 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஏறாவூரிலுள்ள 400 ஏக்கர் காணியில் ஆடைகளுக்கான விசேட கைத்தொழில் வலயத்தினை அமைப்பதற்கு திட்டமிடப்பட்ட கைத்தொழில் வலயம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | 2022 | | | |

| | | | |
|---|---|---|---|
| (i) காணி சுவீகரிப்பிற்கான தீர்மானங்களை எடுப்பதில் ஏற்பட்ட காலதாமதங்களால் இந்த வலயத்தின் நிர்மாணத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிக்காக ரூபா 107,890,674 மேலதிக தொகையை BOI செலவழிக்கவேண்டியுள்ளது. | செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி சுவீகரிப்பு செய்முறையினை நிறுத்துவதற்கு எடுத்த அரசாங்க கொள்கை தீர்மானத்தால் சுவீகரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. | காணியினை சுவீகரிப்பு செய்யும் பணி கால தாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) கடல் வெளியேற்ற முறைமையானது தொடங்கப்பட்டிருந்த போதும் 100 ஏக்கர் அண்ணளவான காணியின் உரிமையானது BOI இற்கு 2022 நவம்பர் 30 அளவிலும் மாற்றப்பட்டிருக்கவில்லை. இந்தக் காணியானது இலங்கை அரசாங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடையவற்றிற்குச் சொந்தமானவையாகும். இலங்கை BOI ஆனது 2022 | காணியை மாற்றும் செய்முறை துரிதப்படுத்தப்பட வேண்டும். | செங்கலடி பிரதேச செயலகத்தின் ஒன்றிணைப்புடன் காணியை மாற்றும் செய்முறை தற்போது நடைபெற்று வருகின்றது. | அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இலவச மானியமாக BOI இற்கு காணியினை மாற்றம் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. மற்றும் காணியினை மாற்றம் செய்யும் செயன்முறை தற்போது நடைபெற்று வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒக்தோபர் மாதமளவில் அளவை வேலைக்காக ரூபா 927,738 செலவினை ஏற்படுத்தியது. | | | |
| (iii) | 2020, 2021 மற்றும் 2022 இல் பிரதேசத்திற்கு முதலீட்டை கவர்ந்திழுப்பதற்கு BOI ஆனது மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்கியிருந்த போதும் இதுவரை ஒரேயொரு முதலீட்டாளர் மாத்திரம் முதலிடுவதற்கு முன்வந்தனர். | முதலீட்டாளர்களை கவர்ந்திழுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏறாவூரில் உள்ள ஜவுளிப் பூங்காவில் (textile Park) ஆரம்பத்தில் ஆர்வம் இருந்த போதிலும், முதலாவது முதலீட்டாளர் முதலீட்டுச் சலுகைகள் தொடர்பான பல சிக்கல்களை எதிர்கொண்டிருந்தார், அவை சமீபத்தில் தீர்க்கப்பட்டன. | முதலீட்டாளர்களிடம் இருந்து சமர்ப்பித்தலும் காணப்படவில்லை. |
| (iv) | 2022 நவம்பர் 30 அளவில் அடிப்படை நீர் வசதிகளின் வேலைகளிற்காக 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்காக ரூபா 16.1 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தபோதும் ரூபா 24 மில்லியன் அதற்காக செலவழிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட செலீனங்களை மீறி 2022 ஆம் ஆண்டளவில் ரூபா 7.9 மில்லியன் செலவழிக்கப்ப | குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டினுள் கிரயம் ஏற்படுத்தப்பட வேண்டும். | 2021 இல் ரூபா. 18,932,400 மதிப்பீட்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டைச் NWS & DB சமர்ப்பித்தது மற்றும் இணைப்புக் கட்டணம் மற்றும் பாதுகாப்பு பிணை வைப்புத்தொகைகளுக்கு மேலதிகமாக ரூபா. 5,055,451 தொகையினை கோரியுள்ளது. | மதிப்பீடுகளை விட அதிகமாக செலவுகள் செய்யப்பட்டுள்ளன. |

ட்டிருந்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18. | புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்கு எந்தவொரு செயற்திட்டங்களும் அடையப்பட வேண்டிய இலக்குகளை நோக்கி துாரளவில் நகரக்கூடிய வகையில் எந்தவொரு செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறுள்ளது. | 2022 | இயலுமான செயற்திட்டங்களிற்காக மேலதிக முதலீட்டாளர்களை கவருவதற்கும் புதிய வலயங்களை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வினிகிரிய EPZ இன் கட்டம I இல் 90.20 ஏக்கர் கைத்தொழில் பகுதியில் இருந்து 35.24 ஏக்கர் நான்கு முதலீட்டு திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | முன் மொழியப்பட்ட மில்லியானா காணி இன்னும் கையகப்படுத்தப்பட வில்லை. |

| வலயம் | மதிப்பிடப்பட்ட தொகை ரூபா. மில் | |
|---|---|---|
| ------ | --------- | |
| மில்லியானா | 13,474 | 2 |
| வினிகிறியா | 2,266 | 1 |
| ஏறாவூர் | 1,750 | 3 |
| அறாவோகா | 2,460 | 2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19. | லக்சுமி வித்தியாலயம் - கட்டுநாயக்காக்கு அருகிலுள்ள 2 ஏக்கர் காணி லக்சுமி வித்தியாலயத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், மேற்கூறப்பட்ட வெளித்தரப்பினருக்கு மாற்றாமலோ அல்லது காணியை குத்தகைக்கு கொடுப்பதற்கு முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடாமலோ கைத்தொழில்துறையற்ற பிரதேசத்தின் கீழ் இந்தக்காணி காட்டப்பட்டிருந்தது. | 2022 | இயக்குனர் சபையின் அனுமதியுடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | BOI ஆனது லட்சுமி வித்யாலயத்திற்கு இந்த ஏற்பாடுகளுக்காக அந்தந்த வரிசை அமைச்சின் மூலம் BOI இற்கு முறையான கோரிக்கையினை சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளது. | 2024 யூலை 22 அன்று லட்சுமி வித்யாலயத்தின் அதிபரிடம் இருந்து ஒரு கோரிக்கை பெறப்பட்டது மற்றும் சம்பந்தப்பட்ட காணியை மாற்றம் செய்வதற்கான BOI இன் பரிந்துரையினை 2024 யூலை 24 அன்று மினுவாங்கொடை வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இதுவரை பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. |
| 20. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 வலயங்களிலுள்ள 773.09 ஏக்கர் காணி வெற்றிடமாகவிருந்ததுடன் இது முதலீட்டார்களுக்காக கைத்தொழில் பிரதேசத்திலுள்ள 30 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும், ஆராவோக்கா( பர்மா வலயம்) மற்றும் 751.7 ஏக்கர் மற்றும் 282.9 ஏக்கர் பிரதேசத்திலுள்ள முறையே பிகிறினியா ஏற்றுமதி வலயக் கட்டம் ஐஐ அவர்களுடைய தொடக்கத்திலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2022 | வெற்றிடக் காணிகளை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முதலீட்டுக்கான வெற்று காணிகளை உள்ளூர் மற்றும் உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு தொடர்ந்து மேம்படுத்தல மேற்கொள்ளப்படுகின்றன. | 2024 செப்தெம்பர் 30 வரையிலும் காணி வெற்றிடமாகவே காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்படாதிருந்தது. மேலும், பொருயாதார வலயத்திற்கு வெளிப்புறத்திலுள்ள 777.11 பரப்பளவுள்ள காணி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாதிருந்தது. | | | | |
| 21. | மிறியாவிலுள்ள ஏற்றுமதி செயன்முறை வலயத்திலுள்ள 10.8 கிலோமீற்றர் உள்ளக வீதியில் 800 மீற்றர்கள் மாத்திரம் ரூபா 516,964,285 கிரயத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 26.5 மீற்றர் தொடக்கம் 33 மீற்றர் வரையிலான வீதியின் நீளமானது ஒட்டுமொத்த 20 மீற்றர் ஒதுக்கத்திலான 7.4 மீற்றர் அகலத்தின் நியமத்தினைவிட உயர்வாகவிருந்தது. | 2022 | வலயங்களிலுள்ள உள்ளக வீதிகள் முறையாக திட்டமிடப்பட வேண்டியதுடன் நிர்மாணிக்கப்பட வேண்டும். | மிறியாவிலுள்ள ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் அபிவிருத்திக்காக BOI இற்கு காணி ஒதுக்கப்படுவதற்கு முன்னர், UDA ஆல் இந்த வீதி நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டது. | வலயத்திற்குள்ளேயான 10.8 கிலோமீட்டர் உள்ளகச் சாலை 2024 செப்டம்பர் 30 க்குள் நிறைவு செய்யப்படவில்லை. |
| 22. | இடர் முகாமைத்துவ நிலையத்தின் (DMC) பயிற்சி நிலையத்தினை தாபிப்பதற்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு (SLRCS) ஒதுக்கப்பட்ட கெப்சின் அருகிலுள்ள 5A 3R 30.1P உடனான | 2022 | இருக்கின்ற காணிகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வழிகளை தெளிவுபடுத்துவதற்கு இரு தரப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் BOI இன் இரு தரப்பினர்களாலும் பரஸ்பர நன்மைகளை பங்கிடும் வகையில் தகுதியான முதலீட்டாளர்களை இனங்காணப்படுவதற்காகவிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் நில வாடகையாக ரூபா.2,047,690 (வரி உட்பட) ஆண்டுக்கான பெயரளவு கட்டணம் வசூலிக்கப்படும் மற்றும் பொருத்தமான முதலீட்டாளர் இன்னும் கண்டறியப்படவில்லை. |

காணியின் துண்டு 2022 ஒக்தோபர் 12 அளவில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.54 அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்

| | மொத்த சொத்துக்கள் | மொத்த பொறுப்புக்கள | உரிமை மூலதனம் | வரிக்கு முன் இலாபம் | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| **2021** | 6,770,160,573 | 6,446,434,836 | 323,725,737 | 96,124,611 | முனைப்பழியுள்ளது |
| **2022** | 7,592,792,156 | 6,754,254,108 | 838,538,048 | 26,921,045 | மறுப்பு அபிப்பிராயம் |
| **2023** | - | - | - | - | - |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் அமுல்ப்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| | **பெறவேண்டிய கணக்குகள்** | | | | |
| 1. | ரூபா 691.23 மில்லியன் கூட்டுமொத்தமான கொங்கிறீட் தளம், நிர்மாணம், போக்குவரத்து விளக்கு முறைமை கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டிய தாமத சேதங்கள், பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பணம் மற்றும் கொள்வனவு முற்பணங்கள் 03 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தன. | 2021, 2022 | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் மூலம் நிலுவை மீதிகளை செயற்திறனாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திட்டமிடல் மற்றும் உற்பத்திப் பரிவின் கீழ் நிதி சேகரிக்கும் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டு நிலுவைப் பணம் அறவீடு செய்யப்படுகின்றது. | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 582 மில்லியன் ஆகும். |
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை** | | | | |
| 2. | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம்<br><br>ரூபா 143.26 மில்லியன் | 2022 | இந்த நியதிச்சட்ட கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் | பணமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் | இந்த தொகையில் ரூபா 105.21 மில்லியன் இதுவரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையான EPF பங்களிப்புக்கள் மற்றும் அதன் மீதான மிகைக் கட்டணங்கள் 2020 முதல் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்பட வேண்டும். | ளது. | தீர்க்கப்பட்டிருக் கவில்லை. |
| | **நிதி முகாமைத்துவம்** | | | | |
| 3. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு அரச வங்கிகளில் இருந்து எடுக்கப்பட்ட காலக் கடன் மீதிகள் ரூபா 1,848.24 மில்லியனாக இருந்ததுடன் பிற்போடப்பட்ட கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 1,727.18 மில்லியனாக இருந்தது. இந்தக் கடன்களின் அடிப்படையில், திறைசேரி பிணையின் கீழ் ரூபா 990.61 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், ரூபா 518.60 மில்லியனுக்கு கூட்டுத்தாபனத்தின் காணிகள் பிணையாக கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டிருந்தது. | 2021, 2022 | புதிய ஒத்திவைப்பு நிபந்தனைகளின் பிரகாரம் கடன் மற்றும் வட்டியை செலுத்துவதில் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். | கூட்டுத்தாபனத்தின் மீள் கட்டமைக்கும் செயற்பாடுகளின் போது சகல கடன்களையும் தீர்த்துவைப்பதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது. | இதுவரை கடன் தீர்த்துவைக்கப் பட்டிருக்க வில்லை. |
| | **வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை** | | | | |
| 4. | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு முதல் ரூபா 2,403 மில்லியன் தொகையான வற் மற்றும் அதன் மீதான மிகைக் கட்டணங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | 2021, 2022 | கூட்டுத்தாபனம் பெறுமதிசேர் வரி சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | கூட்டுத்தாபனம் மீள் கட்டமைக்கப்பட வேண்டி இருந்ததாக அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்ததுடன் அந்த சந்தர்ப்பத்தின் போது இந்த தொகையை | இதுவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தீர்த்து வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| 5. | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு முதல் ரூபா 7.15 மில்லியன் தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் மிகைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021, 2022 | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் கூட்டுத்தாபனம் இணங்க வேண்டும். | -மேற்படி- | -மேற்படி- |
| 6. | 2015 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ரூபா 101.23 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 | பொருளாதார சேவைக் கட்டணங்கள் திருத்தச் சட்டத்துடன் கூட்டுத்தாபனம் இணங்க வேண்டும். | -மேற்படி- | -மேற்படி- |
| | **செயற்பாட்டு செயற்திறனின்மைகள்** | | | | |
| 7. | கூட்டுத்தாபனத்தின் முழுமையான உரித்துள்ள துணைக்கம்பனியான Devcoshowa (Pvt) Ltd சில காலமாக செயற்பாடற்று காணப்பட்டதுடன் 2006 ஆம் ஆண்டில் கம்பனியை கலைப்பதற்கு சபை தீர்மானம் எடுத்திருந்தது. கலைக்கும் செயன்முறை 2023 ஒக்தோபர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021, 2022 | கலைத்தல் செயன்முறையை பூர்த்தி செய்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கையை எடுக்க வேண்டும். | கலைத்தல் செயற்பாடுகளுக்காக சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | கலைக்கும் செயற்பாடுகள் இதுவரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. |

### 3.55 கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை

| | முழு சொத்துக்கள் | முழு பொறுப்புக்கள் | உரிமை மூலதனம் | வரிக்கு முன் இலாபம் / நட்டம் | அபிப்பிராயம |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2021** | 8,315,405,250 | 1,407,335,240 | 6,908,070,010 | 1,575,875,061 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 10,005,066,041 | 460,457,265 | 9,433,394,222 | 2,440,680,754 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 7,764,191,166 | 1,572,701,212 | 6,191,489,954 | 982,500,036 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

**தொகுதி**

| | முழு சொத்துக்கள் | முழு பொறுப்புக்கள் | உரிமை மூலதனம் | வரிக்கு முன் இலாபம் / நட்டம் | அபிப்பிராயம |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2021** | 9,234,911,249 | 88,366,625,483 | (79,131,714,234) | 1,779,698,660 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 11,353,903,138 | 92,390,416,049 | (81,036,512,911) | (2,135,968,851) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 9,790,276,433 | 95,754,121,756 | (85,963,845,323) | (3,884,548,662) | மறுப்பு |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | திட்டத்தின் முழுச் சொத்துக்கள் ரூபா 2,202,748,150 ஆகவும் முழுப்பொறுப்புக்கள் ரூபா 89,457,327,488 ஆகவும் இருந்ததனால் சொத்துக்களை மீகைத்த பொறுப்புக்கள் ரூபா 87,254,579,339 | 2023 | திட்டத்தினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விவசாயிகள் ஓய்வூதியப் பொறுப்புக்கள் வருடாந்தம் அதிகரிப்பதுடன் தவணைப் பணத்தினை அதிகரிக்காது பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது புதிய பங்களிப்பாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தும் நடைமுறைச் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையும் முழு நடைமுறைச சொத்துக்கள் ரூபா 1,092,503,529 மற்றும் முழு நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 2,527,354,554 ஆக இருந்ததனால் நடைமுறைச் சொத்துக்களை மிகைத்த நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 1,434,851,025 ஆக இருந்ததுடன் திறைசேரியின் பங்களிப்பு இல்லாது திட்டத்தினை பேணமுடியாத நிலைமை காணப்பட்டதனால் திட்டத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் பிரச்சினைக்குரியதாகும். | | | கொள்கைகளின் இடிப்படையில் பிரதிபலன்களை அதிகரித்தன் காரணமாக இந்நிலைமை உருவாகியிருந்ததுடன் ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்கத்தின் பாதீட்டின் மூலம் நிதியை ஒதுக்கீடு செய்து விவசாயிகள் ஓய்வூதியக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | சொத்துக்களை மிகைத்த நடைமுறைப் பொறுப்புக்கள் சம்பந்தமாக கவனம் செலுத்தப்படவில்லை. |
| 02. | விவசாயிகளின் சரியான ஆயுள் தரவுத் தகவல்களை நாளதுவரையாக்கும் நடைமுறை இல்லாததன் காரணமாக மரணமடைந்த மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் உரிமை கோராத விவசாயிகளின் ஓய்வூதியம் தொடர்ச்சியாக தபால் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இக்காரணத்தினால் 2023 ஆம் ஆண்டின் போது விவசாயிகளால் பொறுப்பேற்கப்படாததனால் தபால் திணைக்களத்தினால் திருப்பி அனுப்பிய ஓய்வூதியம் ரூபா 259,373,191 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் | 2023 | உரிமை கோரப்படாத பணம் தொடர்பான தகவல்களை நாளதுவரையாக்கி திறைசேரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். | விவசாயிகள் ஓய்வூதிய திட்டம் தொடர்பாக தலைமை அலுவலகத்திற்கு கிடைத்த அனைத்து ஆவணங்களையும் பரீட்சித்துப் பார்த்து முறைப்படியாக தலைமை அலுவலகத்தில் ஏதாவது ஒரு இடத்தில் அல்லது ஆவணக்காப்பகத்தில் களஞ்சியப்படுத்துவதற்கும் அந்த ஆவணங்களின் தகவல்களுடனான கணனிமயப்படுத்திய தகவல் முறைமையை நாளதுவரையாக்குதல் இடம்பெறுகின்றது எனவும் மேலும் தெரிவிக்கிறேன். மாவட்ட கணக்காளர்களால் செலுத்தப்படாத | உரிமை கோரப்படாத பணம் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இறுதியில் அத்திணைக்கத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 81,000,602 ஆகும். ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத விவசாயிகள் தொடர்பான விபரம் பராமரிக்கப்படாமையால் ஆண்டு இறுதி மீதியின் மற்றும் பெற்ற பணத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்தப்படவில்லை. | | | ஓய்வூதிய ஆவணங்கள் இணையவழியினூடாக எங்களுக்கு வழங்கப்படுவதுடன் அதனை முறைப்படியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 03 | ஓய்வூதிய பொறுப்பு ரூபா 5,532,349,026 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான முதலீட்டுப் பெறுமதி ரூபா 793,308,692 ஆக இருந்ததனால் இக்கடப்பாட்டினைத் தீர்த்துவைப்பதற்கு போதியளவு முதலீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 | ஓய்வூதியப் பொறுப்பினைத் தீர்த்துவைப்பதற்கு போதியளவு முதலீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. | கடப்பாடுகளை தீர்த்துவைப்பதற்கு போதியளவு முதலீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 04 | கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டத்தின் மொத்த தேறிய சொத்துக்கள் அடிக்கடி மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததன் அடிபபடையில் திட்டத்தின் மொத்த சொத்துக்கள் தேறுவதன் மூலம் முழுப் பொறுப்புக்களையும் தீர்த்துவைப்பதற்கு முடியாமையின் அடிப்படையில் திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் சச்சரவுத் தன்மையானதாகும். | 2023 | திட்டத்தின் முழு தேறிய சொத்துக்களும் அடிக்கடி மறைப் பெறுமதியாகுவதனை தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இத்திட்டம் சுயநிதியின் அடிப்படையில் செயற்படாததுடன் தவணைப் பணத்தினை தீர்மானிக்கும் போது அரசாங்க நிவாரணத்திற்கு உள்ளீர்க்கப்படுவதனால் இநநிலைமை உருவாகியுள்ளது. அதற்கிணங்க வருடாந்தம் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பொறுப்பு அதிகரித்துச் செல்வதுடன் அதனால் தேறிய சொத்துக்களின் பெறுமதியும் குறைவடைகின்றது. அக்காரணத்தினால் | திட்டத்தின் முழுத் தேறிய சொத்துக்கள் அடிக்கடி மறைப் பெறுமதியயாகுவதனை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளுதல் இடம்பெறவில்லை. | |
| 05 | இலங்கை நனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண கோவை நி.பி 381 இற்கு முரணாக சபையின் 45 வங்கி கணக்குகள் உள்ளடங்கலாக தொகுதியின் 57 வங்கி கணக்குகள் திறைசேரியின் அங்கீகாரம் இல்லாது ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது. | | வங்கி கணக்குகளுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். | சபையினால் கடமைரீதியான கணக்குகளை ஆரம்பிக்கும் போது பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளர் சபைப் பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டு உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. | வங்கி கணக்குகளை திறப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. |
| 06 | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | | | |
| | XII ஆம் அத்தியாயத்தின் 7.5 ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாடு செல்வதற்கான விடுமுறையுடன் எதிரீட்டு விடுமுறை பெற்றுக்கொள்ள முடியாது என்ற போதிலும் சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகத்தினால் 2023 செப்தெம்பர் 10 ஆந் திகதியிலிருந்து 2023 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையான 31 நாட்களுக்காக வெளிநாடு செல்வதற்காக எதிரீட்டு விடுமுறை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | 2023 | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் அறிவுறுத்தல் கடிதங்களின் பிரகாரம் விடுமுறையை கணித்தல் இடம்பெறுவதுடன் தாபன விதிக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து பிரிவுகள் மற்றும் நிபந்தனைகள் அந்த வகையிலேயே சபையின் உத்தியோகத்தர்களின் விடுமுறைக்காக தொடர்புபடுத்தப்படுவதில்லை. அதற்கிணங்க அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரினால் (நிருவாகம் II) பணிப்பாளர் நாயகத்தின் | வெளிநாட்டில் விடுமுறையைக் கழிப்பதற்கு எதிரீட்டு விடுமுறையை பெற்றுக்கொளவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | வெளிநாட்டில் கழித்த காலத்திற்கான விடுமுறை அங்கீகரிக்கப்பட்டது. | |
| 07 | கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி முகாமைத்துவ சேவைகள் தரத்திலுள்ள பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை | | | | | |
| | (i) | 4.3.1(அ) உப பிரிவின் பிரகாரம் காப்புறுதிப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் பதவிக்காக அரசாங்க துறையில்/ கூட்டுத்தாபனத்தில்/சபையில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்தில் 03 ஆண்டுகள் காப்புறுதி செயற்பாடுகள் தொடர்பான அனுபவமுள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 03 ஆண்டுகள் வெளிக்கள மற்றும் நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான அனுபவம் உள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள் | 2023 | ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உதவிப் பணிப்பாளர்களை போதியளவில் சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் வெற்றிடமான பதவிகளுக்காக தகமையுள்ள நபர்கள் முன்வராமை, சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்களின் தகமைகள் மற்றும் உரிய பிரிவுகளில் சேவையாற்றுவதற்கு அவர்களிடம் காணப்பட்ட விடயம் சார்ந்த அறிவினைப் பரீட்சித்து குறுகிய கால பயிற்சியின் பின்னர் உரிய உத்தியோகத்தர்களை தலைமை அலுவலகத்தில் உரிய பிரிவுகளுக்கு இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்பபு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ளப்பட்டிருந்தார். | | | | |
| (ii) | திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர் பதவிக்காக அரசாங்க துறையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்தில் 03 ஆண்டுகள் காப்புறுதி நடவடிக்கைகள் காப்புறுதி செயற்பாடுகள் தொடர்பான அனுபவமுள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 03 ஆண்டுகள் வெளிக்கள மற்றும் நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான அனுபவம் உள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். | 2023 | ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | -மேற்படி- | ஆட்சேர்பபு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 5.2.1(அ) உபபிரிவின் பிரகாரம் வெளி விண்ணப்பதாரர்கள் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக இன்னும் இரண்டு | 2023 | தகமைகளைப் பெற்றிருக்காத உத்தியோகத்தர்கள் அமைய அடிப்படையில் பதவிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். | ஆட்சேர்ப்பிற்காக அங்கீகாரம் கிடைத்திருக்காத காலப்பகுதியின் போது பயிற்சி அடிப்படையில் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொண்டு சபை நடவடிக்கைகள் | தகமையைப் பெற்றிருக்காத உத்தியோகத்தர்கள் அமைய அடிப்படையில் பதவிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பாடங்களில் திறைமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டிய போதிலும் தகமை பெற்றிருக்காத 12 உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு 03 ஆண்டுகள் காலம் அமைய உத்தியோகத்தர்களாக வைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | | | ஆக்கபூர்வமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. உத்தியோகத்தர்களுக்குஅவர்களின் பதவிகளுக்குத் தேவையான ஆரம்ப தகமைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அந்த உத்தியோகத்தர்கள் உரிய தகமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தனர். |
| 08 | 2022 திசெம்பர் 14 ஆந் திகதிய 2310/29 ஆம் இலக்க ஆட்செர்ப்பு நடைமுறை விதிக்கான அதிவிசேட வர்த்தமானியின் IX ஆம் அத்தியாயத்தின் 131 ஆம் பிரிவின் பிரகாரம் பதில் கடமை நியமனம் செய்யப்பட வேண்டியதானது அங்கீகரித்த ஆளணியில் உள்ள ஒரு பதவியில் சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தரமான ஒரு அரசாங்க உத்தியோகத்தர் முறைமையான அங்கீகாரத்தினைப் பெற்று குறித்த ஒரு காலப்பகுதிக்கு | 2023 | நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக பரிகாரமாக ஆனால் நீண்ட காலமாக பதில் கடமை பார்க்கும் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தாதிருத்தல் வேண்டும். | தற்பொழுது பதில்கடமை பார்க்கும் 02 பதவிகளுக்காக நிரந்தர ஆட்சேர்பபுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய வெற்றிடமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பிற்கு அங்கீகாரத்திறட்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் வெற்றிடமான பதவிக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதில் கடமை நியமங்களுக்கு நிரந்த நியமங்களுக்கள் செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அப்பதவியின் சேவைக்கு வெளியே இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அங்கீகரித்த பதவியணியில் ஒரு பதவி வெற்றிடம் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அப்பதவிக்கு ஒரு நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக பரிகாரமான போதிலும் 07 பதவிகளுக்காக 26 உத்தியோகத்தர்கள் 08 மாதங்களிலிருந்து 12 ஆண்டுகள் வரையான நீண்டகாலமாக பதில் கடமை பார்க்கும் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | | | | |
| 09 | 2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு முரணாக MM1-1 சேவைத் தரத்தினைச் சேர்ந்த 19 உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 1,380,533 தொகை மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,837,960 தொகையான போக்குவரத்து படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | 2023 | சுற்றறிக்கையின் பிரகாரம் போக்குவரத்து படிகளுக்கு தகமையற்ற சேவைத் தரத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து படிகள் செலுத்தாதிருத்தல் வேண்டும் | அதிகாரச்சட்டத்திலுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள தீர்மானத்திற்கு சுற்றறிக்கையின் மூலம் காட்டப்பட்டுள்ள விடயம் பின்பற்றப்பட வேண்டும் என கணக்காய்வின் மூலம் காட்டப்பட்டுள்ளதனால் உரிய சுற்றறிக்கையினை வழங்கியுள்ள நிறுவனத்திடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக 2019/05/10 ஆந் திகதிய 3/1/8/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வரிசை அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | படிகளுகக்குத் தகமை இல்லாத சேவைத்தரத்ததைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்திய படிகளை அறவீடு செய்வதற்கு அல்லது முறைபடியான அங்கீகாரத்தைதப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இது சம்பந்தமாக தீர்மானம் வழங்கப்படும் வரை பணிப்பாளர் சபையின் தீர்மானம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது சம்பந்தமாக 2023/03/27 ஆந் திகதிய 3/1/8/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மீண்டும் வரிசை அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகொள் விடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். | |
| 10 | 2022 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 06/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 60 வயதினை மிகைத்து சேவையில் ஈடுபடுகின்ற மற்றும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் 60 வயது பூர்த்தியான அரசாங்க தொழில் முயற்சிகளிலுள்ள ஊழியர்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அல்லது அதற்கு முன்னர் கண்டிப்பாக ஓய்வுபெறவேண்டிய போதிலும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அத்திகயில் 60 வயதினை பூர்த்திசெய்த மற்றும் 60 வயதினை மிகைத்த 05 | 2023 | 60 வயதினைப் பூர்த்திசெய்த ஊழியர்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். | நீண்டகாலமாக வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படாமையால் ஊழியர் பற்றாக்குறை சபையில் உருவாகியிருந்தது. புதிய விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்குச் சேர்த்துக்கொள்வது ஆரம்பிக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் பிரசித்தப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. சபைக்கு அதிக தேவைப்பாடு காணப்படுகின்ற ERP முறைமையானது சபையில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. புதிய பயிற்சி நிலையம், AIMS செயற்திட்டம், காப்புறுதி மேம்படுத்தல் நடவடிக்கை, கால்நடை காப்புறுதி திட்டம் தொடர்பாக கால்நடை காப்புறுதியை விரிவுபடுத்துதலினை ஆரம்பிபத்தல், புதிய | 60 வயதினைப் பூர்த்தி செய்த ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்துவதனை நிறுத்துவதற்கு அல்லது முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தி அங்கீகாரமில்லாது சம்பளங்களம் படிகளுமாக ரூபா 4,389,535 செலுத்தப்பட்டிருந்தது. | | | ஆட்சேர்ப்பு நடைமுறையும் நடைமுறையினைத் தயாரித்தலும் ஆகிய செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தற்பொழுது நடைமுறைப்படுத்தப் பட்டு வருவதனால் பல அனுபவங்கள் உள்ள இந்த உத்தியோகத்தர்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கிணங்க ஒப்பந்த அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் முகாமைத்துவ உதவியாளர்களையும் சேர்த்துக்கொள்வதற்காக 531/18 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் உரிய உத்தியோகத்தர்களின் சேவையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | |
| 11 | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வருமான வரிக்காக பதிவுசெய்யாமையின் காரணமாக 2018 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய வரிப்பணம் ரூபா 299,354,489 | 2023 | 2024/25 ஆம் ஆண்டிலிருந்து சரியாக வரிக் கடப்பாட்டினை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபை விவசாயக் காப்புறுதி மற்றும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் 1979 இன் 28 ஆம் இலக்க மற்றும் அதன் பின்னர் அமுல்ப்படுத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் | செலுத்தவேண்டிய பணம் 2024/25 ஆண்டிற்காக காலாண்டு ரீதியாக செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் செலுத்தப்படாமையின் காரணமாக தாமத வட்டி ரூபா 40,869,072 ஆன ஒரு நட்டத்தினை சபை மேற்கொள்ள வேண்டியிருந்தது. . | | | மூலம் சபையின் அனைத்து இலாபங்கள் மற்றும் வருமானங்கள், வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 இன் 24 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் விடுவிக்கப்படாதிருந்ததனால்சபை வருமானவரி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. வருமானவரி கணிப்பீட்டின் போது சாதாரண கம்பனிகளுக்கான 30 சதவீத வரி வீதத்திற்கு இணங்க சபை வரிசெலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் விரிவாக கலந்துரையாடி சபையினால் செலுத்த வேண்டிய வரி வருமானத்தை 14 சதவீத்துடன் தொடர்புபடுத்தி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கிணங்க சபைக்கு நிதி ரீதியான நட்டம் ஏற்படவில்லை. அதற்கிணங்க 2024/25 ஆம் ஆண்டிலிருந்து சரியாக வரிக்கடப்பாட்டினைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 12. | 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல | 2023 | சமர்ப்பிக்கப்படாத இழப்பீட்டுப் பணத்தை திறைசேரிக்கு | கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்ட விவசாயிகளுக்கு | உரிமை கோரப்படாத இழப்பீட்டுப் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காப்புறுதி அதிகாரச்சட்டத்தின் 07(அ) உபபிரிவின் பிரகாரம் 8,185 விவசாயிகளுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ரூபா 70,800,200 இழப்பீட்டுப் பணம் கணக்கு இலக்கம், விவசாயிகளின் பெயர், மற்றும் அடையாள அட்டை இலக்கம் என்பன கிடைக்காமையின் காரணமாக வணிக வங்கிகளின் மூலம் திருப்பி அனுப்பப்பட்டிருந்தும் உரிய விவசாயிகளை அடையாளங்கண்டு அப்பணத்தை தீர்த்துவைப்பதற்கு அல்லது மீண்டும் திறைசேரிக்கு அனுப்புவதற்கு 06 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திருத்திய ஆவணங்களை தயாரித்து அனுப்புமாறு கமநல சேவை நிலையங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறு கிடைத்த திருத்திய ஆவணங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இழப்பீட்டுப் பணத்தை மீண்டும் உரிமை கோராத விவசாயிகளின் மேற்கூறிய ரூபா 70,800,200 பணம் தொடர்ச்சியாக விவசாயிகளால் உரிமை கோரப்படாததனால் விவசாய காப்புறுதி நிதியத்திற்கு மாற்றுவதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அப்பணம் கமத்தொழில் தரவு முகாமைத்துவ முறைமையை தோற்றுவிப்பதற்காக வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. எனினும் அப்பணத்தை மேற்கூறிய குறிக்கோளுக்காக பயன்படுத்தப்படாததனால் மீண்டும் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | பணம் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. |
| 13 | 2019 செப்தெம்பர் 02 ஆந் திகதிய 07/2017 (திருத்தம் II) ஆம் | 2023 | காப்புறுதிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலேயே | மாவட்ட அலுவலகங்களில் காணப்படுகின்ற | விவசாயிகளுக்கு தீடீர் விபத்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலக்க கமத்தொழில், கிராமிய பொருளாதார நடவடிக்கைகள், நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு சுற்றறிக்கையின் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு சுற்றிக்கையின் பிரகாரம் தகவல்களை அறிக்கையிடப்பட்ட 17 அலுவலகங்களில் 2021/2022 பெரும் போகம் தொடர்பாக திடீர் விபத்துக் காப்புறுதிக்காக 23,351 விவசாயிகளிடமிருந்து ரூபா 9,244,450 தொகை சபை வருமானமாக அடையாளங்காணப்பட்டிருந்த போதிலும் அவர்களில் 15,491 விவசாயிகளுக்கு உறுதிகள் வழங்கப்படாதிருந்ததுடன் 7851 விவசாயிகளுக்கு ஒரு ஆண்டு பாதுகாப்பு காலத்தில் 07 மாதங்களிலிருந்து 10 மாதங்கள் வரையான காலங் கடந்ததன் பின்னர் வழங்கப்பட்டது. | | காப்புறுதி சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உத்தியோகத்தர் பற்றாக்குறை மற்றும் உத்தியோகத்தர்களின் வேலைச் சுமை இதற்கு காரணமாக இருந்ததுடன் எதிர்காலத்தில் வழங்கப்படுகின்ற பயிர்ச் செய்கை காப்புறுதி உறுதிகளுக்காக திடீர் விபத்து உறுதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உறுதிகள் வழங்கப்படவில்லை. |
| 14. | பங்களிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ் உறுதியின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் செலுத்தப்பட்டுள்ள அரையாண்டு பங்களிப்பு பணத்தின் அளவில் 75 சதவீதம் கிடைத்திருக்குமாயின் சபையினால் | 2023 | அரையாண்டு தவணைப்பணத்தின் 75 சதவீத்தினை செலுத்தியுள்ள பங்களிப்பாளர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்படுதல் வேண்டும். | எந்தவொரு பங்களிப்பாளரினையும் இரத்துச் செய்யாது செலுத்த வேண்டிய தவணைப் பணத்தின் அளவில் 75 சதவீதத்திற்கு மிகையாகச் செலுத்தியிருந்தால் அவருக்கு குறைப்பு செய்யப்பட்ட | அரையாண்டு பங்களிப்பு பணத்தில் 75 சதவீதம் செலுத்தப்பட்டுள்ள பங்களிப்பாளர்களின் ஓய்வூதியம் இல்லாமல் ஆக்கப்பட்டிரு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தீர்மானிக்கப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட ஓய்வூதியத்தினை விட குறைந்த ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தகமையிருந்தும் அவ்வாறு செய்யாது ஓய்வூதிய நலன் முழுமையாக இழக்கச் செய்யப்பட்டிருந்தது. | | | ஓய்வூதியம் தயாரிக்கப்படும். அவ்வாறு குறைப்புச் செய்யப்பட்ட ஓய்வூதியத்தினை தயாரிப்பதற்காக பங்களிப்பினை இரத்துச் செய்யாது 75 சதவீததத்திற்கு மிகையாக தவணைப் பணத்தின் அளவு செலுத்தியிருத்தல் வேண்டும். | ந்தது. |
| 15 | 1990 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் 4 ஆம் உப பிரிவின் பிரகாரம் எதிர்பாராத சம்பவங்களினால் உருவாகின்ற தகமைகளைக் காட்டுவதற்காக கொடுப்பனவு செய்வதற்காக சொந்த விருப்பத்திற்கு இணங்க ஈடுபடுத்தப்பட வேண்டிய திரண்ட நிதியம் 2002 ஆம் ஆண்டிலிருந்து கட்டியெழுப்பட்டிருந்தது டன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் மீதி ரூபா 498,536,253 ஆகும். அந்த நிதியத்தினை பயன்படுத்தக்கூடிய எதிர்பாராத சம்பவம் தொடர்பாக விளக்கமளித்து சட்டம் உருவாக்கப்படாததனால் 2002 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 21 ஆண்டுகள் காலத்தினுள் இந்நிதியம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2023 | நிதியத்தினை ஆரம்பிக்கும் தேவைப்பாடு மற்றும் பயன்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சபையினால் கமத்தொழிலாளர்களின் பங்களிப்புடன் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற ஆயுள் காப்புறுதித் திட்டம் உள்ளடங்கலாக ஏனைய காப்புறுதித் திட்டங்களுக்காக உருவாகின்ற தொடக்க மூலதனம் மற்றும் மேலதிக மூலதனத் தேவைப்பாட்டிற்காக (காப்பீட்டு மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உருவாகின்ற தேவைப்பாடு) பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இந்நிதியத்தினை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | எதிர்பாராத சம்பவங்கள் தொடர்பாக சட்ட விதிகள் தயாரிக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | மூன்றாந் தரப்பினர்களின் வாகனக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு முகவருக்கும் வழங்கப்பட்டுள்ள தற்காலிக காப்புறுதி பத்திரத்தின் அளவு, விற்பனை செய்யப்பட்டுள்ள அளவு, இரத்துச் செய்யப்பட்டுள்ள தற்காலிக காப்புறுதிப் பத்தீரத்தின் அளவு, மற்றும் மாதாந்த விற்பனை வருமானத்தினை உறுதிப்படுத்துவதற்கும் தற்காலிக காப்புறுதிப் பத்தீரத்தின் இலக்கம், ஒழுங்குமுறைப்படியாக அதன் மீது உழைத்த வருமானம் வங்கி கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதனை சான்றுபடுத்துவதற்கும் மற்றும் ஒவ்வொரு முகவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்களை வங்கி கூற்றுக்களின் மூலம் பிரித்து அடையாளங்காண்பதற்கும் முடியுமான வகையில் சரியான மற்றும் முழுமையான தகவல்கள் பேணப்பட்டிருக்காததுடன் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட வருமானத்தின் முழுமைத் தன்மை உயர்மட்ட உத்தியோகத்தரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | 2023 | வருமானங்கள் மற்றும் தகவல்கள் முழுமையாகக் காணப்படுதல் வேண்டும். | மூன்றாந் தரப்பினர் காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாவட்ட அலுவலகத்தினால் தற்பொழுது Access உள்ளீட்டு முறைமை ஈடுபடுத்தப்பட்டு தரவு முறைமை பேணப்படுகின்றது. இந்த முறைமையினை பகுப்பாய்வு செய்வதன் மூலம் உரிய தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளதுடன் தரவு முறைமைக்கு உரிய தகவல்களை சரியாக உள்ளடக்குமாறு மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டுகிறேன். சபையினால் சில மாவட்ட அலுவலகங்கள் மூன்றாந் தரப்பு காப்புறுதி நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்காக ERP முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் இத்தரவு முறைமையை பயன்படுத்தி உரிய தகவல்களை சரியாகப் பெற்றுக்கொள்ளும் இயலுமை காணப்படுகின்றது எனச் சுட்டிக் காட்டுகிறேன். | மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின் மேற்பார்வை பலவீனமான நிலையில் காணப்பட்டது. |
| 17 | கமத்தொழில் அபிவிருத்தி | 2023 | இழப்பீட்டுக் கொடுப்பவின் | காணப்படுகின்ற நடைமுறை | பயிர்ச் சேத இழப்பீட்டுக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன் செயற்திட்டத்திற்காக 02 மாதங்களுக்குள் இழப்பீட்டுப் பணத்தை செலுத்த வேண்டிய போதிலும் 2023 மார்ச் மாதத்தில் முடிவடைகின்ற 2022/2023 பெரும் போகத்திற்காக சிபாரிசு செய்த நெல்லுக்காக கிடைத்த 39,455 விண்ணப்பப் பத்திரங்களுக்காக ரூபா 914,574,064 தொகை 2023 யூன் 09 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2024 செப்தெம்பர் 02 ஆந் திகதி வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | தாமதங்கள் குறைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். | நிலைமைகளின் அடிப்படையிலும் மற்றும் உத்தியோகத்தர்களின் வேலைச்சுமைகளின் அடிப்படையிலும் இவ்வாறான தாமதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் கமநல சேவை நிலையங்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி உரிய தாமதங்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் சுட்டிக்காட்டுகிறேன். | கொடுப்பனவுகளின் தாமதம் தொடர்பாக அமைச்சிற்கு அல்லது திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 18. | 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்து ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தமையுள்ள 60 வயதினைப் பூர்த்திசெய்துள்ள விவசாயிகளை அடையாளங்கண்டு ஓய்வூதியத்தினை செலுத்தாமை, 15(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை செலுத்த தவறியுள்ளார்கள் என பங்களிப்புச் செய்தவர்களுக்கு தெரியப்படுத்தாமை மற்றும் நலன்பெறும் தரப்பினர்களால் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை | 2023 | 60 வயதினைப் பூர்த்தி செய்கையிலேயே ஓய்வூதியத்தினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தவணைப் பணம் முறையாக அறவிடப்படுகின்றது என்பது சபையினால் மாதாந்தம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். | 60 வயதினைப் பூர்த்திசெய்த ஓய்வூதியக்காரர்களின் விண்ணப்பப்பத்திரங்களை தலைமை அலுவலகத்திற்கு துரிதமாக அனுப்பிவைக்குமாறு அனைத்து மாவட்ட அலுவலகங்களக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 60 வயது பூர்த்தியடைந்து இதுவரை விவசாயிகள் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத விவசாயிகளுக்கு தற்பொழுது தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச்சட்டத்தின் 15(1) ஆம் பிரிவின் பிரகாரம் 05 தவணைப் பணங்களை | ஓய்வூதிய விண்ணபத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு இலகுவான நடைமுறையினை அறிமுகப்படுத்துதல் அல்லது தவணைப் பணம் தாமதமடைந்து சான்றிதழ் உறுதியில் குறிப்பிடப்பட்ட பரதிபலன்கள் இல்லாமல் போவது தொடர்பாக பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலுத்த தவறியிருக்காத போதிலும் விட்டு விட்டேனும் 05 தவணைப் பணங்களை செலுத்தாத நலன்பெறுனர்களும் உறுதிப்பத்திரத்தினை மீறியுள்ளார்கள் எனக் கருதி ஓய்வூதிய பிரதிபலன்கள் இல்லாமல் ஆக்கப்பட்டிருந்தது. | | | செலுத்த தவறியுள்ள விவசாயிகளின் பிரதிபலன்கள் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. தவணைப் பணங்களை செலுத்தும் போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவது அவர் செலுத்திய தவணைப் பணம் எப்போது செலுத்த வேண்டிய தவணைப் பணம் என்பதாகும். அதற்கிணங்க ஏதாவது தவணைப் பணம் 05 போகங்களுக்கு மேல் அதாவது 2 1/2 ஆண்டுகளுக்கு மேல் தாமதிக்கப்படுமாயின் அவரின் சான்றிதழ் உறுதியில் குறிப்பிட்ட பிரதிபலன்கள் இல்லாமல் ஆக்கப்படுகின்றது. | |
| 19. | விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தில் பதிவுசெய்துள்ள 871,425 விவசாயிகளில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 61 வயதிலிருந்து 93 வயது வரையான வயதினை அடைந்துள்ள விவசாயிகள் 474,803 ஆக இருந்த போதிலும் அவர்களில் 264,227 விவசாயிகளுக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 | 60 வயதினைப் பூர்த்தி செய்கையில் ஓய்வூதியத்தினை செலுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 60 வயது பூர்த்தியாகி இதுவரை விவசாயிகள் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத விவசாயிகளுக்கு தற்பொழுது தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து மாவட்ட அலுவலகங்களின் உதவிப் பணிப்பாளர்கள் இச்செயற்பாட்டினை முன்னுரிமைச் செயற்பாடாகக் கருதி நடவடிக்கை எடுத்துள்ளனர் | 60 வயதினைப் பூர்த்தி செய்து ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டிய பங்கிப்பாளர்களை அடையாளங் காண்பதற்கான வேலைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20. | 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்திட்ட அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் பிரகாரம் 18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட ஒரு கடற்றொழிலாளருக்கு இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு தகமை இருந்தும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் அங்கத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்படாமை, அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற கடற்றொழிலாளர்கள் 60 வயதினைப் பூர்த்தியடைகையில் ஓய்வூதியம் வழங்கப்படாமையால் 2007 சனவரியிலிருந்து 2016 திசெம்பர் வரையான காலத்திற்காக 139 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 4,159,063 தொகை மற்றும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகள் தொடர்பாக 45 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 1,378,518 ஆக மொத்தமாக ரூபா 5,537,581 தொகை நிலுவை ஓய்வூதியமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | 60 வயது பூர்த்தியடைகையில் ஓய்வூதியத்தினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திட்டத்தினை நிதி சாத்திய வளத்துடன் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.இத்திட்டத்திற்கு கடற்றொழிலாளர்களை கவரச் செய்வதற்கு புதிய கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 60 வயதினைப் பூர்த்திசெய்த பங்களிப்பாளர்களின் பட்டியல் மாவட்ட அலுவலக மட்டத்தில் பெற்று அந்த அந்த மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அப்பட்டியலினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியத்திற்கு தகமையுள்ள கடற்றொழிலாளர்களுக்குத் தெரியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பான செயற்பாட்டு நடவடிக்கைகள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் இந்நிலைமையை அத்திணைக்களத்திற்கு தெரியப்படுத்துவதற் | புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அல்லது 60 வயதினைப் பூர்த்திசெய்கையில் ஓய்வூதியத்தினை வழங்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற தெரியப்படுத்தல்களுக்கு மேலதிகமாக பத்திரிகை அறிவுறுத்தல்களின் மூலமும் கடற்றொழிலாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 21 | திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை 64,117 ஆக இருந்ததுடன் கடற்றொழிலாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 வயதினை மிகைத்து ஓய்வூதிய வயதினை அடைந்துள்ள 31,146 கடற்றொழில் பங்களிப்பாளர்களில் 24,187 பங்களிப்பாளர்களுக்கு (ஒரே தடவையில் பங்களிப்பு பணத்தை செலுத்தி பங்களிப்பினை பெற்றுக்கொண்ட 5,549 பங்களிப்பாளர்களை உள்ளடக்கி) கடற்றொழில் ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | 60 வயதினைப் பூர்த்தியடைகையிலேயே ஓய்வூதியத்தினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தாமதித்து கிடைத்துள்ள விண்ணப்பங்களுக்காக தாமதித்தமைக்கான காரணத்தை விளக்கும் வரை நிலுவையான ஓய்வூதியத்தினை செலுத்துதல் இடம்பெறவில்லை. தற்பொழுது நிலுவையான ஓய்வூதியத்துடன் ஓய்வூதியக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | 60 வயதினைப் பூர்த்திசெய்கையில் ஓய்வூதியத்தினை வழங்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. |
| 22 | சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடன் (IFC) ஒன்றிணைத்து கமத்தொழில் முகாமைத்துவ தகவல் முறைமையை | 2023 | கமத்தொழில் முகாமைத்துவ தகவல் முறைமையை தோற்றுவிக்கும் குறிக்கோள் நிறைவேற்றப்படுதல் | கமத்தொழில் முகாமைத்துவ தகவல் முறைமையானது அமைச்சின் தலைமைத்துவத்தில் | இழப்பீட்டினைக் கணித்தல் மற்றும் இழப்பீட்டினைச் செலுத்துதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உருவாக்குவதற்காக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பிடமிருந்து 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 20,391,089 தொகை சபைக்கு கிடைத்திருந்ததுடன் அந்த ஆண்டின் போது அதற்காக ரூபா 23,009,698 செலவு செய்யப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டு வரை இழப்பீட்டினைக் கணித்தல் மற்றும் இழப்பீட்டினை செலுத்தும் நடைமுறைக்காக தகவல் முறைமை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | வேண்டும். | மேற்கொள்ளப்படுவதுடன் உரிய செலவுகள் விவசாய அமைச்சினூடாக மீளளிப்புச் செய்யப்படுகின்றது. இது தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கணக்கு குறிப்புக்களின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நடைமுறையினை தகவல்கள் கணனி முறைமைக்குள் உள்ளடக்கப்படவில்லை. |
| 23 | ரூபா 79,000,000 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்த சபையின் முகாமைத்துவ தகவல் முறைமைக்காக தொழில் முயற்சி வளங்களை திட்டமிடுதல் முறைமை (ERP) System மற்றும் வன்பொருட்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கை 2023 மார்ச் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆகஸ்ட் 20 ஆந் திகதியளவில் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2024 யூலை 31 ஆந் திகதி வரை அந்த நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை. | 2023 | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும். | உடன்படிக்கை காலத்தை நீடிப்பதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தகவல் முறைமையை தயாரிக்கும் நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை. |

## 3.56 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்

| | முழு சொத்துக்கள் | முழு பொறுப்புக்கள் | உரிமை மூலதனம் | வரிக்கு முன்னர் இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2021** | 566,220,121 | 99,572,294 | 466,647,827 | (16,412,185) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 549,704,058 | 81,836,718 | 467,867,340 | 14,471,411 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 564,416,429 | 116,979,498 | 447,436,931 | (5,020,580) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் 139 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கம் ஒழுங்கான முதலீட்டு திட்டமொன்றின் பிரகாரம் முதலீடு செய்ய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கக் கணக்கில் ரூபா 35,789,916 ஆன மீதிக்கு நேரொத்ததாக எவ்வித முதலீடும் செய்திருக்கவில்லை | 2021<br>2022<br>2023 | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகிறேன். நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பணிக்கொடை ஒதுக்க மீதிக்கு நேரொத்ததாக மாதாந்தம் ரூபா 100,000 வீதமாகுமாறு முதலீடு செய்ய பணிப்பாளர் சபை அங்கீகாரம் மற்றும் விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்துடனும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு ஒரு கடதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் குறித்த அங்கீகாரம் கிடைத்தவுடன் தேவையான முன்நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கங்கள் முறையான திட்டத்திற்கு இணங்க முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 02 | 2018 முதல் 2022 வரையான காலப் பகுதியினுள் அரச | 2021 | நட்டம், ஆளணியினர் வெற்றிடம் மற்றும் | கூட்டுத்தாபனத்தின் விற்பனை மற்றும் ஏனைய | செயற்பாட்டு நட்டம் ஆணியினர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மானியத்தை கவனிக்காது கடந்த 05 ஆண்டுகளினுள் கூட்டுத்தாபன நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட நட்டம் ரூபா 134,800,425 முதல் ரூபா 102,312,523 வரையான வீச்சளவை கொண்டிருந்தது. இதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டு நட்டம், ஆளணியினர் வெற்றிடம், காணப்படும் மரமுந்திரிகை தோட்டங்கள் உச்ச அளவில் பயிரிடப்படாமையினால் உற்பத்தி குறைவடைந்தமை போன்ற காரணங்களின் மீது அரச மானியம் இல்லாது கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை சவாலாக இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | 2022<br>2023 | பயிரிடப்படாமை காரணமாக உற்பத்தி குறைவடைந்தமை தொடர்பில் கவனத்துடன் நடவடிக்கை எடுத்து கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையை உறுதி செய்து கொள்ள வேண்டும். | வருமானங்களை மேலும் அதிகரித்துக் கொண்டு மற்றும் செலவுகளை உரியவாறு முகாமை செய்து இலாபத்தை வளர்த்துக் கொள்ள எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தியுள்ளதுடன், அதன் பிரகாரம் தேவையான முன்நடவடிக்கை எடுக்கப்படும் | வெற்றிடம் காணப்படுகின்ற மரமுந்திரிகை தோட்டங்களில் உச்ச அளவில் பயிரிடப்படாமை யால் உற்பத்தி குறைவடைந்தி ருந்த து. 2022 ஆம் ஆண்டிவிட 2023 ஆம் ஆண்டின் போது நட்டம் குறைவடைந்தி ருந்த து. |
| 03 | கூட்டுத்தாபனத்தின் கடன் அறவிடும் கால எல்லை 60 நாட்களான போதும் 90 நாட்களை விஞ்சிய வியாபார கடன்படுனர் மீதி ரூபா 2,994,271 ஆகும். அம் மீதியினுள் உள்ளடங்கும் இரண்டு ஆண்டுகளை விஞ்சிய காலமாக காணப்பட்டு வரும் கொழும்பு பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றிடமிருந் து அறவிட வேண்டிய ரூபா 1,499,410 ஆன கடன் மீதியை அறவிட முறையாக | 2021<br>2022<br>2023 | கடன் மீதியை அறவிட முறையாக நடடிக்கை எடுக்க வேண்டும். | சலுகை கால எல்லையை விஞ்சிய ரூபா 2,994,271 ஆன வியாபார கடன்படுனர் மீதியிலிருந்து 2023.09.30 திகதி வரை ரூபா 1,296,771 தொகை அறவிட்டு எஞ்சிய மீதியையும் விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். ரூபா 1,499,410 ஆன கடன்படுனர் மீதியை (லிசல என்டபிரய்சஸ் நிறுவனம்) அறவிட நீண்ட காலமாக எடுக்கப்பட்ட முயற்சி தோல்வி அடைந்துள்ளதால் சட்ட நடவடிக்கை | குறுங்கால கடன் அறவீடு செய்யப்பட்டிரு ந்தும் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 1,499,410 தொகையான கடனை அறவீடு செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி ஆக்கபூர்வமான தாக இருக்கவில்லை . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | எடுப்பதற்காக தேவையான ஆலோசனை பெற்றுக் கொள்ள சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| 04 | அப்போது காணப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு ரூபா 9,466,200 ஆன மரமுந்திரிகை கன்றுகளை வழங்கி 10 ஆண்டுகள் கடந்திருந்தன. குறித்த அமைச்சு தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் அந்தக் கடனை அறவிடும் இயலுமை இல்லையென அவதானிக்கப்படுகிறது. | 2021<br>2022<br>2023 | பெற வேண்டிய கடன் மீதி தொடர்பாக தாமதமின்றி தேவையான நடவடிக்கைகளை எடுக்க செயற்பட வேண்டும் | தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 9,466,200 ஆன கடன்படுனர் மீதியை மற்றும் இக் கூட்டுத்தாபனத்தினால் அரச நெல் விற்பனை சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,500,000 கடன் மீதி தொடர்பாக ஆலோசனை பெற்றுக் கொள்வதற்காக திறைசேரியின் அரச பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ள போதும் குறித்த பதிலீட்டிற்காக வாய்ப்பு இல்லையெனவும், மேற்கூறிய அறவிட வேண்டிய கடன்படுனர் மீதி தொடர்பாக கூட்டுத்தாபன கணக்காய்வுக் குழு பரிந்துரை அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்குமாறும் பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து எழுத்து மூலம் அறிவுறுத்தல் கிடைத்துள்ளது. | அறவிடப்பட வேண்டிய கடன் அறவிடப்படவில்லை. |
| 5. | 2012 ஜுலை 24 திகதிய பொது முயற்சிகள் மீதான செயற்குழு தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரிமையற்ற | 2021<br>2022 | செயற்குழு தீர்மானம் பிரகாரம் சட்டரீதியான உரித்தற்ற காணிகளின் உரிமையை பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்க | 2012 ஜுலை 24 திகதிய பொது முயற்ச்சிகள் மீதான செயற்குழு தீர்மானம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரிமை | கூட்டுத்தாபனாத்திற்கு சட்டரீதியாக உரிமை இல்லாத காணிகளின் உரிமையை பொறுப்பேற்பத |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணிகளில் சட்டரீரியான உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது முயற்சிகள் மீதான செயற்குழுவினால் அறிவித்திருந்த போதும், 2012 ஜுலை 24 திகதிக்கு முன்னர் மற்றும் 2012 ஜுலை 24 திகதிக்கு பின்னர் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தும் பிரதேச செயலகம் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் வழங்கியுள்ள 11,363 ஏக்கர் காணியின் சட்டரீதியான உரிமையை கூட்டுத்தாபனத்திற்கு பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகளை 2022 திசெம்பர் 31 திகதி வரை முடிவுறுத்தி இருக்கவில்லை. | | வேண்டும். | பொறுப்பேற்கப்படாத சுவீகரிக்கப்படாத தோட்டங்கள்/ விதை பூங்காக்களின் காணி ஏக்கர் அளவு 2370 ஏக்கர்கள் அளவாகும். 2012 ஆண்டளவில் இந்த கூட்டுத்தாபனத்திற்கு உரிமையற்றதாக இருந்த போதும் பிற்காலத்தல் பல்வேறு தரப்பினர்களிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்துள்ள போதும் இன்னும் சட்டரீதியான உரிமையை பொறுப்பேற்காத காணி 8993 ஏக்கர் ஆகும். காணிகளின் உரிமையை பொறுப்பேற்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | ற்காக ஆக்கபூரவமான நடவடிக்கை எடுக்கப்படவில் லை. |
| 6. | கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிப்பதற்காக வெளியிடப்பட்ட இலக்கம் 60/07 மற்றும் 1973 மே 25 திகதிய வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் அட்டவணையின் (அ), (இ), (ஈ), (ஊ) மற்றும் (ஏ) பிரிவுகளில் குறிப்பிடப்படும் விடயங்களை மேற்கொள்வது தொடர்பில் 2013 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலத்தினுள் மிகவும் குறைந்த கவனம் செலுத்தப்பட்டிருந்ததுட ன் அதாவது அமைச்சிற்கு ஆலோசனை வழங்குதல், | 2022 | நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் | அவதானிப்புடன் இணங்கவில்லை. குறித்த தகவல்கள் மற்றும் ஆலோசனை வழங்கும் போது விடயப் பொறுப்பு அமைச்சு (தற்போது கமநல மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு) மூலம் குறித்த தகவல்கள் கூட்டுத்தாபனத்தின் ஊடாக கோரப்படுவதுடன், கூட்டுத்தாபனத்தினால் அத் தகவல்கள் வழங்கப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக எழக்கூடிய அவசர, விஷேட மற்றும் ஏனைய விடய சார் விடயங்களில் விடயப் பொறுப்பு அமைச்சினால் | புதிய உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத் துதல, ஏற்றுமதியை சந்தைப்படுத்து தலினை மேம்படுத்துதல் மற்றும் முந்திரிகை பருப்புக்கள் மற்றும் முந்திரிகை தொலிகளிலிரு ந்து புதிய உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மரமுந்திரிகை உற்பத்தியை செயன்முறைப்படுத்துதல், விற்பனை மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்தல், பகிரங்கப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பில் வெளித்தரப்பினருடன் இணைந்து செயற்படுதல் மற்றும் புலனாய்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | நடாத்தப்படும் கூட்டங்களில் விடயத் தொடர்பு அலுவலர்களினால் அவர்களின் கருத்துக்கள், குறித்த தகவல்கள் மற்று நிபுணத்துவ கருத்துக்கள் முன்வைக்கப்படும். கூட்டுத்தாபனத்தினால் தலையிட வேண்டிய அதன் அடிப்படை நோக்கங்களிற்கு மாற்றமான விடங்களில் அது தொடர்பாக மதிப்பிற்குரிய அமைச்சரின் கவனத்தை செலுத்த விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| 7. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான/ பொறுப்பில் காணப்படும் 13 தோட்டங்களின் காணிகளின் அளவு 11,363 ஏக்கர்களாவதுடன் அவற்றின் 3,449 ஏக்கர்களில் மரமுந்திரிகை பயிரிடப்பட்டிருந்ததுடன், மரமுந்திரிகை பயிரிடப்படாத காணிகளின் சதவீதம் 70 சதவீதமாக இருந்தது. அந்த வெற்று காணிகளில் பயிரிடுவதற்காக கூட்டுத்தாபனத்தினால் ஆக்கபூர்வ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 | கூட்டுத்தாபனத்தினால் பயிரிடப்படாத வெற்றுக் காணிகளை பயிரிடுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கூட்டுத்தாபனத்தை ஆரம்பித்து 50 ஆண்டுகள் கடந்திருந்த போதும் மொத்த காணி 11,363 ஏக்கர்கள் அளவில் 79 சதவீதம் 2012 ஆண்டின் பின்னரே இந்த கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகியுள்ளது. மொத்த காணி அளவில் மன்னார் கொண்டச்சி தோட்டம் மற்றும் மட்டக்களப்பு மாங்கேனி தோட்டம் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு மரமுந்திரிகை பயிர் செய்கைக்காக வழங்கி 1,600 ஏக்கர் காணிப் பகுதியில் வெற்றிகரமாக மரமுந்திரிகை பயிரிடப்பட்டுள்ளது. அவ்வாறே மரமுந்திரிகை பயிரிட | பயிர்ச்செய்கை பண்ணப்படாதவெற்றுக் காணிகளில் பயிரிடுவது பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அல்லது ஏனைய பயிர்களை பயிரிட முடியாத 552 ஏக்கர் காணி அளவும் காணப்படுகின்றன | |
| 8. | கூட்டுத்தாபனம் மரமுந்திரிகை பயிரிட்ட 3,449 ஏக்கர் காணியில் ஒட்டு மரமுந்திரிகை கன்றுகள் ஒரு ஏக்கரிற்கு 70 உம் விதை மரமுந்திரிகை கன்றுகள் ஏக்கரிற்கு 40 கன்றுகள் வீதம் பயிரிட்டு 2022 ஆண்டில் மரமுந்திரிகை விளைச்சல் 88.24 மெட்ரிக் டொன் ஆனதில் ஒரு ஏக்கரிற்கு மரமுந்திரிகை விளைச்சல் 25.38 கிலோ கிராம் ஆன குறைந்த பெறுமானத்தை பெற்றிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் அந்த தோட்டங்களில் விளைச்சல் தரும் மரமுந்திரிகை மரங்களின் அளவு 51,685 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ஒரு மரமுந்திரிகை மரத்தின் சராசரி விளைச்சல் 1.71 கிலோ கிராமான பலவீன நிலையில் காணப்பட்டது. | 2022 | மரமுந்திரிகை விளைச்சல் ஏற்றுக் கொள்ள முடியாத மட்டத்திற்கு குறைவடைதல் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் மரமுந்திரிகை விளைச்சலை அதிகரிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். மரமுந்திரிகை தோட்ட நிர்வாகம் மற்றும் விளைச்சல் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக சிறப்பான உள்ளக கட்டுப்பாடொன்றை செயற்படுத்த வேண்டும். | கூட்டுத்தாபனத்தின் அனேக தோட்டங்களில் மிகப் பழைய மரமுந்திரிகை மரங்கள் காணப்படுவதுடன், அவ்வாறு காணப்படும் மரமுந்திரிகை மரங்களின் அளவு ஏற்றுக் கொண்ட மரமுந்திரிகை அளவை விட மிகவும் குறைந்த அளவை கொண்டுள்ளது. அவ்வாறே காட்டு யானை சேதம், மர மற்றும் வேர்களை துளைக்கும் வண்டு சேதம் போன்ற காரணங்களினாலும் மரமுந்திரிகை மரங்கள் பெருமளவில் குறைவடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட மரமுந்திரிகை பயிர்களிற்கு பாதகமான காலநிலை மற்றும் வானிலை நிலைமைகள் காரணமாக முழு நாட்டிலும் தோல் மரிமுந்திரிகை விளைச்சல் கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன், 2020 ஆண்டில் இந்த கூட்டுத்தாபன தோட்டங்களின் ஊடாக ஒன்று திரட்டப்பட்ட தோல் மரமுந்திரிகை விளைச்சல் 5.043 கிலோ கிராமிற்கு கிட்டிய அளவில் காணப்பட்டது. | ஒரு மரமுந்திரிகை மரத்தின் சராசரி விளைச்சலினை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 9. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான | 2022 | தென்னை விளைச்சலை | நாட்டில் நிலவிய நெருக்கடியான | தெனனை விளைச்சலினை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | புத்தளத்தின் கமந்தலுவ மற்றும் அம்பாறை ஹாடி தோட்டங்களில் தென்னை மரங்களின் எண்ணிக்கை முறையே 3,358 மற்றும் 826 ஆனதுடன், 1,147 முதிர்ச்சி அடையாத, 2,391 விளைச்சல் தரும் மற்றும் 646 வயதடைந்தவை எனக் கொண்டிருந்தன. 2022 ஆண்டில் தென்னை விளைச்சல் 90,304 தேங்காய்களானதுடன் அதன் விற்பனை வருமானம் ரூபா 4,427,439 ஆகவிருந்தது. அதன் பிரகாரம் ஒரு மரத்தின் வருடாந்த தென்னை விளைச்சல் 38 தேங்காய்களானதுடன் விற்பனை வருமானம் ரூபா 1,863 வரை குறைவடைவதற்கு தென்னை மரங்களை பராமரித்தல், பசளை இடல் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. | | அதிகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும | நிலைமை மற்றும் கூட்டுத்தாபன சீரற்ற நிதி நிலைமையின் பிரகாரம் கடந்த கிட்டிய 05 ஆண்டுகளாக தென்னை பயிர்களிற்கு தேவையான இரசாயன பசளை இடப்படாததால் விளைச்சல் கனிசமான அளவு குறைந்துள்ளது. நடைமுறையாண்டில் தென்னை பயிர்களிற்காக பசளை கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் எதிர்வரும் ஆண்டுகளில் தென்னை விளைச்சல்களில் கனிசமான வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும். | அதிகரித்தல் மற்றும் விளைச்சல் தராத மரங்களை அகற்றுதல் மேற்கொள்ளப்ப டவில்லை. |
| 10 | மீளாய்வாண்டு இறுதி அளவில் மரமுந்திரிகை பயிரிடப்பட்டிருந்த நில அளவு மொத்தமாக 3,449 ஏக்கர்களாக இருந்தன. அம் மரங்களின் பதிவழிக்கப்பட்ட தேறிய பெறுமானம் ரூபா 24,159,359 தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அம் மரமுந்திரிகை மரங்களை கணக்கெடுப்பு | 2021<br>2022 | சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். | இம் மரமுந்திரிகை மரங்களை கணக்கெடுக்கும் ஆரம்ப நடிவடிக்கைகள் தற்போது ஆரம்பித்துள்ளதுடன், எதிர்வரும் ஆண்டில் விளைச்சல் காலத்திற்கு முன்னர் அந் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த கணக்கொடுப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்த பின்னர் அதன் அடிப்படையில் மரமுந்திரிகை மர | மரமுந்திரிகை மரங்களின் கணக்கெடுப்பு மரங்களுக்கு இலக்கமிடல் மற்றும் மரங்கள் தொடர்பாக பதிவேட்டினைத் தயாரித்தல் இடம்பெறவில் லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேற்கொள்ளல், மரங்களை இலக்கமிடல் மற்றும் மரங்கள் தொடர்பான பதிவேடொன்றை தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை | | | பதிவேட்டை தயாரிக்கும் நடவடிக்கையும் பூர்த்தி செய்யப்படும். | |
| 12 | புத்தளம் செயலாக்க நிலையத்தில் பௌதீக நிலைமை பரிசோதனையின் போது ரூபா 7.092 மில்லியன் செலவில் மரமுந்திரிகை தன்னியக்க செயலாக்கம் செய்வதற்காக 2021 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் விளைவற்று நிலவியது. | 2022 | தேவையான திருத்தத்தை மேற்கொண்டு அந்த இயந்திரத்தை பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டியதுடன் நட்டத்தை அறவிட தேவையான முயற்சி எடுக்க வேண்டும். | ரூபா 7.092 மில்லியன் பெறுமானத்தில் ஆரம்பமாக மரமுந்திரிகை கொதிப்பானொன்று, மரமுந்திரிகை செயலாக்க இயந்திரமொன்று மற்றும் 02 மரமுந்திரிகை உலர்த்துதல் இயந்திரங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் கூட்டுத்தாபனத்தால் கட்டளையிடப்பட்டது மரமுந்திரிகை உலர்த்துதல் இயந்திரம் மற்றும் இரண்டு மரமுந்திரிகை உலர்த்துதல் அந்த செயலாக்க இயந்திரத்தை செயற்படுத்துவது தொடர்பாக நிலவிய பிரச்சினைக்குரிய நிலைமை காரணமாக பயன்படுத்துதல் தாமதமானது. செயலாக்க இயந்திரம் அத்தியவசியமென இனங்கண்டுள்ள மரமுந்திரிகை வெட்டும் இயந்திரப் பகுதியை பிரதானமாக திருத்திக் கொள்ள இந்த கூட்டுத்தாபன எதிர்பார்த்துள்ளது. மரமுந்திரிகை செயன்முறைப்படுத்தும் இயந்திரத்தின் வழங்குனருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு | தேவையான திருத்தங்களை மேற்கொண்டு அந்த இயந்திரத்தினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு அல்லது நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வருகின்றது. | |
| 12 | நெதகமுவ மரமுந்திரிகை செயலாக்க நிலையத்தில் தரப்படுத்தல் மற்றும் பொதியிடல் பிரிவிற்கு 2021 ஆண்டில் ரூபா 8,100,000 செலவில் ஒரு நிமிடத்திற்கு 60 பொதிகளை பொதியிட இயலுமான தன்னியக்க பொதியிடல் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2022 ஆண்டில் பொதியிடப்பட்ட பொதிகளின் எண்ணிக்கை 62,265 ஆகவிருந்ததுடன் இந்த இயந்திரத்திலிருந்து உச்ச இயலளவைபயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021<br>2022 | பெறுகை நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக மற்றும் சிக்கனமாக மேற்கொள்ள வேண்டும். | இந்த பொதியிடல் இயந்திரத்தை கொள்வனவு செய்யும் போது காணப்படும் செயலாக்க நிலையங்கள் தற்போதைய உற்பத்தி இயலளவை கவனத்திற் கொண்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் கூட்டுத்தாபன செயலாக்க நிலையங்களின் உற்பத்தி இயலளவு உயர்வடையும் போது உருவாகும் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் பயன்பாடு தொடர்பாக விடயப் பொறுப்பு அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் ஆரம்ப புலனாய்வொன்றை மேற்கொண்டு வருவதுடன், அதன் பிரகாரம் எதிர்காலத்தில் விடயப் பொறுப்பு அமைச்சின் ஆலோசனையின் மீது இந்த இயந்திரத்தின் பயன்பாடு தொடர்பாக குறித்த தீர்மானத்தை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் சுயமாக பொதியிடும் இயந்திரத்தினை கொள்வனவு செய்து சம்பந்தமான பரீட்சிப்பு நடாத்தப்பட்டிருந்தும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 13 | நிலைய பொறுப்பாளர்களிற்காக உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மானிப்பதற்கு கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கிராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்ட பயிர்செய்கை அபிவிருத்தி, சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு | 2022<br>2023 | நிர்மாணம் மேற்கொண்டு பயன்பாடிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த உத்தியோகபூர்வ இல்லங்களிற்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் சந்தையில் நிர்மாண பொருட்களின் விலை மற்றும் வேலைக் கூலி அதிகரித்ததால் குறித்த நிர்மாண பணிகளை முறையாக பூர்த்தி செய்து கொள்ள முடியவில்லை. விடயத்திற்கு | 2024 செப்தெம்பர் மாதம் அளவில் உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை |

| | |
|---|---|
| இராஜாங்க அமைச்சினால் ரூபா 15,653,000 ஆன தொகையொன்று ஒதுக்கப்பட்டு 07 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 அன்று இந்த உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமானவாறு முழுமையாகக் நிர்மாணித்து பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பான ல. அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துடன் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாண பணிகளை பூர்த்தி செய்யும் இயலுமை காணப்படுகின்றது. |

## 3.57 காணி சீர்திருத்த ஆணைக்குழு

| | மொத்த சொத்துக்கள் (ரூபா) | மொத்த பொறுப்புக்கள் (ரூபா) | உரிமை (ரூபா) | வரிக்கு முன் இலாபம் (ரூபா) | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 5,269,742,301 | 517,526,474 | 4,752,215,827 | 310,284,854 | கருத்துரை மறுப்பு |
| **2022** | 6,130,363,231 | 593,893,236 | 5,536,469,995 | 518,199,960 | கருத்துரை மறுப்பு |
| **2023** | 6,864,730,584 | 1,732,580,768 | 5,132,149,816 | 636,050,744 | கருத்துரை மறுப்பு |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் நாயகத்தின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கை திகதியன்று அவதானிப்பின் அமுலாக்கல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01. | காணிப் பதிவேட்டின் படி குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள காணிகள் 4,833 ஹெக்டயர்கள் உட்பட மொத்தக் காணிகளின் எண்ணிக்கை 156,838 ஹெக்டயர்களாக காணப்பட்ட போதிலும், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் 2,144 ஹெக்டயர்கள் (868 ஏக்கர் 6.9 பர்சஸ்களை கொண்ட 29 காணித் துண்டுகள்) மாத்திரம் பெறுமதி மதிப்பீடு செய்து அதன் பெறுமதி என ரூபா 905,285,000 தொகை நிதிக் கூற்றுக்களின மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அது 1.37 சதவீதமாக இருந்தது. அதன் படி காணிகளின் நியாயமான பெறுமதி கணக்குகளின் மூலம் சித்தரித்துக் காட்டப்படாததுடன், சரியான தன்மை மற்றும் அந்த காணிகளின் ஒட்டுமொத்த பெறுமதி தொடர்பாக | 2023<br>2022<br>2021 | சட்டத்தின் படி கையகப்படுத்திய காணிகளை உட்படுத்தி தயாரிக்கப்பட்ட காணிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் நியாயமான பெறுமதி கணக்குகளின் மூலம் சித்தரித்துக்காட்டப் பட வேண்டும். | பெறுமதி மதிப்பீடு செய்வற்காக காணிகளை நில அளவை செய்து நில அளவைப் படங்கள் வழங்க வேண்டியிருந்த போதிலும் அனைத்துக் காணிகளும் அவ்வாறு நில அளவை செய்திருக்கவில்லை. நில அளவை செய்யப்பட்ட குத்தகைக் காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக அனுப்பப்பட்டு, பெறுமதி மதிப்பீடு மாத்திரம் கணக்குகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. காணிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள காணிகள் மற்றும் அளவு, அகற்றப்பட்ட காணிகளின் எண்ணிக்கை மற்றும் மீதியான காணிகள் தொடர்பாக தகவல்கள் உட்படுத்தப்பட்டுள்ளது. அந்த மீதியான காணிகள் அமைந்துள்ள பிரதேசங்கள் தொடர்பான தகவல்களை | காணிப் பதிவேட்டின் படி குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணிகளை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கணக்காய்விற்கு உறுதிப்படுத்த முடியவில்லை. | | | அறிந்துகொள்வற்காக கூகூல் தொகுதி இலக்க தகவல்களும் அந்த பதிவேட்டில் உட்படுத்தப்பட்டுள்ளது. | |
| 02. | காணி மறுசீரமைப்பு சட்டத்திற்கு இணங்க கம்பனிகளில் இருந்து மற்றும் தனியாரிடமிருந்து உரித்தாக்கப்பட்ட 1,010 காணிக் கோப்புக்களுக்காக செலுத்த வேண்டிய இழப்பீடு 215,622,362 தொகையான மீதி (கட்டம் - I மற்றும் II) தொங்கல் கணக்கு ஒன்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான விபரங்கள் காணப்படாததுடன், அவை மிகையான அல்லது குறைவாக ஒதுக்கம் ஒன்றாக இருக்கக்கூடும் என அவதானிக்கப்பட்டுள்ளது. | 2023<br>2022<br>2021 | தனியார்களிடன் உரித்தாக்கப்பட்ட காணிகளுக்காக செலுத்த வேண்டிய நட்டஈடு சரியாக கணக்கீடு செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நட்டஈட்டுத் தொங்கல் கணக்கில் காணப்படும் மீதிகள் குறிப்பிட்ட கம்பனிகள் மற்றும் தனியாரினால் அந்தக் காணிகள் தொடர்பான அவர்களின் உரிமையை உறுதிப்படுத்திய பின்னரே தீரக்கூடியதாக உள்ளமையால் அவ்வாறு உரிமையை உறுதிப்படுத்திய நபர்களின் மாத்திரம் மீளாய்வாண்டின் போது உரிமையை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்கு இழப்பீடு கணிக்கப்படவில்லை. |
| 03. | ஆணைக்குழுவினால் தெங்குப் பயிர்ச்செய்கை சபைக்கு உடன்படிக்கையொன்று இன்றி குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த 1,539 ஏக்கர் 02 ரூட் 38.81 பர்சஸ் காணி தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை குத்தகை வருமானம் என ரூபா 354,658,614 தொகை இனங்கண்டிருந்த போதிலும், மீதியான காணியின் எண்ணிக்கையாகிய 1,588 ஏக்கர் 11 பர்சஸ் தொடர்பான அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை எவ்வளவு என இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில் | 2023 | இனங்காணப்படாத குத்தகையை வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கும் நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நாடுபூராகவும் 10 மாவட்டங்கள் 3,139 ஏக்கர் 01 ரூட் 16.11 பர்சஸ் தொகை குத்தகை அடிப்படையில் விற்பனை அடிப்படையில் 21 ஏக்கர் 03 ரூட் 39.23 பர்சஸ் தொகையும் வர்த்தமானி மூலம் 32 ஏக்கர்களும் மற்றும் தனதாக்கல் மூலம் 936 ஏக்கர்கள் 00 ரூட் 11.45 பர்சஸ் இற்காக அளவு ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. இந்த காணிகள் நில அளவைகள் மேற்கொள்ளாமல் 1979 – 1980 ஆண்டுகளின் போது தெங்குப் பயிர்ச் செய்கைச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டது. குத்தகை அறவிடப்படாமை தொடர்பில், கொள்கை ரீதியான தீர்மானம் | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளரினால் பணத்தினை செலுத்துமாறு உத்தரவிட்ட போதிலும் இதுவரை செலுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | லை. | | | எடுக்கப்பட்டு நிலுவை குத்தகை தொகையை செலுத்தும் படியும் மற்றும் எதிர்காலத்தில் குத்தகை தொகையை விதிக்கப்பட்டவாறு செலுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கும் படியும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| 04. | தெங்குப் பயிர்ச் செய்கை சபைக்கு குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய பயன்படுத்தல் கட்டணம் என ரூபா 31,688,608 தொகை இனங்கண்டிருந்த போதிலும், பெறவேண்டிய மீதி ஒன்றென நிதிக் கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை. | 2023 | பயன்படுத்தல் கட்டணம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். | 2024 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்காக உரிய பிரிவுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள ்ளது. | பயன்படுத்தல் கட்டணம் வசூலிக்கப்படவ ில்லை. |
| 05. | பதுளை மாவட்டத்தில் கந்தகெடிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கல்பிடியவத்த எனும் காணியின் 04 ஏக்கர்களில் படிகக் கற்கள் உடனான காணி தொடர்பாக நிலுவை குத்தகைத் தொகை ரூபா 5,250,480 இற்கான தொகை அறவிடப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாணடின் நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | 2023 | குத்தகைப் பேரேடு சரியாக தயாரிக்கப்படல் மற்றும் நிலுவைக் குத்தகை முறையான அங்கீகாரத்துடன் அன்றி நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்படக் கூடாது. | கணிம காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்கும் போது விஷேடமாக காரியம் மற்றும் படிக கணியங்கள் தொடர்பாக கணியம் மற்றுமன்றி காணி தொடர்பாகவும் குத்தகைத் தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது. அதன்படி, 2012 ஆண்டு தொடர்பாக பிரதான விலை மதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீட்டின் படி வருடாந்த குத்தகைத் தொகை ரூபா 453,600 தொகையாக காணப்பட்டதுடன், அந்தத் தொகை 05 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டியதன் கீழ் 2023.09.13 திகதி வரை பெற வேண்டிய தொகை ரூபா 5,250,480 தொகை ஆக காணப்பட்டது. இந்தக் குத்தகைக்காரரின் மரணத்திற்குப் பிறகு | அந்த குத்தகை தொகையில் ரூப 500,00 மாத்திரமே அறவீடு செய்யப்பட்டுள் ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அவரது மகனிடம் உரிமையை கையளிப்பதற்கு குத்தகைத் தொகையில் 50 சதவீதத்தினை ஒரே தடவையில் செலுத்தவும் எஞ்சியதை தவணை முறையில் செலுத்துவதற்கும் இணங்கி அறவீடு செய்வதற்கு தொடர்புடைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். | |
| 06. | பெற வேண்டிய 36 குத்தகை மீதிகள் தொடர்பாக ரூபா 777,136,104 தொகை வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய 15 மீதிகள் தொடர்பாக ரூபா 6,305,291 இற்கான மீதிகளிற்காக உறுதிப்படுத்தல் கடிதங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படாமையால் உண்மைத் தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | 2023<br>2022<br>2021 | வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் தொடர்பாக மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். | நிதிப் பிரிவு தொடர்பாக பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் தொடர்பாக மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக 24 கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும், அவற்றில் 07 கடிதங்களுக்கான மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள் கிடைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | அந்த மீதிகள் இதுவரை வசூலிக்கப்படாமல் உள்ளது. |
| 07. | கூட்டுத்தொகை ரூபா 4,002,737,774 தொகைக்கான வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளில் அடங்கியுள்ள 03 அரச நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய 30 வருடங்களை விஞ்சியுள்ள ரூபா 2,126,952,139 தொகை மற்றும் 10 வருடங்களை விஞ்சியுள்ள ரூபா 381,076,216 தொகைக்காக எதுவித ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அறவீடு செய்தலில் நிச்சயமற்ற | 2023<br>2022<br>2021 | அரச நிறுவனங்களுக்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 2,068,913,697 தொகை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கை முறையொன்று எடுக்கவும், ஹதபிம அதிகாரசபையிலிருந்து பெற வேண்டியிருந்த ரூபா 54,911,756 | 2024.08.28 அன்று நடைபெற்ற சபை முடிவின் பிரகாரம் இந்த மீதியினை அவ்வாறே காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கணக்குகளில் இருக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிலைமை காணப்பட்டது. | | | இற்கான மீதியினை இவ்வாறு தொடர்ந்தும் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. | |
| 08. | நிதிக் கூற்றுக்களில் பலவின கடன்பட்டோர்களின் கீழ் களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய இரண்டு மாவட்டங்களில் அமைந்துள்ள 08 காணித் துண்டுகளை குத்தகைக்கு பெற்றிருந்த நபர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,311,017 தொகை 24 வருடங்களை விட மிகையான காலம் முதல் நிலுவையாக காணப்பட்ட போதிலும், குறிப்பிட்ட குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023<br>2022<br>2021 | நிலுவை குத்தகை தொகைகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிலைமை தொடர்பாக ஆணைக்குழுவிற்கு 2024.07.02 திகதிய பத்திர இலக்கம் 12788 கொண்ட பத்திரம் சமர்ப்பிக்கபட்டதுடன், அங்கு தீர்மானிக்கப்பட்ட பெருநிறுவன கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் அவதானிப்புக்களுடன் மீண்டும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் படி தீர்மானிக்கப்பட்டிருந்தது. | பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 09. | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 11,322,992 தொகைக்கான காணிகள் விற்பனை முற்பண மீதியில் 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பேணப்பட்டு வந்துள்ள கூட்டுத்தொகை ரூபா 11,202,992 இற்கான மீதிகள் மற்றும் கூட்டுத்தொகையில் ரூபா 14,080,850 தொகைக்கான காணி குத்தகை முற்பணக் கணக்கு மீதியில் அடங்கியுள்ள 269 நபர்களிடமிருந்து பெற்றிருந்த ரூபா 11,215,850 இற்கான முற்பணத் தொகை 18 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காணிகளை சட்டரீதியாக விற்பனை செய்வதற்கு, குத்தகைக்கு கொடுப்பதற்கு அல்லது முற்பணத்தை திருப்பிச் | 2023<br>2022<br>2021 | விற்பனை முற்பணங்கள் மற்றும் காணி குத்தகை முற்பணங்கள என்பவற்றை தீர்த்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். | கணக்கீடு செய்யப்பட்டுள்ள இந்த காணி விற்பனை முற்பணம் அனேகமாக 2002 – 2004 காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த காணி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பானவை ஆகும். அக்காலப்பகுதியில் சாட்டப்பட்டிருந்த 219 காணிகளில் 11,942 ஏக்கர் தொடர்பான காணி எண்ணிக்கையில் தற்போது செழிப்பாக பயிர்ச் செய்யப்பட்டுள்ள 1,156 ஏக்கர் காணிளை பரிசோதனை செய்து விடயங்களை உறுதிப்படுத்தி 2022.02.17 திகதிய 11738 ஆணைக்குழுத் தீர்மானத்தின் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக வரைபு தயாரிக்கப்பட்டிருந்த அமைச்சரவை பத்திரம் | விற்பனை முற்பணம் மற்றும் நில வாடகை முற்பணம் என்பவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலுத்துவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | 2022.04.20 திகதி காணி அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. | |
| 10. | 1972 இன் 01 இலக்க காணி மறுசீரமைப்பு சட்டத்தின் பிரிவு 44(ஔ) இன் பிரகாரம் ஆணைக்குழுவினால் சேவையில் ஈடுபடுபவர்களுக்கு சேமலாப நிதியை உருவாக்கி மற்றும் நலனோம்பு, களியாட்ட விளையாட்டு வசதிகள் மற்றும் வீடமைப்பு மற்றும் விடுதி மற்றும் ஏனைய வசதிகள் வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஆணைக்குழுவின் இடையறாமல் 05 வருடம் சேவையாற்றிய ஊழியர்களுக்கு ஒரு பர்சஸ் காணி ரூபா 1,000 பெறுமதியில் 20 பர்சஸ் வீதம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, 2009 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 396 உத்தியோகத்தர்களுக்கு 49 ஏக்கர் 35.64 பர்சஸ் காணி வழங்கப்பட்டிருந்தது. | 2023<br>2022 | சட்டத்தின் விளக்கத்தை உரிய முறையில் வரைவிளக்கணம் செய்து செயற்படுத்த வேண்டும். | காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் பிரிவு 44(ஔ) பிரகாரம் 1982 – 1984 காலப் பகுதிகளில் ஊழியர்கள் அடிப்படையின் மீது காணிப் பகுதிகள் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டின் பின்னர் கொள்கை சார் தீர்மானத்தின் படி பிரதேசம் எதுவாக இருந்தாலும் வழங்கப்படுவது சமமான காணி அளவொன்றே ஆகும். காணிப் பகுதிகள் பெற்றுக்கொள்வதற்காக அடிப்படை தகைமைகள் என கவனிக்கப்பட்டது ஆணைக்குழுவில் இடையுறாத சேவைக்காலம் 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலங்கள் மற்றும் ஒழுக்கத்திற்கு மாற்றமாக விடயங்களில் சம்பந்தப்படாத ஒருவராக இருக்க வேண்டும். 2020.09.16 நடைபெற்ற ஆணைக்குழுக் கூட்டத்தின் போது 05 வருடங்கள் பூர்த்தி செய்துள்ள சேவைக் காலத்தையுடைய காணிப் பகுதிகள் பெற்றுக்கொள்வது தொடர்பாக காத்திருக்கும் பதிவேடொன்றின் மீது மேற்கொள்ளும் படி ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் காணிகளை வழங்குவதற்கு அனுமதி இல்லை. |
| 11. | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் | 2023 | மிகையாக செலுத்திய சம்பளம் மற்றும் | 2023.06.23 திகதிய சட்டமா அதிபருக்கு அனைத்துத் | இதுவரை தீர்க்கபடவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விதிக்கோவையின் அத்தியாயம் V பந்தி 1.1 இன் பிரகாரம் தாபனக் கோவைக்கு முரணாக 2020 ஒக்தோபர் 23 திகதி முதல் 2022 மார்ச் 31 திகதி வரை ஆணைக்குழுவின் செயற்திட்ட பணிப்பாளர் பதவியில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் போது 2021 ஜனவரி 01 திகதி முதல் மகநெகும வீதி நிர்மாணித்தல் இயந்திர உபகரணக் கம்பனியின் பிரதி பொது முகாமையாளர் (நிருவாகம்) பதவிக்காக ஒரு வருட தகுதிகான் காலத்தின் கீழ் நிரந்தர அடிப்படையின் மீது சேவைக்கு சேர்த்தப்பட்டு ஒரே காலப் பகுதியில் 02 நிறுவனங்களில் இருந்தும் சம்பளங்கள் மற்றும் படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி, ஆணைக்குழுவினால் குறிப்பிட்ட உத்தியோகத்தரின் வரவு மற்றும் அவரால் வழங்கப்படும் சேவை தொடர்பாக கவனம் செலுத்தாமல் சம்பளம் மற்றும் படிகள் என செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,038,979 இற்கான தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | 2022<br>2021 | படிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தகவல்களும் அடங்கிய கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. மேலும், 2024.01.10 மற்றும் 2024.04.22 திகதிகளிலும் கடிதங்கள் அனுப்பப்பட்டது. மேலும், இது தொடர்பாக இலங்கை சட்டவரைஞர் சங்கம் 2024.05.08 திகதி கடிதம் ஒன்று அனுப்பி இரண்டு அரச நிறுவனங்களுக்கு இடையிலான சிக்கல் என்பதால் அரச நிறுவனங்களில் காணப்படும் ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் தகைமையுடைய நடவடிக்கை எடுத்தல் பொருத்தம் என அறிவிக்கபட்டிருந்தது. | ல. |
| 12. | திறைசேரிச் செயலாளரின் 2022 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட அரச செலவுக் கட்டுப்பாட்டுச் சுற்றறிக்கையின் 2 ஆம் | 2023 | அரச செலவுக் கட்டுப்பாட்டுச் சுற்றறிக்கையின் படி செயற்பட வேண ் டும். | மாவட்ட பணிப்பாளரினால் அரச கட்டிடங்களில் இட வசதிகள் பெற்றுக்கொள்ள முடியாது என | அரச கட்டடங்களில் அலுவலகங்கள் இயங்கு வருகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரிவிற்கு இணங்க கட்டிடங்களை வாடகைக்கு எடுத்தல் நிறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் 07 மாவட்ட அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பேணிச் செல்வதற்காக 2022 மற்றும் 2023 ஆண்டுகள் தொடர்பாக குத்தகை வாடகை என ரூபா 49,571,072 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதேபோல், ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 50 வருடங்களை அண்மித்திருந்த போதிலும் ஆணக்குழுக்கு சொந்தமான கட்டிடங்களில் அலுவலகங்களை நிறுவுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவத்திற்கு முடியாமல் இருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது. | | | அறிவித்திருந்த பின்னர் வாடகை அடிப்படையில் பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் 03 மாவட்ட அலுவலகங்கள் ஆணைக்குழுவிற்கு சொந்தமான கட்டிடங்களில் நடாத்தப்பட்டு வருவதுடன் மேலும் 10 மாவட்ட அலுவலகங்கள் அரச கட்டிடங்களில் நடாத்தப்பட்டு வருகின்றது. | |
| 13. | ஆணைக்குழுவிற்கு சொந்தமாக காலி குருந்துகஹ ஹெதக்ம 31.5 பர்சஸ் இற்கான காணியுடனான கட்டிடத்தில் ஆணைக்குழுவின் காலி மாவட்ட அலுவலகம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் காலி நகர அண்மையில் அமைந்துள்ள 9.79 பர்சஸ் இற்கான கட்டிடம் ஒன்றில் ரூபா 65,000 இற்கான மாதாந்த குத்தகைக்கு பெற்று பேணிச் செல்லப்படுகின்ற காரணத்தினால் 2018 ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 திகதி வரை செலுத்தப்பட்டிருந்த | 2023 | கிரயம் குறையக் கூடிய விதமாக செயற்பட வேண்டும். | 2018 ஆண்டில் உப அலுவலகம் என இந்த இடம் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், காலி நகரத்திலிருந்து 39 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள காரணத்தினால் ஏனைய கடமை அலுவல்களுக்கும் சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது என அவதானிக்கப்பட்டது. | இந்த அறிக்கை திகதி வரை காலி அலுவலகம் வாடகை கட்டடத்தில் இயங்குகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கட்டிட வாடகையாகிய ரூபா 4,870,000 தொகை விளைவற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது. | | | | |
| 14. | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலுவைக் காணி குத்தகைப் பெறுமதி ரூபா 1,180,434,743 இற்காக 401 குத்தகைதாரர்கள் இருந்ததுடன், அவற்றில் 116 குத்தகையாளர்களுக்கு மாத்திரம் குத்தகை உடன்படிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன், நிலுவை குத்தகையாகிய ரூபா 904,486,633 இற்கு உரிய 285 குத்தகைதாரர்கள் சட்டரீதியான உடன்படிக்கைகளுக்கு அணுகாமல் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது நிலுவை குத்தகைத் தொகையில் அறவீடு செய்யப்பட்ட பெறுமதி 13 சதவீதம் மற்றும் மீளாய்வாண்டின் வருமானத்திலிருந்து அறவிடப்பட்ட பெறுமதி 30 சதவீதமாக காணப்பட்டது. அதன்படி, சட்டரீதியான உடன்படிக்கைகள் இன்றி குத்தகைக்கு கொடுத்திருந்தமையால் நிலுவை குத்தகை தொகையை அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு முடியாதுள்ளது. | 2023<br>2022 | குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுக்காக சட்டரீதியான உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2023.12.31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய குத்தகை தொகை தொடர்பாக 403 குத்தகையாளர்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த எண்ணிக்கையில் குத்தகை செலுத்தப்படாமைக்காக அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய குத்தகைதாரர்கள் 246 ஆக காணப்பட்டதுடன், வருடாந்த மற்றும் தவணை அடிப்படையில் குத்தகையை அறவீடு செய்வதற்குரிய குத்தகையாளர்கள் 157 பேர் காணப்பட்டனர். குத்தகை அறவிடப்படாத சட்ட செயற்பாட்டின் மூலம் விரைவாக அறவிடப்படுவதற்காக மேலும் வகைப்படுத்தப்பட்டு அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அனைத்து குத்தகைகாரர்களுக்கும் குத்தகை உடன்படிக்கை வழங்கப்படவில்லை. |
| 15. | காணி மறுசீரமைப்பு சட்டத்திற்கு இணங்க தனியார் கம்பனி ஒன்றிற்கு சொந்தமான தெம்பல் ஸ்டோ வத்த காணி 1974 ஜூலை 09 | 2023 | முறையான செய்முறை ஒன்றின் மூலம் சிக்கலற்ற உரிமையை உரித்தாக்கிக் | தனியார் கம்பனியினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மற்றும் அதனொடு தொடர்புடைய 05 வழக்குகளுக்காக | உரிமைகோரப்படாத காணியினை தேடிப் பார்க்காமல் கைப்பற்றுவதற் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திகதி உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கம்பனியினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தீர்ப்பின் படி 439 ஏக்கர் 02 ரூட் 03 பர்சஸ் அளவு 1993 நவம்பர் 23 திகதி மீண்டும் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கம்பனிக்கு 1974 இல் இருந்து 1993 வரையான காலத்திற்காக அவர்கள் இழந்த வருமானம் மற்றும் இழந்த நட்டங்களுக்காக வட்டி தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வழங்கியிருந்த கட்டளையை நிறைவேற்றாமையால் 2001 ஆண்டு செலுத்த வேண்டிய தொகையாகிய ரூபா 100 மில்லியன் தொகையினை அந்தக் காலத்தில் செலுத்தாமையால் அந்தத் தொகைக்கு வருடாந்த வட்டியும் சேர்த்து ரூபா 500 மில்லியன் தொகை செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. அதன்படி, ரூபா 400 மில்லியன் தொகை மிகையாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது | | கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | நட்டம் ஆக நட்டத் தொகையை செலுத்தும் படி (means and profites) குறிப்பிட்ட அந்த மாவட்ட நீதிமன்றத்தினால் 2001.02.23 திகதி தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும், வட்டியை செலுத்துவதற்கு அதன் மூலம் தீர்ப்பு வழங்கியிருக்கவில்லை. ஆணைக்குழுவினால் மீள் மேன்முறையீடு மற்றும் திருத்த கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் நட்டத்திற்கு 100 சதவீத வட்டியொன்றும் அதன் மீது சட்டரீதியான வட்டியொன்றும் செலுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்தது. சட்டமா அதிபரின் அறிக்கையொன்று அழைப்பதன் அடிப்படையில் இந்த இணக்கம் ஏற்படுத்துவதற்கு பொருத்தமான கொள்கைசார் தீர்மானமொன்று எடுப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, 2024.04.24 திகதி ரூபா 500 மில்லியன் தொகை முறைப்பாட்டாளர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கு பரிந்துரை வழங்கிய தரப்பினர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| 16. | ஆணைக்குழுவின் ஒன்றித்த கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்று 2019 மே 22 திகதி தனியார் நிறுவனமொன்றில் இருந்து ரூபா 8,500,000 தொகைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த | 2023<br>2022<br>2021 | ஒன்றித்த கணக்கீட்டு மென்பொருள் முறைமையை நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | MIS தகவல் முறைமையின் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக Science Land Information Technology (Pvt) Ltd நிறுவனம் மற்றும் தொழில்நுட்ப | மென்பொருள் முறைமை பயன்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போதிலும் அந்தத் தகவல் முறைமையின் மூலம் பெற வேண்டிய காணிக் குத்தகை தொகை தொடர்பாக தகவல்கள் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் முடியாமல் இருந்தது. | | | மதிப்பாய்வுக் குழுக் கூட்டம் கூடியதுடன், அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் TOR இன் படி கூடிய விரைவில் தகவல் முறைமையின் மூலம் பெற வேண்டிய காணிக் குத்தகைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு முடியுமானவாறு MIS தகவல் முறைமையை தயாரித்துத் தருவதாக இணங்கியிருந்தது. அதன்படி, தற்போது கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக முறைமை தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் இது தொடர்பாக சட்டச் செயற்பாடுகள் எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | |
| 17. | ஆணைக்குழுவிற்காக முழுமையான ஒன்றித்த கணினி முறைமையொன்று தயாரித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக 2002 ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 17,000,000 இற்கான தொகையினை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கும் படி 2022 அரச தொழில் முயற்சிகள் குழுவிற்கு அறிவித்த போதிலும் அதன்படி செயற்படுவதற்கு இந்த அறிக்கை திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023<br>2022<br>2021 | பணத்தை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த முறைகேடு தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைகளம் மற்றும் இலஞ்சம் ஊழல்கள் விசாரணை ஆணைக்குழுவினால் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிப்பதற்கு போதியளவு சான்றுகள் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரிந்துரை பெற்றுக்கொள்வதற்காக காணி அமைச்சின் மூலம் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இது வரை திறைசேரியிலிருந்து பதில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. முழுமையான | தொகை மீண்டும் அறவீடு செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அறிக்கையொன்று பொது முயற்சிகள் மீதான குழுவிற்கு அனைத்துத் தகவல்களும் சமரப்பிக்கப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தினால் ஆலோசனைகள் வேண்டி 2023.08.24 திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், இது வரை பதில் கிடைத்திருக்கவில்லை. | |
| 18. | ஆணைக்குழுவினால் காணிகள் நிலஅளவை செய்யப்பட்டு வதிக்கப்பட்டவாறு ஆக்கும் சந்தர்ப்பத்தில் காணித் துண்டுகள் பெறுவோரிடம் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் நிலஅளவையாளர்களுக்கு 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 33,229,487 இற்கான தொகையில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 7,616,274 தொகை மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அத்திகதியில் உள்ளவாறு மேலும் பெற வேண்டிய மீதி ரூபா 25,613,213 தொகை காணப்பட்டது. | 2023<br>2022<br>2021 | காணித் துண்டுகள் பெறுவோருக்கு வழங்கப்பட்ட சந்தரப்பத்தில் நில அளவை செய்து கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காலி மாவட்டத்தில் விஷேட செயற்திட்டம் என ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ள அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர்களுக்கு 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது ஆணைக்குழுவினால் நில அளவைக் கட்டணம் என செலுத்தப்பட்டிருந்த ரூபா 33,229,487 தொகையில் 2023.12.31 திகதி அளவில் ரூபா 25,613,211 தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அதில் ரூபா 1,081,472 இற்கான தொகையொன்று 2024.06.30 திகதி மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 2024.06.30 திகதி அளவில் ரூபா 24,531,739 தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது. எவ்வாறாயினும் காணித் துண்டுகளை பெற்றவர்களுக்கு பணம் செலுத்தும் படி அறிவித்து அந்தப் பணம் அறவீடு செய்யும் | இந்த நிலுவைத் தொகையினை வசூலிப்பது தொடர்பில் சட்டமா அதிபரிடம் கோரியுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | படி காணிப் பணிப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| 19. | ஆணைக்குழுவிற்கு சொந்தமான நாவலப்பிட்டி டில்டன் வத்த காணியில் தேயிலைத் தொழிற்சாலையுடன் 02 ஏக்கர் 01 ரூட் 05 பர்சஸ் அளவான காணி முப்பது ஆண்டு குத்தகை அடிப்படையில் 1997 ஆகஸ்ட் 30 திகதி முதல் வருடாந்த குத்தகைத் தொகை ரூபா 270,000 வீதம் தனியார் கம்பனி ஒன்றுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. 2008 ஆண்டின் போது தனியார் தரப்பினர் ஒருவரினால் மேற்கூறிய நிறுவனத்தின் வியாபார பெயருடன் காணியை உரித்தாக்கியிருந்த போதிலும் இது தொடர்பாக அங்கீகாரம் ஒன்று மற்றும் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் அறவீடொன்றின்றி முறைசாரா விதமாக அனுபவிப்பதற்காக ஆணைக்குழுவினால் இடமளிக்கப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதி வரை 26 வருட காலம் முதல் அறவிடப்பட வேண்டிய குத்தகை தொகை ரூபா 18,403,926 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023<br>2022 | நிலுவை குத்தகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டியில் அமைந்துள்ள டில்டன் தோட்டம் 30 வருடங்களுக்காக வ/ப சுப்பர் இன்டஸ்ரீஸ் அன்ட் எக்ஸபோர்ட் தனியார் கம்பனிக்கு உரித்தாக்கப்பட்டிருந்ததுடன், குத்தகை செலுத்தாமையால் நாவலப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் இலக்கம் 79899/18 மற்றும் 2021.03.26 திகதிய வழக்குத் தீர்ப்புப் படி திலக் குமார உடுகம அவர்களை இந்த ஆதனத்திலிருந்து வெளியேற்றுவதற்காக கட்டளை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. நிலுவைத் தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக 2024.01.10 திகதி சட்டமா அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. | நிலுவைக் குத்தகைத் தொகை அறவீடு செய்யப்படவில்லை. |
| 20. | காலி அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள லட்சமி பீ வத்த எனும் காணியில் 08 ஏக்கர்கள் 30 வருட காலத்திற்காக ‘‘மன்றமொன்றிற்கு’’ குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு காணியின் அனுபவித்தல் ஒரு பக்க | 2023<br>2022<br>2021 | உரித்தாக்கப்பட்ட காணியானது சட்டத்தின் குறிக்கோளுக்காக பயன்படுத்தப்பட வேண்டியதுடன் நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கும் | காலி மாவட்டத்தில் அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள லட்சமி பீ வத்த எனும் காணியில் இருந்து ஸஹன சிறுவர் அபிவிருத்தி மன்றத்திற்கு 08 ஏக்கர் காணி 2005.01.01 திகதி குத்தகை அடிப்படையில் | இந்த நிலுவைத் தொகையினை வசூலிப்பது தொடர்பில் சட்டமா அதிபரிடம் கோரியுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சார்பாக ஆணைக் குழுவிற்கு 2021 ஆண்டில் உரித்தாக்கபட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் நிலுவையாக காணப்பட்ட ரூபா 6,998,800 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கு ஆணைக்குழு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழங்கப்பட்டிருந்தது. 2022.12.31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூபா 6,998,800 ஆகும். 2005 முதல் இதுவரை எவ்வித குத்தகைத் தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. மதகுரு காலமாவதற்கு முன்னர் இந்தக் காணியிலிருந்து 03 ஏக்கர் அளவு விக்ரமசிங்க என்ற பெயருள்ள நபருக்கு உரித்தாக்கப்பட்டிருந்ததுடன், அவர்களால் இந்த 03 ஏக்கர்களில் அகாவுட் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு அனுபவித்து வந்த பகுதியை அவர்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும், மீதியான 05 ஏக்கர்களில் அதில் அடங்கியுள்ள கட்டிடங்களும் உட்பட ஆணைக் குழுவிற்கு உரித்துடைய நிலுவை குத்தகை தொகைக்கு பதிலீடு செய்து கட்டிடங்களுடன் வேறு தகைமையுடைய குத்தகைதாரர் ஒருவருக்கு வழங்குவதற்கு ஆணைக்குழுவின் ஆலோசனை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 21. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான களுத்துறை மாவட்டத்தில் ஹொரணை பிரதேச செயலகப் பிரிவில் மாஹேன வடக்கு 615 பீ கிராம சேவகர் பிரிவிற்கு சொந்தமான காணியில் பகிரப்படாத 14 ஏக்கர் 01 ரூட் 9.9 பர்சஸ் இற்கான காணியில் அங்கீகாரம் இன்றி | 2023<br>2022 | அங்கீகாரமற்ற அனுபவிப்பவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். | ஹேகல்ல வத்த காணியை இனங்காண்பதற்காக இலக்கம் 15/06/3626 மற்றும் 2021.05.21 திகதிய நில அளவைக் கட்டளையின் படி நில அளவை மேற்கொண்டு இலக்கம் 1581 மற்றும் 2021.07.22 திகதிய நில அளவைப்படம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பான வழக்கு நடைபெறுவதுடன் இதன் நடவடிக்கை நிறைவு செய்யப்படவில்லை. பிக்குவின் அங்கீகரிக்கப்படாத |

மதகுரு ஒருவர் 05 ஏக்கருக்கு அண்மித்த அளவொன்றும், வேறொரு தனியார் காணி உரிமையாளர் 66 பர்சஸ்களுக்கு மிகையான எண்ணிக்கையொன்றும் அனுபவித்து வருவதுடன், 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் பிரிவு 16 இற்கு இணங்க அங்கீகாரமின்றி அனுபவிப்பவர்களை வெளியேற்றுவதற்காக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

அந்த நில அளவையின் போது தற்போது சுஜாதா வீரகோன் என்பவர் உரிமை பாராட்டும் பங்களா உட்பட 66 பர்சஸ் பகுதிக்கு மேலதிகமாக காணியின் ஒரு பகுதியை அங்கீகாரம் இன்றி அனுபவிக்கப்படுகின்றது என கண்டறியப்பட்டதுடன், அந்தப் பகுதி 1581 நில அளவைப் படத்தின் துண்டு இலக்கம் 08 என காட்டப்பட்டுள்ளது. எனினும், சுஜாதா வீரகோன் இனால் தற்போது CA(W)576/2021 கொண்ட வழக்கு ஆணைக்குழுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தமையால் அந்த அங்கீகாரமற்ற செயற்பாடு தொடர்பாக அதுவரை நடவடிக்கை ஏதும் எடுப்பதற்கு முடியாது இருந்தது. பயிற்சி நிலையம் ஒன்றிற்காக இஸிபதனாராமபதி சங்கைக்குரிய கௌரவ ரன்ஓும் தென்னே தம்ம ரன்ஸி பிக்குவினால் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், அந்த கோரிக்கையின் படி 1581 நில அளவைப்படத்தின் மூலம் 04 ஏக்கர் 02 ரூட் 00 பர்சஸ் சிக்கலற்ற காணிப் பகுதியொன்றை ஆணைக்குழுவின் பெயரில் நில அளவை மேற்கொள்வதற்காக இலக்கம் 15/06/3626 மற்றும் 2021.11.08 திகதிய நில அளவைக் கட்டளை

செயற்பாடுகளை நிறுத்துவதற்கு 2024.10.14 அன்று கடிதத்தில் தகவல் அழைக்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வழங்கப்பட்டிருந்தது. எனினும், சுஜாதா வீரகோன் என்பவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இலக்கம் CA(W)576/2021 கொண்ட வழக்கு ஆணைக்குழுவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமையால் நில அளவை மேற்கொள்ள முடியாமல் போனதால் குத்தகைக்கு வழங்குவதற்காக அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |
| 22. | கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவ வெள்ளம்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள ஜா கொடுவ வத்த காணியில் இருந்து 01 ரூட் 9.79 பர்சஸ் அளவு காணி வருடாந்த குத்தகை ரூபா 1,590,000 தொகை வீதம் நபர் ஒருவருக்கு உரித்துடைய காணியின் சந்தைப் பெறுமதி மீது அது ரூபா 26,500,000 தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், குத்தகைத் தொகை மிகவும் கூடிய பெறுமதியினை கொண்டிருந்தமையினால் அதனை செலுத்த முடியாது என அறிவித்திருந்ததுடன், அதுவரை குத்தகைத் தொகை ஏதும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023<br><br>2022 | அரச பெறுமதி மதிப்பீடு மீது குத்தகை அறவீடு செய்யப்பட வேண்டும். | 2021 ஆண்டின் போது பிரதான விலை மதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் குத்தகைத் தொகை ரூபா 1,590,000 ஆகும்.இந்த வியாபாரத்தின் மூலம் உழைக்கக்கூடிய வருமானத்தில் இருந்து இந்த குத்தகைத் தொகையை செலுத்துவது முடியாதமையால் மீண்டும் குத்தகையை திருத்தித் தரும்படி கோரப்பட்டது. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதிலும் அதனை மாற்ற முடியாது என விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதுவரை அரச பெறுமதி மதிப்பீடு கிடைத்திருக்காமையால் குத்தகை உடன்படிக்கைகளையும் வழங்க முடியாமல் உள்ளது. | உரிய குத்தகையை வசூலிப்பதற்கு அல்லது குத்தகைதாரரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. |
| 11 | தொழில் ஆணையாளரின் EPF/FROT/22 ஆம் இலக்க 2023 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய கடிதம் மூலம், இலங்கை பொறியியற் பேரவையின் ECSL / EPF /2023 /02 ஆம் இலக்க 2023 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய கடிதம்மூலம் கோரப்பட்டுள்ள "ஓ" குறிப்பிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய இல. 1, 3 மற்றும் 4 உரித்துடைய ஊழியர்களுக்கு மட்டும் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் கீழ், 2022 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து செயற்படும் தொழில்கொள்வோர் பங்களிப்புத் தொகை 12சதவீதத்திலிருந்து 15சதவீதம் வரையிலும், ஊழியர் பங்களிப்புத் தொகை 8சதவீதத்திலிருந்து 10சதவீதம் வரையிலும் அதிகரிப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஊழியர் சேமலாப நிதிய இல. 5, 6 மற்றும் 7 உரித்துடைய ஊழியர்களுக்கும் மேற்குறிப்பிட்டவாறு | 2023 | ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க ஒவ்வொரு ஊழியருக்கும் சமமான விதத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது சேவையில் இருக்கும் 7ஆம் இலக்க ஊழியருக்கு ஊழியர் பங்களிப்பு தொகையை 10 சதவீதமாகவும், தொழில்வழங்குனரின் பங்களிப்பு தொகையை 15 சதவீதமாகவும் அதிகரிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | ஊழியர்களின் சேமலாப நிதியச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்காத கொடுப்பனவுகளுக்கு முறையான அனுமதி பெறப்படவில்லை. |

கணக்கிடப்பட்டு ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகை ஊடாக சேமலாப நிதியமாக ரூபா 40,896 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.61. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலைக் கல்லூரி

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | மூலதனம் ரூபா | இலாபம்/மிகை/(நட்டம் /பற்றாக்குறை) ரூபா | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| 2021 | 1,378,422,976 | 26,420,228 | 1,352,002,748 | 28,959,511 | முனைப்பழியுள்ள |
| 2022 | 1,487,351,366 | 89,459,309 | 1,397,892,057 | 86,736,631 | முனைப்பழியுள்ள |
| 2023 | 1,550,302,519 | 74,344,834 | 1,475,957,685 | 117,304,421 | முனைப்பழியுள்ள |

.

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01. | 1980 இன் 46 இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் பிரகாரம் கல்லூரியின் சிவில் ஆளணிக்காக 2009 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய போதும் செலுத்தியிருக்கவில்லை. தற்போது சேலையில் ஈடுபட்டுள்ள 64 ஊழயர்களிற்காக செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 7,583,786 ஆனது. | 2022 | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2009 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலவு வைக்கப்படவில்லை. தொழிலாளர் திணைக்களத்தினால் கிடைக்கும் ஆலோசனை மீது முன்நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கப்படுகிறது. | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை 2023 ஆண்டு இறுதியிலும் பெற்றிருக்கவில்லை. |
| 02. | ஹெய்யன்துடுவ இளைஞர் சேவை சபைக்கு சொந்தமான 11 ஏக்கர் காணியில் கல்லூரியினால் கட்டிடங்களை நிர்மாணித்து அவற்றை பயன்படுத்திக் கொண்டிருந்த போதும் அக் காணியின் சட்டரீதியான உரிமையை நடைமுறை ஆண்டின் திசெம்பர் 31 அளவிலும் சுவீககரித்திருக்கவில்லை. | 2022 | காணியின் சட்டரீதியான உரிமையை சுவீகரித்துக் கொள்ள வேண்டியமை. | ஏக்கர் 11 பர்சஸ் 10 அளவான காணியை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சுவீகரித்துக் கொண்டுள்ளதுடன், அக் காணி அளவை கல்லூரிக்கு சுவீகரிக்கும் நடவடிக்கைக்காக | காணியின் உரிமையை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் 2023 ஆண்டு இறுதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கம்பஹ மதிப்பீட்டு அலுவலகத்தினால் மதிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொண்டு அங்கீகாரத்திற்காக கொழும்பு பிரதான மதிப்பீட்டு அலுவலகத்திற்கு சமர்பித்துள்ளதுடன், இவ் அங்கீகாரத்தை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு அனுப்பியதன் பின்னர் காணி சுவீகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 03. | அரச நிதித் திணைக்களத்தின் 2023 இலக்கம் PF/FD/04/198 கொண்ட மற்றும் 2016 சனவரி 05 திகதிய கடிதம் பிரகாரம் பதவி நிலைக் கல்லூரியின் சிவில் ஆளணிக்காக வழங்கும் இடர் கடன் உத்தேச திட்டத்திற்குரிய கடன் வழங்குதல் மற்றும் அறவிடுவதது தொடர்பான நிபந்தனைகள் உள்ளடங்கிய சுற்றறிக்கை வெளியிட அல்லது யாப்பொன்றை தயாரித்திருக்கவில்லை. | அரச நிதிச் சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள வழிகாட்டிகளை இடர் கடன் உத்தேச திட்டத்திற்காக அமுல்படுத்தப் பட வேண்டும். | இது தொடர்பாக குழுவொன்றை நியமித்து குறித்த சுற்றறிக்கை வெளியிட அல்லது யாப்பை தயாரிக்க குறித்துக் கொள்ளப்பட்டது. | குறித்த வழிகாட்டிக் கோவை வெளியிடப்பட்டு இருக்கவில்லை. |

### 3.62. ரணவிரு சேவைகள் அதிகார சபை

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | மூலதனம் ரூபா | இலாபம்/மிகை/(நட்டம் /பற்றாக்குறை) ரூபா | கணக்காய்வு அபிப்பிராயம |
|---|---|---|---|---|---|
| **2021** | 1,142,552,266 | 467,772,967 | 674,779,298 | 19,846,298 | முனைப்பழியுள்ள |
| **2022** | 1,086,119,189 | 312,035,402 | 774,083,787 | 121,972,695 | முனைப்பழியுள்ள |
| **2023** | 1,253,039,378 | 260,882,291 | 992,157,086 | 245,654,689 | முனைப்பழியுள்ள |

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **ஆறிக்கை ஆண்டு** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** | **கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை** |
|---|---|---|---|---|---|
| 01. | ரணவிரு சேவைகள் அதிகார சபையின் இரண்டு உத்தியோகத்தர்களிற்கு 2014 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 1,830,450 இற்கான முற்பணத் தொகை 2021 திசெம்பர் 31 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை . | 2021 | அதிகார சபையியிற்கு அறவிப்பட வேண்டிக் காணப்பட்ட தொகையை விரைவில் உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முதலாவது ஒழுக்காற்று விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டமையால் தனிநபர் தீர்ப்புச் சபையின் முடிவு தொடர்பாக திருப்தியடையாததால் அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல் பிரகாரம் 2022.2.18 இலிருந்து மீண்டும் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் விசாரணைகள் இதுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | விசாரணை நடவடிக்கைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| 02. | ரணவிரு பெற்றோர் | 2021 | அதிகார | இந்த | விசாரணை |

| | | | |
|---|---|---|---|
| பாதுகாப்பு கொடுப்பனவு முறைமையின் கீழ் 2016 ஜுன் மாதம் தொடக்கம் 2017 நவம்பர் மாதம் வரையான 18 மாதங்களில் கணக்கு உரித்துடைய இருவருக்கு முறையற்ற ரீதியில் ரூபா 5,940,500 ஆன தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இத் தொகையில் ரூபா 4,978,580 மீளாய்வாண்டின் இறுதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபையியிற்கு அறவிப்பட வேண்டி இருந்த தொகையை விரைவில் உரிய தரப்பினரிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறைகேட்டிற்காக ஒரு சிவில் பிரஜை மற்றும் ரணவிரு சேவைகள் அதிகாரசபையின் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற 15 உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 16 பேர்கள் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். அவர்களில் 6 பேர்கள் ஆயுதப் படைக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் மற்றும் சிவில் பிரஜைகள் தொடர்பாக தாபனக் விதிக்கோவையின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனைய 9 உத்தியோகத்தர்களில் 7 பேர்கள் சேவையிலிருந்து விலகியுள்ளனர். 2 போகள் மாத்திரம் தற்போது சேவையில் உள்ளனர். அந்த இருவரைத் தவிர மற்றைய உத்தியோகத்தர்களுக்கான | நடவடிக்கைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கைகளை எடுப்பதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மூலம் கோட்டை நீதவான் நீதி மன்றத்தில் இலக்கம் பீ/11041/2018 இன் கீழ் முறைப்பாடொன்று கோவைப்படுத்தப்பட்டு உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 03. | விருசரு அட்டைகள் தயாரிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சிலிருந்து 2016 ஆணடில் கிடைக்கப்பட்டிருந்த ரூபா 16,607,826 தொகையிலிருந்து ரூபா 3,607,941 தொகை எஞ்சியிருந்ததுடன் அத்தொகை 5 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | 2021 | குறித்த நோக்கத்திற்காக கிடைத்துள்ள பணத்தை செயற்திறனுடன் நோக்கத்திற்காக ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விருசரு அட்டைகள் வழங்கும் இரண்டாம் கட்டத்திற்காக அத் தொகையை பயன்படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | விருசரு அட்டைகள் இரண்டாம் கட்டத்திற்காக விநியோகித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத் தொகையிலிருந்து ரூபா 2,597,121 தொகை மீதமாகவுள்ளது. |
| 04. | 2014 ஆண்டின் போது அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட க்ளெடின் | 2022 | முறைகேடுகள் தொடர்பாக விரைவாக விசாரணை செய்து நட்டமடைதலை குறைத்துக் | இது தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக இலஞ்ச அல்லது ஊழல் விசாரணை | குறித்த விசாரணை நடவடிக்கைகளை பூர்த்தி செய்யதுள்ள போதும் அதற்காக பெறுப்புக்கூற |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொருத்துவதற்காக டீ.சீ.ஐ. (T.C.I ENTERPRISES PVT LTD) நிறுவனத்திடமிருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த ரூபா 224,063 இற்கான தொகை நடைமுறை ஆண்டு இறுதிவரை விடுவிக்கப்பட்டு இருக்காததுடன் 2014 ஆண்டில் ரூபா 4,481,269 தொகைக்கான அந்தக் கொடுக்கல் வாங்கல்களின் மீது காணப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக விசாரணை ஒன்று செய்யபட்டிருக்கவில்லை. | | கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆணைக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2022 ஆண்டு இறுதி வரை இந்த ஒப்பந்த வேலைக்குரிய விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையால் குறிப்பிட்ட தடுத்து வைத்தல் பணம் செலுத்த வேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | வேண்டிய நபர்களை இனங்கண்டிருக்கவிலலை. |
| 05. | 2017 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் ஒன்றிணைந்து செயற்படுத்தப்பட்ட விருசுமிதுரு வீடமைப்புத் செயற்திட்டத்தின் கீழ் 1950 முழுமையான வீடுகளும் 1700 பாதியளவு வீடுகளும் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 3192 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. 2019 ஆண்டில் வேலைகளை பூர்த்தி | 2022 | வழங்கப்பட்டிருந்த கருத்து வேறுபாட்டுத் தன்மையுள்ள கடன்கள் திருப்பிப் பெற வேண்டும். | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் விருசுமிதுரு வீடமைப்பு செயற்திட்டத்திற்காக வருடாந்தம் தேவைப்படும் ஏற்பாடுகள் குறைவாக மதிப்பீடு செய்தலும், மதிப்பீடு செய்யப்பட்ட தொகையும் அந்த அதிகார சபையின் ஏனைய வீடமைப்பு | பிச்சினைக்குரிய தொகையை 2023 ஆண்டு இறுதி வரையும் அறவிடபட்டிருக்காததுடன் குறித்த கருத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. |

செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆண்டு வரை நீடிக்கப்பட்டு இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 திகதியளவில் மொத்த செயற்திட்டச் செலவில் ரூபா 1035.1 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டு இருந்தது. செயற்திட்டத்தின் ஒரு தவணைப் பணம் அல்லது கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டுள்ள முழுமையான வீடுகள் 1496 ஆகும். அதன் படி மீளாய்வாண்டு இறுதியளவிலும் எதிர்பார்த்த வீடு இலக்குகளில் 40 சதவீதம் மாத்திரம் பாதியளவு மற்றும் முழுமையாக உதவி வழங்கப்பட்டிருந்த நலன்பெறுவோர் எண்ணிக்கை 550 ஆகக் காணப்பட்டமையால் அது மொத்த செயற்திட்டத்தின் 15 சதவீதமாகும். மேலும் 2019 ஆண்டில் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் உதவிபெறுவர் 6 பேருக்கு வழங்கியிருந்த ரூபா 865,000 இற்கான தொகையொன்று பல்வேறு சிக்கல் தன்மை காணப்பட்டமையால்

செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்படுவதனாலும், நலன்பெறுவோரின் வீடுகள் நிர்மாணிப்பதற்காக பணம் உரிய முறையில் விடுவிக்கப்படாமையினாலும், நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கு காரணமாக இருந்தது. இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் வீடமைப்பு அதிகார சபையை அறிவுறுத்திய போதிலும் எதிர்பார்த்தவாறு உரிய கருமத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் போனது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீண்டும் அதனை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | | | | |
| 06. | நிதிப் பிரமாணம் 104 (4) இன் படி இழப்பு ஏற்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், 2023 பெப்ரவரி 03 ஆம் திகதி இரண்டு வளிப் பதனாக்கிகளின் ரூபா 110,833 பெறுமதியான செப்புக் குழாய்கள் திருடப்பட்டமை தொடர்பான விசாரணைகள் முடிவுறுத்திருக்கவில்லை. | 2023 | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | போலீஸ் இது தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாகவும், நிறுவன ரீதியாக நி.பி 104 ன் கீழ் விசாரணையொன்று நடத்த குழுவும் நியமிக்கப்பட்டது. அக் குழுவின் அறிக்கை தற்போது அதிகாரசபைக்கு கிடைத்துள்ளது, அதிகார சபையிடம் கிடைத்துள்ளதுடன் , அதை முகாமைத்துவக் குழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவது என அறிவிக்கப்பட்டிருந்து. | விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்திருக்கவில்லை. |
| 07. | 1999 இன் 54 ஆம ரணவிரு சேவைகள் அதிகாரசபை சட்டத்தின் 06 பிரிவின் | 2023 | 1999 இன் 54 ஆம் இலக்க ரணவிரு சேவைகள் சட்டத்தின் பிரகாரம் | இராணுவ நடவடிக்கையின் காரணமாக உயிரிழந்த, | நாளாதுவரை ஆக்கப்பட்ட தகவல் தொகுதியொன்றை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம் சட்டம் அமுல்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் இராணுவ நடவடிக்கையின் போது அங்கவீனமுற்ற உயிரிழந்த அல்லது காணாமல் போன ஆயுதப்படைகள் மற்றும் காவல்துறையின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் தங்கி வாழ்பவர்கள் பற்றிய பெயர் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதும் அதிகாரசபை நிறுவப்பட்டு 23 வருடங்கள் மற்றும் யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அந்த பெயர்கள் உள்ளடங்கிய தகவல் தொகுதியொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணாமல் போன மற்றும் அங்கவீனமான இராணுவ வீரர்களின் சேவை இலக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தரவுத் தொகுதியில் தகவல்கள் நாளாதுவரை ஆக்கப்பட்டுள்ளது. அந்த இராணுவ வீரர்களின் கிட்டிய உறவினர்களின் தகவல்களும் நாளாதுவரை ஆக்கப்படுவதுடன், இந்த தகவல்களிற்கு மேலதிகமாக பிரதேச செயலக மட்டத்தில் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக தற்போது தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. | தயாரித்து இருக்கவில்லை. |
| 08. | 2018 நவம்பர் 01 ஆம் திகதி குருங்கால முதலீடாக ஏழு நாட்களிற்குள் அழைக்கும் (Seven Days Call Deposit) வைப்பொன்றாக ரூபா 1,500,000 ஆன தொகை இலங்கை வங்கியில் வைப்புச் | 2023 | நிதி முதலீடு ஆக்கபூர்வமாக இருத்தல் வேண்டும். | இந்த வைப்பின் வட்டி வருமானத்தை வைப்புத் தொகையை திரும்பப் பெறும் சந்தர்ப்பத்தில் வழங்கப்படுவதுடன் வருடாந்தம் வட்டி வருமானத்தை இனங்காண | இந்த வைப்பு தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்பட்டு மீளாய்வாண்டு இறுதியளவில் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமொன்று கடந்திருந்த போதும் இந்த வைப்பை மீண்டும் புதுப்பிக்க மற்றும் அதற்குரிய வட்டியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | முடியாது.<br><br>இந்த வைப்பு தொடர்பாக அதிகார சபையின் முதலீட்டுக் குழுவிற்கு அறிக்கையிட்டு வழங்கப்படும் பரிந்துரையை முகாமைத்துவ சபைக்கும் அனுப்பி வழங்கப்பட்டும் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. | |
| 09. | அதிகாரசபையின் பிரதான வருமான மூலமாக தேசிய சேமிப்பு வங்கயில் காணப்படும் சேமிப்புக் கணக்கில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூபா 7,358,875 ஆன நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் அந்த வட்டியின் மீது கிடைத்த ரூபா 323,865 ஆன சேமிப்பு வட்டி வருமானம் பயன்பாடின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2023 | நிதியானது நிதியத்தின் உச்ச ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தப்பட வேண்டும். | தேசிய சேமிப்பு வங்கியின் இலக்கம் 100010885550 கொண்ட சேமிப்புக் கணக்கிற்கு மற்றும் மக்கள் வங்கியின இலக்கம் 259200160007849 கொண்ட சேமிப்புக் கணக்கிற்கு, அந்த வங்கிகளில் பேணிச் செல்லப்படும் நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் | இத் தொகை பயன்படுத்தப்படாது குறித்த கணக்குகளில் காணப்படுகின்றது. |

செலவு வைக்கப்படுகின்றது. திறைசேரியினால் லொத்தர் சபை ஒப்படைப்புக்கள் உரியவாறு வழங்கப்படாததாலும் வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகள் உரியவாறு வழங்கப்படாததாலும் இராணு வீரர்களின் நலன்புரி நிகழ்சித் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவதற்காக இத்தொகை சேமிப்புக் கணக்குகளிளேயே நிறுத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3.63. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

| | மொத்த சொத்துக்கள் | மொத்த சொத்துக்கள் | உரிமை | மிகை / (பற்றாக்குறை) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 2021 | 47,814,360,565 | 39,086,224,627 | 8,728,135,938 | 95,630,017 | முனைப்பழியுள்ள |
| 2022 | 84,061,838,782 | 39,715,772,786 | 44,346,065,996 | 5,878,823,674 | முனைப்பழியுள்ள |
| 2023 | 80,225,791,005 | 39,166,448,460 | 41,059,342,545 | (5,736,507,885) | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01. | வெளிநாட்டு தகைமைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்காக பல்கலைக்கழகத்தின் மூலம் உணவு மற்றும் வதிவிட வசதிகளை வழங்குவதற்காக ஒப்பந்தத்தின் பிரகாரம், அறவிடப்பட வேண்டிய கட்டணம் உரிய மாதத்தின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உணவு வழங்கலுக்காக ரூபா 10,815,115 உம் வதிவிட வசதிகளை வழங்குவதற்காக ஐக்கிய அமெரிக்க | 2021 | அந்நியச் செலாவணியாக பெற வேண்டிய பணத்தை தாமதமின்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும. | நிலுவைத் தொகையில் அறவிட முடியாத ஐக்கிய அமெரிக்க டொலர் 7,636 ஐ பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் அறவிடப்பட வேண்டிய பணத்தில் 65% 2022.06.22 ஆம் திகதியில் அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய பணம் தாமதமின்றி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>இதற்குப் பிறகு நிலுவைத் தொகை ஏற்படாதவாறு நடவடிக்கைகள் | இந்த செயல்முறை தொடர்பாக உள்ளக நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணை நடந்து வருவதாகவும், மீட்பு செயல்முறை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவ தாக மாத்திரம் அறிவிக்கப்பட்டிருந் தது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | டொலர் 118,107 அறவிடப்பட வேண்டி காணப்பட்டதுடன் நிலுவையாக காணப்பட்ட காலம் 1-4 ஆண்டுகளுக்கு இடைப்பட்டு இருந்தது. | | | எடுக்கப்பட்டுள்ளன. | |
| 02. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரையின் 154(1) இன் உறுப்புரை 1 ஆவது துணை உறுப்புரையின் பிரகாரம் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது பதிவு செய்யப்பட்டுள்ளதாக அடையாளப்படுத்தப் பட்டுள்ள மற்றும் தன்னுடைய பங்குகளில் நூற்றுக்கு ஐம்பது அல்லது அதற்கு அதிக சதவீதம் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்று அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றாக உள்ள கம்பனிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்கு முழுமையான உரித்துடைய துணை கம்பனியின் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த | 2021 | அரசியலமைப்பு உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பாக அவதானிப்புக்களை சமர்ப்பிப்பதற்கு தடையொன்று இல்லையென்பதை அறியத் தருகின்றேன். | கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பாக அவதானிப்பை சமர்ப்பிப்பதற்கு தடையொன்று இல்லையென்பதை அறியத் தந்த போதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக’குகளைச’ சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வருடத்திற்கான கணக்குகளின் கணக்காய்வு தனியார் கணக்காய்வு கம்பனியொன்றுக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந் தது. | | | | |
| 03. | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 125,941,615 செலுத்த வேண்டிய மீதியினுள் 03 இற்கும் 04 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழைமையான மொத்தமாக ரூபா 35,639,977 தொகையான கடன் கொடுத்தொர் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை ல. | 2022 | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பின்னர் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு அவதானிப்பில் காண்பிக்கப்பட்ட ரூபா 125,941,615 ஆன மீதியில் ரூபா 89,375,036 தொகை வெளிநாட்டுக் கடன்கொடுத்தோரா க இருப்பதுடன் எஞ்சிய ரூபா 36,566,579 ஆன மீதி உள்நாட்டுக் கடன்கொடுத்தோர கவும் வெளிநாட்டு கடன்கொடுத்தோை ர தீர்வு செய்தல் நாணயக் கடித நிபந்தனைகளுக்கு பொருட்கள் கிடைத்த பின்னர் தரச்சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர் வங்கிக்கு குறித்த கொடுப்பனவை செய்யுமாறு அறிவிக்கப்பட்ட பின்னர் தீர்வுசெய்யப்படுவ தாகவும் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இம்மீதியை தீர்வு செயவதாகவும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | உள்நாட்டுக் கடன்கொடுத்தோர் தற்போது தீர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| 04. | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 06 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்த ஐக்கிய குடியரசு டொலர் 32,619,412 இற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடும் உரிய அமைச்சரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 | நிதிச் சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று இப்பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | இந்த இந்த நிதியங்களில் பிரதானமாக வைத்தியசாலை உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கு பெற்றுக்கொண்ட கடன் தொகை மற்றும் வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து கிடைத்த பாடநெறி கட்டணங்கள் என்பன உள்ளடங்கும் .வைத்தியசாலையை நிறுவுவதற்கு உரிய முழு பதவியணியினர் உரிய காலத்தில் கிடைக்காமையால் வைத்தியசாலையின் சில அத்தியவசிய பிரிவுகளை நிறுவுவதற்கு தாமதமாகியது அந்த மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு கொடுப்பனவு |

செய்யும் வரை 1981 இன் 68 ஆம் இலக்க சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பயிற்சி கல்லூரி சட்டத்தின் 4ஊ பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு இத்தொகையை குறுகிய காலத்துக்குள் குறுகிய கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து உள்ளதாகவும் தற்போது மேற்படி குறுங்கால வைப்புக்களை பயன்படுத்துவதற்கு பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக மருத்துவ காரணங்களை கொள்வது செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 19,492,887 தொகை தேசிய சேமிப்பு வங்கியில் பெற்றுக் கொண்ட பட கடன்தொகையை தீர்வு செய்வதற்காக கொடுப்பனவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| 05. | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழகமானது வரிக் கடப்பாடுகளுடனான ஒரு அரசாங்க தொழில் முயற்சியாக கணக்காய்வுத் திகதி வரை செயற் பட்டிருக்கவில்லை. | 2022 | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கையின் ஒரே பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஆக இருப்பதுடன் அது வருமான வரி கொடுப்பனவு இலிருந்து விடுவிப்பிற்காக உள்நாட்டு இறைவரி சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாக நிதியமைச்சிக்கு அனுப்புவதற்காக உபவேந்தரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் ஒன்று செயலாளர் பாதுகாப்பு அமைச்சுக்கு 2023 ஜூலை 20 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது |
| 06. | மீளாய்வாண்டில் 1,120 சீமெந்து மூடைகளை ரூபா 2,982,011 தொகைக்கு கொள்வனவு செய்வதற்குரிய | 2022 | பெறுகை வஷழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கேள்வியினை பெற்றுக் கொள்ளும் சிக்கலான நிலைமையின் அடிப்படையில் செயலாற்றல் பிணை, கேள்விப் | பெறுகை வழிகாட்டிற்கு முரணாக கேள்வி ஆவணங்களை மாற்றி கேள்வித்தொகை |

| | | |
|---|---|---|
| பெறுகைகள் 03 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனால் உரிய வழங்கலின் மொத்த பெறுமதியின் அடிப்படையில் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பிரிவிற்கு இணங்க பிரதான கேள்விச் சபைக்குச் சமர்ப்பித்தல் தவிர்க்கப்பட்டிருந்தது. மேலும் வழிகாட்டிக் கோவையின் 5.4.10, 5.3.11 மற்றும் 8.9.1 பிரிவுகளுக்கு இணங்க இக்கொள்வனவு களுக்காக முறைப்படியாக செயலாற்றல் பிணைமுறி, கேள்வி பாதுகாப்பு பணத்தினை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் முறையான உடன்படிக்கையினை மேற்கொள்ளுதல் ஆகிய தேவைப்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பாதுகாப்பினை பெற்றுக் கொள்ளுதலும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்ளவும் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | ரூபா 2 மில்லியனை விஞ்சும் கேள்வி வைப்பிற்காக வழங்குனரால் மொத்த கேள்வித்தொகையில் 1 சதவீத அளவு தொகை ஒன்று கேள்வி பிணையாக வைக்கப்பட வேண்டும் எனவும் செயலாற்றல் பிணை முறியை வழங்குவதற்கு மொத்த கேள்வித்தொகை ரூபா 2 மில்லியனை மிகைத்து செல்லும் கேள்வி வைப்பிற்காக வழங்குனர் ஒருவரால் மொத்த கேள்வி தொகையில் 10 சதவீதமான தொகையொன்றை செயலாற்றல் பிணை முறியாக வைப்புச் செய்ய வேண்டுமென என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேற்படி அந்த விடயங் களுக்கு இணங்கி தற்போது குறித்த பிணை ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது மேலும் வழங்குனருடன் உடன்படிக்கை செய்தல் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| 07. | 01-41/2019 ஆம் இலக்க மற்றும் 2019.07.22 ஆம் திகதிய சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை பிரகாரம் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் மருந்தகங்களில் மட்டுமே அவசரகால மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும் எனவும், மருந்துகள் கிடைக்காத பட்சத்தில் எழுத்து மூல உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே, பெறுகை வழிகாட்டிக் கோவையின் ˙ பிரகாரம் கொள்வனவு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் , கணக்காய்வு மாதிரிப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா. 3,053,808 பெறுமதியான மருந்துகளை கொள்வனவு செய்தபோது அரச | 2022 | சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போது முற்பணங்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்களுக்காக “Quotation” கேள்வி பெற்றுக் கொள்ளும்போது அரச ஒசுசல மூலம் கட்டாயம் விலைகோரலொன்று பெற்றுக் கொள்வதுடன் அரசா வசூல் அளவில் அந்த உருப்படி இல்லாவிட்டால் மாத்திரம் ஏனைய வழங்குனர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஆலோசனைகள் நடை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மருந்துக் கூட்டுத்தாபனத்தின் மருந்தகங்களில் காணப்பட்டதா என்பதற்கான எழுத்து மூல உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை. | | | | க அறிவிக்கப்பட்டிருந்தது. |
| 08. | பல்கலைக்கழகத்தினால் ரூபா 2,959,830 தொகை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த அச்சீட்டு இயந்திரத்தைப் பயன்படுத்தி நடாத்திச் செல்லப்படுகின்ற அச்சகத்தினை முறையான அங்கீகாரம் ஒன்றில்லாமல் சுயாதீன வியாபாரம் ஒன்றாக செயற்படு வதற்கு அதற்காக ரூபா 5,000,000 ஆன கடன் தொகை ஒன்று பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்குவதற்கும் 2023 மார்ச் 07 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 42, 76 மற்றும் 99 ஆம் பந்திகளுக்கு முரணாக மேற்படி திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 18,504,114 ஆன அச்சகத்தின் வருமானம் ரூபா | 2023 | மீளாய்வாண்டின் அச்சகத்தின் வருமானம் செலவினம் மற்றும் சொத்துக்கள் என்பன கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டும். | தவிர்ப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | அச்சகத்தை மீண்டும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கீழ் கையேற்பதற்கு எதிர்பார்த்து உள்ளதால் எதிர்காலத்தில் இதனை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 8,433,158 ஆன அச்சகத்தின் செலவினம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அதன் ரூபா 2,196,774 ஆன இறுதி இருப்பு மற்றும் ரூபா 4,497,914 ஆன கடன் பட்டோர் ஆகியவற்றை பல்கலைக் கழகத்தின் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படாமையால் மீளாய்வாண்டின் வருமானம், செலவினம் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் அப் பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது | | | | |
| 09. | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமம் 01 இன் 127 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமை கூற்றில் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இ.பொ.க நியமங்களில் தேவைப்படுத்துகின்ற தகவல்களை குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 9,554,938 ஆன பெறவேண்டிய வருமான வரி மற்றும் ரூபா 1,422,624 ஆன ஆண்டின் வருமான வரி தொடர்பாக குறிப்பொன்று நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தவிர்க்கும் நடைமுறை எடுக்கப்படவில்லை | பதிவொன்றை உள்ளிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | வெவ்வேறு மூலங்களிலிருந்து ஆராய்ச்சி மானியங்கள் முன்னைய ஆண்டுகளின் போது தவறுதலான கணக்கீட்டு கொள்கை பின்பற்றப்பட்டு வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இனங்காணப்பட்டிருந்தது இவ்வாண்டில் கிடைத்த அவ்வாறான மானியங்கள் அவற்றின் தன்மையின் பிரகாரம் ஆராய்ச்சி மானியங்களின் கீழ் பொறுப்பாக இனங்காணப்பட்ட போதும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 47 ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்ப மீதிகள் மீண்டும் குறிப்பிடப்பட்டு பின்னோக்கி சீராக்கம் செய்யாமை காரணமாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆராய்ச்சி மானியங்கள் ரூபா 44,178,343 ஆன வரவு மீதி ஒன்று சொத்தாக இனங்காணப்பட்டிரந்தது. மேலும் நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஆராய்ச்சி மானியங்களாக ரூபா 38,678,752 ஆன வரவு மீதி ஒன்று | 2023 | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் அட்டவணையின் பிரகாரம் அது ரூபா 25,322,871 ஆக இருந்ததால் ரூபா 64,001,623 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டது | | | | |
| 11. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 14 மற்றும் 69 ஆம் பந்திகளுக்கு முரணாக ரூபா 6,489,177 தொகை செலவிடப்பட்டு கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நூதன சாலையில் காணப்படுகின்ற கூரையின் திருத்தம் 2021 நவம்பர் 11 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டு இருக்கையில் 2023 திசெம்பர் 31 ஆம் தேதி வரையில் மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நடப்பாண்டின் கட்டிடங்கள் அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் பெறுமானத் தேய்வு ரூபா 162,229 ஆல் குறைத்து | 2023 | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய சீராக்கங்கள் மேற்கொள்ள குறித்தக் கொள்ளப்பட்டுள்ளது. | குறித்த சீராக்கத்தை எதிர்காலத்தில் மேற்கொளவதாக அறவிக்கப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | | | |
| 12. | 2021 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 162,029 தொகையான முற்பணத்திற்காக பல்கலைக்கழகத்திடம் தகவல் இல்லாமையால் அறவிட முடியாத கடன் மற்றும் ஐயக்கடன் ஒதுக்கீடாக சீராக்குவதற்கு நேர்ந்தது. மேலும் வைத்தியசாலையின் ரூபா 716,578 ஆன கொள்வனவு முற்பணத் தொகை செலவின மீதி ஒன்றாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமை மற்றும் சம்பள முற்பணம் ரூபா 38,784 ஆன செலவு மீதி ஒன்றாக காண்பிக்கப்பட்டதால் மீளாய்வாண்டின் இறுதியில் சொத்துக்கள் ரூபா 917,391 குறைத்து காண்பிக்கப் பட்டிருந்தது. | 2023 | முற்பணங்களின் முழுப் பெறுமதியும் கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டும். | ஒப்பீடு செய்து வேறுபாடுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் உரிய சீராக்கங்களை சீராக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | முற்பணங்கள் 2023 திசெம்பர் 31, வரை தீர்வு செய்யப்படாமையால் ஐயக் கடனில் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் உரிய வேறுபாடுகளை ஒப்பிட்டுப் பார்த்து, அதற்கேற்ப, உரிய சீராக்கங்களைச் சரிசெய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது. |
| 13. | கேட்போர் கூடத்தினை நிர்மாணிப்பதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை செலவிடப்பட்ட | 2023 | நடைமுறை வேலைகளில் அனைத்து செலவினங்களும் உள்ளடக்கப்படுதல் | Budget Hotel Hospital என்ற பெயரிலான பிரிவிற்காக மீளாய்வாண்டின் | சீராககம் செய்யப்பட்டிருக்கவில்லை.. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 96,953,827 ஆன தொகை நடைமுறை வேலைகளில் உள்ளடக்கப்படாமல் இருந்தலுடன் பல்கலைக்கழகத்தின் Budget Hotel Hospital பெயரிலான பிரிவின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 11,506,604 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதி கூற்றுகளில் நடைமுறை வேலையாக ரூபா 10,237,786 மாத்திரம் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறை வேலைகளின் மொத்த பெறுமதி ரூபா 98,222,645 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். | போது லதனச் செலவினம் ஒன்று அறிக்கையிடப்படாதிருந்ததுடன் செயற் திட்ட அலுவலகத்திடமிருந்து உரிய விபரங்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் ஏதேனும் வேறுபாடு இருந்தால் உரிய சீராக்கலன்களை செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | |
| 14. | தனியார் சிகிச்சைகளுக்குரிய 2023 ஜனவரி 1 ஆம் திகதி காணப்பட்ட ரூபா 2,187,341 ஆன பெறவேண்டிய வருமானம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த போதும் குறித்த மீதி தொடர்ந்து அறவிடப்பட வேண்டிய வருமானமாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் நிதிக் | 2023 | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | நிதிக் கூற்றுகளில் எதிர்காலத்தில் சீராக்கம் செய்யப்படும் என்பதாக | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கூற்றுகளில் பெறவேண்டிய வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | | | |
| 15. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 70,931,247 ஆன மருத்துவ வழங்கல் இருப்பில் உள்ளடக்கப்பட்ட ரூபா 11,349,293 காலாவதியான இருப்புகளுக்குரிய ஒதுக்கீடு கணக்குகளில் மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் உரிய மருந்துகளை அகற்றுவதற்கு முகாமைத்துவம், கணக்காய்வு திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை அதன் காரணமாக அப் பெறுமதியால் கணக்கினுள் இருப்பு கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 | சரியான இருப்பு பெறுமதி கணககுகளில் காண்பிக்கப்பட வேண்டும். | தவிர்க்கும் நடைமுறை எடுக்கப்படவில்லை | மருந்துகளை அகற்றுவது தொடர்பான அறிவுறுத்தல்கள் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அிதகாரசபை மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து கோரப்பட்டுள்ளதுடன், உரிய அறிவுறுத்தல்களை விரைவாகப் பெறுவதற்கு, பிரதம மருந்தாளருடன் ஊடாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளை ஒருங்கிணைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன |
| 16. | வியாபார கடன்பட்டோரில் ஓராண்டுக்கு மேற்பட்ட பழைய அறவிடப்படாத கடன்பட்டோர் பெறுமதி ரூபா 359,796,230 ஆக இருந்ததுடன் அம் | 2023 | கடன் பட்டோர் மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியவுடன் கடன் பட்டோர் மீதிகளுக்காக | கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் விரிவான அறிக்கைகளில் அனைத்து பட்டியல்களினதும் இன்வொய்ஸ் | சம்பந்தப்பட்ட மாணவர்கள் சரியாக அடையாளம் காணப்படாவிட்டாலும் பாடநெறிக்கான கட்டணம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீதிக்கான கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இக்கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் மாணவர்களிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 70,650,682 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்படாது இருந்ததுடன் அம்மீதியில் ஓராண்டுக்கு மேற்பட்ட பழைய மீதிகளின் பெறுமதி ரூபா 40,275,433 ஆக இருந்தது | | காலப்பகுப்பாய்வு பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திகதிகளை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கில் இருந்து கழிக்கப்பட வேண்டிய பெறுமதியாக இருப்பதால், கடன்பட்டோர் தொகை குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாணவர்கள் பண வைப்புத் தொகைக்காக துண்டினை சமர்ப்பித்து பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்ட பின்னர ் இந்தக் கணக்கில் மீதியை தீர்வுசெய்வதாக தெரிவிக்கப்பட்டது. |
| 17. | 01 ஆண்டு முதல் 25 ஆண்டு வரை பழமையான ரூபா 99,028,325 ஆன அறவிடப்பட வேண்டிய பிணைமுறி, 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 15,439,662 ஆன பெற வேண்டிய பகுதிக் கொடுப்பனவு மற்றும் 01 இற்கும் 9 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழைய ரூபா 6,219,490 ஆன சலவையக வருமானம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு | 2023 | இழக்கப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். . | பெறவேண்டிய பிணைபத்திரப் பதிவு பெறுமதியில் ரூபா 43,366,883 ஐ அறவிடுவதற்கு வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சலவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | அனைத்து பெறவேண்டிய பிணைபத்திரப் பதிவு பெறுமதிகளையும் அறவிட தேவையான சட்ட நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பெறவேண்டிய கோட்டா உதவித்தொகையை வருங்காலங்களில் செலுத்தப்படும் என்றும், சலவை வருமானத்தை அறவிடுவதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முடியாமல் இருந்தது. | | | | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. |
| 18. | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் 12.2.5 ஆம் பிரிவின் பிரகாரம்வெற்றிடமாக காணப்படும் பதவி ஒன்றில் கடமை மேவுகை செய்வதற்கு திணைக்களசார் வேலை திட்டம் ஒன்றின் கீழ் மேவுகை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவருக்கு பதில் கடமை சம்பளம் ஒன்று அல்லது எந்த ஒரு மேலதிக ஊதியமும் பெற்றுக்கொள்ள முடியாத போதும் 2022 ஜூன் மாதத்தில் நடைபெற்ற இப் பல்கலைக்கழகத்தின் 644 வது முகாமைத்துவ குழு அங்கீகாரத்தின் பேரில் பல்கலைக்கழகத்தின் நிதியாளர், மினோதா நிறுவனத்தில் கணக்காளர் பதவியில் பதில் கடமை புரிவதற்காக கணக்காளர் ஆரம்ப சம்பளத்தில் 25 சதவீதம் படிகளாக கொடுப்பனவு செய்ய மேற்படி முகாமைத்துவு சபைக் | 2023 | தாபன விதிக் கோவைக்கு இணங் செயற்பட வேண்டும். | தவிர்ப்பு நடைமுறை எடுக்கப்பட்டிருக்கிவல் லை | வரையறுக்கப்பட்ட மெட்ரோ பொலிட்டன் கெம்பஸ் (உத்தரவாத) கம்பனிப் பதிவேட்டில் இருந்து அகற்றப்பட்டு, கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தி ன் பீடமாகச் செயற்பட்ட நாளிலிருந்து இந்தக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்தது டன் 2022 ஜூலை மாதம் 1 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தார். 2022 செப்டம்பர் 13 ஆம் திகதி வரை மெட்ரோ பொலிட்டன் கெம்பஸ் கல்வி நிறுவனத்திற்காக உதவி நிதியாளர் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கையி ல் 2022 ஒக்டோபர் முதல் 2023 ஒக்டோபர் வரை கடமை மேவுகைக்கான படிகளாக செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 452,238 ஆக இருந்தது. | | | | |

19. **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 371(2)(அ) பிரகாரம் ஏதேனும் விசேட செயற்பாடொன்றிற்காக பதவிநிலை தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு தடைவ ரூபா 100,000 ஆன உயலர் எல்லையில் செயல் நிமித்த கட்டுநிதி வழங்க முடியுமான போதும் பல்கலைக் கழகத்தினால் மீளாய்வாண்டில் 57 சந்தர்ப்பங்களில் அந்த எல்லையை மிகைத்து மொத்தம் ரூபா | 2023 | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தவிர்ப்பு நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கிவல் லை | பல்கலைக்கழகத்தி ன் தேவைப்பாட்டுக்கு பொருந்தும் வகையில் செயல் நிமிர்த்த கட்டு நிதி தொகையை அதிகரிப்பதற்கு தேவையான அனுமதியை கோரி கடிதம் ஒன்று பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது டன் அது தொடர்பாக அவர்களின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 15,941,748 ஆன முற்பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | | | இணக்கப்பாடு PFD/RED/REG/FR/2024 மற்றும் 2024 ஜூன் 27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது |
| (ii) | நிதிப் பிரமாணழ் 371(ஈ) இன் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை ஜூன் 15 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகத்தின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை அத்திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2023 | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | விரைவில் உரிய அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கணிப்பீட்டு சபை நடவடிக்கைகள் பூர்த்தி செய்து இறுதிக்கட்டத்தில் காணப்படுவதால் விரைவில் உரிய அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (iii) | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 891 இன் பிரகாரம் நிறுவனத்தின் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங் கண்டு பிணை வைப்பு பதிவேடு ஒன்று பேணி செல்லப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் பிணை | 2023 | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தவிர்ப்பு நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கிவல்லை | கிராப்பர் கொ.பா.ப இடமிருந்து மாத்திரம் ரூபா 5,000 பிணை ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்படப்படடிருந்தது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வைப்பு பதிவேடு பேணப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது | | | | |
| 20. | 1982 இன் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்த) சட்டத்தின் 8 ஐ (1) ஆம் பிரிவின் பிரகாரம்<br><br>வேறு ஏதேனும் சட்ட ஏற்பாடுகள் எவ்வாறு இருந்தாலும் ஏதேனும் அபிவிருத்தி பிரதேசம் ஒன்று அல்லது பகுதி ஒன்று ஏதேனும் அபிவிருத்தி நடவடிக்கைகளை செய்தால் அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அரசாங்கத்தின் முகவர் ஒருவர் உட்பட எவரேனும் நபர் ஒருவரால் அதிகாரசபையால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர அதிகாரத்தின் கீழ் தவிர மேற்கொள்ள முடியாத போதும் நிறுவனத்தினால் கேட்போர் கூட கட்டிட நிர்மாணத்திற்குரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தவிர்ப்பு நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கிவல்லை | அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| 21. | மீளாய்வாண்டில் வைத்தியசாலையின் | 2023 | மின்சாரப் பட்டியல்களை | தவிர்ப்பு நடைமுறைகள் | பொது திறைசேரியிடமிருந் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மின்சார பட்டியலை உரிய காலத்தில் செலுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்காமை காணரமாக பட்டியல் கொடுப்பனவு தாமத கட்டணங்களாக ரூபா 12,128,284 தொகை தண்டப் பணமாக செலுத்த வேண்டியிருந்தது. | | தாமதமின்றி தீர்த்துவைப்பதன் மூலம் நிறுவனத்திற்கு ஏற்படும் நட்டத்தை குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். | எடுக்கப்பட்டிருக்கிவல் லை | து திரவ பணம் உரிய காலத்தில் விடுவித்ததன் அடிப்படையில் எதிர்காலத்தில் மிகை கட்டணம் ஒன்று இல்லாமல் பல்கலைக்கழக பட்டியல்களை முறையாக தீர்வு செய்வதற்குமுடியும ாக உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந் தது. |
| 22. | தக்ஷின மண்டபத்தின் 41 உட்பட 761 முழு மாணவர்களின் மற்றும் நிர்வாக கல்வி மற்றும் வதிவிட நடவடிக்கைகளுக்கான மின்சார செலவினமாக ரூபா 56,072,219 தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்ததுட ன் அதனை குறைப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்காக பிரதேசத்திற்கு பொருத்தமான மாற்று மின்சக்தி முறை ஒன்றுடன் தொடர்புபடாத இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023 | மின்சார செலவினத்தை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தக்ஷின மண்டபத்தின் இடதத்தில் சூரிய மின்சக்தியை செயற்திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் தற்போது பொருத்தமான முதலீடு ஒன்றை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | ச்செயற்திட்டம் 2024 நிறுவன திட்டம் ஒன்றுக்கு உள்ளடக்குதல் மற்றும் சூரிய சக்தி செயற் திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டு தற்போது பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந் தது |
| 23. | 2023 ஜனவரி மாதம் முதல் மெட்ரோபொலிட்டன் கெம்பஸ் கல்வி நிறுவனத்தின் முதலாவது மாடி உலக உணவு | 2023 | விரைவில் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | முதலாவது மாடியை பயன்படுத்தும் உலக உணவு செயற்திட்ட அலுவலகம் (ஜனாதிபதி அலுவலகம்) உடன் உடன்படிக்கை | உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வில்லை. . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சிதிட்டத்தின் ஒத்துழைப்பு செயலக அலுவலத்திற்காக வழங்கப்பட்டிருந்தது இதற்காக எவ்வித வாடகை வருமானம் கிடைக்காமல் இருந்ததுடன் அவ்வளவிற்குரிய மின்சாரம், நீர் வீத வரி பாதுகாப்பு, துப்பரவு போன்ற பொது செலவினங்களை நிறுவனங்களுக்கு இடையே விகிதசாரப்படி பகிர்ந்து தொடர்பில் உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒத்துழைப்பு செயலக அலுவலத்திற்கு இடையே கொள்வதற்குரிய எழுத்து மூல உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | செய்வதற்கு தேவையான எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| 24. | 2021 ஏப்ரல் 20 ஆம் திகதிய அமப/21/0584/303/052 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மிலோதா நிதி நிறுவனத்தை பல்கலைக்கழகத்திற்கு கையேற்கும் போது பொருத்தமான பதவியணியைத் தீர்மானிப்பதற்கும் அந்தப் பதவியணிக்காக முகாமைத்துவ | 2023 | விரைவில் பதவியணிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கோரப்பட்ட பதவியணிக்காக நிரந்தர அடிப்படையில் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு 2023 ஒக்டோபர் 23 ஆம் திகதிய கடிதத்தில் மீண்டும் ஒருமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளப்பட்டி ருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் 2023 ஒக்டோபர் 10 ஆம் திகதி வரையிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள பல்கலைக்கழகம் தவறியிருந்தது | | | | |
| 25. | பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 103 பேர் முகாமைத்வ உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் பதில் பதிவாளரால் கொ/ஆவி/பா/பொது/36 மற்றும் 2024 ஜூன் 18 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் முகாமைத்துவ உதவியாளர்களுக்காக நிரந்தர சேவையில் 101 பேர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 38 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் இவ்வாறு 139 பேர் ஆட்சேர்ப்பு செய்த | 2023 | அனைத்து ஆட்சேர்ப்பு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் சேர்க்கப்பட வேண்டும். | தவிர்ப்பு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக் கவில்ல | பல்கலைக்கழகம் இதுவரை சமர்ப்பித்த பதவியணி முன்மொழிவுக்கு இடையே தற்போது மிகவும் அவசரமான முன்மொழிவு தொடர்பாக அறிவித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு 2024.05.10- ஆம் திகதி மீண்டும் வேண்டுகோள் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந் தது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காரணத்தினால் 36 பேர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை மிகைத்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | | | | |
| 26. | கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 21.5815 ஹெக்டேயர் அளவான காணியில் பல்கலைக் கழகத்தின் போதனா வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் எனினும் அக்காணியின் சட்ட ரீதியான உரித்தினை மீளாய்வாண்டின் இறுதி வரை பல்கலைக்கழகத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அக்காணியில் நிர்மாணிக்கப்பட்ட போதனா வைத்தியசாலையின் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 45,385,484,229 ஆக இருந்ததுடன் நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,216,884,293 கிரயமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் நிர்மாணங்கள் முடிவடைந்து 07 | 2023 | விரைவில் காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | பொது திறைசேரியின் கீழ் அமைக்கப்பட்ட செயலற்ற நிலைமையில் காணப்படும் வரையறுக்கப்பட்ட பொரவிடன்ட் புறொபட்டி லங்கா கம்பனிக்குச் சொந்தமான காணிப பகுதியை பொது திறைசேரியிடமிருந்து வழங்கப்படும் தீர்மானத்தின் பிரகாரம் காணி அமைச்சிடமிருந்து உடமை கொண்டுள்ளவர்களுக்கு கையேற்று எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்ளதாக | பொது திரறைசேரியின் கீழ் தவிக்கப்பட்ட செயலற்ற நிலைமையில் காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட புரோட்பேட் ப்ராப்பர்டி லங்கா கம்பெனிக்கு சொந்தமான அக்காணி பகுதி அரசின் காணயாக கருதி மேற்படி சிக்கலை தீர்வு செய்வதற்காக பொதுத் திரற சயே்ரியின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்வதற்காக 04/10/46926 ஆம் ,லக்க கனி ஆணையாளர் நாயக் திணைக்களத்தின் கடிதத்தின் மூலம் பொது திரறசேரி செயலாளரின் இடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் பொதுத் திரைசேரி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் உரிய காணியை கையேற்கும் செயற்பாடு முடிவடைந்திருக்கவில்லை. | | | | இடமிருந்து வழங்கப்படும் தீர்மானத்தின் பிரகாரம் மேற்படி காணியை கையேற்கும எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| 27. | 1988 இன் 27 மற்றும் 2007 இன் 50 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்ட 1981 இன் 68 இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவன சட்டத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு முதல் கெடட் உத்தியோகத்தர்கள் அல்லது அரச உத்தியோகத்தர்கள் அல்லாத உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு பணக் கொடுப்பனவு அடிப்படையில் பட்டங்களை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேலும் 2018 மார்ச் 21 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் போது மாணவர்களை அனுமதித்தல் மற்றும் நிர்வாக சபையின் தீர்மானத்தின் | 2023 | விரைவில் சட்டங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | சட்ட வரையுனரால் இறுதி வரைவு 2024.06.25 ஆம் திகதி இப் பல்கலைக்கழகத்திற்கு பிரதியுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது மேற்படி இறுதி வரைவிற்காக சட்டமா அதிபரின் இடமிருந்து சட்டபூர்வதன்மை தொடர்பான சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சிடமிருந்து 2024.06.27ஆம் திகதி வேண்டுகோள் விடுக்கப்பட்டது | அமைச்சரவை அங்கீகாரத்தை கோரி அமைச்சரவை விஞ்ஞாபன வரைவொன்று 2024 ஜூலை 23 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது சட்ட வரைவு தயாரிப்பாளரால் 2024 செப்டம்பர் 02 ஆம் திகதி இறுதியில் இறுதி சட்ட வரைவு மற்றும் சட்ட தாக்க கூற்று முன்மொழிகளிலும் இப்பல்கலைக்கழகத்திற்கு பிரதியுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செல்லுபடித் தன்மை போன்ற விடயங்களை மேவுகை செய்யும் வகையில் பல்கலைக்கழகத்திற்கு பொருத்தமான உரிய சட்டங்களில் திருத்தங்களை செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டிலும் சட்ட திருத்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | | | | |
| 28. | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவுக்காக Pneumatic Tourniquet Pump System, Traumatology Instrument, PMGS Accessories மற்றும் Endoscopy For Medicine ரூபா 48,834,173 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தரப் பரிசோதனை சித்தி அடையாமை காரணமாக கணக்குகள் தீர்வு செய்யப்படாமல் காணப்பட்டதுடன் 3 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் | 2023 | விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | KDU/PRO/CAP/1353/2017 ஆம் உருப்படிகள் பல்கலைக்கழகத்தின் வைத்திய சாலைக்கு கிடைத்திருந்ததுடன் அவற்றை பேரேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் தரப் பரிசோதனையில் சித்தியடையவில்லை இது தொடர்பாக வழங்குனருக்கு இதற்கு முன்னரும் அறிவிக்கப்பட்ட போதும் வழங்குனரால் இதற்காக எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. ஆதலால் இந்த உருப்படிக்கான கொடுப்பனவு நடவடிக்கை களுக்காக சமர்ப்பிக்கப்பட | 2024 ஒக்தோபர் 24 ஆம் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கடந்திருந்த போதும் அந்நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | முடியாது உள்ளது. | |
| 29. | பல்கலைக்கழகத்தின் வைத்தியசாலை மற்றும் தென் சபையின் 2015 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கொள்வனவு முற்பணம் மற்றும் பண முற்பணம் முறையே ரூபா 361,404,619 மற்றும் ரூபா 4,897,892 தொகையை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை மேலும் தென் சபை 2023 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் 22 ஆம் திகதி வரை 22 சந்தர்ப்பங்களில் வழங்கப் பட்டிருந்த மொத்தம் ரூபா 895,000 ஆன முற்பணங்களை 14 நாட்கள் முதல் 117 நாட்களுக்கு இடைப்பட்ட தாமதத்துடன் தீர்வு செய்யப்பட்டு இருந்ததுடன் 07 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 280,000 தொகை பெறுமதியான | 2023 | விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | மேலும் தீர்வு செய்ய வேண்டிய முற்பணத்தை பெற்றுக் கொண்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு தீர்வு செய்யப்பட வேண்டிய முற்பண நபர்கள் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்டவர்களுக்கு உரிய முற்பணத் தொகையை தீர்வு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு தீர்வு செய்யாதவர்களிடம் தொடர்பாக அடுத்த நடவடிக்கைகளை எடுப்பதாகவும் தென் மண்டபத்தின் 2023 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்ட இரண்டு முற்பணங்கள் தவிர ஏனைய அனைத்து முற்பணங்களும் தீர்வு செய்யப்பட்டுள்ளதுடன் தீர்வு செய்யப்படாத முற்பணங்கள் பெற்றுக் கொண்டவர்கள் விரைவில் தீர்வு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தீர்வு செய்யப்படாத முற்பணங்களை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முற்பணங்கள், செலவினம் மேற்கொள்ளப்படாமல் முழுத் தொகையையும் பணமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அப்பணம் 9 நாட்களுக்கும் 66 நாட்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஊழியர்களின் கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனன. | | | | விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| 30. | மெட்ரோபொலிட்டன் கெம்பஸ் 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை 56 பாடநெறிகளை திட்டமிட்டிருந்த போதும் அதில் 12 பாடநெறிகள் மாத்திரம் நடத்தப்பட்டிருந்ததுடன் வேண்டுகோள் இல்லாததன் அடிப்படையில் 44 பாடநெறிகள் நடத்தப்பட்டு இருக்கவில்லை. நடத்தப்பட்ட 12 பாடநெற்களுக்கு இடையே 11 பாடநெறிகளுக்காக திட்டமிடப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை பங்கு பற்றாதிந்ததுடன் அது 20 சதவீதம் முதல் 50 சதவீதத்திற்கு | 2023 | கேள்விகள் காணப்படும் புதிய பாடநெறிகளை உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்குரிய பீடமொன்றை எமது நிறுவனத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் 3 பாடநெறிகளில் மாணவர்கள் மாணவர்களை கல்வி பெறுவதுடன் எதிர்காலத்தில் வளங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதானமாக அரசு அரசு துறையினரும் தனியார் துறையிலும் காணப்படுகின்ற பாடநெறிகளை நடத்துவதற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்குரிய பீடம் ஒன்றை அதில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட தற்போது 03 ழுக்கள் 150 இறக்கு மேற்பட்ட மாணவர்கள் எண்ணிக்கையில் கற்றல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. மேலும் இங்கு திட்டமிடப்பட்ட 56 பாடநெறிகளில் 44 பாடநெறிகளுக்கு கேள்வியொன்று காணப்படவில்லை. | | | | நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது |
| 31. | தென் சபை மற்றும் பல்கலைக்கழக வைத்தியசாலையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 57 வெவ்வேறு உருப்படிகளுக்குரிய 443,695 இருப்பு அலகுகள் 2018 ஆம் ஆண்டு முதல் விளைவற்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 79,612,689 பெறுமதியான இருப்பு உருப்படிகள் வைத்தியசாலைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த உத்தரவாத காலம் மிகைத்த மருத்துவ உபகரணங்களின் பெறுமதி ரூபா 76,825,839 ஆக இருந்தது. | 2023 | வழங்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்களை செயற் திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். | கம்பி இருப்பினை குறுகிய காலத்தில் நிர்மாணங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குருணாகல் புதிய கட்டிட நிர்மாணத்திற்காக பயன்படுத்துவதற்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. கொட்டின் பைல் லேஸ் மிகை இருப்பு காணப்பட்டமை காரணமாக கொ.பா.க இரத்மலான இடமிருந்து ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன. இதுவரை ஆலோசணைகள் கிடைக்கவில்லை. மருத்துவ உபகரணங்களை நோயாளிகளின் பயன்பாட்டுக்காக எதிர்காலத்தில் தற்போது செயற்படும் வாட், பிரிவுகள், மற்றும் சிகிச்சைகளின் எதிர்காலத்தில் தேவைப்படும் போது வழங்கல் இடம் பெறுகின்றது | மருத்துவ உபகரணங்களை எதிர்காலத்தில் ஆரம்பிக்க உள்ள வைத்தியசாலை தற்போது செயற் பாட்டிலுள்ள வாட், பிரிவுகள், மற்றும் சிகிச்சைகளுக்காக தேவைப்படும் போது வழங்கல் இடம் பெறுகின்றதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனைய உபகரணங்கள் விளைவற்று காணப்படுகினற்ன |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 32. | மெட்ரோபொலிட்டன் கெம்பஸ் கல்வி நிறுவனத்தின் கட்டிடத்தில் 11,074 சதுர அடி வீதம் ஆன 05 மாடிகள் மற்றும் 10,104 சதுர அடிகளான 06 மாடிகளுடன் கூடியதாக உள்ளதுடன் இந்த மாடிகளில் காணப்படும் 875 இருக்கை இயலளவு விரிவுரைகளுக்காக பயன்படுத்தக் கூடிய 07 மண்டபங்கள் காணப்பட்ட போதும் அதிகளவிலான மண்டபங்கள் அதிக காலப்பகுதிகளாக குறைப் பயன்பாடுடன் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது | 2023 | விரவுரை மண்டபங்களை முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எமது நிறுவனத்தின் அனைத்து மாடிகளில் காணப்படும் வசதிகளை இணையதளம், முகப் புத்தகம், பிரசுரங்கள் மற்றும் கைநூல்கள் போன்ற சந்தைப்படுத்தல் வழிகள் ஊடாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாளாந்த பாடநெறிகளுக்காக விரிவுரை மண்டபங்களை பயன்படுத்துதல் வழமையான பிரகாரம் மேற்கொள்ளப்படுவதுடன் கொத்தளாகல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்குரிய பீடம் ஒன்று எமது நிறுவனத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது 03 குழுக் களுக்கான மாணவர்களுக்காக விரிவுரை மண்டபங்களை பயன்படுத்துவதும் நிறுவனத்தின் அனைத்து மாடிகளில் காணப்படுகின்ற வசதிகளை இணையதளம்: முகப் பக்கம் பிரசுரங்கள், கைப் பிரதிகள் போன்ற சந்தைப்படுத்தல் வழியில் ஊடாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிறுவனத்தின் காணப்படும் துண்டு பிரசுரங்கள் கைநூல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | போன்றவற்றை மாதாந்தம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| 33. | 2018 ஆம் ஆண்டின் போது வைத்தியசாலையின் ஆய்வுகூட பரிசோதனைப் பொருட்கள் மற்றும் அறிக்கைகளை எடுத்துச் செல்லும் குறிக்கோளில் ரூபா 96,846,900 (ஐ.அ.டொ 530,000) செலவு செய்து 56 துறைகளை (Stations) தொடர்புபடுத்தி வாயு குழாய் முறைமை (Pneumatic Tube System) ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் அதில் 52 பிரிவுகளுக்காக மாத்திரம் மீளாய்வாண்டில் பிரயாணம் செய்யப்பட்டிருந்தது. அதில் 100 இனை விட குறைவாக மேற்கொள்ளப்பட்ட 25 துறைகள் காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் குறைப்பயன்பாட்டு | 2023 | வாயு குழாய் முறைமை உயர் இயலளவுடன் வைத்தியசாலை செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | தவிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை | பல்கலைக்கழக வைத்தியசாலையில் காற்றுச் சீராக்கும் முறைமை பிரிவுகள் 56 (station) நிறுவப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழகத்தின் முழுமையான இயலுமையுடன் செயற்படாததால் சில இடங்களில் (ICU 02, ICU 03, ICU 4, ward 07, ward 08) (station) பயன்படுத்தாமல் காற்றுச் சீராக்கும் முறைமை குறை பயன்பாட்டுடன உள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரிவுகள் அளவு 44 சதவீதமாக இருந்தது. வைத்தியசாலை இயலளவில் செயற்படாமை காரணமாக வைத்தியசாலையில் சில பிரிவகளை பயன்பாட்டிற்கு எடுக்காமையும் இந்த காற்றுச்சீராக வழி குறைப்பயன்பாட்டிற்கு காரணமாக இருந்தது. | | | | |
| 34. | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வைத்தியசாலையில் 5A, 7A மற்றும் 7B வார்ட்கள் மற்றும் அதி தீவிர சிகிச்சை பிரிவு 02, 03 மற்றும் 04 ஆம் பிரிவுகளில் 2022 மே மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையில் பயன்பாடு இன்றி காணப்பட்டதுடன் அதில் காணப்பட்ட ரூபா 210,190,808 பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் விளைவற்று காணப்பட்டன. | 2023 | வாட்களை முழுமையான இயலளவுடன் பயன்படுத்துவதற்கு தந்திரோபயத்தை நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | 7-A வாட் இரண்டாவது மருத்துவ வார்டாக திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் வாரட் இலக்கம் 7-B தனியார் துறையின் வார்ட் ஒன்றாகும். அது வார்ட் இலக்கம் 09B மற்றும் 9A தனியார் இயலளவு மிகைக்கும் சந்தர்ப்பத்தில் நோயாளி அனுமதித்தல் இடம்பெறுவதுடன் தற்போது காணப்படும் அதிக ஊழியர் பற்றாக்குறையை சரியாக முகாமை செய்வதற்கு அவசியம் உள்ளதால் இலக்கம் 8 B மற்றும் 9B உயர் இயலளவில் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் அதி தீவிர சிகிச்சை பிரிவு 2 தற்போது | 7-A வாட் இரண்டாம் மருத்துவ வார்டாக திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் தற்போது 66 நோயாளிகளுக்கு வதிவிட சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும். வாரட் இலக்கம் 7-B தனியார் துறையின் வார்ட் ஒன்றாக உள்ளதுடன். அது வார்ட் இலக்கம் 09B மற்றும் 08-A தனியார் இயலளவு மிகைக்கும் சந்தர்ப்பத்தில் நோயாளி அனுமதித்தல் இடம்பெறுவதுடன் தற்போது காணப்படும் அதிக ஊழியர் பற்றாக்குறையை சரியாக முகாமை |

| | |
|---|---|
| ஆரம்பிக்கப்பட்ட இருதய தோல் பிரிவாக பயன்படுத்துவதற்கு உள்ளதுடன் அப்பிரிவை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதன் பின்னர் அதி தீவிர சிகிச்சை பிரிவு 02 இற்கான அந்த உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க எடுப்பேன்.அத்தோடு அதிதீவிர சிகச்சை பிரிவு 03 மற்றும் 04 ஐ ஆரம்பிப்பதற்காக தேவையான மனித வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சுகாதார அமைச்சுடன் பல கலந்துரையாடல் சுற்றுக்கள் நடாத்தப்பட்டுள்ளன. | செய்வதற்கு அவசியம் உள்ளதால் இலக்கம் 8 - B மற்றும் 9B உயர் இயலளவில் பயன்படுத்தப் படுவதாகவும். மேலும் அதி தீவிர சிகிச்சை பிரிவு 2 தற்போது ஆரம்பிப்பதற்கு காணப்படும் இருதய தோல் பிரிவாக பயன்படுத்துவதற்கு உள்ளதுடன், அப்பிரிவினை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் அதி தீவிர சிகிச்சை பிரிவு 02 இற்கான அந்த உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க எடுப்பதாகவும் அதிதீவிர சிகச்சை பிரிவு 03 மற்றும் 04 ஐ ஆரம்பிப்பதற்காக தேவையான மனித வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சுகாதார அமைச்சுடன் பல கலந்துரையாடல் சுற்றுக்கள் நடாத்தப்பட்டுள்ளது |

டன்

அம்மணித வளங்களை பெற்றுக் கொள்வதற்காக புரிந்துனர்வு உடன்படிக்கையொ ன்று மூலம் பெற்றுக்கொள்வதற் காக சுகாதார அமைச்சின் சட்ட மதிரையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள் ளதுடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளுக் காக அனுப்பி வைக்கப்பட்டு கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது டன் அதன் பிரகாரம் அந்த உடன்படிக்கை கைசச்சா திட்ட பின்னர் த்தின் பின்னர் அதற்காக தேவையான மனித வளங்கள் கிடைக்க பெறுவதுடன் அப்போது அந்த பிரிவை ஆரம்பிப்பதன் பின்னர் அந்த மருத்துவ உபகரணங்களையு ம் பயன்படுத்தும் இயலுமை உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | தது |
| 35. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 215,240,527 செலவிடப்பட்டிருந்த 2023 பெப்ரவரி 24 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கிருந்த வைத்தியசாலை முகாமைத்துவ தகவல் முறைமைக்காக 2 சந்தர்ப்பங்களில் கால நீடிப்பு வழங்கப்பட்ட பின்னர் இச்செயற்திட்டம் 2024 மே 28 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 ஜூன் 11 ஆந் திகதி வரை இந்த செயற் திட்டத்தின் முன்னேற்றம் 68.5 சதவீதமான அளவில் காணப்பட்டது. | 2023 | திட்டமிடப்பட்டவாறு முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தவிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை | 2024 அக்டோபர் 8 ஆந் திகதி வரை 90 நாட்களுக்காக மூன்றாவது கால நீட்டிப்பு வழங்கப்பட்டது, இதுவரை வன்பொருள் 70 சதவீதம் நிறுவலும், மென்பொருள் 100 சதவீதம் நிறுவலும், 80 சதவீதம் மென்பொருள் தனிப்பயனாக்கம் மற்றும் ஒட்டுமொத்த முன்னேற்றம் 77 சதவீதம் ஆகும் என அறிவிக்கப்பட்டிருந் தது. |
| 36. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 பிரிவின் பிரகாரம் முறையான பொறுப்பேற்றல் கடிதம் வழங்கிய உடனே ரூபா 500,000 மிகைக்கும் பொருட்கள் அல்லது சேவைகள் ஒப்பந்தங் களுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று எழுதி கையொப்பமிட வேண்டிய போதிலும் தென் சபையின் தெரிவு கணக்காயின் போது ரூபா 500,000 மிகைத்த | 2023 | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதனை சரி செய் பெறுகை வழிகாட்டல் கோவை 8.9.1 இற்குரிய ரூபா 500,000 மிகைக்கும் : : “பொருட்கள் மற்றும் சேவைகளை ” கொள்வனவு செய்வதற்காக தகைமையுடைய வழங்குனர்களுடன் உடன்படிக்கை செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாக | இந்த அவதானிப்பினை சரி செய்து பெறுகை வழிகாட்டல் கோவை 8.9.1 இற்குரிய ரூபா 500,000 மிகைக்கும் “பொருட்கள் மற்றும் சேவைகளை” (Good and Service) கொள்வனவு செய்வதற்காக தகைமையுடைய வழங்குனர்களுடன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 20,728,998 கூட்டுப் பெறுமதியான 27 பெறுகைகள் பெறுகை கோவையில் ஒப்பந்த உடன்படிக்கை உள்ளடக்கப்படாதிருந்ததுடன் கேள்வி ஆவணங்களிலும் அதற்காக பிரிவொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | | | . | உடன்படிக்கை செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாக |
| 37. | தென் சபையின் நிர்மாணிக்கப்பட்டு வரும் பேரவை வீடு மற்றும் கெடட் உத்தியோகத்தர் வீட்டிற்காக தேவையான மூலப்பொருட்கள் பல சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம் மண்டப வீட்டிற்காக தேவையான பலகை களுக்காக ரூபா 3,980,725 மற்றும் சுடெட் உத்தியோகத்தர் வீட்டிற்கு உருக்கு கம்பி கொள்வனவிற்காக ரூபா 6,222,018 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இக் கொள்வனவு முறையே 07 சந்தர்ப்பங்களிலும் 08 சந்தர்ப்பங்களிலும் மேற்கொள்ளப் பட்டிருந்தன. மேலும் கடெட் உத்தியோகத்தர் வீட்டிற்காக ரூபா 2,124,000 பெறுமதியான | 2023 | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தவிர்க்கும் நடைமுறைகள் எடுக்கப்படவில்லை | அதன் பிரகாரம் தேவைப்பாடு உருவாகும் விதத்தின் பேரில் பொருட்கள் கோரல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 24 கட்டில்கள் 03 சந்தர்ப்பங்களில் ஒரே வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் திரட்டிய கொள்வனவிற்காக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த விலை நன்மை கிடைக்காமல் போயிருந்தது. | | | | |
| 38. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6 பிரிவின் பிரகாரம் தெளிவான விதந்துரைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான விதந்துறைகள் தயாரிக்கப்படாமல் கூறுவிலைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு தென் சபையில் கிருமி ஒழிப்பிற்காக இரசாயன பொருட்கள் மற்றும் மெட்ரோபொலிட்டன் கெம்பஸ் நிறுவனத்திற்காக கேள்வி பார்வை முறைமை (Audio Visual System) ஒன்றை கொள்வனவு செய்யும் போது முறையே ரூபா 907,280 மற்றும் ரூபா 934,000 செலவிடப்பட்டு இருந்தது. மேலும் கேட்டல் பார்வை முறைமை கொள்வனவின் போது | 2023 | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கிருமி ஒழிப்பிற்குரிய கேள்வி கோரும் போது சதுர அடி அடிப்படையில் கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் கேள்விதாரர்கள் இடப் பரிசோதனை ஒன்று மேற் கொள்ளாமல் சதுர அடி அடிப்படையில் கேள்வி கோரல் பத்திரங்களை நிரப்பியிருந்தனர். இதன் போது அனைத்து கிருமிகள் மேவுகை செய்யப்படும் வகையில் இக்கேள்வி கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மெட்ரோபொலிட்டன் கெம்பஸ் (உத்தரவாத) கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் இடம் பெற்றிருந்ததுடன் இக்கொள்வனவு | தற்போது நிறுவனத்தின் பெறுகை நடவடிக்கைகள் முறையான பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நடைமுறைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 இன் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | | | விண்ணப்பத்தை அங்கீகரிக்கும் போது குறித்த விதந்துரைகளை சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்ற விண்ணப்பங்களின் பிரகாரம் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வழங்குனருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த. | |
| 39. | கேட்போர் கூட நிர்மாணம் மூன்று கட்டங்களில் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் 2015 ஆம் ஆண்டு வரை இந்நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 04 ஆண்டுகளில் இக்கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்ததுடன் அதனால் கட்டிடத்தில் இருந்த சேதங்களை மீண்டும் திருத்தம் செய்வதற்காக ரூபா 8,458,531 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் 14 மாதங்கள் அதாவது 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதி | 2023 | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தற்போதய மதியுரை நிறுவனத்தினால் கட்டமைப்பு பகுதிகளின் உறுதியை அதிகரிக்க வேண்டும் என சுட்டிக் காட்டியுள்ளதுடன் முதலாவது கட்டத்தில் மதியுரை நிறுவனத்தினால் திட்டப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டு அவர்களின் கண்காணிப்பின் நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் பகுதிகளில் உறுதி போதிய அளவில் இல்லை என்பதால் அவற்றை உடைத்து அகற்றி மீண்டும் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டது. ரூபா 8,458,530.58 தொகை முதலாம் கட்டத்தில் வேலை தளத்தில் நிர்மாண நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட தொழில் | 2024 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரை கேட்போர் கூடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வரையில் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்ய மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் 2024 பெப்ரவரி வரையில் வேலை பூர்த்தி செய்வதற்கு பல்கலைக்கழகத்திற்கு முடியாது இருந்தது. இங்கு பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.11 பிரிவிற்கு முரணாக கேட்போர் கூடத்திற்காக ரூபா 5,670,000 பெறுமதியான டோர் ஸ்டீல் கொள்வனின் போது கேள்வி பாதுகாப்பு பிணை முறியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே வழிகாட்டி கோவையின் 8.9.1 பிரிவுக்கு முரணாக ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளாமல் இக் கட்டிடத்திற்காக 9 சந்தர்ப்பங்களில் ரூபா 25,345,980 பெறுமதியான பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தமை தெரிவு பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. | | | துறையாளர்களின் நிர்மாண மேற்பார்வைக்கும் கண்காணிப்புக்கும் நிர்மாணத்தின் பலவீன மட்டத்தில் காணப்பட்டமை போன்ற காரணங்களால் இடம் பெறவில்லை என்பதாகவும் அதற்காக வேறு காரணங்கள் தாக்கமளித்துள்ளதாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன். | |
| 40. | பெறுகை கைநூலின் 3 ஆவது அத்தியாயத்திற்கு முரணாக ரூபா 11,036,177 பெறுமதியான Sage கணக்கீட்டு | 2023 | பெறுகை கைநூலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | Sage கணக்கீட்டு மென்பொருள் முறைமை கொள்வனவு செய்யும் போது அவற்றுக்கு காணப்பட்ட அவசர | கணக்கீட்டு மென்பொருள் முறைமை கொள்வனவு செய்யும் போது பெறுகை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மென்பொருள் கொள்வனவிற்காக சந்தை ஒப்பீட்டு விலை முறைமை பயன்படுத்தப் பட்டதால் சர்வதேச / தேசிய போட்டி கேள்வியாளர் களின் விலை விவரங்களை கோரி பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த நன்மைகள் இழக்கப்பட்டு இருந்தது. | | | தேவைப்பாட்டின் பேரிலும் இப் பல்கலைக்கழகத்தின் நிதியாளர் அலுவலகத்தில் கணக்கு பிரிவின் சம்பளம் தயாரித்தல் ஏனைய கணக்குகள் நடவடிக்கைகளுக்காக கேள்வி கோருவதற்காக சந்தை ஒப்பீட்டு முறைமை பயன்படுத்தப்பட்டது | கைநூலின் மற்றும் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந் தது. |
| 41. | 2022 மே 09 ஆம் திகதி பெறுகை வழங்கள் கடிதத்தின் மூலம் Sage 300 ERP Solutions மென்பொருள் 2022 ஜுன் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவப்பட வேண்டிய போதிலும் 2024 ஜுன் மாதம் 19 ஆம் திகதி வரையிலும் சம்பள தயாரிப்பு மொடியுல்கள் தாபிக்கப்பட்டிருந்த போதும் அது செயற்பாட்டு மட்டத்தில் காணப்படவில்லை. பெறுகை வழிகாட்டி கோவையி 2.4 பிரிவின் பிரகாரம் 2022 மே 06 ஆம் திகதி நடத்தப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கையில் ஒரு உறுப்பினர் கையொப்பம் இடாமை காரணமாக அதன் செல்லுபடிக் காலம் தொடர்பாக | 2023 | பெறுகை கைநூலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் மென்பொருள் அனைத்து மொடியுல்களும் விரைவில் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட வேண்டும். | சம்பள தயாரிப்பு மொடியுல்கள் (Payroll Module) முறையாக ஸ்தாபிக்கப்பட்ட போதும் எம்மால் மேற்கொள்ளப்பட வேண்டிய தரவு உள்ளடக்கல்கள் இடம் பெற்று வருவதால் அந்த தரவுகளை உள்ளடக்கி பூர்த்தி செய்து பரீட்சிக்கப்பட்ட பின்னர் நேரடியாக செயல்பாட்டு நிலைமையில் இந்த மொடியுலையும் பயன்படுத்தலாம் | எவ்வித நடவடிக்கையொன் றும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை |

திருப்தி அடைய
முடியாததுள்ளது.

### 3.64. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| **நிதி விளைவு** | | | |
| இலாபம்/ மேலதிகம் / (நட்டம்)/ (குறைவு) ரூபா | 70,461,437 | 266,985,728 | 235,379,561 |
| மொத்த சொத்துக்கள் ரூபா | 1,799,887,770 | 1,868,936,790 | 2,328,149,016 |
| மொத்த பொறுப்புக்கள் ரூபா | 708,034,166 | 512,584,148 | 630,465,288 |
| உரிமை மூலதனம் ரூபா | 1,091,853,604 | 1,356,352,642 | 1,697,683,727 |
| **கணக்காய்வு அபிப்பிராயம்** | | | |
| முனைப்பழியற்ற/ முனைப்பழியுள்ள/ பாதகமான/ மறுப்பு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை |
|---|---|---|---|---|---|
| 01. | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டு 31 ஆண்டுகள் நிறைவடைந்த போதிலும், அதற்கு சட்ட அந்தஸ்தை வழங்குவதற்கான எந்த சட்டமூலமும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்திற்கு சட்ட அந்தஸ்தை வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட சட்டமூலம், சட்ட வரைஞர் திணைக்களத்தால் 2022 செப்தெம்பர் 26 இல் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. | 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு | சட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் முன்னேற்றத்தை கண்காணித்தல். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன சட்டமூலம் 2024 ஆகஸ்ட் 30 இல் அரசாங்க வர்த்தமானியில் பகுதி II பிற்சேர்க்கையில் பிரசுரிக்கப்பட்டு 2024.09.03 இல் வெளியிடப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. |
| 02. | மண்சரிவு ஏற்படக்கூடிய 14 மாவட்டங்களில் மண்சரிவு முன்னெச்சரிக்கைகளை வழங்குவதற்காக 330 தானியங்கி மழை மானிகள் நிறுவப்பட்டுள்ளன, அவற்றில் 251 மழை மானிகள் மாத்திரமே மண்சரிவு | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு | தானியங்கி மழை அளவீட்டு முறைமையை முறையாக பராமரிக்க வேண்டும். | தானியங்கி மழை அளவீட்டு முறையை நவீனமயமாக்குதல் மற்றும் முன்னேற்றத்தை கண்காணித்தல். | இந்த மழை மானிகள் அனைத்தும் 05 ஆண்டுகளுக்கு மேல் பழமையானதாக உள்ளதுடன் பல்வேறு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முன்னெச்சரிக்கைகளை வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசரகால செயற்பாட்டு நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அதில், 198 மழை மானிகள் மாத்திரமே தற்போது தகவல்களை பெறுகின்றன, மீதமுள்ள மழை மானிகள் செயற்படாத நிலையில் இருந்தன அல்லது தகவல் பெறப்படும் நிலையில் காணப்படவில்லை. | | | | தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக, கிட்டத்தட்ட 100 மழை மானிகள் செயற்பாடற்ற நிலையில் உள்ளன அல்லது தகவல் பெறும் நிலையில் காணப்படவில்லை. இந்த மழை மானிகளை பழுதுபார்ப்பது பொருளாதார ரீதியாக பலனளிக்காததால், CResMPA செயற்திட்டத்தின் கீழ் புதிய மழை மானிகளை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டு, அதற்கான கேள்வி வழங்கப்பட்டு, புதிய மழை மானிகள் அமைக்கும் பணி தொடங்கியுள்ளது. |
| 03. | 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மண்சரிவு அபாயம் உள்ள 11 மாவட்டங்களில் இருந்து மண்சரிவு பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 5,388 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மேலும் பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,545 ஆகும். மேலும், கடந்த ஆண்டு பெறப்பட்ட விண்ணப்பங்கள் உட்பட, மேலும் பரிந்துரைக்கப்பட வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2023 திசெம்பர் 31 அளவில் 2,889 ஆக இருந்தது, இது அந்த ஆண்டில் பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் 43 சதவீதமாகும். | 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு | ஆய்வுக்கு அளிக்கப்பட்ட விண்ணப்பங்களை உடனடியாக சரிபார்த்து அறிக்கைகள் வழங்கப்பட வேண்டும். | அறிக்கைகளை வெளியிடுவதை கண்காணித்தல்<br><br>கோரிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். | முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய அனைத்து கோரிக்கைகளுக்கும் தற்போது அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04. | சிரேஷ்ட விஞ்ஞானி - AR 2 பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக அடிப்படை ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு புறம்பாக அங்கீகரிக்கப்படாத நடைமுறையைத் தயாரித்து, ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஏற்பாடுகளை மீறி 02 நேர்முகப்பரீட்சைகள் நடாத்தப்பட்டன. இதன் காரணமாக முதற்கட்ட நேர்முகப்பரீட்சையில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மூன்று உத்தியோகத்தர்கள் உரிய பதவிக்கு பதவி உயர்வு பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர். | 2023 ஆம் ஆண்டு | இது ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். | இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உள்ளக கணக்காய்வாளர் அறிக்கையொன்றை வழங்கியிருந்ததுடன் இது ஆய்வு செய்யப்பட்டு, மேலதிக பணிகளுக்காக திட்டமிடப்பட்டுள்ளது. |
| 05. | 2013 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்காக அமுல்படுத்தப்பட்டு வரும் தொகுதி ஆயுள் காப்புறுதி மற்றும் மருத்துவக் காப்புறுதி திட்டத்திற்காக காப்புறுதி கம்பனிக்கு ரூபா 9,815,793 தொகை செலுத்தப்பட்டது. அந்த நிறுவனத்தைச் சேர்ந்த 23 ஊழியர்கள் 29 சந்தர்ப்பங்களில் போலியான விலைப்பட்டியல்களையும் போலியான உத்தியோகபூர்வ முத்திரைகளையும் தயாரித்துள்ளனர். தொகுதி ஆயுள் காப்புறுதி மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ரூபா 1,820,000 மருத்துவ விலைப்பட்டியல்கள் மீள்நிரப்பு செய்யப்பட்டன. போலியான ஆவணங்களை தயாரித்து காப்புறுதி இழப்பீடு பெற்ற ஆறு அதிகாரிகளிடம் இருந்து ரூபா 440,000 தொகையை அந்த நிறுவனம் அறவிட்டிருந்த போதிலும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு | போலியான ஆவணங்களை தயாரித்து காப்புறுதி இழப்பீடு பெற்ற அதிகாரிகள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2024 ஆம் ஆண்டுக்கான காப்புறுதித் திட்டத்தின் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இது தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணையை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

## 3.65. அனர்த்த முகாமைத்துவ நிலையம்

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| **நிதி விளைவு** | | | |
| இலாபம்/ மேலதிகம் / (நட்டம்)/ (குறைவு) ரூபா | 7,995,000 | (44,745,000) | (11,536,000) |
| மொத்த சொத்துக்கள் ரூபா | 663,676,000 | 563,196,000 | 535,090,000 |
| மொத்த பொறுப்புக்கள் ரூபா | 52,304,000 | 31,596,000 | 54,341,000 |
| உரிமை மூலதனம் ரூபா | 611,372,000 | 531,600,000 | 480,749,000 |
| **கணக்காய்வு அபிப்பிராயம்** | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்படுத்துதல் நிலை |
|---|---|---|---|---|
| வளிமண்டலவியல் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியொன்றில் 2010 ஆம் ஆண்டில் ரூபா 1,034.39 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்காததுடன் காணியை சட்டபூர்வமாக சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021, 2022, 2023 | கட்டிடம் மற்றும் காணி சட்டபூர்வமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு சுவீகரிக்கப்பட வேண்டியதுடன் நிலையான சொத்துக்கள் முறையாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கட்டிடம் அமைந்துள்ள காணியை கையகப்படுத்த முடியாத காரணத்தினால் கட்டிடத்தின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் இனங்காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |
| 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்திற்கான திருத்தங்கள் 2008 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டன, ஆனால் அதற்கான திருத்தங்கள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021,2022,2023 | சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் சட்டத்தில் திருத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், அது தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |
| 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 04 ஆவது பிரிவின் பிரகாரம், நிலையத்தின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றான | 2021,2022,2023 | தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அமைச்சரவையின் அங்கீகாரம் | தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டத்தின் இறுதி வரைவு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரதிகள் சரிபார்க்கப்பட்டு | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | | பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | அச்சிடப்படாத காரணத்தினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க முடியவில்லை. | |
| குறைந்தபட்ச தகைமை இல்லாமல் தவறான தகவலுடன் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பணிப்பாளர் (தணிப்பு) பதவிக்கு நியமனம் செய்யப்பட்டதுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், குறைந்தபட்சம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலம் பணிபுரிந்திருக்க வேண்டிய போதிலும் ஒரு வருட காலத்திற்குப் பின்னர் சேவையில் உத்தியோகத்தர் நிரந்தரமாக்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 14,163,264 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் நிதிப் பிரமாண ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | 2023 | நிதிப் பிரமாண ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | இது தொடர்பில், சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களிற்கு அமைய பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |
| 2020 சனவரி 15 ஆம் திகதிய சீஏ/19/3498/203/008 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு உட்பட்டு ஒரு ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் அங்கீகாரம் இதுவரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 | இது முறையான அதிகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை அனர்த்த முகாமைத்துவ சபைக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை, மேலும் சபையின் கூட்டம் தொடர்பான நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் மேற்கொள்ளப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |

## 3.66 புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்

| | மொத்தச் சொத்துக்கள் (ரூபா) | மொத்தப் பொறுப்புக்கள் (ரூபா) | உரிமை (ரூபா) | வரிக்கு முன்னர் இலாபம் (ரூபா) | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 4,016,526,576 | 1,802,913,313 | 2,213,613,263 | 2,061,179,029 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 5,058,487,761 | 1,603,111,389 | 3,455,376,372 | 2,557,296,846 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 7,457,599,975 | 1,639,573,875 | 5,818,026,100 | 1,506,083,659 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|
| 2017 மே 22 திகதி அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கு இணங்க கனிய வளங்கள் தொடர்பாக தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்வற்கு 2024 ஜூன் 30 வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 | கனிய வளம் தொடர்பாக தேசிய கொள்கையொன்று விரைவாக தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கனிய வளம் தொடர்பாக தேசிய கொள்கையொன்று தயாரித்திருக்கவில்லை. |
| பணியகத்தினால் எரிபொருள் தொட்டியொன்று கொள்வனவு செய்து பணியக வளாகத்தில் எதிர்பொருள் களஞ்சியப்படுத்தும் இடம் தயாரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,401,262 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 2023 மே 31 திகதி அளவிலும் இந்த சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில் லை. | 2022 | சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். அத்தியவசியமல்லாத கொள்வனவுகளில் தவிர்ந்து கொள்ள வேண்டும். | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வளாகத்தில் எரிபொருள் களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| பொலன்னறுவ பிராந்திய அலுவலகம் நிர்மாணிக்கும் | 2023 | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிராந்திய அலுவலகம் நிர்மாணிக்கும் போது |

| | | | | |
|---|---|---|---|---|
| போது உசாத்துணை சேவை பெற்றுக்கொள்ளல் மற்றும் விலைகூறல் ஆவணங்கள் தயாரித்தல் பட்டய பொறியியலாளர் ஒருவரின் சேவையை பெற்றுக்கொண்டு 2023 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 2,105,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், பட்டய பொறியியலாளர் பிராந்திய அலுவல்கள் நிர்மாணித்தல் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் தலைவர் எனவும் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் பெறுகை செய்முறையில் கடப்பாடுகளுடன் மோதல் ஒன்று (Conflict of Interest) நிர்மாணிப்பதற்காக 2022 ஏப்ரல் 01 திகதி வரை 04 பகுதிக் கொடுப்பனவுகள் மூலம் ரூபா 19,253,840 தொகை அதாவது ஒப்பந்த வேலைப் பெறுமதியில் 23 சதவீதம் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்ட கருமங்களில் பௌதீக முன்னேற்றம் தொடர்பாக மதிப்பாய்வொன்று மேற்கொண்டிருக்கவில்லை. இந்த நிர்மாண வேலை 02 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் நிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் கட்டிடம் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. | | செயற்படாமை தொடர்பாக மீண்டும் பரிசோதனை மேற்கொள்ளல் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | | கருமங்களின் பௌதீக முன்னேற்றம் தொடர்பாக மதிப்பாய்வொன்று மேற்கொண்டு சரியான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 2018 – 2021 காலப் பகுதியில் பணியகத்தினால் மிகையாக செலுத்தப்பட்டிருந்த நிறைவேற்று உத்தியோகத்தர்களின் கையடக்க தொலைபேசி பில் பத்திரங்கள் ரூபா 3,886,701 தொகை | 2023 | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகையாக செலுத்தியிருந்த கையடக்க தொலைபேசி பில் பத்திரங்களை அறவீடு செய்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | | | | |
| தொழில் முயற்சி வளங்கள் திட்டமிடல் முறைமையொன்று (ERP) நிறுவுவதற்காக 2022 ஆண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,661,910 தொகை மீளாய்வாண்டு இறுதியில் நடைமுறை வேலை என காட்டப்பட்டிருந்ததுடன், 2023 பெப்ரவரி 20 திகதி குறிப்பிட்ட கருமத்தை செயற்படுத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் இந்த செலவுகள் விளைவற்றதாக இருந்தது. அவ்வாறாயினும், பணியகத்தினால் உத்தேச தொழல்முயற்சி வழங்கல் திட்டமிடல் முறைமை (ERP) செயற்படுத்தும் குறிக்கோளுடன் ரூபா 20,394,000 இற்கான 60 கணினிகள் 2023 பெப்ரவரி 21 திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 15 திகதி அளவில் அவற்றில் ரூபா 4,078,800 தொகை பெறுமதியான 12 கணினி இயந்திரங்கள் விளைவற்று களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | 2023 | சொத்துக்கள் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொழில் முயற்சிகள் வழங்கல் திட்டமிடல் முறைமையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| லங்கா மினரல் சேன்ட் லிமிடட் கம்பனிக்கு கனிம ஆய்வுக்காக வழங்கியிருந்த இலக்கம் EL/406 கொண்ட ஆய்வு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 2022 திசெம்பர் 30 திகதி முடிவடைந்திருந்ததுடன், 2023 ஜனவரி 04 திகதிய இலக்கம் 2313/37 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் பிரிவு 14(இ) இணங்க | 2023 | ஆய்வு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கனிம ஆய்வு அகழ்வு அனுமதிப்பத்திரம் சரியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| அனுமதிப்பத்திரதாரர்கள் ஆய்வுகளை முடிவுறுத்த வேண்டிய நாள் முதல் அல்லது அனுமதிப்பத்திரம் ஒன்று செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த திகதி முதல் இரண்டு வருட காலப் பகுதியினுள் அகழ்வு அனுமதிப்பத்திரம் விண்ணப்பிப்பதற்கு அல்லது குறிப்பிட்ட கட்டணம் செலுத்த வளமுடைய பகுதியை தனக்கு தடுக்கு வைக்கக்கூடிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட ஆய்வு பிரதேசம் தொடர்ந்தும் உறுதிப்படுத்துவதற்கான நடைமுறையை செயற்படுத்துவதற்காக அந்த கம்பனிக்கு 2 வார காலம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது ஆய்வு அனுமதிப்பத்திரத்தில் உட்பட்டிருந்த 07 கிரீட்களுக்கான நிலப் பரப்பு ஒன்று 2023 ஒக்தோபர் 09 திகதி முதல் 2025 ஒக்தோபர் 08 திகதி வரையான காலப் பகுதியில் ஆய்வு நடவடிக்கை மேற்கொள்வதற்கு வேறொரு தனியார் கம்பனிக்கு இலக்கம் EL/434 கொண்ட ஆய்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | | | | |
| இலங்கையில் பொஸ்பேட் கனிமத்திற்கான பணியகத்தினால் கணிப்பீடொன்று மேற்கொள்ளும் வரை பொஸ்பேட் கனிமத்திற்காக எதுவித உடன்படிக்கையும் மேற்கொள்ளல் 2000 ஜூன் 02 திகதி இலக்கம் SE(FR)884-99 கொண்ட புலன்குலம எதிராக செயலாளர் கைத்தொழில் | 2023 | ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணியகத்தினால் பொஸ்பேட் கனிமத்தினால் முறைசாரா விதமான ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. |

அமைச்சு மற்றும் ஏனைய ஆட்கள் என்ற வழக்கின் மூலம் சட்ட விரோதமானது என தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. மேலும், தேசிய விஞ்ஞான சபையின் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆலோசனையின் மீது பணியகத்தினால் இலங்கையில் அபடைட் மற்றும் ஏனைய பொஸ்பேட் கனிமங்கள் தொடர்பாக விரிவான ஆய்வொன்று மேற்கொண்டு அறிக்கையொன்று வெளியிட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 22 ஆண்டுகளுக்கு பின்னர் பணியத்தினால் எப்பாவெல பொஸ்பேட் படிவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த கணிப்பீட்டு அறிக்கை தேசிய விஞ்ஞான மன்றத்தின் மற்றும் தேசிய விஞ்ஞான அகடமியின் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ள முன்னர் 2023 ஜூன் 21 திகதி பணியகத்தின் உத்தியோகதபூர்வ இணையத்தளத்தினூடாக மற்றும் செய்தித் தாள்கள் ஊடாக வெளியிடப்பட்டிருந்தது. 2023 ஆகஸ்ட் 25 திகதி தேசிய விஞ்ஞான மன்றத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அவதானிப்பு அறிக்கையின் மூலம் நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்ட கருமங்கள் உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு பணியத்திற்கு முடியாமல் இருந்ததென அறிவிக்கப்பட்டிருந்ததுடன், கணிப்பீட்டு அறிக்கைக்காக தேசிய விஞ்ஞான மன்றத்தின் அங்கீகாரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வழங்கியிருக்கவில்லை. வழக்குத் தீர்ப்பின் படி தேசிய விஞ்ஞான மன்றத்தின் இணக்கப்பாடு வழங்கப்பட்ட பின்னர் கணிப்பீட்டு அறிக்கை வெளியிடுதல் மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக லங்கா பொஸ்பேட் கம்பனியினால் தெரிவு செய்யப்பட்ட பொஸ்பேட் ஏற்றுமதியாளர்களுக்கு பணியகத்தினால் ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், தனியார் ஏற்றுமதியாளர்கள் இருவரினால் 7,500 மற்றும் 2,350 மெட்ரிக் தொன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. | | | | |
| பணியகத்தின் அகழ்வுப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவில் பயன்படுத்தப்படுகின்ற கணினி மென்பொருள் முறைமைகள் 20 வருடங்களை விட பழமை வாய்ந்து காணப்படுவதுடன், வருடாந்தம் ரூபா 1,050,000 இற்கான பராமரிப்புச் செலவொன்று தனியார் கம்பனிக்கு செலுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், பணியகத்தின் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் நிதித் தேவைப்பாடுகளுக்கு உகந்தவாறு அகழ்வுப் பிரிவிற்கு உரிய அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், வேத்துரிமை கணித்தல், இன்வொயிஸ்கள் வழங்குதல், கட்டணம் அறவீடு செய்தல், வங்கிப் பிணைமுறி | 2023 | மென்பொருள் முறைமை நாளதுவரை ஆக்க வேண்டும். | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணியகத்தின் கணினி மென்பொருள் முறைமை தற்போதைய செயற்பாடுகளுக்கு மற்றும் நிதித் தேவைப்பாடுகளுக்கு பொருத்தமான விதத்தில் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

பெற்றுக்கொள்ளல், அகழ்வு வளவினை புனர்நிர்மாணித்தல், அகழ்வு அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்தல், கட்டணம் திருப்பிச் செலுத்துதல் மற்றும் கணக்குப் பிரிவிற்குரிய மற்றும் வசதிகளை உட்படுத்தி நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை.

## 3.67 இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு

| | மொத்த சொத்துக்கள் (ரூபா.) | மொத்த பொறுப்புகள் (ரூபா.) | உரிமை (ரூபா.) | இலாபம் / மிகை / (நட்டம்) / (பற்றாக்குறை) (ரூபா.) | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 69,571,095 | 81,101,947 | (11,530,852) | (15,754,042) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 66,787,553 | 84,834,877 | (18,047,323) | (13,906,980) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 64,931,041 | 87,192,512 | (22,261,471) | (8,802,344) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வு அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட் படும் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | 1987 இலக்கம் 27 கொண்டசட்ட உதவி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 4(I) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளசட்ட உதவிவழங்கப்படுவதற் கான ஏதேனும் ஒரு பிரிவு சம்பந்தமாக பரிட்சார்த்த நிகழ்ச்சித் திட்டங்கள், சட்டப் பிரச்சினைகள் தொடர்புடைய மையங்கள் மற்றும் திட்டங்கள் அமைப்பதனை கட்டுப்படுத்தல், அபிவிருத்திசெய்தல், மற்றும் அவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல் மற்றும் அவ்வழுக்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்கள் | 2021 | சட்டமூலத்தின் நோக்கங்களை செயற்படுத்து வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட ல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிரு க்க வில்லை. | சட்டத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சட்ட உதவி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ஏற்பாடுகள் மூலம் சட்டம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன, மேலும் JURE செயற்திட்டத்தின் கீழ் நிதியுதவியுடன் நாடளாவிய ரீதியில் 85 மையங்கள் மூலம் பல சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் சட்ட கிளினிக்குகள் நடத்தப்படுகின்றன. UNDP/UNISRF/EURO PEAN UNION போன்ற வெளிநாட்டு செயற்திட்டங்களிலிருந்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் திட்டங்களினை உண்டுபண்ணல் அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றினை அமுல்படுத்துவதற்கு தேவையான பணிக்குழாமினை சேவையில் ஈடுபடுத்தல் ஆகிய பிரதானஅதிகாரங்களினைஇதுவரையில்செயல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | | பெறப்பட்ட ஏற்பாடுகள். LGBTIQ சமூகம், பழங்குடியினர், மீனவ சமூகம், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாகக்கூடிய சிறப்புத் திறன் கொண்டவர்களுக்காகவும் சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் சட்ட கிளினிக்குகள் நடத்தப்படுகின்றன. |
| 2 | அரசினது சட்டஉதவி வேலைத்திட்டங்களினைன சிவில் சமூகத்தினுள் ஒழுங்குமுறையாக வழங்கப்படுதலினை நோக்காகக் கொண்டு 2016 மார்ச் 30 இலங்கைக்கான உத்தேச சட்ட உதவி கொள்கை எனும் பெயரிலான தேசிய கொள்கையினை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 | சட்ட உதவி வேலைத்திட்டத்தினை உரிய முறையில் செயற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்படி சட்ட உதவிக் கொள்கையில் மேம்படுத்தப்பட வேண்டிய தற்போதைய நிலைமைகளைக கண்டறிந்து தேசியத் தேவைகளுக்கு ஏற்றவாறு அவற்றைத் தயாரிப்பது அவசியமாகும். அசல் சட்ட உதவிக் கொள்கையை தயாரிப்பதில் சட்ட உதவி ஆணைக்குழு பங்கேற்கவில்லை. புதிய சட்ட உதவிக் கொள்கையைத் தயாரிப்பதற்காக நீதி அமைச்சு 30.08.2024 அன்று ஒரு குழுவை நியமித்துள்ளது. இந்தக் குழு எதிர்காலத்தில் சட்ட உதவிக் கொள்கையை மீளாய்வு செய்து அதன் பணியை நிறைவு செய்யும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | ஆணைக்குழுவின் 2022 இன் வரைவு வருடாந்த அறிக்கையின் படி சட்ட உதவி வழங்குவதற்காக 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு முன்கொண்டு வரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 38,099 தொகையாக காணப்பட்டதுடன், 2022 ஜனவரி முதல் திசெம்பர் வரை புதிதாக கோப்பிடப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை 11,380 தொகையாகக் காணப்பட்டமையால் அந்த காலப் பகுதியில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 49,479 தொகையாக இருந்தது. அவற்றில் 10,740 வழக்குகள் திசெம்பர் 31 திகதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அத் திகதியில் உள்ளவாறு மேலும் தீர்க்க வேண்டியிருந்த வழக்குகள் 38,739 | 2021 2022 | சட்டத்தின் குறிக்கோள்களின் பிரகாரம் செயலாற்றுகை பேணப்படல் வேண்டும். | பதில் அளித்திருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு தொடர்பான அவதானிப்பின் செயல்முன்னேற்றம் சரியானதாகும், மேலும் சட்டத்தின் நோக்கங்களின் பிரகாரம் 2024 சனவரி 01 இல் உள்ளவாறு முன்வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 38905 ஆகும். 2024 சனவரி முதல் செப்தெம்பர் 30 வரை புதிதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 9471 ஆகும். அந்த காலகட்டத்தில் விசாரிக்கப்பட வேண்டிய மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 48376 ஆகும். 19941 வழக்குகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டது. 30.09.2024 நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 28935 ஆகும். . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையாகும். அது மொத்த சேவை வழங்குவதற்கு இருந்த வழக்குகளின் எண்ணிக்கையில் 78 சதவீதமாகும். | | | | |
| 4 | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான தலைமை அலுவலகம் மற்றும் 85 மத்திய நிலையங்களில் காணப்பட்ட இருப்பு உருப்படிகளின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | . நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து இருப்பு உருப்படிகளின் பெறுமதிகளும் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். | ஆணைக்குழு இதுவரையிலும் நடைமுறை சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யவில்லை என்பதுடன் எதிர்வரும் வருடம் முதல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | தற்போதுள்ள கணக்கீட்டு கணினி முறைமையின் வரையறைகள் காரணமாக, ஒரு குறிப்பிட்ட நாளில் நுகர்பொருட்களாக வைத்திருக்கும் இருப்பைக் கண்டறிந்து பதிவு செய்ய முடியவில்லை. அந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அந்த கணனி முறைமையின் மேம்படுத்தப்பட்ட மென்பொருளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய புதிதாக புதுப்பிக்கப்பட்ட மென்பொருளைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் நுகர்பொருட்களின் சரியான மீதமுள்ள இருப்பு இருப்பைக் கணக்கிடுவதற்கு நடவடிக்கையினை நான் மேற்கொள்வேன். |
| 5 | நிதிக்கூற்றுக்களில் நிலையான சொதத்தில் | 2022 2023 | நிலையான சொத்துக்கள் | 2009 ஆம் ஆண்டுக்கு | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டுள்ள 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த ரூபா.15,619,085 பெறுமதியிலான கணினிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த ரூபா.36,950 மதிப்பிலான நூலகப் புத்தகங்கள் போன்ற சொத்துக்கள் தொடர்பான நிலுவைகளின் துல்லியத்தன்மையினை சரிபார்ப்பது தொடர்பான அட்டவணைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | தொடர்பான நிலுவைகளின் துல்லியத்தன்மையினை சரிபார்ப்பது தொடர்பான அட்டவணைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | முன்னர் சொத்துப் பதிவேடு எதுவும் இல்லை என்றும், சொத்துப் பதிவேட்டைத் தயாரிக்கும் போது முந்தைய ஆண்டுகளின் இறுதிக் கணக்குகள் மற்றும் பணப் புத்தகங்களின் அடிப்படையில் தரவுகள் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக எந்த தகவலும் கிடைக்கவில்லை. | சட்ட உதவி ஆணைக்குழுவுக்கு பயன்படுத்தப்படும் பெரும்பாலான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தற்போது முற்றிலும் தேய்மானம் அடைந்துள்ளன. இந்த நிலைமையில் இந்த சொத்துக்களின் பெறுமதியினை மீட்டெடுக்க வேண்டிய நிலைமை உள்ளது. எனவே, தலைமைக் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட சொத்து மதிப்பீட்டு வழிகாட்டுதல்களின் பிரகாரம், தொடர்புடைய சொத்துக்களை உடனடியாகக் கண்டறிந்து, எண்ணி, மீள்மதிப்பீடு செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றேன். |
| 6 | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,428,014 தொகையான கடன் பட்டோர் மீதியினுள் 01-02 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 402,990 தொகையும், 02-03 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 707,008 தொகையும், 3-5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 67,251 தொகையும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 230,500 | 2023 | கடன் கொடுத்தோர் மீதிகளை தாமதிக்காது அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 5 வருடங்களுக்கு மேற்பட்ட தொகையானது கம்பஹா கிளைக்காக செலுத்தப்பட்டு வைப்புகள் மற்றும் கிளைகளின் நடைமுறைக் கணக்குகளை திறக்கும் போது வைப்புச் செய்யப்பட்ட பணம் என்பதுடன், | 31.12.2023 அன்று சட்ட உதவி ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்ட முற்பணத்தை கடன் பட்டோராக பதிவுசெய்தது கணக்கீட்டில் ஏற்பட்ட பிழையொன்றாக கருதுகின்றேன். இந்த நிலுவைத் தொகையில் செலுத்தப்பட்ட முன்பணம் மற்றும் பெறவேண்டிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையுமாக கடன் பட்டோர் மீதியும் நிலவிய போதிலும், உரிய மீதிகளை அறவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | இது மீள பெற்றுக்கொள்ளப் படக்கூடிய வைப்புத் தொகைகளை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள இயலுமை உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | வைப்புத்தொகைக்கான வட்டி ஆகியவை அடங்கும். 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கணக்குகளை துல்லியமாக குறிப்பிடுவதற்காக இதை நான் குறிப்பிட்டேன். |
| 7 | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்படியாக ரூபா 2,390,922 தொகையான கடன் கொடுத்தோர் மீதியினுள் 01 வருடத்தை விட குறைந்த ரூபா 1,200,621 தொகையும், 1-2 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 513,019 தொகையான கடன் கொடுத்தோர் மீதியும், 3-5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 929 தொகையான மீதியும், 5 வருடங்களை விட அதிகமான ரூபா 676,353 தொகையுமாக கடன் கொடுத்தோர் மீதி காணப்பட்ட போதிலும் உரிய மீதிகளை கணக்குகளில் சீராக்குதல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 | கடன் கொடுத்தோர் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செலுத்த வேண்டிய மீதிகளின் 1 முதல் 2 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி இந்த வருடத்தினுள் செலுத்தப்படுவதுடன், 5 வருடங்களை விஞ்சிய மீதியானது ஆணைக்குழுவில் சேவையாற்றி விலகிச்சென்ற தரப்பினருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், காசோலைகள் பெற்றுக்கொள்ளப் படாத காரணத்தால் அந்த காசோலை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கபபட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில், அதற்கான பொறுப்புகளை அவற்றின் காலத்திற்கு ஏற்ப நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புக்களாக பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| 8 | 1982 இன் 43 ஆம் இலக்க | 2021 | தொடர்புடைய | எதிர்காலத்தில் | முத்திரைக் கட்டணச் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முத்திரை வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ரூபா 25,000 இனை விட அதிகமான கொடுப்பனவுகளுக்கு ரூபா 25 முத்திரை கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், 26 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,529,961 பெறுமதியான கொடுப்பனவுகள் தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கு சட்ட உதவி ஆணைக்குழு முத்திரைத் தீர்வை விதிக்க வேண்டும் மற்றும் காலாண்டு அடிப்படையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். |
| 9 | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் அரச வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,748,671 தொகையான நிலையான வைப்புக்களுக்கு அதிகாரசட்டத்தின் பிரகாரம் நிதி அமைச்சரின் மற்றும் உரிய விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 2023 | தொடர்புடைய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். ீ:, | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று நிலையான வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்கு இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இந்தத் தொகையானது சட்ட உதவி ஆணைக்குழுவின் அவசர நிதித் தேவைகளுக்கு நிதியளிக்க சட்ட உதவி ஆணைக்குழுவால் பேணப்படும் கணக்கீட்டு மீதியாகும். நிறுவனத்தின் பணிப்பாளர் சபை இதற்கு அனுமதி வழங்கியுள்ளதுடன் முறையான நிதி முகாமைத்துவத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| 10 | 2021 நவம்பர் 16 திகதிய பீ௱டீ 01/2021 இலக்கங் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 பிரிவின் பிரகாரம் 2022 வருடாந்த அறிக்கை 2023 | 2021 2022 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | மொழிபெயர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2022 ஆம் ஆண்டிற்கான அறிக்கை அச்சிடப்பட்டதன் பின்னர், 10.01.2024 அன்று |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செப்தெம்பர் 11 திகதியளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் 13.06.2024 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. |
| .11 | ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு வினைத்திறன் தடைகாண் பரீட்சை உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் ஆணைக்குழுவின் ஆரம்பம் முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலும் ஆரம்ப நிலை சேவை தொகுதிக்கு உரிய உத்தியோகத்தர்களுக் கு மாத்திரம் வினைத்திறன் தடைக்காண் பரீட்சை நடாத்தப்பட்டு இருந்தது. | 2023 | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2023 ஆம் ஆண்டில் ஆரம்ப நிலை சேவை தொகுதிக்கு வினைத்திறன் தடைகாண் பரீட்சை கள் நடாத்தப்பட்டதுடன் , ஏனைய பதவிகளுக்கு 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டினுள் வினைத்திறன் தடைக்காண் பரீட்சை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள் கின்றே ன். | ஆரம்ப நிலை சேவை பிரிவினருக்கான 2023 ஆம் ஆண்டுக்கான செயல்திறன் வினைத்திறன் தடைகாண் பரீட்சை நடத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 2024.05.18 அன்று சட்ட உத்தியோகத்தர்களுக்க ான வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள் நடாத்தப்பட்டதுடன், ஏனைய ஊழியர்களுக்கான பரீட்சைகளை நடாத்துவதற்கான உரிய ஏற்பாடுகள் தற்போது நீதித்துறை சாராத அதிகாரிகள் பயிற்சி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் பரீட்சைகள் அனைத்தும் இந்த ஆண்டில் நடத்தி முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| 12 | நிதிப்பிரமாணத்தின் 139(4) ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 1,590,277 தொகையான 41 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கு | 2023 | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் | 85 நிலையங்களுக்கு உரிய தலைமை அலுவலகத்திற்கு தபால் மூலம் | அனைத்து கட்டண உறுதிச்சீட்டுக்கள் தொடர்பான துணை ஆவணங்கள் தொடர்புடைய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய பற்றுசீட்டுகள் இணைக்கப்பட்டு இருக்கவில்லை. | | வேண்டும். | பற்றுசீட்டு மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், அந்த உறுதிச்சீட்டுகளை மத்திய நிலையங்களிலிருந்து கணக்காய்விற்கு அனுப்புவதாக தெரிவிக்கப்பட்டு இருந்தது. | உறுதிச்சீட்டுகளுடன் தாக்கல் செய்யப்படும். |
| 13 | நிதிப்பிரமாணத்தின் 237(ஆ) பிரிவின் பிரகாரம் களஞ்சிய விநியோகங்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது பொருள் கிடைத்துள்ளதாகவும், உரிய பொருட்பதிவேட்டில் மற்றும் இருப்பு புத்தகம் ஆகியவற்றில் அந்த பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், சான்றிதழ் ஒன்று இணைக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் ரூபா 7,509,063 பெறுமதியான 45 கொள்வனவுகளில் மேற்படி ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதன் பின்னர் பொருள் பெற்றுக் கொள்ளப்பட்டதாக சான்றிதழ் குறித்த உறுதிச்சீட்டுக்களுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | பொருட்களின் உறுதிச்சீட்டுக்கள் தொடர்பான பொருட்கள் பெறப்பட்டதற்கான ஆவணங்களை சான்றளிக்கவும், அவற்றை தொடர்புடைய துணை ஆவணங்களுடன் இணைக்கவும் நான் குறிப்பிட்டுள்ளேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | நிதிப்பிரமாணத்தின் 237(அ)(1) இன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 1,958,476 பெறுமதியான வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் 39 பழுதுபார்த்தல்களுக்கு உரிய முறையில் பணி நிறைவு செய்யப்பட்டதற்கான சான்றிதழொன்று பெற்றுக்கொள்ளப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2023 | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | மத்திய நிலையங்களின் பணிகள் அல்லது வழங்கல்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது திருப்திகரமான முறையில் பணி மேற்கொள்ளப்பட் டுள்ளதாக மற்றும் உரிய கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும் என மத்திய நிலையத்திற்கு பொறுப்பான சட்ட உத்தியோகத்தரா ல் இயந்திரத்திற்கு உரிய அட்டையில் சான்றிதழ் வழங்கப்படுகின்ற மை, பிற்காலத்தில் இந்த அட்டையானது உரிய பணி நிறைவடைந்த பின்னர் பிரதி ஒன்று அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டு இருந்தது. | 2024 ஆம் ஆண்டு முதல் பழுதுபார்ப்புக்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் சான்றிதழைப் பெற்றதன் பின்னர் உரிய திருத்தங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுப்பேன். |
| 15 | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை நிதிப்பிரமாணம் | 2022<br>2023 | தொடர்புடைய சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க | இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு நியதிச் சட்ட நிறுவனமொன்று | ஒரு ஊழியர் பெறும் மிகக் குறைந்த சம்பளம் மற்றும் சாதாரண கொடுக்கல் வாங்கல்களின் பிரகாரம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 880 இன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களுக்கு பிணை கட்டளை சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிட மிருந்து பிணை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். | என்பதால் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் அவற்றின் எல்லைகள் தொடர்பில் நீதி அமைச்சிடம் அறிவுரை கோரியுள்ளதுடன் அது கிடைத்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. | பாதுகாப்பு பிணையினை வழங்குதல் அதன் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயல்படுவது குறித்து தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 16 | 2023 சனவரி முதல் திசெம்பர் வரையிலான 12 மாத காலப்பகுதியில் இலங்கை வங்கியின் ஹல்ஃப்டார்ப் கிளையில் பராமரிக்கப்பட்ட நடைமுறை வங்கிக் கணக்கில், தொகை ரூபா.17.4 மில்லியன் முதல் ரூபா.4.9 மில்லியன் வரையில் இருந்தது. அதனால், அந்த அதிகப்படியான தொகை பயன்படுத்தப்படாமல் பேணப்பட்டது. | 2021 2023 | பணத்தை பயன்படுத்தப்படாமல் வைத்திருக்கக் கூடாது. | "காசோலைகள் வழங்கப்பட்டன, ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகளின்" பெறுமதியினைக் கழித்த பின்னர் பணப்புத்தகத்தின் பிரகாரமுள்ள மீதிகள் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட நிலுவைத் தொகையை விட குறைவாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. | இந்த மீதி வங்கி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட மீதியாகும் மற்றும் சட்ட உதவி ஆணைக்குழுவின் பணப் புத்தகத்தின் பிரகாரமுள்ள மீதி ரூபா.1,908,024.24 ஆகும். |
| 17 | 2006 பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.2.2 இன் பிரகாரம் சந்தை | 2023 | தொடர்புடைய பெறுகைகள் வழிகாட்டி | எதிர்வரும் வருடங்களிலிருந்து உரிய | பெறுகை வழிகாட்டுதல்களின் ஏற்பாடுகளுக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விலை ஒப்பிட்டு முறையில் விலை கேள்வி கோருவதற்கு ஆகக் குறைந்தது 07 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2023/2024 ஆண்டுகளுக்கு உரிய சுத்திகரிப்பு சேவைகளை வழங்கும் வருகையின் போது அமைப்பு குறிப்பீடுகளை தயாரிக்காது, விலைக்கேள்வி கோருவதற்கு குறைந்தது 03 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், 05 நாட்கள் கடந்த போதிலும் மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன், பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.3.6 ஆம் பந்திக்கமைய விலைக்கேள்வி திறத்தல் தொடர்பில் ஒரே மாதிரி பத்திரத்தில் அறிக்கையிடாததுடன், வழிகாட்டிக் கோவையின் 5.4.8 இன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களினால் உரிய காலத்திற்கு செயலாற்றல் பிணைமுறிகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகைகள் வழிகாட்டி கோவையை பின்பற்றி சுத்திகரிப்பு சேவை வழங்குனர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | உட்பட்டு எதிர்காலத்தில் அனைத்து பெறுகை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள நான் குறிப்பிட்டுள்ளேன். |
| 18 | ரூபா.595,282 பெறுமதியான தளபாடங்கள், புத்தக அலுமாரிகள் மற்றும் டயர்கள் தொடர்பான 09 பெறுகைகளை செய்தமை தொடர்பான ஆவணங்களை பெறுகை கோவைகளில் அடையாளம் காண | 2023 | பெறுகை தொடர்பான தகவல்கள் கோவைகளில் பேணப்படல் வேண்டும். | அடுத்த ஆண்டு முதல் நிர்ணயிக்கப்பட்ட பெறுகை வழிகாட்டுதல்களை பின்பற்றி பெறுகை நடவடிக்கைகளை | பரிந்துரைக்கப்பட்ட பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் விலைமனுக்களை கோருவதன் மூலம் இந்த பெறுகை மேற்கொள்ளப்பட்டுள்ள |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முடியவில்லை. | | | மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. | து. |
| நிர்மாண செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் பெறுமதி ரூபா 45,811.79 மில்லியனாக இருந்ததுடன் அப்பெறுமதியினுள் 05 செயற்திட்டங்கள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த ரூபா 15.53 மில்லியன் முற்பணம் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 இறுதி வரை உரிய மீதிகள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் கட்டம் I மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் கட்டம் III மற்றும் ருவன்புர அதிவேக வீதி செயற்திட்டம் என்பவற்றிற்காக மொத்தமாக ரூபா 39,976.2 மில்லியன் தொகை முற்பணமாகச் | முடிவுறத்துவதற்கும் முற்பணங்களை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ாக பணி ஆரம்பிப்பு முற்பணங்கள் அந்த செயற்திட்டத்தின் இறுதிப் பட்டியலின் ஊடாக தீர்ப்பனவு செய்யப்படவுள்ளதுடன், மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் 1 மற்றும் 3 ஆகியவற்றுக்காக பணி ஆரம்பிப்பு முற்பணங்களில் ரூபா 1,359.86 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. | கட்டம் I, மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் கட்டம் III மற்றும் ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை திட்டங்களிலிருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய முற்பணங்களின் பெறுமதி ரூபா.38,616.34 மில்லியன் ஆகும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய 03 செயற்திட்டங்களின் வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க வேலைகளை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள ரூபா 45,811.79 மில்லியன் முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கு முடியாதிருந்தது. | | | | |
| (16) | சுற்றுலா விடுதியினை நிர்மாணிப்பதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அதிகார சபையினால் 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 60 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அப்பணத்தில் ரூபா 44.18 மில்லியன் தொகையான வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தும் மிகுதி ரூபா 15.82 மில்லியன் தொகைக்குரிய வேலைகளை மேற்கொள்வதற்கு அல்லது உரிய முற்பணத்தை மீள அறவீடு | 2022 | உரிய செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு அல்லது மிகுதிப் பணத்தை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்தத் தொகையை மீள அறவிடுவதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அந்த அதிகாரசபை இது தொடர்பாக எந்த பதிலும் அளிக்கவில்லை. எனவே, அந்தத் தொகையைப் பெற முடியாவிட்டால், அதற்குப் பதிலாக வீடுகளைப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்து தேவையான | இந்தத் தொகை மீள அறவிடப்படவில்லை அல்லது தொடர்புடைய பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்வதற்கு 2022 இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | பணிகளைச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (17) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 100,000 கி.மீ சாலை திட்டத்தின் கீழ் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் குழு உறுப்பினர்களுக்கு அரச பெறுகை வழிகாட்டுதல் 2006 இன் விதிகளை மீறி செலுத்தப்பட்ட ரூபா.6.19 மில்லியன் அதிகப்படியான கட்டணத்தை அறவீடு செய்வதற்கு 2022 இறுதி வரையிலும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அதிகாரசபையிலிருந்து ஓய்வு பெற்ற ஒரு அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட ரூபா.3.03 மில்லியனும் தொடர்புடைய | 2022, 2023 | பெறுகை வழிகாட்டுதல்களின் ஏற்பாடுகளை மீறக்கூடாது, மேலும் அதிகப்படியான கொடுப்பனவுகளை அறவீடு செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். மேலும், அதிகப்படியான கொடுப்பனவுகளை அங்கீகரித்த அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்தத் தொகையை செலுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது, மேலும், எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளிலிருந்து இது அறவீடு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். | அமலாக்கப் பணிகள் நிறைவடைந்துள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீதியில் உள்ளடங்கும். | | | | |
| (18) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒரு இலட்சம் வீதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தில் 6,426 கிலோ மீற்றர் வீதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 193,518 மில்லியன் தொகையான 2481 வேலைக் கட்டளைகள் (முழசம ழுசனநச) மகனெகும நிர்மாணித்தல், இயந்திரங்கள் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 131,650 மில்லியன் கிரயமான 4,732.8 கிலோமீற்றர் வீதிகளின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு மத்தியில் 306.97 கிலோமீற்றர் வீதி தொடர்பான பெறுமதி ரூபா 5,920 மில்லியன் தொகையான 71 வேலைக் கட்டளைகளின் ஒப்பந்த நடவடிக்கைகள் | 2022 | ஒப்படைக்கப்பட்ட வேலைக்கட்டளைகளை உரிய காலத்தில் முடிவுறுத்துவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரமின்றி உப ஒப்பந்தம் வழங்கிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 100,000 கிலோமீற்றர் விதிகளை அபிவிருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மகனெகும நிறுவனத்திற்கான ஒப்பந்தங்கள் வேலைக்கட்டளைகளாக (முழசம ழுசனநசள) வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க மகனெகும நிறுவனத்திற்கு 7,377.37 கிலோ மீற்றர்களுக்கான ரூபா 190,800 மில்லியன் பெறுமதியான 2,416 வேலைக் கட்டளைகள் மாகாணத்தின் மாகாணத்திற்குப் பொறுப்பான பணிப்பாளரினால் வழங்கப்பட்டது. மேலும் மகனெகும நிறுவனத்தின் மூலம் இச்செயற்திட்டத்தை உப ஒப்பந்தம் வழங்குவது | நிலைமை அவ்வாறே காணப்படுகிறது. |

மாத்திரம் நேரடியாக மேற்கொள்வதற்கு கம்பனி பொறுப்பேற்றிருந்தது. அது மொத்த வேலைக் கட்டளைகளின் பெறுமதியில் 03 சதவீதம் அளவான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் மிகுதி வேலைகளான 97 சதவீதம் தொடர்பான 4,425.87 கிலோ மீற்றர் வீதிகளுக்கான கிரயம் ரூபா 125,730 மில்லியன் தொகையான 1,753 வேலைக்கட்டளைகளின் ஒப்பந்த நடவடிக்கையானது கம்பனியின் சேவை வழங்குனர்களாக இனங்காணப்பட்ட உப ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் இவ்வாறு உப ஒப்பந்தம் வழங்குதல் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபைப் பத்திரம் இலக்கம் 2008∴1109 இற்கு

சம்பந்தமாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு தெரியப்படுத்தப்படவில்லை.

முரணானதுடன் 2020 மே 07 ஆந் திகதிய அமைப.‬.20.‬.0731.‬.2 21.‬.005-1 ஆம் இலக்க அமைச்சரவை திர்மானத்தின் பிரகாரம் ஒரு அரசாங்க கம்பனிக்கு ஒப்பந்தம் வழங்கும் குறிக்கோளும் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் உப ஒப்பந்தக்காரரின் இலாபமாக அரசாங்கத்தின் பணம் ரூபா 20,955 மில்லியன் தொகை தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. மேலும் 2022 இறுதிவரை முழு வேலைக்கட்டளைகளில் ரூபா 32,736 மில்லியன் தொகையான 351 வேலைக்கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 29,130 மில்லியன் தொகைக்குரிய 306 வேலைக்கட்டளைகளின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கவில்லை. | | | | |
| (19) | 1995 யூலை 21 ஆந் திகதி சனாதிபதி செயலகம் வழங்கிய அரசாங்க காணிகளை ஒப்படைப்பது தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 07 மற்றும் 08 ஆம் பிரிவுகள் உடன்படிக்கையின் நிபந்தனையாக 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை குத்தகை வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக தெற்கு அதிவேக வீதியின் வெலிப்பனை சேவை இல்லத்தின் உணவுச்சாலை மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையத்தை செயற்படுத்துவதற்காக 04 காணித்துண்டுகள் 30 ஆண்டுகள் காலத்திற்கும் 99 ஆண்டுகள் காலத்திற்கும் குத்தகை அடிப்படையில் 02 தனியார் கம்பனிகளுக்கு | 2023 | காணிகளை ஒப்படைத்தல தொடர்பான வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களை மீறிய உத்தியோகத்தர்களை அடையாளங்கண்டு தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVII அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட வருடாந்த பெயரளவு குத்தகை வாடகையான ரூபா 10,000 மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் காணித்துண்டு இலக்கம் 01 மற்றும் இலக்கம் 09 இற்காக 30 ஆண்டுகளுக்கும் காணித் துண்டுகள் இலக்கம் 04 மற்றும் 06 இற்காக 99 ஆண்டுகளுக்குமாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அவர்களிடமிருந்து ஒரே தடவையில் உரிய பணம் இலங்கை இன்சுவரன்ஸ் ரிசோட் (தனியார்) கம்பனியிடமிருந்து ரூபா 21,800,000 தொகை 2013-02-13 ஆந் திகதியும் கெனோவின் ஹோட்டல் என்ட் ஸ்பாஸ் (தனியார்) கம்பனியிடமிருந்து | தொடர்புடைய குத்தகை ஒப்பந்தம் திருத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வருடாந்த குத்தகை வாடகை ரூபா 10,000 வீதம் ஆன 03 உடன்படிக்கைகளின் மூலம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | | | ரூபா 2,924,905 தொகை 2014-01-29 ஆந் திகதியும் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. | |
| (20) | 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதியிடப்பட்ட 30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் இணைப்பு II இல் உள்ள பந்தி 04 இன் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்கள ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 114 அதிகாரிகளுக்கு MM 1-3 சம்பள அளவுகோலின் அடிப்படை சம்பளத்திற்கு பதிலாக HM சம்பள அளவுகோல் நிறுவப்பட்டதன் காரணமாக, அந்தத் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட | 2022, 2023 | இந்த விடயம் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் விசாரணையினை மேற்கொண்டு, உயர் சம்பள அளவில் அங்கீகாரம் இல்லாமல் பணியமர்த்தப்பட்ட சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரகள் மீது தாபன விதிக்கோவையின் பகுதி II இன் XLVII அத்தியாயத்தின் பிரிவு 08 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.<br><br>தொடர்புபட்ட நியமனங்கள் மற்றும் சம்பளக் கொடுப்பனவுகளை அங்கீகரித்த | இந்த சம்பள அளவுகோலுக்கான அங்கீகாரம் இதுவரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படவில்லை.<br><br>சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலமாகவோ அல்லது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் மூலமாகவோ இந்த சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் அதிகாரிகளுக்கு உள்நாட்டில் உரித்துடைய பதவி | இந்தப் பிரச்சினையைத் தீர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பணியாளர் மறுசீரமைப்பு பரிந்துரைகளை செயல்படுத்தாமல், திணைக்களத்தின் விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களின் பிரகாரம் உருவாக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையைத் தயாரிப்பதற்கு உட்பட்டு 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா.437.89 மில்லியன் மிகையாக சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | | அதிகாரிகளிடமிருந்து மிகையான கொடுப்பனவுகள் வசூலிக்கப்படல் வேண்டும். | உயர்வுகளைப் பெறும்போது இந்தப் பிரச்சினை தானாகவே தீர்க்கப்படும். | |
| (21) | 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 28(11) ஆம் இலக்க சுற்றறிக்கைமுகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்த ஊழியர் அளவினை மிகைத்து சேர்த்தக்கொள்ளப்பட்ட 857 உத்தியோகத்தர்களுக்கு 2023 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையினா | 2023 | உரிய நியமங்களை அங்கீகரித்த சம்பளக் கொடுப்பனவை அங்கீகரித்த உத்தியோகத்தர்களின் மூலம் மிகைக்கொடுப்பனவு அறவீடு செய்யப்படுதல் வேண்டும். | ஊழியர் தேவைப்பாட்டின் அடிப்படையில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்பபின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் இறுதித் திகதியில் (2023-12-31 ஆந் திகதியில்) 856 மிகைப் பதவியணியினர் காணப்பட்டனர். | பரிந்துரையானது செயல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ல் ரூபா 309.7 மில்லியன் பணம் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | | | | |
| (22) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க சுற்றறிக்கைஉத்தியோகத்தர்கள் அங்கீகரித்த சம்பளத்திற்கு மேலதிகமாக ஏதாவது படியினை பெற்றுக்கொள்வதாயின் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்தும் சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவிடமிருந்தும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 2016 மார்ச் 28 ஆந் திகதிய 1698/2016 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் | 2023 | மிகையான கொடுப்பனவுகளை அங்கீகரிக்கப்படாத படிகளுக்கான கொடுப்பனவுகளை அங்கீகரித்த உத்தியோகத்தர்களிடமிருந்து<br><br>அறவீடு செய்தல் வேண்டும். | ஒவ்வொரு தொழில்சார் தொழில் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்ட தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவம் வகிக்கின்ற நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகாரசபையினால் தொழில்சார் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. வீதி அபிவிருத்தி அதிகாரசபை படியானது கூட்டு உடன்படிக்கையை மேற்கொள்ளும் போது பொதுத்திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு படியானதுடன் அதிலிருந்து நீங்கிகொள்ளும் போதும் உரிய | தொடர்புடைய படிகள் மேலும் வழங்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | படியும் அதிகாரச்சபை படியும் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2023 போது 382 ஊழியர்களுக்கு ரூபா 110.59 மில்லியன் உள்ளடங்கலாக 2016 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 736.46 மில்லியன் தொழில்சார் படியாகச் செலுத்தப்பட்டிருந்துடன் 2023 போது 6794 ஊழியர்களுக்கு ரூபா 1,042.61 மில்லியன் உள்ளடங்கலாக 2019 இலிருந்து 2023 வரை ரூபா 5,232.61 மில்லியன் "வீதி அபிவிருத்தி அதிகார சபை படியாக" செலுத்தப்பட்டிருந்தது. | | | சலுகைகள் அவ்வாறே காணப்படுகின்றது என்பதனை திறைசேரி செயலாளர் இணங்கி கொண்டுள்ளார் என அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தொழில்சங்கத்திற்கு தெரிவித்துள்ளார். | |
| (23) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு | 2023 | பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்காக வினைத்திறனான உள்ளகக் | இருக்கின்ற வசதிகளுக்கு இணங்க தற்பொழுது | சொத்துக்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படவி |

| | | | |
|---|---|---|---|
| நிதிகளைப் பயன்படுத்தி ரூபா 767,630 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட 312.6 கி.மீற்றர் அதிவேக வீதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்படுகின்றது. இந்த வீதிகளின் அனைத்து நிருவாக நடவடிக்கைகளும் அதிகாசைபக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் பெலிசாருக்கு வசதிகளை வழங்குவதனை உள்ளடக்கி செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ரூபா 2,000 மில்லியனுக்கு மேற்பட்ட கிரயம் செலவு செய்யப்பட்டிருந்தும் அதிவேக வீதிகளிலுள்ள சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக போதியளவு பாதுகாப்பு வேலைத்திட்டம் தயாரிக்காமையின் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதிவேக வீதியிலுள்ள | கட்டுப்பாட்டினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | போதியளவில் வசதிகள் அதிகரிக்கப்பட்டிருந்தும் அதிவேக வீதியிலுள்ள ஆதனங்கள் வீதி நெடுகிலும் பரவிக் காணப்படுவதனால் அந்த ஆதனங்களுக்கு முழுமையான பாதுகாப்பினை வழங்குதல் மிகவும் சிக்கலான விடயமாக உள்ளது. | ல்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆதனங்களை களவாடுதல் மற்றும் சேதப்படுத்துதல் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அச்சேதமடைதல்களின் பெறுமதி ரூபா 913.17 மில்லியனாக இருந்தது. | | | | |
| (24) | 2021 ஆம் ஆண்டிலிருந்து 2024 சனவரி 31 ஆந் திகதி வரையான காலம் முடிவடையும் வரை அதிகாரசபையில் ரூபா 2.08 மில்லியனை மிகைத்த பண மோசடி இடம்பெற்றுள்ளது என தெரிவுக் கணக்காய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான பண மோசடியினை தவிர்த்துக் கொள்வதற்காக பற்றுச்சீட்டு வருமானத்தினை பரீட்சிக்கும் நடைமுறை அமுல்ப்படுத்தப்படாததுடன் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற காசார் | 2023 | ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பணம் செலுத்துகின்ற சந்தர்ப்பத்தில் வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டுக்களை ஒப்பீடு செய்வதற்கான தரவு முறைமையானது ஒட்டு மொத்த அதிவேக வீதி வலையமைப்பிற்கும் இல்லை. | தொடர்புடைய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையானது ஸ்தாபிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முறையானது 2011 ஆம் ஆண்டில் தற்காலிகமாக ஸ்தாபிக்கப்பட்ட ஒரு முறைமையாகும். | | | | |
| (25) | வீதி அபிவிருத்தி காணிகளை அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் சுதந்திரமான ஒரு மானியமாக அதிகாரசபைக்கு ஒதுக்கீடு செய்வதற்காக 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானித்திருந்தும் அதிகாரசபையினால் பயன்படுத்துகின்ற 935.855 ஏக்கர் காணிகள் மேற்கூறிய தீர்மானத்திற்கு இணங்க அதிகாரசபையினால் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு 2023 இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | அமைச்சரவை தீர்மானத்தினை அமுல்ப்படுத்துவதற்கு உரிய பொறுப்புக்களை உறுதியாக ஒப்படைத்து தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும். | இன்றுவரை சுதந்திரமான அனுமதிப்பத்திரிங்களின் கீழ் 356 காணித் துண்டுகளுக்காக விண்ணப்பத்திரங்கள் காணி ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை சுதந்திரமான அனுமதிப்பத்திரங்கள் அதிகாரசபைக்கு வழங்கப் பட்டிருக்கவில்லை. காணி ஆணையாளர் திணைக்களத்துடன் இது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | அமைச்சரவை தீர்மானம் அமுல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (26) | ரூபா 347.37 மில்லியன் பெறுமதியான 11 Aggregate Chip Spreaders இயந்திரங்கள் 2010 ஆம் ஆண்டின் போது அதிகாரசபைக்கு சனாதிபதி செயலாற்றல் படையணியினால் இறக்குமதி செய்து வழங்கப்பட்டிருந்த துடன் உரிய இயந்திரங்களின் அகலம் 4.2 மீற்றராக இருந்ததன் காரணமாகவும் அந்த அகலம் சாதாரண வீதியின் அகலத்தை விட அதிகமானதன் காரணமாகவும் அந்த இயந்திரங்களின் பெறுமதி 14 ஆண்டுகளுக்குப் பின்னர் ரூபா 4.4 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு அகற்றல் செய்வதற்கு 2024 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைவாக உரிய இயந்திரம் | 2023 | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத இந்த இயந்திரங்களை பொறுப்பேற்று பயன்பாட்டிற்கு எடுத்தக்கொள்ளாது வைத்திருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த இயந்திரங்கள் நிறுவனத்தின் தேவைப்பாடு தொடர்பாக முறையாக ஆய்வு செய்யப்படாது பொருளாதார விவகார அமைச்சின மூலம் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்த வைகளானதுடன் நாடு முழுவதும் காணப்படுகின்ற வீதிகளில் ஓடுவதற்கு இந்த இயந்திரத்தினை பயன்படுத்துவதற்கு முடியாது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை பராமரிக்கின்ற A மற்றும் B தரத்திலான வீதிகளில் தற்பொழுது கல்தார் பரப்புதல் மேற் கொள்ளப்படாததனால் இவைகள் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாதிருந்தது. | பரிந்துரை செயல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அதிகாரசபையின் தேவைப்பாடுகளுக்கு பொருத்தமற்றது என தெரிந்து கொண்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாது வைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் சர்ச்சை தன்மையானதாகவுள்ளது. | | | | |
| (27) | மேல் மாகாண செயற்திட்ட அலுவலகத்தின் கம்பஹா பிரதான பொறியியலாளர் அலுவலகத்தினால் அமுல்ப்படுத்திய 02 ஒப்பந்தங்களுக்கு ஒரே இலக்கத்தைக் கொண்ட வாகனம் ஒரே காலப்பகுதியில் ஓடியது எனக் குறிப்பிட்டு மொத்தமாக ரூபா 5.29 மில்லியன் விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய விலைப்பட்டியல் போலியானவை என | 2023 | பிரதான கணக்கீட:டு உத்தியோகத்தரினால் இது தொடர்பாக பரீட்சிப்புக்களை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உறுதிச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வது கைவிடப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் மற்றும் பெறுகை நடைமுறைகளை வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளுமாறும் மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களை பொறுப்புக்கூற வேண்டியவர்கள் | பரிந்துரை செயல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டதுடன் அந்த விலைப்பட்டியலை சான்றுபடுத்தி அங்கீகரித்த உத்தியோகத்தருக்கு எதிராக நிதிப்பிரமாணம் 156(1), 103(1)(அ) மற்றும் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | எனக்குறிப்பிட்டு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (28) | கம்பளை பழைய பாலத்திற்கு அருகாமையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாத வீதிப்பகுதி 2017 ஆம் ஆண்டிலிருந்து தீ.மு. ஜயரத்ன மதம் சார்ந்த இனவிருத்தி கட்டிடத் தொகுதியில் பிரசித்தப்படுத்தல் நிலையத்தினை செயற்படுத்துவதற்காக ஒரு கம்பனிக்கு அதிகார சபையினால் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இக்காணிக்காக வருடாந்த குத்தகை | 2023 | புலனாய்வினை மேற்கொண்டு உரிய காணியை ஒப்படைக்கும் போது முறையான நடைமுறையினைப் பின்பற்றி உரிய அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்கிணங்க பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கம்பளை பழைய பாலத்திற்கு அருகாமையில் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாத வீதிப்பகுதியின் நிலத்தின் அளவு 819 சதுர மீற்றர் ஆனதுடன் குத்தகை அறவிடப்படாது 2017 ஆம் ஆண்டின் போது அக்கம்பனிக்கு இப்பகுதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் குத்தகை அறவீடு செய்வதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு | வருடாந்த குத்தகை வாடகை விதிக்கப்படுவதில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | வருகின்றது. | |
| (29) | 2015, 2017 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நிறைவு செய்யப்பட்டு அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்ட 06 செயற்திட்டங்களின் மூலம் சுவீகரிக்கப்பட்ட 21,757 மொத்தம் காணி துண்டுகளில் 15,019 காணி துண்டுகளுக்கு இழப்பீடு மற்றும் வட்டியாக ரூபா.196.24 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 982 காணி துண்டுகளுக்கான இழப்பீடு மற்றும் வட்டி 2023 இறுதிக்குள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 5,756 அரச காணித்துண்டுகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டாம் என்று அதிகாரசபை முடிவு செய்திருந்தது. | 2023 | மேலதிக செலவுகளைக் குறைப்பதற்கு காணியினை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். | செயற்திட்டங்களுக்கான காணியினை சுவீகரிக்கும் உத்தியோகத்தராக சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் உள்ளார், மேலும் காணி அதிகாரசபைக்கு மாற்றம்செய்வது பதிவு செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொள்ப்படுகின்றது.<br><br>அமைச்சர்கள் அமைச்சரவை அந்த பதிவுசெய்தல் செயல்முறையினை விரைவுபடுத்துவதற்கான முறையை அங்கீகரித்துள்ளது, அதன் பிரகாரம், வீதி திட்டங்கள் தொடர்பான காணியினை சுவீகரித்தல் சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவினை விரைவுபடுத்துவத | காணியினை சுவீகரிக்கும் செயல்முறை இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேலும், காணியினை சுவீகரித்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சுவீகரிக்கப்பட்ட 21,757 மொத்த காணித் துண்டுகளில் எந்தவொரு காணித் துண்டுக்கும் காணியினை சுவீகரித்தல் சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் சான்றிதழைப் பெற அதிகாரசபை தவறியிருந்தது. | | | ற்கான ஆண்டாக 2024 ஆம் ஆண்டைக் கருத்தில் கொள்ளுமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (30) | 100,000 கி.மீற்றர் வீதி செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்து பின்னர் இடைநடுவில் நிறுத்தப்பட்ட வீதிகளை ஓடும் நிலைக்கு மாற்றுவதற்கு 2023 சனவரி 30 அந் திகதிய 23/0127/608/010 | 2023 | தாபன விதிக்கோவையின் பகுதி II இன் அத்தியாயம் 48 இன் பிரிவு 29 இன் பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு முரணாக செயல்பட்ட அதிகாரிகள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் | பெரும்பாலான சாலைகள் வாகனப் போக்குவரத்துக்கு உகந்ததாக மேம்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், அந்த மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்படாத சாலைகள் திட்டத்தின்படி | ணக்காய்வு பரிந்துரைகள் செயல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தும் மதிப்பீட்டுக் கிரயமான ரூபா.2,891.24 மில்லியன் தொகையான 212.30 கி.மீற்றர் புதிய வீதிகளை ஓடும் நிலையில் இல்லாத வீதியின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு தெரிவு செய்தல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாகும். | | வேண்டும். | முன்னுரிமை அடிப்படையில் மறுசீரமைப்புப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. | |
| (31) | பெருந்தெருக்கள் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட 2020 சனவரி 14 மற்றும் 2020 நவம்பர் 26 ஆம் திக அமைச்சரவைக் தீர்மானங்களின் பிரகாரம் அரச பெறுகை வழிகாட்டுதல்களின் வழிகாட்டுதல் 5.3.5 இற்கான துணைப் பிரிவு 39 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளை விட ஒப்பந்த பெறுமதி | 2023 | CIDA தரம் மற்றும் ஒப்பந்த பெறுமதியை திருத்துவதற்கு CIDA இன் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். | இந்த செயற்திட்டத்திற்கு மட்டும் ஒப்பந்ததாரர்களின் இயலுமை மற்றும் ஒப்பந்த பெறுமதியின் இல்லையினை அதிகரிப்பதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டது. | கணக்காய்வின் பரிந்துரை செயல்படுத்தப்படவில்லை. இந்தப் பிரச்சினை அவ்வாறே காணப்படுகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வரம்புகளை குறைந்தபட்சம் ரூபா.75 மில்லியனிலிருந்து உயர்ந்தபட்சமாக ரூபா.300 மில்லியன் வரை அசாதாரண வரம்பில் அதிகரிக்குமாறு கோரப்பட்டது.<br><br>அத்தகைய மாற்றங்களுக்கான அங்கீகாரங்கள் அமைச்சரவையால் வழங்கப்பட்டன. இருப்பினும், ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய CIDA தரம் மற்றும் ஒப்பந்த வழங்கலின் பெறுமதியினை மாற்றுவதற்கான அமைச்சரவைக் அமைச்சரவை விஞ்ஞாபனத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னர் அத்தகைய மாற்றங்களுக்கான அங்கீகாரத்தினை CIDA இடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு அமைச்சானது நடவடிக்கை எடுக்கவில்லை. | | | | |
| (32) | 2020 சனவரி 14 ஆந் திகதிய அமைச்சரவை | 2023 | நியம விலைமனு ஆவணத்தின் பிரிவு 4.1 இன் பிரகாரம் | மொத்த தொகை செலுத்தும் முறை மூலம் நிதி | இந்தப் பிரச்சினை அவ்வாறே காணப்படுகிறது. |

விஞ்ஞாபனத்தின் 3.5(உ) பிரிவின் பிரகாரம் 100,000 கி.மீற்றர் வீதிச் செயற்திட்டத்தின் கீழான அனைத்து வீதிகளின் வேலை ஒப்பந்தங்களுக்கான கொடுப்பனவு, Milestone கொடுப்பனவுகளை அடிப்படையாகக் கொண்டு வெளியீடுகளின் அடிப்படையில் (Milestone Delivery Modle) மேற்கொள்ளப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டது. இக்கொடுப்பனவு முறைமையானது அதிக தொழில்நுட்ப தேவைப்பாடுள்ள செயற்திட்டங்களுக்காக (Turnkey) ஈடுபடுத்தப்படுகின்ற ஒரு முறைமையானதுடன் மதிப்பீட்டினை தயாரிக்க கூடிய வீதி நிர்மாணங்களக்கான வழக்கமாக பயன்படுத்தப்படாத ஒரு முறைமையாகும். மேலும் Stanpard Bidding Document Procurement of

இணங்காத அதிகாரிகள் தொடர்பாக தாபண விதிக்கோவையின் பகுதி II இன் அத்தியாயம் XLVII இன் பிரிவு 08 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். வேலைக்கான பெறுகை வடிவமைப்பு மற்றும் நிர்மாண ஒப்பந்தங்கள் (CIDA/SBD/04) பகுதியில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும் தேவையான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1)(இ) இன் கீழ் கண்காணிப்பில் எழுத்துப்பூர்வ வழிமுறைகளை வழங்குதல் வேண்டும்.

நிர்வாகம் எளிதாகின்றது. மேலும் தளங்களில் காணப்படும் பணிகளுக்குப் பொருந்தக்கூடிய அனைத்து அதிகரிப்புகளும் ஒப்பந்தக்காரரால் செய்யப்பட வேண்டும்.

மேலும், இந்த செயற்திட்டம் ஒரு பெரிய அளவிலான திட்டம் என்பதன் காரணமாக அனைத்து செயற்திட்டங்களையும் மதிப்பீடு செய்து பணம் செலுத்துவதற்கு நீண்ட காலம் எடுக்கும். இந்த முறையைப் பின்பற்றும் செயற்திட்டங்களில் ஆபத்தையும் பொறுப்பையும் ஒப்பந்தக்காரரே ஏற்க வேண்டும். ஒப்பந்தக்காரர்களுக்கு பொறியியல் மதிப்பீட்டு பெறுமதியினை மட்டுமே வழங்குவதும் அதற்கான போட்டித் கழிவினைப்

work Design and Build Contracts (CIDA/SBD/04) இன் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த முறைமையின் கீழ் ஒரு ஒப்பந்தத்தை வடிவமைத்தல், அமுல்ப்படுததுதல் மற்றும் பூரணப்படுத்துதல் ஒரு ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அச்செயற்திட்டத்திற்காக வடிவமைத்தல் (Design) தொடர்பற்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க இம்முறைமையானது பூரணமாக பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த முறைமையின் கீழ் ஒப்பந்தத்தை வழங்குதல் இடம்பெற்றிருந்தும் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் சம்பந்தமாக பணக் கொடுப்பனவுகளை நிர்மாணிக்கும் போது மீண்டும்

பெறுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறையாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அளவீடு செய்து கொடுப்பனவு செய்யும் (Measure And pay) பின்பற்றவேண்டி ஏற்பட்டிருந்தது. | | | | |
| (33) | 100,000 கி.மீ வீதி செயற்திட்டத்தின் மூலம் ஒப்பந்த பெக்கேஜ் தொடர்பான பொறியியலாளர் மதிப்பீட்டினை கேள்வி மனுதாரர்களுக்குச் சமர்பபித்து அதற்காக உச்ச அளவு கழிவினை வழங்கும் முறைமைபின்பற்றப் பட்டிருந்தது. அதற்கிணங்க தெரிவு செய்த 24 ஒப்பந்த பெக்கேஜ்களுக்காக உரிய கேள்வி மனுதாரர்களினால் வழங்கப்பட்டிருந்த கழிவுகளின் அளவு 0.19 சதவீதத்திருந்து 13.56 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. பொறியியலாளர் மதிப்பீட்டினை சரியாக தயாரிக்காமையின் காரணமாக 09 மாகாணங்களின் மூலம் | 2023 | தவறான பொறியியல் மதிப்பீடுகளைப் பயன்படுத்துவதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது, தாபன விதிக் கோவையின் பகுதி II இன் அத்தியாயம் XLVIII இன் பிரிவு 29 இன் படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அரசாங்க கணக்காய்வு அதிகாரிகளின் பங்கேற்புடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது எட்டப்பட்ட ஒப்பந்தங்களின் பிரகாரம், மதிப்பீடுகளை மறுபரிசீலனை செய்ய சம்பந்தப்பட்ட மாகாண பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.<br><br>ஒப்பந்தம் வழங்கப்படும் போது ஒவ்வொரு பொருளின் பெறுமதிகளும் ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்படாததனால் வீதியின் நிர்மானத்திற்கான குறைந்தபட்ச செலவை மொத்த மதிப்பிடப்பட்ட செலவோடு ஒப்பிட்டுப் பார்த்த பின்னர் | இந்தப் பிரச்சினை அவ்வாறே காணப்படுகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான மதிப்பீட்டுப் பெறுமதி 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 3,484 மில்லியனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய பொறியியலாளர் மதிப்பீட்டினை பிரசித்தப்படுத்தாது விலை மனுக்களை கோருவதினூடாக ஒப்பந்தக்காரர்களைத் தெரிவுசெய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் நிறுவனத்திற்கு கழிவுகளின் மூலம் தகமை பெறுகின்ற பிரதிபலன்களை விட அதிக சாதகமான நிலைமை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. | | | செயற்திட்டத்திற்கு கழிவுகள் வழங்கப்படுகின்றது. ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் மூலம் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதிலிருந்து அதை மாற்றுவதால் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த உரிமைகோரல்களுக்கு ஆளாக நேரிடும், அவ்வாறு நடந்தால், செலுத்த வேண்டிய தொகைகள் கணிசமாக அதிகரிக்கும். | |
| (34) | 100,000 கி.மீற்றர் வீதிச் செயற்திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப் | 2023 | பொறுப்புக்களை சரியாக கணிப்பீடு செய்யாத உத்தியோகத்தர்களள் சம்பந்தமாக | மாகாண அலுவலகங்களினால் அனுப்பிவைக்கப்பட்ட சில | இந்தப் பிரச்சினை அவ்வாறே காணப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| பட்ட சேவைகளுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 40,651.55 மில்லியன் பெறுமதியான திறைசேரி பிணைமுறிகள் விடுவிக்கப்பட்டிருநதன. அப்பிணைமுறிகள் விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரை செயறதிட்டத்தினால் வெளித்தரப்பினர்களுக்கு கொடுப்பனவு செய்ய வேணடியுள்ள பெறுமதிகள் (கடப்பாடுகள்) சரியாக கணிப்பீடு செயயப்பட்டிருக்காததன் காரணமாக 11 சந்தர்ப்பங்களின் போது 09 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வழங்கப்படடிருந்த ரூபா 121.17 மில்லியன் தொகையான திறைசேரி பிணை முறிகளுக்குச் சமமான தொகை பின்னர் | தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விலைப்பட்டியல்கள் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டதுடன் அதற்கிணங்க உரிய வித்தியாசத்திற்காக அறவிட வேண்டிய பணத்தை அச்சந்தர்ப்பத்தின் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயற்திட்டத்திற்கு உரிய ஒப்பந்தக்காரர்களால் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அப்பெறுமதிக்குரிய திறைசேரி உடன்படிக்கைகளுக்காக அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட வட்டி மற்றும் கழிவு செய்யப்பட்ட முகப்பெறுமதி அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டமாகும். | | | | |
| (35) | 2020 பெப்ரவரி 13 ஆந் திகதிய அமைப/20/0142/221/005 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2020 சனவரி 14 ஆந் திகதிய 2020/01 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கு இணங்க 100,000 கி.மீற்றர் வீதிச் செயற்திட்டத்தின் கீழ் வீதிகளைத் தெரிவுசெய்யும் போது புள்ளிகள் | 2023 | அமைச்ரவவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட வரையறைகளை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது வீதிகளை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரமளித்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் 48 ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 100,000 வீதிகள் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது செயற்திட்டத்தின் வீதிகளை தெரிவு செய்வதற்கு புள்ளிகள் வழங்கும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டது. அதற்கிணங்க புள்ளிகள் வழங்கும் நடைமுறையின் மூலம் 40 புள்ளிகளுக்கு மிகையாக உள்ள வீதிகளுக்காக | இந்தப் பிரச்சினை அவ்வாறே காணப்படுகிறது. |

| | |
|---|---|
| வழங்க வேண்டிய ஒழுங்குமுறைமைக்கு இணங்க 40 புள்ளிகள் வரம்பினை மிகைத்து பெற்றுக்கொள்கின்ற வீதிகள் முதலாம் கட்டத்தில் தெரிவு செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் மேல் மாகாண செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் ரூபா 1,826 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட வீதியனைத் தெரிவுசெய்யும் போது அவ்வாறான புள்ளிகள் வழங்கும் நடைமுறை பின்னபற்றப்பட்டிருக்காததுடன் செயற்திட்ட குறிக்கோள்களுக்குப் புறம்பாக பாடசாலைகளின் உள்ளக வீதிகள், திறந்த வெளி நிலையங்கள், பூங்காக்கள், பள்ளிவாசல், கோயில், வீடமைப்பு தொகுதிகள் | முன்னுரிமை வழங்கி அச்செயற்திடடத்திற்கு அமைச்சு பெறுகைக் குழுவினூடாக பெறுகை நடைமுறை மேற்கொ்ளபப்பட்டு ஒப்பந்தத்தை வழங்குதல் இடம்பெற்றதுடன் 40 புள்ளிகளுக்கு குறைந்த அத்தியவசியமான மற்றும் பொருளாதார சமூக ரீதியாக முக்கியமான வீதிகள் நேரடி வேலையாட்களின் கீழ் அபிவிருத்தி செய்தல் மேற்கொள்ளப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொலிஸ் நிலையங்கள் இராணுவப்படை முகாம்கள் என்பவற்றிக்குரிய பொது இடங்கள் மற்றும் அந்த நிறுவனங்களின் உள்ளக வீதிகள் ஆகிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | | | |
| (36) | 2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வயையான காலப்பகுதியில் அதிகாரசபையினால் நிர்மாண பாதுகாப்பு நிதியத்திற்கு ரூபா 32,553.12 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தில் ரூபா 224.2 மில்லியன் 2023 இறுதிவரை உரிய நிதியத்தின் மூலம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. மேலும் 212 ஒப்பந்தங்கள் தொடர்பாக ரூபா 1,492.82 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட திறைசேரி பிணை முறிகள் | 2023 | வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டினை ஸ்தாபிப்பதற்கும் ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக புலனாய்வினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொடக்க புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) மூலமும் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அப்புலனாய்வின் பெறுபேறுகளின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதுடன் தற்பொழுது இடம்பெறுகின்ற கொடுப்பனவுகளின் போது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. | விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் ரூபா 29.94 மில்லியன் விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் நிதியத்திற்குப் புறம்பாக நேரடி ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 29.94 மில்லியனான விலைப்பட்டியல்யல்கள் போலியானவை என அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது | | | | |
| (37) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் தொடர்புபட்ட 5.3.4 ஆம் பிரிவிற்கு இணங்க 100,000 கிலோ மீற்றர் வீதிச் செயற்திட்டத்தின் தொடக்கத்தின் போதே நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் அமுல்ப்படுத்தப்படுகின்ற 50 கி. மீற்றர் மற்றும் 100 கி.மீற்றர்வீதிகளின் | 2023 | பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் கண்டு, பெறுகை வழிகாட்டுதல்களின் நிபந்தனைகளை மீறி ஒப்பந்தங்களை மதிப்பீடு செய்து வழங்குவதற்காக முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும். | அளவீட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்களின் பட்டியல் மற்றும் அளவீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் தகுதிகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன, மேலும் அவை அடையப்பட்ட அளவு மற்றும் தரத்தை மதிப்பிட்ட பிறகு | கணக்காய்வின் பரிந்துரைகள் செயல்படுத்தப்படவில்லை. |

நீளப்பக்கமாகவும் குறுக்குப் பக்கமாகவும் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக (Lengitudinal & Cross Section Survey) தனியார் கம்பனிகளுக்கு மொத்தமாக ரூபா 79.26 மில்லியன் தொகையான 50 கி.மீற்றர்களின் 10 ஒப்பந்தங்களும் மொத்தமாக ரூபா 121.45 மில்லியன் தொகையான 100 கி.மீற்றர்களின் 08 ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அந்த ஒப்பந்தங்களை வழங்கும் போது உரிய ஒப்பந்த நிறுவனத்திடம் அவற்றிற்குத் தேவையான உபகரணங்கள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பான மதிப்பீடானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் உரிய

தொழில்நுட்பக் குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

ஒப்பற்தக்காரருக்கு
வழங்கப்பட்டிருந்த
ஒப்பந்தங்களின்
அளவானது
ஒட்டுமொத்த
அளவீடுகளானது
2975 கி.மீற்றர்களில்
44 சதவிதமாக
இருந்தது.

## 3.73 மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவச்சபை

| | மொத்த சொத்துக்கள் (ரூபா.) | மொத்த பொறுப்புகள (ரூபா.) | உரிமை (ரூபா.) | இலாபம் / மிகை / (நட்டம்) / (பற்றாக்குறை) (ரூபா.) | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 6,005,267,727 | 51,236,367 | 5,954,031,360 | 6,720,314 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 5,898,872,012 | 53,224,345 | 5,845,647,667 | (1,480,749) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 5,781,642,350 | 37,476,448 | 5,744,165,902 | (114,231,765) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வு அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படும் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 79 இற்கு இணங்க நடைமுறைச் சொத்துக்களுக்கு தேறக்கூடியவை என எதிர்பார்க்காவிடின் பொதுவான செயற்பாட்டு வட்டத்தினுள் தேறுவதற்காக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் அடங்குவதாக இருந்த போதிலும் ரூபா 1,350,000 தொகைக்கான அறவிடப்பட முடியாத 02 வருடங்களை விட பழமையான வாடகை வைப்புத் தொகை நடைமுறை அல்லாத சொத்துக்கள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2023<br><br>2022 | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வெளித் தரப்பினர் ஒருவரிமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடத்திற்கான பாதுகாப்பு வைப்புத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், ஒரு வருடத்தினுள் இந்த தொகையை அறவீடு செய்வதற்கு முடியாமையால் நிதிக் கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என காட்டப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2024 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் அறவீடு செய்யப்படவேண்டிய வேண்டிய வாடகை வைப்புத்தொகைகளினை தற்போதைய சொத்துகளாக சீராக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றக் கட்டிடத்தில் கட்டமைப்பு சார் சிக்கல்களை திருத்த வேலை மேற்கொள்ளல் மற்றும் நீதிபதிகளின் உத்தியோகபூர்வ வாசஸ்தளக் கட்டிடத்தின் தரை மாடியில் அமைந்துள்ள கராஜின் கொங்கிரீட் சிலப்பின் திருத்தி வேலை மேற்கொள்வது தொடர்பாக நீதி அமைச்சினால் நேரியாக செலுத்தியிருந்த தொகைகள் முறையே ரூபா 1,492,884 தொகை மற்றும் ரூபா 3,431,070 தொகையாக காட்டப்பட்டதுடன், அதனை கணக்கீடு செய்வதற்கு மற்றும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்தல்கள் சரியாக மேற்கொள்ள வேண்டும். | இந்த இரண்டு கருமங்களும் நீதி அமைச்சின் 2023 யூன் 02 திகதிய MOJ/AC/11/08/23 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் மற்றும் தேவையான ஏற்பாடுகள் அமைச்சினால் செலுத்தப்படும் என வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டதால் மேற்கொள்ளப்பட்டதுடன், சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் பில் பத்திரம் கொடுப்பனவிற்காக ரூபா 1,492,884 தொகை உறுதிச் சீட்டு இலக்கம் P231284 மூலமும் நீதிவான்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தள கட்டிடத்தின் தரை மாடியில் அமைந்துள்ள கராஜின் கொங்கிரீட் சிலப் இன் திருத்த வேலைக்கான பில் பத்திரம் ரூபா 3,431,070 தொகை உறுதிச் சீட்டு இலக்கம் P231285 மூலமும் நீதி அமைச்சினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக 2024 ஆண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | தற்போதுள்ள ஆபத்து காரணமாக மனித மற்றும் பௌதீக வளங்களுக்கு ஏற்படக்கூடிய சேதங்களை தடுப்பதற்கு சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற கட்டிடத்தின் கட்டமைப்பு சிக்கல்களை விரைவாக சரி செய்ய வேண்டியிருந்தது. 2024 ஆம் ஆண்டிலேயே இது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். |
| 3. | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 01 இன் பிரகாரம் ஒட்டுமொத்த பதவியணிக்குமாக வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கைகள் கையொப்பமிடல் 2018 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் சபை அதன் பிரகாரம் | 2023 | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செயலாற்றுகை உடன்படிக்கை பணியாட்களுக்கு வழங்கப்பட்டு கையொப்பமிடலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால் 2024 ஆம் ஆண்டு முதல் அது தயாரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய செயலாற்றுகை உடன்படிக்கைகளுக்கு 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை கையொப்பமிடுமாறு நிறுவனத்தின் பிரிவுகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை உடன்படிக்கைகளுக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயற்பட்டிருக்கவில்லை. | | | | ஆண்டின் ஆரம்பத்தில் கைச்சாத்திடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| 4. | 2008 பெப்ரவரி 06 திகதிய மற்றும் 2018 ஜனவரி 24 திகதிய இலக்கம் 05/2008 மற்றும் 05/2008(i) கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத் துறையின் தொழிற்பாடுகளை மிகவும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு மற்றும் அதற்காக தொடர்புபடும் தரப்பினர் இடையே சிறந்த புரிந்துணர்வு ஒன்று மற்றும் ஒவ்வொருவரிடையே நம்பிக்கையை அதிகாரித்துக் கொள்வதற்காக பிரஜைகள் / பணியாட்கள் சாசனம் அறிமுகப்படுத்துதல் அனைத்து அரச நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் பிரஜைகள் / பணியாட்கள் சாசனம் அறிமுகப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பிரஜைகள் சாசனம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதனை ஆவணப்படுத்தியிருக்காததுடன், 2024 ஆண்டு முதல் அது தயாரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | பிரசைகள் பட்டயம் மீதான 05/2008 மற்றும் 05/2008 (i) வெளியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பிரகாரம், நம்பகத்தன்மை, மரியாதை, அக்கறை மற்றும் சேவைகளை வழங்குவதற்கான தயார்நிலை போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு, பிரசைகள் / வாடிக்கையாளர்களின் சாசனம் தற்போது எங்கள் நிறுவனத்திற்காக தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| 5. | 2004, 2006, 2008 ஆண்டுகள் மற்றும் 2010 ஆண்டின் ஆரம்பம் வரை கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 58,833,546 இற்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக அவற்றின் உளமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அட்டவணைகள் அல்லது ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023<br>2021 | நிலையான சொத்துக்களின் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய சான்றுகள் / அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 08 சொத்துக்களில் ஆரம்ப மீதிகள் காணப்பட்ட போதிலும் அந்த மீதிகளை உறுதிப்படுத்துவற்காக 2010 இற்கு முன்னர் உள்ள சொத்துக்களின் அட்டவணைகள் மற்றும் இன்வொயிஸ்கள் அழிவடைந்திருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் கணக்காய்வு ஐயவினாவில் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம் 08 சொத்துகளுக்கான ஆரம்ப நிலுவைகள் இருந்த போதிலும், அந்த நிலுவைகளை உறுதிப்படுத்தும் சொத்துக்களின் அட்டவணைகள் மற்றும் விலைப்பட்டியல்கள் 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் அழிக்கப்பட்டுள்ளன என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விடயத்தை மேலும் விசாரணை செய்வதற்கு குழுவொன்று |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | நியமிக்கப்பட்டதுடன், 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் சொத்துக்களின் அட்டவணைகள் மற்றும் விலைப்பட்டியல்கள் அழிக்கப்பட்டதாக குழுவின் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நிலையான சொத்துக்கள் அனைத்தின் பயனுள்ள வாழ்நாள் முடிவடைந்து, சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் அடைந்துள்ளன என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். |
| 6. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 4.2.1 இன் பிரகாரம் குறைந்த அளவு 03 வருட காலங்களுக்காக எதிர்பார்ப்பு பெறுகை அலுவல்கள் அடங்கிய பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | குறிப்பிட்ட பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முன்வரும் 03 ஆண்டுகளுக்காக நீண்ட கால பெறுகைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | கொள்முதல் வழிகாட்டுதல்களின் அடிப்படையில், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு 2025 ஆம் ஆண்டு முதல் முதன்மை கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 7. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 6.2.2 இற்கு இணங்க உள்நாட்டு போட்டி அடிப்படையிலான விலைகூறல் அழைப்பின் போது குறைந்தது 21 நாட்கள் விலைகூறல் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்குவதற்கான பெறுகைக்கு 18 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், ஒருவர் மாத்திரமே விலைகூறல் சமர்ப்பித்திருந்தார். | 2023 | குறிப்பிட்ட பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர் காலத்தின் பெறுகை அலுவல்களின் போது இவ்வாறான குறைபாடுகளை கவனத்தில் எடுத்து குறிப்பிட்ட கருமங்களை அவ்வாறு நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | பெறுகை நடவடிக்கைகளில் இத்தகைய குறைபாடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டு உரிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். |
| 8. | அரச பெறுகை வழிகாட்டல் கேவையின் 7.3.1(ஈ) பெறுகை கைநூல் 2.8.4 மற்றும் 7.11.1 பந்திகளுக்கு இணங்க | 2023 | குறிப்பிட்ட பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் | தெரிவுக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு | பெறுகை கையேட்டின் 2.8.4 இன் பிரகாரம் , விடயத்தில் அறிவுள்ள ஒரு தரப்பினர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விலைகூறல்களை மதிப்பாய்வு செய்வதற்காக உசாத்துணை சேவை பெற்றுக்கொள்ளும் போது தொழிற்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் தமது குழுவின் முறையான அறிக்கையொன்றுடன் உசாத்துணையாளர்களின் அறிக்கை பெறுகை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், உத்தியோகத்தர்களுக்காக ரூபா 955,900 தொகைக்கான சீருடைகள் கொள்வனவிற்கான பெறுகையின் போது விடயம் தொடர்பான அறிவுடைய ஒருவர் இன்றி தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவொன்றின் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. மேலும், பெறுகை கைநூலின் 7.11.1 பந்திக்கு இணங்க இரத்துச் செய்யப்பட்ட விலைகூறல்கள் மற்றும் அதற்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டு விலைகூறல் மதிப்பாய்வு அறிக்கையொன்று, தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த அறிக்கையில் இது தொடர்பான விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். | வந்ததுடன், குறிப்பிட்ட தொழில்நுட்பக் குழுவின் மதிப்பாய்வின் மீது அந்த பரிந்துரைகளின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இரத்துச் செய்யப்பட்ட விலைகூறல்களுக்கு போதியளவு காரணங்களுடன் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் நெசவுத் தொழில் தொழில்நுட்பவியலாளர் / உத்தியோகத்தர் சீருடை தொடர்பான தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவில் அங்கத்தவர் ஒருவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். | உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற பரிந்துரையின் பிரகாரம், திரு. எம்.ஜே.என். முத்துநாயகம், புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் புடவைத் தொழில்நுட்பவியலாளர் சீருடைகள் தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராக இவ்வருடத்தில் நியமிக்கப்பட்டுள்ளார். |
| 9. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.12.2(அ) பந்திக்கு இணங்க ஒரு விலைகூறல் மாத்திரம் கிடைத்த போதிலும், சந்தைப் பெறுமதியின் படி இணக்கமொன்று மேற்கொண்டு கூறுவிலைகள் நியாயமானவை என தீர்மானம் எடுக்க கூடியதாக இருந்த போதிலும் நீதிவான்களின் சிற்றுண்டிச்சாலைக்காக கூறுவிலைகள் அழைத்தல் விடுக்கப்பட்டது தொடர்பாக 2023 ஏப்ரல் 17 திகதி 08 வழங்குனர்களுக்கு கூறுவிலைகள் வழங்குவதற்காக அழைப்பு | 2023 | குறிப்பிட்ட பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பெறுகை வழிகாட்டல் கேவைக்கு இணங்க எதிர் காலத்தில் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டுதல்களின் 7.12.2(அ) இன் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விடுக்கப்பட்டிருந்ததுடன், ஒரு வழங்குனர் மாத்திரம் பதிலளித்திருந்தமையால், இந்த பெறுகை தொடர்பாக சந்தைக் கூறுவிலைகளை ஒப்பீடு செய்திருக்கவில்லை. | | | | |
| 10. | ஒப்பந்த வேலைப் பெறுமதி ரூபா 444,000 இற்கான நீதிவான்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தள திருத்த வேலையின் போது 2023 மார்ச் 14 மற்றும் 2023 ஜூன் 20 திகதி தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் மற்றும் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும், குறிப்பிட்ட கருமங்களை ஆரம்பிக்காமல் 2023 ஒக்தோபர் 03 திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் தீர்மானத்தின் படி குறிப்பிட்ட கூறுவிலைகளின் செல்லுபடியாகும் காலம் மற்றும் விலைகூறல் பாதுகாப்பு முறியின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த காரணத்தினால் இந்த ஒப்பந்த வேலை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | 2023 | பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் கால தாமதம் இன்றி ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படல் வேண்டும். | குறிப்பிட்ட நீதிவான்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தின் இடமாற்ற அலுவல்கள் தொடர்பாக நீதி அமைச்சின் தீர்மானம் பெற்ற பின்னர் 2023 ஒக்தோபர் 03 திகதி முகாமைத்துவச் சபை கூட்டத்திற்கும், குறிப்பிட்ட கூறுவிலை பத்திரங்களில் மற்றும் விலைகூறல் பாதுகாப்பு முறியின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த காரணத்தினால், சமர்ப்பிப்பதற்கு முடியாமல் போனதனால் ஒப்பந்த வேலை வழங்குவதற்கு முடியாமல் போனதனால் இந்த பெறுகை இரத்துச் செய்யப்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை செய்வதில் தாமதமின்றி கொள்வனவினை ஆரம்பித்து நிறைவு செய்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். |
| 11. | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் (பொது தொழில் முயற்சிகள் தொடர்பான வழிகாட்டல் கோவை) பந்தி இலக்கம் 2.3 இன் அட்டவணை ஐ இற்கு இணங்க தந்திரோபாய திட்டமொன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க ஆளுகை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சுற்றறிக்கைக்கு இணங்க மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் தந்திரோபாய திட்டம் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டிற்கான ஒரு தந்திரோபாய திட்டம் தயாரிக்கப்பட்டு உங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை 01/2021 க்கு இணங்க இது தற்போது முறையாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். |
| 12. | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பந்தி 40(1) இற்கு இணங்க சபையின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்வதற்காக | 2023 | குறிப்பிட்ட அதிகார சட்டத்திற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் | நியமனம் செய்யப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளர் 2023 யூன் 01 ஆம் திகதி முதல் சபையிலிருந்து விலகிச் சென்றிருந்தமையால் | எமது நிறுவனம் 2022 ஏப்ரல் 01 முதல் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை முதன்முறையாக நியமணம் செய்தது, |

| | | | |
|---|---|---|---|
| அந்த சபையின் ஆளுகை சபையினால் நியமனம் செய்யப்படுகின்ற தனது உள்ளக்க கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதிலும் 2023 ஜூன் 01 திகதி முதல் சபையின் பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் அடங்கியிருக்கவில்லை. மேலும், நிதிப் பிரமாணம் 134(3) இணங்க சபையின் நிதி விடயங்கள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான குறிப்பிட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள், அறிக்கைத் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. | நியமனம் செய்யப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்க முடியாமல் போனது என அறிவிக்கப்பட்டிருந்தது. | மேலும் அன்றிலிருந்து , 2023 யூன் 30 வரை உள்ளக கணக்காய்வு பிரிவு செயல்படுத்தப்பட்டது. மேற்படி கணக்காய்வு உத்தியோகத்தர் 2023 ஏப்ரல் வரையிலும் தொடர்புபட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தார். வேறொரு வேலையைப் பெற்றுக்கொள்வதற்கா க் பதவியில் இருந்து 2023 யூலை 01 முதல் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர இராஜினாமா செய்தார்.பின்னர், ஒரு புதிய உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர 14 யூன் 2024 அன்று பணியமர்த்தப்பட்டார் மற்றும் அவர் தனிப்பட்ட காரணத்திற்காக 2024 யூலை 22 அன்று சேவையிலிருந்து விலகினார். அதனை தொடர்ந்து , 2024 ஆகஸ்ட் 13 அன்று கணக்காய்வு உத்தியோகத்தரொருவ ர் பதவியேற்றார், மற்றும் உயர் நீதிமன்ற வளாக முகாமைத்துவ சபையின் நோக்கங்களை அடைவதில் பங்களிக்கும் முக்கிய துறையான பொறியியல் பிரிவின் வகிபாகம் மற்றும் அதன் ஊழியர்களின் செயல்திறன் மற்றும் மேற்பார்வை, குறித்த கணக்காய்வினை கணக்காய்வு உத்தியோகத்தர் ஏற்கனவே தொடங்கியுள்ளார் மற்றும் தற்போது தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகளுக்கான தீர்வுகளையும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | கலந்துரையாடியுள்ளர். |
| 13. | 2018 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் MSDW/08/65 இலக்கம் கொண்ட நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசி அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த கடிதத்திற்கு இணங்க சபையினால் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு கூட்டிணைப்புக்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | 2023 | குறிப்பிட்ட கடிதத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை ஆவணப்படுத்தி அதற்காக தனியான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அந்தச் சட்டத்தின் படி 2024 ஆண்டு முதல் அதனை ஆவணப்படுத்தி செயற்படுத்துவற்கும் கூட்டிணைப்பு செய்வதற்கும் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 ஏப்ரல் 27 ஆம் திகதிய MSDW/08/65 ஆம் இலக்கம் கொண்ட நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை ஒருங்கிணைத்து நிலையான அபிவிருத்தி வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கும் 2024 ஆம் ஆண்டில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் எமது நிறுவனம் உத்தியோகத்தர்களை நியமிக்கும் என்பதை நாங்கள் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். |

### 3.74 தேசிய வீடமைப்பு அதிகாரசபை

| | மொத்தச் சொத்துக்கள் | மொத்தப் பொறுப்புக்கள் | உரிமை | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2021** | 31,782,594,154 | 6,174,355,400 | 25,608,238,753 | (841,637,238) | முனைப்பழியுள்ள |
| **2022** | 30,201,695,466 | 5,612,557,082 | 24,589,138,384 | (1,287,411,562) | முனைப்பழியுள்ள |
| **2023** | 29,875,855,426 | 5,183,852,853 | 24,692,002,572 | (1,007,031,976) | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பு இலக்கம் 13 இன் படி பணம் செலுத்தப்படாமல் வீடுகள் நிர்மாணிக்கும் குறிக்கோளுடன் அரச காணிகள் தனதாக்கும் போது காணிகளின் சந்தை பெறுமதியை மதிப்பீடு செய்து அதற்கு ஆரம்பச் செலவுகளை சீராக்கல் செய்த பின்னர் ஒதுக்கக் கணக்கொன்றிற்கு மாற்ற வேண்டியிருந்த போதிலும், ஒதுக்கம் என இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டிய 2013 இன் பின்னர் உரித்தாக்கப்பட்டிருந்த 781 ஏக்கர்கள் 02 ரூட் 20.7 பர்சஸ் காணி கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2021 2022, 2023 | கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க செயற்படுத்த வேண்டும். | பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு மிகைச் செலவொன்று ஏற்படுவதனால் பகுதி பகுதியாக மதிப்பீடு செய்து 2024 கணக்குகளில் நியாயமான பெறுமதியொன்று காட்டப்படும். | 2024 நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள் ளது. |
| 2. | அதிகாரசபையின் மாவட்ட அலுவலகங்களில் கடன்கள் சேகரித்தல் தொடர்பான பரிசோதனையின் போது 04 மாவட்ட அலுவலகங்களில் 1984 – 2014 காலப் பகுதியில் வழங்கியிருந்த கடன் தொகைகளில் ரூபா 179.6 மில்லியன் தொகையும், 03 மாவட்ட | 2021 2022, 2023 | பழைய கடன் மீதிகள் தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கொண்டு அறவீடு செய்வதற்கு முடியுமான முறையொன்று அறிமுகப்படுத்த | கடன் அறவீடுகளை அதிகரிப்பதற்காக பல்வேறு முறைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன. | தற்போது நிலுவைக் மீதிகள் அறவீடு செய்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அலுவலகங்களில் 2018 – 2023 காலப் பகுதிக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகைகளில் ரூபா 2,164.66 மில்லியன் தொகையும், 2023 திசெம்பர் 31 திகதி அளவில் நிலுவையாக காணப்பட்டது. அறவீடு செய்யும் சாத்தியக்கூறுகளை கண்டறியாமல் கடன் வழங்கப்படுவதனால் முறையாக அறவீடு செய்யும் நடைமுறையொன்று கடைபிடிக்கப்படாமையால் இந்த கடனை அறவீடு செய்ய முடியாமல் உள்ளது என அவதானிக்கப்பட்டது. | | வேண்டும். | | |
| 3. | **2012 ஜனவரி 01 திகதிய அதிகாரசபையின் ஆதனங்களின் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 2011/தெ.க/01** படி நலன்பெறுவோருக்கு காணிகள் விடுவிக்கும் போது குறிப்பிட்ட நடவடிக்கை முறைகளுக்கு முரணாக 35 சந்தர்ப்பங்களில் காணிகள் விடுவித்திருத்தல் அவதானிக்கப்பட்டது. அவற்றிடையே வத்தளை கொங்கிதொட, ருக்மல்கம, சித்ரா ஒழுங்கை, தெமடகொட மஹவிலவத்த ஆகிய காணிகளும் அடங்குகின்றன. அவ்வாறு விடுவிக்கப்படாத காணிகளுக்காக பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 17 சந்தர்ப்பங்களுக்காக பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் காணிகளின் பரப்பளவு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2021, 2022, 2023 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையை கடைபிடிக்க வேண்டும். | அதிகாரசபைச் சட்டத்தின் 75/1 படி அமைச்சருக்கு காணப்படும் அதிகாரத்தின் படி அவரின் அங்கீகாரம் மற்றும் பணிப்பாளர் சபையின் பரிந்துரையின் மீது காணி விடுவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு புறம்பாக காணிகள் விடுவிக்கப்படுகின்றது. |
| 4. | கொழும்பு மாளிகாவத்தை மாவட்ட அலுவலகத்தில் A,B,C ஆகிய வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் பிரதீபா மாவத்தையில் அமைந்துள்ள வாகன தரிப்பிடங்களுக்காக 32 மாத காலம் எதுவித வாடகையும் செலுத்தியிருக்காத நபர் | 2022, 2023 | அதிகாரசபைக்கு சொந்தமான சொத்துக்களை வருமானம் உழைக்கக்கூடிய வாறு ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். | நிலுவைத் தொகை செலுத்தாமையால் அனைத்து வாகனத் தரிப்பிடங்களும் சீல் வைக்கப்பட்டுள்ளது. மீண்டும் கூறுவிலைகள் அழைக்கப்பட்ட போதிலும், முதலாவது விலை | இதுவரை வாகனத் தரிப்பிடங்கள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஒருவருக்கு மீண்டும் 2022 ஒக்தோபர் முதல் 2023 ஆகஸ்ட் வரை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த காலப் பகுதி தொடர்பாக பெற வேண்டிய ரூபா 2.175 மில்லியன் தொகையும் அறவீடு செய்திருக்கவில்லை. இந்த வாகன தரிப்பிடங்களுக்கான பாதுகாப்பு வைப்பு என ரூபா 1.575 மில்லியன் தொகை அறவீடு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், வாடகையாளர்களினால் அதையும் செலுத்தியிருக்கவில்லை. 2023 செப்தம்பர் 09 திகதி அனைத்து வாகன தரிப்பிடங்களையும் சீல் வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதீபா மாவத்தை வாகன தரிப்பு நிலையம் 2024 ஜனவரி 26 திகதி அளவிலும் அங்கீகாரம் இன்றி பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, அதிகாரசபை இந்தக் காணிகளை உரிய முறையில் வாடகைக்கு கொடுக்கும் அடிப்படையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருமானம் உழைத்திருக்கவில்லை | | | சமர்ப்பிககப்பட்டிருக்கவில்லை. இரண்டாவது விலையை தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| 5. | அதிகாரசபையின் மாளிகாவத்தை மாவட்ட அலுவலகத்தின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்ற 03 பிரதீபா வைபவ மண்டபங்கள் வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்த போதிலும், 2006 பெறுகை வழிகாட்டலை கடைபிடிக்காமல் வாடகைக்கு கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலும், முகத்துவார வைபவ மண்டபத்தில் முன்னைய குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் வேறொறு தரப்பினருக்கு குத்தகைக்கு | 2022, 2023 | அதிகாரசபைக்கு சொந்தமான சொத்துக்கள் வருமானம் உழைக்கக்கூடிய வாறு ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். | முகத்துவாரம் பிரதீபா வைபவம் மண்டபம் ரூபா 8.6 மில்லியனிற்காக மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக முகாமைத்துவத்தை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களை கடைபிடிக்காமல் மாதாந்த வாடகை ரூபா 250,000 வீதம் வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. கோப்புக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொடுக்கப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட கோப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கும் படி பல சந்தர்ப்பங்களில் வேண்டிக் கொண்ட போதிலும், அந்தக் கோப்புக்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 6. | அதிகாரசபையின் ஆதன முகாமைத்துவப் பிரிவினால் அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்படுகின்ற காணிகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த காணிகளின் எண்ணிக்கையின் படி 2019 முதல் 2022 வரையான காலப் பகுதியில் அண்டிய 300 காணித் துண்டுகளும் அங்கீகாரமற்ற 1,503 காணித் துண்டுகளும் 2,618 வெற்றுக் காணித் துண்டுகளும் குறைந்திருந்தன. மேலும், 2023 செப்தம்பர் அளவில் மேலும் 61 வெற்றுக் காணித் துண்டுகள் குறைந்திருந்தன. அவ்வாறு குறைவதற்கான காரணத்துக்கான விடயங்கள் தொடர்பான விபரமான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு அதிகாரசபைக்கு முடியாமல் இருந்ததுடன், இது கணக்காய்வில் சர்ச்சைக்குரிய தன்மையுடையதாக காணப்பட்டது. | 2022<br>2023 | அதிகாரசபைக்கு சொந்தமான வெற்று / அண்டிய / அங்கீகாரமற்ற காணிகள் அதிகாரசபையின் குறிக்கோள்களை நிறைவேற்றக்கூடியவாறு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. | 149 காணித் துண்டுகளுக்கான 5.81 ஹெக்டயர் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு பகுதி விற்பனை செய்யப்பட்டுள்ளது. மீதிப் பகுதியை விற்பனை செய்வதற்கும் ஏனைய காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்து விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | காணி குறைவடைதல் தொடர்பாக விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| 7. | அதிகாரசபைக்கு சொந்தமான கொழும்பு 10, டார்லி வீதியில் அமைதுள்ள 01 ஏக்கர் 26.5 பர்சஸ் காணியில் வீடுகள் மற்றும் வர்த்தக தொடர் கட்டிடத்துடனான கலவை அபிவிருத்திச் செயற்திட்டமொன்று பகிரங்க கூறுவிலை அழைக்கப்படாமல் 2005 நவம்பர் 09 திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கம்பனியுடன் 2006 ஜூன் 23 திகதி அணுகியிருந்த | 2021<br>2022<br>2023 | செயற்திட்டங்களுக்காக நிறுவனங்கள் தெரிவு செய்யும் போது மற்றும் காணிகள் விடுவிக்கும் போது முறையான செய்முறை ஒன்று கடைபிடிக்க வேண்டியிருந்ததுடன், அதிகாரசபைக்கு பிரதிகூலமற்ற நிபந்தனைகள் | டார்லி வீதியில் அமைதுள்ள 01 ஏக்கர் 26.5 பர்சஸ் காணி கலவை அபிவிருத்தி வீடமைப்புச் செயற்திட்டம் நிர்மாணிப்பதற்காக BAY SAT MBH (Pvt) LTD எனும் ஜேர்மன் கம்பனியுடன் ஒன்றிணைந்த ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றிற்கு 2006 ஜூன் 23 திகதி அணுகியிருந்ததுடன், | வழக்கு அலுவல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றது. |

உடன்படிக்கைக்கு இணங்க காணியின் பெறுமதி அரச பிரதான விலைமதிப்பீட்டாளரின் ரூபா 650 மில்லியனிற்கான பெறுமதி மதிப்பீட்டின் மீது அறவீடு செய்வதற்கும், 06 வருட காலத்தினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்த பின்னர் ரூபா 162 மில்லியனிற்கான பங்கிலாபம் ஒன்று அதிகாரசபைக்கு வழங்குவதற்கும் இணங்கியிருந்தது. ஆனால், கம்பனி உத்தேச அபிவிருத்தி கருமங்களை நிறைவேற்றாமல் 2006 ஆண்டிலேயே அதிலிருந்து அகன்றிருந்ததுடன், அந்த கருமத்தை வேறு வெளிநாட்டு கம்பனியொன்றுக்கு சாட்டுவதற்கு பெயரிடப்பட்டிருந்தது. பணம் செலுத்துவதற்கு முன்னர் 983 ஆம் இலக்க காணியின் உறுதியின் மூலம் 2016 மே 05 திகதி இந்தக் காணி உரிமையை அந்த புதிய கம்பனிக்கு அதிகாரசபையினால் உரித்தாக்கப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கைக்கு இணங்க ரூபா 712 மில்லியன் வெளிநாட்டுப் பணத்தின் மூலம் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியிருந்தது. எனினும், அதற்கு முரணாக அந்தக் கம்பனி காணியின் இலக்கங்கள் 2,3,4 ஆகிய காணிகளை 03 காணித் துண்டுகளை சம்பத் வங்கிக்கு ஈடு வைத்து பெற்றுக்கொண்ட ரூபா 800 மில்லியனிற்கான தொகையில் 2016 மே 05 திகதி சம்பத் வங்கியின் இரண்டு காசோலை மூலம் உள்நாட்டுப் பணத்தின் மூலம் அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல், கணக்காய்வுத் திகதி வரை அந்தக் கம்பனியினால் உத்தேச அபிவிருத்திக் கருமங்கள் உட்படுத்தி உடன்படிக்கைய அணுக வேண்டியதுடன், சிறந்த கண்காணிப்பொன்று மேற்கொள்ள வேண்டியதுடன், மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக முறையான கவனம் செலுத்தியிருக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான விசாரணையொன்று மேற்கொள்ள வேண்டும்.

துண்டு இலக்கம் 4, 5 பகுதிகள் 975 கொண்ட விற்பனை காணி உறுதி ஒன்றின் மூலம் கம்பனிக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. 2006 ஆண்டின் போது அக் கம்பனி தனது பெயரை L & T Infrastructure Development என மாற்றப்பட்டுள்ளதுடன், 2007 ஆகஸ்ட் 10 திகதி துண்டு இலக்கங்கள் 1, 2, 3 பகுதிகள் 983 கொண்ட விற்பனை காணி உறுதியொன்றின் மூலம் கம்பனிக்கு சாட்டப்பட்டு 2016 மே 05 திகதி மேலதிக உடன்படிக்கையொன்றுக்கு அணுகியிருந்ததுடன், 07 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையால் 975, 983 விற்பனவு காணி உறுதிகளை அதிகாரசபையினால் இரத்துச் செய்திருந்தது. இந்த காணியின் 1 முதல் 5 வரையான பகுதிகள் மேலும் ஒரு காணியின் ஒரு பகுதியை இணைத்திருந்த பிரிவு 3011 வரைபின் இலக்கம் 01 (819) கொண்ட காணி 2007 ஒக்தோபர் 31 திகதி டார்லி ரோட் பிரைவட் டிமிடட் மற்றும் OAK Street கம்பனியினால் ரூபா 950 மில்லியனுக்கு மக்கள் வங்கியில் ஈடுவைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக OAK Street கம்பனி உயர் நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை வழக்கொன்றும், கொழும்பு மாவட்ட

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிறைவேற்றியிருக்கவில்லை. இதற்கிடையே கம்பனியினால் வேறு மூன்றாவது கம்பனியொன்றுக்கு 2017 ஆண்டின் போது இந்தக் காணிகளின் 5 ஆம் இலக்கப் பகுதியை காணி உறுதியொன்றின் மூலம் விற்பனை செய்திருந்ததுடன், அந்தக் கம்பனியினால் அந்தக் காணி உறுதியை மக்கள் வங்கியில் ஈடுவைத்து ரூபா 950 மில்லியனிற்கான கடன் தொகையொன்று பெற்றுக்கொண்டிருந்தது. அதிகாரசபையினால் அந்தக் காணி உறுதியை இரத்துச் செய்திருந்ததுடன், அந்த மூன்றாவது கம்பனி அதிகாரசபைக்கு எதிராக 03 வழக்குகள் உயர் நீதிமன்றத்தில், மாவட்ட நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், வழக்குகளின் தீர்ப்பு வழங்கும் வரை காணியை அனுபவிக்கும் உரிமை நீதிமன்றத்தினால் அந்த மூன்றாவது கம்பனிக்கு வழங்கியிருந்தது. மேற்கூறிய விடயங்களின் படி அதிகாரசபைச் சட்டத்தின் அதிகாரங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை எனவும், அதிகாரசபையுடன் உடன்படிக்கை செய்யும் தரப்பினருக்கு சார்பாக தமது கடமைகளை நிறைவேற்றியுள்ளது எனவும் மேலும் அவதானிக்கப்பட்டது. | | | நீதிமன்றத்தில் வழக்கொன்றும் தாக்கல் செய்திருந்ததுடன், அந்த வழக்குத் தீர்ப்புக்கு எதிராக மேலும் ஒரு வழக்கு சிவில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அது 2024 செப்தம்பர் 10 திகதி அழைக்கப்படவுள்ளது. | |
| 8. | அதிகாரசபைக்கு சொந்தமான நாவல பரங்கியாகும்புர எனப்படும் 05 ஏக்கர் 10 பர்சஸ் காணி அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் படி 2004 ஆண்டின் போது 03 வருடங்களுக்குள் வீடமைப்பு தொடர் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன், | 2021<br>2022<br>2023 | செயற்திட்டங்களுக்காக நிறுவனங்கள் தெரிவு செய்யும் போது மற்றும் காணிகள் விடுவிக்கும் போது முறையான செய்முறை கடைபிடிக்கப்பட வேண்டியதுடன், | நாவல, கிரிமண்டல மாவத்தையில் அமைந்துள்ள 05 ஏக்கர் 10 பர்சஸ் கொண்ட பரங்கியா கும்புர காணியில் வீடமைப்புச் செயற்திட்டமொன்று செயற்படுத்துவதற்காக Eco Home Lanka (PVT) Ltd உடன் 2004 | வழக்கலுவல்கள் தொடர்ந்தும் நடைபெறுகின்றது. |

அந்தக் காணியில் 2003 அரச விலை மதிப்பீட்டு பெறுமதி ஆகிய ரூபா 75 மில்லியனிற்கு அந்தக் கம்பனிக்கு நிபந்தனைகளுடன் அறுதியொன்றின் மூலம் காணி உரித்தாக்கியிருந்தது. 2004 ஆண்டின் போது 2003 ஆண்டின் காணியின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிக்கு காணியை உரித்தாக்கிய காரணத்தினால் அதிகாரசபை இழந்துள்ள பெறுமதி மதிப்பீட்டு வருமானம் ரூபா 46.5 மில்லியன் தொகையாக காணப்பட்டது. எவ்வாறாயினும், கம்பனியினால் உடன்பட்டிருந்தவாறு அபிவிருத்திச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு பதிலாக உரித்தாக்கப்பட்ட காணியில் 29.44 பர்சஸ் காணி ரூபா 196.5 மில்லியன் தொகைக்கு வேறொரு கம்பனியொன்றிற்கு 2006 ஆண்டில் விற்பனை செய்திருந்தது. அதேபோல், கம்பனியினால் மீதியான காணியை செலான் வங்கிக்கு ஈடுவைத்து ரூபா 697.5 மில்லியன் தொகையும் பெற்றுக்கொண்டிருந்தது. 1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 8(1) இன் கீழ் 2020 ஜூன் 26 திகதி அதிகாரசபையினால் உறுதியை இரத்துச் செய்திருந்ததுடன், கம்பனி அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தது. அதேபோல், வேறொரு நபரினாலும் மேற்கூறிய காணி தனக்கு சொந்தமான தனிப்பட்ட காணி ஒன்றெனவும் உரிமையை பெற்றுக்கொள்வதற்காக மாவட்ட நீதிமன்றத்தில் மேலும் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, அதிகாரசபையினால்

அதிகாரசபைக்கு பிரதிகூலம் அல்லாத நிபந்தனைகளை உட்படுத்தி உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், சிறந்த கண்காணிப்பொன்று மேற்கொள்ள வேண்டியதுடன், மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

செப்தம்பர் 21 திகதி அதிகாரசபை உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருந்ததுடன், 2003 ஆகஸ்ட் 21 திகதிய அரச பெறுமதி மதிப்பீடான ரூபா 75 மில்லியன் தொகைக்கு நிபந்தனைகளுடனான உறுதியொன்றின் மூலம் காணி உரித்தாக்கப்பட்டிருந்தது. இந்த பெறுமதி மதிப்பீடு 02 வருடங்களுக்கு செல்லுபடியாகும். உத்தேச செயற்திட்ட கருமங்கள் நிறைவேற்றப்படாமை மற்றும் காணியின் பகுதியொன்று செலின்கோ ஹொஸ்பிடல் சேர்விஸ் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் உரித்துறுதியை இரத்துச் செய்து அனுபவித்தலை அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக Eco Home Lanka (PVT) Ltd இனால் அதிகாரசபை உட்பட 04 நிறுவனங்களுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அது 2024 ஒக்தோபர் 11 திகதி அழைக்கப்படவுள்ளது. மேலும், வேறு நபரொருவரினால் காணியின் உரிமையை பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.தற்போது இந்தக் காணி ரூபா 05 இலட்சம் பெறுமதிக்கு மாதாந்த

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயற்திட்டத்திற்காக காணிகள் விடுவிக்கும் போது உரிய முறையில் பெறுகை செய்முறை கடைபிடிக்காமை, தேவையான நிபந்தனைகள் அடக்கி சரியான உடன்படிக்கைகள் தயாரிக்கப்படாமை மற்றும் முறையான கண்காணிப்புடன் அலுவல்கள் செயற்பட்டிருக்கவில்லை. | | | வாடகைக்கு சவீந்திர என்டபிரைசஸ் இற்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | |
| 9. | மாளிகாவத்தை இலக்கம் 4051 கொண்ட நில அளவை வரைபடத்தின் துண்டு இலக்கம் 49/C கொண்ட 12 பர்சஸ்கள் மற்றும் எல்விடிகல மாவத்தையில் 117 ஆம் தோட்டத்தில் 7.25 பர்சஸ் ஆகிய 02 காணிகள் சுயதொழில் செய்வோரின் சங்கத்திற்கு 2014 ஆண்டு முறையே பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியில் 01 சதவீத பெயரளவுப் பெறுமதிக்காக ரூபா 240,000 தொகை மற்றும் ரூபா 180,000 தொகை குத்தகை அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை பத்திர இலக்கம் 98/641/21/062 இன் படி இதற்காக அமைச்சரவையில் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. மேலும், அதிகாரசபையின் இலக்கம் 2011/தெக/03 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் படி வருடாந்த குத்தகை காணியின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியின் 04 சதவீதம் மற்றும் 02 வருடங்களுக்கு ஒருமுறை மற்றும் 05 வருடங்களுக்கு ஒருமுறை குத்தகை தொகை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், குத்தகை உடன்படிக்கையில் | 2023 | தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். | காணி வழங்கப்பட்டுள்ள கருமத்திற்காக பயன்படுத்தப்படாமையால் எதிர் காலத்தில் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்து அல்லது அரச பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியில் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்தது அல்லது அரச பெறுமதியொன்றினை பெற்றிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டுள்ள நிச்சயிக்கப்பட்ட குறிக்கோளுக்காக காணி பயன்படுத்தப்பட்டிருக்காமையால் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்யப்பட வேண்டும் என சட்டமா அதிபரின் 11/01/05/05 மற்றும் 2017 கொண்ட கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. 2019 ஜூன் 26 திகதி மற்றும் 2023 செப்தம்பர் 15 திகதி ஆகிய தினங்களில் அந்த குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், 2023 மார்ச் 21 திகதி தொடக்கம் மீண்டும் அந்த அமைப்புக்கே குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அதேபோல், போலியான குத்தகை உடன்படிக்கையொன்று அதிகாரசபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்துடன், அவ்வாறான அமைப்பொன்று காணப்படுகின்றதென கணக்காய்விற்கு எதுவித தகவல்களும் கண்டறியப்படாததுடன், பௌதீக பரிசோதனையின் போது இந்தக் காணியில் நவீன வகையான உணவகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அதன்படி, அதிகாரசபைக்கு சொந்தமான காணிகள் அதிகாரசபைக்கு பிரதிகூலமான முறையில் விடுவித்தல் மேற்கொள்ளப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | | | | |
| 10. | அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி அறுதி உறுதி அடிப்படையில் காணிகள் விடுவிப்பின் அது ஒரு வீடொன்று நிர்மாணிப்பதற்காக மாத்திரம் ஆக இருக்க வேண்டிய போதிலும் ரன்பொகுனுகம வீடமைப்புத் திட்டத்தின் வரைபு இலக்கம் 166 துண்டு இலக்கம் 2 மற்றும் 3 கொண்ட 60 பர்சஸ் காணிப் | 2023 | குறிப்பிட்ட சட்ட விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | குத்தகையாளர் 2015 இல் காணியை பெறும் போது அபிவிருத்தி அடையாமல் காணப்பட்டதனால் காணி அப்போது காணப்பட்ட பெறுமதி மதிப்பீட்டு விலைக்கு வேண்டப்பட்டுள்ளது. அத் திகதியில் உள்ளவாறு பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை | எரிபொருள் நிரப்பு நிலையம் நடாத்தப்பட்டு வருவதுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |

பகுதி எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்காக அறுதி உறுதி குத்தகை அடிப்படையில் 20 வருட காலப் பகுதிக்காக 2012 ஆண்டின் போது மாதாந்தம் ரூபா 30,000 வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், அதற்கு அண்டிய 1.3 பர்சஸ் காணிக்காக ரூபா 650 இற்கான வாடகைத் தொகையும் அதனுடன் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அதனை உடன்படிக்கையில் உட்படுத்தியிருக்கவில்லை. மேலும், 2015 ஆண்டின் போது குத்தகை உடன்படிக்கைக் காலம் 10 வருடங்களினால் நீடிக்கப்பட்டிருந்த போதிலும், 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொண்டு குத்தகையை திருத்தியிருக்கவில்லை. 2021 ஜனவரியில் இருந்து திசெம்பர் வரை மாதாந்தம் ரூபா 71,500 வீதம் குத்தகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. ஆரம்ப குத்தகையாளர்களின் வேண்டுதலின் படி வேறு ஒருவருக்கு இந்தக் காணியை அறுதிய குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக இலக்கம் 17/2022 கொண்ட 2022 திசெம்பர் 24 திகதிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, அதிகாரசபைச் சட்டத்திற்கு முரணாக காணியொன்று அறுதியுறுதி குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், 2022 ஜூன் 07 திகதி அனுப்பியிருந்த ரூபா 73.5 மில்லியனிற்கான காணியின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையிற்கு பதிலாக குத்தகைக்கு பெறும் போது 2015 இல் காணி அபிவிருத்தி அடையாத காணியொன்றாக காணப்பட்டமையால் 09 வருடங்களுக்கு முன்னரான

கிடைத்திருக்கவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| அதாவது 2015 காணியின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் இருந்து வேண்டியிருந்த போதிலும், அந்தப் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி கிடைத்திருக்கவில்லை. | | | | |
| 11. அதிகாரசபைக்கு சொந்தமான மாளிகாவத்தை மாடி வீட்டுத் தொடர் கட்டிடத்தின் தொ/ந 104 நில அளவைப் படத்தின் துண்டு இலக்கம் 65 கொண்ட 21.5 பர்சஸ் இல் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் ஒன்றிற்காக குத்தகை பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளாமல் அதிகாரசபையின் விலைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த மாதாந்த வாடகை ரூபா 3,900 வீதம் பெயரளவுக் குத்தகைக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. 1999 ஆகஸ்ட் 19 திகதி முதல் 2000 ஆகஸ்ட் 19 திகதி வரை வாடகை உடன்படிக்கையொன்றிற்கு அணுகியிருந்தது. அமைச்சரவைப் பத்திர இலக்கம் 98/641/21/062 இன் படி அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகள் மத ஸ்தளங்கள், அறக்கட்டளை நிலையங்கள், கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்களுக்கு வழங்கும் போது அமைச்சரவையின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை . 2000 ஆகஸ்ட் 19 திகதி உடன்படிக்கை முடிவடைந்திருந்த போதிலும், உடன்படிக்கையை மீண்டும் புதுப்பிக்காமை, குத்தகை செலுத்தாமை காரணத்தினால் கட்டிடத்தின் வெற்று அனுபவித்தலை மீண்டும் அதிகாரசபைக்கு | 2023 | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை செலுத்தும் படி எழுத்து மூலம் அறிவித்திருந்த போதிலும், நியாயமான பதிலொன்று கிடைத்திருக்கவில்லை. | நிலுவை குத்தகை செலுத்தியிருக்காததுடன், பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி மீது குத்தகை அறவீடு செய்திருக்கவில்லை. |

ஒப்படைக்கும் படி சட்ட அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு ஒப்படைத்திருக்காததுடன், அதிகாரசபையின் அனுமதியின்றி 2000 ஆண்டின் போது கட்டிடத்தின் ஒரு பகுதியை உடைத்து விடுவிக்கி முன்பள்ளி நிருவாக அலுவல்களுக்காக புதிய கட்டிடம் ஒன்று குத்தகையாளரினால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 1999 ஆகஸ்ட் முதல் 2004 ஜூன் வரை நிலுவை வாடகைத் தொகை அந்த கட்டிட நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்திற்கு எதிரீடு செய்திருந்ததுடன், 2004 – 2011 வரை வாடகை 2011 ஜூலை 19 திகதி முதல் மீண்டும் 2013 மார்ச் வரை வாடகை, 2013 மே உம் உட்பட கொடுப்பனவினை புறக்கணித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த நிறுவனம் ஒன்றிற்கு 23 ஆண்டுகளாக எதுவித தேடுதலும் மேற்கொள்ளாமல் இந்தக் கட்டிடத்தை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. 2013 ஆண்டில் உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டிருந்த உடன்படிக்கை 2018 இல் அந்த உடன்படிக்கை முடிந்து அதன் நிறுவாகத்தினால் இந்த முன்பள்ளிக்காக 30 வருடங்களுக்கு வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு விண்ணபத்திருந்ததுடன், அதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து பெற்றிருந்த பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி ரூபா 177,000 தொகை மாதாந்த வாடகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 ஏப்ரல் வரை ரூபா 3,900 தொகை வாடகைக்கு வழங்கியிருந்ததுடன், முன்பள்ளியின்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வேண்டுகோளின் படி 2023 ஆம் ஆண்டு முதல் ரூபா 30,000 தொகை அறவீடு செய்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவிடப்படாமையால் 2018 முதல் 2023 வரை ரூபா 10.28 மில்லியனிற்கான நட்டமொன்று அதிகாரசபைக்கு நேரிட்டிருந்தது. | | | | |
| 12. | 2020 திசெம்பர் 15 திகதிய அமப/20/1381/306/057 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி 7.6 ஹெக்டயர் பரப்பளவுள்ள யக்கள வெரல்லவத்த காணியில் 12 மாடிகளைக் கொண்ட 154 வீடுகள் அடங்கிய வீடமைப்பு தொடர் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்தது. களப் பரிசோதனையின் போது இந்தக் காணியை செப்பமிடல் செயற்திட்ட திட்டமிடல் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் காணியுடாக செல்லக்கூடிய உயர் விசை மின்கம்பிகள் முறையை விடுவிக்கவதற்காக தீர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், நிர்மாண வேலை அலுவல்கள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதிகாரசபையினால் மீளாய்வாண்டு இறுதியளவில் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 169.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அத்திவாரமிடல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தமையால் இது சிக்கனமற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது. | 2023 | தற்போது மேற்கொள்ளக்கூடியவைகள் தொடர்பாக விரைவாக பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 03/2022 நிர்மாண வேலைகள் மேற்கொள்ளக்கூடாது என அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. | எதுவித பரசோதனை ஒன்றும் மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பபட்டிருந்தது. |
| 13. | 2015 – 2019 ஆண்டுகளின் போது அதிகாரசபையினால் | 2021 2022, 2023 | பொருத்தமான செய்முறையொன்றின் படி | மாதிரிக் கிராமங்கள் மற்றும் நீரோ கிராமங்களுக்காக 2019 | தொடர் வேலை செயற்திட்டங்கள் தொடர்பாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயற்படுத்தப்பட்டிருந்த மாதிரி கிராம செயற்திட்டத்தின் மீளாய்வாண்டளவில் 2150 தொடர் கிராமங்களில் 39,815 வீடுகள் காணப்பட்டதுடன், ரூபா 190.63 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 681 வீடுகள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்திருந்தது. 2017 – 2019 ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்திய வீடமைப்பு உதவி செயற்திட்டத்தின் கீழ் 25 கிராமங்களில் 114 வீடுகள் தொடர் வேலையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 103 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 143 வீடுகள் நிர்மாணிப்பதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், ரூபா 6.38 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 29 வீடுகள் மாத்திரமும் கிராம சக்தி வீடமைப்புச் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 554 மில்லியன் செலவிடப்பட்டு 1,605 வீடுகள் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், ரூபா 48.8 மில்லியன் செலவிடப்பட்டு 57 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | | இடைநிறுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களை கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இன் பின்னர் ஏற்பாடுகள் கிடைத்திருக்கவில்லை. | திறைசேரிக்கு அறிவித்து ஏற்பாடுகள் வேண்டப்பட்டுள்ளது. |
| 14. | அதிகாரசபைக்கு எதிராக மற்றும் அதிகாரசபையினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு அலுவல்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 44.14 மில்லியன் சட்ட வரைஞர் கட்டணம் என செலவிடப்பட்டிருந்தது. இதில் சிங்கப்பூர் சர்வதேச நடுத்தீர்ப்பு நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற வழக்குத் தொடர்பாக ரூபா 6.97 மில்லியன் தொகையும், ராகம லவன்யா ஹைட்ஸ் வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக சட்ட வரைஞர் கட்டணம் என ரூபா 2.23 மில்லியன் தொகையும் | 2022, 2023 | செயற்திட்ட அலுவல்கள் மற்றும் ஏனைய அலுவல்களில் முறையான மற்றும் சட்டரீதியான உடன்படிக்கைகளுக்கு அனுகி செயற்பட வேண்டும். | பம்பலப்பிட்டி மாடி வீடு புனர்நிர்மாண செயற்திட்டத்திற்குரிய சிங்கப்பூர் நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற வழக்குகளுக்காக அதிக பணம் செலவிடப்படுகின்றது. | வழக்கு அலுவல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. |

அடங்கியிருந்தது. ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களினால் தொழில் நியாய மன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 852 தொகை காணப்பட்டதுடன், அவற்றின் 349 தொகை தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. கொழும்பு மற்றும் மாத்தறை நியாய மன்றங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்த தீர்ப்புக்களின் படி 49 வழக்குகளுக்காக ரூபா 13.8 மில்லியன் தொகை நட்டஈடு என வைப்புச் செய்வதற்கு அதிகாரசபைக்கு நேரிட்டிருந்தது. மேலும், மாத்தறை தொழில் நியாயமன்றில் 518 வழக்குகள் காணப்பட்டதுடன், 81 வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீண்டும் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதேபோல், தற்போது காணப்படுகின்ற வழக்குகள் தொடர்பாக ரூபா 2,616 மில்லியன் தொகை நட்டஈடு என அதிகாரசபையிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட ஆக்கபூர்வம் அல்லாத தீர்மானங்களின் காரணமாக இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டிருந்த போதிலும் மீண்டும் மீண்டும் ஆட்சேரப்பு நடைமுறைக்கு மாற்றமாக ஆட்சேர்த்தலும் செயற்திட்டங்களுக்காக முறையாக முதலீட்டாளர்கள் தெரிவு செய்தல், காணிகள் கட்டிடங்களை வாடகைக்கு கொடுக்கும் போது அத்தியவசியமான நிபந்தனைகள் உடன்படிக்கையில் உட்படுத்தப்படாமை போன்ற விடயங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| 15. வீடமைப்புக் கட்டிடத் தொகுதிகளின் திருத்த வேலைகள், நீர்ச் செயற்திட்டங்கள் மற்றும் பாலங்கள் நிர்மாணித்தல் போன்ற 53 செயற்திட்டங்களுக்காக அதிகாரசபையினால் ரூபா 312.68 மில்லியனிற்கான முற்பணத் தொகையொன்று வழங்கியிருந்ததுடன், அதனை 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. அவ்வாறு வழங்கப்பட்டிருந்த பணத்தில் ரூபா 106.24 மில்லியன் தொகை வழங்கப்பட்டு 3 – 4 வருட காலமொன்றும் ரூபா 41.91 மில்லியன் தொகை வழங்கப்பட்டு 4 – 5 வருட காலமொன்றும் ரூபா 164.53 மில்லியன் வழங்கப்பட்டு 5 வருடங்களை மிகையான காலம் கடந்திருந்தது. இந்தத் தொகையை ரூபா 254.36 தொகை, அதாவது 81 சதவீதம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021, 2022, 2023 | முற்பணம் கால ரீதியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. | இந்தத் பணத்தை தீர்ப்பதற்கு அமைச்சு தலையிட்டு கலந்துரையாடல் அலுவல்களுக்காக முன்னெடுக்கப்பட்டிருந்தது. | தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| 16. அதிகாரசபைக்கு சொந்தமான 302 இலக்க வரைபில் துண்டு இலக்கம் 01 கொண்ட காணியில் 159 பர்சஸ் காணிப் பகுதி 2006 திசெம்பர் 14 திகதிய இலக்கம் 8207 கொண்ட செயற்பாட்டுக் குத்தகை உடன்படிக்கையின் மூலம் 50 வருட காலத்திற்காக மோதர வெங்கடேஸ்வர கோவிலுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கைக்கு இணங்க வருடாந்த குத்தகைத் தொகை ரூபா 1.15 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், 05 வருடங்களுக்கு ஒருமுறை 2.5 சதவீதத்தினால் | 2023 | அதிகாரசபையின் ஆதனங்கள் தொடர்பாக முறையான கண்காணிப்பொன்று மேற்கொண்டு முறைப் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டும். | உடன்படிக்கையில் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் அற்ற வதிவோர் இருந்த காலத்திற்காக ரூபா 3 மில்லியன் தொகை செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. ஏப்ரல் முதல் பணம் செலுத்தப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கைகள் மேற்கொள்ளும் போது அதிகாரசபைக்கு பிரதிகூலமான நிபந்தனைகள் அதில் உட்படுத்தப்பட்டுள்ளன. |

அதிகரிக்கக்கூடிய விதத்தில் குத்தகை அறவிடப்பட வேண்டும். எனினும், கோவிலுக்காக ஒதுக்கப்பட்ட காணிப் பகுதியில் 39.7 பர்சஸ் அங்கீகரமின்றி வதிவோர் இருப்பதனால் 2007 முதல் 2013 ஜுலை மாதம் வரை குத்தகை செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2013 நவம்பர் 28 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 19.3 மில்லியன் குத்தகை தொகை தொடர்பாக 2023 ஆகஸ்ட் 11 திகதிய 13/2023 பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி ரூபா 3 மில்லியன் மாத்திரம் மாதாந்தம் ரூபா 125,000 தொகை வீதம் 02 வருடங்களில் அறவீடு செய்தவதற்காக ஆகும். இந்தக் காலப் பகுதியில் காணியின் 75 சதவீதத்தை பயன்படுத்தியிருந்த போதிலும், குத்தகை உடன்படிக்கை அணுகும் போது, வைப்புத் தொகையொன்று பெற்றுக்கொண்டிருக்காத காரணத்தினால் நிலுவைக் குத்தகை அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. மேலும், இலக்கம் SEI/A/4/34 கொண்ட 1993 ஜுலை 12 திகதிய அரச காணிகள் ஒதுக்குதல் தொடர்பான வழிகாட்டல் ஜனாதிபதி சுற்றறிக்கையின் படி 5 வருடங்களுக்கு ஒருமுறை வாடகை அதிகரித்தல் 150 சதவீதத்திற்கு குறையக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையினால் அந்த சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. அதிகாரசபைக்கு சொந்தமான வெற்றுக் காணியில் கோவிலுக்கு சொந்தமான கட்டிடமொன்று

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன், அதிகாரசபையினால் இந்த அங்கீகாரமற்ற நிர்மாண வேலை தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை. | | | | |
| 17. | அதிகாரசபைக்கு சொந்தமான 125.18 ஹெக்டயர் அளவான 3,110 காணித் துண்டுகளில் அங்கீகாரமற்ற வதிவோரினால் அனுபவிக்கப்பட்டு வந்துள்ளதுடன், அந்த காணிகளை முறைப்படுத்துவற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 | தற்போது அங்கீகாரம் இன்றி வதியும் காணிகளை முறைப்படுத்துவதற்காக அல்லது உரித்தாக்குவதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகாரம் இன்றி வதிவோரின் காணிப் பகுதிகளின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி அவர்களிடம் இருந்து அறவீடு செய்து அதிகாரசபையின் 2014/01 சுற்றறிக்கையின் படி முறைப்படுத்தும் செய்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | தற்போது அங்கீகாரம் இன்றி வதியும் 1,607 காணிகள் காணப்படுகின்றன. |
| 18. | அதிகாரசபையினால் மீளாய்வண்டின் போது 07 பிரதான செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 4,458.39 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உண்மையாக ரூபா 3,352.92 மில்லியன் தொகை மாத்திரம் கிடைத்திருந்தது. திட்டமிடப்பட்ட 2 சியபத செயற்திட்டங்களில் எதுவித அலுவல்களும் மேற்கொண்டிருக்காததுடன், 2 செயற்திட்டங்களில் நிர்மாண வேலை அலுவல்கள் 22 சதவீதம் மற்றும் 29 சதவீத மட்டத்தில் காணப்பட்டதுடன், மேலும், 3 செயற்திட்டங்களில் முன்னேற்றம் 5 இற்கும் 8 இற்கும் இடைப்பட்ட சதவீத வீச்சில் காணப்பட்டது. | 2022 | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டு எதிர்பார்த்த குறிக்கோல்களை நெருங்க வேண்டும். | 2 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | தங்காலை / சொயிஸாபுர செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஏனைய செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. |
| 19. | அதிகாரசபைக்கு சொந்தமான வாடகைக்கு / குத்தகைக்கு வழங்கியிருந்த வீடுகள் கடைகளின் எண்ணிக்கை 1,816 காணப்பட்டதுடன், அவற்றில் 1,786 கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளன. அவற்றில் 942 தொகை ரூபா 100 ஐ விட குறைந்த மாதாந்த வாடகை அடிப்படையில் | 2021 | வாடகைக்கு மற்றும் குத்தகைக்கு கொடுக்கப்படுகின்ற கடையறைகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து வாடகை தீர்மானிக்கப்பட வேண்டியதுடன், | ஆதனங்களின் பெறுமதி பெறுமதி மதிப்பீடு செய்யும் அலுவல்களுக்காக மாவட்ட அலுவலகங்களில் இருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. | அவதானிப்புக்களின் படி காணப்படுகின்றது. |

வழங்கப்பட்டிருந்ததுடன், மேலும், 09 கடைகள் வாடகை ஏதும் அறவிடப்படாமல் வெளித்தரப்பினருக்கு வழக்கப்பட்டிருந்தன. மேலும், 744 வீடுகள் மற்றும் கடைகளின் மாதாந்த வாடகை ரூபா 101 இற்கும் ரூபா 1000 இற்கும் இடைப்பட்ட வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகையை கணிக்கும் போது ஆதனத்தின் பெறுமதியில் 4 சதவீத பெறுமதி அல்லது தேறிய வருமானத்தில் 4 சதவீதம் என பெறுமதிகளில் குறைந்த பெறுமதியில் வாடகை என கணிக்கப்படுவதுடன், ஒவ்வொரு 2 வருடங்களும் ஒருமுறை உடன்படிக்கை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரசபை வீடுகள் மற்றும் கடைகளை வாடகைக்கு கொடுக்கும் போது வாடகையை அவ்வாறு பெறுமதி மதிப்பீடு செய்திருக்காததுடன், கொழும்பு மாவட்டத்தில் வீடுகள் மற்றும் கடைகள் 89 சதவீதம் அதாவது 1,582 வீடுகள் மற்றும் கடைகள் வாடகை உடன்படிக்கை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. அதன்படி, தற்போதைய பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிக்கு வாடகைக்கு / குத்தகைக்கு கொடுக்கப்படாமையால் அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ள வருமானத்தை இழந்திருந்தது.

வாடகை உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின் படி புதுப்பிக்கப்பட வேண்டும்.

## 3.75 இலங்கை புடவைகள் மற்றும் ஆபரணங்கள் நிறுவனம்

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| வரிக்கு முன்னைய இலாபம் ரூபா | 37,439,379 | 89,948,884 | 219,994,455 |
| வரி ரூபா | - | - | - |
| வரிக்கு பிந்திய இலாபம் ரூபா | 37,439,379 | 89,948,884 | 219,994,455 |
| முழு சொத்துக்கள் ரூபா | 660,375,835 | 705,972,602 | 920,413,638 |
| முழு பொறுப்புக்கள் ரூபா | 64,418,585 | 70,356,918 | 66,393,614 |
| உரிமை மூலதனம் ரூபா | 595,957,250 | 635,615,684 | 854,020,024 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள் | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சிபாரிசினை அமுல்ப்படுத்தும் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்குச் சமாந்திரமாக வழங்கப்பட்ட நல்லாட்சிகள் தொடர்பான செயற்பாட்டுக் கையேட்டின் 3.2(i) ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்களுக்குச் செலுத்தப்படுகின்ற அனைத்து படிகளும் பணிப்பாளர் சரபையின் அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் சிபாரிசினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை மாத்திரம் பெற்று ஆய்வுகூட பரீட்சிப்பு படி, கற்கைநெறி | 2021 2022 | ஊழியர்களுக்குச் செலுத்தப்படுகின்ற அனைத்து படிகளுக்கும் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஒருங்கிணைப்பு படி, வார இறுதி கற்கைநெறிகான ஆளணியினர் படி, ஆலோசனை படி, என்பவற்றிற்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 11,246,760 மற்றும் ரூபா 12,730,369 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. | | | | |
| 02 | நிறுவனத்தின் ஊழியர்களின் மருத்துவ பட்டியலினை ஈடுசெய்வதற்கான காப்புறுதிக்காக 2021 ஆம் ஆண்டில தவணைப்பணமாக ரூபா 1,475,953 தொகையும் மருத்துவ பட்டியல்களை மீளளிப்புச் செய்வதற்காக ரூபா 1,674,573 தொகையும் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது செலுத்தப்பட்டிருந்தது. | 2021 | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிருவாக சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள் ளப்படவில்லை. |
| 03 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வியாபார மீதி ரூபா 11,323,009 தொகையில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாத ரூபா 6,524,257 மீதியும் 01 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 1,577,681 மீதியும் காணப்பட்டதுடன் அக்கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 | துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஞாபகப்படுத்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அறவீடு செய்யப்படவில்லை. |
| 04 | 2009 இன் 12 ஆம் இலக்க புடவைகள் மற்றும் ஆபரணங்கள் நிறுவன அதிகாரச் சட்டத்தின் 4(எ) ஆம் பிரிவின் பிரகாரம் உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் ஏனைய தொழில் நுட்ப தகவல்களை உள்ளடக்கிய புடவைகள் | 2021 | அதிகாரச்சட்டததிலுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முறையான தரவு முறைமைக்காக அமைச்சிடம் நிதி ஏற்பாடு வேண்டப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தரவு முறைமை ஸ்தாபிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் ஆபணங்கள் கைத்தொழில் தொடர்பான தரவு மூலங்கள் பேணப்பட வேண்டிய போதிலும் முழுமையாக ஒன்றிணைக்கப்பட்ட தரவுகளை உள்ளடக்கிய தகவல் முறைமை நிறுவனத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 05 | உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற புடவைகள் மற்றும் ஆபரண உற்பத்தி பொருட்களை உள்நாட்டுச் சந்தைக்கு கொண்டுவரும் போது சுகாதார மற்றும் பாதுகாப்பு சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளுதல் கண்டிப்பான தேவைப்பாடாக ஆக்கப்பட்டு அந்த சான்றுபடுத்தும் அதிகாரம் நிறுவனத்திற்கு 2017 திசெம்பர ஆந் திகதிய அமைப/17/2707/723/050 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படாமையால் உள்நாட்டு சந்தையில் காணப்படுகின்ற ஆபரணங்கள் சுகாதாரமானவை எனவும் பாதுகாப்பானவை எனவும் சான்றுபடுத்தப்படவில்லை. | 2021 | ஆபணரங்கள் சுகாதாரமானவை என உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 05 மில்லியன் தொகையான தொடக்க செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | ஆபரணங்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படவில்லை. |

## 3.76. தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| நிதி விளைவுகள் | | | |
| வரிக்கு முன்னர் இலாபம் (ரூபா) | 8,687,298 | 3,740,582 | |
| வரி (ரூபா) | - | - | |
| வரிக்கு பின்னர் இலாபம் (ரூபா) | 8,687,298 | 3,740,582 | |
| முழுச் சொத்துக்கள் (ரூபா) | 31,020,684 | 35,413,466 | |
| முழு பொறுப்புக்கள் (ரூபா) | 16,685,830 | 14,869,461 | |
| உரிமை மூலதனம் (ரூபா) | 14,334,854 | 20,544,005 | |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | கணக்குகள் பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. | கணக்குகள் கிடைக்கவில்லை. |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள் | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சிபாரிசினை அமுல்படுத்தும் நிலைமை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் கட்டுநிதி வழங்கிய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அக்கட்டுநிதி தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை வழங்கிய மொத்தமாக ரூபா 6,138,242 ஆன முற்பணங்கள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | மிகுதியாக உள்ள முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படவில்லை. |
| (ஆ) | 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் | 2021 கொடுககல் வாங்கல் அறிக்கை | அதிகாரச் சட்டத்திலுள்ள குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுதல் | அபிவிருத்தி நிகழ்சசித்திட்டங்களை எதிர்காலத்தில் அமுல்ப்படுத்துவதற்கு | அதிகாரச்சட்டத்திலுள்ள குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட் |

13(ஆ) மற்றும் 13(உ) பிரிவுகளின் பிரகாரம் அதிகாரசபையின் பின்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் போதும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) அதிகாரச்சட்டத்தின் குறிக்கோ ள்களை அடைந்து கொள்வதற்காக வெளிநாட்டுச் சந்தைகளை வெற்றிகொள்ளக்கூடிய உள்நாட்டு தொழில் முயற்சிகளை சர்வதேச மயப்படுத்தும் குறிக்கோளில் தொழில்முயற்சிகளை இலங்கைக்கு வெளியே தோற்றுவித்தல் மற்றும் அமுல்ப்படுத்துதல் ஆர்வம் காட்டுவதற்காக ஊக்குவித்தல்

(ii) தொழில்நுட்பத்தை மேம்ப டுத்தல் உற்பத்தியை அபிவிருத்தி செய்தல் ஆக்கவுரிமை தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக ஒரு தொழில் நுட்ப அபிவிருத்தி நிதியத்தினை தோற்றுவித்தல்

வேண்டும்.

எதிர்பார்க்கப்படுகின்றது. தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தினை தோற்றுவிப்பதற்கான பிரோரணைகளை தயாரித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் அதன் மூலம் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

டிருக்கவில்லை.

## 3.77 நுகர்வோர் விவகார அதிகாரசபை

| நிதி விளைவுகள் | 2021 (ரூபா) | 2022 (ரூபா) | 2023 (ரூபா) |
|---|---|---|---|
| வரிக்கு முன்னைய இலாபம் | 7,101,000 | 91,246,000 | 52,338,000 |
| வரி | - | - | - |
| வரிக்கு பிந்திய இலாபம் | 7,101,000 | 91,246,000 | 52,338,000 |
| முழு விரிவான வருமானம்/ (செலவு) (Total Comprehensive Income/(Expenses) | 18,504,000 | 181,838,000 | 74,301,000 |
| முழு சொத்துக்கள் | 560,498,000 | 713,044,000 | 834,431,000 |
| முழு பொறுப்புக்கள் | 138,859,000 | 112,277,000 | 178,157,000 |
| உரிமை மூலதனம் | 421,639,000 | 600,767,000 | 656,274,000 |
| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |

**பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசு | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சிபாரிசினை அமுல்படுத்தும் நிலைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | 2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரச்சட்டத்தினை திருத்தம் செய்யும் நடவடிக்கை 2004 ஆம் ஆண்டின் போது ஆரம்பித்து பல ஆண்டுகளில் அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பிரிவினை சட்ட வரைபுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்ததனைத் தவிர்த்து 2023 ஆம் ஆண்டளவில் 19 ஆண்டுகள் கடந்திருந்தும் அதிகாரச்சட்டத்தினை திருத்தும் நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை | 2023 3.1(அ)<br>2022 3.2(அ)<br>2021 3.1 | அதிகாரச் சட்டத்தினை திருத்தும் நடவடிக்கையை துரிதமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இன்னும் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக ஒரு கடிதம் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்யும் நடவடிக்கை முடிவடைந்திருக் கவில்லை. |
| 2. | பாதுகாப்பற்ற மற்றும் தரம் குறைந்த உற்பத்திப் பொருட்களிலிருந்து பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்காக | 2023 3.1(ஆ) | அமுல்ப்படுத்தும் முறைமையை உறுதிப்படுத்திய பின்னர் உடன்படிக்கையை | நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவை முடிவடைந்திருக்கவில் | உள்ளக ரீதியில் புலனாய்வினை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டிய |

| | | | | |
|---|---|---|---|---|
| அடையாளங்காணப்பட்ட சில உற்பத்திப் பொருட்கள் சம்மந்தமாக பாதுகாப்பு நடைமுறைகளைத் தயாரிப்பதற்காக சுவிற்சலாந்திலுள்ள ஒரு கம்பனியுடன் 2014 சனவரி மாதம் 24 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அது சம்மந்தமாக வழங்கப்பட்டிருந்த கட்டளை இலக்கம் 49 இனை செல்லுபடியற்ற தாக்குவதற்காக பொருட்களை உற்பத்தி செய்யும் சில கம்பனிகளால் அதிகார சபைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வேண்டுதல் படிவத்திற்காக உச்சநீதிமன்றத்தின் மூலம் கட்டளையினை அமுல்ப்படுத்துவதனை தவிர்க்கும் உப கட்டளை வழங்கியதன் காரணமாக அந்த சுவிற்சலாந்து கம்பனியுடன் மேற்கொண்ட உடன்படிக்கைக்கு இணங்க செயற்திட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு முடியாதிருந்தது. உடன்படிக்கையை அமுல்ப்படுத்தாமையின் காரணமாக கம்பனியால் ஒருதலைப்பட்சமாக உடன்படிக்கையை இரத்து செய்து உடன்படிக்கையின் பிரகாரம் முழுமையான முதலீட்டுத் தொகையான ரூபா. 2.716 பில்லியன் தொகையை செலுத்துமாறு வேண்டி அதிகாரசபைக்கு எதிராக 2018 ஆம் ஆண்டின் போது சர்வதேச நடுவர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. நடுவர் வழக்கிற்காக இறுதித் தீர்ப்பு 2022 மே 10 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த கட்டளைக்கு இணங்க அதிகாரசபையினால் | 2022<br>3.2(ஓ) | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்கள் துரிதமாக அடையாளம் காணப்படுதல் வேண்டும் | லை. | தரப்பினர்கள் இன்று வரை அடையாளங் காணப்படவில்லை. |

கம்பனிக்கு ரூபா. 2.716 பில்லியன் தொகையும் நடுவர் கட்டணமாக அமெரிக்க டொலர் 325,000 தொகையும் செலுத்த வேண்டும். நடுவர் வழக்கின் இறுதித் தீர்ப்பிற்கு எதிராக 2022 !லை 07 ஆந் திகதி அதிகாரசபையினால் கொழும்பு வணிக நீதிமன்றத்தில் முறைப்பாடு தொடுக்கப்பட்டிருந்ததுடன் இது சம்மந்தமாக அதிகாரசபையினால் உள்ளக புலனாய்வினை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்கள் அடையாளங் காணப்படவில்லை.

## 3.78 இலங்கை ஏற்றுமதி காப்புறுதி கூட்டுத்தாபனம்

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| நிதி விளைவுகள் | | | |
| வரிக்கு முன்னைய இலாபம் (ரூபா) | 309,988,251 | 711,249,234 | 1,055,623,029 |
| வரி (ரூபா) | 61,320,278 | 182,339,084 | 281,575,841 |
| வரிக்கு பின்னைய இலாபம் (ரூபா) | 248,667,973 | 528,910,150 | 774,047,188 |
| முழு விரிவான வருமானம் / (செலவுகள்) (Total Comprehensive Income/(Expenses) (ரூபா) | 248,667,973 | 1,615,448,956 | 480,030,084 |
| முழுச் சொத்துக்கள் (ரூபா) | 3,624,960,671 | 5,431,721,623 | 5,561,635,694 |
| முழு பொறுப்புக்கள் (ரூபா) | 552,131,395 | 789,780,442 | 1,195,986,352 |
| உரிமை மூலதனம் (ரூபா) | 3,072,829,276 | 4,641,941,181 | 4,365,649,342 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட ரூபா 67,154,145 தொகையான பெறவேண்டிய திறைசேரி வைப்பு வட்டி வருமானத்தை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவல்லை. | 2022<br>1.6.1<br>2023<br>1.5.4(அ) | பெறவேண்டிய திறைசேரி வைப்பு வட்டி வருமானத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டடும். | தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் | சிபாரிசுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 02. | 08 ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 34,958,636 தொகையான ஏற்றுமதி விலைப்பட்டியல்களின் | 2022<br>1.62<br>2023 | நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுமதியாளர்களுக்கு ஞாபகப்படுத்தல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் | அறவிட வேண்டிய மீதி இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவிலலை. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மீது முற்பணம் செலுத்துதல்களின் மீதி 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக முழுமையாக அறவிடப்படாது காணப்பட்டதுடன் இம்முற்பணங்களில் ரூபா 22,870,492 தொகை ஒரு ஏற்றுமதியாளருக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | 1.6.2 | | | எதிர்காலத்தில் பகுதி பகுதியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 03 | நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 2,185,511 கிடைக்க வேண்டிய மீதியாக 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2023<br>1.6.1 | | மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கிய சிபாரிசின் பிரகாரம் தற்பொழுது கூட்டுத்தாபனத்தினால் நிதி சேவை மீது பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. | செலுத்த வேண்டிய வரிகளிலிருந்து கழித்தல் சம்பந்தமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் விசாரணை செய்யப்பட்டிருந்தும் இன்றுவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3.79. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

| நிதி விளைவுகள் | 2021 (ரூபா) | 2022 (ரூபா) | 2023 (ரூபா) |
|---|---|---|---|
| வரிக்கு முன்னர் இலாபம் | 211,709,684 | 218,857,087 | 83,766,528 |
| வரி | - | - | - |
| வரிக்கு பின்னர் இலாபம் | 211,709,684 | 218,857,087 | 83,766,528 |
| முழு விரிவான வருமானம்/ (செலவு) (Total Comprehensive Income/(Expenses) | 211,709,684 | 314,329,241 | 77,657,726 |
| முழு சொத்துக்கள் | 1,450,681,865 | 1,730,837,589 | 1,909,682,336 |
| முழு பொறுப்புக்கள் | 198,833,869 | 166,463,831 | 267,650,852 |
| உரிமை மூலதனம் | 1,251,847,996 | 1,564,373,758 | 1,642,031,484 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசு | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறு பரிந்துரையினை அமுல்ப்படுத்தும் நிலைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | சபையினால் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஏற்றுமதிக் கடன் பணத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 146 ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணம் ரூபா.38,027,520 ஆகும். இப் பணத்தில் 96 சதவீதம் அதாவது ரூபா.36,831,520 தொகை 25 ஆண்டுகள் பழைமையான கடன் மீதியானதுடன் அவை 145 ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது. மிகுதி 04 சதவீத பெறுமதி அதாவது ரூபா.1,196,000 தொகை 17 ஆண்டுகள் பழைமையான கடன் மீதியானதுடன் இது ஒரு ஏற்றுமதியாளரிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது. | 2023 1.6.1(அ) 2022 1.5.1(அ) 2021 1.6.1(அ) | பெறவேண்டிய மீதிகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது செயற்படும் நிலையில் காணப்படுகின்ற கம்பனிகளுக்கு எதிராக கடனை மீள அறவீடு செய்வதற்காக சட்ட நவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகள் அறவீடு செய்யப்படவில்லை. |
| 2. | ஊவ பரணகம ஏற்றுமதி உற்பத்திக் கிராம (UPEPV) நிகழ்ச்சித்திட்டத்தினூடாக | 2023 | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு | கடன் பணத்தை மீளச் செலுத்துமாறு விவசாயிகளுக்கு | கடன் மீதி அறவீடு செய்யப்பட்டிருக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட ரூபா.10,403,683 தொகை 2009 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 14 ஆண்டுகள் காலத்தில் மீள அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | 1.6.1(இ)<br><br>2022<br><br>1.5.1(இ)<br><br>2021<br><br>1.6.1 (ஆ) | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடிதம் அனுப்பி வைத்தல் மற்றும் கடனை அறவீடு செய்வதற்காக ஒரு உத்தியோகத்தரினை ஈடுபடுத்துதல். | கவில்லை அக்கடன் மீதியை எதிர்காலத்தில் பதிவழிப்பதற்கு காணப்படும் வாய்ப்புக்களை ஆராய்ந்து பார்க்கப்படுகின்றது<br><br>என தெரிவிக்கப்பட்டது. |
| 3. | ஏனைய கடன்பட்டோர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா.7,230,203 பணம் வழங்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | 2023<br><br>1.6.1(ஈ) | கடன்பட்டோரிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதிகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீதிமன்ற கட்டளைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் தற்போது மூடப்பட்டுள்ள கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல். | கடன் பணத்தில் ரூபா.50,000 அறவீடு செய்யப்பட்டுள்ளது. மூடப்பட்டுள்ள கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 4. | 2015 மே 25 ஆந் திகதிய PED/01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக சபையினால் MM,PL,MA மற்றும் JM சம்பள தொகுதிகளுக்குரிய போக்குவரத்து படிகளுக்கு தகைமை பெறாத 162 ஊழியர்களுக்கு ரூபா.13,975,608 தொகை போக்குவரத்து படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. | 2023<br><br>1.7(அ) | அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் போக்குவரத்துப் படி செலுத்தப்படுதல் வேண்டும். | தவிர்க்கும் நடவடிக்கை தெரிவிக்கப்படவில்லை. | தற்போது PL,MA,JM மற்றும் MM சம்பள தொகுதிகளின் கீழான ஊழியர்களுக்கு வருகையின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற மாதாந்த போக்குவரத்துப் படியை செலுத்துவதற்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | சுற்றறிக்கைக்கு முரணான கொடுப்பனவுகள் இன்றுவரை அறவீடு செய்யப்படவில்லை. |
| 5. | சபையினால் 26 கம்பனிகளின் பங்குகளில் ரூபா.40,217,028 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்நதுடன் அந்த முதலீடு செய்யப்பட்ட கம்பனிகளின் நிலைத்திருத்தல் சம்மந்தமாக போதியளவு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக பெயர்கள் கம்பனிகள் பதிவாளரினால் வெட்டி நீக்கப்பட்ட இக்கம்பனிகளின் முதலீட்டுப் பணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கு சபை தவறியிருந்தது. | 2023<br>3.2 | வினைத்திறனான மற்றும் ஆக்க” ர்வமான முதலீட்டு தீர்மானத்தினை எடுப்பதற்காக சபையினால் முதலீட்டுக் கம்பனிகளின் நிலைத்திருத்தல் சம்மந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தவிர்த்தல் நடவடிக்கை தெரிவிக்கப்படவில்லை. | கம்பனிகள் அதிகாரச்சட்டத் திற்கான திருத்தங்கள் இதுவரை மேற்கொள்ளப்ப டாததனால் மூடப்பட்ட கம்பனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முடியாது என தெரிவிக்கப்பட்டது. |

## 3.80. வரையறுத்த இலங்கை அரசாங்க வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனம்

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| நிதி விளைவுகள் | | | |
| இலாபம்/ மிகை/ (நட்டம்)/ (பற்றாக்குறை) | | | |
| வரிக்கு முன்னைய இலாபம் ரூபா | 472,717,911 | 735,435,943 | 1,501,214,947 |
| வரி ரூபா | 49,959,186 | 199,671,154 | 535,046,293 |
| வரிக்கு பிந்திய இலாபம் ரூபா | 422,758,725 | 535,764,789 | 966,168,654 |
| முழு விரிவான வருமானம்/ (செலவுகள்) (Total Comprehensive Income/(Expense)) ரூபா | 429,731,144 | 646,474,998 | 4,578,224,988 |
| முழு சொத்துக்கள் ரூபா | 5,917,328,167 | 4,845,827,423 | 8,576,237,152 |
| முழு பொறுப்புக்கள் ரூபா | 4,786,107,882 | 3,063,580,592 | 2,406,574,646 |
| உரிமை மூலதனம் ரூபா | 1,131,220,285 | 1,782,246,831 | 6,169,662,506 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | இறுதி அறிக்கை வழங்கப்படவில்லை |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள் | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சிபாரிசினை அமுல்ப்படுத்தும் நிலைமை |
|---|---|---|---|---|---|
| அ | 2021/2022 ஆம் ஆண்டின் போது ஊழியர் மருத்துவ படிகள், விழா படிகள், மற்றும் மரண பணிக்கொகடைகளாக முறையே ரூபா 2,833,385 ரூபா 16,905,960 மற்றும் ரூபா 1,000,000 செலுத்தப்பட்டிருந்தும் ஊழியர் மருத்துவ பிரதிபலன்களுக்காக அங்கீகரித்த காப்புறுதி திட்டம் 2023 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையும் அறிமுகபபடுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021/2022 | பிரதிபலன்களை செலுத்துவதற்குரிய காப்புறுதித் திட்டம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஊக்குவிப்பு படிகளாக திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பிரதிபலன்களை செலுத்துவதற்குரிய காப்புறுதித் திட்டம் அங்கீகரித்துக்கொள்ளப்படாததுடன் திறைசேரியின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப் படவில்லை. |
| ஆ | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.8.2 ஆம் பந்திக்கு முரணாக | 2021/2022 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஊக்குவிப்பு படிகளுக்காக திறைசேரியின் அங்கீகாரத்தினைப் | ஊக்குவிப்பு படிகளுக்கான அங்கீகாரம் இன்றுவரை பெற்றுக்கொள்ளப் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது கயர் சபையின் ஊக்குவிப்பு படியாக ரூபா 9,978,207 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | | பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | படவில்லை. |
| இ | 2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையில்லாத நிரந்தர அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 41 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த போக்குவரத்து படியாக ரூபா 2,952,500 தொகையும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 10 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,160,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | 2022/2023 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் போக்குவரத்துப்படி செலுத்தப்பட்டுள்ளதுடன் மீளளிப்புச் செய்யும் முறைமைக்காக திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மீளளிப்பு நடைமுறையினைப் பின்பற்றாது போக்குவரத்துப்படி செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | பொருட்களை திருப்பி அனுப்புவதன் காரணமாக கடன்கொடுத்தோர் மீதியினுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 16,603,289 வரவு மீதியானது 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் இன்றுவரை செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2021/2022 | கடனை தீர்த்துவைக்கும் போது திருப்பி அனுப்பியவைகளைக் கழித்து தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும்.. | தவிர்க்கும் நடவடிக்கை தெரிவிக்கப்படவில்லை. | முற்பணங்களையும் திருப்பி அனுப்பியவைகளையும் அடையாளங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED /12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் 7.4.5 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 914,186.176 மொத்த தொகையாகன ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் சம்பந்தமாக பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021/2022 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க எதிர்காலத்தில் பௌதீக மெய்மையாய்வு மேற்கொண்டு அதற்கிணங்சக பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்படவில்லை. |

**3.81 நகர அபிவிருத்தி அதிகாரசபை**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | வரிக்கு முன் இலாபம் ரூபா | கணக்காய்வு அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 219,766,078,165 | 142,662,257,313 | 77,103,820,852 | 267,082,339 | மறுப்பு |
| **2022** | - | - | - | - | - |
| **2023** | - | - | - | - | - |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 – நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக நியமத்தின் 15 ஆம் பந்திக்கு முரணாக 2021 ஆம் ஆண்டிற்காக சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியாக வெளிப்படுத்தப்பட்ட ரூபா 511,722 மில்லியன் சொத்துக்களுக்குரிய கிரயம் மாத்திரம் புத்தகங்களுக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி ரூபா 184,790 மில்லியன் மாத்திரம் ஆகும். இதனால் நியமத்தின் தேவையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி நியாயமானதாக சமர்ப்பிக்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2021 | முதலீட்டு ஆதனங்களை நியாயமான பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 – நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பந்தி இலக்கம் 30 இற்கு முரணாக அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 வரையான காலத்தில் அவ்வப்போது அமுல்படுத்தப்பட்ட சகல செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 185,876.66 மில்லியன் ஆன அபிவிருத்தி செலவினங்கள் அதிகார சபையின் பேரேட்டில் கொடுக்கல் வாங்கல் மட்டத்தில் அறிக்கையிடப்பட்ட பின்னர் நிதிக்கூற்று மட்டத்தில் நடைமுறை வேலை, முதலீட்டு சொத்துக்கள், காணி மற்றும் கட்டிடம், வாடிக்கையாளர்களின் செயற்திட்டம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் என்ற 05 சொத்த விடயங்களின் கீழ் பேரேட்டிற்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகள் மற்றும் வகைப்படுத்தலின் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அதிகார சபையின் அபிவிருத்தி செலவினம், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவ மட்டத்தில் அறிக்கையிடப்பட்ட பின்னர் சொத்துக்களாக வகைப்படுத்தி இனங்காண்பதற்காக பேரேடு தயாரிக்கப்படாமையினால் இந்த 05 சொத்து விடயங்களின் கீழ் காண்பிக்கப்படுகின்ற | 2021 | கணக்கு முறைமைகளை மீண்டும் மீளாய்வு செய்து சரியான சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவினங்களை வெளிப்படுத்தும் வகையில் கணக்கு முறைமை தயாரிக்கப்படல் வேண்டும். | 2024 ஆம் ஆண்டிற்குரிய ஐந்தொகையில் திருத்தப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெறுமதிகளை தயாரித்தல், சாதாரண கணக்கீட்டு செயற்பாடுகளுக்கு முரணாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனால் அந்த 05 சொத்து விடயங்களின் கீழ் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | | | | |
| (இ) | அதிகார சபையால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பிற்போட்ட வாடகை வருமானக் கணக்கிற்குரிய பட்டோலையில் உள்ளடக்கப்பட்ட ஆதனங்களுக்கு இடையே 162 ஆதனங்களின் வருமானம் உழைக்கப்பட்ட வகையில் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த ஆதனங்கள் முதலீட்டு ஆதனங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. அதில் 106 ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,997.92 மில்லியன் ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் மிகுதி 56 ஆதனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதனால் முதலீடு செய்யப்பட்ட ஆதனங்களின் பெறுமதியின் சரியான தன்மையை கணக்காய்வின் போது குறித்துரைத்தவாறு உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2021 | முதலீட்டு ஆதனங்களை இனங்காணல் மற்றும் அளவிடல் என்பன சரியாக மேற்கொள்ளப் படல் வேண்டும். | 2022 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமுல்படும் வகையில் அதிகார சபையால் தயாரிக்கப்பட்டிருந்த ஆதனங்களின் மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 59.16 மில்லியன் பெறுமதி உடனான 48 ஏக்கர் 02 றூட் 39.6 பேர்ச் ஆன 38 ஆதனங்கள் நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்படாமல் தவறவிடப்பட்டிருந்தது. | 2021 | அதிகார சபைக்குரிய சகல சொத்துக்களையும் நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சந்தைப் பெறுமதியில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |
| (உ) | அதிகார சபைக்காக பொதுத் திறைசேரியில் இருந்து கிடைத்த மூலதனப் பங்களிப்பு ரூபா 1,257.55 மில்லியன் ஆக இலங்கை அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதுடன் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 100 மில்லியன் மாத்திரமாக இருந்தமையால் அதனிடையே ரூபா 1,157.55 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2021 | தகவல்களை உறுதிப்படுத்தி சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். | பொதுத்திறைசேரியினால் நகர அபிவிருத்தி அதிகார சபையின் உரித்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பாக கணக்கீடு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |
| (ஊ) | குத்தகைப் பட்டோலையில் குத்தகை ஆதனங்கள் 168 இற்கு உரிய குத்தகைப் பெறுமதி ரூபா 569.85 மில்லியன் ஆக இருந்த போதும் அதற்குரிய வருடாந்த வருமானம் அல்லது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான பிற்போட்ட குத்தகைப் பெறுமதியேனும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த குத்தகை இரத்துச் செய்யப்பட்டிருந்ததா என்பது தொடர்பாகவும் | 2021 | குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள ஆதனங்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இதற்கிடையே 141 இற்குரிய தகவல்கள் தற்போது கண்டறியப் பட்டுள்ளதுடன் 27 ஆதனங்களுக்குரிய தகவல்கள் மேலும் கண்டறிய வேண்டியுள்ளது. | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அல்லது எந்த ஒரு தகவலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | | | | |
| (எ) | ஒப்பந்த கிரயம், வேலை ஆரம்பித்தல் முற்பணம், முற்பணம் தீர்த்து வைத்தல், நிறுத்தி வைத்தல், நிறுத்தி வைத்தல்களை தீர்த்து வைத்தல் போன்றவைகளை உள்ளடக்கிய ஒப்பந்த பதிவேடு ஒன்று அதிகார சபையினால் பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய பட்டியல் பெறுமதி ரூபா 10,319 மில்லியன் மற்றும் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 2,480 மில்லியன் பெறுமதிகளின் சரியாக இருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் முடியாதிருந்தது. | 2021 | முழு விபரங்களுடனும் ஒப்பந்த பதிவேடு ஒன்றைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |
| (ஏ) | பன்னிப்பிட்டி வீர மாவத்தையில் அமைந்துள்ள 500 வீடுகளை உடைய வீடமைப்புத் திட்டத்தில் A, B ,C, D மற்றும் E ஆக 05 பிரிவுகளை உள்ளடக்கி இருந்ததுடன் இந்த வீடமைப்பு செயற்திட்டத்தின் B பிரிவில் அமைந்துள்ள 71 வீடுகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வாடகை திறைசேரியில் அருந்து அறவிடப்படும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த வீட்டு அலகுகளுக்காக 2023 ஒக்தோபர் 30 இல் | 2021 | உரிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒதுக்கப்படாத மற்றும் உடன்படிக்கை செய்த தற்போது வரையும் பதிவு செய்யப்படாத வீட்டு அலகுகளை திறந்த சந்தையில் விற்பனை செய்வதற்காக தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்கொள்வதற்காக அமைச்சரவை பத்திரமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | 2024 செப்டெம்பர் 30 ஆந் திகதி வரையில் நிலுவை நீர் கட்டணம், மின்சாரக் கட்டணம், எரிவாயு மற்றும் முகாமைத்துவ கட்டணத்திற்காக கூட்டுமொத்தமாக ரூபா 17.9 மில்லயன் பெற வேண்டி காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உள்ளவாறு அதிகார சபைக்கு அறவிட வேண்டிய நீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம் மற்றும் முகாமைத்துவக் கட்டணத்தின் கூட்டுமொத்தம் ரூபா 11.84 மில்லியனாக இருந்தது. | | | | |
| (ஐ) | நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக வழங்கப்பட்ட வீட்டு அலகுகளில் இருந்து அதிகார சபை மாதாந்தம் ரூபா 3,000 வீதம் ஆன தவணைப் பணம் அறவிடப்படுவதுடன் 2023 திசெம்பர் 31 வரையில் வாடகை மற்றும் நீர்ப் பட்டியலுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 170.48 மில்லியன் அறவிடுவதற்கு அதிகார சபை தவறியிருந்தது. | 2021 | உரிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கொடுப்பனவு திட்டம் வழங்கியதன் மூலம் நிலுவை நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்படுகின்றது . | 2024 செப்டெம்பர் 30 வரையில் வாடகை மற்றும் நீர் கட்டணத்திற்காக கூட்டுமொத்தமாக ரூபா 1,294 மில்லயன் அறவிட வேண்டி இருந்தது. |
| (ஒ) | 1982 இன் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் (திருத்த) சட்டம் II பகுதியின் 08 (அ) (i) பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்ட 85 அதிகாரப் பிரதேசங்களுக்காக 54 அபிவிருத்தி திட்டங்கள் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | 2021 | அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்கும் நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்காக கால அட்டவணையை மீண்டும் மீளாய்வு செய்தல் வேண்டும். | 2030 வரையில் வெளியிடப்பட்ட பிரதேசங்களுக்களுக்காக அபிவிருத்தி திட்டங்களை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு எதிர்க்கப்பட்டுள்ளது. | சகல வெளியிடப்பட்ட அதிகார பிரதேசங்களையும் மேவுகை செய்யும் வகையில் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய நிதி அமைச்சு செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் 7.7 ஆம் பிரிவின் பிரகாரம் துணைக் கம்பனிகளுக்காக மீளாய்வு கொள்கை தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அதிகார சபைக்குரிய எந்த ஒரு துணைக் கம்பனிக்காகவும் | 2021 | துணைக் கம்பனியின் மீளாய்வுக் கொள்கை தயாரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது வரையில் துணைக் கம்பனி மீளாய்வு கொள்கை தயாரித்து உயர் முகாமைத்துவத்தின் அவதானிப்புக்காக அனுப்பப்பட்டுள்ளது. | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இந்தக் கொள்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | | | | |
| (ஔ) | 2006 ஆம் ஆண்டின் போது அதிகார சபை ரூபா 345 மில்லியன் முதலீடு செய்து ஸ்தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டு (தனியார்) கம்பனி மற்றும் 2010 ஆம் ஆண்டில் துணைக் கம்பனியாக ஆரம்பிக்கப்பட்ட லங்கா ரெஸ்ட் கவுஸ் கம்பனி ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து எந்த ஒரு இலாப பங்கும் அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் ரூபா 236.81 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்த ஓப்கேஸ் ஏஜ் கம்பனியில் இருந்தும் எந்த ஒரு இலாப பங்கும் 2021 ஆம் ஆண்டிற்காக அதிகார சபைக்கு கிடைத்திருக்க வில்லை. 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு துணை கம்பனிகள் மற்றும் அது சார்ந்த கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த முதலீட்டின் கிரயம் ரூபா 677 மில்லியனாக இருந்த போதும் 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற இலாபப் பங்கு வருமானம் ரூபா 444,079 ஆக மாத்திரம் ஆக இருந்தது. இது மொத்த முதலீட்டின் 0.067 சதவீதத்திற்கு சமமான பெறுமதியாகும். | 2021 | உரிய முதலீட்டுக்கா க போதியளவான நலன்களை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் கம்பனிகளுக் கு நியமிக்கப்பட்டு ள்ள பணிப்பாளர் சபை ஊடாக தாக்கம் செலுத்ததல் வேண்டும். | இலாபப் பங்கு கிடைக்காத நிறுவனங்கள் தொடர்பாக அதிகார சபையின் முகாமைத்தால் எதிர்காலத்தில் கவனத்திற் கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |
| (க) | மீத்தொட்டமுல்ல புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் | 2021 | காணி கைப்பற்றல் நடவடிக்கைக | காணி கைப்பற்றல் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் | காணி கைப்பற்றல் நடவடிக்கைகள் இன்னும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நகர பூங்கா ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது மண்சரிவுக்கு உட்பட்ட கழிவு பொருட்களை அகற்றுவதற்காக பிளன்கட் லேயர் இடுதல் மற்றும் பசுமை வாயு அலகை ஸ்தாபிக்கும் ஒப்பந்தம் 2020 யூன் 09 ஆம் திகதி ரூபா 269.5 மில்லியன் தொகையில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 441.74 மில்லியன் அதிகார சபையால் செலவிடப்பட்டிருந்த போதும் திட்டமிடப்பட்ட பிரகாரம் பூங்கா நிர்மாணிக்கப்படாது இருந்ததுடன் கழிவுப் பொருளை அகற்றிய நிலையத்தில் தற்போது புல் வளர்ந்து கைவிடப்பட்டிருந்தமையும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த இடத்தில் ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்ட கழிவு நீர் அகற்றும் முறைமையின் வேலைகளில் 30 சதவீதமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் வாயு அகற்றும் முறைமையின் வேலைகள் 25 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | | ளை விரைவுபடுத்தி இந்த நிலத்தை ஆக்க பூர்வமாகவும் பொரளாதார மற்றும் சுற்றாடல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிரகாரம் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்கான செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதுள்ளது. | முடிவடையவில்லை. |
| (கா) | அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்புக் கோட்டை டீ.ஆர்.ஜீ ஜெயவர்த்தன மாவத்தை எல்லையில் அமைந்துள்ள 02 ஏக்கர் 02 றூட் 21.4 பேர்ச் அளவான காணி | 2021 | அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு | தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| பகிரங்க கூறுவிலை கோராமல் 2007 ஆம் ஆண்டில் இருந்து 46 பல்லின அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை அல்லது அமைச்சரவை அங்கீகாரம் இன்றி கம்பனி ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் 2009 ஆகஸ்ட் 12 ஆம் திகதி இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததுடன் 2010 பெப்ரவரி 18 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் 30 வருட நீண்ட கால வாடகை அடிப்படையில் ரூபா 1,300 மில்லியனுக்கு மதிப்பீடு செய்து இந்தக் காணியின் உரித்தும் உரிய கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இதற்காக 2009 ஆகஸ்ட் முதல் 2013 செப்தெம்பர் 25 வரை 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 557 மில்லியன் மாத்திரம் கம்பனியால் வாடகைப் பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி இந்தக் காணியில் எந்த ஒரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் வாகனத் தரிப்பிடமாகப் பயன்படுத்தி 2007 ஆம் ஆண்டு முதல் வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. பின்னர் 2013 மார்ச் 25 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கைக்கு | எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் உரிய காணியை ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

முரணாக உழைக்கப்பட்ட வருமானத்தில் உரிய கொடுப்பனவுகள் அதிகார சபைக்கு செலுத்தப்படாது இருக்கும் போது 2016 ஆகஸ்ட் 12 ஆம் திகதி பிரதான மதிப்பீட்டாளரின் ரூபா 3,620 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியில் மீண்டும் 2017 பெப்ரவரி 16 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் 50 வருடங்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு ஆரம்ப கம்பனியின் உரிமையாளருக்கு சொந்தமாக மேலும் ஒரு கம்பனியுடன் ரூபா 3,352 மில்லியன் தொகையில் இணங்கி கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் கம்பனியால் செலுத்தப்பட்ட ரூபா 557 மில்லியனுக்காக கூட்டுமொத்த வட்டியாக ரூபா 330 மில்லியன் செலுத்துவதற்கு அதிகார சபையின் பணிப்பாளர் சபை முறையான அங்கீகாரம் இன்றி முதலீட்டாளருடன் இணங்கியிருந்தது. அதனால் அதிகார சபைக்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்த அந்த நட்டம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் இது வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2023 திசெம்பர் 30 ஆம் திகதி வரை எந்த ஒரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் இந்தக் காணியில் மேற்கொள்ளப்படாது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| (கி) | நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் வீட்டு உரிமையாளர்களுக்காக நிர்மானிக்கப்பட்ட வீடமைப்பு தொகுதிகளில் அவர்கள் குடியிருக்கும் போது குடியிருக்கின்ற 18 தோட்டங்களின் காணிகளை விடுவிக்க வேண்டியிருந்தமையால் 06 தோட்ட காணிகளுக்குரிய ஹெக்ரேயர் 11.23 அளவான காணிகளின் உரித்து அதிகார சபைக்கு இதுவரை கையேற்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நகரப் புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நிர்மாணிக்கப்பட்ட 22 வீடமைப்பு தொகுதிகளுக்கு இடையே 08 வீடமைப்பு உத்தேசத் திட்டத்திற்குரிய காணிகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அதிகார சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த 22 வீடமைப்புத் தொகுதிகளுக்கு இடையே 20 வீடமைப்பு தொகுதிகளுக்காக இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கூட்டு ஆதன முகாமைத்து அதிகார சபையின் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | 2021 | உரிய காணிகளின் உரித்தை விரைவாக அதிகார சபைக்கு கையேற்பதற்கு கூட்டு ஆதன முகாமைத்துவ சான்றிதழை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நகர புனர்வாழ்வு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் நிர்மாணிக்கப்பட்ட சகல வீடமைப்புத் திட்டங்களுக்கும் உரிய காணி கையேற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் 14 வீடமைப்புத் திட்டங்கள் அமைந்துள்ள காணிகள் கையேற்கப்பட்டிருந்த போதும் 8 வீடமைப்புத் திட்டங்களின் காணிகள் கையேற்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |
| (கீ) | ஓட்டர்ஸ் எக்வட்டிக் மற்றும் 80 சனசமூக மண்டபங்கள் என்ற | 2021 | இரண்டு நிறுவனங்களும் | 80 சனசமூக மண்டபங்கள் மற்றும் ஓட்டர்ஸ் | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே |

| | | | |
|---|---|---|---|
| இரண்டு நிறுவனங்கள் அமைந்துள்ள ஹெக்ரேயர் 1.8274 கட்டிடத்துடனான மூன்று காணிகள் அதிகார சபையால் கையேற்கப்பட்டு அபிவிருத்தி செய்து மக்களுக்கு திறந்து வைக்க வேண்டும் என 2020 ஒக்தோபர் 27 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. மேலும் அந்த அமைச்சரவை அங்கீகாரத்திற்குரிய 2020 ஒக்தோபர் 12 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பிற்காக நிதி அமைச்சரின் அவதானிப்பின் பிரகாரம் இந்த குறிப்புக்களுக்கு இணைப்புக்கள் இடப்பட்டிருந்த காணி வணிக ரீதியான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுவதாயின் அதன் மூலம் உழைக்கப்படுகின்ற வருமானத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உரிய காணி அபிவிருத்தி செய்யும் போது மற்றும் கைப்பற்றும் போது ஏற்படுகின்ற செலவினங்களைக் குறைத்த பின்னர் பெறுமதி திரண்ட நிதியத்தில் செலவு வைக்க வேண்டியிருந்தமை அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அதிகார சபைக்கு இதுவரை அந்த இரண்டு நிறுவனங்களும் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் பொருத்தமான வணிக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் பொருத்தமான வணிக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதுடன் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சனசமூக மண்டபம் அபிவிருத்தி செய்வதற்கான பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்த பின்னர் அதன் மூலம் எழுகின்ற வருமானத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உரிய காணி அபிவிருத்தி செய்து மற்றும் கைப்பெற்றும் போது ஏற்படுகின்ற செலவினங்களை குறைத்த பின்னர் எஞ்சுகின்ற மீதி திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (கு) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காணி இழப்பீட்டுக் கொடுப்பனவுப் பட்டோலையின் பிரகாரம் அதிகார சபையால் கையேற்கப்பட்ட காணிகள் 66 ஏக்கர் 02 றூட் 25.5 பேர்ச் அளவிற்காக உரிமையாளர்கள் குறித்துரைத்த ரீதியில் இனங்காண முடியாது இருந்ததுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூபா 2,040.72 மில்லியன் மற்றும் வட்டி ரூபா 493.83 மில்லியன் ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த மீதிகளுக்கு இடையே 1984 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற மீதியும் இதனிடையே காணப்பட்டது. உரிமையாளர்களை இனங்காணாமையின் காரணமாக இழப்பீடு செலுத்தும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தமையால் வட்டியாக மேலதிக செலவினப் பொறுப்பு ஒன்று அதிகார சபைக்கு நாளாந்தம் அட்டுறுவாகக் காணப்பட்டது. | 2021 | இது தொடர்பாக அமைச்சு செயலாளர் மட்டத்தில் முன்னின்று உரிய இழப்பீட்டு விசாரணைகளை பூர்த்தி செய்து இழப்பீட்டுக் கொடுப்பனவு நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும். | இழப்பீட்டு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தற்போது கைப்பற்றப்பட்ட காணிக்காக இழப்பீட்டு நலனாளிகளை சரியாக இனங்காணாத தரப்பிரனர் தொடர்பாக உரிய பிரதேச செயலாளர்களுக்கு அறிவிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |
| (கூ) | கொழும்பு புறக்கோட்டை சந்தைத் தொகுதியில் (மெனிங் மார்க்கட்) பேலியகொட மீண்டும் ஸ்தாபிப்பதற்காக அதிகார சபையால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 6,990 மில்லியன் திறைசேரி நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பேலியகொட சந்தைத் தொகுதியில் 2020 ஆம் ஆண்டின் செப்தெம்பர் | 2021 | உரிய கடைகளை தகைமைகளைப் பூர்த்தி செய்த வியாபாரிகளுக்கு வழங்கி அதிகார சபைக்குக் கிடைக்கின்ற வருமானத்தை அதிகரித்தல் வேண்டும். | வியாபாரக் கொட்டகைகள் / கடைகளை அகற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | 2024 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரை யில் 1,467 கடைகள் வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் 2022 ஒக்தோபர் 31 வரையிலும் அதில் 1395 கடைகளில் 417 கடைகள் இன்னும் வியாபாரிகளுக்கு வழங்காமையினால் அந்த கடைகள் விளைவற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | | | |
| (கெ) | அம்பாந்தோட்டை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மாகம்றுகுனு புர சர்வதேச மாநாட்டு மண்டபத்தை நிர்மாணிக்கும் போது அதன் பிரதான கேட்போர்கூடம், உரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் ரூபா 851.2 மில்லயனில் கேட்போர் கூடத்தின் ஏனைய நிர்மாணங்களுக்காக ரூபா 3.83 மில்லியன் அரசாங்கத்தின் நிதியத்தில் இருந்தும் செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இதனைப் பேணிச் செல்வதற்கான வருமான செலவினமாக 2017 முதல் 2021 வரை மாத்திரம் ரூபா 110.53 மில்லியன் அதிகார சபையால் செலவிடப்பட்டிருந்த போதும் அந்த செயற்திட்டத்தில் இருந்து அந்தக் காலப்பகுதிக்கு உரிய வருமானமாக ரூபா 20.63 மில்லியன் மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையத்தைப் பேணிச் செல்வதற்காக அதிகார சபை மற்றும் தனியார் துறை இணைந்து | 2021 | செயற்திட்டத்திற்கு மாற்றுவழி வருமானத்தை உழைக்கின்ற வழிகளைக் கண்டறிந்து கொள்ள வேண்டி இருந்ததுடன் கட்டிடம் மற்றும் ஏனைய வளங்களை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தனியார் துறையுடன் குறுங்கால முகாமைத்துவ முறைமையொன்றை அமுல்படுத்துவதன் மூலம் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற நடவடிக்கைகள் இதுவரை வெற்றியளித்திருக்கவில்லை. | | | | |
| (கே) | முன்னாள் காணப்பட்ட மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் 2016 ஆம் ஆண்டின் போது அமுல் படுத்தப்பட்ட “சுகித்த புரவர” நகர அபிவிருத்தி செயற்திட்டத்தில் ஒரு கட்டமாக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 269.12 மில்லியன் ஆன 05 மாடிகளை உடைய 8032.9 சதுர மீற்றர் அளவான இடவசதியுடன் மகர நிர்வாக மற்றும் வணிக கட்டிட தொகுதி நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் அதிகார சபையால் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2024 சனவரி 30 ஆந் திகதி வரையில் 1,164.9 சதுர மீற்றர் மாத்திரம் பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புக்களினால் பயன்படுத்தப்படுவதுடன் அந்த நிறுவனத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. மேலும் தற்போது வரையில் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மின் பாரம் தூக்கி இரண்டும் செயலிழந்து காணப்பட்டதுடன் 428 இருக்கைகளை ஒடைய சகல வசதிகளுடனும் உடைய கேட்போர் கூடமும் பயன்பாட்டுக்கு | 2021 | ஏதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கு பயன் படுத்துவதற்கு முடியுமான வகையில் நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து கட்டிடத்தை வாடகைக்கு வழங்கி அதிகார சபையின் வருமான வழிகளை அதிகரித்துக் கொள்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். | கட்டிடங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல் தொடர்பாக அரச தனியார் கூட்டுமுயற்சி ஒத்துழைப்பின் அடிப்படையில் பொருத்தமான முதலீட்டாளர்களை இனங்கண்டு அமுல்படுத்துதல் தொடர்பாக கவனத்திற்கொள்ளல் தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எடுக்கப்படாமல் மூடப்பட்டிருந்தது. | | | | |
| (கை) | 2021 ஆம்ட ஆண்டின் செப்தெம்பர் மாதத்தின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த 608 வீட்டு அலகுகளில் ஓவல் விச் வீடமைப்பு செயற்திட்டத்தின் வீட்டு நலனாளிகள் மற்றும் 2018 இல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 500 வீட்டு அலகுகளைக் கொண்ட அங்கோடை லேக் கிறிஸ்ட் வீடமைப்பு செயற்திட்டங்களின் வீட்டு நலனாளிகளால் முறையே ரூபா 5,858.40 மில்லியன் மற்றும் ரூபா 1,880.02 மில்லியன் அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் ஓவல் விச் செயற்திட்டத்தின் வீட்டுரிமையாளர்களுக்கு வீடுகளின் சட்ட ரீதியான உரித்துறுதி வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 276 ஆக இருந்ததுடன் அங்கோடை வீடமைப்புத் திட்டத்தில் இதுவரையில் வழங்கப்பட்டுள்ள உரித்துறுதிகளின் எண்ணிக்கை 61 மாத்திரம் ஆகும். | 2021 | உரிய செயற்திட்டத்தில் உரித்துறுதி கையளித்தல் தொடர்பான நடவடிக்கைகளை விரைவுபடுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2024 ஆம் ஆண்டின் சனவரி முதல் வீட்டு உரிமையாளர்களுக்கு சட்ட ரீதியான உரித்தைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. | 2024 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரையில் ஓவல் விச் வீடுகளுக்கு வீடுகளின் சட்ட ரீதியான உரித்தை 298 உரித்துறுதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அங்கோடை லேக் கிறிஸ்ட் இன் வீடுகளுக்கு சட்ட ரீதியாக 165 உரித்துறுதிகள் வழங்கப்பட்டுள்ளது. |
| (கொ) | பன்னிப்பிட்டி வீர மாவத்தையில் அமைந்துள்ள 500 வீடுகளை உடைய வீடமைப்புத் திட்டத்தை நிர்மாணிப்பதற்காக அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் கம்பனிக்கு 2017 யூன் 15 ஆந் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய | 2021 | செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்து வீடுகளை விரைவாக வீட்டு நலனாளிகளுக்கு வழங்க வேண்டியிருந்ததுடன் மிகுதி வீடுகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து | பாதுகாப்பு அமைச்சு மற்றும் கடற்படையினால் முன் விற்பனைத் திட்டத்தின் கீழ் ரூபா 4,414.37 மில்லியன் செலுத்தி ஒதுக்கப்பட்ட A தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | 2024 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரையில் பாதுகாப்பு அமைச்சில் இருந்து ரூபா 676.7 மில்லியன் மற்றும் கடற்படையின் ரூபா 627.89 மில்லியன் கிடைத்திருந்ததுடன் செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திகதி 2019 திசெம்பர் 31 ஆக இருந்த போதும் அந்தக் காலத்தில் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணமாக அந்தக் காலம் 2022 செப்தெம்பர் 29 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த 500 வீட்டு அலகுகளும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் கடற்படைக்கு 101 வீடுகளும், முன் விற்பனைத் திட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்பட்ட 202 வீட்டு அலகுகளும் இருந்ததுடன் மிகுதி 197 வீடுகளும் எந்த ஒரு விற்பனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமல் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாதுகாப்பு அமைச்சு மற்றும் கடற்படையினால் ரூபா 1,011.79 மில்லியன் மற்றும் முன் விற்பனைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வீடுகளுக்காக ரூபா 2,176.84 மில்லியனும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 3,188.63 மில்லியன் தொகை அதிகார சபைக்கு கிடைத்திருந்த போதும் 2023 திசெம்பர் வரையிலும் அந்த வீடுகளின் வேலைகளைப் பூர்த்தி செய்து வீட்டு நலனாளிகளுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | | வருமான வழிகளை அதிகரித்தல் வேண்டும். | | வில்லை. |
| (கோ) | கொழும்புக் கோட்டை ரான்ஸ்வேர்க் சதுக்க காணி ரூபா 4999.7 மில்லியனுக்கு உள்நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட | 2021 | இது தொடர்பாக முறையான விசாரணையென்று முகாமைத்துவ | அபிவிருத்தி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படும் வரை அந்தப் பெறுமதி அறவிட | அவதானிப்புக்கள் தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வெளிநாட்டு தனியார் கம்பனி ஒன்றுக்கு பல்லின அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றினை அமுல்படுத்துவதற்காக 04 வாடகை உடன்படிக்கை மூலம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது இருந்ததுடன் செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட முழுமையாக 81 மாடிகளை உடைய கட்டிடத்தில் 60 மாடிகளுக்காக கட்டிடம் கவனத்தில் கொள்ளக் கூடிய அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த தாமதத்தின் காரணமாக மீண்டும் உடன்படிக்கை செய்து 2018 யூலை 04 ஆம் திகதியில் உள்ளவாறு சந்தைப் பெறுமதியில் முன் குத்தகை பெறுமதியாக இருந்ததுடன் வேறுபாடான ரூபா 1,290.04 மில்லியன் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக அறவிடுவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | மட்டத்தில் மேற்கொள்ளப் படல் வேண்டும். | முடியாதுள்ளது. | |
| (கௌ) | அதிகார சபையால் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 சனவரி 10 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டதுடன் | 2021 | கணக்கீட்டு பொறுப்புக்களை கால ரீதியில் நிறைவேற்றுவதற்காக நிதிக் கூற்றுக்கள் குறித்துரைத்த கால அட்டவணையில் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களும் இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| 02 வருடங்களுக்கு அண்ணளவான தாமதம் அவதானிக்கப்பட்டது. | சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 3.82 இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

| | முழு சொத்துக்கள் | முழு பொறுப்புக்கள் | உரிமை மூலதனம் | வரிக்கு முன்னர் இலாபம் / (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2021** | 423,002,000,000 | 777,598,000,000 | (354,596,000,000) | (81,816,000,000) | முனைப்பழியுள்ள |
| **2022** | 493,901,000,000 | 580,633,000,000 | (86,732,000,000) | (617,589,000,000) | முனைப்பழியுள்ள |
| **2023** | 311,436,000,000 | 277,965,000,000 | 33,471,000,000 | 120,310,000,000 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | 2013 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 38/1140 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் விநியோகத்தர்களால் செயற்படுத்தப்படுகின்ற (CODO) எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து மற்றும் திறைசேரிக்குச் சொந்தமான விநியோகத்தர்களால் செயற்படுத்தப்படுகின்ற (TODO) எரிபொருள் நிரப்பு நிலையங்களிடமிருந்து மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் (MUF) அறவீடு செய்வதற்கு 2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் இத் தீர்மானம் | 2021<br>2022<br>2023 | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தினை தாமதிக்காது அமுல்ப்படுத்தல் வேண்டும். பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து வருமான இழப்பினை அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2014 ஆம் ஆண்டிலிருந்து 2023 நவம்பர் மாதம் வரை மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் (MUF) நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தினால் 2023 திசெம்பர் மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்த உப கட்டளையின் காரணமாக அறவீடு செய்தல் நிறுத்தப்பட்டுள்ளது. எனவே விற்பனை முகவர்களிடமிருந்து சேகரிக்கப்பட வேண்டிய MUF கடன்பட்டோர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பணமாக உள்ளடக்கப்பட்டுள்ளன. கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தலானது நீதிமன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் | இந்த விடயம் கணக்காய்வினால் 2015 ஆம் ஆண்டிலிருந்து சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் சபை தீர்மானத்தினை அமுல்ப்படுத்துவதற்குநடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2023 திசெம்பர் மாதத்தின் போது வழங்கப்பட்டுள்ள உப கட்டளை நீதிமன்றத்தினால் 2024 மார்ச் மாதத்தின் போது நீக்கப்பட்டிருந்தும் 2024 அக்தோபர் 15 ஆந் திகதி வரை பணிப்பாளர் சபைத் தீர்மானம் முழுமையாக அமுல்ப்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முழுமையாக அமுல்ப்படுத்தப்படாதிருந்ததுடன் CODO மற்றும் TODO எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 11 நிலையங்களிடமிருந்து மாத்திரம் மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2023 ஆம் அண்டு முடிவடையும் திகதியில் உள்ளவாறு அறவிடப்படாத MUF பணம் ரூபா 4,848 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | | | மேற்கொள்ளப்பட்டது. | |
| 02 | 2019 யூலை 30 ஆந் திகதிய 05/1231 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் சந்தைப்படுத்தல் முகவர்களின் தரகுப் பணத்தினை செலுத்தும் உச்ச எல்லையினைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது சந்தைப்படுத்தல் முகவர்களுக்கு தரகுப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2023.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு அவ்வாறு மிகையாக செலுத்திய சந்தைப்படுத்தல் முகவர் தரகுப் பணம் (பெற்றோல் மற்றும் டீசல்) ரூபா 26,306 மில்லியனாக இருந்தது. | 2021<br>2022<br>2023 | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தினை அமுல்ப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மிகையாகச் செலுத்திய தரகுப்பணத்தை முழுமையாக அறிவீடு செய்தல் வேண்டும். | சந்தைப்படுத்தல் முகவர்களால் 2019 யூலை 30 ஆந் திகதி 05/1231 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லைகளை அமுல்ப்படுத்துதல் மற்றும் மிகையாகச் செலுத்திய தரகுப் பணத்தை அறவீடு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு எதிராக சந்தைப்படுத்தல் முகவர்களினால் நீதிமன்றத்தினால் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. 2022.03.10 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு எதிராக தரகு விகிதத்தினை மாற்றுதல் மற்றும் மிகைத்தரகுப் பணத்தை அறவீடு செய்வதனை தவிர்ப்பதற்காக நீதிமன்றத்தினால் 2022 யூலை மாதத்தில் உப கட்டளை | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை சம்மந்தமாக அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் எரிபொருள் விலைச் சூத்திரத்தினை தயாரிக்கும் போது பணிப்பாளர் சபையின் தீர்மானம் தொடர்பாக சந்தைப்படுத்துதல் முகவர்களின் தரகுப் பணத்தை செலுத்தும் உச்ச எல்லை தொடர்பாக கவனம் செலுத்தாது 3 சதவீதம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வழங்கப்பட்டிருந்ததுடன் அதனை நீக்கும் வரை அல்லது இறுதித் தீர்ப்பு வழங்கும் வரை அந்த வழக்கிற்கு முன்னர் காணப்பட்ட முறைமையை பேணுதல் வேண்டும். | எடுத்துக்கொள்ளப் பட்டிருந்தது. இதன் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 56 மில்லியனாகக் காணப்பட்ட மிகையாகச் செலுத்திய சந்தைப்படுத்தல் முகவர் தரகுப் பணம் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 11,376 மில்லியன் வரையும் 2023 ஆம் ஆண்டில் ரூபா 14,874 வரையும் அதிகரித்திருந்தது. |
| 03. | பொது பயன்பாட்டு வசதிகள் சம்மந்தமாக பின்வரும் பிரச்சினைகளை சரிசெய்வதற்கு கூட்டுத்தாபனம் துரித நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| (i) | பொதுப் பயன்பாட்டு வசதிகள் பங்குதாரர்களின் உடன்படிக்கை 2008 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்தும் நிறுவனத்திற்கான கட்டுப்பாட்டு நடைமுறை மற்றும் முனையக் கட்டணங்களும் சிலெப் கட்டணங்களும் உள்ளடங்கலாக | 2021<br>2022<br>2023 | தொடர்பபட்ட அனைத்து தரப்பினர்களினம் ஒத்துழைப்புடன் தாமதமின்றி உடன்படிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | CPSTL நிறுவனம் 2019 ஆம் ஆண்டிலிருந்து (05 ஆண்டுகள் காலமாக) LOLC நிறுவனத்துடன் எந்த உடன்படிக்கையிலும் கையொப்பமிட்டிருக்கவில்லை. | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் அனைத்து தரப்பினர்களினதும் இணக்கப்பாட்டுடன் பொதுப் பயன்பாட்டு வசதிகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போக்குவரத்துச் செலவுகளை தீர்மானிப்பதற்காக பயன்படுத்துகின்ற விலைச் சூத்திரங்களை உள்ளடக்கியதாக அந்த உடன்படிக்கையின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற பொதுப்பயன்பாட்டு வசதி உடன்படிக்கை தொடர்புபட்ட அனைத்து தரப்பினர்களதும் இணக்கப்பாட்டுடன் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | -மேற்படி- | CPSTL நிறுவனத்தினால் LIOC நிறுவனத்துடன் இணைந்து எந்தவொரு நிபந்தனை சம்மந்தமாகவும் கூட்டுத்தாபனத்திற்கு எந்தவொரு தாக்கமும் ஏற்படாதிருக்க வேண்டும் என சான்றுபடுத்துதல் வேண்டும். | ஆபத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்காக 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | எனவே கூட்டுத்தாபனத்திற்கும் CPSTL இற்கும் இடையே காணப்பட்ட வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் LIOC இனால் நிராகரிக்கப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த சில பாதகமான நிலைமைகள் மற்றும் கிரயம் தொடர்பான ஏதாவது தாக்கம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் என | 2021 | CPSTL நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட நிதிகள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின் | தற்பொழுது CPC பணிப்பாளர் சபையினால் 2013 ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைகளில் சில பிரிவுகளை மீளாய்வு செய்து புதிய உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு | CPSTL கம்பனிக்கு தாமதக் கட்டணம் சம்மந்தமாக ஏதாவது பொறுப்பு இருக்குமாயின் அக்கிரயத்தினை அறவீடு செய்வதற்கு ஏற்பாட்டினை வழங்கி புதிய உடன்படிக்கையா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவதானிக்கப் பட்டது. | 2022<br>2023 | றது என சான்றுபடுத்துவதற்கு மற்றும் கூட்டுத்தாபனத்திற்கும் ஒட்டுமொத்தமாக நாட்டிற்குமான கிரையத்தை குறைப்பதற்காக முகாமைத்துவத்தினால் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க CPSTL கம்பனிக்கு தாமதக் கட்டணம் சம்பந்தமாக ஏதாவது பொறுப்பு காணப்படுமாயின் அக்கிரயத்தினை அறவீடு செய்வதற்கு ஏற்பாட்டினை வழங்கி புதிய உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. | னது 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | கடந்த 13 ஆண்டுகள் காலத்திற்காக களஞ்சியம் மற்றும் முனைய வசதிகளை வழங்கும் செயற்பாட்டுக் கட்டணமாக ரூபா 51,459 மில்லியன் பணம் CPSTL இனால் அறவிடப்பட்டிருந்தும் புதிய உட்கட்டமைப்பு வசதிகளைத் திட்டமிடுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் காணப்படுகின்ற வசதிகளை துரிதமாக பராமரிப்பதற்கும் CPSTL நிறுவனத்தினால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக குழாய் வழியில் மற்றும் களஞ்சிய முறைமையில் காணப்படுகின்ற ஒழுங்கீனங்களின் காரணமாக ஏற்பட்ட தாமதக் கட்டணத்தை | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கூட்டுத்தாபனம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. | | | | |
| 04. | 2007 இலிருந்து 2009 வரையான காலத்தில் எண்ணை பெறுகை சம்பந்தமாக இடம்பெற்ற ஹெஜ்ஜிங் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாட்டிற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 14,028 மில்லியனாகும். மேலும் ஒரு தனியார் வங்கியினால் ஐ.அ.கு டொலர் 8,648,300 தொகையினை வேண்டி கூட்டுத்தாபனத்திற்கு எதிராக கொழும்பு வணிக நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. | 2021<br>2022<br>2023 | பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறிக்கையில் குறிப்பிட்டவாறு உரிய தனியார் வங்கி வணிக நீதிமன்றத்தில் ஒரு வழக்கினை தொடுத்திருந்ததுடன் கூட்டுத்தாபனத்தினால் மேற்கூறிய வழக்கு நடவடிக்கைகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை எதிர்ப்பினை தொடுத்திருந்தது. அதன் தீர்ப்பு இன்னும் வெளியிடப்படவில்லை. | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லை. |
| 05. | தற்பொழுது காணப்படுகின்ற சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பானது தொடக்க மட்டத்திலான சுத்திகரிப்பானதுடன் அதன் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு வழங்கும் கிரயத்தினை வினைத்திறனான முறையில் மேற்கொள்வதற்காக உத்தேச சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிபு நிலையத்தை விரிவுபடுத்துதல் மற்றும் புனரமைத்தல் (SOREM) செயற்திட்டம் அல்லது மாற்று செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு | 2021<br>2022<br>2023 | தற்பொழுது காணப்படுகின்ற சுத்திகரிப்பு நிலையத்தினை மேம்படுத்தி குறைந்த விலைக்கு நாட்டின் வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்த வேண்டும். | SOREM செயற்திட்டத்திற்கு ஒரு முதலீட்டாளரினை தெரிவு செய்வதற்கான பிரேரணைக்கான வேண்டுதல்களை (RFP) கோருவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்டம் கைவிடப்பட்டது.<br><br>2024 மார்ச் 07 ஆந் திகதிய 24/0490/621/30 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையமானது | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் கொள்வனவு செய்த காணியும் விளைவற்றுக் காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முடியாதிருந்தது. மேற்கூறிய குறிக்கோளுக்காக ரூபா 1,003 மில்லியன் கிரயத்திற்கு சுவீகரிக்கப்பட்ட காணி இந்த அறிக்கைத் திகதி வரையும் விளைவற்றுக் காணப்பட்டது. | | | பெற்றோலிய கூட்டுத்தாபனத்திலிருந்து பிரிந்து அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு தொழில் முயற்சியாக ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை கொள்ளக ரீதியான அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக பொருத்தமான ஒரு மூலோபாய பங்குதாரரினை ஒருங்கிணைப்புச் செய்து திருகோணமலை பிரதேசத்தில் புதிய ஒரு சுத்திகரிப்பு நிலையத்தை தோற்றுவிக்கும் இயலுமையை ஆராய்ந்து பார்க்குமாறு அமைச்சரவை ஆலோசனை வழங்கியுள்ளது. | |
| 06. | 2005 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட SAP ERP முறைமையின் தொடக்க பதிப்பு கூட்டுத்தாபனத்தினால் நாளதுவரையாக்கப்படாது 2010 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து பயன்படத்தப்பட்டுக் காணப்பட்டது. | 2021<br>2022<br>2023 | SAP முறைமையை மேம்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ERP முறைமையை “SAP 4 HANA Rise” பதிப்பிற்கு நாளதுவரையாக்குவதற்கு செயற்பாட்டு குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. இதனை நாளதுவரையாக்குதலானது கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. CPSTL கம்பனி கேள்வி கோருவதற்காக கேள்வி | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் SAP முறைமை மேம்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆவணங்களைத் தயாரித்து வருகின்றது. | |
| 07. | 2012 இலிருந்து 2018 வரையான காலத்தில் தாமதித்து ஒப்படைத்தல்/ குறைவாக ஏற்றுதல்/ ஏற்றுக்கொள்ள முடியாத தரம் மற்றும் விலை மாற்றங்களின் காரணமாக ஏற்படுகின்ற நட்டங்களுக்கான தண்டப்பணமாக டொலர் 4.39 மில்லியனுக்குச் சமமான ரூபா 1,443 மில்லியன் தண்டப்பணம் வழங்குனரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் 06 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் கூட்டத்தாபனத்தினால் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | 2021<br>2022<br>2023 | நிலுவை மீதிகளை சேகரிப்பதற்கு அல்லது செலுத்த வேண்டிய பணத்திற்கு எதிராக தீர்த்துவைப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒவ்வொரு வழங்குனருக்கும் ஒப்பந்தத்தின்/ கேள்வியின் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் உரிய வரவுக் குறிப்பு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் கூட்டுத்தாபனத்தினால் பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு பரிகாரமாக அவர்களினால் செலுத்த வேண்டிய தண்டப் பணத்தை அவர்களின் தாமத கோரிக்கைகளுக்கு எதிராக தீர்த்துவைக்குமாறு தெரியப்படுத்தப்பட்டது.<br><br>இன்று வரை கூட்டுத்தாபனத்தின் தாமத குழுவினால் (Demurrage Committee) தாமதக் கோரிக்கைகளின் வேண்டுதல்கள் மதிப்பீட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டதுடன் சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தின் பிரகாரம் வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் நிலுவை மீதி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 08. | கூட்டுத்தாபனத்தினால் நிராகரிக்கப்பட்ட கப்பலில் ஏற்றிய பொருட்களை விடுவிப்பதற்கு முன்னர் ரூபா 648 | 2021<br>2022<br>2023 | அப்பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது இணக்கத்திற்கு வருவதற்கு | கூட்டுத்தாபனத்தினால் பணத்தை மீள அறவீடு செய்யும் விண்ணப்பப்பத்திரம் (refund application) இலங்கை | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் அப்பணம் அறவீடு செய்யப்படவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மில்லியன் உற்பத்தி வரியினையும் உள்ளடக்கி ரூபா 1,617 மில்லியன் சுங்கத்தீர்வை மற்றும் வரிக்காக செலுத்தப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் 2017 சனவரி மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து அப்பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது தீர்த்துவைப்பதற்கு முடியாதிருந்தது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் சுங்கத்திடமிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை. | ல. |
| 09. | 1930 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட 100 எண்ணைத் தாங்கிகளைக் கொண்ட திருகோணமலையிலுள்ள எண்ணைத் தாங்கி தொகுதிகள் 1964 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பிரித்தானிய அரசாங்கத்திடமிருந்து சுவீகரிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க இலங்கை அரசாங்கத்தினால் எண்ணைத் தாங்கி தொகுதியை அபிவிருத்தி செய்து பயன்படுத்துவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தும் 2021 ஆம் ஆண்டு வரை அந்த முயற்சிகளை வெற்றி கொள்வதற்கு அரசாங்கம் தவறியிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது இந்த எண்ணைத் தாங்கி தொகுதியை அபிவிருத்தி செய்து பயன்படுத்துவதற்காக கூட்டுத்தாபனமும் | 2022<br>2023 | கம்பனியை தோற்றுவித்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கூட்டுத்தானத்தின் நிதியினை பயன்படுத்தி 24 எண்ணைத் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுடன் Trinco Petroleum Terminal (Pvt) Ltd. கம்பனியினால் மிகுதியான 61 தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை Trinco Petroleum Terminal (Pvt) Ltd. கம்பனியால் சர்வதேச ரீதியாக விருப்பினைக் கோருதல்(EOI) இடம் பெற்றுள்ளதுடன் அதற்காக கிடைத்துள்ள 07 பதில்களை மதிப்பீட்டிற்கு உட்படத்தி RFP (Request for Proposal) இனை அனுப்பி வைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | LIOC யும் இணைந்து Trinco Petroleum Terminal (Pvt) Ltd. என்ற பெயரில் ஒரு ஒன்றிணைந்த கம்பனியை தோற்றுவித்த போதிலும் எண்ணைத் தாங்கி தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கு பணத்தை ஈடுபடுத்துவதற்காக பாதுகாப்பான உள்ளக அல்லது வெளியக நிதி மூலங்கள் இல்லாததன் காரணமாக தந்திரோபாயத் திட்டத்திற்கு இணங்க நிர்ணயிக்கப்பட்ட வேளைக்கு தமது தொழில் முயற்சி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு கம்பனி தவறியிருந்தது. | | | | |
| 10. | கூட்டுத்தாபனத்தினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சில எண்ணை இறக்குமதிகள் தொடர்பாக எண்ணையை இறக்கும் போது எண்ணை இருப்புக் குறைதல், (out turn losses) தாமதித்து ஒப்படைத்தல், ஒப்பந்த பொறுப்புக்களை நிறைவேற்றாமை என்பவற்றின் காரணமாக டொலர் 26.9 மில்லியனுக்குச் சமமான ரூபா 7.8 பில்லியனுக்காக மேற்கொள்ளப்பட்ட உரிமை கோரல்களுக்கு எதிராக ஐயக்கடனுக்காக ஒதுக்கீடு செய்தல் | 2023 | புலனாய்வினை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த விடயம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் உள்ளக புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந் தது. எவ்வாறாயினும் உரிய கேள்வி ஆவணங்கள்/ உடன்படிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக இந்த உரிமை கோரல்களை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது என அவதானிக்கப்பட்டது. | | | | |
| 11. | 2022 ஆம் ஆண்டின் மார்ச் 01 ஆந் திகதியிலிருந்து ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை ஒரு பெரலுக்கு அமெரிக்க டொலர் 7.48 ஆன விலைத் தவணையின் கீழ் 1,960,000 பெரல் டீசல்களை (LAD) கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தவணை உடன்படிக்கையினை முன் கொடுப்பனவு முறைமைக்கு ஒரு பெரலுக்கு அமெரிக்க டொலர் 6.98 ஆன விலைத் தவணையின் கீழ் செயற்பாடாக பேணுவதற்கு வழங்குனர் வழங்கியிருந்த மாற்று சந்தர்ப்பத்தினையும் நிராகரித்து இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | 2022 | எரிபொருளினை மிகவும் இலாபகரமான முறைமையில் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். | அப்போது நாட்டில் காணப்பட்ட வெளிநாட்டு நாணய பிரச்சினையால் இந்த தவணை உடன்படிக்கையை செயற்திறனாக பேணுவதற்கான இயலுமை இருக்கவில்லை. அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு தவணை ஒப்பந்தத்தினை ஒரு பெரலுக்கு டொலர் 6.98 ஆன விலைக்கு செயற்படுத்துவதற்கான இயலுமை காணப்பட்டிருந்தும் இந்த தவணை ஒப்பந்தத்திற்கு L/C வழங்குவதற்கு உட்பட்டு ஒரு பெரலுக்கு டொலர் 7.48 ஆன விலை தவணை ஒன்றிற்கு 180 நாட்கள் கடன் காலத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | இது சம்மந்தமாக முறையான பரீட்சிப்பேனும் மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. |
| 12. | எவ்வாறாயினும் தவணை உடன்படிக்கையின் செயற்பாட்டுக் காலத்தினுள் கூட்டுத்தாபனத்தினால் 497,996 பெரல் டீசல் | 2022 | -மேற்படி- | முற்கொடுப்பனவு அடிப்படையில் ஒரு பெரல் டொலர் 6.98 விலைக்கு வழங்குனரின் இரண்டாவது பிரேரணையினை | -மேற்படி- |

பெற்றுக்கொள்ளக்கட்டிருந்ததுடன் அது 274,185 பெரல் மற்றும் 223,811 பெரல் அலகுகளுக்காக முறையே அமெரிக்க டொலர் 24 மற்றும் அமெரிக்க டொலர் 23 விலைத் தவணையின் கீழ் மேற்கூறிய வழங்குனரிடமிருந்தே கோரப்படாத முறைமையின் (Unsolicited) கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததனால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 3,047.42 மில்லியன் அல்லது அமெரிக்க டொலர் 8,252,081 மேலதிக கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்நது.

அமுல்ப்படுத்துவதற்கு கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு முடியாதிருந்தது. இந்திய குறுங்கால கடன் திட்டத்தின் கீழ் அனைத்து டீசல் கப்பல்களும் 2022 மே மாதத்தின் போது வழங்கப்பட்டன.

BK/139/2022 மற்றும் BK/168/2022 கட்டளை இலக்கங்களின் கீழ் இரண்டு கப்பல்கள் யூலை மாதத்தின் போதும் ஆகஸ்ட் மாதத்தின் போதும் எரிபொருள் தேவைப்பாட்டின் அடிப்படையில் நாட்டின் தீவிரமான எரிபொருள் தேவைப்பாட்டினையும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் குறித்த அளவில் பேணுவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்த சுய விருப்பில் வழங்கிய பிரேரணையின் கீழ் இந்த இரண்டு கட்டளைகளும் M/s Coral Energy DMCC, UAE வழங்குனரிடமிருந்த தேவையான நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரத்தினைப் பின்பற்றி அதாவது CPC இன் அங்கீகாரத்துடன் STEC இன் சிபாரிசின் பிரகாரம் SSCAPC இன் அங்கீகாரத்தின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | மேலும் மேற்கூறிய தவணை உடன்படிக்கையின் செயற்பாட்டு காலத்திற்குள்ளேயே 03 சந்தர்ப்பங்களின் போது ஏனைய இரண்டு வழங்குனர்களிடமிருந்து ஒரு பெரலுக்கு முறையே அமெரிக்க டொலர் 17.00, அமெரிக்க டொலர் 19.87 மற்றும் அமெரிக்க டொலர் 13.83 வீதம் உயர்ந்த விலைத் தவணைகளுக்கு கூட்டுத்தானத்தினால் 922,381 பெரல் ஓடோ டீசல் (LAD) கொள்வனவு செய்ததனால் ரூபா 3,381.69 அல்லது அமெரிக்க டொலர் 9,146,741 மேலதிக கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2022 | - மேற்படி - | நாட்டில் காணப்பட்ட தீவிரமான எரிபொருள் தேவைப்பாட்டின் அடிப்படையில் மற்றும் நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை குறித்த அளவில் பேணும் குறிக்கோளில் இக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. இக் கட்டளைகள் சுய விருப்பில் வழங்கிய பிரேரணையின் அடிப்படையில் உயர் முகாமைத்துவத்தின் அங்கீகாரம் STEC சிபார்சுகளுக்கு இணங்க SSCAPC இன் அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்குனருக்கு இந்த கோரப்படாத பிரேரணைகளை வழங்கி நிர்ணயிக்கப்பட்ட பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி பெற்றுக்கொள்ளப்பட்டது. | - மேற்படி - |
| 14. | 2022 ஆம் ஆண்டில் 06 கட்டளைகள் தொடர்பாக 08 சந்தர்ப்பங்களின் போது 1,820,012 பெரல் லங்கா ஓட்டோ டீசல் LAD (Gas oil 500 ppm) கட்டளையிடப்பட்டிருந்தும் விலையிடுவதற்காக DAP Colombo Basis (Incoterms 2020) Gas Oil 500 ppm இற்கு பதிலாக PLATTS உடன் ஒப்பிடுகையில் அதிக சராசரிப் பெறுமதியினைக் கொண்ட லங்கா சுபர் டீசல் (LSD) விலை | 2022 | - மேற்படி - | Platts Gas Oil 10 ppm விலை குறிகாட்டியினை அடிப்படையாகக் கொண்டு சுய விருப்பில் வழங்கிய பிரேரணைகளுக்காக வழங்குனர் LAD (கேஸ் ஒயில் 500 ppm) விலை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அச் சந்தர்ப்பத்தின் போது STEC மற்றும் SSCAPC சிபாரிசானது இந்த LSD (கேஸ் ஒயில் 10 ppm) பொருள் விபரக்குறிப்பிற்கு முரணாக இருந்தது. தொடர்புபட்ட Platts | நியமிக்கப்பட்ட குழுவின் உள்ளடக்கம் மற்றும் நோக்கொல்லை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் குழுவின் நிகழ்கால செயலாற்றல் இல்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அல்லது Gas Oil 10 ppm இன் FOB Singapore Price method இனை அடிப்படையாகக் கொண்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு மொத்தமாக அமெரிக்கடொலர் 10,499,898 அல்லது ரூபா 3,872.96 மில்லியன் மிகைக் கிரயத்தினை செலவு செய்ய வேண்டிய ஏற்பட்டிருந்தது. | | | | இன் LAD (கேஸ் ஒயில் 500 ppm) இனை பயன்படுத்தி பொருள் விபரங்குறிப்பிற்கு இணங்கி கொள்ளுமாறு வழங்குனர்களிடம் வேண்டிக்கொள்ளப்பட்டது. அவ்வாறு வேண்டுதல் செய்யப்பட்டபோதிலும் வழங்குநர் அதற்கு இணங்கவில்லை. அவ்வாறே ஏனைய போட்டியான மாற்றுப் பிரேரணைகள் இன்றுவரை கிடைத்திருக்கவில்லை. இந்த பொருள் விபரக்குறிப்புகளுடன் (கேஸ் ஒயில் 10 ppm) LAD (கேஸ் ஒயில் 500 ppm) கொள்வனவு செய்தல் சம்பந்தமாக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தினால் ஒரு குழு நியமிக்கப்பட்டது. | |
| 15. | இந்திய குறுங்கால கடன் வசதிகளின் கீழ் கூட்டுத்தாபனத்தினால் மேற்கூறியவாறு இரண்டு சந்தர்ப்பங்களின் போது லங்கா ஒடோ டீசல் LAD (Gas Oil 500 ppm) 599,722 பெரல்கள் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக விலையிடுவதற்காக (PLAATS) உடன் ஒப்பிடுகையில் அதிக சராசரி பெறுமதியுடனான லங்கா சுபர் டீசல் LSD (Gas Oil 10 ppm) களுக்குரிய FOB Singapore price | 2022 | - | மேற்படி - | ரூபா 200 மில்லியன் இந்திய கடன் உதவிப்பணத்தின் கீழ் IOC India (Indian Oil Corporation, India) வழங்குநரினால் இக்கட்டளைகளின் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அதன்போது வழங்குநரினால் Platt’s Gas Oil 10 ppm விலை குறிகாட்டியினை அடிப்படையாகக் கொண்டு LAD (கேஸ் ஒயில் 500 ppm) வழங்கலுக்காக விலை குறிப்பிடப்பட்டுள்ளது. CPC LAD 500 ppm விலை குறிகாட்டியுடன் | இது சம்மந்தமாக முறைப்படியான பரீட்சிப்பேனும் மேற்கொள்ளப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டிற்கான “நிகழ்ச்சி நிரலுக்கு” இணங்க அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு தொடர்பாக சபை தனது விடயப் பரப்பின் கீழ் காணப்படும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என தொடர்பாக போதிய கவனத்துடன் செயற்பட்டிருக்கவில்லை. அதன்படி, ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க நிறுவனத்தின் கருமங்களுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும் இலக்குகள் மீது நெருங்குவதை அளவை செய்வதற்கான சுட்டிகளும் | 2023<br>2022<br>2021 | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்குவது தொடர்பாக இலக்குகள், சுட்டிகளை இனங் காண்பதற்கு மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஆயுர்வேத வைத்திய சபையின் கீழ் உள்ள விடயங்கள் தொடர்பாக ஆயுர்வேத மருத்துவ சபை அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அமுல்படுத்த வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 15 | பாரம்பரிய வைத்தியர் ஒருவராக பதிவு செய்வதற்காக நபர்களிடமிருந்து இலஞ்சம் பெற்றுக்கொள்ளல் மற்றும் அதற்காக தலைமை வைத்தியரின் கையொப்பம் போலியாக இடல் மற்றும் மருத்துவ சபை அங்கத்தவர் பதவி முறையற்றது என்ற குற்றம் தொடர்பாக ஆரம்ப விசாரணை அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்ட மருத்துவ சபையின் அங்கத்தவர் அந்த காரணங்களை உள்ளடக்கிய மருத்துவ சபையின் தீர்மானங்களை எடுக்கும் போது தொடர்ச்சியாக சபைக் கூட்டங்களில் பங்குபற்றியிருந்தார். | 2021 | குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் போது உரிய நேரடி அல்லது மறைமுக தாக்கங்களின் கீழ் அல்லாத வகையில் பக்கசார்பற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக பொலீஸ் பரிசோதனையொன்று நடாத்தப் பட்டுள்ளதுடன் விசாரணை உத்தியோகத்தர்கள் தயாரித்த குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு முன்னர் இது தொடர்பாக வெளியிடப் பட்டுள்ளமை, மாலேவன சோபித்த தேரர் அவர்களின் பிரத்தியேக செயலாளராக செயற்படுகின்ற மருத்துவ சபை அங்கத்தவரை வாக்குமூலம் பதிவுசெய்து மற்றும் மீள் விசாரணை அறிக்கை தயாரித்து சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு சபை தீர்மானித்துள்ளது. | இவ்வாறான மோசடிகளைத் தடுப்பதற்காக பொருத்தமான கட்டுப்பாட்டு திட்டமொன்றை ஸ்தாபித்தல் தொடர்பாக சபையில் போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. |

## 3.98 இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | மிகை/(பற்றாக்குறை) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 1,871,516,591 | 261,572,636 | 1,609,943,955 | (14,500,336) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 1,929,546,849 | 301,953,207 | 1,627,593,642 | 59,122,972 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2023** | 2,188,731,212 | 491,434,842 | 1,697,296,370 | 120,690,365 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை க ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | வங்கி இணக்ககூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 03 வங்கிக் கணக்குகளில் நேரடியாகப் பெறப்பட்ட ஒரு வருடத்திற்கும் மேலான ரூபா 2,445,597 தொகையான காசு மற்றும் காசோலைகள் குறிப்பாக அடையாளம் காணப்பட்டு புத்தகங்களிற்கு எடுக்க நவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | 2024 ஆண்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட முன்னர் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு வருடத்திற்கும் பழமையான வைப்புத் தொகையினை வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு தேவையான அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற பின்னர் கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுவதென. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| 2 | கொடுக்கல் வாங்கலின் உரிய பெறுமதியை விட அதிகமான பெறுவனவுகள் அல்லது கொடுப்பனவுகள் இடம்பெற்ற சந்தர்ப்பங்களில் அவை சரி செய்யாமை மற்றும் பெறுவனவுகள் அல்லது கொடுப்பனவுகளைச் சரியாக பதிவு செய்யாமை காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 71 | 2023<br>2022 | 2024 ஆண்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட முன்னர் தீர்க்கப்பட வேண்டும். | கணக்குப் பிரிவினால் மூல ஆவணங்களின் அடிப்படையில் கடன்பட்டோர்களின் பேரேட்டு கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன என, அந்த கடன்பட்டோர்களின் மீதிகளில் செலவு மீதிகள் இருக்க முடியுமென மற்றும் கணக்குப் பிரிவானது கடன்பட்டோர்களின் | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கடன்பட்டோர் கணக்குகளில் மொத்தமாக ரூபா 512,633 ஆன செலவு மீதிகள் எஞ்சியிருந்ததுடன் அக் கணக்குகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு பதிலாக அவை பல ஆண்டுகளாக நடைமுறை பெறுப்புக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | | | அறிக்கைகளைத் தயாரித்து மாதாந்தம் விற்பனைத் பிரிவிற்கு அனுப்புகின்றதெென. | |
| 3 | மீளாய்வாண்டிற்காக தயாரிக்ககப்பட்டிருந்த உற்பத்தி கணக்கின் பிரகாரம் உற்பத்தி கிரயம் ரூபா 1,059,361,507 ஆன போதும், அலகொன்றிற்கான உற்பத்தி கிரயத்தின் மீது காலாண்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட உற்பத்தி கிரய அறிக்கைகளின் பிரகாரம் மொத்த உற்பத்தி கிரயம் ரூபா 643,931,284 ஆனதால் வித்தியாசம் ரூபா 415,430,223 ஆகும். இந்த கிரய முரண்கள் குறித்து எந்த தொடர் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன் உற்பத்திச் செலவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலகொன்றிற்கான உற்பத்தி கிரயத்தின் அடிப்படையில் மருந்துகளின் விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டதால் விற்பனை விலையால் உண்மையான உற்பத்திச் செலவு ஈடுசெய்யப்படாமல் போகும் அபாய நிலைமை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | 2023<br>2022 | உற்பத்திக் கணக்கின் பிரகாரம் அடையாளம் காணப்பட்ட உண்மையான உற்பத்திக் கிரயத்தினை உள்வாங்கி உற்பத்தி செய்யப்பட்ட மொத்த அலகுகளின் எண்ணிக்கை கருத்தில் கொண்டு அதன் அடிப்படையில் ஒரு அலகுக்கான உற்பத்திச் கிரயம் தீர்மானிக்கப்பட ல் வேண்டும். இந்தக் கிரய முரண்பாடுகளை சரிபார்த்து உரிய சீராக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பான காணப்படும் வேறுபாடுகள் மீது கவனம் செலுத்தப்பட்டு சரியாக கணக்கு தகவல்கள் நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படுவத என. | வருடாந்த உற்பத்தி திட்டம், காலாண்டு ரீதியான உற்பத்தி அறிக்கை மற்றும் உள்ளவாறான உற்பத்தி தகவல்களிற்கு இடையில் வேறுபாடு காணப்படுகிறது. அதன் பிரகாரம் 2024 ஒக்டோபர் 30 திகதி வரையும் திட்டமிட்ட உற்பத்தி மற்றும் உள்ளவாறான உற்பத்தியினை ஒப்பிட்டு சரியான முகாமைத்துவ தீர்மானத்தை எடுக்க இயலுமை இலுக்கவில்லை என அவதானிக்கப் பட்டது. |
| 4 | இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் 25 வது பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் பூர்த்தி | 2023<br>2022 | நியமத்தின் பிரகாரம் முதல்-உள்-முதல்-வெளி | புதிய கணனி பொதியினை நிறுவியதன் பின்னர் இருப்பு பேரேட்டினை | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் பரிந்துரைத்த |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்பட்ட இருப்புக்கள் தொடர்பாக, முதல் உள் முதல் வெளி அடிப்படையில் இருப்பு பதிவேடுகள் பேணப்பட்ட போதிலும் அந்த இருப்பு பதிவேடுகளில் அலகு விலை மற்றும் பெறுமதிக்கான வரிசைகள் நாளாதுவரை ஆக்கப்பட்டு இருக்காததால் உண்மையான அலகு கிரயத்தினை கவனிக்காது ஆண்டின் இறுதியில் இருப்பு பேரேட்டில் மீதமுள்ள அலகுகளின் எண்ணிக்கையானது, பின்னர் கணிப்பீடு செய்யப்பட்ட அலகு உற்பத்தி கிரயத்தினால் பெருக்கப்பட்டு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதமுள்ள பூர்த்திசெய்யப்பட்ட மருந்து இருப்புக்களின் பெறுமதி ரூபா 452,862,514 என கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 | முறை அல்லது நிறையிடப்பட்ட சராசரி முறை போன்ற கிரய சமன்பாடுகளில் ஒன்றை தொடர்ந்து பின்பற்றி இருப்பு பேரேடுகளின் அலகு விலை மற்றும் பெறுமதி வரிசைகள், நாளாதுவரையாக்கப்படல் வேண்டியதுடன் அதன் அடிப்படையில் விநியோகிக்கப்படும் இருப்புக்களின் உண்மையான விலை மற்றும் ஆண்டின் இறுதியில் மீதமுள்ள இருப்புக்களின் உண்மையான கிரயத்தை கணிப்பீடு செய்து கணக்கீடு செயயப்படல் வேண்டும். கணனி மயமாக்கப்படாத பிரிவுகளில் இருப்பு பேரேடுகள் பேணப்படல் வேண்டும். | அலகு விலை மற்றும் பெறுமதியுடன் பேணமுடியும் என, புதிய கணனி பொதியினை அறிமுகப் படுத்துவதற்காக 2023.11.02 அன்று விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன மற்றும் தற்போது இருப்பு பெறுமதி இடப்படுவது ஆண்டின் இறுதியில் உள்ளவாறான பௌதீக இருப்பு ஒப்பாய்வினால் கிடைக்கும் அலகுகளின் எண்ணிக்கையுடன் குறித்த இருப்பு அலகுக்கான கிரயத்தில் கணக்கிடுவதால் பெறப்படும் பெறுமதியின் மீதாகும். | நடைமுறைகளை ஸ்தாபித்து இருக்கவில்லை. |
| 5 | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 வது பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லா சொத்துக்களுக்கான எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்தரு ஆயட்காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட்டு, மதிப்பீடு பிழைகள் இனங்காணப்பட்டு, இலங்கை கணக்கீட்டு | 2023 | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு ஏற்படும் செலவினை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் மீள்மதிப்பீடு மேற்கொள்ளவுள்ளதால் இந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும். | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நியமம் 08 இன் பிரகாரம் திருத்தங்கள் செய்யப்படாமல், முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட கிரயம் ரூபா 99,484,716 ஆன 171 இயந்திர உருப்படிகள், 06 நீர் விநியோக உபகரணங்கள், 17 ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் 229 பொருட்பதிவேட்டு உருப்படிகள் என்பன மேலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | | | | |
| 6 | ஆயுர்வேத ஆணையாளரினால் “ஆயர்எக்ஸ்” (AyurEx) 2023 சர்வதேச கண்காட்சிக்காக அனுசரனை பங்களிப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு 2023 ஜூலை 28 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் கோரப்பட்டு இருந்ததுடன் அதற்காக 2023 ஆகஸ்ட் 10 ஆம் திகதியிடப்பட்ட இல. 14478 பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மீது ஆயுர்வேதத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் நலன்புரிச் சங்கத்தின் இலக்கம் 167-1001-7317-0353 கொண்ட மக்கள் வங்கியின் டவுன்ஹால் கிளை கணக்கிற்கு ரூபா 5,000,000 செலுத்தப்பட்டது. மேலும் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் அங்கத்தவர் ஒருவரன ஆயுர்வேத ஆணையாளரினால் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்ட அத்தொகை தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர் | 2023 | இது ஒரு சர்ச்சைக்குரிய விடயமொன்று ஆகையால் சட்ட விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | AyurEx 2023 சர்வதேச கண்காட்சிக்காக இந்த கூட்டுத்தாபனத்தினால் இக் கண்காட்சியின் பிளாட்டினம் அனுசரணை பங்களிப்பை பெற்று ரூபா 5,000,000 ஆன் அனுசரணையினை வழங்குவதென. இந்நாட்டின் ஆயுர்வேத துறையில் முன்னோடி நிறுவனமாக AyurEx 2023 சர்வதேச கண்காட்சிக்கு பிரதான அனுசரணையாளராக பங்குபற்றுவதால் கூட்டுத்தாபனத்தின் நன்மதிப்பை வளர்த்துக் கொள்வதற்கும் உற்பத்திகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தவும் இயலுமை கிடைத்ததென. ஆயர்வேத ஆணையர் இந்தக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் ஒரு உறுப்பினராக இருப்பதனால் கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் | இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் விவேகமான கவனத்தை செலுத்தி இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொடுக்கல் வாங்கல்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | வாங்கல்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாததால் எதிர்காலத்தில் வெளிப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதெனை. | |
| 7 | ஹெக்டேயர் 2.2 ஆன மதவாச்சி மூலிகை பூங்கா, மதவாச்சி பிரதேச செயலாளரினால் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த காணியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | 2023 | நிதித் தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக காணியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | எமது நிறுவனத்திற்கு மதவாச்சி மூலிகை தோட்டம் ஒதுக்கப்பட்டுள்ளதாக கணக்கு பிரிவுக்கு தகவல் தெரிவிக்கப்படவில்லை என. இந்த காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி கிடைத்த பின்னர் கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுமெனை. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் அக் காணியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 8 | 2024 ஜனவரி 08 ஆந் திகதியிடப்பட்ட மக்கள் வங்கியின் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம், 2015 மற்றும் 2019 ஆண்டுகளில் திறக்கப்பட்ட 03 நாணய கடித எல்லை கணக்குகளின் மொத்த மீதி ரூபா 1,951,492 ஆன போதும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா ரூபா 105,908,646 ஆக ரூபா 103,957,154 அதிகமாக குறிப்பிடப்பட்டு இருந்தது. மேலும் கடந்த ஆண்டு நாணய கடித எல்லை கணக்கில் மீதி ரூபா 25,037,906 அதிகமாக குறிப்பிடப்பட்டதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 | இந்த தவறை உடனடியாக சரிசெய்ய வேண்டியதுடன் கணக்குப் பிரிவின் கண்காணிப்பு செயல்முறையானது மீளாய்வு செய்யப்பட்டு நெறிப்படுத்தப்படல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுவதெனவும் இந்த நாணய கடிதத்தின் மீதியிலிருந்து ரூபா 78,919,247 பெறுமதி 2024 கணக்காண்டில் தீர்க்கப்படுவதுடன் மீதமுள்ள மீதிகளிற்காக வழங்கல் பிரிவின் மூலம் குறித்த தீர்பனவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனை. இது குறித்து பல ஆண்டுகளாக வழங்கல் பிரிவுக்கு எழுத்து மூலமாக மற்றும் வாய்மொழியாக அறிவுறுத்தப்பட்டுள்ளதெனை. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் இத்தவறை சீராக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 9 | 2008 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னரும் கூட்டுத்தாபன ஆய்வுகூட நடவடிக்கைகளிற்காக முறையே உலக சுகாதார நிறுவனம் மற்றும் ஆயுர்வேத ஆராய்ச்சி | 2023 | நிதி கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டு முன்னைய ஆண்டுகளில் விலகல்கள் சரி | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுவதெனை. இந்த மீதிகள் ஆண்டுதோறும் காலக் கழிவாக கணக்குகளில் இருந்து பதிவழிக்க | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் நிதிக்கூற்றுக்கள் மீளாய்வொன்றை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிறுவனத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 3,994,341 மற்றும் ரூபா 761,274 நன்கொடை வருடாந்தம் காலக்கழிவு கணக்கீட்டின் ஊடாக் வருமானமானமாக இனங்காணாது வெளிப் பங்களிப்பு எனும் பெயரில் மேலதிக மூலதன வழங்களாக 15 ஆண்டுகளிற்கும் அதிக காலமாக தொடர்ந்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்தது. | | செய்யப்படல் வேண்டும். | தேவையான அங்கீகாரத்திற்காக உயர் முகாமைத்துவத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக மற்றும் எதிர்காலத்தில் அந்த அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளவதென. | மேற்கொண்டு கடந்த ஆண்டுகளின் விலகல்களை சீராக்க நடவடிக்கை எடுத்திருக்கவி ல்லை. |
| 10 | 2011/2012 முதல் 2013/2014 வரையிலான வரி மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட வருமான வரி ரூபா 12,673,956 தொகை 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்டு இருந்ததுடன் அக் கொடுப்பனவு வருமான வரி ஒதுக்கீட்டுக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக “பங்குலாப வரி” எனப்படும் போலியான சொத்துக் கணக்கு ஒன்றிற்கு வரவு வைக்கப்பட்டு இருந்தது. இந்தத் தவறைச் சரிசெய்வதற்கு குறித்த போலியான சொத்துக் கணக்கின் மீதியை வருமான வரி ஒதுக்கீட்டு கணக்கிற்கு எதிராக பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக 2017 முதல் மீளாய்வாண்டு வரை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டிற்கும் உரியதாக வருமான வரி செம்மையாக்கல் குறிப்புக்களில் காண்பிக்கப்படும் வருமான | 2023 | நிதி கூற்றுக்களை மீளாய்வு செய்து முந்தைய ஆண்டுகளின் கணக்கீட்டு குறைபாடுகள் சரி செய்யப்படல் வேண்டும். வருமான வரி கடப்பாடொன்று இல்லை என்பதாக எழுத்துமூல உறுதிப்படுத்த ல் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இனங்குவதென மற்றும் வரி ஆலோசகரின் சேவையை பெற்று இதற்காக தேவையான சீராக்கங்களை எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுமென. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் நிதிக்கூற்றுக்க ள் மீளாய்வொன் றை மேற்கொண்டு கடந்த ஆண்டுகளின் விலகல்களை சீராக்க நடவடிக்கை எடுத்திருக்காத துடன் வருமான வரி கடப்பாடு இல்லையென எழுத்துமூல சான்றுகள் பெறப்பட நடவடிக்கை எடுத்திருக்கவி ல்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வரி ஒக்கீட்டுக் கணக்கின் மீதியிலிருந்து மேற்குறித்த போலி சொத்துக் கணக்கின் மீதி கழிக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. | | | | |
| 11 | நிதிப் பிரமாணங்கள் 103, 104 மற்றும் 105 பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்குரியதாக 8 விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியங்களில் கூட்டுத்தொகை ரூபா 2,178,305 ஆன பற்றாக்குறை மற்றும் ரூபா 1,484,545 ஆன மிகை தொடர்பாக 2021 நவம்பர் 01 ஆம் திகதிய 14026 ஆம் இலக்க பணிப்பாளர் சபை கூட்டத்தின் தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட் வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவுடன் உடன்படுவதாகவும் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை தயாரித்து தலைவரிற்கு சமர்ப்பித்த பின்னர் நிதிப் பிரமாண பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. 2024 ஜூன் மாத இறுதிக்குள் குறித்த நடவடிக்கைகள் தொடர்பாக பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வு குழுவிற்கு தெரிவிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கைகளை நிறைவு செய்திருக்கவில்லை. |
| 12 | நிதிப் பிரமாணம் 156 (1) (அ) மற்றும் (ஆ) பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்வாறான இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்ட 01.∴02 இலக்க களஞ்சியத்தில் 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள திராட்சையின் இருப்பு பற்றாக்குறை ரூபா 2,876,893 தொகை மற்றும் 10 ஆம் இலக்க லேபள் களஞ்சியத்தில் கடந்த ஆண்டுகளில் அச்சிடப்பட்ட போதும் பயன்படுத்தப்படாத லேபள்களின் பற்றாக்குறை ரூபா 461,310 தொகை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிற்கு எதிராக நிதிப் பிரமாண பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | நிதிப் பிரமாண பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவுடன் உடன்படுவதாகவும் இது தொடர்பான அறிக்கை ஒன்றைப் பெறுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின் அறிக்கை பிரகாரம் விரைவில் நடவடிக்கை எடுப்பதென. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 பிரகாரம் அரச கணக்கு தொடர்பான வவுசர்களை உறுதிசெய்யும் காசோலைகளில் கையொப்பமிடும் அதிகாரிகளிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட வேண்டிய போதும், அதன் ஏற்பாடுகள் பிரகாரம் பாதுகாப்பு பிணை பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | 2023 | நிதிப் பிரமாண பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். | வவுசர்களை உறுதிசெய்யும் மற்றும் காசோலைகளில் கையொப்பமிடும் அதிகாரிகளிடமிருந்து வைக்க வேண்டிய பாதுகாப்பு பிணை அளவு தொடர்பாக பணிப்பானர் சபை தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டு அதன் பிரகாரம் முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 14 | 1994 யூன் 14 ஆம் திகதிய இலக்கம் 95 கொண்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை பிரகாரம் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டில் உற்பத்தி ஊக்குவிப்பு ரூபா 28,507,457, வருகை கொடுப்பனவு ரூபா 10,464,986, உற்பத்தித்திறன் கொடுப்பனவு ரூபா 43,480,969 ஆக கூட்டுத் தொகை ரூபா 82,453,412 தொகையும், உட்பட கடந்த 09 ஆண்டுகளில் ரூபா 676,001,624 தொகை பொது திறைசேரியின் அனுமதியின்றி ஊக்குவிப்பாக செலுத்தப்பட்டிருந்தது. | 2023 | முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்ட ஊக்குவிப்புப்படி முறைமையின் அடிப்படையில் மாத்திரம் ஊக்குவிப்பு படி செலுத்தப்படுதல் வேண்டும். | இந்த கூட்டுத்தாபனத்தின் தற்போது செயற்படும் ஊக்குவிப்பு முறை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படத்தப்பட்டு வருவதாக மற்றும் புதிய ஊக்குவிப்பு முறையொன்றை தயாரித்து அமைச்சின் பரிந்துரையுடன் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து உள்ளதுடன் இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லையென. உற்பத்தி நடவடிக்கைகளை வினைத்திறனாக நடாத்திச் செல்லும் போது குறித்த இலக்குகளை அடைவதற்கு ஊக்குவிப்பு முறையை நடைமுறைப்படுத்துவது அவசியமாகக் காணப்படுவதால் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் பழைய ஊக்குவிப்பு முறை தொடர்ந்தும் நடைமுறையில் காணப்படுவதென. | முறையான ஊக்குவிப்பு முறையொன்றிற்கு 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் அங்கீகாரம் கிடைத்து இருக்காததுடன் பழைய முறைக்கு முறையற்ற ஊக்குவிப்பு முறையை தொடர்ந்தும் செய்படுத்துகதின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | உற்பத்தி செய்யப்படும் மருந்து வகையின் மீது நிறையிடல் மேற்கொண்டு குறித்த உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பின் அடிப்படையில் கணக்கிடப்படும் ஊக்குவிப்பொன்றை உற்பத்தி நடவடிக்கைகளுக்கு நேரடியாக பங்களிப்பு செய்யும் ஊழியர்களுக்காக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக நிறுவனத்தின் உற்பத்தி திறனை அதிகரித்துக் கொள்ள இயலுமான போதும் அவ்வாறான முறையொன்றிற்கு பதிலாக ரூபா 15 மில்லியனை விஞ்சி அதிகரிக்கும் மாதாந்த உற்பத்திக் கிரயத்தின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் அனைத்து பிரிவுகளினதும் ஊழயர்களிற்கு மாதாந்தம் ரூபா 02 மில்லியனிலிருந்து ரூபா 06 மில்லியனிக்கு இடைப்பட்ட தொகையை உற்பத்தி ஊக்குவிப்பாக அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு ரூபா 64,930,055 ஆக இருந்த இந்த ஊக்குவிப்புச் செலவு மீளாய்வாண்டில் ரூபா 82,453,412 தொகை வரை 26 சதவீதம் அதிகரித்து காணப்பட்டதுடன் உற்பத்திக் கிரயம் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபனத்தின் இலாபத் தன்மை குறைவடைந்த போதிலும் செலுத்தும் உற்பத்தி ஊக்குவிப்பை அதிகரிக்க வேண்டியிருந்தது. | 2023 | உற்பத்திச் செயல்பாடுகளுக்கு நேரடியாகப் பங்களிப்பு செய்யும் ஊழியர்களுக்கு பயன்படுத்தப்படும் உற்பத்திச் செலவின் அடிப்படையில் மதிப்பீடு செய்வது, வெவ்வேறு செயல்திறனுடன கூடிய அனைத்து பிரிவுகளையும் மதிப்பீடு செய்வதற்கு பொருத்தமற்றதாவதுடன் குறித்த உற்பத்தி அலவுகளின் அளவு அதிகரப்பதன் மீது கணக்கிடப்பட்ட ஊக்குவிப்பை உற்பத்தி பிரிவிற்கு மாத்திரம் மற்றும் வேறு செயலாற்றுகை அடிப்படையில் கணக்கிடப்பட்ட ஊக்குவிப்பை ஏனை பிரிவுகளிற்கு அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுத்து நிறுவனத்தின் உற்பத்தித்திறனை அதிகரித்துக் கொள்ள வேண்டும். | மாதாந்த உற்பத்தி ரூபா 15 மில்லியன் தொகையினை விஞ்சும் சந்தர்ப்பங்களில் மாதாந்த உற்பத்திச் செலவின் அடிப்படையில் ஊக்குவிப்பை கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுப்பதென. கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் உற்பத்தி அதிகரித்ததுடன் அந்த உற்பத்தியின் அடிப்படையில் ஊக்குவிப்பு செலுத்துவதன் காரணமாக ஊக்குவிப்பு கொடுப்பனவுகளில் அதிகர்ப்பொன்று காணப்படுவதென. | முறையான ஊக்குபிப்பு முறை ஒன்றிற்கு 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் அங்கீகாரம் கிடைக்காததுடன் பழைய முறைக்கு முறையற்ற ஊக்குவிப்பு முறை தொடர்ந்தும் செயப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | களஞ்சியத்தில் சரியான முறையில் இருப்பு களஞ்சியப்படுத்தப்பட்டு இருக்காததுடன் அதிகபட்ச, குறைந்தபட்ச மற்றும் மறுகட்டளை மற்றும் சிக்கன இருப்பு மட்டம் பேணப்பட்டு இருக்கவில்லை எனவும், பின் அட்டைகள் மற்றும் இருப்புப் பேரேடுகள் முறையாக பயன்படுத்தப்பட வில்லையெனவும், மெதுவாக நகரும் இருப்புக்கள் காணப்பட்ட போதும் அந்த உருப்படிகள் அடையாளம் காண்டு விற்பனை மேம்படுத்தல் உத்திகள் பயன்படுத்தப்படவில்லை எனவும், மருந்துகளின் விலை உயர்வடைதல், லேபள்கள் மற்றும் பொதியிடல் மங்கலாதல் போன்ற காரணங்களால் விற்பனையிலிருந்து அகற்றப்பட்ட மருந்து வகைகள் காலாவதியான மருந்துகளுடன் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டு இருந்ததாகவும், அந்த இருப்புக்களை மீண்டும் லேபல் இட்டு விற்பனை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்காது காலாவதியாக இடமளிக்கப்பட்டு இருந்தாகவும், விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியங்களில் உள்ள காலாவதியான பயன்படுத்த முடியாத மருந்து வகைகள் நீண்ட காலமாக இருப்புப் பேரேட்டிலிருந்து அகற்றப்படாமல் சாதாரண இருப்புகளாகக் கணக்கிடப்பட்டு இருந்தாகவும், விற்பனை நிலையங்களில் உள்ள காலாவதியான மற்றும் பயன்படுத்த முடியாத மருந்துகளை மத்திய களஞ்சியத்திற்கு போக்கு | 2023 | களஞ்சியம் மற்றும் இருப்பு கட்டுப்பாட்டினை முறையாக்க வேண்டும். | பின் அட்டைகளை பராமரிப்பது நிகழ்காலத்தில் மிகவும் கடினமானதென. விற்பனை நிலையங்களில் இருப்பு பேரேடுகளை நாளாதுவரையாக பேணிச் செல்லுமாறு அறிவுரை வழங்கி உள்ளதென. 03 ஆண்டுகளாக சேதமடைந்த இருப்புக்கள் காணப்படுவதென எதிர்காலத்தில் நாளதுவரையாக்கபேணிக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. கலஞ்சியத்தில் இடவசதி போதாமையினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சேதமடைந்த இருப்புகளை ஒரே இடத்தில் திரட்டி வைக்க நேர்ந்துள்ளதென. லேபள்கள் மற்றும் பொதியிடல் மங்கலாக இருப்பதன் காரணமாக விற்பனையிலிருந்து அகற்றப்பட்ட மருந்துகளை மீண்டும் உற்பத்தி சாலைக்கு அனுப்பி மீள் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ளதென மற்றும் 2023 ஒக்டோபர் மாதம் முதல் அதிகபட்ச, குறைந்தபட்ச மற்றும் மறுகட்டளை மற்றும் சிக்கன இருப்பு மட்டங்களை தயாரித்து உற்பத்தித் திட்டங்கயை தயாரிப்பதென. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் களஞ்சிய கட்டுப்பாட்டை முறையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வரத்து செய்யாததால் முறைகேடுகள் இடம்பெற இடம்பாடு காணப்பட்டதாகவும், விற்பனை நிலையங்களில் பாரியளவு இடங்கள் முறை பயன்பாட்டுடன் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | | | | |
| 17 | கூட்டுத்தாபனத்தினால் 160 சந்தர்பங்களில் ரூபா 2,326,651 பெறுமதியான மருந்துகளை இலவசமாக வழங்கி அவற்றின் ரூபா 1,537,478 கிரயத்தை அன்பளிப்பாக விற்பனை மற்றும் விநியோகச் செலவுகளின் கீழ் காட்டப்பட்டு இருந்தது. மேலும் பணிப்பாளர் சபையின் தீர்மான இலக்கம் 14192 பிரகாரம் நன்கொடை வழங்குவது தொடர்பாக வழிகாட்டல் கோவை ஒன்றை தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதன் கீழ் 2019 ஜூலை 08 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 13406 கீழ் நன்கொடை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ள போதும் சுமார் 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இதுவரை முறையான வழிகாட்டல் கோயையொன்றை தயாரிக் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023<br>2022<br>2021 | நன்கொடை வழங்குவது தொடர்பான கிரயத்தை குறைப்பதற்கும் நன்கொடை வழங்கும் செயல்முறையானது கூட்டுத்தாபனத்தின் விற்பளை மேம்படுத்தலிற்கு காரணமாகும் வகையில் மிகவும் வெளிப்படையான முறையில் செயல்படுத்தப்படல் வேண்டும். அதற்காக வழிகாடல் கொவையொன்றை விரைவாக தயாரித்து அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முகாமையாளர் (விற்பனை) இனால் நன்கொடை வழங்குவதற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக அனுப்பியுள்ளதுடன், பணிப்பாளர் சபை 2019.07.08 திகதிய தீர்மானத்தின் பிரகாரம் தற்போது நன்கொடைகளை வழங்கி வருகின்றதென. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் நன்கொடை வழங்குவதற்காக கூட்டுத்தாபன விற்பனை மேம்படுத்தலிற்கு காரணமாகும் வயில் வெளிப்படை தன்மையான முறையொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 18 | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனை மதிப்பீடு ரூபா 1,700,000,000 ஆனதுடன் உண்மையான விற்பனை ரூபா 1,215,283,637 ஆனது. இவற்றில் ரூபா 770,881,496 அதாவது 63 சதவீதமான தொகையும் பொதுத் துறையிலிருந்து பெறப்பட்டு இருந்ததுடன் தனியார் துறையிலிருந்து | 2023 | தனியார் துறை மற்றும் பொதுத்துறையில் விற்பனை வருமானத்தினை அதிகரித்துக் கொள்ள சந்தையின் தேவைகளை சரியாக இனங்காணவும் புதிய விளம்பரம் | கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மொத்த விற்பனை வருமான மதிப்பீடு முந்தைய ஆண்டு ஆகஸ்ட் மாதம் தயாரிக்கப்படுவதாக மற்றும் அதன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படுவதென. இது எதிர்வரும் ஆண்டு தொடர்பாக பல சந்தர்பங்களில் (03 | தனியார் துறையின் விற்பனையை பயன்படுத்துவதனை இலக்கு வைத்து திட்டமிடலுடன் புதிய சந்தைப்படுத்தல் உபாயங்களை அறிமுகம் செய்ய மற்றும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கிடைத்திருந்த அளவு ரூபா 444,402,141 அதாவது 37 சதவீதமானது. சந்தையின் தேவைகளை சரியாக இனங்காயாமை, புதிய விளம்பரம் மற்றும் விற்பனை மேம்படுத்தல் உத்தி முறைகளைப் பயன்படுத்தாமை, தன்னிச்சையான கிடைக்கும் பொதுத் துறையில் கேள்வியின் பக்கம் அதிக அதிக நாட்டம் காட்டுவது தனியார் துறையில் விற்பனை குறைவதற்கு காரணமாக இருந்தன. | | மற்றும் விற்பனை மேம்படுத்தல் உத்தி முறைகளைப் பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சந்தர்பங்களில்) விலை அதிகரிப்பு காரணமாக் விற்பனையில் குறைவொன்றும் காணப்பட்டதென. புதிய விளம்பரம் மற்றும் விற்பனை மேம்படுத்தல் முறையாக டிஜிட்டல் ஊடகத்தினை பயன்படுத்தி விளம்பரம் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை 2024 ஆண்டில் மேற்கொண்டு வருவதென. விற்பனை மேம்படுத்தல் முறையாக சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் புதிய சிறப்பங்காடிகள், மேற்கத்திய மருந்தகங்கள், புதிய ஆயுர்வேத மருத்துவர்களுக்கு நேரடி விற்பனை செய்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளை மேம்படுத்துவதென. | போதிய விளம்பர முறைகளை பயன்படுத்த கவனம் செலுத்தி இருக்கவில்லை. |
| 19 | கூட்டுத்தாபனத்தினால் தனது சந்தைப் பங்கினை நிர்ணயிக்க கால ரீதியாக சந்தை ஆய்வொன்றை மேற்கொண்டிருக்காததுடன் போட்டி நிறுவனங்களிடையே கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கு குறைந்துள்ளதா அல்லது அதிகரித்ததா என்பதைப் பற்றிய புரிதல் இருக்கவில்லை. | 2023 | கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கினை தீர்மானிப்பதற்கு, அதனை மேம்படுத்திக் கொள்வது போன்றே புதிய வாடிக்கையாளர் தேவைகளைப் திருப்திப்படுத்தும் வகையில் சந்தைப் போக்குகளைக் இனங்காண்பதற்காக சந்தை ஆய்வொன்றை நடத்தப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் வெளி நிறுவனமொன்றிற்கு (பல்கலைக்கழகத்திற்கு) வழங்கி சந்தை ஆய்வினை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதென. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் போதிய சந்தை ஆய்வொன்றை மேற்கொண்டு இருக்கவில்லை. |
| 20 | கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட உற்பத்தித் திட்டம் மற்றும் சந்தைப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கூட்டுத்தாபனத்தின் | 2023 | கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவிலும், செயல்முறைகளின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு | உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான வருடாந்த திட்டங்களை தயாரித்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென. இது தொடர்பாக மாதாந்தம் பணிப்பாளர் | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொறு பிரிவுகளினதும் யெற்பாடுகளி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பல்வேறு பிரிவுகளின் செயல்பாடுகளின் பணிகளை மதிப்பிடுவதற்கு செயலாற்றுகை குறிகாட்டிகளை நிறுவி அப் பணிகளின் செயலாற்றுகையை மீளாய்வு செய்திருக்கவில்லை. | | செயலாற்றுகை சுட்டிகளை நிறுவி அப் பணிகளின் செயலாற்றுகை யை மீளாய்வு செய்ய வேண்டும். | சபையின் மீளாய்வு அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதுடன் முகாமைத்துவ கூட்டங்களில் மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ன் செயலாற்றுகயை அளப்பதற்கு மற்றும் மதிப்பிடுவதற்கு செயலாற்றுகை சுட்டிகள் நிறுவப்பட்டு இருக்கவில்லை. |
| 21 | கூட்டுத்தாபனத்தின் அன்றாட செயல்பாடுகளை நடாத்திச் செல்லும் போது காசுப்பாய்ச்சல்களினை நடைமுறை சாத்தியமாக மற்றும் விவேகத்துடன் முகாமைத்துவம் செய்து உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொளளாமல் மீளாய்வாண்டில் முதிர்வடைய முன்னர் ரூபா 84,542,736 தொகையான 03 நிலையான வைப்புக்கள் மீள பெறப்பட்டதன் காரணமாக ரூபா 2,506,031 வைப்பு வட்டி வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கப்பட்டது. | 2023 | கூட்டுத்தாபனத்தின் அன்றாட செயல்பாடுகளை நடாத்திச் செல்லும் போது காசுப்பாய்ச்சல்களினை நடைமுறை சாத்தியமாக மற்றும் விவேகத்துடன் முகாமைத்துவம் செய்து கொள்ளப்படல் வேண்டும். | அத்தியவசிய மூலப்பொருள் இறக்குமதி செய்வதற்காக முதிர்வு அடைவதற்கு முன்பே இந்த 3 நிலையான வைப்புத் தொகைகள் கூட்டுத்தாபனத்தின் நடைமுறை கணக்குகளுக்கு மீள பெறப்பட்டது என. | காசுப்பாய்ச்சல்களினை நடைமுறை சாத்தியமாக மற்றும் விவேகத்துடன் முகாமைத்துவம் செய்ய உரிய முறையினை ஸ்தாபித்து இருக்கவில்லை. |
| 22 | 05 ஆண்டுகளுக்கு முன்பிருந்து நிலயைாகவுள்ள ரூபா 2,510,687 தொகையான 17 கடன்படுனர் மீதிகளின் அடிப்படையில் மீளாய்வாண்டில் போதிய அறவிடமுடியாக் கடன் ஏற்பாட்டிற்காக ரூபா 2,507,072 தொகை ஒதுக்கப்பட்ட போதும் அந்த கடன்படுனரிடமிருந்து வரவேண்டிய பணத்தை அறவிட முறையான மற்றும் போதுமான | 2023 | கடன்படுனர்களிடம் இருந்து பெற வேண்டிய தொகையினை மீள் அறவீடு செய்வதற்கு முறையான மற்றும் போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கணக்காய்வு ஐயவினாவுடன் உடன்படுவதாக மற்றும் அறவிடமுடியா கடன் ஏற்பாட்டிற்காக ரூபா 2,507,072 தொகையொன்று ஒதுக்கப்பட்டதென. இந்த கடன்படனர் மீதிகள் 05 வருடங்களுக்கு முன்னரிலிருந்து நிலவி வருகின்றதால் போதிய தகவல்கள் இல்லையென. இது | இது தொடர்பாக் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | | | தொடர்பாக் மேலதிக நடவடிக்கைகள் விற்பனை பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுமென. | |
| 23 | 2017, 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட மூலதன மானியங்கள் ரூபா 97,000,000 இலிருந்து ரூபா 26,149,834 அல்லது 27 சதவீதமான தொகை வங்கிக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டு 2024 ஏப்ரல் 30 வரையிலும் பயன்படுத்தப்படவில்லை. | 2023 | கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றி நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடிய அத்தியாவசிய மற்றும் முன்னோடிக் கருத்திட்டங்களை மட்டுமே திட்டமிடப்பட்டு அந்த திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு திறைசேரியிலிருந்து இருந்து தேவையான ஒதுக்கீடுகள் மாத்திரம் பெறப்படல் வேண்டும். எஞ்சியுள்ள மூலதன மானியங்களிற்கு உரிய கருத்திட்டங்களை மீளாய்வு செய்து அத்தியவசிய பணிகளை விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | பத்திரகொடையில் அமைந்துள்ள புதிய தொழிற்சாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சுவையூட்டும் மருந்து உற்பத்திச்சாலை தொடர்பாக மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட மூலதன ஒதுக்கீடு ரூபா 31,149,834 தொகை வங்கிக் கணக்கில் வைக்கப்பட்டிருந்ததென. அதில் மின் பிறப்பாக்கி கொள்வனவுக்காக பெறப்பட்ட ரூபா 05 மில்லியன் ஏற்பாடு தற்போது பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏனைய ஏற்பாடுகளை எதிர்காலத்தில் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | 5 மில்லியன் ஏற்பாட்டை பயன்படுத்தி மின் பிறப்பாக்கி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட போதும் ஏனைய கருத்திட்டங்களை 2024 ஒக்டோபர் 15 திகதி வரை நிறைவு செய்ய்படவில்லை. |
| 24 | நோயாளிகளின் சுவை மருந்து தேவைப்பாட்டினை நிறைவேற்றும் மற்றும் நோயற்ற சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்கில் ரூபா 45,725,759 மதிப்பீட்டு கிரயத்துடன் சுவை மருந்து | 2023, 2022, 2021 | நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்துள்ளதால் கருத்திட்டத்தின் | கூட்டுத்தாபன பத்திரகொடவில் உள்ள புதிய தொழிற்சாலை வளாகத்தில் சுவையூட்டும் மருந்து உற்பத்தி தொடர்பான | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் நிர்மாணத்தை மீள் ஆரம்பித்து இருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| உற்பத்திச்சாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டம் ரூபா 37,000,000 திறைசேரி நிதி ஏற்பாட்டின் மீது 2018 ஆகஸ்ட் 25 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2020 சனவரி 02 ஆந் திகதி வரை ரூபா 12,144,400 செலவு செய்து நிர்மாண வேலைகளில் 30 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருநத போதும் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பலவீனத்தின் காரணமாக அத்திகதியிலிருந்து நிர்மாண வேலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த போதிலும் உரிய நிர்மாண வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. அதற்கிணங்க அக் கருத்திட்டத்திற்காக அதுவரை செய்யப்பட்ட செலவுகள் சிக்கனமற்றதாக மாறியிருந்ததுடன் ஒப்பந்தக் கிரயம் ரூபா 58,940,280 வரை ரூபா 25,431,163 ஆல் அதாவது 75.89 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. | மிகுதி நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பித்து கருத்திட்டத்தை பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக பெறுகைகள் ஒப்படைக்கப்பட்டு அதன் நிர்மாணப் பணிகள் 2019 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் பிரச்சினைக்குரிய நிலைமை காரணமாக நிரமாணப் பணிகள் தாமதித்துள்ளதென. இந்த நிர்மாணம் தொடர்பான மதியுரை நடவடிக்கைகளை வழங்கும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் பரிந்துரை மற்றும் தலையீட்டின் மீது நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன் Covid-19 தொற்றுநோய் காரணமாக நிர்மாணப் பணிகள் மீண்டும் தடைப்பட்டுள்ளதுடன் மேலும் பல தடவைகளில் கலந்துரையாடிய போதிலும், நிர்மாண பணிகள் இது வரையிலும் ஆரம்பிக்கபப்படவில்லை என. இது தொடர்பாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (பொறியியல்) அவர்களின் தலையீட்டின் கீழ் கலந்துரையாடி மேற்கொள்ளப்பட்ட சேவை பிரிவுகள் தொடர்பான மதிப்பீடு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளதுடன் அதற்கேற்ப மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படுமென. | ல. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | 2018 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 09 சேவைத் தரங்களின் கீழ் கூட்டுத்தாபனத்திற்காக திருத்திய ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் சேவையில் நிரந்தரமாக்கும் போது மூன்றாம் தரப்பினர்களினூடாக தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டனர் என்பதற்கு தனிப்பட்ட கோவைக்கான ஒரு பிரதியுடன் ஒரு கடிததத்தினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023, 2022. 2021 | உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் சேவையில் நிரந்தரமாக்கப் படும் போது மூன்றாம் தரப்பினரினூடாக தகமைகளை உறுதிப்படுத்து வதற்கு மற்றும் தனிப்பட்ட கோவைக்கான ஒரு பிரதியுடன் ஒரு கடிதத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவுடன் உடன்படுவதென மற்றும் பரீட்சை திணைக்களம் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் ஊடாக தகைமைகளை உறுதிப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருவதுடன் 2024 ஆம் ஆண்டு முதல் உறுதிப்படுத்தல் கடிதங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென. | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை, நேர்முகப் பரீட்சை முறைகேடுகள், வெளிப்படைத் தன்மையற்ற செயற்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக மனிதவள செயற்பாடுகள் பலவீன நிலையில் காணப்படுகின்றன. |
| 26 | சுதேச மருத்தவ அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றில் இருந்து கிடைக்கப் பெற்ற 04 வாகனங்களை இதுவரை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 | கூட்டுத்தாபனத்தின் ஓட்ட நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களை கையகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | தற்போது PA-7155, PA-7161, KP-4876 மற்றும் LC -9184 ஆகிய இலக்க வாகனங்கள் மாத்திரம் கூட்டுத்தாபனத்தின் ஓட்ட நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றதென. அந்த வாகனங்களை கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பயன்பாட்டில் இல்லாத வாகனங்களை திருப்பி அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதென. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் நிலைமை மாற்றமடைந்து இருக்கவில்லை. |
| 27 | நிதிப் பிரமாணம் 1646 இன் பிரகாரம் | 2023 | மாதாந்திர பொழிப்பின் | கணக்காய்வு ஐய வினாவுடன் | நிதிப் பிரமாணம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வாகனங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட மாதத்தைத் தொடர்ந்து வரும் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஓட்டம் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதியுடன் அந்த அந்த மாதத்தின் தினசரி ஓட்டக் குறிப்கை தங்களின் திணைக்களத் தலைவர் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புதல் வேண்டிய போதும், கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | | மூலப் பிரதிகளுடன் அந்த அந்த மாதத்தின் தினசரி ஓட்டக் குறிப்புக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உடன்படுவதெனவும் 2024 ஜுன் மாதம் முதல் இதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 28 | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சிநிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனம் தமது விடயப்பரப்பிற்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா என்பது தொடர்பாக போதியளவு புரிந்துணர்வுடன் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் நிறுவனத்தின் செயற்பாட்டுடன் தொடர்புபட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டிய நிலைகளையும் இலக்குகளின் | 2023 | நிலைபேறான அபிவிருத்திக் இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பான இலக்குகள், குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு மற்றும் செயல் முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இலக்கம் 2356121 – 2023.11.01 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நோக்கெல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதால் எதர் காலப்பகுதிக்கான திட்டத்தினை தயாரிக்கும் போது அது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதென. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் நிலைபேறான அபிவிருத்திக் இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பான இலக்குகள், குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு மற்றும் செயல் முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அடிப்படையில் அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் போதியளவில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 29 | கூட்டுத்தாபனத்தின் மருந்துப் பூங்காக்களிலிருந்து கிடைக்கின்ற உலர்ந்த மருந்து மூலப் பொருட்களின் கிரயத்தை இனங்காண முறையான ஒரு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அதற்கிணங்க மீளாய்வாண்டில் மருந்து பூங்காக்களிலிருந்து கிடைத்திருந்த உலர்ந்த 4,665 கிலோகிராம் மருந்து மூலப் பொருட்கள் ரூபா 1 வீதமும் 21,423 கிலோகிராம் மருந்து பொருட்கள் காணப்படுகின்ற சந்தை விலையின் கீழ் பெறுமதியிடப்பட்டு இருந்தன. | 2022 | மருந்து பூங்காக்களிலி ருந்து வழங்கப்படுகின் ற பச்சை மற்றும் உலர்ந்த மருந்து மூலப்பொருட்க ளுக்கு கிரயத்தினை இனங்காண்பத ற்காக தொடர்ச்சியாக பின்பற்றக் கூடிய முறையான ஒரு நடைமுறையை அறிமுகப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மருந்து பூங்காக்களிலிருந்து உற்பத்திச்சாலைக்கு பெற்றுக் கொள்ளப்படுகின்ற மூலப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள சான்றுபடுத்திய விலைகளின் பிரகாரம் மற்றும் அவ்வாறு சான்றுபடுத்திய விலை நிர்ணயிக்கப்படாத மூலப் பொருட்களை காலத்திற்குப் பொருத்தமாக விலையிடுவதுடன் கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென. | 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் இதற்காக முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறை அறிமுகம் செய்யப்பட்டு இருக்கவில்லை. |
| 30 | விற்பனைப் பிரிவின் விற்பனை அறிக்கைகளுடன் நிதிப்பிரிவின் விற்பனை அறிக்கைகளை ஒப்பீடு செய்த போது, கைக்காசுக்கான விற்பனை ரூபா 732,947 மற்றும் கடனுக்கான விற்பனை ரூபா 14,004,863 குறைத்தும் நடமாடும் விற்பனை ரூபா 1,070,304 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானம் ரூபா 13,666,506 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் | 2022 | விற்பனை வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்ப டுதல் வேண்டும். நாளதுவரையா ன விற்பனைத் தகவல்களைத் தயாரிப்பதற்கா க விற்பனைப் பிரிவிற்கும் கணக்குப் பிரிவிற்குமிடை யே தொடர்ச்சியான உள்ளக தொடர்புகள் | ஐயவினாவுடன் இணங்குவதாக மற்றும் கணக்குப் பிரிவினால் மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு விற்பனை அறிக்கைகள் பேணப்படுவதுடன் விற்பனைப் பிரிவினால் அவர்களின் பயன்பாட்டிற்காக மூல ஆவணங்கள் இன்றி விற்பனை அறிக்கைகள் பேணப்படுகின்றன. | விற்பனை பிரிவின் விற்பனை அறிக்கைகளு டன் நிதிப் பிரிவின் விற்பனை அறிக்கையை இணக்கம் செய்து வித்தியாசம் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் விற்பனை நிலையங்களி ல் தவறுகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | மற்றும் தொடர்ச்சியான இணக்கப்பாட்டு நடைமுறைகளை பேணிச் செல்வதற்காக பொருத்தமான ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்துதல் வேண்டும். | | மற்றும் மோசடிகள் அதிகரித்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. |
| 31 | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த உற்பத்தி திட்டத்திற்கு இணங்க, அரிஸ்த, ஆஸவ, எண்ணை, இக்வாத, சிரப் என்பவைகளை உள்ளடக்கிய திரவ மருந்து வகைகளின் திட்டமிட்ட வருடாந்த மருந்து உற்பத்தி 627,712 லீற்றர்கள் மற்றும் சூர்ண, குகுல், கல்க, லேப, லேஹ, மோதக, ரஸ, வடீ என்பவைகளை உள்ளடக்கிய மருந்துப் பொருட்களின் திட்டமிட்ட வருடாந்த மருந்து உற்பத்தி 151,179 கிலோ கிராம்களை உற்பத்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும், உள்ளவாறான உற்பத்தி முறையே திரவவகைகளில் 389,750 லீற்றர்களும் மருந்துப் பொருட்களில் 70,799 கிலோ கிராம்களுமாகும். அதற்கிணங்க வருடாந்த எதிர்பார்த்த உற்பத்தி முறையே திரவ வகைகளில் 237,962 லீற்றர்களையும் அதாவது 38 சதவீதத்தினையும் மற்றும் மருந்துப் பொருட்களில் 80,380 கிலோ கிராம்களையும் அதாவது 53 சதவீதத்தினையும் அடைந்து கொள்வதற்கு | 2022 | முன்னைய ஆண்டுகளின் இயலளவு மற்றும் காணப்படுகின்ற வளங்களின் அளவு என்பவற்றை கவனத்தில் கொண்டு அடுத்துவரும் ஆண்டின் உற்பத்தி திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் உரிய உற்பத்தி இலக்கினை வெற்றி பெறச் செய்வதற்காக போதியளவு செயலாற்றல் முன்னேற்றத்தினை பேணுதல் வேண்டும். | 2022 ஆம் ஆண்டின் வருடாந்த திட்டமிட்ட உற்பத்தியானது தொழிற்சாலை கிரய விலையின் பிரகாரம் ரூபா 683,458,641 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான வருடாந்த உற்பத்தி கிரயம் ரூபா 495,531,635 ஆகுமென, அதற்கிணங்க வருடாந்த திட்டமிட்ட உற்த்தியில் ரூபா 187,927,006 குறைவினை சுட்டிக்காட்டியிருந்த போதிலும் வருடாந்த திட்டமிட்ட உற்பத்தியில் 72.5 சதவீத அளவான இலக்கினை அடைந்து கொள்வதற்கு முடியுமாக இருந்தது. 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட கலவரமான நிலைமையினை முன்னிட்டு உற்பத்திக் கிரயம் அதிகரித்தல், மூலப்பொருட்கள் தட்டுப்பாடு, போக்குவரத்து சிக்கல், செயற்படு மூலதன பிரச்சினை, ஊழியர் வருகை மட்டுப்படுத்தப்படல் போன்ற பல விடயங்கள் பிரதானமாக இதற்கு | வருடாந்த உற்பத்தி திட்டம் மற்றும் காலாண்டு உற்பத்தி அறிக்கைகளிற்கு இடையே உள்ளவாறான தகவல்களிற்கு இடையேயும் வித்தியாசம் காணப்படுகின்றது. அதன் பிரகாரம் 2024 ஒக்டோபர் 15 திகதி வரையும் திட்டமிட்ட உற்பத்தி மற்றும் உள்ளவாறான உற்பத்தியை இணக்கம் செய்து சரியான முகாமைத்துவ தீர்மானம் எடுப்பதற்கு இயலுமை இல்லையென அவதானிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முடியாதிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் 12 உற்பத்திப் பொருட்களுக்கான 2135 உற்பத்தி வேலை அட்டைகளுக்கு திட்டமிடப்பட்டிருந்தும் பூர்த்திசெய்த உள்ளபடியான வேலை அட்டைகளின் அளவு 1441 ஆக இருந்ததனால் 694 வேலை அட்டைகளின் அளவு அதாவது 33 சதவீதம், பிரதான உற்பத்திச்சாலையின் 04 புதிய உற்பத்திப் பொருட்களுக்காக 215 உற்பத்தி வேலை அட்டைகள் திட்டமிடப்பட்டிருந்தும், பூர்த்திசெய்த உள்ளபடியான வேலை அட்டைகளின் அளவு 127 ஆக இருந்ததனால் 88 வேலை அட்டைகளின் அளவு அதாவது 41 சதவீதம் மற்றும் புதிய உற்பத்திச்சாலையின் 12 புதிய உற்பத்திப் பொருட்களுக்காக 1228 வேலை அட்டைகள் திட்டமிடப்பட்டிருந்தும், பூர்த்திசெய்த உள்ளபடியான வேலைத்தாள்களின் அளவு 423 ஆக இருந்ததனால் 805 வேலை அட்டைகளின் அளவு அதாவது 66 சதவீதத்தினை பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தமையானது எதிர்பார்த்த உற்பத்தி இலக்கினை அடைந்து கொள்ளாமைக்கு பிரதான காரணமாக இருந்தன. | | | தாக்கமளித்திருந்ததென . | |
| 32 | 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வருடாந்த சுற்றுப் பயணத்திற்காக ரூபா 1,800,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், 2020 மற்றும் 2021 ஆம் | 2022 | ஏதாவது நிதி ஆண்டின் செலவுக்காக பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி | ஒவ்வொரு வருடமும் பாதீட்டில் மனித வளங்கள் பிரிவிற்கு வருடாந்த சுற்றுப் பயணத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. நாட்டில் காணப்பட்ட | பந்திக்கான குறைகளை இனங்காண அல்லது இவ்வாறான குறைகளை எதிர்காலத்தில் தவிர்த்துக் |

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுகளுக்கான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருப்பதாக பிழையான விடயத்தினை காட்டியதனை அடிப்படையாகக் கொண்டு, 2022 பெப்ரவரி 10 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர்கள் சபையின் 14143 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டிற்கான சுற்றுலா பயணத்திற்கு ரூபா 4,500,000 செலவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 20,152,134 நட்டமும் ரூபா 17,728,950 தேறிய நட்டமும் அடைந்துகொள்ளப்பட்டிருந் தும் அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக சிறந்த கண்காணிப்பும் ஒழுக்கமும் பேணப்பட வேண்டிய போதிலும் அப்பயணத்திற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டு எல்லையையும் 147 சதவீதத்தினால் மிகைத்து ரூபா 4,442,861 தொகை கூட்டுத்தாபனத்தின் நிதியிலிருந்து செலவு செய்யும் போது அதன் பாதகம் தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை . மேலும் இதற்காக செலவு செய்வதற்காக கூட்டுத்தாபனத்திற்கு மருந்துகள், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் வழங்குனரிடமிருந்து பணமும் பொருட்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன என சான்றுகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பணம் எதுவும் சுற்றுலா | ஏற்பாடானது அடுத்துவரும் ஆண்டிற்காக பயன்படுத்த முடியாது. செயற்பாட்டு நட்டம் அடைந்துகொள்ளப்பட்ட நிலைமையை கவனத்தில் கொண்டு செலவுகளைக் கட்டுப்படுத்துவ தற்காக சிறந்த கண்காணிப்பினையும் ஒழுக்கத்தையம் நிதி ஒழுங்கீனங்களையும் பேணுதல் வேண்டும். வழங்குனர்களிடமிருந்து பணமும் பொருட்களும் பெற்றுக்கொள்ளப்படவில்லை எனவும் ஒழுங்கீனங்களும் மோசடிகளும் இடம்பெறவில்லை எனவும் உறுதிப்படுத்துவதற்காக முறையான விசாரணைகளை நடாத்தி பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | Covid 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் சுற்றுப்பயணத்தினை ஒழுங்குபடுத்துவதற்கு முடியாதிருந்தது. அதற்கிணங்க 2022 ஆம் ஆண்டின் போது கடந்த ஆண்டுகளில் பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி எற்பாட்டினை தொடர்புபடுத்தி சுற்றுப் பயணம் ஒழுங்குபடுத்தப்பட்டது. | கொள்ள பணிப்பாளர் சபையினால் போதிய கவனம் செலுத்தியிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பயணத்திற்கு செலவு செய்யப்பட்டதுளன அல்லது ஒழுங்கீனங்கள் அல்லது மோசடிகள் இடம்பெறவில்லை என உறுதிப்படுத்துகின்ற எழுத்துமூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | | | |
| 33 | சர்வதேச மருத்துவ வலயத்தினை உருவாக்குவது தொடர்பான பெறுகை நடவடிக்கை மீதான செயற்திட்ட திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக விலைமனுக்களைக் கோரும் போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஆலோசகர்களைத் தெரிவுசெய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான வழிகாட்டிக் கோவையின் 3.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக்கு தொடர்புபடுத்தும் நிபந்தனைகள் (Terms of Reference) (TOR) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 3.14.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஆலோசனை சேவைகளின் மொத்த கிரயம் ரூபா 10 மில்லியன் மிகைக்காதிருக்குமாயின் அரசாங்க நிறுவனத்திற்கு ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு முடியுமாக இருந்தும் தலைவரினால் பெறுகைச் சபையின் மேல் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கட்டிடக்கலை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபருக்கு மொத்த நிர்மாணக் கிரயத்தில் 5 சதவீத்தினை செலுத்துவதற்கு உட்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | 2022 | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஆலோசகர்களைத் தெரிவுசெய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது நாவின்ன ஆயுர்வேத வலயத்தை பொது மக்களுக்காக திறக்கப்பட்ட ஒரு வலயமாக கவர்ச்சிகரமாக தயார்படுத்துவது சம்பந்தமாக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் வேண்டிக் கொள்ளபப்பட்டது. Covid 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் அந்த நிறுவனம் முகங்கொடுத்துள்ள பல்வேறு விடயங்களைக் காட்டி எங்களால் வேண்டிக் கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தாமதிக்கப்பட்டதனால் தொழில்சார் தகைமைகளைக் கொண்ட நிறுவனங்களிடமிருந்தும் நபர்களிடமிருந்தும் முறைப்படியாக சேவைக் கட்டணத்தை விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து திட்டத்தினையும் மதிப்பீட்டினையும் தயாரிப்பதற்கு அந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | சுகாதார அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழுவினால் இது தொடர்பாக பரீட்சித்து அறிக்கையிட அமைச்சின் புலனாய்வு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2024 ஒக்டோபர் 15 வரையும் எவ்வித முன்னேற்றமும் அறிக்கையிடப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 34 | ஏதாவது ஒரு கேள்வி மனுவின் செல்லுபடியாகும் தன்மை மற்றும் பதிலளிக்கும் தன்மையை ஏற்றுக்கொள்வதற்கு தேவைப்படுவதானது நிபந்தகைகள் கேள்விகோரும் ஆவணங்களில் தெளிவாக நிர்ணயிப்பதற்கு தொழில்நுட்ப ரீதியான மற்றும் நிதி ரீதியான பிரேரணைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் சர்வதேச மருத்துவ வலயத்திற்காக ஆலோசனை சேவைகளை வழங்ககின்ற 11 நிறுவனங்களுக்கு விலைமனுக்களை கோரும் அறிவித்தல் மாத்திரம் அனுப்பப்பட்டு விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கிணங்க 04 ஆலோசனை நிறுவனங்கள் கேள்வி மனுக்களை சமர்ப்பித்திருந்ததுடன் மேற்கூறிய வழிகாட்டிக் கோவையின் 6.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் வெற்றியடைந்த கேள்வி மனுக்களை தெரிவுசெய்வதற்காக நியாயமான ஒப்பீடுகள் மற்றும் நடைமுறைகளை கேள்விதாரர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தமது விருப்பிற்கு இணங்க தீர்மானித்த 05 கேள்வி மதிப்பீட்டு கருதுகோளின் பிரகாரம் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்கிணங்க பெறுகை நடைமுறைகளின் மூலம் சான்றுபடுத்த வேண்டிய மதிப்பீட்டின் மற்றும் தெரிவு செய்யும் நடைமுறையின் | 2022 | பெறுகை நடைமுறைகளின் மூலம் மதிப்பீடு செய்தல் மற்றும் தெரிவுசெய்தல் நடைமுறையின் வெளிப்படைதன்மையும் சரியான தன்மையும் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும். | 11 ஆலோசனை நிறுவனங்களால் சேவைக்கட்டணங்களைக் கோரி சமர்பித்த 04 விலைமனுக்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த விலைமனுக்களை கோரும் போது கருதுகோல் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்ட செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் உரிய அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக தகவல்களை விசாரித்த நிறுவனத்திற்கு அவை சம்பந்தமான தகவல்களும் நிலையப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. | சுகாதார அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழுவினால் இது தொடர்பாக பரீட்சித்து அறிக்கையிட அமைச்சின் புலனாய்வு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2024 ஒக்டோபர் 15 வரையும் எவ்வித முன்னேற்றமும் அறிக்கையிடப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வெளிப்படைத் தன்மையும் சரியான தன்மையும் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 35 | ரூபா 100 மில்லியன் தொகையான சர்வதேச மருத்துவ வலயத்திற்குரிய மொத்த செயற்திட்ட கிரயத்தில் ரூபா 40 மில்லியன் திறைசேரி நிதி ஏற்பாட்டின் மூலமும் ரூபா 60 மில்லியன் கூட்டுத்தாபனத்தினால் செலவு செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்த போதும், அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் மற்றும் ஏற்பாடு வழங்கி இருக்காததுடன் கூட்டுத்தாபன பங்களிப்புக்காகவும் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை வேலையை ஆரம்பிப்பதற்கு எந்த ஆயத்தமும் இல்லாதிருந்த இந்த செயற்திட்டத்திற்காக மொத்த கிரய மதிப்பீடேனும் தயாரிக்காது அரசாங்கத்தின் ஆலோசனைகளை தெரிவுசெய்யும் மற்றும் சேவையில் ஈடுபடுத்தும் கோவையின் வழிகாட்களுக்கு முரணாக முறையற்ற வகையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட திட்டமிடல் தொழில்நுட்பவியலாளருக்கு ரூபா 02 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | 2022 | அங்கீகாரம் மற்றும் நிதி ஏற்பாடு இல்லாது செலவு செய்வது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேசிய திட்ட அமுலாக்கல் திணைக்களத்திற்கு செயற்திட்டத்தினை சமர்ப்பிக்கும் படிவத்திற்கு இணங்க செயற்திட்ட அறிக்கையை தயாரித்து இராஜாங்க அமைச்சினால் சிபாரிசு செய்து பொதுத்திறைசேரிக்கு அனுப்பிவைத்து அது தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்த போதும் உரிய நிதி கிடைக்கவில்லை. நிர்மாணக் கிரயம் ரூபா 100 மில்லியன் மற்றும் ஏனைய கிரயங்களையும் உள்ளடக்கி 2023 ஆம் ஆண்டிற்கான மூலதன பாதீட்டு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அங்கீகாரம் அல்லது நிதி ஏற்பாடு வழங்கப்படவில்லை. 2024 ஆம் ஆண்டிற்கான மூலதன பாதீட்டு பிரேரணையின் கீழும் இச்செயற்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுகாதார அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழுவினால் இது தொடர்பாக பரீட்சித்து அறிக்கையிட அமைச்சின் புலனாய்வு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2024 ஒக்டோபர் 15 வரையும் எவ்வித முன்னேற்றமும் அறிக்கையிடப்படவில்லை. |
| 22 | சபைக்குரிய “நவ திகந்த” சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து ரூபா 5,000,000 நன்கொடைத் தொகையொன்று 2021 ஆண்டின் போது கிடைத்திருந்தது. கட்டிடத்தின் நிர்மாண வேலைக்காக ரூபா 8,948,612 இற்கான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், நிர்மாண வேலைகள் இலங்கை கடற்படையின் உழைப்பு பங்களிப்புடன் மேற்கொள்வதற்காக ரூபா 3,132,014 தொகை கழித்து ரூபா 5,816,589 இற்கான கிரய மதிப்பீடொன்று | 2022 | நன்கொடையாக கிடைத்த பணம் சிக்கனமாக மற்றும் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேலைத்தளத்தில் அலுவல்கள் மேற்கொள்ளும் போது ஏதேனும், சேமிப்புக்கள் மற்றும் பற்றாக்குறைகள் எதிர்பார்க்க முடியும். எனினும், இதனை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக இவ்வாறான உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் ருழேனுஊ கட்டிடத்திற்காக வழங்குவதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | நன்கொடைகளாகப் கிடைக்கப்பெற்ற பணத்தை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

தயாரிக்கப்பட்டிருந்தது. நிர்மாண வேலைக்கு தேவையான பண்டங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,598,600 தொகை செலவிடப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. 2022 மார்ச் 25 திகதி பௌதீக ரீதியாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை குழுவின் அறிக்கையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களில் ரூபா 1,310,475 தொகை பெறுமதியான பண்டங்கள் வேலைத்தளத்தில் மீதியாக காணப்பட்டது. அதன் பிரகாரம், நன்கொடையாக கிடைக்கப்பட்டிருந்த பணத்தினை சிக்கனமாக மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், இந்தக் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தமையால் பண்ட உதவியாக கிடைத்திருந்த 100 சீமெந்துப் பைகள் UNODC உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடம் ஒன்றுக்கு வழங்குவதற்கு சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | 2007 இன் 54 இலக்க ஔடதங்களுக்கு அடிமையாகியுள்ள ஆட்கள் (சிகிச்சை புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தினை திருத்துவதற்காக 2022 ஜனவரி 24 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அமைச்சரவை பத்திரம் அமப/21/2279/303 /176 இற்கு இணங்க சட்டத்திற்கு தேவையான திருத்த அலுவல்கள் பூர்த்தி செய்வதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது. | 2022 | சட்டத்திற்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | சட்ட வரைஞரினால் இறுதி திருத்த வரைவு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது டன், ஆங்கில மொழி பெயர்ப்புடன் 2023 மே 02 திகதி நீதி அமைச்சு மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | இது சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| 24 | 2007 இன் 54 இலக்க ஔடதங்களுக்கு அடிமையாகியுள்ள ஆட்களுக்கு (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தின் பிரிவு 07 இற்கு இணங்க சட்டத்துறையில் விஷேடத்துவமுள்ள ஆட்களிடையே அல்லது அபாயகர ஔதடங்களுக்கு அடிமையாகிய மற்றும் தொடர்புடைய உடல் ரீதியான மற்றும் சமூக சிக்கல் ஆகியவை தொடர்பான அனுபவம் மற்றும் அறிவுடைய நபர்களிடையே பத்து பேருக்கு மேற்படாத நபர்கள் எண்ணிக்கை அடங்கிய கண்காணிப்புச் சபையொன்று நியமனம் செய்யப்பட்டிருக்கவி ல்லை. | 2022 | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கண்காணிப்பு சபை நியமனம் செய்தல் மற்றும் செயற்படுத்துதல் நடைமுறைச் சாத்தியமாக சிக்கல் தன்மையுடன் காணப்படுவதனால் திருத்திய சட்ட வரைவு தயாரிக்கும் போது கண்காணிப்புச் சபைக்குப் பதிலாக மதிப்பீட்டுச் சபையொன்று நியமனம் செய்ய வேண்டிய முறை தொடர்பாக உட்படுத்தப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | 2007 இன் 54 இலக்க ஔடதங்களுக்கு அடிமையாகியுள்ள நபர்களுக்கு (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தின் பிரிவு 4 (02) மற்றும் (03) இற்கு இணங்க அதிகாரம் அழிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு நியாயமான நேரங்களில் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள அல்லது பரிந்துரைக்கப்பட்ட ஏதேனும் சிகிச்சை நிலையமொன்றிற்கு உட்படுத்தப்பட்டு தேவையெனக் கணிக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ள முடியுமாக இருந்த போதிலும் 26 நிறுவனங்களின் 2022 ஆண்டின் போது 16 நிலையங்கள் மாத்திரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட கால அறிக்கையின் மூலம் சிகிச்சை நிலையத்தின் வெற்றிகரத் தன்மை தொடர்பான தகவல்கள் சபையின் கவனத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | 2022 | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக 2023 மே 22 திகதிய சிரேஷ்ட பதவியணியினருக்காக நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் தடுப்பு, கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் மற்றும் வெளிச் சேவைப் பிரிவின் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு நிலையத்தின் அவதானிப்பு அலுவல்கள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டதுடன் எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான தீர்மானங்கள் எடுக்கும் வரை இந்த மாற்று முறையை பயன்படுத்தி தனியார் சிகிச்சை புனர்வாழ்வு நிலையங்களை மேற்பார்வை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | அனைத்து மையங்களும் ஆய்வு செய்யப்பட்டன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 | 2014 ஏப்ரல் 30 திகதி ரூபா 4,085,018 இற்கான குத்தகை பெறுமதிக்கு முப்பது வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த ஹோமாகம பிடிபன காணி 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கருமம் உறுதியாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்படாமையால் இந்தக் காணி ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | 2022 | காணியை ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச ஏற்பாடுகள் அல்லது பொதுமக்கள் உதவிநிதி கிடைத்தவுடன் தற்காலிகமாக அல்லது கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வெளிச்சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலோசகர்கள் ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சபையினால் குத்தகை காணி உறுதி பெற்றுக்கொள்வதற்கு தேவையான வேண்டுகோள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மேலும் இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | இது மேலும் உபயோகிக்கப்படாமல் உள்ளது. |
| 27 | 1984 இன் 11 இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சட்டத்தின் அதிகாரங்களை செயற்படுத்துவதற்காக 374 பேர்களை கொண்ட பதவியணியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணி 225 ஆக காணப்பட்டமையால் அத்திகதியில் உள்ளவாறு வெற்றிடங்களின் எண்ணிக்கை 149 ஆக இருந்தது. இதன் காரணமாக சபையின் குறிக்கோள்கள், அதிகாரங்கள் மற்றும் கருமங்களை செயற்படுத்தும் போது எதிர்பார்க்கக்கூடிய செயலாற்றல் ஒன்றினை நெருங்குவதற்கு | 2022 | முறையான ஆய்வினை மேற்கொண்ட பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை பொருத்தமான முறையில் திருத்தம் செய்தல் வேண்டும். | தற்போது அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மற்றும் நிதி அமைச்சின் தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 03/2022 நடைமுறையில் உள்ளதால் இந்த பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் உள்ளது. சபையின் அத்தியவசியமான பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2023 மே 23 திகதிய தொடர்பு இலக்கம் NDDCB/HR/0/02/-01 கொண்ட கடிதத்தின் மூலம் ஊழியர் தேவைப்பாட்டினை கணித்து வரிசை அமைச்சுக்கு கடிதம் அனுப்பபட்டது. | திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முடியாமல் இருந்தது. | | | | |
| 28 | 2022 ஆண்டிற்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் காணப்படும் 07 பிரிவுகளில் 03 பிரிவுகளில் மாத்திரம் பௌதீக முன்னேற்றம் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆய்வுப் பிரிவின் உத்தேச 06 நிகழ்ச்சித் திட்டங்களில் 03 நிகழ்ச்சித் திட்டங்களில் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்திற்கு நெருங்கிக் காணப்பட்டது. | 2022 | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விரைவாக இந்த அறிக்கை கணக்காய்வுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தற்போது பௌதீக ரீதியான செயல்முன்னேற்றம் திருப்திகரமான அளவில் உள்ளது. |
| 29 | சட்ட விரோதமாக போதைப் பொருள் உற்பத்திகளை போக்குவரத்து, கடத்தல், விற்பனை செய்தல் மற்றும் பாவனைக்கு எதிராக சட்டத்தை ஆக்கபூர்வமான வலுப்படுத்துவதற்காக தேசிய போதைப்பொருள் ஆய்வுகூடத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பௌதீக முன்னேற்றம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தரவுகளின் பிரகாரம், 2022 ஆண்டு எதுவித முன்னேற்றமும் பெற்றிருக்காத உத்தேச 08 நிகழ்ச்சித் திட்டங்களும் 10 சதவீதத்தை விட பௌதீக முன்னேற்றம் பெற்றிருக்காத | 2022 | -மேற்படி- | நிறுவனத்தினால் முறையான ஆவனங்கள் பேணப்பட்டு வராமையால் முன்னேற்றத்தை வழங்குவதற்கு முடியாமை, நிறுவனத்தின் ஒருங்கிணைப்பை மேற்கொள்ள முடியாமை, போதைப்பொருள் ஆய்வு கூடத்தில் போதியளவு அறிவியல் அதிகாரிகள் காணப்படாமை. | எதிர்பார்ததன் பிரகாரம் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உத்தேச 03 நிகழ்ச்சித் திட்டங்களும் காணப்பட்டன. | | | | |
| 30 | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு வகுப்பிற்குரிய சகல சொத்துக்களும் முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த கிரயம் ரூபா 73,583,056 தொகையான காணி மற்றும் கட்டிடங்களில் ரூபா 10,447,264 கிரயமான காணி மற்றும் கட்டிடங்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2021 திசெம்பர் 31 வரையிலும் மொத்தக் கிரயம் ரூபா 63,135,792 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் அந்த கிரயத்தில் மொத்தக் கிரயம் ரூபா 10,447,264 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் அதன் மீள்மதிப்பீட்டு பெறுமதியிலும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 2021 | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கண்டி மற்றும் நவதிகந்த நிலையங்களில் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை, காலி மற்றும் தலங்கம என்ற 02 சிகிச்சை நிலையங்களில் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றமை மற்றும் சகல சொத்துக்களும் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | இதுவரை அனைத்து மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 31 | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக | 2021 | -மேற்படி- | நடைமுறையல்லா சொத்துக்களின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் | மீள் மதிப்பீடு உடனடியாக மேற்கொள்ளப்பட்டு 2024 ஆம் ஆண்டில் கணக்கில் எடுத்துக்கொள்ளுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 195,730,952 கிரயமான சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்து சரியான இழிவுப் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 32 | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதிய நலன் பொறுப்புக்கள் கழிவு திட்டத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படாதிருந்ததுடன், அந்த பொறுப்புக்கள் ரூபா 58,433,472 ஆக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 2021 | -மேற்படி- | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | ஓய்வூதிய நன்மை பொறுப்பானது கழிவீட்டு முறையில் மதிப்பிடப்படுகிறது. |
| 33 | 08 வருடங்களாக தொங்கல் கணக்கில் ரூபா. 480,900 மீதி காணப்படுகின்றது. | 2021 | தொங்கல் கணக்கின் மீதி கூடிய விரைவில் இனங்கண்டு தீர்த்து வைக்கப்படல் வேண்டும். | சகல மூலப் பதிவேடுகளையும் பரீட்சித்து தொங்கல் கணக்கின் மீதியின் காரணத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இது மேலும் தொடர்கிறது. |
| 34 | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்கில் காணப்பட்ட வரவு மீதி ரூபா 1,782,060 தொகை 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அசைவுறாது | 2021 | முற்பண கணக்கு மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இந்த மீதியை இனங்காண்பதற்கு சபையின் நிதிப்பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முற்பண மீதியின் துல்லியத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணப்பட்டதுடன், அந்த மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | | | | |
| 35 | 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையான நபர்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், சிகிச்சை நிலையங்களின் நடவடிக்கைகள் தொடர்பாகவும், ஔடதங்களுக்கு அடிமையானவர்க ளுக்கு சிகிச்சை வழங்குதல் மற்றும் அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நிலையங்களின் வெற்றிகரத் தன்மை தொடர்பான தகவல்களை உள்ளடக்கி குறித்த கால ரீதியிலான அறிக்கை சிகிச்சை நிலையங்களின் பணிப்பபாளர்களின ால் 2019 செப்தெம்பர் 19 ஆந் திகதி முதல் NDDCB சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | 2021 | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலையங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பான அறிக்கை எதிர்காலத்தில் சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இதுவரை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில் லை. |
| 36 | இலங்கை போதைப்பொருள் பாவனையை ஒழிக்கும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒன்றிணைந்த சம்மேளனம் (SLFONGOADA) என்ற பெயரிலான அரசசார்பற்ற அமைப்பு தாபிக்கப்பட்ட | 2021 | சபையின் செலவினங்களை செய்வதற்காக மாத்திரம் திறைசேரி மானியங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். | இலங்கை போதைப்பொருள் பாவனையை ஒழிக்கும் அரச சார்பற்ற அமைப்பின் ஒன்றிணைந்த சம்மேளனம் (FONGODA) 1984 இன் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சட்டத்தின் கீழ் உப | இது சபையின் செலவுகள் அல்லாதவற்றைச் மேற்கொள்ளுவதற்கு பயன்படுத்தப்பட்டது. . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கட்டிடத்தின் வாடகையாக ரூபா 330,000 சபையினால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | | | குழுவாக 1986 இன் போது தாபிக்கப்பட்டுள்ளதுடன் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டுள்ளது. | |
| 37 | பல்கலைக்கழக மாணவர்களை உள்ளடக்கிய நிபுணர்களின் பயன்பாட்டிற்காக காணப்பட்ட சபையின் பிரதான அலுவலகத்தில் பேணிச் செல்லப்பட்ட போதைப்பொருள் தொடர்பான 2,689 புத்தகங்கள் மற்றும் முக்கியமான ஆவணங்கள், நாளிதழ்களை உள்ளடக்கிய நூலகம், பிரதான அலுவலக வளவில் தலங்கம நிலையத்திற்கு 2021 ஆகஸ்ட் மாதத்தின் போது மாற்றப்பட்டிருந்தது. 2022 ஆகஸ்ட் மாதம் வரையிலும் ஒரு வருட காலம் கடந்திருந்த போதும் கிரயம் ரூபா 1,484,156 பெறுமதியான புத்தகங்கள் பயன்படுத்தப்படாமல் தலங்கம நிலையத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. நூலகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த நூலகர் மற்றும் நூலக உதவி உத்தியோகத்தர்கள் பெறுகை பிரிவின் கடமைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். | 2021 | நூலகத்தை கூடிய விரைவில் சரியாக ஸ்தாபித்து வாசகர்களுக்காக திறக்கப்படல் வேண்டும். | தற்போது நூலகத்தை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நூலகம் மீண்டும் நிறுவப்பட்டுள்ளது. |
| 38 | கண்டி, நவத்திகந்த மற்றும் காலி சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களுக்காக ரூபா 612,000 செலவில் கொள்வனவு | 2021 | தேவையான உபகரணங்களை பெறுகைகளை விரைவுபடுத்துவதற்கு ஆகக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | CCTV கெமாரா முறைமையை செயற்படுத்துவதற்கான பெறுகை செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதும் | சிசிடிவி கேமரா முறைமை செயல்பாட்டில் இல்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த ஊஊவுஏ கமெரா முறைமை செயற்படாதிருந்த போதும் அதனை பழுதுபார்ப்பதற்கோ அல்லது புதிய உபகரணங்களை பொருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமையால் அந்த நிலையங்களின் பாதுகாப்பிற்கு அதிக அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது. 2019 ஒக்தோபர் மாதத்தின் போது நவத்திகந்த நிலையத்தில் சேவை பெறுநர் தற்கொலை செய்திருந்த போதிலும் ஊஊவுஏ கமெரா செயற்படாமையால் அது தொடர்பான சாட்சிகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | | | காணப்படுகின்ற நிதி கஷ்டங்களின் காரணமாக திறைசேரியிலிருந்து அதற்காக நிதியேற்பாடு கிடைக்கும் வரை பெறுகை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. | |
| 39 | மீளாய்வாண்டிற்காக சபையின் மூலதன செலவினத்திற்காக கிடைத்த திறைசேரி கட்டுநிதி ரூபா 16.473 மில்லியன் தொகையில் ரூபா 7.731 மில்லியன் அதாவது 47 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | 2021 | CCTV கமெரா போன்ற அத்தியவசிய மூலதன செலவினத்திற்காக சபைக்கு கிடைக்கின்ற கட்டுநிதியை உச்ச அளவில் பயன்படுத்துதல் வேண்டும். | தொற்றுநோய் நிலைமையின் காரணமாக நிறுவனங்கள் மூடப்பட்டமை, சேவை முறையின் பிரகாரம் ஊழியர்கள் அறிக்கையிட்டமை மற்றும் செலவினங்களை குறைப்பதற்கு ஏற்பட்டமை, மூலதன செலவினங்கள் தொடர்பான செயற்பாடுகள் தாமதமடைந்தமைக்கு காரணமாக இருந்தது. | இதுவரை சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படவில்லை. |
| 40 | மாற்றப்பட்ட விசம், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட மரணதண்டனை மற்றும் ஆயுள்காலம் வரையான சிறைத்தண்டனையை தீர்மானிப்பதற்காக | 2021 | சபைக்குரிய சட்டத்தை திருத்தும் போது சபையின் பரிந்துரை பெறப்படல் வேண்டும். | இது அமைச்சினால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவு என்பதன் காரணமாக சபையின் பரிந்துரைகளை அனுப்புவது பொருத்தமானதல்ல. | 2022 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் 2 இலிருந்து 5 ஆக அதிகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஹெரோயின், கொக்கெய்ன் மற்றும் மொபீன் அளவு 02 கிராம் முதல் 05 கிராம் வரை அதிகரிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு தொடர்பாக சபையின் கருத்துக்கள் காண்பிக்கப்பட்டிருக் கவில்லை. | | | | |
| 41 | மீளாய்வாண்டின் போது சபையினால் பேணிச் செல்லப்பட்ட மதியுரை சான்றிதழ் பாடநெறிக் கட்டணமாக கிடைத்த ரூபா 1,740,000 தொகையில் ரூபா 435,000 தொகை மற்றும் ரூபா 87,000 முறையே நலன்புரி சங்கம் மற்றும் பௌத்த சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த து. | 2021 | சபைக்குச் சொந்தமான சகல வருமானங்களும் சபையின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | 2019 பெப்ரவரி 26 ஆந் திகதிய சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இது சபைக்கு சொந்தமான அனைத்து வருமானத்தினையும் கணக்கிடப்பட்டிருக்க வில்லை. |
| 42 | 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி ரூபா 4,027,518 செலவில் முப்பது வருட வாடகை அடிப்படையில் ஹோமாகமயில் அமைந்துள்ள 40 பேர்ச் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அதனை ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. விலைமனுதாரருக் கு ரூபா.241,380 செலவில் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட விலைமனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட இயந்திரத்தின் பராமரிப்பு செலவு | 2021 | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்று வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் பரிந்துரையின் பிரகாரம் இந்த காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மீண்டும் கையளித்து அதற்குப் பதிலாக வேறொரு பொருத்தமான பிரதேசத்தில் காணியொன்றை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது தற்போது பயன்படுத்தப்பட்டுள்ள 06 வருடங்களுக்காக குறித்த வாடகை தொகையை வழங்கி மிகுதி பணத்தை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு உள்ள இயலுமை கவனத்தில் கொள்வதற்கோ நடவடிக்கை எடுப்பதாக சபை தீர்மானித்துள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |

ஏனைய விலைமனுதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பராமரிப்பு செலவை விட மிக அதிகமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.139 தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 3,591,849 | 677,836 | 2,914,013 | (249,189) | முனைப்பழியுள்ள |
| **2022** | 3,506,670 | 752,559 | 2,754,111 | (255,710) | முனைப்பழியுள்ள |
| **2023** | 3,456,670 | 626,881 | 2,829,251 | (68,272) | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | சபைக்கு சட்டரீதியாக உரித்து காணப்பட்ட 03 ஏக்கர் 92 பர்சஸ் அலவான 03 காணிகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | சபைக்கு சட்டரீதியான உரித்துக் காணப்படும் காணிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் உரிய பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| 2. | சபையின் நிதி நிலைமைக் கூற்றில் நிருவகிக்கும் கம்பனிகளுக்கு செலுத்த வேண்டிய மீதிகள் என ரூபா 1.18 மில்லியன் தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், நிருவகிக்கும் கம்பனிகளினால் உறுதிப்படுத்தப்பட்ட அந்த மீதி ரூபா 110.94 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் மீதிகளிடையே ரூபா 109.76 மில்லியனிற்கான இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | 2021<br>2023 | வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பனிக்கு செலத்த வேண்டிய கடன் மீதிகளை கம்பனியின் தகவல்களுடன் பரிசோதனை செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் கம்பனியுடன் கலந்துரையாடி தீர்மானம் ஒன்று எடுக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 3. | செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஸ்ரீ லங்கா யூத் ஸ்டார்ட் அப் | 2021 | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட குறிக்கோள் | இந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்திய | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலேன்ச் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 04 உப நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2021 திசெம்பர் 20 திகதி அளவில் ரூபா 1,402,810 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படாமையால் அந்தப் பணம் விளைவற்ற செலவொன்றாக மாறியது. | | நிறைவேற்றக்கூடியவாறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு முறையான கண்காணிப்பின் கீழ் செயற்படுத்த வேண்டியதுடன், அரச பணம் சிக்கனமாக பயன்படுத்தல் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும். | தலைவர் சபையிலிருந்து விலகிச் சென்ற பின்னர் புதிய தலைவரினால் அந்த நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அறிவிக்கின்றேன். | |
| 4. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் குறிக்கோள்களுக்கு புறம்பான கருமங்கள் என இரத்த தான நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்துவதற்காக ரூபா 11,519,609 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதற்காக சபையின் கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் ஒரு நாளைக்கு ரூபா 83,525 தொகை வீதம் 24 நாட்களுக்காக ரூபா 2,004,600 தொகை செலுத்தி டோம்ஸ் 01 நிறுவன வளாகத்தில் தயாரிப்பதற்கான அந்தச் செலவு விளைவற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது. | 2021 | நிகழ்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கு அரச நிதியம் குறைந்த அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | திட்டமொன்று ஒன்றின்றி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிப்பதனால் இவ்வாறு ஏற்பட்டிருந்தது என அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 5. | 2020 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட எரமினியாய ஸ்விஸ் பயிற்சி நிலையத்தின் நான்கு நிர்மாணவேலை செயற்திட்டங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 4,563,066 தொகை கட்டிடப் பொருட்கள் வழங்குனர் இருவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்தப் பொருட்களின் 54 சதவீதம் எனப்படும் கூட்டுத்தொகை ரூபா 2,459,188 தொகை | 2021 | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உத்தியோகத்தரின் வேலை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெறுமதியான பண்டங்கள் நிர்மாண வேலை வளாகத்திற்கு கிடைத்ததென போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு உத்தியோகத்தர்களினால் தவறான வழியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. | | | | |
| 6. | 2014 நவம்பர் 12 ஆம் திகதி 25/2014 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கைக்கு முரணாக 15 பயிற்றப்பட்ட எழுதுனர்கள் மற்றும் 03 பயிற்றப்படாத தொழிலாளர்கள் 2021 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை ஆட்சேர்க்கப்பட்டு தலைமை அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகளில் மற்றும் பயிற்சி நிலையங்களுக்கு இணைக்கப்பட்டு ரூபா 11,547,501 தொகை படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. | 2021<br>2023 | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர் நடவடிக்கை கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 7. | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 156 மற்றும் தாபனக் கோவையின் பகுதி II இன் படி ரூபா 10.9 மில்லியன் தொகை கிரயத்தையுடைய கோழித் தீனி கொள்வனவு செய்வதற்காக பெறுகை செய்முறையின் போது பெறுகை சபையின் அங்கீகார எல்லையை மிகைத்து அங்கீகரித்தல் மற்றும் ஏனைய பண்ணைகளின் கூறுவிலைகளுடன் இணக்கஞ் செய்யாமல் கவனயீனமாக செயற்பட்டிருந்தமையால் ஏற்பட்டிருந்த அண்ணளவாக ரூபா 4.6 மில்லியனிற்கான மொத்த நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க | 2022 | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். | கோழித் தீனி கொள்வனவுக்கான பெறுகை செய்முறை தொடர்பாக கவனயீனத்துடன் செயற்பட்டமை தொடர்பாக கண்டறிந்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக செயற்படுவேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 8. | 2015 ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரை மன்றத்தினால் ஏனைய அரச நிறுவனங்களில் இருந்து பெற்றிருந்த 02 வாகனங்களை முறைப் பிரகாரம் சாட்டுவதற்கு அல்லது உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022<br>2023 | முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 வாகனங்களை உரித்தாக்கவதற்காக அமைச்சுக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 9. | லெவ்வேகொட பயிற்சி நிலையத்திற்காக ஹாலிஎல பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டிருந்த 24 ஏக்கர் 03 ரூட் 53 பர்சஸ் காணிப் பகுதியில் 13 ஏக்கர் 03 ரூட் 50 பர்சஸ் நில அளவைப் படத்தின் படி பௌதீக ரீதியாக காணப்படாததுடன், அந்த காணிப் பகுதியில் நில அளவை மேற்கொண்டு அவற்றின் அளவினை தீர்த்துக்கொண்டிருக்கவில்லை. | 2022 | காணிப் பகுதிகளை நில அளவை மேற்கொண்டு அதன் அளவினை தீர்த்துக்கொள்ள வேண்டும். | வரிசை அமைச்சுச் செயலாளரினால் காணியை உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 10. | 2017 ஆண்டில் அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் மூலம் நிலாவேளி பண்ணைக்காக 200 ஏக்கர் வழங்கப்பட்டிருந்ததுடன், அங்கு பயிற்சிப் பாடநெறிகள் ஆரம்பிக்காமல் 29.5 ஏக்கர் அளவான பகுதியொன்று சட்டத்தின் குறிக்கோள்கள் அல்லாத பண்ணையொன்று நடாத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பயிர்ச் செய்கை மேற்கொள்ளாமல் வருமானம் ஒன்று பெற்றுக்கொள்ளாமல் 03 வருட காலப் பகுதியில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்காக ரூபா 15.5 மில்லியன் தொகையும் நிர்மாண வேலைக்காக ரூபா 22.9 | 2022 | ஆக்கபூர்வமாக பயன்படுத்தக்கூடிய விதமாக முறைமை தயாரிக்கப்பட வேண்டும். | காணி அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும், உரித்தாக்கல் தொடர்பாக சட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றதெனவும் அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மில்லியன் தொகையும், சட்டரீதியான உரிமையை பெற்றுக்கொள்வதற்கான சட்ட அலுவல்களுக்காக ரூபா 652,500 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும். காலநடை வளர்ப்புக்காக ரூபா 5.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | | | | |
| 11. | 1990 இன் 01 இலக்க ஆதனங்கள் உரித்தாக்கும் சட்டத்தின் அவசர சட்ட ஏற்பாடுகளின் கீழ் மன்றத்திற்கு உரித்தாக்கியிருந்த பலாங்கொடை பொலிஸ் பிரிவின் ஹல்தலமுள்ள பிரதேச செயலாளர் பிரிவின் வல்ஹபுதென்ன பதனவத்த என்ற 01 ஏக்கர் 03 ரூட் 30 பர்சஸ் கொண்ட காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடம் 2021 பெப்ரவரி 25 திகதி ரூபா 7.6 மில்லியன் பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், தற்போது விளைவற்று காணப்படுவதுடன், காணியில் காணப்படும் கட்டிடத்தை உரிய முறையில் பராமரிக்காமையால் அழிவடையும் ஆபத்து நிலையில் காணப்படுகின்றது. | 2022 | விளைவற்ற ஆதனங்களை பரிமரித்து பயன்படுத்த வேண்டும். | இளைஞர் சமூகத்தின் பிரதேச சம்மேளனத்தின் இளைஞர் யுவதிகளினால் பராமரிக்கப்பட்டு வருகின்றதென அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 12. | முறையான அங்கீகாரம் ஒன்றின்றி வருமானம் சேகரிக்கும் செய்முறையில் ஈடுபட்டு சேமிப்பு கணக்கு நடைமுறைக் கணக்கு மற்றும் நிரந்தர வைப்புக்கள் திறக்கப்பட்டு சபைக்கு உரித்தான பௌதீக மற்றும் மனித வளங்களை பயன்படுத்தி நடாத்திச் செல்லும் விளையாட்டுக் கழகங்களின் கீழ் மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 11.61 | 2022<br>2023 | சபையின் பிரிவொன்றாக காணப்படுகின்ற விளையாட்டுக் கழகங்களில் சொத்துக்கள் பொறுப்புக்கள் வருமானங்கள் செலவுகள் சபையின் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும் என. | 2024 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு உட்படுத்தும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மில்லியனிற்கான சேமிப்புக் கணக்கின் மீதி, ரூபா 20,000 இற்கான நடைமுறைக் கணக்கின் மீதி மற்றும் ரூபா 16.25 மில்லியனிற்கான நிலையான வைப்பு மீதி நிதிக்கூற்றுக்களுக்கு எடுத்திருக்காததுடன், ஆண்டின் போது கிடைத்திருந்த வருமானம் ரூபா 8.15 மில்லியன் தொகை மற்றும் செலவு ரூபா 7.93 மில்லியன் தொடர்பான கூற்றொன்றும் தயாரித்திருக்கவில்லை. மேலும் வங்கி நடைமுறைக் கணக்குகளுக்காக வங்கி இணக்கக கூற்றுக்களும் தயாரித்திருக்கவில்லை. அதன் காரணமாக இந்த விளையாட்டுக் கழகத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த வருமன்ம் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள், வருட இறுதியில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக தீர்மானிக்க முடியாதுள்ளதுடன், அதன் மூலம் நிதி ஒழுங்கீனங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களையும் கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது. | | | | |
| 13. | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தியிருந்த செயற்பாட்டுக் கைநூலின் பிரிவு 3.5 பிரிவிற்கு முரணாக ஏனைய அமைச்சுக்களுக்கு இரண்டு உத்தியோகத்தர்கள் எதுவித அங்கீகாரமும் இன்றி விடுவிக்கப்பட்டிருந்தது. | 2023 | சுற்றிக்கையின் படி உத்தியோகத்தர் கள் விடுவித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | உத்தியோத்தர்கள் மீண்டும் மன்றத்தின் சேவைக்கு வந்துள்ளனர் | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| 14. | 2022 ஜனவரி 14 திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் | 2023 | எரிபொருள் கொடுப்பனவுக்கு உரித்துடைய | அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் | பரிந்துரைகளின் படி செயற்பட்டிருக்கவில் லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 01/2015(2) இன் படி சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர்கள் இருவர் சுற்றறிக்கையின் படி உரித்துள்ள எரிபொருள் கொடுப்பனவை மிகைத்து ரூபா 2.48 மில்லினிற்கான எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. | | உத்தியோகத்தர் கள் சுற்றறிக்கைக்கு இணங்க மன்றத்தின் அங்கீகாரத்தை பெற்று மேலதிக எரிபொருள் பெற்றுக்கெள்ளல் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். | பெற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். | |
| 15. | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் படி சபையின் மாகாண அலுவலங்கள், மாவட்ட அலுவலகங்கள், பயிற்சி நிலையங்கள் மற்றும் பண்ணைகளில் விரல் அடையாளம் பதிவதற்காக இயந்திரங்கள் பொறுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், விரல் அடையாள இயந்திரும் நிறுவுதல் விரைவு படுத்தப்பட வேண்டும் என. | குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி செயற்பட்டிருக்கவில்லை. |
| 16. | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XV பிரிவு 11.1 படி 2023 செப்தம்பர் மாதம் 12 திகதி ரூபா 39.40 மில்லியன் தொகை செலவிடப்பட்டு வெளிநாட்டு சுற்றுலா ஒன்றிற்காக சிக்கன வகுப்பு டிக்கட்கள் பயன்படுத்துவதற்கு பதிலாக பணிப்பாளர் நாயகத்திற்கு ரூபா 2.77 மில்லியன் செலவிடப்பட்டு வணிக வகுப்பு டிக்கட்கள் வழங்கப்பட்டிருந்தது. | 2023 | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும் என. | சுற்றுலாவிற்காக வெளிப்படுதல் ஏற்பட்டது இறுதிச் சந்தர்ப்பத்தில் என்பதால் சிக்கன வகுப்பு டிக்கட்கள் அப்போது மீதியாக காணப்பட்டிருக்காமையால் அவ்வாறு நுழைவுச் டிக்கட்கள் கொள்வனவு செய்வதற்கு நேரிட்டதென அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி செயற்பட்டிருக்கவில்லை. |
| 17. | அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டிருந்த ஊழியர் சிக்கல்கள் மற்றும் ஒழுங்கீனங்கள் தொடர்பான பரிந்துரைகளில் பரிந்துரை இலக்கம் 10 இன் பரிந்துரைகளுக்கு முரணாக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஒருவருக்கு உதவிப் பணிப்பாளர் (அணவல்) | 2023 | அமைச்சின் பரிந்துரையின் படி செயற்பட வேண்டும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் அணவல் பதவியை அகற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பரிந்துரைகளின் படி செயற்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உட்பட 03 பதவிகள் வழங்கப்பட்டிருந்தன. | | | | |
| 18. | 1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் மன்றச் சட்டத்தின் பிரிவுகள் 4(ஊ), 5(2)(எ) மற்றும் 5(2)(ஏ) இற்கு இணங்க இளைஞர் யுவதிகளை விவசாயத் துறைக்கு ஈர்த்துக்கொள்வதற்காக பண்ணைகள் ஆரம்பிப்பது குறிக்கோளாக இருந்த போதிலும் மன்றத்தில் காணப்படுகின்ற 09 பண்ணைகளில் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | இளைஞர் யுவதிகளை விவசாயத் துறைக்கு ஈர்ப்பதற்காக பண்ணைகளுக்கு அண்மையில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற 05 பண்ணைகளில் விவசாயத் துறைக்குரிய பாடநெறிகள் தற்போது செயற்படுத்தப்படுவதுடன், 2025 ஜனவரி மாதம் அளவில் மேலும் 04 பண்ணைகளில் விவசாய துறைக்குரிய பாடநெறிகள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 19. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி மன்றத்தின் குறிக்கோள்களுக்கு சம்பந்தமில்லாத காலநிலை தோற்றமாற்றத்தினை அடக்குதல் என்ற தலைப்பில் நிகழ்வு நிலை ஊடாக தனியார் ஹோட்டல் ஒன்றில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிற்காக ரூபா 1.19 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | 2023 | மன்றத்தின் குறிக்கோள்களின் படி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்த வேண்டும். | தலைவர் / இளைஞர் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுரையின் படி 2023 நவம்பர் 05 திகதி காலநிலை தோற்றமாற்றத்தினை அடக்குதல் தொடர்பான செயலமர்வு நடாத்தப்பட்டது. | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 20. | தலைவரின் தற்றுணிவின் படி உத்தியோகத்தர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்காக சபையின் கட்டிடங்கள் இலவசமாக அல்லது கழிவுடன் வழங்கப்படுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் காணப்படாத போதிலும், தனியார் நிறுவனங்களுக்கு கட்டிடங்கள் இலவசமான மற்றும் கழிவுடன் கட்டிடங்கள் வாடகைக்கு வழங்கப்பட்ட காரணத்தினால் ரூபா 3.80 மில்லியனிற்கான குத்தகை வருமானம் ஒன்றினை மீளாய்வாண்டின் போது மன்றம் இழந்திருந்தது. | 2023 | மன்றத்தின் தீர்மானங்களை செயற்படுத்தும் போது பிரதிகூலம் அல்லாத தீர்மானங்களை பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் செயற்படுத்த வேண்டும். | கட்டிடங்களை கழிவுடன் மற்றும் இலவசமாக வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 21. | இளைஞர் சங்கங்களின் இளைஞர்கள் யுவதிகளின் | 2022<br>2023 | செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட | இந்த தொலைக்காட்சி நாடகங்கள் | பரிந்துரைகளின் படி நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பங்களிப்புடன் புதிய ஆக்கங்களை வெளியிடுதல் சபையின் குறிக்கோள் ஒன்றாக காணப்பட்ட போதிலும் அதற்கு முரணாக நடிகர் நடிகைகளை இணைத்து தொலைக்காட்சி நாடகங்கள் தயாரித்து அதற்காக ரூபா 4.83 மில்லியன் தொகை மேற்கொண்டிருந்ததுடன், இது வரை அந்த தொலைக்காட்சி நாடகத்தின் அலுவல்களும் முடிவடைந்திருக்கவில்லை. | | குறிக்கோல்கள் நிறைவேற்றக்கூடியவாறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு முறையான மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டியதுடன், அரசின் பணம் சிக்கனத்துடன் பயன்படுத்துவதற்காக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும். | ரூபவாஹினி தொலைக்காட்சி அலைவரிசைகளில் பணம் அறவீடு செய்து வழங்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான அர்த்தமற்ற கருமங்களுக்காக ஈடுபடாமல் இருக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டது என அறிவிக்கின்றேன். | எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 22. | 2023 நவம்பர் 16 திகதி முதல் 19 திகதி வரை 34 ஆவது நடைபெற்ற தேசிய இளைஞர் விளையாட்டு விழா நடாத்துவதற்காக ரூபா 9,696,450 தொகை உணவு, நீர் போத்தல்கள் மற்றும் டீ-சேட்கள் கொள்வனவு செய்யும் போது போட்டி விலை அழைத்தல் மேற்கொள்ளப்படாமல் விலைக் குழுவொன்றின் மூலம் அது மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக சந்தையில் நிலவும் மொத்த விலையின் படி 500 மி.லி. 20,600 குடிநீர் போத்தல்கள் ரூபா 30 வீதம் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் காணப்பட்ட போதிலும், அதனை கவனத்தில் எடுக்காமல் ரூபா 70 வீதம் கொள்வனவு செய்ததனால் ரூபா 0.82 மில்லியனிற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | 2023 | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி அங்கீகரிக்கப்பட்ட கருமங்களுக்காக பெறுகை செய்முறை கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எச் சந்தர்ப்பத்திலும் ரூபா 30 கூறுவிலையொன்று கம்பனியினால் சமர்ப்பித்திருக்காமையால் எதுவித முறையற்ற கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை என இத்துடன் அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 23. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி 2023 திசெம்பர் 31 திகதி தாமரை கோபுர வளாகத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியொன்றின் போது மன்றத்தினால் ரூபா 10.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்த | 2023 | சபையின் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தும் போது மிகவும் கவனத்துடன் செயற்பட வேண்டும். | எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கை கணக்காய்விற்கு அறிவிக்கப்படவில்லை. | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போதிலும், அந்த நிகழ்ச்சித் திட்டம் நடாத்தியமையால் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 6.86 மில்லியன் டிக்கட் பத்திர வருமானத்தை சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 24. | மன்றத்தினால் 2023 மற்றும் கடந்த ஆண்டில் ரூபா 4.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டு விரல் அடையாள பதிவு இயந்திரங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும், அந்த இயந்திரங்களை உரிய முறையில் பயன்படுத்தியிருக்காமையால் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | 2023 | பதவியணியினரின் உள்வருகை மற்றும் வெளிச் செல்லல் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை எடுப்பேன். | பரிந்துரைகளின் படி செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 25. | மன்றத்தினால் நிருவகிக்கப்படும் கம்பனி ஒன்றான யூத் சேர்விஸஸ் (பிரைவட்) லிமிடட் கம்பனியின் கணக்காளராக கடமையாற்றுவதற்கு வரிசை அமைச்சிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த இலங்கை கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மன்றத்தின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளராக கடமையாற்றும் போது பணிப்பாளர் (நிதி) பதவியிலும் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்ததனால் மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நலிவடைந்திருந்தது. | 2023 | மன்றத்தின் பிரதான பதவிகளுக்காக நியமனம் செய்யும் போது உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். | தற்போது இந்த நிலைமை சரி செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் செயற்பட்டிருந்தது. |
| 26. | சபையின் தலைமை அலுவலகத்தின் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் வ/ப இலங்கை தேசிய இளைஞர் சேவை கூட்டுறவு சங்கத்தின் அலுவலகங்கள் நிறுவனப்பட்டிருந்த போதிலும், அதற்கான எதுவித வாடகையும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | சபைக்கு பெற வேண்டிய வருமானங்கள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் குத்தகை அறவீடு செய்வதற்கான செய்முறையொன்று தயாரிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27. | இளைஞர் யுவதிகளை விவசாய தொழில்நுட்பத்தை கடைபிடிக்க வைக்கும் குறிக்கோளுடன் ரூபா 250 மில்லியன் ஏற்பாடுகளின் கீழ் 2022 – 2025 ஆண்டுகளில் செயற்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த விவசாய தொழில் முயற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இளைஞர் விவசாய உற்பத்திக் கம்பனிகள் நிறுவும் நிகழ்ச்சித் திட்டம் ஆகிய எதுவித கருமங்களும் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை. | 2023 | விவசாய முயற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் இளம் விவசாய உற்பத்திக் கம்பனிகளை நிறுவும் நிகழ்ச்சித் திட்டம் நிறுவுதல் விரைவுபடுத்தப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் உரிய முறையில் விவசாய கம்பனிகளை செயற்படுத்த முடியாமல் போன போதிலும் தற்போது 21 விவசாயக் கம்பனிகள் இலங்கை பூராகவும் நிறுவப்பட்டுள்ளன. | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 28. | சபையின் பிரதான களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 3.5 மில்லியன் தொகை பெறுமதியான 37 வகையான விடயங்கள் பிரதான களஞ்சியத்தில் இருந்து பல்வேறு நபர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு தற்காலிக அடிப்படையில் வழங்கியிருந்ததுடன், அவற்றை திருப்ப பிரதான களஞ்சியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு அல்லது பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அதற்கான பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்தல் மேற்கொண்டு முறைமையை முறைப்படுத்த வேண்டும். | 2021.11.16 திகதிய அரச தொழில் முயற்சிக்கான செயற்பாட்டுக் கைநூலின் அத்தியாய இலக்கம் 6.9 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 29. | 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது தெஹிவல பயிற்சி நிலையத்தின் பாடநெறிகளுக்காக கட்டணம் செலுத்தி பதிவு செய்திருக்காத 341 மாணவர்களுக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தேசிய தொழிற் தகைமையுடனான (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், சான்றிதழ்கள் வழங்கும் உரிமை பயிற்சி நிலையங்களுக்கு | 2023 | சான்றிதழ்கள் வழங்கும் போது வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும். | வழங்கப்பட்ட சான்றிதழ்களின் தகவல்கள் Scan செய்து பரீட்சை மதிப்பாய்வு பிரிவின் தரவு முறைமைக்கு உள்ளீடு செய்து பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள 791 சான்றிதழ்களும் பரீட்சைப் பிரிவினால் வழங்கப்பட்டிருந்தது. | பரிந்துரைகளின் படி செயற்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணப்படாத போதிலும் அதற்கு முரணாக சபையின் பரீட்சைகள் மற்றும் மதிப்பாய்வுக் குழுவினால் உறுதிப்படுத்தப்படாத 791 சான்றிதழ்கள் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்டிருந்தது. | | | | |
| 30. | இளைஞர் யுவதிகளை வலைய சர்வதேச இளைஞர் மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளுக்காக பங்குபற்ற வைக்கும் நோக்கத்துடன் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4.89 மில்லியன் தொகை ஏற்பாடுகளை பயன்படுத்தி சபையின் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (தொழில் மற்றும் தொழிற்பயிற்சி) மேலும் பெண் ஒருவர் மாத்திரம் வெளிநாட்டு சுற்றுலாக்களில் பங்குபற்றியிருந்தது. | 2023 | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் அந்தக் கருமங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவத்த ினால் மேற்கொள்ளப்பட வேண்டும். | எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கை கணக்காய்விற்கு அறிவித்திருக்கவில்லை . | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 31. | இளைஞர் மாநாட்டிற்காக மீளாய்வாண்டின் போது உதவி நிதி நன்கொடைகள் மற்றும் கடன்தொகை என முறையே ரூபா 4.65 மில்லியன் தொகை, ரூபா 1.93 மில்லியன் தொகை மற்றும் ரூபா 5 மில்லியன் வழங்கியிருந்ததுடன், அவ்வாறு வழங்கியிருந்த பணத்தின் பயன்பாடு தொடர்பாக தொடர் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. அதேபோல், தேசிய விளையாட்டு நிதியத்தினால் சபையின் நிகழ்ச்சித் திட்டமொன்றிற்காக வழங்கியிருந்த பணத்திலிருந்து மீதியாக காணப்பட்ட ரூபா 1.4 மில்லியன் தொகையினை திருப்பி அனுப்பாமல் பொலன்னறுவை மாவட்ட இளைஞர் சமூக அதிகார பீடத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | 2023 | மன்றத்தின் திறைசேரி ஏற்பாடுகள் விண்ணப்பிக்கப்ப ட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் படி பயன்படுத்தல் மேற்கொண்ட வேண்டும். | எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கை கணக்காய்விற்கு அறிவித்திருக்கவில்லை . | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 32. | 34 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவிற்காக கொள்வனவு செய்திருந்த | 2023 | திறைசேரி ஏற்பாடுகள் தேவையான | எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கை கணக்காய்விற்கு | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 0.73 மில்லியன் தொகை பெறுமதியான 768 டீ-சேட்கள் அந்த விழா முடிவடைந்த பின்னர் பல சந்தர்ப்பங்களில் களஞ்சியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 0.32 மில்லியன் தொகை பெறுமதியான 337 டீ-சேட்கள் அவற்றை பெற்றுக்கொண்ட நபர்கள் யார் என குறிப்பிடப்படாமல் பணிப்பாளர் நாயகம் என குறிப்பிடப்பட்டு களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது. மற்றும் பாடசாலைகள் மற்றும் இளைஞர் சங்க மட்டத்தில் வினியோகிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 0.80 மில்லியன் இற்கான 100 காற்பந்துகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம் என்ற பெயரில் வெளியிடப்பட்டிருந்தது. | | நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தும் போது அவை குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும். | அறிவித்திருக்கவில்லை . | ல்லை. |
| 33. | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரிய முறையில் பங்களிப்புத் தொகைகள் அனுப்பப்படாமையால் ரூபா 0.21 மில்லியன் இற்கான மிகை விதிப்பொன்று மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டி நேரிட்டிருந்தது. | 2023 | நட்டமொன்று ஏற்படாதவாறு முகாமைத்துவப்படுத்த வேண்டும். | கம்பஹா தொழில் அலுவலகத்தின் மூலம் நீதிவான் நீதிமன்றில் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமையால் நீதிமன்ற கட்டளையின் படி இந்த தொகை செலுத்த நேரிட்டது என அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 34. | 2021 ஆண்டின் போது பணிப்பாளர் சபை தீர்மானம் ஒன்றின்றி மேல் மாகாண பணிப்பாளரினால் சபுகஸ்கந்த பயிற்சி நிலையத்தில் ரொபோடிக் பயிற்சிப் பாடநெறி ஆரம்பிக்கும் குறிக்கோளுடன் கொள்வனவு செய்திருந்த ரூபா 17.42 மில்லியன் தொகைக்கான உபகரணங்கள் அந்த பாடநெறிகள் ஆரம்பிப்பதற்கு முடியாமல் போனதால் மற்றும் உரிய முறையில் தேவைப்பாடுகள் எதிர்வுகூறப்படாமல் | 2023 | விளைவற்ற வளங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய ஆலோசகர்களின் கீழ் 2024.10.01 முதல் புதிய பாடநெறிகள் ஆரம்பிக்க திட்டமிட்டப்பட்டுள்ளது.<br><br>அடுத்த ஆண்டு (2024) இளைஞர் விருதுப் போட்டியில் வெற்றி பெறும் வெற்றியாளர்களுக்கு வழங்குவதற்கு இயலும் என அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 7.70 மில்லியன் தொகை பெறுமதியான 31 விருதுகள் மற்றும் கதிரைகள் மற்றும் வாயு சீராக்கி உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் இதுவரை விளைவற்றுக் காணப்பட்டது. | | | | |
| 35. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் 98 பங்குகளின் உரிமையுடைய இலங்கை யூத் ஸர்விஸஸ் (பிரைவட்) லிமிடட் கம்பனி 1981 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், கம்பனியினால் 2020 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒருங்கிணைத்து 2024 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி செயற்படுத்தியிருக்க வில்லை. |
| 36. | பெற வேண்டிய கணக்கு ரூபா 144.55 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், அவற்றில் 05 வருடங்களை விட மிகையாக காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 18.75 மில்லியன் மீதியொன்று காணப்பட்ட போதிலும் அதனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற வேண்டிய மீதிகளின் பெறுமதிகள் 2024 ஆண்டில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 37. | 2014 முதல் 2023 ஆண்டு ஆரம்பம் வரையான காலப் பகுதியில் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த 04 வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொண்டு அதனை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மன்றத்தில் மற்றும் பயிற்சி நிலையங்களில் நிறுத்தப்பட்டிருந்தன. அத்துடன் மேலும் 10 வாகனங்கள் ஆண்டு பூராகவும் ஓட்டப்படாத நிலையில் விளைவற்றுக் | 2023 | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் மற்றும் திருத்த வேலை மேற்கொள்ளல் அல்லது அப்புறப்படுத்தல் மூலம் வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்கள் ஏல விற்பனை செய்வதற்கும் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன என அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணப்பட்டது. | | | | |
| 38. | 1994 முதல் 2014 வரையான காலப் பகுதியில் அரசியல் காரணங்களினால் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்தவருக்கு சலுகை வழங்குவதற்காக அமப இலக்கம் 17/0186/734/005 இலக்கம் கொண்ட மற்றும் 2017 பெப்ரவரி 02 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி ஓய்வுபெற்ற உத்தியோகத்தரகள் அடங்கிய குழுவொன்று நியமனம் செய்யாமல் அதற்கு முரணாக நியமனம் செய்யப்பட்ட குழுக்களின் பரிந்துரைகளை பெற்றுக்கொண்டு 40 உத்தியோகத்தர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டிருந்தது. | 2023 | பரிந்துரை வழங்கிய 40 உத்தியோகத்தர் களுக்கு பதவியுயர்வுகள், சம்பள ஏற்றங்கள் நிலுவை சம்பளம் செலுத்துதல் தொடர்பாக மீண்டும் கவனம் செலுத்தப்பட வேண்டும். | எதிர் காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. |
| 39. | மன்றத்தின் 03 பிரதான பதவியணிப் பதவிகள் ஆகிய பணிப்பாளர் (நிதி), பணிப்பாளர் (அபிவிருத்தி) மற்றும் பணிப்பாளர் (பயிற்சி) ஆகிய பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் நியமனம் வழங்கப்படாமல் இரண்டாம் தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பல வருட காலமாக நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2023 ஆகஸ்ட் 19 திகதி பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி நிரந்தர அடிப்படையில் தகைமைகள் உடன் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் இதுவரை அது மேற்கொள்ளப்பட்டிருக்கவி ல்லை. | 2023 | பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி நிரந்தர அடிப்படையில் தகைமைகளின் படி உத்தியோகத்தர் கள் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மன்றத்தின் 03 பிரதான பதவியணிப் பதவிகள் ஆகிய பணிப்பாளர் (நிதி), பணிப்பாளர் (அபிவிருத்தி) மற்றும் பணிப்பாளர் (பயிற்சி) ஆகிய 03 பதவிகளுக்காக தகைமையுடைய உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. |
| 40. | தலைவரின் தற்றுணிவின் படி மற்றத்தின் பதவியணி அல்லாத தன்னார்வ பதவியொன்றிற்காக நபரொருவர் சேர்க்கப்பட்டு அவருக்கு மற்றத்தின் விடுதியில் தங்கும் வசதிகள் மற்றும் | 2023 | அரச வளங்கள் பயன்படுத்தும் போது கவனமாக செயற்படுத்த வேண்டும். | மீண்டும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாது என அறிவிக்கின்றேன். | பரிந்துரைகளின் படி செயற்பட்டிருக்கவில் லை. |

பணிப்பாளர் நாயகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனம் அவருக்கு வழங்கப்பட்டு அதற்காக எரிபொருள் வழங்குவதன் மூலம் அரச வளங்கள் முறைசாரா பயன்பாட்டிற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

## 3.140 புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்

| | மொத்த சொத்துக்கள் (ரூ.) | மொத்த பொறுப்புகள் (ரூ.) | சமபங்கு (ரூ.) | பற்றாக்குறை (ரூ.) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 5,709,397 | 123,001 | 5,586,396 | 1,155,435 | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **2022** | 5,757,162 | 40,000 | 5,717,162 | 144,266 | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **2023** | 6,977,375 | 69,000 | 6,908,375 | 1,327,238 | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | 2014 இன் 3 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவன அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவு<br><br>சுற்றாடல் விடய பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு மற்றும் 1980 இன் 31 ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்புகள் (பதிவு செய்தல் மற்றும் கண்காணிப்பு) அதிகாரச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட தன்னார்வ சமூக சேவை அமைப்புக்கள் பதிவாளருக்கு ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கு உரிய ஆண்டறிக்கைகள் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2022<br><br>2023 | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடந்த ஆண்டறிக்கைகளுடன் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை சுற்றாடல் விடயப்பொறுப்பு அமைச்சரின் அமைச்சின் செயலாளருக்கு மற்றும் தன்னார்வ சமூக சேவை அமைப்புகளின் பதிவாளருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அது இன்னும் சமர்ப்பிக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ல. | | | | |
| 02 | 2016 மார்ச் 21 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி பத்திரத்தின் 2 ஆம் பந்தி<br><br>நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தினை நிறுவுதல் நிர்வகித்தல் மற்றும் பேணிச் செல்வதற்குரிய தேவைப்பாடு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனத்தின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டு வரையிலும் நிரந்தர முகவரியுடனான அலுவலகமொன்று காணப்படவில்லை. | 2023 | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்கு ஆரம்பக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதுடன் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது. | இப்போதும் நிலையான முகவரியுடன் கூடிய அலுவலகம் இல்லை |

## 3.141 தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்

| | மொத்த சொத்துக்கள் (ரூ.) | மொத்த பொறுப்புகள் (ரூ.) | சமபங்கு (ரூ.) | பற்றாக்குறை (ரூ.) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 3,060,307,320 | 983,854,302 | 2,076,453,018 | 201,818,410 | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **2022** | 3,269,857,504 | 1,186,797,580 | 2,083,059,923 | 167,022,296 | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |
| **2023** | 3,628,169,613 | 1,579,789,518 | 2,048,380,095 | 211,684,932 | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | | |
|---|---|---|---|
| சதவீதம் அளவானவைசெயற்பாடற்று இருந்தன. எனினும் சபையினால் இந்தமெசின்களைதிருத்தம் செய்துபயன்பாட்டிற்குஎடுத்துக்கொள்ளக்கூடியநிலக்குகொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இந்தமெசின்களுக்குமத்தியில் 493 மெசின்களைதிருத்தம் செய்வதற்குஅனுப்பிவைக்கப்பட்டிருந்தும் திருத்தம் செய்யும் நடவடிக்கைதுரிதமாக இடம்பெற்றிருக்காததுடன் ரூபா 432,305 பெறுமதியான 23 மெசின்கள் காணாமல் போயிருந்தன. | மற்றும் பராமரித்தல் உடன்படிக்கைக்கு இணங்கமேற்கொள்ளப்படுதல் வேண்டும். | இருந்தமையால் அவ்வப்போது இடையூறுகளுக்கு உட்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் பின்னர் டிக்கட் மெசின் கொள்வனவுசெய்யப்படாமையினால் டிக்கட் இயந்திரங்களின் தேவைநாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. தொலைந்துபேனடிக்கட் மெசின்கள் தொடர்பாகஒழுக்காற்றுநடவடிக்கைகள் எடுத்துசிலகாணாமல் போனவைகள் தொடர்பாகநடத்துனர்களிடம் இருந்துஅறவிடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பழுதுபார்த்தலுக்கு அனுப்பட்டபோதும் சிலடிக்கட் மெசின்களுக்காகபழுதுபார்த்தலுக்குஅதிகசெலவினம் ஏற்படுகின்றமையால் பழுதுபார்த்தலுக்காகசெலவாகின்றசெலவினத்தைக் கவனத்தில் கொண்டுபுதியடிக்கட் இயந்திரங்களைகொள்வனவுசெய்வதுபொருத்தமானதாக இருந்தது. | பிரகாரம் உரியவாறுநிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |

## 3.158 இலங்கை துறைமுக அதிகாரசபை

| | மொத்தப் சொத்துக்கள் ரூபா | மொத்தச் பொறுப்புக்கள் ரூபா | மூலதனம் ரூபா | வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 492,621,205,733 | 122,487,728,519 | 370,133,477,214 | 25,601,331,063 | மறுப்பு |
| **2022** | 731,689,857,861 | 178,079,845,524 | 553,610,012,337 | 57,025,790,184 | முனைப்பழியுள்ள |
| **2023** | 739,506,223,402 | 157,499,931,261 | 582,006,292,141 | 40,359,243,118 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய குறைபாடுகள் | கணக்காய்வு அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| **1. நிதிக்கூற்று தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்** | | | | | |
| **1.1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை** | | | | | |
| (அ) | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கான கருதுகோள் கட்டமைப்பின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.3 இலிருந்து 4.6 வரையான பிரிவுகள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 7(அ) பிரிவுகளுக்கு முரணாகத் துறைமுக அதிகாரசபைக்கு எதிர்கால பொருளாதார பிரதிபலன் மற்றும் உரிமை இல்லாத ரூபா 947.5 மில்லியன் தொகையான 02 ஏக்கர் அளவிலான சுங்கத் திணைக்களத்திற்கு ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த காணி, ரூபா 628.5 மில்லியன் தொகையான 02 ஏக்கர் 03 ரூட் 9.61 பேச்சர்ஸ் அளவான தாமரைக் கோபுரத்தினை நிர்மாணிப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட காணி, ரூபா 83.7 மில்லியன் தொகையான 01 ஏக்கர் 02 ரூட் 14.9 பேச்சர்ஸ் | 2021<br>2022<br>2023 | நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் ஏனைய நிறுவனங்களுடன் காணப்படுகின்ற சிக்கலினை துரிதமாக தீர்த்துவைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுங்க திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான காணியை ஒப்படைக்கும் நடவடிக்கை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் போது அறவிட வேண்டிய பணம் மற்றும் இதற்கு முன்னர் பரிமாற்றம் செய்யப்பட்ட ஏனைய காணிகள் சம்பந்தமாக இரு தரப்பினர்களுக்குமிடையே சிக்கல் நிலைமை உருவாகியுள்ளது. கலந்துரையாடலின் மூலம் சிக்கலினைத் தீர்த்து அக்கொடுக்கல் வாங்கலினை முடியுமான அளவு விரைவாக முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது சம்பந்தமாக அமைச்சிற்கு தெரியப்படுத்தி சுங்கப் | இந்தக் காணிகள் தொடர்பான நடவடிக்கைகள் இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அளவான நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்ட காணி மற்றும் ரூபா 19.8 மில்லியன் பெறுமதியான 04 ஏக்கர் 03 ரூட் 3.2 பேச்சர்ஸ் அளவான கிம்புலாவல காணி என்பன உள்ளடங்கலாக மொத்தப் பெறுமதி ரூபா. 1,679.5 மில்லியன் பெறுமதியான காணிகள் சொத்துக்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | | பணிப்பாளர் நாயகத்திற்கு ஒரு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. துறைமுக அதிகாரசபைக்குச் சொத்தமான கொழும்பு 10, டீ.ஆர்.விஜேரவர்தன மாவத்தையில் அமைந்துள்ள தாமரை கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியானது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பயன்படுத்தும் உரிமை பொறுப்பேற்க்கப்பட்டுள்ளது. எனினும் சட்டரீதியாக பரிமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் நிறைவ செய்யப்படவில்லை. கிம்புலாவலயில் அமைந்துள்ள காணிக்காக இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாக காணப்படுகின்ற நடவடிக்கை முடிவடைந்த உடன் இப்பங்கின் பெறுமதியை அடையாளங்கண்டு ஏடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 27 ஆம் பிரிவின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்கலன்களுக்காக கிடைக்க வேண்டிய நில வாடகை வருமானமாக ரூபா 1,672 மில்லியன் பெறுமதியும் அரை கொள்கலன்களுக்காக (வாகனங்கள்) கிடைக்க வேண்டிய நில வாடகை வருமானமாக ரூபா 1,102 மில்லியன் பெறுமதியும் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் | 2021<br>2022<br>2023 | விடுவிக்கப்படாத இறக்குமதி செய்த கொள்கலன்கள்/ வாகனங்களை விடுவிக்கும் வரை கிடைக்க வேண்டிய வருமானமாக அடையாளம் காணுதல் வேண்டும் என்பது. | 2024-02-13 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் இந்த வருமானம் தொடர்பாக வெளிப்படுத்துதல் மாத்திரம் 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டது. கொள்கையொன்று தயாரித்து 2024 ஆம் ஆண்டில் அதற்கமைய செயற்பட நடவடிக்கை எடுக்கப்படும். | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் வெளிப்படுத்துதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதுவரையில் குறித்த செம்மையாக்கல் கணக்குகளில் மேற்கொள்ள |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செம்மையாக்கப்பட்டிருந்தது. | | | | ப்பட்டிருக்கவில்லை. |

**1.1.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | ஹம்பாந்தோட்டை துறைமுக செயற்திட்டத்திற்கான வெளிக்கள செயற்பாடுகளுக்காக கடமைகளுக்காக மற்றும் காணிகளை துப்பரவு செய்து வெளியாக்குவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 4.39 மில்லியன் தொகையும் காணிகளை இழப்பவர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக 2015 மற்றும் 2016 ஆம் அண்டுகளின் போது ரூபா 108.77 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய இழப்பீட்டினை செலுத்துவது தொடர்பான அறிக்கை அதிகாரசபைக்கு கிடைத்திருந்த போதிலும் செலவு செய்யப்பட்ட ரூபா 113.16 மில்லியன் பணம் காணியாக மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | உரிய அங்கீகாரத்தினை துரிதமாகப்பெற்று காணிகளின் உரிமையை அதிகாரசபை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு செலுத்தப்பட்டிருந்த போதிலும் இன்னும் உரிய உறுதியின் மூலம் காணிகளின் உரிமை துறைமுக அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்காததனால் இப்பணத்தை மூலதனமாக்குவதற்கு முடியாதிருந்தது. ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகம் மற்றும் காணி ஆணையாளர் நாயகம் அலுவலகத்தினால் உரிய காணி உறுதிய தயாரித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காணிகளின் உரித்து இதுவரையிலும் இலங்கை துறைமுக அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2010 ஆம் ஆண்டின் போது SAGT கம்பனியை ஆரம்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் அதிகாரசபையினால் வழங்கிய மூன்று கிரேன்களின் பெறுமதியை பரிமாற்றம் செய்வதற்காக ரூபா 141.63 மில்லியன் பெறுமதிக்கு அக்கம்பனியின் பங்குகள் அதிகாரசபைக்கு வழங்கப்படும் என இணங்கி இருந்ததுடன் இப்பணம் அல்லது பங்குகளின் உரிமை 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | உரிய கம்பனியுடன் கலந்தாலோசித்து உடன்படிக்கைக்கு இணங்க கிரேன்களின் பெறுமதிக்காக அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய உரிமையை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | துறைமுக அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய பங்குரிமையை பெற்றுக்கொள்வதற்காக SAGT கம்பனியுடன் கலந்துரையாடி தேவையான மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சட்டப் பிரிவிற்கு தெரியப்படுத்தப்பட்டது. | இப்பணம் அல்லது பங்குகளின் உரிமை இதுவரையில் கிடைத்திருக்கவில்லை. |

### 1.1.3. கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கணக்கு இலக்கம் 423 கொண்ட கப்பல் முகவர் நிறுவனங்களிடமிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக கிடைக்க வேண்டிய மீதி ரூபா. 1,609,428,559 ஆன வேறுபாட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2023 | உரிய வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து அந்த வித்தியாசம் சரிசெய்யப்படுதல் வேண்டும். | தற்போது 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்று மற்றும் மீதி உறுதிப்படுத்தல் என்பவற்றுக்கிடையே இருந்த இந்த வித்தியாசத்திற்கான காரணம் இனம் காணப்பட்டு உரிய செம்மையாக்கல் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் 2024 ஆம் ஆண்டிலும் வித்தியாசம் அவதானிக்கப்பட்டால் அந்த வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அந்த வித்தியாசத்திற்கான காரணம் இனம் காணப்பட்டுள்ள போதிலும் உரிய செம்மையாக்கல் நிதிக்கூற்றில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 1.2. பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.2.1. பெறவேண்டிய தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பெற்ற ஏனைய தரப்பினர்களையும் உள்ளடக்கி தீர்த்துவைக்கப்படாத மொத்த ஏல விற்பனை வருமானம் ரூபா 189.42 மில்லியனாகும். அந்த மீதியில் ஏனைய முனையங்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் செலுத்தியதன் பின்னர் அதிகாரசபையின் வருமானமாக அடையாளங்காணப்பட வேண்டிய 02 ஆண்டுகளை மிகைத்த ஏல விற்பனை பணப் பெறுவனவுகள் ரூபா 83.86 மில்லியனாக இருந்தது. | 2021<br>2022<br>2023 | காணப்படுகின்ற சிக்கலினைத் தீர்த்துவைத்து கிடைக்க வேண்டிவைகளை முடியுமான அளவு விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2022 ஆம் ஆண்டின் நடாத்தப்பட்ட விலை கேள்வி இலக்கம் 450 இன் பின்னர் வெற்றிகரமான விலை மனுதாரர்கள் கொண்டு செல்லும் பொருட்களுக்கு இலங்கை சுங்கம் மற்றும் தனியார் கொள்கலன்களுக்கு செலுத்த வேண்டிய தொகையினை நேரடியாக அந்த நிறுவனங்களுக்கு செலுத்துவதற்கும் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணம் மற்றும் பொதுத் திறைசேரிக்கு மாற்றப்பட வேண்டிய தொகை என்பவற்றை துறைமுகங்கள் அதிகார | இதுவரையில் இந்த விற்பனைத் தொகையினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | சபையினால் அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி சம்பந்தமாக வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள (Under Litigation) கப்பல் முகவர் கடன்பட்டோர்களின் பெறுமதி ரூபா 439 மில்லியனாக இருந்ததுடன் அதில் கொழும்பு துறைமுகத்திற்குரிய ரூபா 406 மில்லியன் மீதிக்காக 13 கடன்பட்டோர்கள் (Marshal of Admiralty High Court உள்ளடங்கலாக) நிதிப் பிரிவின் மூலம் காட்டப்பட்டிருந்தும் அப்பெறுமதியினுள் ரூபா 65 மில்லியன் தொகையான 06 கடன்பட்டோர்கள் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என சட்டப் பிரிவின் மூலம் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 05 ஆண்டுகளை மிகைத்த கப்பல் முகவர் கடன்பட்டோர் மீதி ரூபா 369 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 358 மில்லியன் ஆனது சட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்ட கடன்மீதிகளாக இருந்த போதிலும் ரூபா 12 மில்லியனுக்காக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில் | 2021<br>2022<br>2023 | நீண்டகாலமாக பணம் செலுத்தாதுள்ள கடன்பட்டோர்கள் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்வதற்கு உள்ள இயலுமை சட்டபிரிவினால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். | கப்பல் முகவர் கடன்பட்டோர் தொடர்பான புதிய உடன்பாட்டு செயற்படு நடைமுறைக்கு (SOP) அமைய நடவடிக்கை எடுக்கப்படும். | MC Shipping Agencies (Co) Ltd மற்றும் Uni Marine Shipping Agency (Pvt) Ltd ஆகிய நிறுவனங்களுக்கு வழக்கு தொடுக்கப்பட முடியாது என மேலும் சட்ட பிரிவின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதனால் AR (Account Receivable Committee) குழு மூலம் வழங்கப்பட்ட பரிந்துரைக்கு அமைய அந்தத் தொகையினைப் பதிவழிப்பதற்குக் கணக்காய்வு குழுவின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் பணிப்பாளர் சபைக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனைய கடன்பட்டோருக்கான சட்ட ரீதியான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | லை. | | | | நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | அதிகாரசபையினால் நீண்டகாலமாக பணம் அறவிடப்பட்டிருக்காத 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 42.25 மில்லியன் பெறுமதியைக் கொண்ட கப்பல் முகவர் கடன்பட்டோர்கள் இருவர் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கைகளின் கட்டளைகள் அதிகாரசபைக்கு சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ள போதிலும் கட்டளைத் திகதியிலிருந்து நீண்ட காலம் எடுத்திருந்தும் அத்தீர்ப்பினை அமுல்படுத்தியிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | நீண்டகாலமாக வழக்குத் தீர்ப்பினை அமுல்படுத்தாதிருப்பதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து அமுல்ப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த வழக்கின் கட்டளை 2017.11.24 ஆம் திகதி சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்ப்புக்கு எதிராக எதிராளியினால் மேன்முறையீடொன்று சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளது. அந்த மேன்முறையீட்டுக்கான இந்த எதிராளினால் மேல்முறையீட்டு வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்ப்பினை செயல்படுவதற்காக எதிராளியின் சரியான முகவரியினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வழக்குத் தீர்ப்பினை நடைமுறைப் படுத்தி பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அதிகாரசபையினால் MV Jammi கப்பலுக்காக வழங்கப்பட்ட சேவைகளுக்காக அறவிட வேண்டிய பணத்திற்காக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டிருந்ததுடன் அதில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் ரூபா 197.09 மில்லியன் (அ.ஐ.கு டொலர் 1,945,712) பணம் உரிய கப்பலிடமிருந்து அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டியிருந்ததுடன் உரிய கப்பலினை ஏல விற்பனை செய்து பெற்ற பணம் நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டது எனவும் அப்பணத்திற்கு தகமையுள்ள பல்வேறு | 2022<br>2023 | உரிய நிறுவனத்துடன் மேலும் கலந்துரையாடலினை மேற்கொண்டு அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை மிக விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலங்கை துறைமுக அதிகாரசபையினால் MV Jammi கப்பலுக்காக அறவிட வேண்டிய கட்டணம் சம்பந்தமாக கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் HC Rem 11/2005 ஆம் இலக்கத்தின் கீழ் கிடைத்துள்ள தீர்ப்பின் பிரகாரம் அமெரிக்க டொலர் 692,080.00 தொகை தகமையுள்ள தரப்பினர்களுக்கு கிடைக்கும் என சட்டப் பிரிவின் மூலம் தெரியப்படுத்தப்பட்டதுடன் அது கிடைக்கும் திகதி தொடர்பாக உறுதியாக குறிப்பிடப்பட்டிருக்காததனால் பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்க | இந்தத் தொகை இதுவரையிலும் கிடைத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| தரப்பினர்களுக்கு உரிய பணத்தை விடுவித்ததன் பின்னர் மிகுதியான பணமாகிய அ.ஐ.கு டொலர் 692,080 பணத்தை சமமாக பகிர்ந்து கொள்வதற்கு முறைப்பாட்டாளர்களான Sri Lanka Shipping Company Limited மற்றும் அதிகாரசபை ஒரு இணக்கத்திற்கு வந்திருந்தது. உச்ச நீதிமன்ற பதிவாளரினால் இந்த வழக்கு தொடர்பாக ஏனைய கோவைகளிலும் இக்கப்பல் தொடர்பாக எந்த பணமும் வைப்புச் செய்யப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்தக் கடன்பட்டோர் பெறுமதிக்கான பணத்தை பெற்றுக் கொள்வது தொடர்பாக நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது. | | முடியாதுள்ளது. | |

### 1.2.2. முற்பணம்

| | | | |
|---|---|---|---|
| கப்பல் முகவர்களினால் 2023 ஏற்கனவே செலுத்தப்பட்ட முற்பணங்களை தீர்த்துவைத்ததன் பின்னர் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதியாக காணப்பட்ட மீதி ரூபா 913.49 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 232.50 மில்லியன் 06 மாதங்களிலிருந்து 05 ஆண்டுகளை மிகைத்திருந்த போதிலும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த கப்பல் முகவர்களால் இன்வொயிஸ் பெறுமதியினை விட அதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 2,407 மில்லியன் தொகை கப்பல் முகவர் செலவு மீதியாக (Shipping Agent | சேவைகளைப் பெற்றுக்கொண்டமைக்காக அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட முற்பணத்திலிருந்து உரிய சேவைகளை வழங்கியதன் பின்னர் மிகுதியாக உள்ள முற்பணம் மற்றும் மிகையாகச் செலுத்துதல் தொடர்பான விபரமான பட்டோலையும் காலப் பகுப்பாய்வும் தொடர்பாக கவனத்திற்கு எடுத்து காலங்கடந்த மற்றும் அசைவற்ற மீதிகளை | கப்பல் முகவர் கடன்பட்டோர் தொடர்பான புதிய உடன்பாட்டு செயற்படு நடைமுறைக்கு (SOP) அமைய நடவடிக்கை எடுக்கப்படும். | கொழும்பு துறைமுகம் தொடர்பாக கப்பல் முகவர்களால் செலுத்தப்பட்ட முற்பணங்களைத் தீர்த்துவைத்ததன் பின்னர் 2024.09.30 ஆம் திகதியில் ரூபா. 224 மில்லியன் ஆகும். 2024.09.30 ஆம் திகதியில் 06 மாதங்கள் தொடக்கம் 05 வருடங்களைக் கடந்து |

| | | |
|---|---|---|
| Credit Balances) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றில் ரூபா 388 மில்லியன் 06 மாதங்களிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதி வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எஞ்சியிருந்த மீதி ரூபா.164.2 மில்லியன் ஆகும். கொழும்பு துறைமுகம் தொடர்பாக 2024.09.30 ஆம் திகதியில் கப்பல் முகவர்களின் செலவு மீதி ரூபா. 339.3 மில்லியன் ஆகவும் 2024.09.30 ஆம் திகதியில் 06 மாதங்கள் தொடக்கம் 05 வருடங்களைக் கடந்திருந்த செலவு மீதி ரூபா. 164.2 மில்லியன் ஆகும். காலித் துறைமுகத்தில் 2024.09.25 ஆம் திகதி வரையில் முற்பணக் கணக்கு மீதி ரூபா. 84,270.84 ஆகவும் செலவு மீதி ரூபா. 615,270.30 உம் ஆகும். திருகோணமலை துறைமுகத்தில் 2024.09.30 ஆம் திகதியில் உள்ளவாறான முற்பண மீதி ரூபா. 29.32 மில்லியனும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | எஞ்சிய மீதி ரூபா. 5.62 மில்லியனும் செலவு மீதி ரூபா. 794,597.71 உம் ஆகும். |

## 1.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (அ) | 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரச் சட்டத்தின் 39 ஆம் பிரிவு மற்றும் 40 ஆம் பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக கட்டணங்களை விடுவிக்கும் காலப்பகுதியினை மிகைத்து 2825 நாட்களிலிருந்து 6922 நாட்கள் வரையான காலப் பகுதியில் துறைமுக வளவில் காணப்பட்ட 08 கொள்கலன்களில் உள்ளடங்கியுள்ள பொருட்கள்/ திரவியங்கள் என்ன என்பதனை அடையாளங் காண்பதற்கு முடியாதிருந்ததுடன் நீண்டகாலம் கடந்திருந்தும் அக்கொள்கலன்கள் சம்பந்தமாக அதிகாரச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | | அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 39 ஆம் பிரிவு மற்றும் 4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஏற்பாடுகளுக்கு பாதிப்பு இல்லாது பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பது. | விற்பனைப் பிரிவினால் பேணப்பட்டு வரும் கைவிடப்பட்ட கப்பல் பொருட்கள் (கொள்கலன்கள்) தொடர்பான அறிக்கையொன்று கூகுள் படிவத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த அறிக்கை விற்பனைப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்) மற்றும் பணிப்பாளர் (சேவை வழங்கல்) ஆகியோரினால் அவதானிக்கப்படக் கூடியதுடன் அதில் தற்போது SAGT, CICT மற்றும் JCT பிரிவுகளில் இருந்து விற்பனை பிரிவிற்கு வழங்கப்பட்டு 21 நாட்கள் கடந்துள்ள கொள்கலன்கள் தொடர்பாக அவதானிக்க முடியும். | இன்னமும் இந்த கொள்கலன்கள் துறைமுக வளாகத்தினுள் காணப்படுகின்றன. |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் IV ஆம் அத்தியாயத்தின் 3.3 ஆம் பிரிவிற்கு அமைய நிரந்தர உத்தியோகத்தரை நியமிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பதில் கடமைக்காகவேனும் உத்தியோகத்தர் ஒருவரை | 2022<br>2023 | | அதிகார சபையில் காணப்படும் வெற்றிடங்கள் முறையான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு பூரணப்படுத்தப்படல் வேண்டும். | தற்போது அனைத்து குறித்த பதவி வெற்றிடங்களுக்கும் நிரந்தர ரீதியிலான உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தேர்தல் நடவடிக்கை காரணமாக பாதுகாப்பு வழிகாட்டி பதவிகள் மட்டும் வெளித் தரப்பு விண்ணப்பங்களை கோரி 100 பேரை | வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு உரிய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நியமிக்காது வெற்றிடமாக உள்ள பதவிகள் 16 காணப்பட்டன. | | | ஆட்சேர்ப்பு செய்வதற்கு உரிய மேலதிக நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ/01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்டுள்ள அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான கூட்டிணைந்த நல்லாட்சி வழிகாட்டல்கள் | | | | |
| (i) | பிரிவு இலக்கம் 2.2.5 மற்றும் 2023 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 01/2021(ii) ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு இலக்கம் 2 மற்றும் 3 இற்கு அமைய அதிகாரசபையின் துணைக் கம்பனிகளுக்காக துணைக் கம்பனிக் கொள்கையொன்றினைத் தயாரித்திருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | துணைக் கம்பனிக் கொள்கையொன்றினைத் தயாரித்தல் வேண்டும். | இணைத்துக்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் கொள்கையைத் தயாரிப்பதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | துணைக் கம்பனிகளுக்காக துணைக் கம்பனிக் கொள்கையொன்றினை இதுவரையிலும் தயாரித்திருக்கவில்லை. |
| (ii) | பிரிவு இலக்கம் 4.3 இன் பிரகாரம் 2022 பெப்ரவரி 25 ஆந் திகதி நியமிக்கப்பட்ட இடர் குழுவில் தற்பொழுது இரண்டு (02) அங்கத்தவர்கள் மாத்திரம் உள்ளடங்கியுள்ளதுடன் இடர்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கூடியிருக்கவில்லை. இதன் காரணமாக நிறுவனத்தின் வியாபார செயல்பாடுகள் தொடர்பில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய ஆபத்து இனம் காணப்பட்டு மதிப்பீடு செய்யப்பட | 2021<br>2022<br>2023 | குழு முறைப்படியாக கூடி தேவையான இடர்களை அடையாளங்காணல் முதலியவற்றை விரைவாக மேற்கொள்ளுதல் வேண்டும். | பிரிவுத் தலைவர்களினால் தமது பிரிவுகளுக்கு உரிய ஆபத்துக்கள் தொடர்பான அவதானிப்பு மற்றும் கருத்துக்களை சமர்ப்பித்ததன் பின்னர் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | இடர் குழு ஒன்று நியமிக்கப்பட்டு இருந்த போதிலும் இதுவரையில் கூட்டம் கூட்டப்பட்டு அல்லது செயல்படும் நிலைமையில் காணப்படவில்லை. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | முடியாமை, நிதி மற்றும் நிதி அல்லாத ஆபத்து தாக்கங்களைக் கணக்கீடு செய்ய முடியாமை போன்ற ஆபத்துக்கள் ஏற்படக்கூடும். | | | | | |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்ட செயற்பாட்டு கையேட்டின் 3.7 ஆம் பிரிவு 2020 சனவரி 27 ஆந் திகதிய பீஈடீ 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.1 ஆம் பிரிவு மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றுக்கு முரணாக அதிகாரசபையின் தலைவரின் படிகளைச் செலுத்தும் போது திறைசேரி அங்கீகாரமில்லாது வழக்கமான சேவையாற்றும் மணித்தியாலத்தினை மிகைத்து வழங்குகின்ற சேவைக்காக ஒரு நிரந்தர கொடுப்பனவாக ரூபா 1,480,000 மற்றும் Entertainment Allowance எனும் பெயரில் ரூபா 540,000 தொகையும் உள்ளடங்கலாக ரூபா 2,020,000 பெறுமதி 2023 ஆம் ஆண்டினுள் செலுத்தப்பட்டிருந்தது. | 2023 | | உரிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் மாத்திரம் படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இல்லையாயின் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். | தலைவரினால் நிறைவேற்றப்படும் கடமைகளைக் கருத்தில் கொண்டு உயர்மட்ட முகாமைத்துவ குழுவின் மற்றும் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் இந்த படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த கொடுப்பனவிற்கு அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரி அனுமதி இதுவரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபை அதிகாரசட்டத்தின் (v) ஆம் பந்தியின் 38(1)(அ) மற்றும் (ஆ) பிரிவுகளுக்கு அமைய கைப்பற்றப்பட்ட 06 கொள்கலன்களுக்காக அதிகார சபையினால் | 2022 | | துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரம் துறைமுகத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களையும் அறவீடு செய்வதற்கு | குறித்த கட்டணத்தினை அறவிடுவது தொடர்பில் இலங்கை சுங்கம் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் நினைவூட்டல் கடிதம் தயாரிக்கப்பட்டு முறையாக அறிக்கை இடுவதற்கான வேலைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு இலங்கை சுங்கத்துடன் | அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களும் இதுவரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறவிட வேண்டிய ரூபா 22.5 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ/01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றிறிக்கை | | | | |
| (i) | 3.2 (i) ஆம் பந்தி மற்றும் 2013 சனவரி 23 அந் திகதிய DMS/F1/3/3-1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அதிகார சபையினால் வரைபு ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் நடைமுறை தயாரிக்கப்பட்டிருந்தும் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | 2021<br>2022<br>2023 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து முறைப்படியாக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பது. | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான வரைவு செய்யப்பட்டு தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசை அமைச்சின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற வழிகாட்டல்கள், பரிந்துரைகள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | வரைபு ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் நடைமுறை தயாரிக்கப்பட்டிருந்தும் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில் மதிப்பீடு செய்தல் அல்லது ஆய்வு மேற்கொள்ளப்படாது ஆட்சேர்ப்பு செய்யப்படலாகாத போதிலும், அதிகார சபையில் 07 பிரிவுகளின் ஊழியர் எண்ணிக்கையில் 187 மிகை நிலவியது. | 2022<br>2023 | முறைப்படியான தொழில் மதிப்பீட்டினை மேற்கொண்டு புதிய பதவியணியினையும் ஆட்சேர்ப்பு நடைமுறையையும் துரிதமாக தயாரித்தல் வேண்டும். | மிகை ஊழியர்கள் ஓய்வு பெறுதல் அல்லது வேறு பதவிகளுக்கு பதவி உயர்வு பெறும்போது படிப்படியாக அந்த பதவிகளின் மிகை குறைவடைந்து செல்லும். 2023 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் களப் பரீட்சிப்பின் பின்னர் ஊழியர் எண்ணிக்கை அங்கீகரிக்கும் போதும் இவ்வாறு மிகை ஊழியர் காணப்படுவதுடன், | வெற்றிடமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அந்த மிகை அவர்களுக்கு பிரத்தியேகமான ரீதியில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | |
| (iii) | 3 ஆம் அத்தியாயத்தின் 3.4 ஆம் பிரிவின் ix ஆம் உபபிரிகிற்கு முரணாக அதிகார சபையினால் பதில் கடமை பார்ப்பதற்காக நியமிக்கப்பட்ட ஒரு ஆண்டு கால எல்லையை மிகைத்து 13 பதவிகளுக்காக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022<br>2023 | இந்த வெற்றிடங்களை முறைப்படியாக நிரப்புவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளும் வரையில் வெற்றிடம் நிரப்பப்படலாகாது எனும் அறிவுரையின் அடிப்படையில் ஓய்வு பெற்றதனால் பதவிகளில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எவ்வாறு இருப்பினும், அந்தப் பதவிகளுக்கான கடமைகளை காணப்படும் தேவைப்பாட்டுக்கு அமைய, பதில் கடமை அடிப்படையில் ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | வெற்றிடமான பதவிகளுக்கு இதுவரையிலும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | இலங்கை துறைமுக அதிகார சபையின் 2021 சனவரி 30 ஆந் திகதிய 02/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் I மற்றும் II ஆம் பிரிவுகளுக்கு அமைய | | | | |
| (i) | 05 ஆண்டுகளை மிகைத்து ஒரே உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருக்கும் 399 உத்தியோகத்தர்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய இல்லங்களில் குடியிருப்பதற்காக புதிய விண்ணப்பப்பத்திரங்கள்/உடன்படிக்கையை புதுப்பிக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் | 2021<br>2022<br>2023 | உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு தேவை ஏற்படுமாயின் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது 2024.04.22 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 27/2023 கொண்ட புதிய சுற்றறிக்கை இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ளது. 05 ஆண்டுகளை விஞ்சி ஒரே உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்கி இருக்கும் | சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதனால் இன்னமும் 05 ஆண்டுகளைக் கடந்து ஒரே |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | உத்தியோகத்தர்கள் 376 ஆக இருப்பதுடன் இந்த உத்தியோகத்தர் அனைவருக்கும் அத்தியாவசிய அடிப்படையில் இல்லங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. | உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்கியுள்ளனர் என்பது அவதானிக்கப்பட்டது. |
| (ii) | அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான குடியிருக்கும் காலப்பகுதியானது முதலாவது வீட்டினை வழங்கிய திகதியிலிருந்து 05 ஆண்டுகள் உச்ச அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதி பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் மீண்டும் 06 மாத காலம் குடியிருக்கும் உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தில் இரண்டு மடங்கு செலுத்த வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகள் வரையான மற்றும் ஆண்டுகள் 06 மாதங்கள் மிகைத்து மற்றும் 28 ஆண்டுகள் வரையான காலப்பகுதியினுள் உரிய உத்தியோகபூர்வ இல்லங்களிலிருநது வெளியேறாது தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 399 ஆக இருந்தது. | 2021<br>2022<br>2023 | உத்தியோகபூர்வ இல்லங்களில் இன்னும் தங்கியிருக்க வேண்டிய தேவை ஏற்படுமாயின் கொடுப்பனவு செய்து உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேலே குறிப்பிப்பட்டுள்ளவாறு ஆகும். | சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதனால் இன்னமும் 05 ஆண்டுகளைக் கடந்து ஒரே உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்கியுள்ளனர் என்பது அவதானிக்கப்பட்டது. |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | துறைமுக வளாகத்தில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனை | 2021<br>2022<br>2023 | துறைமுக நுழைவாயிலுக்கு CCTV | வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி | இதுவரையில் CCTV கமரா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முன்னிட்டு துறைமுக நுழைவாயிலுக்கு CCTV Camera இனை பொருத்தும் நடவடிக்கைக்காக ரூபா 600 மில்லியன் நிதி ஏற்பாட்டின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் 60 சதவீதத்தினை அடைந்து கொண்டு தற்பொழுது 587 பாதுகாப்பு கமராக்களில் 226 கமராக்கள் இதுவரை பொருத்தப்பட்டிருக்கவில்லை. | | கமராவினை பொருத்தும் நடவடிக்கையினை துரிதமாக பூர்த்தி செய்தல் வேண்டும். | ஏற்பாட்டினைப் பயன்படுத்தி கதவுகளில் CCTV கமரா முறைமைகள் பொருத்தப்பட்டன. இலக்கம் 4, 4A, 5 மற்றும் 8 ஆகிய கதவுகளில் CCTV கமரா முறைமைகள் பின்வரும் வகையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 07 ஆம் இலக்க கதவின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. | ஒழுங்கமைப்புகள் பொருத்தப்பட்டு முடிக்கப்படாத நுழைவாயில்கள் பல காணப்படுகின்றன. |
| (ஆ) | 2017 நவம்பர் மாதத்திலிருந்து செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள அதிகார சபையின் துணைக் கம்பனியான மாகம்புர துறைமுக முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியால் (MPMCS) 2014 ஆம் ஆண்டின் போது ஒரு தனியார் வங்கியிடமிருந்து அமெரிக்க ஐக்கிய குடியரசு (அ.ஐ.கு) டொலர் 24 மில்லியன் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. வங்கியினால் இக்கடனை அறவீடு செய்வதற்காக துணைக் கம்பனிக்கும் அதிகாரசபைக்கும் எதிராக இரண்டு வழக்குகள் 2020 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையும் வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | இந்த வழக்கினை துரிதமாக தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்காக நிதி நிறுவனத்துடன் கலந்தாலேசித்தல் அல்லது சட்ட நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதிகார சபைக்கு எதிராக வங்கியினால் தொடுக்கப்பட்டிருந்த இலக்கம் DDR/1349/2019 கொண்ட வழக்கின் கட்டளையானது அதிகார சபைக்கு எதிராக 2024.09.10 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் மேன்முறையீடு 2024.09.12 ஆம் திகதி மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளது. இலக்கம் HC/Civil/97/2021/CO கொண்ட கம்பனியினைக் கலைக்கும் கோரிக்கை தற்போது கொழும்பு வணிக நீதிமன்றத்தில் பரீட்சிக்கப்பட்டு வருவதுடன் 2024.12.22 ஆம் திகதி மீண்டும் அழைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | இந்தக் கடன் தொகை இதுவரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** | **காணி தொடர்பான கணக்காய்வு** | | | | |
| (i) | கொழும்பு 10 விஜேவர்தன மாவத்தையில் | 2021<br>2022 | குத்தகை உடன்படிக்கையி | உரிய வேண்டுகோளினை | இதுவரையிலும் குத்தகை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொடர்பாடல் கோபுரத்தினை நிர்மாணிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள காணியை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவிற்கு வழங்குவது தொடர்பாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் கிடைக்க வேண்டிய மீதியான ரூபா 37.9 மில்லியனாக இருந்நதுடன் இப்பணத்தை அறவீடு செய்வதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்ததுடன் அதிகாரசபை மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு ஆகிய இரண்டு நிறுவனங்கள் குத்தகை உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை . | 2023 | ன மேற்கொண்டு அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை அளவினை தீர்மானித்து குத்தகையை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். | அவசர நடவடிக்கையாகக் கருதி அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளும் வரை ரூபா 50,000 பெயரளவு மாதாந்த குத்தகை வாடகையினை அறவீடு செய்வதற்கு உட்பட்டு தற்காலிக நிபந்தனை தொகுப்பிற்கு இணங்க உரிய காணி தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது டன் உரிய குத்தகை வாடகையினை தொடர்ச்சியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த இரண்டு நிறுவனங்களும் குத்தகை உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (ii) | அதிகாரசபையினால் குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது ஏனைய பயனுள்ள செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ரூபா 2,997 மில்லியன் பெறுமதியான 29 ஏக்கர் 03 ரூட் 9.39 பேச்சர்ஸ் ஆன 05 காணித்துண்டுகள் இதுவரை எதிர்பார்த்த குறிக்கோள்களுக்கு ஈடுபடுத்தப்படாது காணப்பட்டது. | 2022 2023 | 05 காணித்துண்டுகளை வேறு பயனுறுதியான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கொழும்பு 10 டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள காணி கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்திற்கு இணங்க நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஒன்றிணைந்து அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்தது. கொழும்பு கொம்பனி வீதியில் அமைந்துள்ள கிவ் வீதி காணி மற்றும் கொழும்பு - 02 கொம்பனி வீதியில் அமைந்துள்ள மோகன் வீதியிலுள்ள காணி என்பவற்றைப் பொருத்தமான முதலீட்டாளருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | இதுவரையில் இந்த அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மஹர கல்வலயில் அமைந்துள்ள காணி கலப்பு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | | | |
| (iii) | 2023 திசெம்பர் 31 இல் 2023 உள்ளவாறு அதிகார சபையினால் மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து மதிப்பீட்டுப் பெறுமதி பெற்றுக்கொள்ளப்படாது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள 214 ஏக்கர் 08 ரூட் 148.25 பேச்சர்ஸ் மற்றும் 15,620 சதுர மீற்றர் அளவான 14 காணித் துண்டுகளாகும். இதன் காரணமாக அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த குத்தகை வாடகை வருமானம் குறைவடைதல் இடம்பெற்றிருந்தது. | குத்தகை உடன்படிக்கையினை மேற்கொண்டு அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை அளவினைத் திர்மானித்து குத்தகை பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும். | **தொடர் இலக்கம்** | **நிறுவனத்தின் பெயர்** | **காரணம்** | இதுவரையிலும் குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| | | | 01 | CICT | இந்த நிறுவனங்கள் கேள்வி கோரி தொடக்க கொடுப்பனவுகளை மேற்கொண்டு நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் விசேட சதவீத்தின் அடிப்படையில் 03 ஆண்டுகளுக்கு அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை இந்த நிறுவனங்களின் குத்தகை வாடகை அதிகரித் | |
| | | | 02 | PVQ Respositary Warehouse Land Melsta Gama Pvt Ltd | | |
| | | | 03 | Tokyo Cement Company PVQ Warehouse 01 | | |

| | | |
|---|---|---|
| **04** | Tokyo Cement - Samudra | துள்ளது. மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படுத்துகின்ற தாமதங்களை இவ்வாறான நடைமுறையின் காரணமாக குறைத்துக் கொள்ளலாம். |
| **05** | NFCL Penna Port Storages Pvt Ltd – PVQ Area | |
| **06** | Insee Cement | |
| **07** | Holcim Cement - Kappalthuri | |
| **08** | SAGT – QEQ Area | அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது. |
| **09** | W. A.Tucke & Co.ltd | இந்த வளவை மீண்டும் ஒப்படைக்குமாறு தெரியப் படுத்தப் |

| | | |
|---|---|---|
| | | பட்டது. |
| **10** | Dialog Axiata PLC. | துறைமுக முன்னோடி இடத்தில் ஒரு சுவரின் மீது நிரந்தரமாக பொருத்தியுள்ள என்டனாவுக்காக முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படுவதுடன் அது வருடாந்தம் 5% வீதம் அதிகரிக்கப்படும். |
| **11** | Ministry of Port & Shipping. | குத்தகை வாடகை முறைப்படியாக செலுத்தப்பட்டு வருவதுடன் குத்தகை உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| **12/13** | Ocean Pick Pvt Ltd. | அரசாங்க மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் குத்தகை உடன்படிக்கைக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உட்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வளவிற்காக வருடாந்தம் 5% படி குத்தகை வாடகை அதிகரிக்கப்படும். | |
| (iv) | திருகோணமலை துறைமுகத்திலுள்ள காணிகளில் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை அனுமதியற்ற குடியிருப்பாளர்களுக்கு எதிராக 2023 யூலை 10 ஆந் திகதி வரை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 147 ஆக இருந்ததுடன் காலப்பகுதியினுள் நீங்கியுள்ள குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை 110 ஆகும். மேலும், நீதிமன்றத்தால் நீங்குதல் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தும் நீங்கி கொள்ளாத நபர்கள் 36 ஆகும். மேலும் திருகோணமலை துறைமுகத்தின் 1,871 ஹெக்டயர் அளவான பெரிய 04 காணித்துண்டுகள் பொருளாதார ரீதியாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது காணப்பட்டது. | 2023 | திருகோணமலை துறைமுக வளவில் அனுமதியற்று குடியிருக்கும் குடியிருப்பாளர்களை நீக்குதல் அல்லது அக்காணிகளை தீர்த்துவைத்தல் வேண்டும். | 2022-01-12 ஆந் திகதியிலிருந்து 2022-05-23 ஆந் திகதி வரை தொடுக்கப்பட்டுள்ள 24 வழக்குகளில் 23 எதிராளிகளையும் நீக்குவதற்காக கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. வழக்கு தாக்கல் செய்வதற்கு உத்தேசித்துள்ள அனுமதியற்ற 46 குடியிருப்பாளர்களுக்கு மத்தியில் 14 நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் 04 நபர்களை நீக்குவதற்காக தற்பொழுது கட்டளைகள் கிடைத்துள்ளன. | வழக்கு நடவடிக்கைகள் இதுவரையில் முடிவடைந்திருக்கவில்லை. |
| (ஈ) | சொத்துக்கள் தொடர்பாக சரியான/ நாளதுவரையாக்கிய அறிக்கையினைப் பேணுவதற்கு | 2023 | உரிய சொத்துக்களை நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து | நிலையான சொத்துப் பதிவேட்டினை இற்றைப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் உரிய | நிலையான சொத்துப் பதிவேட்டினை இற்றைப்படுத் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் மாற்றி அனுப்பப்பட்ட அல்லது விற்கப்பட்ட அல்லது நீக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் புதிதாக கொள்வனவு செய்த நிலையான சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | | நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பது. | வலயம் மற்றும் பிரிவுகளில் இருந்து வழங்கப்பட வேண்டும். அந்த ஆவணங்கள் நிதிப் பிரிவிற்கு கிடைத்தவுடன் நிலையான சொத்துப் பதிவேடு இற்றைப்படுத்தப்படும். | துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் 25 பிரிவுகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஆளணி விபரத்தின் பிரகாரம் 86 பதவிகள் தொடர்பான அங்கீகரித்த ஆளணியினரை மிகைத்து 914 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக (Operations) நேரடித் தொடர்பினைக் கொண்டுள்ள கொள்கலன் செயற்பாட்டுப் பிரிவினால் 726 ஊழியர்கள் வெற்றிடமாகக் காணப்படுகின்றனர் என்பதுடன் அவ்வாறே அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு நேரடியாக தொடர்பினைக் கொண்டிருக்காத 10 பிரிவுகளில் ஊழியர்களுக்கு மீளாய்வாண்டில் மேலதிக நேரக் கொடுப்பனவாக ரூபா. 924 மில்லியன் உள்ளடங்கலாக ஆண்டிற்கான ஒட்டுமொத்த மேலதிக நேர வேலைப்படி ரூபா. 11,968 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | 2021 2022 2023 | முகாமைத்துவத்தினால் ஆளணியினரை செயல்திறனாக சேவையில் ஈடுபடுத்தி மேலதிக நேர வேலைச் செலவுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய அதே வேளை மேலதிக நேர வேலைகளை ஏற்கனவே அங்கீகரித்தல் மற்றும் செய்த வேலைகளின் அறிக்கைகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினுள் பல்வேறு உதவியாளர்கள், சுகாதார ஊழியர்கள், நிழல் பிரதி இயந்திர இயக்குனர்கள், சமையலறை உதவியாளர்கள் ஆகிய பதவிகளில் அப்போது இருந்த ஊழியர்கள் அந்தப் பதவிப் பெயர்களிலேயே இருக்கின்றனர் என்பதனால் அவர்கள் மிகை எனக் காட்டப்பட்டுள்ளனர்.<br><br>வேலை உதவியாளர், தொழிலாளி, பல்வேறு உதவியாளர்கள், சுகாதார ஊழியர்கள், நிழல் பிரதி இயந்திர இயக்குனர்கள், சமையலறை உதவியாளர்கள் ஆகிய பதவிப் பெயர்களின் கீழ் உள்ள ஊழியர்கள் வேலை உதவியாளர்கள் நிறைவேற்றும் பணிகளை மேற்கொள்கின்றனர் என்பதனால் அவர்களும் சேவைத் தேவைப்பாட்டிற்கு அமைய மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்த நேரிட்டுள்ளது.<br><br>கப்பல் மேவுகை | 2024 ஒகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் 35 பிரிவுகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஆளணி விபரத்தின் பிரகாரம் 196 பதவிகள் தொடர்பான அங்கீகரித்த ஆளணியினரை மிகைத்து 919 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அதிகாரசபையின் கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக (Container Operations) நேரடித் தொடர்பினைக் கொண்டுள்ள பிரிவினால் 206 ஊழியர்கள் வெற்றிடமாகக் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கட்டுப்பாட்டாளர் பதவிகள் 102 திட்டமிடப்பட்டு, எழுதுவினைஞர் மற்றும் கணக்கிணக்க மதிப்பீட்டு எழுதுவினைஞர் ஆகிய இரு பதவிகளையும் ஒருங்கிணைத்துள்ளதுடன், அவர்கள் அந்த பதவிப் பெயர்களின் கீழ் கப்பல் மேவுகைக் கட்டுப்பாட்டாளர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுகின்றமையால் அவர்கள் மேலதிக கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். சில பதவிகள் ஒருங்கிணைக்கப்பட்டு புதிய பதவிகள் உருவாக்கப்பட்டு, சில பதவிகள் இரத்தாகும் வகையில் கருதியமையும் அந்த பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்படாமை ஆகிய காரணங்களால் 2024.08.31 ஆந் திகதியில் உள்ளபடியாக ஒட்டுமொத்த பதவியணியின் எண்ணிக்கை 7764 ஆகும். | காணப்படுகின்றனர் என்பது அவதானிக்கப்ட்டது. அவ்வாறே அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு நேரடியாக தொடர்பினைக் கொண்டிருக்காத 8 பிரிவுகளில் 116 ஊழியர்களது மிகை காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் ஊழியர் மிகை காணப்பட்ட பிரிவுகளில் உள்ள ஊழியர்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா. 1,982 மில்லியன் மேலதிக நேரக் கொடுப்பனவு உள்ளடங்கலாக ஆண்டிற்கான ஒட்டுமொத்த மேலதிக நேர வேலைப்படி ரூபா. 5,303 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | அதிகாரசபையிடம் உத்தியோகபூர்வ இல்லங்கள் காணப்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 இல் | 635 | 2022 | உரிய உத்தியோகபூர்வ இல்லங்களை சுற்றறிக்கையின் பிரகாரம் | தற்போது பயன்படுத்தப்பட முடியாத இல்லங்களின் தொகை அதிகரித்துள்ளது. | தற்போது பயன்படுத்தப்பட முடியாத இல்லங்களின் தொகை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உள்ளவாறு குடியிருத்தல் 05 ஆண்டுகளை (2018 ஆம் ஆண்டிற்கு முன்னர்) மிகைத்த 399 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் 05 ஆண்டுகளுக்குள் (2018-2022) வழங்கிய 205 உத்தியோகபூர்வ இல்லங்களுடன் மொத்தமாக 604 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 31 உத்தியோகபூர்வ இல்லங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | | பயன்படுத்துதல் வேண்டும். | | அதிகரித்திருக்கின்றது. |
| (எ) | 2022 இன் 14 ஆம் இலக்க மிகைக் கட்டண வரி அதிகாரச் சட்டத்தின் 2(1)(அ) பிரிவின் பிரகாரம், 2020/21 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் வரி அறவிடக் கூடிய வருமானம் ரூபா 4,787.77 மில்லியன் மீது கணிப்பீடு செய்கையில் மிகைக்கட்டண வரி ரூபா 1,196.94 மில்லியனாக இருந்த போதிலும் அதிகாரசபை ரூபா 1,952.2 மில்லியனை மிகைக்கட்டண வரியாகச் செலுத்தியிருந்தது. மேலும் இவ்வாறு மிகையாகச் செலுத்திய ரூபா 755.33 மில்லியன் பணம் 2022 இன் 14 ஆம் இலக்க மிகைக் கட்டண வரி அதிகாரச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் பிரகாரம் மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022<br>2023 | மிகையாகச் செலுத்திய மிகைக்கட்டண வரியினை விரைவாக மீண்டும் அறவீடு செய்வதற்கு அல்லது செலுத்த வேண்டிய வருமான வரிகளிலிருந்து எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த மிகையாக செலுத்திய மிகைக்கட்டண வரி எழுந்துள்ளது 2020/2021 வருமான வரி அறிக்கையினை மீண்டும் திருத்தம் செய்ததன் காரணத்தினால் ஆகும். இந்த திருத்தத்தினைப் போல மீண்டும் அறவீடு செய்வதற்கான வேண்டுகோள்களும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் முதலாவதாக 2020/2021 வரி அறிக்கையினை திருத்தம் செய்யும் நடவடிக்கை தற்பொழுது வருமான வரி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அது முடிவடைந்ததன் பின்னர் மிகைக்கட்டண வரியினை மிகையாகச் செலுத்தியதனை மீண்டும் அறவீடு செய்யக் கூடியதாக இருக்கும். | மிகைக்கட்டண வரியினை மீள அறவீடு செய்வதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**2.2. தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காங்கேசந்துறை | 2021 | நடைமுறைச் | 2018 சனவரி 10 ஆந் | இந்த |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | துறைமுகத்தை புனரமைப்புச் செய்வதற்காக இலங்கை அரசாங்கம் இந்திய EXIM வங்கியுடன் அ.ஐ.கு டொலர் 45.27 மில்லியன் கடன் தொகையை பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை செய்திருந்தது. எனினும் அக்கடன் தொகை போதுமானதாக இல்லை என முன் அறிந்து கொள்ளப்பட்டு அ.ஐ.கு டொலர் 16.23 மில்லியன் மேலதிக தொகையுடன் அ.ஐ.கு டொலர் 61.5 மில்லியன் வரை அக்கடன் தொகையை அதிகரிக்கச் செய்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் இந்திய அரசாங்கம் அதனை அங்கிகரித்திருக்கவில்லை. எனவே துறைமுகத்தின் நிர்மாண நடவடிக்கைகள் இதுவரை ஆரம்பித்திருக்கவில்லை. அவ்வாறே கடன்பணத்தில் அ.ஐ.கு டொலர் 0.905 மில்லியன் (அ.ஐ.கு டொலர் 905,194.38) மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் பெற்றுக்கொள்ளப்படாத கடனுக்காக கடப்பாட்டு கட்டணமாக (Commitment Charges) அ.ஐ.கு டொலர் 32,048.73 (ரூபா 9.2 மில்லியன் தொகையும் கடன் வட்டியாக அ.ஐ.கு டொலர் 37,042.48 (ரூபா 11.14 மில்லியன்) தொகையும் சிக்கனமற்ற செலவாகியிருந்தது. | 2022<br>2023 | சாத்தியமான வகையில் திட்டங்கள் தயாரிக்காமை மற்றும் திட்டமிட்டவாறு செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தாமையால் கடப்பாட்டுக் கட்டணம் மற்றும் விலை முரண்கள் போன்ற சிக்கனமற்ற செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படுவதனால் திட்டங்கள் முடியுமான அளவு நடைமுறைச்சாத்தியமாக இருத்தல் வேண்டும். | திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய EXIM வங்கிக்குமிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் பெறுபவரான இலங்கை அரசாங்கம் இந்தியாவின் EXIM வங்கிக்கு கடப்பாட்டு கட்டணமும் வட்டியும் செலுத்துதல் வேண்டும். வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் இக்கொடுப்பனவினை இலங்கை துறைமுக அதிகாரசபை மேற்கொள்வதற்கு சிபாரிசினை சமர்ப்பிக்கையில் இலங்கை துறைமுக அதிகாரசபை கடப்பாட்டுக் கட்டணம் மற்றும் வட்டிக் கொடுப்பனவு கண்டிப்பான அதேவேளை அது இலங்கை துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும். | செயற்திட்டம் இதுவரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.3. பெறுகை முகாமைத்துவம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் 2023 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய | 2023 | பெறுகை வழிகாட்டிக் | PA/HD/25 ஆம் இலக்க பணிப்பாளர் சபை | மோட்டார் வாகனங்களை |

| | | | |
|---|---|---|---|
| PAM/195/2023 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு அதிகாரசபைக்குத் தேவையான இயலளவு 2000cc - 3000cc வாகனங்களை வழங்குவது சம்பந்தமான பெறுகையின் போது தேசிய போட்டி கேள்வி (NCB) முறைமையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டிற்காக வருடாந்த வாடகை ரூபா. 20 மில்லியன் பெறுமதியான 03 வாகனங்களுக்கான பெறுகையின்போது வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கு தேசிய போட்டி விலைக் கேள்வி முறைமை பின்பற்றப்படவில்லை. | கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அங்கீகாரத்தின் பிரகாரம் தலைவர் உபதலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் அலுவலகங்களுக்கு பொருத்தமான வாகனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ள வாடகைக்குப் பெற்றுக் கொள்ளும் பெறுகைகளுக்காக வழங்குனர்களைத் தெரிவு செய்யும் போது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 3.159 வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 12,471,081,730 | 20,385,307,920 | (7,914,226,190) | (4,567,786,074) | முனைப்பழியுள்ள |
| **2022** | 13,136,693,198 | 22,346,787,526 | (9,210,094,328) | (433,605,111) | முனைப்பழியுள்ள |
| **2023** | 11,032,441,459 | 19,390,642,311 | (8,358,200,852) | 1,174,795,701 | - |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் வருடம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்விற்குட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கை | அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|

**1.1 கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்**

| | | | | |
|---|---|---|---|---|
| 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 1,857,129,766 ஆக இருந்ததுடன் திரண்ட நட்டம் ரூபா 10,855,139,608 ஆகும். மேலும் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,210,094,328 மறைப் பெறுமதியாகும். ஆண்டிற்கான நட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 67.79 சதவீத்தினால் குறைவடைந்திருந்ததுடன் கம்பனியின் தேறிய சொத்துக்களின் மறை மீதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.37 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. கம்பனி இரண்டு கப்பல்களை கொள்வனவு செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது அமெரிக்க டொலர் 70 மில்லியன் தொகையான தவணைக்கடன் (Term Loan) மற்றும் அக்கடன் வட்டியினைச் செலுத்துவதற்கு டொலர் 5.44 மில்லியன் தொகை | 2021/2022<br>2022/2023 | கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருப்பதனை பாதுகாப்பதற்காக விசேட பொதுச் சபை கூட்டங்களில் எடுக்கப்பட்ட நிதி ரீதியான நட்டத்தை குறைக்கும் நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுத்தல் வேண்டும். | அதிவிசேட பொதுக்கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு<br>1.மிதக்கும் கப்பல்துறை எரிபொருள் களஞ்சியமொன்றை செயற்படுத்தல்.<br>2.இலங்கைக் கொடியின் பதிவை ஊக்குவித்தல்.<br>3.பயணிகள் மற்றும் நுரைச் சோலையில் சரக்கு போக்குவரத்திற்காக படகு ஒன்றை அமைத்தல்.<br>4.காங்கேசந்துறையிலிருந்து பெயரிடப்பட்ட இந்திய துறைமுகம்/துறைமுகங்களுக்கு இடையே பயணிகள் மற்றும் கப்பல்துறை சரக்குப் போக்குவரத்து கப்பலொன்றை செயற்படுத்தல்.<br>5.நுரைச்சோலை | இதில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகள் தற்போது செயற்படு நிலையில் இல்லை. |

மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் செலுத்தப்பட்ட தவணைக் கடன் வட்டி மூலதமாக்கிய கடன் மற்றும் அவை தொடர்பான வட்டி ரூபா 2,828,293,385 தொகை கம்பனியால் மக்கள் வங்கிக்கு செலுத்துவதன் அடிப்படையில் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான ஐக்கிய குடியரசு டொலர் கடன் மீதியை இலங்கை ரூபாவிற்கு பரிமாற்றம் செய்யும் போது ரூபா 2,811,891,329 தொகையான நாணயமாற்று நட்டம் ஏற்பட்டிருந்தமை கம்பனியின் ஒட்டுமொத்த நட்டத்திற்கு காரணமாக இருந்தது. அதற்கிணங்க கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் சம்பந்தமாகக் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மை தொடர்பாக தெளிவான அடையாளம் உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. இந்நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்காக 2021 யூலை 30 ஆந் திகதி நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தின் போது (EGM) கம்பனியின் நடவடிக்கைகள் பிரேரிக்கப்பட்டிருந்தும் அந்த நாணயமாற்று நட்டத்தினை குறைக்கும் நடவடிக்கையை அமுல்படுத்துவதற்கு கம்பனிக்கு முடியாதிருந்ததுடன் 2023 மார்ச் 24 ஆந் திகதி நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தின் போது அதற்காக புதிய 06 தொழில் முயற்சி செயற்திட்டங்கள் மேலும் பிரேரரிக்கப்பட்டிருந்தன.

.

கப்பல் கட்டும் தளத்தில் இருந்து ஜெட்டிக்கு கற்களை கொண்டு செல்வதற்கு 05 சுயமாக இயக்கப்படும் படகுகளை அமைத்தல்.

6.இலங்கை மற்றும் பங்களாதேசுக்கு இடையில் கொள்கலன் ஊட்டி சேவையொன்றை செயற்படுத்தல்.

7.கப்பல் கூட்டுத்தாபனத்தில் புதிதாக நிறுவப்பட்ட புதிய வணிக ஊக்குவிப்பு பிரிவின் சேவை பல்வகைப்படுத்தலின் கீழ் புதிய வணிக வாய்ப்புகளுக்கான அணுகல்.

8.பொருட் போக்குவரத்து சேவைகள் (Logistics Services) தொடர்பாக எங்களால் உருவாக்கப்பட்ட புதிய வணிக வாய்ப்புகள்.

i. கல்வி அமைச்சிற்கு கொண்டு வரப்படுகின்ற உத்தியோகபூர்வ சீருடை இருப்புக்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

ii.அரச அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு கொண்டு வரப்படுகின்ற காகித இருப்புக்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

iii.கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் கொண்டு வரப்படுகின்ற அரிசி இருப்புக்களின்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | போக்குவரத்து மற்றும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br><br>iv. இலங்கை கேட்டரிங் நிறுவனம், Anti-Leco Metering மற்றும் பிற தனியார் நிறுவனங்களுக்கு கடல் மற்றும் விமானம் மூலம் சரக்கு போக்குவரத்தை மேற்கொள்ளல்.<br><br>v. உலக வங்கியின் ஊடாக கல்வி அமைச்சினால் பெறப்பட்ட உலர் உணவு இருப்புக்களை தீவிலுள்ள பாடசாலைகளுக்கு விநியோகித்தல்.<br><br>vi. கல்வி அமைச்சிற்கு பூசப்பட்ட காகித பலகைகள் மற்றும் கொள்கலன் தகடுகளின் (coated paper boards and container plate) போக்குவரத்து மற்றும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | |

## 1.2 பெறவேண்டிய மற்றும் செலத்த வேண்டிய கணக்குகள்

| | | | | |
|---|---|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் 2023 மார்ச் 31 ஆந் திகதியிளவில் வரையறுத்த கப்பல் கூட்டுத்தாபனத்தினால் அறவிட வேண்டிய வணிக கடன்பட்டோர் பெறுமதி ரூபா 2,070,761,878 ஆகும். அவற்றில் ரூபா 1,034,044,153 தொகையானது 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் அறவிட முடியாத மீதியாக இருந்ததுடன் ரூபா 257,530,960 தொகை 01 ஆண்டிலிருந்து 04 ஆண்டுகள் வரை அறவிட | 2021/2022<br>2022/2023 | கடன்பட்டோர்களிடமிருந்து பணத்தை சேகரிப்பதற்காக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையை பின்பற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். . | 2022 ஆகஸ்ட் 19 அன்று நடைபெற்ற சிரேஷ்ட முகாமைத்துவத்தின் முடிவின்படி, முக்கியமாக நீண்ட கால கடனை வசூலிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது. மேலும், பொது முகாமையாளரின் அறிவுறுத்தலின்படி, | கம்பனிக்கு வசூலிக்கப்பட வேண்டிய கடன்களின் மொத்தத் தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2024 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையில் இல் அறவிடப்பட வேண்டிய |

| | | | | |
|---|---|---|---|---|
| முடியாத மீதியாக இருந்ததுடன் 2022/2023 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வணிக கடன்பட்டோர் பெறுமதி ரூபா 779,186,765 ஆகும். மேற்கூறிய வணிக கடன்பட்டோர்களுக்கு மத்தியில் உள்நாட்டு அரசாங்க மற்றும் அரசாங்கம் சார்ந்த நிறுவனங்களிடமிருந்து கம்பனியால் அறவிட வேண்டிய பணம் ரூபா 1,525,359,729 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா 618,045,453 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன்பட்டோர் எனவும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய வெளிநாட்டு மற்றும் ஏனைய வணிக கடன்பட்டோர்களிடமிருந்து 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 163,752,420 எனவும் வெளிப்படுத்தப்பட்டது. | | | சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவுத் தலைவர்கள் மற்றும் குழு உறுப்பினர்கள் உட்பட பொது முகாமையாளர் தலைமையில், மாதாந்தம் நடாத்தப்பட்டன. | உள்நாட்டு அரச வர்த்தகக் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 230,468,193 மற்றும் வெளிநாட்டு வர்த்தகக் வர்த்தகக் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 361,367,994 ஆக இருந்தன. |

## 1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீமானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கம்பனியால் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட தாமதத்துடன் 2024 ஆகஸ்ட் 02 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2021/2022<br>2022/2023 | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க கணக்காண்டு முடிவடைந்து உரிய காலத்திற்குள் கம்பனியால் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2024/25 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை உரிய தேதியில் சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக, பதில் கடமை பொது முகாமையாளரின் தலைமையில் நிதிப்பிரிவின் அதிகாரிகளுடன் காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்பட்டதுடன், அதில் கண்டறியப்பட்ட சிரமங்கள் மற்றும் தடைகளுக்கு தீர்வுகளுடன் முன்னோக்கி கொண்டு செல்லப்படும். மேலும், நிதிப்பிரிவிற்கு புதிய கணினி அடிப்படையிலான கணக்கியல் அமைப்பொன்று நிறுவப்பட்டு வருவதுடன் , அதன் முறையாக நிறுவப்பட்டதன் பின்னர் மாதாந்த நிதி | 2023/24 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2024 ஆகஸ்ட் 02 இல் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கையின்படி உரிய திகதியில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமாக இருக்கும். | |

## 2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| ை. 2016 சனவரி 21 ஆந் திகதிய அமைப16/0035/737/003 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மற்றும் 2005 மே 06 ஆந் திகதிய 415 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அனைத்து அரசாங்க நிறுவனங்களும் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டியதானது வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினூடாக என்பதுடன் அதன் போது கம்பனி அரசாங்க நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். 2019 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையான 04 ஆண்டுகள காலத்தினுள் அரசாங்க துறையில் பொருட்களை இறக்குமதி செய்கின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையை பரீட்சித்த போது வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினூடாக பொருட்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை ஒப்பீட்டு ரீதியாக குறைவடைந்து காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது. | 2021/2022 2022/2023 | அரசாங்க நிறுவனங்கள் கப்பல்களின் மூலம் பொருட்களை இறக்குமதி செய்யும் போது கப்பல் கூட்டுத்தாபனத்தினூடாக போக்குவரத்து செய்வதற்கு முகாமைத்துவத்தினால் உரிய நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.. | துறைமுக கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் MPS/P&D/02/04/08/Vol-02 மற்றும் 2022 நவம்பர் 29 ஆம் திகதிய அனைத்து அமைச்சு செயலாளர்கள் மற்றும் அனைத்து உள்ளூராட்சிச் செயலாளர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாகவும், கப்பல் கூட்டுத்தாபனத்தின் முயற்சிகளுக்கு பங்களிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 2023/24 நிதியாண்டில் (2023 ஏப்ரல் 1 முதல் 2024 மார்ச் 31 வரை), பௌதீக செயல்திறன் (Physical Performance) இருபது அடிக்கு (Twenty-foot equivalent units) 1052 அலகுகளாக இருந்ததடன் பொருட்கள் இறக்குமதி/ஏற்றுமதி செய்யப்பட்ட தவணைகளின் எண்ணிக்கை 1073 ஆக இருந்தது.<br><br>2024 ஏப்ரல் 01 முதல் செப்டம்பர் 30 வரை, பௌதீக செயல்திறன் அண்ணளவாக இருபது அடிக்கு (Twenty-foot equivalent units) 573 அலகுகளாக இருந்துடன் பொருட்கள் இறக்குமதி/ஏற்றுமதி செய்யப்பட்ட தவணைகளின் எண்ணிக்கை 450 ஆக இருந்தது. | முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது கணிசமானளவு முன்னேற்றமொன்று அடையப்படவில்லை. |

| ஆண்டு | 2019/20 | 2020/21 | 2021/22 | 2022/23 |
|---|---|---|---|---|
| நிறுவனங்களின் எண் | 28 | 22 | 23 | 27 |

| | | | | |
|---|---|---|---|---|
| ணிக்கை இறக்குமதி தவைணகளின் எண்ணிக்கை | 2,357 | 1,925 | 1,300 | 821 |

| | | | | |
|---|---|---|---|---|
| ை. 415 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையிலுள்ள எற்பாடுகளின் பிரகாரம் வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் கைவிடுதல் வழங்க முடியாததானது அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமாக இறக்குமதிப் பொருட்களை போக்குவரத்து செய்வதற்கு சிக்கலான சந்தர்ப்பங்களில் மாத்திரமாகும். கம்பனிக்கு செலவு செய்வதற்கு ஏற்படும் கப்பல் வாடகையானது வழங்குனரினால் இணங்கி கொள்ளப்பட்ட கப்பல் வாடகையினை விட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தின் போது அது பற்றி கைவிடுதல் அறிவித்தலின் மூலம் இறக்கமதியாளருக்கு தெரியப்படுத்த வேண்டிய போதிலும் கப்பலில் ஏற்றியதன பின்னர் கைவிடுதல் அறிவித்தலினை வேண்டியிருத்தல் அவசர கொள்வனவுகளின் காரணமாக CIF விலைகளின் அடிப்படையில் பெறுகைகளை வழங்கியிருத்தல் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் கம்பனியால் 2019/20 ஆம் ஆண்டின் போது 319 எண்ணிக்கையும், 2020/21 ஆம் ஆண்டின் போது 298 எண்ணிக்கையும், 2021/22 ஆம் ஆண்டின் போது 185 எண்ணிக்கையும், 2022/23 ஆம் ஆண்டின் போது 118 எண்ணிக்கையும் ஆக | 2021/2022<br>2022/2023 | அரசாங்க நிறுவனங்கள் கப்பல்களின் மூலம் பொருட்களை இறக்குமதி செய்யும் போது கப்பல் கூட்டுத்தாபனத்தினூடாக போக்குவரத்து செய்வதற்குரிய நடவடிக்கைக் முகாமைத்துவத்தினால் எடுக்கப்படுதல் வேண்டும்.. | கம்பனியினால் வழங்கப்படுகின்ற முழு கைவிடுதல் அறிவித்தல் எண்ணிக்கையில் மிகவும் அதிக அளவானவை இத்தொகுதியின் கீழ் வழங்கப்படுவதுடன் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரதான நிறுவனமாக சுகாதாரப் பிரிவுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அந்த நிறுவனங்களில் உள்ள கட்டமைப்பினைப் போல இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் பாரிய அளவு காரணமாக பின்பற்றப்படுகின்ற பல்வேறு கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இதற்கு தாக்கமளித்துள்ளது.<br><br>எவ்வாறாயினும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் வழக்கம் போல போக்குவரத்திற்காக உரிய நிறுவனத்தினால் எங்களுக்கு விசாரணைகள் வழங்கப்படுமாயின் அவற்றிற்குரிய போக்குவரத்து நடவடிக்கைகளை கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் நிறைவேற்றும் இயலுமை | கப்பல் கட்டணத்தை திருத்தியமைத்து கைவிடப்பட்ட அறிவிப்புகளை குறைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லைல. |

| | | | | |
|---|---|---|---|---|
| சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக கைவிடுதல் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. | | | காணப்படக்கூடியதாக இருந்ததுடன் வெளிநாட்டு நாணயம் வெளிச்செல்லும் அளவினைக் குறைத்து வெளிநாட்டு நாணயத்தினை நாட்டிற்குள் சேமிக்கக்கூடியதாகவும் இருந்ததானது உரிய பெறுகைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்கள் கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் போன்ற பெறுகை நடைமுறைகளின் போது இது தொடர்பாக கவனம் செலுத்துமாக இருந்தால் மாத்திரமாகும். | |
| ைை. முழுமையாக அரசாங்கத்திற்கு உரிமையுள்ள ஒரு கம்பனியாக அரசாங்கத்துறையின் இறக்குமதிப் பொருட்களை போக்குவரத்துச் செய்வதன் மூலம் கம்பனியின் இலாபத்தன்மையை அதிகரிக்கச் செய்வது போல வெளிநாட்டு கப்பல் கம்பனிகளின் மூலம் மேற்கொள்கின்ற அரசாங்க நிறுவனங்களின் போட்டியான கப்பல் கட்டளை முறைமையின் அடிப்படையில் கம்பனிக்கு சொந்தமாக்கி கொள்ளும் பொறுப்பு கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் கம்பனியின் போக்குவரத்து கட்டணமானது இறக்குமதியுடன் சம்பந்தப்பட்ட வழங்குனர்களின் கப்பல் கட்டணத்தை விட அதிகரித்ததன் காரணமாக 2019/2020 ஆம் ஆண்டிலிருந்து 2022/2023 ஆம் ஆண்டு வரை 04 ஆண்டுகளில் இக்கைவிடுதல் அறிவித்தல் முறையே 174, 163, 150 மற்றும் 67 எண்ணிக்கையானவை வழங்கப்பட்டிருந்தன. | 2021/2022<br>2022/2023 | கப்பல் துறையில் காணப்படுகின்ற தீவிரமான போட்டி நிலைமையின் கீழ் பொருள் போக்குவரத்தினை கம்பனிக்கு சொந்தமாக்கிக் கொள்ளும் முறையான விலையைத் தீர்மானிக்கும் நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும்.. | வழக்கமான கப்பல் சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களின் விநியோகப்பிரிவுகளின் பணிக்குழுக்களுக்கு இடையே 2023 திசெம்பர் மற்றும் 2024 சனவரி மாதங்களில நடைபெற்ற கலந்துரையாடல்களிலும் , அரச நிதிச் சுற்றறிக்கை 415 இன் பிரகாரம் செயல்பட வேண்டியதன் அவசியம் சுட்டிக்காட்டப்படடிருந்ததுடன் கைவிடுதல் அறிவிப்புகளை அவசிய சந்தர்ப்பங்களில் மட்டும் வெளியிடுவது குறித்து அவர்களின் கவனம் கோரப்பட்டிருந்தது. | கப்பல் கட்டணத்தை திருத்தியமைத்து கைவிடப்பட்ட அறிவிப்புகளை குறைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லைல.. |
| ைஎ. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்குரிய இராஜதந்திர | 2021/2022 | பதிலில் காட்டப்பட்டுள்ள | எதிர்பாராத வகையில் பொருளாதாரத்தில் | வெளிவிவகார அமைச்சினால் |

| | | | | |
|---|---|---|---|---|
| உத்தியோகத்தர்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பயணப் பொதிகள், பொருட்கள் என்பவற்றை நகர்த்துதல், பொதிசெய்தல், போக்குவரத்துச் செய்தல், விடுவித்தல் என்பன வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் சேவைகளை வழங்குகின்ற நிறுவனமான வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் உரிய விலைகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய போதிலும் அது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் 2023 சனவரி 25 ஆந் திகதி FA/OAM& D/HD/CSC/GEN ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் விலைகள் தீர்மானிக்கப்படுகின்றது என வெளிப்படுத்தப்பட்டது. | 2022/2023 | வாறு வெளிவிவகார அமைச்சுடன் தொடர்புகொண்டு உரிய கட்டணத்தை திருத்தம் செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இடம்பெற்ற மாற்றங்களுக்கு ஒத்த வகையில் எங்களின் சேவைகளுக்கான கட்டணங்களை அதிகரிக்குமாறு 2022-05-31, 2022-07-05 மற்றும் 2022-10-20 ஆந் திகதிகளில் எழுத்து மூலமும் அதற்கு மேலதிகமாக இருதரப்பினர்களுக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் மூலமும் வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்தும், வெளிவிவகார அமைச்சில் காணப்பட்ட மதிப்பீடுகள், வரவு செலவுத் திட்டம் மற்றும் பிற நடைமுறை விடயங்களுக்கு மேலதிகமாக நாட்டில் ஏற்கனவே நிலவிய நிதி உறுதியற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, கம்பனியால் கோரப்பட்ட விலைகளை முழுமையாக செலுத்த முடியாது என்று அவர்கள் தெரிவித்திருந்ததுடன் அண்ணளவாக 25% அளவிலான கட்டணத்தை அதிகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு எதிர்காலத்தில் எமது கோரிக்கைகளை கருத்திற் கொள்வதற்கும் ஒப்புக்கொள்ளப்பட்டது. | விலை திருத்தக் கோரிக்கைகள் அல்லது விலை திருத்தம் தொடர்பான மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

## 2.2 பெறுகை முகாமைத்துவம்

| | | | | |
|---|---|---|---|---|
| ை. 2020 நவம்பர் 10 ஆந் திகதி வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் மற்றும் TERO MARINE ASIA | 2021/2022<br>2022/2023 | கம்பனியின் எதிர்கால செயற்பாட்டு நடவடிக்கைகளு | தொடர்புடைய கணினி அடிப்படையிலான செயற்பாட்டு அமைப்பு தற்போது செயல்பாட்டில் | கணினி அடிப்படையிலான கப்பல் முகாமைத்துவ அமைப்பின் |

| | | | | |
|---|---|---|---|---|
| PACIFIC PTE LTD உடன் 06 மாத கால எல்லைக்காக கம்பனியின் கப்பலுக்காக கணனி அடிப்படையிலான கப்பல் முகாமைத்துவ முறைமையினை அமுல்ப்படுத்துவதற்கு USD 102,800 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. முதலாவது ஆண்டில் 03 கட்டங்களில் இந்த முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் முற்பணத்திற்காக ரூபா 2,903,208 (USD 15,400) மற்றும் முறைமையின் திட்டத்தை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக ரூபா 1,563,087 தொகையாக (USD 7,700) ரூபா 4,466,295 தொகை செலவு செய்து 02 கப்பல்களுக்கு முறைமை ஸ்தாபிக்கப்பட்டு 3 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் இந்த கணனி முறைமை அமுல்ப்படுத்தப்படாது காணப்பட்டதுடன் கம்பனியின் எதிர்கால செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்பது தொடர்பாக முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக உரிய செலவு விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | | க்காக இக்கணனி முறைமையை ஈடுபடுத்துவதா இல்லையா என்பது தொடர்பாக முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்து முறையான தீர்மானம் எடுத்தல் வேண்டும். | உள்ளதுடன் பெறுகை அமைப்பு மட்டுமே எதிர்காலத்தில் கொள்வனவு செய்யப்படுமா இல்லையா என்பது குறித்து மீளாய்வு செய்யப்பட உள்ளது. எதிர்காலத்தில் குறித்த நிறுவனத்திற்கு 15,400 டொலர் தொகையொன்று குறிப்பிட்ட நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் செலுத்தப்படவுள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பெறுகை அமைப்பு தற்போது செயல்படவில்லை |
| ஐ. புத்தளம் லக்விஜய அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரியை போக்குவரத்து செய்யும் கப்பல்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக கேள்வி மனுக்களை கோரி தெரிவுசெய்யப்பட்ட 02 படகுச் சேவைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் | 2022/2023 | பத்திரிகை அறிவித்தலுக்கு மேலதிகமாக உரிய பிரதேசத்திலுள்ள மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து இன்னும் | தேவையான படகு சேவையை வழங்குவதற்காக புதிய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2024 செப்டம்பர் 26 இல் செய்தித்தாள் விளம்பரங்கள் | தேவையான படகு சேவையை வழங்குவதற்காக புதிய பெறுகை நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இன்னும் பழைய படகு சேவையே நடைபெற்று வருகிறது. |

குழு அறிக்கையின் பிரகாரம் சர்வதேச வகைப்படுத்தப்பட்ட கம்பனிகள் சம்மேளத்தின் அங்கத்துவ கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட செல்லுபடியாகும் கடல் பயணத்திற்கான பொருத்த தன்மை சான்றிதழினை (Seaworthiness Certificate) அல்லது வகைப்படுத்தப்பட்ட கம்பனிகள் சான்றிதழினை சமர்ப்பிக்காமை தொழில்நுட்ப மதிப்பீட்டின் போது குறிப்பிடத்தக்க அளவில் விடையளித்திருககாமை ஆகிய விடயங்களின் காரணமாக ஒப்பந்தம் வழங்குதல் சிபாரிசு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கரையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் (Designated Person Ashore - DPA) படகுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது இந்த இரண்டு கேள்விதாரர்களும் கேள்வி கோரலில் குறிப்பிட்ட வரையறைகளை நிறைவேற்றியிருக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டதுடன் 2014/15 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இந்த படகு வழங்குனர்கள் இருவர் மாத்திரம் கேள்வி மனுக்களை சமர்ப்பிக்கின்ற நிலைமை காணப்படுகின்றது எனவும் இந்த வழங்கனர்கள் சம்பந்தமாக காணப்படுகின்ற சேவை நம்பகத்தன்மையினை அடிப்படையாகக் கொண்டு சேவைத் தேவைப்பட்டினைக் கருதி வேண்டிக் கொண்டவர்கள் இருவரும் சமர்ப்பித்த விலை மனுக்களுக்கு 2022 செப்தெம்பர் 21 ஆந் திகதி இக்பெறுகை வழங்கப்பட்டிரந்தது. 2023/24 ஆம் ஆண்டின் போதும் இச்சேவைக்காக இந்த இரண்டு வழங்குனரிடமே

கேள்வி மனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அச்சேவைகளில் காணப்படும் குறைபாடுகளை குறைப்பதற்கும் முகாமைத்துவத்தினால் முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வெளியிடப்பட்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக உள்ளூர் சமூகத்திற்கு தெரிவிக்கும் வகையில் செய்தித்தாள் விளம்பரங்களுக்கு மேலதிகமாக, கல்பிட்டி பிரதேச சபை, கல்பிட்டி மீன்பிடி பணிப்பாளர் மற்றும் நுரைச்சோலை நீரியல் வளங்கள் திணைக்களம் போன்ற தரப்பினருக்கு தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பெறுகை வழங்கப்பட்டிருந்ததுடன் படகுகள் தொடர்பான கேள்விகோரும் வரையறைகள் நிறைவேற்றப்பட்டிருக்காமையின் காரணமாக அதில் பயணம் செய்கின்ற உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு தொடர்பாக சிக்கல் காணப்படுகின்றது எனவும் அக்குறைபாட்டின் காரணமாக சில விபத்துக்களின் போது காப்புறுதி பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளும் ஆபத்து காணப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது

## 3.160 அனுராதபுரம் பல்கலைக்கழக கல்லூரி

| | மொத்த சொத்துக்கள் (ரூ.) | மொத்த பொறுப்புகள் (ரூ.) | சமபங்கு (ரூ.) | பற்றாக்குறை (ரூ.) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 223,894,642 | 9,602,428 | 214,292,214 | 54,545 | முனைப்பழியற்ற அபிப்பிராயம |
| **2022** | 199,345,340 | 11,088,537 | 188,256,802 | (26,243,336) | முனைப்பழியற்ற அபிப்பிராயம |
| **2023** | 196,724,147 | 11,343,360 | 185,380,787 | (17,949,496) | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | அனுராதபுரம் பல்கலைக்கழக கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டுள்ள 02 ஏக்கர் 03 றூட் 17 பேர்ச் பரப்பளவை உடைய நிலத்தில் 01 ஏக்கர் அளவிலான நிலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் 600 மாணவர்கள் அளவில் வருடாந்தம் கல்வி பயிலுகின்றனர். இருப்பினும் காணியின் உரித்தினைப் பெற்றுக்கொள்ளுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மிகுதியானவுள்ள 01 ஏக்கருக்கு மேற்பட்ட காணியை கல்லூரியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு மிளாய்வாண்டின் இறுதிவரையிலும் தவறியிருந்தது. | 2022 | காணியின் உரித்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன் மொத்த காணியும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக அபிவிருத்தி செய்தல் வேண்டும். | உரிய காணியை கல்லூரிக்கு கையளிக்குமாறு தற்போது தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கும், வரிசை அமைச்சிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என. | காணியின் உரித்தை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமையால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. |

## 3.161 யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரி

| | மொத்த சொத்துக்கள் (ரூ.) | மொத்த பொறுப்புகள் (ரூ.) | சமபங்கு (ரூ.) | பற்றாக்குறை (ரூ.) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 266,953,701.97 | 10,140,612.97 | 256,813,089.00 | (3,578,609.90) | முனைப்பழியுள்ள |
| **2022** | 504,749,669.86 | 11,722,513.30 | 493,027,156.56 | 216,483.32 | முனைப்பழியுள்ள |
| **2023** | 527,440,944.61 | 12,252,033.86 | 515,188,910.75 | (38,245,345.38) | முனைப்பழியற்ற |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | கடந்த 3 வருட காலத்தில் இக் கல்லூரியில் கல்விகற்ற 678 மாணவர்களில் 125 மாணவர்கள் கற்கை நெறிகளை பூர்த்தி செய்யாமல் விட்டு விலகியிருந்தனர். | 2023 | மாணவர்களின் விட்டு விலகல் வீதத்தை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொவிட்-19, இலங்கையின் பொருளாதார நிலை மற்றும் ஏனைய வாய்ப்புக்களால் விட்டு விலகலானது கல்லூரிகளுக்கு ஒரு பிரச்சினையாக உள்ளது. | 2022 ஆம் ஆண்டின் கடைசிப் பிரிவில் கல்விகற்ற 264 மாணவர்களில் 17 மாணவர்கள் மட்டுமே விட்டு விலகியிருந்தனர். |

## 3.162 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

| | மொத்த சொத்துக்கள் (ரூ.) | மொத்த பொறுப்புகள் (ரூ.) | சமபங்கு (ரூ.) | பற்றாக்குறை (ரூ.) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 17,556,649,045 | 6,014,150,907 | 11,542,498,138 | 632,791,840 | முனைப்பழியான அபிப்பிராயம் |
| **2022** | 27,030,548,313 | 9,393,173,006 | 17,637,375,307 | 7,790,334,318 | முனைப்பழியான அபிப்பிராயம் |
| **2023** | 27,904,084,795 | 9,006,870,655 | 18,897,214,140 | 7,783,933,513 | முனைப்பழியான அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை<br><br>மற்றும் 2021 ஒக்தோபர் 14 மற்றும் 2022 பெப்ரவரி 10 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்கள கடிதங்களுக்கு முரணாக 2002 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் படிகளை உள்ளடக்கிய சம்பளத்தைக் போன்று 12 மடங்கினால் இடர் கடனாக செலுத்துவதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்த காரணத்தால் மீளாய்வாண்டில் 525 உத்தியோகத்தர்களுக்கு எல்லையை | 2021<br><br>2022 | பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எல்லையை மிகைத்து கடன் வழங்தலை மேற்கொள்ள முடியாதென பணியகம் தெரியப்படுத்தப்பட்டுள்ளதால் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | சட்டத்தின் உப பிரிவுகள் 16(2) (உ) மற்றும் (ஊ) இன் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன், 01.05.1995 முதல் ஊழியர்களுக்கு இடர் கடன் வழங்கப்பட்டு வருவதுடன் 31.12.2008 அன்று வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 30.்.2008 பொது நிர்வாகச் சுற்றறிக்கையை அரச கூட்டுத்தாபனங்களுக்கும் நியதிச் சட்ட சபைகளுக்கும் தொடர்புபடுத்திக் கொள்ள முடியுமா என்பது குறித்து தெளிவுபடுத்துமாறு பொது நிர்வாக | சுற்றறிக்கையை அரச கூட்டுத்தாபனங்களுக்கு தொடர்புபடுத்திக் கொள்ள முடியுமா என்பது குறித்து பொது நிர்வாக அமைச்சிற்குக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பணியகத்தால் இடர் கடன் அவ்வாறே செலுத்தப்பட்டு வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மிகைத்து ரூபா 67,673,231 ஆன இடர்கடனாக செலுத்தப்பட்டிருந ்தது. மேலும் உடனடிக் கடனாக உத்தியோகத்தரின் மாதமொன்றுக்கு சமமான சம்பளம் 4.2 வட்டி வீதத்தில் 107 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 3,826,900 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | | அமைச்சிற்குக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | |
| 02 | அபுதாபி தூதரத்தின் தொழிலாளர் நலன்புரி பிரிவில் பதவியணியின் உறுப்பினர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,149,258 ஆன நிதி முறைகேடு மற்றும் பணியகத்தின் முகாமையாளர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,638,368 ஆன முறைகேடு மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டு இறுதி வரையில் 9 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022 | நிதி மோசடி தொடர்பாக ஆரம்ப பரிசோதனை ஒன்றும் முறையான ஒழுக்கற்று பரிசோதனை ஒன்றும் மேற்கொள்ளுதல் மிகவும் பலவீன மட்டத்தில் காணப்படுவதால் ஒழுக்காற்று பரிசோதனை நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் | அபு தாபி தூதரக அதிகாரிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டு, அக் கோவை கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பணியக முகாமையாளர் தொடர்பில் நடாத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையைத் தொடர்ந்து, நிறுவன முகாமையாளர் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அறவிடப்பட வேண்டிய ரூபா 3,638,368 தொகையை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக சட்டமா அதிபதி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | உரிய சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 03 | ஹோமாகம மற்றும் கஹகொல்லவில் அமைந்துள்ள காணி குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக முற்பணமாக ரூபா 46,000,000 மற்றும் ஏனைய செலவினங்களுக்காக ரூபா 1,719,680 என்ற வகையில் மொத்தம் ரூபா 47,719,684 செலவிடப்பட்டிருந்த போதும் குறித்த காணி விளைவற்ற வகையில் காணப்பட்ட காரணத்தினால் ஏனைய நிறுவனங்களினால் அக்காணில் மீண்டும் கையேப்பதற்கு நடவடிக்கை எடுத்து வந்தபோதும் பணியத்தினால் செலுத்தப்பட்ட முற்பணத்தொகையை மீண்டும் அறவேடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை. | 2021<br>2022 | காணியை பணியகத்திற்கு கையேற்பதற்கோ அல்லது அல்லது செலுத்திய முற்பணத்தை மீண்டும் பெற்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கஹகொல்லா காணிக்காக செலுத்தப்பட்ட முற்பணம் காணியை மாற்றம் செய்வதற்கு முன் மீளளிக்கப்புச் செய்யுமாறும் ஹோமாகம காணியின் ஒரு பகுதியை இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்து வருவதுடன் இதற்குப் பதிலாக வேறு ஓர் காணியை பணியகத்திற்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | கஹகொல்லா காணிக்காக செலுத்தப்பட்ட முற்பணம் மீளப்பெறப்படுவத ற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராதது டன் ஹோமாகம காணி மேலும் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது. |
| 04 | வேலைவாய்ப்பு அனுமதிப் பத்திரம் முறைமையின் (Employment Permit System) கீழ் தென் கொரியாவிற்கு இலங்கை தொழிலாளர்களை அனுப்புவதற்கு உரியதாக அந்நாட்டின் அரசின் ஈடுபாட்டுடன் கைச்சாத்திடப் பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் காலம் 2019 செப்டம்பர் 29 ஆம் திகதி நிறைவடைந்து இருந்ததுடன் அந்த உடன்படிக்கையின் | 2021<br>2022 | இரண்டு நாடுகளுக்கிடையே செயற்படுத்தப்படும் இந்த தொழில் நிகழ்ச்சிகளுக்குரிய உடன்படிக்கைகளை நாளது வரையாக்கப்படல் தாமதத்திற்கான காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு விரைவில் அந் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் | அமைச்சரவையின் பரிந்துரையின் படி, மேம்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சால் சட்டமா அதிபதி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள துடன் சட்டமா அதிபதியின் பரிந்துரை தற்போது பெறப்பட்டுள்ளமை | கொரிய அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காக திருத்தப்பட்ட உடன்படிக்கை திருத்தப்பட்ட உடன்படிக்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சால் அனுப்பிவைக்கப்ப ட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம் உடன்படிக்கை காலம் இரத்தாகி 06 மாதங்கள் கடந்துள்ள போதிலும் நியாயமான காரணம் ஒன்று இல்லாமல் நாளது வரையாக்குதல் தாமதம் அடைந்தால் அந்த உடன்படிக்கையை ரத்து செய்யும் அல்லது இடைநிறுத்தம் இயலுமை காணப்படுகின்றது. எவ்வாறாயினும் 2023 யூன் 27 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கை நாளது வரையாக்கப்பட்டிருக்கவி ல்லை. இந்த உடன்படிக்கையின் கீழ் கடந்த 06 ஆண்டுகளில் 20,667 தொழிலாளர் தொழில் வாய்ப்புகளுக்கு அனுப்பும் செயற்பாடு பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது . | | | யால் குறித்த பரிந்துரையும் அவ் உடன்படிக்கைக்கு உள்ளடக்கப்பட்டு கொரிய தரப்பினரின் ஒப்புதலைப் பெறுவதற்காக திருத்தப்பட்ட உடன்படிக்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சால் அனுப்பிவைக்கப்ப ட்டுள்ளதாக | |
| 05 | 2023 ஜனவரி 18 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு கூட்டத்தின் போது வெளிநாட்டு தூதுவர்களுக்காக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யும் நடைமுறை தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் முறையான நடைமுறை ஒன்றை தயாரிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் 2023 ஜனவரி 17 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு இருந்த நடைமுறையில் குறைபாடுகள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டு பணியகத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. சுற்றறிக்கை | 2021<br>2022<br>2023 | அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு தூதரங்களுக்காக உத்தியோகத்தர்கை ள ஆட்சேர்க்கும் போது நடைமுறையில் காணப்படுகின்ற குறைபாடுகளை சீராக்கி உத்தியோகத்தர்கை ள ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்<br><br>எடுத்தல் வேண்டும் | வெளிநாட்டு தூதரகங்களுக்குத் தேவையான உத்தியோகத்தர்க ளை ஆட்சேர்ப்பதற்கான<br><br>ஆட்சேர்ப்பு நடைமுறை விதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டு பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது டன் ஊழியர் எதிர்ப்புகளால் அப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சில சந்தர்ப்பங்களில் வரிசை அமைச்சின் மூலம் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன | வெளிநாட்டு தூதரகத்திற்காக உத்தியோகத்தர் களைத் தேர்ந்தெடுக்கும் முறைமை தொடர்பாக முறையான நடைமுறை ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏற்பாடுகளுக்கு முரணாக 2023 ஆம் ஆண்டின் போது தூதரகத்தின் சேவைக்காக முன்னர் தூதரகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த பணியகத்தின் 07 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதில் இரண்டு பேர் 3 ஆவது மற்றும் 4 ஆவது தடவையாக தூதரகத் தில் சேவையில் பூர்த்தி செய்து வருகை தந்த உத்தியோகததர் கள் ஆகும். மேலும் தூதரக சேவை பூர்த்தி செய்து 03 வருடங்கள் பணியகத்தின் சேவையில் பூர்த்தி செய்யாதிருந்த உத்தியோகத்தரும் சேர்க்கப்பட்டிருந்தார். | | | . | |
| 06 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 869,955,802 தொகையான பெறவேண்டிய மீதிக்கு உரிய மீதிகளின் உறுதிப்படுத்தற் கடிதங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022<br>2023 | முறையான மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் படி செயற்படுவதற்காக 09.05.2024 அன்று பொது முகாமையாளரின் கையொப்பத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினூடாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு ஓர் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக. | அந்த உறுதிப்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. |
| 07 | 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மரணித்த 157 | 2021<br>2022 | மரண இழப்பீட்டுக் கோவைகள் முறையாக பேணி செல்லப்பட | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை | தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மரண இழப்பீடாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 47,995,092 தொகையை அவர்களுக்கு கொடுப்பனவு செய்யாமல் நலன்புரி நிதியத்தில் செலுத்த வேண்டியதாக காண்பிக்கப் பட்டிருந்தது. மேலும் கணக்குப் பிரிவு மற்றும் நலன்புரி பிரிவுக்கு இடையே கூட்டிணைப்பு ஒன்று இல்லாமை காரணமாக 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கணக்கு பிரிவிற்கு கிடைத்திருந்த 81 உரித்து கோரல்களுக்காக ரூபா 22,539,765 இற்குரிய தகவல்கள் நலன்புரி பிரிவிடம் இல்லாதிருந்ததுடன் நலன்புரி பிரிவுக்கு கிடைத்திருந்த 09 மரண இழப்பீட்டுக்காக ரூபா 4,282,435 இற்குரிய தகவல்கள் கணக்கு பிரிவில் காணப்படவில்லை. | | வேண்டும் அத்துடன் தேவையான ஆவணங்கள் தொடர்பாக இழப்பீட்டு முறைப்பாட்டாளர்கள் முறையாக அறிவுறுத்தப்பட வேண்டியதுடன் காப்புறுதி இழப்பீடு கிடைத்தவுடன் அந்த இழப்பீட்டுத் தொகையை செலுத்தி பூர்த்தி செய்வதற்கு முறையான வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | | டு வருகின்றன. |
| 08 | தென்கொரியாவில் கடற்றொழில் பிரிவில் வேலையில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் 2019 ஒக்டோர் 08 ஆந் திகதி விபத்திற்க உட்பட்டதன் காரணமாக அவரை இந்த நாட்டிற்கு கொண்டுவருவதற்காக சகோதரரால் ரூபா 1,564,546 பணியகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருக்கும் போது அவரை | 2022<br>2023 | ஊழியரின் அந்த நாட்டின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட பணத்தை பயன்படுத்தி இருந்ததா எனவும் மற்றும் தொழிலாளர் நலன்புரி பிரிவின் உத்தியோகத்தரின் தனிப்பட்ட கடன் அட்டை பயன்படுத்தி விமானப் பயணச் | கொரிய தூதரகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட கணக்கீட்டுப் பதிவுகளின் அடிப்படையில்,<br>உறவினர்களால் பணியகத்தில் வைப்பு செய்யப்பட்ட பணத்தில் இருந்து மீள அவர்களுக்குத் திருப்பிச் செலுத்த | பணியகத்தில் வைப்புச் செய்யப்பட்ட தொகையில் இருந்து ரூபா 98,786 மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதற்கு மற்றும் வைத்தியசாலை பட்டியல்களைத் தீர்ப்பதற்காக தொழில் நலன்புரி பிரிவின் உத்தியோகத்தர்களினால் அவரின் அந்த நாட்டு வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட பணம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் உத்தியோகத்தரின் கடன் அட்டை பயன்படுத்தி விமான பயணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு செலவிடப்பட்ட செலவினங்கள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளாமல் சகோதரரால் வைப்புச்செய்யப்பட்டிருந்த தொகையில் எஞ்சியிருந்த ரூபா 98,786 மாத்திரம் 2023 ஆகஸ்ட் மாதத்தின் போது அவருக்கு செலுத்தப்பட்டது. | | சீட்டிக்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக விசாரணை ஒன்றின் மூலம் உறுதிப்படுத்து தல் வேண்டும். | வேண்டிய தொகை ரூபா 98,786 என உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளப்பட்டுள்ளதாக. | |
| 09 | 2013 சனவரி 24 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை சமுர்த்தி அதிகாரம சபையுடன் ஒன்றிணைந்து வீரர்களுக்கு வீட்டுக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 05 வருடத்திற்கு புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திட்டு பணியகத்தால் 2013 மார்ச் 08 ஆம் திகதி ரூபா 100,000,000 தொகை சமுர்த்தி அதிகார சபையின் | 2022<br>2023 | புரிந்துணர்வு உடன் படிக்கையின் பிரகாரம் இந்த பணம் செயற் திட்டத்திற்காக பயன் படுத்தப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் உரிய வைப்புப் பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து இத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக. | இத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

பேரில் நிலையான வைப்பொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந் தது. புரிதுணர்வு உடன்படிக்கைக் காலம் 2018 மார்ச் 07 ஆம் திகதி முடிவடைந்தி ருந்த போதும் அந்தப் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.163 இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| நிதி விளைவுகள் | | | |
| அதிகரிப்பு /(பற்றாக்குறை) ரூபா. | 181,807,729 | 105,543,329 | 88,078,983 |
| மொத்த சொத்துக்கள் ரூபா. | 1,371,207,666 | 1,635,084,577 | 2,511,044,875 |
| மொத்த பொறுப்புக்கள் ரூபா. | 66,623,913 | 101,150,311 | 398,052,811 |
| உரிமை மூலதனம் ரூபா. | 1,304,583,753 | 1,533,934,266 | 2,112,992,064 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் நடைமுறை நிலை |
|---|---|---|---|---|
| 2007-2009 ஆண்டுகளில், 3 மின்சார வாகனங்களை தயாரிப்பதற்காக, அதிகாரசபையால் தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 7.8 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 7 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் செயற்குழுவிற்கு இது தொடர்பாக அதிகாரசபையால் தவறான தகவல் அளிக்கப்பட்டதுடன் இந்தப் பணியில் இது தொடர்பான உண்மை நிலவரத்தை பிரதான கணக்கீட்டு அலுவலர் மூலம் பொது முயற்சிகள் | 2021 | குழுவின் உத்தரவுப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு தேவையற்ற செலவுகள் செய்தல் தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டும். | நடுவர் மன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நடுவர் மன்ற செயன்முறையொன்றின் ஊடாக ஒரு மாதிரியொன்று தயாரித்து பெற்றுக் கொள்வதற்கு உடன்பட்டிருந்ததுடன் அம் மாதிரியேனும் பெற்றுக் கொள்ளப்படவில்லை. எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| செயற்குழுவிற்கு தெரிவிக்க வேண்டுமென்ற குழுயின உத்தரவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தலைமையில் 2013 சனவரி 4 இல் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன் 2023 சனவரி வரையில் தொடர்புடைய பணிகள் முடிக்கப்படவில்லை. | | | | |
| 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 19(1) ஆம் பிரிவின் கீழ் மத்திய கட்டத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு ஆண்டுதோறும் அரசின் பங்கொன்று அறவிடப்பட முடியுமான போதிலும் அதற்காக தேவையான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | 2021 | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது . | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களிலிருந்து அரசின் பங்கு அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியமைச்சரின் ஒப்புதலுடன், படிம எரிபொருட்களின் உற்பத்தி இறக்குமதி அடிப்படையில் செஸ் வரி விதிக்க வேண்டிய போதிலும் அதிகாரசபை அமைக்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்தும் அதற்கான பிரமாணங்கள் தயாரிக்கப்படவில்லை. | 2021 | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது . | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் படிம எரிபொருட்களின் உற்பத்தி இறக்குமதியின் மீது செஸ் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை |
| இலங்கை மின்சார சபையின் மத்திய வலையமைப்பில் காணப்பட்ட திறன் போதியளவில் இல்லாத பிரச்சினைக்கு தீர்வாக, அதிகாரசபையால் 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 5(இ) பிரிவின் பிரகாரம் மத்திய வலையமைப்பிற்கு வெளியான (off grid) புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல் செய்யப்படவேண்டிய | 2021 | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமையினால் மத்திய வலையமைப்பிற்கு வெளியேயான செயற்திட்டங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய வலையமைப்பிற்கு வெளியேயான செயற்திட்டங்களுக்கு இதுவரையில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| போதிலும் அதிகாரசபையால் அதற்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக, சட்டத்தின் 25 (அ) பிரிவின் பிரகாரம் 2023 சனவரி வரை மத்திய வலையமைப்பிற்கு வெளியே எவ்வித புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்திற்கும் எரிசக்தி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முடியாதிருந்தது. | | | | |
| 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 67 ஆம் பிரிவின் பிரகாரம் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சரினால் செய்யப்பட்ட 2011 மே 10 ஆம் திகதிய 1705/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட உத்தரவுகளின் பிரகாரம் 700 மெகாவாட் திட்டத்திற்காக ரூபா 35 மில்லியன் விண்ணப்பக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு மாறாக ரூபா 5 மில்லியன் கட்டணமொன்று | 2021 | அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் கட்டளையின் பிரகாரம் விண்ணப்பக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| அறவிடப்பட்டு மீதமுள்ள தொகையை பின்னர் வசூலிப்பதன் அடிப்படையில் தற்காலிக அங்கீகாரம் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. | | | | |
| அதிகாரசபையால் தலைமை அலுவலகத்திற்கான எரிசக்தி செயற்திறன் கொண்ட கட்டிடமொன்றை கட்டுவதற்கு அரச பெறுகை வழிகாட்டி 4.3 இன் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு மற்றும் அதற்காக அதிகாரமளிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறப்படவில்லை. கட்டிடத்தின் வடிவமைப்பு திட்டங்களுக்காக 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 23.3 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இந்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 2023 செப்டெம்பர் வரை அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்படாததுடன் அதன் காரணத்தால் நிர்மாணப்பணிகளை தெடங்குவதற்கு முடியாத நிலை ஏற்பட்டது. அதன்படி, | 2022 | அரசின் பெறுகை வழிகாட்டுதல்களின் படி, முறையான அங்கீகாரமின்றி பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்க கூடாது என்பதுடன் பொருளாதாரமற்ற செலவுகளை மேற் கொண்டமைக்குப் பொறுப்பானவர்களை கண்டறிய வேண்டும. குத்தகை ஒப்பந்தத்தின் விதிமுறைகள் அதிகார சபைக்கு பாதகம் ஏற்படாத வகையில் திருத்தப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையற்றவாறு பெறுகை செயற்னமுறைகளை மேற்கொள்ளளல் மற்றும் பொருளாதாரமற்ற செலவினம் ஏற்றல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராதததுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் காணப்படுகின்ற குத்தகை ஒப்பந்தம் தேவையான வண்ணம் திருத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| தற்போது மேற்படி செலவு பொருளாதாரமற்ற செலவொன்றாக மாறியுள்ளது. இதற்காக ரூபா 41 மில்லியன் செலவிடப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து 30 வருட குத்தகை அடிப்படையில் பத்தரமுல்ல பிரதேசத்தில் காணியொன்று பெறப்பட்டிருந்தது. குறிப்பிட்ட குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனை இலக்கம் 1.8 இன் படி, ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்குள் நிர்மாணத்தை முடிப்பதற்கு தவறியதால், குத்தகை சொத்தின் உரிமை மீண்டும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | | |
| 2021 – 2025 கூட்டிணைந்த திட்டத்தின் படி 90 மின்சார வாகன பட்டரி மின்னேற்ற | 2023 | கூட்டிணைந்த திட்டத்தின் படி திட்டமிடப்பட்ட கருமங்கள ் விரைவாக | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| நிலையங்களை அபிவிருத்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் நிலையம் ஒன்றேனும் நிர்மாணித்திருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள மீள்புத்தாக்க வலு செயற்திட்ட அபிவிருத்தி தொடர்பான 03 கருமங்களின் நடவடிக்கை ஒன்றேனும் மேற்கொண்டிருக்காததுடன், மீளாய்வாண்டின் போது வேறு 24 செயற்திட்ட கருமங்களில் முன்னேற்றம் 10 சதவீதம் முதல் 54 சதவீதத்திற்கும் இடைப்பட்ட குறைந்த பெறுமதியொன்றில் காணப்பட்டது. | | நிறைவேற்றப்பட வேண்டும். | | |
| மன்னார் மற்றும் பூனகரியில் 500 மொகா வொட் கொள்திறனுடைய மீள்புத்தாக்க வலு நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக வெளிநாட்டுத் தனியார் முதலீட்டாளர் ஒருவருக்கு வழங்குவதற்கு 2022 | 2023 | பெறுமதிகளை குறைப்பது தொடர்பான இணக்கப்பாடு தொடர்பான விபரங்கள் தாமதமின்றி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த தகவல்கள் 2024 நவம்பர் வரையிலும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |

மார்ச் 15 திகதி அமப/22/0380/301/008 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது வரை அதிகாரசபையினால் மேற்கூறிய செயற்திட்டத்திற்கு மேற்கொண்டிருந்த ஆரம்ப அபிவிருத்தி கருமங்களுக்காக மேற்கொண்டிருந்த 747,733 அ.டொ.களுக்கு சமமான ரூபா 261.7 மில்லியன் தொகை செயற்திட்ட அபிவிருத்தியாளரிடம் 2022 நவம்பர் 08 திகதி இலக்கம் குறிப்பிடப்படாத கடிதத்தின் மூலம் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் செயற்திட்ட அபிவிருத்தியாளரிடம் பெற வேண்டியிருந்த 425,381 அ.டொ. பெறுமதிக்கு சமமான ரூபா 112.5 மில்லியன் தொகை என 322,352 அ.டொ. குறைவாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த பெறுமதியை குறைப்பதற்காக செயற்திட்ட

| | | | | |
|---|---|---|---|---|
| அபிவிருத்தியாளரிடம் மேற்கொள்ளப்பட்டிருந்த இணக்கப்பாடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| சட்டத்தின் 30 ஆவது பிரிவிற்கு இணங்க அதிகார சபையினால் 15 சிறியளவிலான நீர் மின் உற்பத்தி செயற்திட்டத்திற்காக 1979 இன் 08 ஆம் இலக்க அரச காணிகள் தனதாக்கல சட்டத்தின் கீழ் 14.13 ஹெக்டயர் காணி சுவீகரிப்பு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவில் அந்தக் காணியை முறைப் பிரகாரம் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணத்தினால் சட்டத்தின் பிரிவு 32 இற்கு இணங்க இந்த காணிகளை குத்தகைக்கு கொடுப்பதற்கு அல்லது அனுபவித்தலை ஒப்படைத்து வருடாந்த குத்தகைத் தொகையொன்று அறவீடுசெய்வதற்கு அதிகாரசபைக்கு முடியாமல் இருந்தது. மேலும், குத்தகைக்கு | 2023 | காணி சுவீகரிப்பு அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட்டு குத்தகைக்கு வழங்கி குத்தகை தொகை அறவீடு செய்யப்பட வேண்டும். | நடவடிக்கைகள் மிகவும் மெதுவாக மேற்கொள்ளப்படுகிறது. | காணி சுவீகரிப்பு அலுவல்கள் நிறைவு செய்து உந்தவொரு காணியும் குத்தகைகக்கு கொடுக்கப்பட்டிருக்கவில்லை. நிலுவை குத்தகை தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| கொடுத்திருந்த வேறொரு காணியொன்று தொடர்பாக 2021 ஆண்டு முதல் 2024 மார்ச் வரை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1.3 மில்லியனிற்கான குத்தகை மற்றும் தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | | | | |
| சட்டத்தின் பிரிவுகள் 47(1) மற்றும் 67 இணங்க வலு செயற்திரனிற்கான செயற்திட்டத்திற்கு கடன் விண்ணப்பிக்கும் முதலீட்டாளர்களுக்கு தேவையான பிணை வழங்கும் குறிக்கோளுடன் நிறுவப்பட்டிருந்த நிலைபெறுதரு வலு பிணை நிதியத்தின் அலுவல்களை செயற்படுத்துவதற்காக அமைச்சரினால தயாரிக்கப்பட வேண்டிய பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | 2023 | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | பிரமாணத்தின் வரைவொன்று மட்டும் தயாரிக்கப்பட்டுள்ளது. | சட்ட வரைவு மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு பாரளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |

## 3.164. இலங்கை அணுசக்தி சபை

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| நிதி விளைவுகள் | | | |
| அதிகரிப்பு /(பற்றாக்குறை) ரூபா. | 129,499,010 | (19,477,555) | 74,589,846 |
| மொத்த சொத்துக்கள் ரூபா. | 2,790,735,560 | 2,692,952,693 | 2,844,689,177 |
| மொத்த பொறுப்புக்கள் ரூபா. | 158,414,233 | 166,909,006 | 164,937,145 |
| உரிமை மூலதனம் ரூபா. | 2,632,321,327 | 2,526,043,688 | 2,679,752,032 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | 2023 கணக்குகள் 2024.08.02 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. அறிக்கையிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்பட்டு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் நடைமுறை நிலை |
|---|---|---|---|---|
| அழிவு எதிர்ப்பு பரிசோதனை தேசிய நிலையத்தின் பல பிரிவுகளினால் (NCBNDT, Training unit மற்றும் Inspection body) அழிவு எதிர்பு தொடர்பான பாடநெறிகள் நடாத்துவதுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் வெளி தரப்பினருக்கு பரிசோதனை சேவை வழங்கல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த | 2021 | அழிவு எதிர்ப்பு பரிசோதனை தொடர்பான பணிகள் ஒழுங்குப்படுத்துவதற்கு சுயாதீனமான நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டியதுடன் இடைதேசிய தரங்களின் செல்லுப்படித்தன்மைக்கு தேவையான சட்டரீதியான ஏற்பாடு | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| போதிலும் அந் நடவடிக்கைகள் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட இடைதேசிய தரம் இலங்கையினுள் சட்டரீதியாக்குவதற்கு தேவையான சட்டரீதியான ஏற்பாடு வரைவு செய்யப்பட்டிருக்கவில்லை | | உருவாக்கப்படல் வேண்டும். | | |
| 2014 ஆம் ஆண்டில் வேலை நிறைவு செய்யப்பட்ட அழிவு எதிர்ப்பு பரிசோதனை தேசிய நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா 308.6 மில்லியனாக காணப்பட்ட போதிலும் ரூபா 120.9 மில்லியன் அதாவது 39 சதவீத ஒப்பந்த முரணுடன் நிர்மாணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அரசாங்க பெறுகை வழிக்காட்டி 8.13.4 மற்றும் 2012 ஆகஸ்ட் 07 திகதிய 02/2012 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் ஒப்பந்த முரணிற்கு தேவைப்படுகின்ற அமைச்சரவை அங்கீகாரம் 2022 ஒக்தோபர் 28 ஆம் திகதி வரையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. காணி கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த ரூபா 84 மில்லியனை மிகைத்து காணியின் மதிப்பீடான ரூபா 85 | 2021 | ஒப்பந்த முரண்கள் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் குறித்த அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். | ஒப்பந்த முரண்களுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு கோரப்பட்டுள்ளது. | குறித்த அங்கீகாரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| மில்லியன் உள்ளடங்கலாக காணிக்காக ரூபா 90.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | | | | |
| 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அனுசக்தி சட்டத்தின் 4 (ஐ) பிரிவின் பிரகாரம் சபையினால் இலங்கையில் அமைந்துள்ள கதிர்வீச்சுள்ள கனிய வளங்களின் உளமையை கண்டுபிடித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் 4(அ) பிரிவின் பிரகாரம் தேசிய அபிவிருத்திக்காக கதிர்வீச்சுள்ள கணிய பண்டங்களை பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் கதிர்வீச்சுள்ள கனிய பண்டங்கள் தேசிய அபிவிருத்திக்குப் பயன்படுத்தக் கூடிய செய்முறை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | 2022 | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கதிர்வீச்சுள்ள கனிய பண்டங்களுக்கு பெறுமதி கூட்டுவதன் மூலம் அவற்றை நாட்டின் பொருளாதாரத்திற்கு உச்சமட்ட அனுகூலம் ஒன்றினை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு பயன்படுத்தக் கூடிய செய்முறை ஒன்றினை தயாரிப்பதற்குத் தேவையான ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| சபையினால் நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து வாடகை அடிப்படையில் பெற்றிருந்த தலைமை அலுவலகம் அமைந்துள்ள ஒருகொடவத்தையில் உள்ள காணி புதிய களனி பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக சாட்டப்பட்டிருந்தது. பின்னர் நகர அபிவிருத்தி அதிகார | 2022 | குறிப்பிட்ட காணியை விரைவாக சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணியின் உரித்து கையேற்பதற்கு அமைச்சரவை பத்திரிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு முறையே காணியின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| சபையினால் இலங்கை தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த வேறொரு காணியில் செயற்திட்டத்தின் ஊடாக புதிய தலைமை அலுவலகக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2023 ஜூன் அளவிலும் குறிப்பிட்ட காணியை சட்ட ரீதியாக சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| கெமா நிலையத்தின் செயற்பாட்டிற்காக தேவையான கொபோல்ட் 60 மூலகம் 4 வருடங்களுக்கு ஒரு முறை மீள் வழங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அதற்காக 2013 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை ரூபா 358 மில்லியன் தொகை மாத்திரம் அரசாங்க மானியம் வழங்கப்பட்டிருந்தது. திறைசேரிக்கு செலவு பொறுப்பொன்று ஏற்படாதவாறு கெமா நிலையத்தின் தமது வருமானத்தை பயன்படுத்தி பெறுமானம் குறைவடையும் மூலகங்களை மீள் வழங்கக் கூடியாறு முதலீட்டொன்றுடனான நிதி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் ஒன்று | 2022 | திறைசேரி மானியம் பெற்றுக் கொள்ளாமல் தமது வருமானத்தின் மூலம் மூலக மீள்வழங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | மூலப்பொருட்க ள் பெற்றுக் கொள்வதற்கு நிதியை பெறுவதில் சிரமங்கள் எதிர்நோக்கப்பட் டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| செயற்படாமையால் எதிர்காலத்தில் நிதியம் பெற்றுக் கொள்ளல் கடினமாக இருக்குமென அவதானிக்கப்பட்டது. | | | | |
| சபையினால் தலைமை அலுவலகம் நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட மாலபே காணிக்காக பணம் செலுத்தும் போது 2014 பெப்ரவரி 24 திகதிய 14/0277/526/002 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சபை நடாத்தப்பட்டு வந்த பழைய கட்டிடம் அமைந்துள்ள ஒருகொடவத்த காணிக்காக நகர அபிவிருத்தி சபைக்கு முன்வரும் காலத்திற்காக செலுத்தியிருந்த வாடகை ரூபா 7.66 மில்லியன் தொகையினை கழித்து செலுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு கழித்து செலுத்தியிருக்கவில்லை. அதே போல் மாலபே காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 116 மில்லியன் தொகையும் 30 வருடங்களுக்கான வாடகைப் பெறுமதி ரூபா 75.5 மில்லியன் தொகையும் ஆகிய அரசாங்க பெறுமதி மதிப்பீட்டின் மீது கவனம் செலுத்தாமல் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாலபே காணிக்காக 2015 ஆண்டின் போது ரூபா 181 மில்லியன் | 2022 | 1. மைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் அரசாங்க பெறுமதி மதிப்பீட்டின் படி மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டும்.<br>2. பைக்கு அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்புடைய தரப்பினருடன் சில கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. |

தொகை
செலுத்தப்பட்டிந்தது.

2023 154
(6)
அறிக்கை
இன்னும்
நிறைவு
செய்யப்பட
வில்லை.

## 3.165. இலங்கை அணுசக்தி ஒழுங்குப்படுத்தல் பேரவை

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| நிதி விளைவுகள் | | | |
| அதிகரிப்பு /(பற்றாக்குறை) ரூபா. | 9,412,059 | 8,912,531 | 29,673,881 |
| மொத்த சொத்துக்கள் ரூபா. | 84,056,739 | 119,391,565 | 162,017,060 |
| மொத்த பொறுப்புக்கள் ரூபா. | 32,528,954 | 32,606,417 | 33,734,037 |
| உரிமை மூலதனம் ரூபா. | 51,527,785 | 86,785,147 | 128,283,023 |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

**பிரதான கணக்கீட்டு அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் நடைமுறை நிலை |
|---|---|---|---|---|
| 2014 இன் 40 ஆம் இலக்க அணுசக்திச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் சபை உட்பட அனைத்து நபர்களாலும் மேற்கொள்ளப்படும் அயனியாக்கும் கதிர்வீச்சு தொடர்பான நடைமுறைகளுக்கு (Practices) உரிமம் வழங்கி ஒழுங்குபடுத்த வேண்டிய பொறுப்பு சபைக்குரியதாகும். அதன்படி, சபையினால் வழங்கப்படும் கதிரியக்க நிலை அளவீடு, கதிர்வீச்சு அளவீட்டு உபகரண அளவுத்திருத்த சேவை, டோசிமெட்ரி சேவை மற்றும் பணி கண்காணிப்பு சேவைகள் போன்ற சேவைகளின் | 2021/2022 | சபையால் செய்யப்படும் கதிர்வீச்சு தொடர்பான சேவைகள் உட்பட அயனியாக்கும் கதிர்வீச்சு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்தும் வகையில் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். | வரைவு தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. | வரைவு தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கு சட்டத்தின் பிரிவு 12 (க) ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் நடைமுறைகள் மற்றும் வழிமுறைகள் நிறுவ வேண்டிய போதிலும் அத்தகைய நடைமுறைகள் மற்றும் வழிமுறைகள் இதுவரை வரைவு செய்யப்படவில்லை. | | | | |
| 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 46 இன் பிரகாரம் உரிமையில்லாத கதிர்வீச்சு சார் மூலவலங்கள் தொடர்பான கட்டுப்பாட்டினை தாமதமின்றி பெற்றுக் கொள்ளல் அல்லது மீண்டும் பெற்றுக் கொள்வதற்வாக தேசிய மூலோபாயம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான தேசிய மூலோபாயம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வரைவு தயாரிக்கப்பட்டு வருகின்றது. | வரைவு தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| மேற்கூறிய சட்டத்தின் 12 (ங) பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் இலங்கையில் பெற்றுக் கொள்ளக் கூடிய ஏதேனும் பண்டங்கள் அல்லது வியாபார பொருட்களை பரிசோதனை செய்தல் கதிர்வீச்சு தன்மை உள்ளதை பரிசோதனை செய்வதற்காக மாதிரிகள் பெற்றுக் கொள்ளல் அல்லது சபைக்கு தேவைப்படும் அல்லது பொருத்தமானது என கவனம் செலுத்தும் சந்தர்ப்பத்தில் அதனை பரிசோதனையின் விளைவுகள் பொதுமக்களின் மற்றும் உரிய அனைத்து உத்தியோகத்தர்களும் அறிந்து கொள்ளுமாறு வெளியிடுதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் கதிர்வீச்சுடைய பண்டங்கள் காணக்கூடிய இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பண்டங்களை இனங்காண்பதற்கான எதிர்பாராத தெரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 | மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பிரதிகூலமான கதிர்வீச்சுப் பண்டங்களை உடைய உணவுப் பண்டங்களை இனங்காண்பதற்காக சட்டத்தின் பிரகாரம் சபையின் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ள வேண்டும். | பால்மாவிற்காக மட்டும் மாதிரிகள் பெறப்பட்டன. | பால்மாவிற்கான மாதிரிகள் பரிசோதனை மட்டும் மேற்காள்ளப்பட்டன. |
| மேற்கூறிய சட்டத்தின் 48(2)(அ) பிரிவின் பிரகாரம் கதிர்வீச்சு சார் மூலவளங்கள் இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்வதற்கு தேவையான சபையின் அங்கீகாரம் வழங்குவதற்காக ஈடுபடுத்த வேண்டிய | 2022 | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வரைவு தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. | வரைவு தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| தேவைப்பாடுகள் மற்றும் நடவடிக்கை முறைகள் சர்வதேச ரீதியான ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட விதிகளை அடிப்படையாக கொண்டு இருக்க வேண்டியிருந்த போதிலும் சபையினால் சர்வதேச வழிகாட்டல்கள் உரிய முறையில் பயன்படுத்தி விதிகள் தயாரித்து பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக சபையினால் தனது விருப்பத்தின் படி இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்காக தனது அங்கீகாரங்கள் வழங்கப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | | | | |
| மேற்கூறிய சட்டத்தின் 69(1) பிரிவின் பிரகாரம் அயனாக்கும் பண்டங்களை அகழ்தல் மற்றும் செய்முறை செயற்பாடுகளுக்குரிய தொழிற்பாடுகள் நடாத்தும் அனைத்து நபர்களினாலும் இணக்கப்பாடு காட்ட வேண்டிய தொழிலாளர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புக்கு தேவையான தேவைப்பாடுகளை சபையினால் நிமித்தமாக ஆக்கப்படுகின்ற விதிகளின் மூலம் விதிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான விதிகள் ஏதும் வரைவு | 2022 | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வரைவு தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. | வரைவு தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. |

செய்யப்பட்டிருக்கவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1999 இன் 1 ஆம் இலக்க அணுசக்தி பாதுகாப்பு பிரமாணங்களின் அயனாக்கல் கதிர்வீச்சு பாதுகாப்பு பிரமாணம் 4(1) பிரகாரம் கதிர்வீச்சுள்ள படிவுகளை அகழ்தல், அரைத்தல் மற்றும் செய்முறைக்காக சபையினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அலுவல்கள் மேற்கொள்ளும் அரச கம்பனி ஒன்று மற்றும் தனியார் கம பனி ஒன்றிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது ஒழுங்குறுத்தப்பட்டு இருக்கவில்லை. மேலும் 2015 ஜூலை 21 திகதிய 1924/27 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் பிரகாரம் மொத்த உயிர்ப்புத் தன்மை அல்லது உயிர்ப்புத் தன்மை செறிவு உரிய விடுவித்தல் மட்டத்தை அதிகரிக்கக் கூடாது எனினும் மொத்த உயிர்ப்புத் தன்மை (total activity) (Th 232/U 238- 10,000 பெகரல்) குறிப்பிட்ட விடுவிப்பு மட்டத்தை மிகைத்திருந்த போதிலும் சபையினால் அணுசக்தி சட்டத்தின் 19 ஆம் பிரிவின் அதிகாரத்தின் பிரகாரம் மேற்கூறிய கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் கதிர்வீச்சுள்ள கனிய மணல் ஏற்றுமதிகள் சபையின் ஒழுங்குறுத்தல் கட்டுப்பாட்டில் இருந்து | 2022 | அணுசக்தி பாதுகாப்பு பிரமாணங்களுக்கு இணக்கமாக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டியதுடன், வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உயிர்ப்புத் தன்மை செறிவு அல்லது மொத்த உயிர்ப்புத் தன்மை ஆகிய இரண்டு தேவைப்பாடுகளில் ஒன்று அல்லது குறிப்பிட்ட விடுவித்தல் மட்டத்தை மிகைக்கும் நடைமுறைக்காக அனுமதிப் பத்திரம் வழங்கி ஒழுங்குறுத்தலுக்கு ஆளாக்க வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

விடுவிக்கப்பட்டிருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| 2021 ஏப்ரல் 20 திகதி சபையின் அங்கீகாரம் ஒன்று இன்றி அதி வலுவுள்ள கதிர்வீச்சு சார் பண்டங்களுடனான கப்பல் ஒன்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு உட்பட்டு 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் 18 மற்றும் 48(1) பிரிவுகளின் கீழ் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சபையினால் குறிப்பிட்ட உள்நாட்டு கப்பல் முகவர் கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளுக்கு அணுகி இருக்கவில்லை. | 2022 | சட்டத்தின் 18 ஆம் பிரிவினை மீறுதல் ரூபா 3 மில்லியனுக்கு குறைவில்லாத தண்டம் ஒன்று அல்லது ஏழு வருடங்களுக்கு மேற்படாத காலம் ஒன்றிற்கான சிறையிடுதல் அல்லது அந்த தண்டப் பணம் மற்றும் சிறையிடல் ஆகிய இரண்டிற்கும் உட்பட வேண்டிய குற்றம் ஒன்றாக காணப்பட்டமையால் அவ்வாறான குற்றங்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| புற்றுநோய் சிகிச்சை செய்யும் அரச வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்பட்டு இறுதி உயர் செயற்பாட்டு மூலவளம் (தொகுதி 1) ஆகிய கொபோல்ட் 60 கதிர்வீச்சுள்ள பண்டங்களின் செயற்பாடுகள் குறைவடையும் வரை (தொகுதி 3 வரை) ஒரு குறிப்பிட்ட காலம் அணுசக்தி சபைக்கு சொந்தமான மையப்படுத்தப்பட்ட கதிர்வீச்சுள்ள கழிவுப் பொருள் | 2022 | அணுசக்தி சபையினால் உச்ச செயற்பாடுடைய (தொகுதி 1) கதிர்வீச்சுகள் உடைய மூலகங்களுக்காக தற்காலிக களஞ்சிய வசதிகள் வழங்கப்படுவதுடன் அதற்கு தேவையான | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்ந்தும் பயன்படுத்தப்படாத கொபோல்ட் மூலவளம் வைத்தியசாலை சுற்றாடலில் காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| களஞ்சியத்தில் தற்காலிகமாக களஞ்சியப்படுத்தப்பட்டு அந்த அனைத்து கதிர்வீச்சுள்ள கழிவுப் பொருள்களும் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட உற்பத்தி செய்யும் நாட்டிற்கு அனுப்புவதன் மூலம் அடிக்கடி ஏற்றுமதி செய்யும் போது சபைக்கு மேற்கொள்ள நேரிடுகின்ற மிகைச் செலவினை குறைக்கக் கூடியதாக இருந்ததுடன் அந்த மூலகம் ஏனைய மாற்று கதிர்வீச்சு சேவைகளுக்காக பயன்படுத்துவதன் மூலம் அரசிற்கு மீள் ஏற்றுமதிக்கான செலவு மேற்கொள்ள நேரிடாததுடன் மேலதிக வருமானம் ஒன்றினை பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கின்றது. மேற்குறிப்பிட்டவாறு செயற்படாமையால் அந்த கதிர்வீச்சுள்ள கழிவுப் பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் வைத்தியசாலை வளாகங்களில் காணப்பட்டன. | | பௌதீக பாதுகாப்பு முறைமை ஒன்றும் சபையின் தலையீட்டுடன் வழங்கப்பட்டிருந்தது. மேலும் பயன்படுத்தப்படாத உச்ச செயற்பாடுடைய கதிர்வீச்சு சார் மூலவளங்கள் மீள் சுழற்சிக்கான மூலோபாயங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். | | |
| 1999 இன் 1 ஆம் இலக்க அனுசக்தி பாதுகாப்பு பிரமாணங்களின் அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு பற்றிய பிரமாணங்களில் 4 (1) (அ) ஆம் பிரமாணம் பிரகாரம் கதிரியக்க மூலப்பொருட்களினை வைத்திருப்பதற்கான (possession) அனுமதிப்பத்திரங்களினை பேரவை மூலம் வழங்க வேண்டிய போதிலும், 2019 | 2023 | எக்ஸ்-ரே இயந்திரங்கள் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். உரிமக் கோப்புகள் மூடப்பட்ட எக்ஸ்-ரே உபகரணங்களின் அகற்றுவதற்கு | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

ஆம் ஆண்டில் பொலிஸ் தலைமையகத்தினால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 50 எக்ஸ்-ரே உபகரணங்கள் தொடர்பில் 2020 திசெம்பர் 31 வரையில் 50 உபகரணத்திற்காகவும், 2023-2021 ஆண்டு வரையில் 35 உபகரணங்களுக்காகவும், 2026-2024 வருடங்களில் 34 உபகரணங்களுக்காகவும், 2019-2021 வரையில் 2019 இல் தனியார் கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்ட 16 எக்ஸ்-ரே உபகரணங்களுக்காகவும் வைத்திருப்பதற்கு தேவையான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. ஆகையினால், அனுமதிப்பத்திர கட்டணமாக அறவிடவேண்டிய ரூபா 1.38 மில்லியன் சேகரிக்கப்படவில்லை. மேலும், பிரமாணங்களின் படி கதிர்வீச்சு உபகரணத்தினை இடைநிறுத்துவதற்கும் அகற்றுவதற்கும் பேரவையின் அனுமதி வழங்க வேண்டும் என்பதனால் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அனுமதிப்பத்திர கோப்புகள் மூடப்பட்ட 27 எகஸ்-ரே உபகரணங்களுக்கு அகற்றுவதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கும் வரை அவைகளை வைத்திருப்பதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

விண்ணப்பிக்கும் வரையில் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு அனுமதிப்பத்திரங்க ள் வழங்கப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2014 இன் 14 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 12(உ), 59(2) மற்றும் 60 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அணு ஆயுதங்கள் பெருகுவதை தடைசெய்தற்கு இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட மாநாட்டின் கீழ் மேலதிக நெறிமுறையினை முறையாக செல்லுபடியாக்குவதற்குரிய நியதி விடயங்கள் பூர்த்தி செய்யப்படும் வரை இலங்கையில் வரைவு மேலதிக நெறிமுறையினை (additional protocol) நிபந்தனைக்கு உட்பட்டு அமுல்படுத்துதற்கு 2018 ஏப்ரல் 03 ஆம் திகதிய 18/0522/727/013 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை தேவையான நியதி தேவைப்பாடுகளினை பேரவை பூர்த்திசெய்யவில்லை. மேலும், மேற்படி மாநாட்டின் 39 ஆவது உறுப்புரையிலுள்ள பொறுப்புக்களினை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு தொடர்புடைய ஏற்பாடுகளினை இலங்கை விரிவாக தயாரிக்கவேண்டுமாயினும் 2019 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு இது தொடர்பாக பேரவை ஈடுபடவில்லை. | 2023 | இலங்கையினால் கையெழுத்திட்டுள்ள சர்வதேச உடன்படிக்கையின் கீழ் பொறுப்புக்களினை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றுவதனை நிச்சயித்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சட்டத்திற்கு தேவையான திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | புதிய சட்டம் வரைவு செய்யப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| அதிகாரச்சட்டத்தின் 86 (2) ஆம் பிரிவின் பிரகாரம் கதிர்வீச்சு தொழில்துறை நிறுவனங்களினை செயலிழக்கச் செய்வதற்கும், தீங்குவிளைவிக்கக்கூடிய அயனியாக்கும் கதிர்வீச்சினால் ஏற்படும் நோய்கள் மற்றும் நட்டங்களுக்காக கதிர்வீச்சு பணியாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான இழப்பீட்டு திட்டமொன்றினை உருவாக்குவதற்கும் கட்டளைகளினை தயாரித்திருக்கவில்லை. | 2023 | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3.166. பனை அபிவிருத்திச் சபை

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| **2021** | 239,388,465 | 76,338,541 | 163,049,924 | (33,538,883) | மறுப்பு |
| **2022** | 247,743,085 | 96,348,976 | 151,394,109 | (24,786,100) | முனைப்பழியுள்ள |
| **2023** | 262,412,451 | 94,471,689 | 167,940,762 | (11,954,969) | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புகள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் பரிந்துரையின் செயல்படுத்தல் நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் 24 நவம்பர் 2017 இல் பதிவு செய்யப்பட்டு சபைக்கு உடமையாக காணப்பட்ட காரைநகர் காணி பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படவில்லை. இதன் விளைவாக நடைமுறையல்லா சொத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2021 | சபையின் சகல சொத்துக்களும் கட்டாயம் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். | மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு 2022 நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படும். | 2024 நவம்பர் வரை காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 2 | சபைக்குச் சொந்தமான மற்றும் 2017 நவம்பர் 24 இல் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட காணியொன்று மதிப்பீடு செய்யப்பட்டு | 2022 | சபைக்குச சொந்தமான அனைத்து சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அதற்கான நடவடிக்கைகள் அந்தந்த மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் நடைபெற்று வருகிறது | 2024 நவம்பர் வரை காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் காணியின் உரிமை மாற்றபட்டிருக்க |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வரும் 8 காணிகளின் உரிமையை மாற்றுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | வில்லை. |
| 3 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருக்கின்ற வியாபார பெற வேண்டியவைகளின் கீழ் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,338,434 கூட்டுத் தொகையான 08 சில்லறை கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | உரிய நேரத்தில் நிலுவைகளை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த விடயம் பணிப்பாளர் சபை மற்றும் உரிய அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்படுவதுடன் அவர்களுடைய விதப்புரைகள் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதிகளை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 4 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 முதல் 05 ஆண்டுகளாக நிலுவையாக இருந்த ரூபா 306,875 கூட்டுத் தொகையான 05 வியாபார பெற கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் ரூபா 2,967,592 கூட்டுத் தொகையான 08 சில்லறை கடன்கொடுத்தோர் | 2023 | உரிய நேரத்தில் கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதி ஒதுக்கீடுகள் இன்மையால் இருக்கின்ற தீர்ப்பனவுகள் எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் உரிய தரப்பினருக்கு செய்யப்படும். | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 5 | ரூபா 805,000 பெறுமதியான ஒரு பால்சுத்திகரிப்பு பொறி மற்றும் 2018 இற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ஓட்டோ கல்வே பொறி என்பன ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாது இருந்தது என அவதானிக்கப்பட்டது. | 2023 | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பால்சுத்திகரிப்பு பொறி மற்றும் ஓட்டோ கல்வே பொறி என்பன ஏற்கனவே திருத்தப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவம் உற்பத்தி செயற்பாடுகளிற்குள் அவற்றினை இணைப்பதற்கு தேவையான படிமுறைகளை எடுத்திருந்தது. | குறித்த சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3.167 இலங்கை மகாவலி அதிகாரசபை

| | மொத்தச் சொத்துக்கள் | மொத்தப் பொறுப்புக்கள் | உரிமை | வரிக்கு முன் இலாபம் (நட்டம்) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| **2021** | 120,689,222,000 | 41,292,025,000 | 79,397,197,000 | 667,166,000 | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| **2022** | 117,579,210,000 | 41,229,259,000 | 76,349,951,000 | (1,494,044,000) | பாதமான அபிப்பிராயம் |
| **2023** | 404,007,295,000 | 1,850,206,000 | 402,157,089,000 | (6,201,567,000) | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆறிக்கை ஆண்டு | கணக்காய்வாளரின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01. | மகாவலி பீ வலையத்தில் விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாய பயிர்கள் உற்பத்திச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக சுமார் 540 ஏக்கர் நிலப் பகுதியொன்று முதுவெல்ல வெலிகந்த பிரதேசத்தில் வழங்குவதற்கு 2020 ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த முதலீட்டு செயற்திட்டங்களில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்காக ரூபா 2,619,000 இற்கான ஒப்பந்த வேலை கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டு அவற்றில் ரூபா 2,093,200 தொகை கணக்காய்வுத் | 2022 2023 | சாத்தியக்கூறு ஆய்வின் மூலம் சிக்கனமற்ற செலவுகளைத் தவிர்த்து செயற்திட்டத்தை தாமதம் இன்றி பூர்த்தி செய்வதற்க எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ள வேண்டும். | முதுவெல்ல செயற்திட்டத்தின் சுற்றாடல் ஆய்வு அலுவல்களின் கள நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பம் செய்ததுடன், கொரோனா வைரஸ் பரவல், அங்கீகாரம் இன்றிய வதிவோர்களின் சிக்கல்கள், நீர் மூலவளம் தொடர்பாக ஆய்வு மற்றும் உட்பட்டமைப்பு வசதி அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் தயாரிப்பதற்காக காலம் எடுத்த காரணத்தினால் திட்டமிடப்பட்ட காலப் பகுதியை விட ஆய்வு அலுவல்கள் | முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக காணிகள் விடுவிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திகதியளவில் செலுத்தப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட ஆண்டில் இருந்து கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 திகதி அளவில் 3 வருடங்களும் 5 மாத காலம் கடந்திருந்த போதிலும் எதுவித முதலீட்டுச் செயற்திட்டமேனும் செயற்படுத்தப்பட்டிருக் கவில்லை. | | | தாமதம் அடைவதற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | |
| 02. | அதிகாரசபையின் வளங்களை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்த மகாவலி கால்நடைகள் வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனி தெரிவு செய்யப்பட்ட வெளி முதலீட்டாளர் ஒருவருடன் அரச தனியார் ஒருவருடன் கூட்டு முயற்சி என மறுசீரமைப்பதற்காக 2018 ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மறுசீரமைப்புக்காக எதிர் காலத்தில் மேற்கொள்வதற்கு எதர்பார்க்கப்பட்டுள்ள கருமங்களின் கால சட்டகத்தின் படி 2024 ஏப்ரல் 22 திகதி அளவில் முதலீட்டாளர்களின் செயற்திட்ட அறிக்கைகளை பரிசோதனை செய்து பொறுத்தமான செயற்திட்டங்களை தெரிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் இதுவரை அந்தக் கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | 2021<br>2022<br>2023 | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க அரச தனியார் கூட்டு முயற்சியொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். | செயற்திட்டக் குழுவினால் தொழில்நுட்ப செயற்திட்ட அறிக்கை மதிப்பாய்வு செய்யப்பட்டு அந்த செயற்திட்டக் குழுவின் அறிக்கை 2024.05.06 திகதி நடைபெற்ற அமைச்சரவையினா ல் நியமனம் செய்யப்பட்ட கலந்துரையாடல் இணக்கக் குழு (CANC) இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந் தது. அங்கு நிதிச் செயற்திட்ட மதிப்பாய்விற்காக அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2024.08.13 திகதி அளவில் கூட்டம் கூடி மதிப்பாய்வு அலுவல்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன்படி, தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு உத்தியோகத்தர்கள ின் பரிந்துரையை பெற்றுக்கொள்வதற் காக முயற்சி செய்த போதிலும், பொதுத் தேர்தல் | அரச தனியார் கூட்டு முயற்சி என மறுசீரமைத்தி ருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அலுவல்கள் காரணமாக உத்தியோகத்தர்களின் வேலைப்பழு காரணமாக அந்த அலுவல்களை இதுவரை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. | |
| 03. | ஆதிகாரசபைக்கு சொந்தமான தெமடகொட பேஸ்லயின் வீதியில் அமைந்துள்ள 0.2139 ஹெக்டயருக்கான காணி மற்றும் கட்டிட வளாகம் தற்போது கைவிடப்பட்டு அழிவடையும் நிலையில் காணப்பட்டதுடன், பௌதீக ரீதியாக பரிசோதனை செய்ய போது காணியில் அமைந்துள்ள கட்டிடம் மீண்டும் பயன்படுத்த முடியாத முறையில் முழுமையாக உடைந்து சிதைவடைந்து அழிவுக்குள்ளாகியிருந்ததெனவும், இது தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2022<br>2023 | அழிவடைந்த மற்றும் காணாமல் போயிருந்த ஆதனங்கள் தொடர்பாக நி.பி. இற்கு இணங்க செயற்பட வேண்டும். | இந்தக் காணிகள் கட்டிடங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை பாதுகாப்பதற்காக மகாவெலி பாதுகாப்புப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும், 2023.08.04 திகதி 352 ஆம் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் தெமடகொட பேஸ்லைன் பாதையில் அமைந்துள்ள 0.2139 ஹெக்டயர் காணி மற்றும் கட்டிடங்கள் களஞ்சியமொன்று மற்றும் வாகன செயற்களம் ஒன்று நிர்மாணிப்பதற்காக அபிலாசைகள் அழைப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | கட்டிடங்களை மீண்டும் பயன்படுத்தக் கூடியவாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 04. | காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் மேட்டு நிலம், நீர்ப்பாசன மற்றும் மழையினால் போசிக்கப்படுவது என 2023 திசெம்பர் 31 திகதி அளவில் காணிகள் 157,843 ஹெக்டயர் 315,529 துண்டுகளாக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 110,902 துண்டுகளுக்கான கொடுப்பனவு பத்திரம் | 2023 | கொடுப்பனவு பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட காணிகளுக்காக கொடுப்பனவுப் பத்திரங்கள் வழங்குவதற்கு சதவீதமாக 35 சதவீத எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு சிக்கல் நிலைமை காரணமாக | காணி வழங்கல் பொறிமுறையினை செயற்திறனாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

வழங்குவதற்கு முடியாமல் இருந்ததுடன், அது 35 சதவீதமாக காணப்பட்டது. அதேபோல், அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் வாணிப, வீடு, முதலீட்டுச் செயற்திட்டங்கள், விகாரைகள் மற்றும் அரச நிறுவனங்கள் தொடர்பாக 2023 திசெம்பர் 31 திகதி அளவில் 18,766 ஹெக்டயர்கள் 24,735 துண்டுகள் காணி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 19,657 துண்டுகளுக்காக நீண்ட கால கொடுப்பனவு பத்திரம், விடுவிப்புக் கொடுப்பனவு பத்திரம் வழங்குவதற்கு மகாவலி அதிகாரசபைக்கு முடியாமல் இருந்தது. அது சதவீத ரீதியாக 79 சதவீதத்தை கொண்டிருந்தது.

கொடுப்பனவு பத்திரம் வழங்குவதற்கு முடியாமல் மீதியாக இருந்தது. முறைசாரா விதமாக பிற உடமையாக்கல், அபிவிருத்திச் செய்திருக்காமை, சட்டச் சிக்கல்கள், குடும்பப் பிணக்குகள், காணி உரிமையில் சிக்கல்கள் இதற்கான காரணமாக இருந்தது. கொடுப்பனவு பத்திரமொன்று வழங்குவதற்காக 2023 ஆண்டின் இறுதிக் காலாண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, அனைத்து மகாவலி காணிப் பகுதிகளுக்குமாக அந்த கொடுப்பனவு பத்திரம் வழங்கப்பட வேண்டியுள்ளது. அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்காக குத்தகையாளர்களினால் நிலுவை இல்லாமல் குத்தகை செலுத்தியிருத்தல், குறிப்பிட்ட காணிப் பகுதிகளை நிலை அளவை செய்து எல்லைக் கற்கள் இடப்பட்டு நில அளவைப் படங்கள் தயாரிக்கப்பட்டு நில அளவைத் திணைக்களத்தினால் வரைபடங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பெற்றுக்கொண்ட பின்னர் மற்றும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொண்டு குத்தகை உறுதி வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த கருமத்தில் அதற்காக கணிசமான காலமொன்று செலவிடுவதற்கு நேரிடுகின்றது. | |
| 05. | ஒன்றிணைந்த நிதிக்கூறுக்களின் படி முதலீட்டுச் செயற்திட்டங்களின் மூலம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட குத்தகைத் தொகை ரூபா 165,524,701 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 22,993,596 தொகை 5 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவீடு செய்வதற்கு முடியாமல் காணப்பட்டது. | 2023 | நிலுவைக் குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிலுவைக் குத்தகை அறவீடு செய்திருக்கவில்லை. |
| 06. | மகாவலி சீ வலையத்தில் குளக் காப்பினை சார்ந்த 137.175 ஏக்கர்கள் 219 நபர்களினால் உச்ச அளவு 40 வருட காலம் முதல் விக்டோரியா வலயத்தின் நீர்த தேக்க காப்பினை அண்டி 23 ஏக்கர்கள் 237 நபர்களினால் உச்ச அளவு 30 வருடங்கள் வரையான காலம் முதல் வளவ வலையத்தின் குளம் மற்றும் நீர்த்தேக்க | 2022<br>2023 | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்திறன் மிக்க பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். | பிரதான அணைக்கட்டுக்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் செயற்பாட்டுப் பிரிவு நீர்த்தேக்க காப்புக்களில் அங்கீகாரமற்ற வதிவோர்களை அகற்றும் அலுவலகளுக்காக உரிய சட்ட செயற்பாடுகள் எடுக்கப்பட்டு வருவதுடன், 2024 மே 20 திகதி முதல் இதுவரை 13 | அங்காரமற்ற வதிதல் மற்றும் வதிவோரை அகற்றுவதற்கு போதியளவு முயற்சியொன்று எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காப்பினை சார்ந்த 645 ஏக்கர்களில் 1,042 நபர்கள் உச்ச அளவு 45 ஆண்டு காலம் வரையும் அங்கீரம் இன்றி நிரந்தர பயிர்கள் மற்றும் பயிர்கள் பயிர் செய்யப்பட்டு நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அனுபவிக்கப்பட்டு காணப்பட்டது. இந்த அங்கீகாரமற்ற பயன்படுத்துவோரை அகற்றும் செய்முறை அதிகாரசபையில் மெதுவான தன்மையுமன் செயற்படுத்தப்பட்டிருந்தது. | | | அங்கீகாரமற்ற வதிவோர்களை அகற்றுவதற்காக வழக்கு அலுவல்களில் ஈடுபட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | |
| 07. | கண்டி மாவட்டத்தின் கடவத்சதர பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கெடம்பே கிராம உத்தியோகத்தர் பிரிவில் மகாவலி கங்கைக்கு மத்தியில் அமைந்துள்ள தீவொன்று சுமார் 01 ஏக்கர் 01 ரூட் 36 பர்சஸ் காணிப் பகுதியொன்றில் தனியார் தரப்பினர் ஒருவரால் உணவகம் ஒன்று நடாத்தப்பட்டு வருகின்றது. இந்த தீவு அமைந்துள்ள பிரதேசம் வலாதென்ன ஹக்கித சுற்றாடல் பாதுகாப்பு வலையத்தில் அமைந்துள்ள தனியார் உணவகம் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 22 திகதி வரை அந்தக் காப்புப் பிரதேசத்தலிருந்து அகற்றியிருக்கவில்லை. | 2023 | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்திறன் மிக்க பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகாரசபை இந்த உணவகம் சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசம் என வெளியிடுவதற்கு முன்னர் இருந்து நடாத்தப்பட்டு வந்த வியாபார நிலையமொன்றாக காணப்படுவதால் உணவகம் நடாத்தப்பட்டு வருவதற்காக காணியை குத்தகைக்கு கொடுப்பதற்கு குழுவின் அங்கீகாரம் ஒன்று இன்றி மகாவலி அதிகாரசபையின் சட்ட ஏற்பாடுகள் மீது உணவகம் நடாத்திச் செல்வதற்காக தொழில்நுட்ப பரிந்துரைகள் மற்றும் நிபந்தனைகள் விதிப்பதன் மூலம் உணவகத்தை குத்தகை அடிப்படையில் | சுற்றாடல் பாதுகாப்பு வலையத்தினுள் அமைந்துள்ள தனியார் உணவகம் அகற்றப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | |
| 08. | வளவ வலையத்தின் மயுராப்புர பிரிவில் 20.2343 ஹெக்டயர் அளவுடைய மண் வெட்டும் செயற்திட்டம் ஒன்றிற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு 2016 ஆண்டின் போது விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த நிறுவனம் 2016 திசெம்பர் 20 திகதி முதல் 2017 திசெம்பர் 19 திகதி வரையான காலப் பகுதியினுள் 66,012 கியுப் மண் அகழ்வதற்காக புவிச்சரிதவில் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு வேத்துரிமை செலுத்தப்பட்ட போதிலும், அதிகாரசபைக்கு செலத்தப்பட வேண்டிய காணிப் பயன்பாட்டுக் கட்டணம் ரூபா 51,533,440 தொகை கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 19 வரை அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், இணங்கியவாறு குறிப்பிட்ட நிலப் பகுதியின் புணரமைப்பு அலுவல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | 2023 – 3.2(ச)(i) | நிலுவைக் காணி பயன்பாட்டுக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வதிவிட திட்ட முகாமையாளர் (வளவ) குறிப்பிட்ட நிறுவனத்திற்கு நிலுவை காணி பயன்பாட்டுக் கட்டணம் செலுத்தும் படி அறிவிக்கப்பட்டது. எனினும், இதுவரை அந்தப் பணத்தை செலுத்துவதை புறக்கணித்திருந்தமையால், அதற்குரிய சட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை நில பயன்பாட்டுக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 09. | அகழ்வு அனுமதிப்பத்திரம் நீடிக்கும் சந்தர்ப்பங்களில் முன்னைய ஆண்டின் நிலுவைக் கட்டணத்தை கணித்து அதனை அறவீடு செய்த பின்னர் புதிய அனுமதிப்பத்திரம் | 2022<br>2023 | பொறுப்புகளை புறக்கணித்திருந்த உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். | பதில் பொருத்தமாக காணப்படவில்லை. | நிலுவைக் கட்டணத்தை அறவீடு செய்து புதிய அனுமதிபத்திரம் வழங்கும் செய்முறை ஒன்று அல்லது ஒழுக்காற்றுச் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்கும் முறையான செய்முறையொன்று கடைபிடித்திருக்காமை மற்றும் பொறுப்பான உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட நிலுவைக் காணி பயன்பாட்டுக் கட்டணத்தை நாளதுவரையாக்கி அறவீடு செய்வதில் கவனம் செலுத்தியிருக்காத காரணத்தினால் 2019 ஆண்டு இறுதியளவில் அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை காணிப் பயன்பாட்டுக் கட்டணம் ரூபா 1,898,907,760 தொகையாக காணப்பட்டது. | | | | செயற்பாடுகள் எடுத்திருக்கவில்லை. |
| 10. | 2020 திசெம்பர் 14 திகதி අමප/20/1852/317/012இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கருங்கல் வர்த்தகர்களிடம் அறவிடப்பட வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணத் தொகையில் 75 சதவீதத்தை பதிவழிப்பதற்கும் மீதியை 36 தவணைகளில் அறவீடு செய்வதற்கும் வசதி வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, சீ,எச்,எல் மற்றும் வளவ வலையங்களில் பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 1,424,180,320 இற்கான தொகை அதிகாரசபைக்கு அறவீடு செய்தவற்கு இயலுமாக இருந்த வருமானம் ஒன்றெனவும், அதிகாரசபையின் வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர்களின் மற்றும் கண்காணிப்பு உத்தியோகத்தர்களின் பலவீன மற்றும் | 2022<br>2023 | பொறுப்புக்களை புறக்கணிக்கும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன், அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கைத்தொழிலாளர்களின் நிலுவைத் தொகையின் 25 சதவீதம் 03 வருடங்களில் 36 தவணைகளாக அறவீடு செய்வதற்கு வழங்கியிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் காரணமாக ஐயவினாவில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த நிலுவை பயன்பாட்டுக் கட்டணம் அறவிட முடியாமல் போனது. அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க 25 சதவீதம் என கணிக்கப்பட்ட பயன்பாட்டுக் கட்டணத்தை அறவிடப்பட்டு வருகின்றது. | ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயற்திறனற்ற கடமை நிறைவேற்றுதலின் காரணமாக இந்தத் தொகை அதிகாரசபை இழக்க வேண்டி நேரிட்டிருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 11. | நிலுவைத் தொகை செலுத்துவதற்கு அகழ்வாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால வரையறை 2023 திசெம்பர் 31 திகதி அளவில் முடிவடைந்திருந்த போதிலும், 65 அகழ்வாளர்களினால் ரூபா 298,362,829 இற்கான தொகை 2024 மே 20 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. இது தொடர்பான மேலதிக பரிசோதனையின் போது 27 அகழ்வாளர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 69,423,300 இற்கான தொகையில் எதுவித தொகையும் அறவீடு செய்திருக்காததுடன், மேலே வழங்கப்பட்டிருந்த சலுகையை முறைகேடாக பயன்படுத்தி 38 அகழ்வாளர்கள் செலுத்த வேண்டியிருந்த தொகையில் மிகவும் குறைந்த தொகையொன்றினை மாத்திரம் செலுத்திவிட்டு மீண்டும் அகழ்வு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த அகழ்வாளர்களினால் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 373,612,647 இற்கான தொகையில் | 2022<br>2023 | அகழ்வாளர்களுக்கு எதிராக சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்து கட்டணங்கள் மற்றும் அதற்குரிய சட்டரீதியான வட்டி அறவிடப்பட வேண்டும். | காணி பயன்பாட்டுக் கட்டணம் செலுத்தும் படி எழுத்துமூலம் முதலீட்டாளர்களுக்கு அறிவுறுத்தல் வலைய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன், சட்ட நடவடிக்கைளுக்கு அணுகுவதற்காக கோரிக்கைப் பத்திரம் அனுப்புதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவாவறு அனுப்பப்பட்ட போதிலும், கட்டணத்தை செலுத்துவதற்கு முன் வராத முதலீட்டாளர்களுக்கு அடுத்த கட்ட நடவடிக்கை எடுத்தல் 1982 இன் 12 ஆம் இலக்க பொது ஆதன விடயத்தில் மேற்கொள்ளப்படுகின்ற குற்றங்கள் தொடர்பாக சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய முறைப்பாடுகள் அவ்வவ் கற்சுரங்கங்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகை அறவீடு செய்யப்படட்டிருக்கவில்லை. |

கணக்காய்வுத் திகதியளவில் ரூபா 228,939,529 இற்கான தொகையொன்று அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது. அது அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையில் 61 சதவீதமாக காணப்பட்டது. மேற்கூறிய அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக அரசுக்கு கிடைக்க வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணத்தில் 75 சதவீதத்தை கைவிடுவதற்கும் மீதியை 36 தவணைகளில் செலுத்துவதற்கும் அந்த நிலுவைத் தொகைக்காக வட்டி ஏதும் அறவிடப்படாமல் இருப்பதற்கும் ஆகிய சலுகைகள் வழங்கப்பட்ட பின்னரும் அந்த நிலுவைத் தொகையை செலுத்தாத வியாபாரிகளிடம் அந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக கணக்காய்வுத் திகதி வரை சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2023 ஆகஸ்ட் 10 திகதி நடைபெற்ற பொது தொழில் முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் உரிய முறையில் கொடுப்பனவு செய்யப்படாத முதலீட்டாளர்களுக்கு எதிராக விரைவாக பொது ஆதனச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யும் படி அறிவுரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன்படி வழக்குத் தாக்கல் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 12. | 2019 பெப்பரவரி 21 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் மண் அகழ்வின் மூலம் சுற்றாடல் பாதிப்பை குறைப்பதற்காக மகாவலி கங்கை இரு மருங்கிலும் 60 மீற்றர் காப்பு எல்லை அடையாளமிடுவதற்கு இணங்கியிருந்ததுடன், அதற்காக 2018 ஆண்டு ரூபா 1,000,000 தொகையும் 2019 ஆண்டு ரூபா 612,300 தொகையும் என மொத்தம் ரூபா 1,612,300 தொகையொன்று இலங்கை நில அளவைத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 10 திகதி வரை நில அளவை அலுவல்கள் அல்லது காப்புப் பிரதேசத்தை அடையாளமிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 2023 | காப்புப் பிரதேசத்தை அடையாளமிடும் கருமங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மகாவலி கங்கையின் இரு மருங்கிலும் 60 மீற்றர் காப்புப் பிரதேச ஆரம்ப நில அளவை அலுவல்கள் நில அளவைத் திணைக்களத்தினால் 2019 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னரான ஆண்டுகளில் கோவிட் தொற்றுநோய் நிலைமை போக்குவரத்து வசதியீனங்கள் மற்றும் காட்டு யானைகள் நிறைந்து காணப்படும் பிரதேசமாக காணப்படல் மற்றும் அந்தக் காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த உயிர்ச் சேதங்கள் காரணமாக நில அளவை அலுவல்களை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனது. இது தொடர்பாக தொடர்ச்சியாக வேண்டப்பட்டதுடன், நில அளவை அலுவல்கள் 2024.06.24 திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | காப்புப் பிரதேச எல்லைகள் அடையாளமிடல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 13. | அதிகாரசபையினால் சிறிய அளவிலான மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக | 2022 2023 | செயற்திட்டங்களின் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொண்டு முதலீட்டாளர்கள் மற்றும் பொருத்தமான | 2011 ஆண்டு தெரிவு செய்யப்பட்டிருந்த 20 இடங்களின் 2024.09.30 | செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முதலீட்டாளர்களை தெரிவு செய்தல் மற்றும் அதற்குப் பொருத்தமான 20 இடங்களை இனங்காண்பதற்காக 2011 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை ரூபா 1,297,533 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 10 செயற்திட்டங்கள் கணக்காய்வுத் திகதி அதாவது 2024 ஏப்ரல் 28 திகதி வரை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்தது. | | இடங்களை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். | திகதியில் உள்ளவாறு முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது. | |
| 14. | மேற்கூறிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு மேலதிகமாக அதிகாரசபையினால் ஒழுங்குறுத்தப்படாத ஆனால், மகாவலி விஷேட அதிகார பிரதேசத்தினுள் மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிறிய அளவிலான 65 நீர் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணத்தை அறவீடு செய்வதற்காக முறையான உடன்படிக்கைகளுக்கு அணுகியிருக்கவில்லை. | 2022<br>2023 | நீர் மின் உற்பத்தி நிலையங்களின் நீநேந்து பிரதேசங்களின் முகாமைத்துவக் கட்டணம் அறவீடு செய்வதற்காக பொருத்தமான செய்முறையொன்று அறிமுகப்படுத்த வேண்டும். | இந்த சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் மகாவலி வர்த்தமானி அதிகாரப் பிரதேசத்தில் அமைந்திருந்த போதிலும், அந்த பிரதேசங்கள் நிருவகிக்கப்படுவது குறிப்பிட்ட பிரதேச செயலகங்களினால் அல்லது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கீழாகும். அதன்படி, செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் போதும் அந்த அலுவலகங்களிலிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த உற்பத்தி நிலையங்களுக்கு 15 வருட காலத்திற்கு செல்லுபடியாகக் கூடிய விதமாக சுற்றாடல் பாதுகாப்பு | நீரேந்து பிரதேசங்களில் முகாமைத்துவக் கட்டணம் அறவீடு செய்து முறையான உடன்படிக்கைகளுக்கு அணுகியிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த அனுமதிப்பத்திரத்தைத நாளதுவரை ஆக்கும் போது மகாவலி அதிகாரசபைக்கு இந்த செயற்திட்டங்களுக்காக மீண்டும் தலையீடு செய்வதற்கு இயலுமாக இருப்பதனால் எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும பொருத்தமான விதத்தில் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| 15. | நிலத்தின் மீது அமைந்துள்ள மற்றும் மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவுவதற்காக பொருத்தமான இடங்களை இனங்கண்டு சூரிய சக்தி முதலீட்டுச் செயற்திட்டங்கள் நிறுவுவதற்காக அதிகாரசபையினால் 692.6 ஹெக்டயார் தரைப் பகுதியொன்று கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 28 திகதி வரை 33 முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 28 திகதி அளவில் அவற்றின் 08 முதலீட்டாளர்கள் | 2023 | காணிகள் வழங்கும் குறிக்கோள், அபிவிருத்தியின் பின்நடவடிக்கை மற்றும் அபிவிருத்தி செய்யாத காணிகளை மீண்டும் உரித்தாக்கி பொருத்தமான கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். | இந்த செயற்திட்டத்திற்கான முறையான அதிகாரியாகிய இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையாகும். சூரிய வலு உற்பத்தி ஆரம்பிக்கும் போது இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் ஆரம்ப இணக்கப்பாட்டினை பெற்றுக்கொண்டு பின்னர் குறிப்பிட்ட சுற்றாடல் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் கட்டாயமாகும். மேலும், உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்காக இலங்கை மின்சார சபை இணங்க வேண்டியிருந்ததுடன், அதன்படி, | இணங்கியவாறு அபிவிருத்தி அலுவல்களை நிறைவேற்றியிருக்காத காணிகளை மீண்டும் உரித்தாக்கியிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாத்திரம் மின் உற்பத்தியில் ஈடுபட்டடிருந்தனர். செயற்திட்டத்தை ஆரம்பித்திருக்காத காணிகளை வேறு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்காக் உடன்படிக்கை கையொப்பமிடப்பட வேண்டும். கொவிட் தொற்றுநோய் மற்றும் அதன் பினனர் ஏற்பட்டிருந்த பொருளாதார பின்னடைவின் மத்தியில் முதலீட்டாளர்கள் முன்வராமை காரணமாக இந்த விடயம் கால தாமதம் ஆகிய போதிலும் தற்போது கணிசமான முன்னேற்றம் ஒன்றினை அடைந்துள்ளது. | |
| 16. | சீ வலையத்தில் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த 85.42 ஹெக்டயர் காணி முறைசாரா விதமாக பிறர் மயமாக்கப்பட்டிருந்தது. | 2023 | முறைசாராத முதலீட்டுச் செயற்திட்டங்கள் அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மகாவலி அதிகாரசபை அறிந்திருக்காமல் அனுமதியின்றி முறைசாரா விதமாக பிறர் மயமாக்கிய முதலீட்டுச் செயற்திட்டங்கள் அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இரத்துச் செய்யும் அலுவல்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | காணிகளை இரத்துச் செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 17. | வளவ வலையத்தின் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த 206 ஏக்கர் காணி 2024 மே 10 திகதி அளவில் விடுவிக்கப்பட்டு 2 வருடங்களும் 11 மாத காலம் கடந்திருந்த போதிலும், எதுவித அபிவிருத்தியும் மேற்கொண்டிருக்காதது டன், குத்தகை உடன்படிக்கைகளை | 2022<br>2023 | முழுமையாக அபிவிருத்தி செய்யாத செயற்திட்டங்களை இரத்துச் செய்து அதற்கான காணிகளை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும். | முதலீட்டாளர்களின் குத்தகை அனுமதியை இரத்துச் செய்து குறை பயன்பாட்டுக் காணிகளை மகாவலி அதிகாரசபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், சந்திரவாவிப் | அபிவிருத்தி அடையாத செயற்திட்ட காணிகள் இரத்துச் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | பிரிவின் 2022 ஆண்டில் வழங்கியிருந்த புதிய முதலீட்டுக் காணிகள் பகிர்ந்தளித்தல் மேற்கொண்டிருந்த போதிலும், காணிகளை பெற்றுக்கொண்டிருநத முதலீட்டாளர்களினால் அந்தக் காணிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்காமையால் குத்தகை தொகையை செலுத்தி அபிவிருத்தி அலுவல்களை மேற்கொள்ளும் படி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், எதிர் காலத்தில் இவர்களின் குத்தகை உரிமையை இரத்துச் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 18. | கொய்யா பயிர்ச் செய்கைக்காக வழங்கியிருந்த சுமார் 10 ஏக்கர் பரப்பளவான காணியை குத்தகையாளரினால் பயிர்ச் செய்யப்படாமல் பின்னர் தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 30 இலட்சத்திற்கு சட்ட ரீதியற்ற முறையில் விற்பனை செய்து அந்த 10 ஏக்கருக்கு மேலதிகமாக மேலும் இணைந்து காணப்பட்ட சுமார் 08 ஏக்கர் அளவொன்று தனது கம்பனி அந்தப் பயிர்ச் செய்கை அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த | 2023 | முதலீட்டாளர்களின் குத்தகை உரிமையை இரத்துச் செய்து நிலுவை குத்தகை தொகையை அறவீடு செய்ய வேண்டும். | கொய்யா பயிர்ச் செய்கைக்காக வழங்கியிருந்த சுமார் 10 ஏக்கர் தரைப் பகுதிக்கு மேலதிகமாக மேலும் சுமார் 08 ஏக்கர் அங்கீகாரம் இன்றி மிகையாக பயிர்ச் செய்கை அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த இந்த ஆட்களினால் காணியை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைத்து அதிலிருந்து அகன்று செல்லாமை காரணமாக | குத்தகை உரிமையை இரத்துச் செய்து நிலுவை குத்தகை தொகையை அறவீடு செய்தல் மேற்கொண்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | து. | | | உரித்தினை திருப்பிப் பெற்றுக்கொள்வதற்கான சட்டத்தின் கீழ் தொடர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| 19. | இந்தக் காப்புப் பிரதேசத்தின் கிழக்கு எல்லையில் இரண்டு / மூன்று ஏக்கர் எண்ணிக்கையொன்று நபரொருவரினால் அங்கீகாரம் இன்றி அனுபவித்து வருவதுடன், அதில் மா, தென்னை போன்ற நீண்ட காலப் பயிர்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தபுத்தேகம பிரிவின் முகாமையாளரினால் இது தொடரபாக வதிவிட திட்ட முகாமையாளருக்கு அறிவுறுத்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 25 திகதி வரை அந்த அங்கீகாரமற்ற பயிர்ச் செய்கையாளர்களை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்வு ரீதியான பிரதேசங்கள் மற்றும் வலையங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். | இந்த காப்பின் கிழக்கு எல்லையில் இரண்டு, மூன்று ஏக்கர் அளவொன்று நபரொருவரினால் அங்கீகாரம் இன்றி அனுபவிக்கப்பட்டு வருவதுடன், அதில் மா, தென்னை போன்ற நீண்ட கால பயிர்கள் பயிர்ச் செய்யப்பட்டுள்ளதுடன், அந்த அங்கீகாரமற்றவரை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பேன். | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்வு ரீதியான பிரதேசங்களை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 20. | 1995 ஜுலை 17 திகதி தனியார் கம்பனி ஒன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்த மூ.பி.ம.ஹ.4971 காணியின் துண்டு இலக்கங்கள் 03 மற்றும் 05 காணிப் பகுதிகள் அந்தக் கம்பனியினால் பிஸ்கட் கம்பனி ஒன்றிற்கு முறைசாரா விதமாக பிறர் மயமாக்கப்பட்டிருந்ததுடன், குத்தகை தொகையை | 2023 | புதிய குத்தகை உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கும் காணியை பெறுமதி மதிப்பீடு செய்து நிலுவை குத்தகை அறவீடு செய்தல் மேற்கொள்ள வேண்டும். | முறைசாரா விதமாக அனுபவித்து வரும் தற்போதைய அனுபவிப்பாளரின் பெயரில் அதனை முறைப்படுத்துவதற்காக விசாரணை ஒன்று நடாத்துவதற்கு வதிவிட திட்ட முகாமையாளரின் அங்கீகாரத்தை வேண்டி எனினும், ஜனாதிபதிச் செயலாளரின் | புதிய குத்தகை உடன்படிக்கை மேற்கொண்டு நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலுத்துவதையும் புறக்கணித்திருந்தது. இதன் காரணமாக 2019 நவம்பர் 06 திகதி பணிப்பாளர் நாயகத்தினால் அந்த தெரிவு பொறுப்பினை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்தக் கம்பனி 2023 நவம்பர் 31 திகதி அளவில் இந்தக் காணியில் 75 சதவீதத்திற்கு மிகையான அதாவது முழுமையான அபிவிருத்தி நிலைமைக்கு அபிவிருத்தி செய்து வருமானம் உழைத்திருந்த போதிலும், காணியின் பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக்கொண்டு குத்தகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் அதிகாரசபைக்கு பெற வேண்டிய வருமானத்தை இழந்திருந்தது. | | | 2021.11.11 திகதிய கடிதத்தின் மூலம் புதிய காணிகள் விடுவித்தல் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் தற்போதைய அனுபவிப்போரின் பெயரில் குத்தகை உரிமையை முறைப்படுத்துவற்காக விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை. ஜனாதிபதி செயலத்தினால் மேற்கூறிய கடிதத்தின் மூலம் விதித்திருந்த தடையை அகற்றிய பின்னர் தற்போதைய அனுபவிப்பாளரின் பேரின் குத்தகை உரிமையை முறைப்படுத்துவதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | |
| 21. | வெனிலா, மிளகு, கருவா மற்றும் இஞ்சி சாரந்த உற்பத்தி தயாரிப்பு நிலையம் ஒன்று நிறுவுவதற்காக கொத்மலே கடதொர குடியிருப்பில் 0.226 ஹெக்டயர் கொண்ட காணியொன்றை தனியார் கம்பனி ஒன்றிற்கு 2021 ஜனவரி 05 திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணி அல்லது கட்டிடத்திற்காக பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொண்டு அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தை அறவீடு செய்திருக்கவில்லை. | 2023 | குத்தகை உடன்படிக்கைக்கு அணுகுவதற்கும் காணியை பெறுமதி மதிப்பீடு செய்து நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த முதலீட்டாளருக்கு ஏற்றுமதி பயிர்கள் தயாரிப்பு கைத்தொழிற்சாலையொன்று நிறுவக்கூடிய வகைகள் காணியின் அனுபவிக்கும் உரிமை ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், குத்தகையை அறவீடு செய்வதற்கு முறைப் பிரகாரம் அரச பெறுமதி மதிப்பீடு ஒன்று அல்லது முறையான அங்கீகாரம் ஒன்று கிடைத்திருக்கவில் | குத்தகை உடன்படிக்கைக்கு அணுகியிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | லை. எனினும், இவர்கள் காணியை அனுபவிப்பதனால் மற்றும் அரசுக்கு கட்டணம் அறவிடப்படாமையால் மொத்த மதிப்பீடொன்று பெற்றுக்கொள்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யயப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| 22. | அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்ட திகன விலேஜ் ரிஸோட் 1993 ஜூன் 01 திகதி தனியார் கம்பனி ஒன்றிற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் 07 ஏக்கர் காணி மற்றும் அனைத்து வீட்டுத் தளபாடங்களுடனான பிரதான மண்டபக் கட்டிடம், நீச்சல் தடாகம், விளையாட்டறை, தங்கும் அறைகளுடன் வளாகம் சாட்டப்பட்டிருந்தது. மூதலீட்டுத் தரப்பினரினால் சட்டரீதியாக வழங்கப்பட்டிருந்த அளவிற்கு மேலதிகமாக மேலும், சுமார் 03 ஏக்கர் பிரதேசமொன்றும் அனுபவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. 2005 ஆண்டின் போது கம்பனி மிகையாக அனுபவித்து வரும் காணிப் பகுதியை பகிர்ந்து ஒதுக்குவதற்காக அதிகார சபை நடவடிக்கை எடுத்த போது மேற்கூறிய | 2023 | இந்த வளாகத்தை மீண்டும் உரித்தாக்கி மீண்டும் குத்தகைக்கு வழங்க வேண்டும். இந்த வளாகத்திற்கு போதியளவு பாதுகாப்பு வழங்குவதற்கும் நட்டம் தொடர்பாக பொறுப்பான தரப்பினரை இனங்காணல் மேற்கொள்ள வேண்டும். நிலுவைக் குத்தகைத் தொகை அறவீடு செய்யப்பட வேண்டும். | மகாவலி அதிகாரசபையின் அடிப்படை எதிர்ப்பினை ஏற்றுக்கொண்டு முறைப்பாட்டாளரின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் தீர்ப்பின் படி இந்த வளாகத்தின் அனுபவித்தலை பெற்றுக்கொள்வதற்கு முடியாமையால் வளாகத்தின் அங்கீகாரமற்ற உத்தியோகபூர்வ வாசஸ்தளம் மற்றும் கைவிடப்பட்ட உத்தியோகபூர்வ வீடுகளின் உரித்தினை அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்படாத உத்தியோகபூர்வ வீடுகள் மற்றும் விடுமுறை களிப்பிடங்களுக்காக 2023.01.28 திகதி அரசின் காணிகள் (உரித்தினை திருப்பிப் பெற்றுக்கொள்ளல்) சட்டத்தின் | பாதுகாப்பு மற்றும் நட்டத்தை இனங்கண்டிருக்கவில்லை. |

கம்பனியினால் சட்ட நடவடிக்கை எடுத்திருந்ததுடன், 2022 நவம்பர் 21 திகதிய வழக்குத் தீர்ப்பின் படி 2023 பெப்ரவரி 26 திகதி அல்லது அதற்கு முன்னர் விதிக்கப்பட்டவாறு வளாகத்தினை அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், முறைப் பிரகாரம் ஆதனங்களை திருப்பி ஒப்படைக்காமல் வளாகத்திலிருந்து அகன்று செல்லப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 22 திகதி அளவில் குறிப்பிட்ட வளாகத்தின் செயற்பாட்டலுவல்கள் நிறுத்தப்பட்டு வருடாமொன்று கடந்திருந்ததுடன், வளாகத்தினுள் உட்புகுவதற்கு முடியாதளவு காடுகள் வளர்ந்து காணப்பட்டதுடன், வளாகம் உட்பட ஏனைய ஆதனங்களின் பாதுகாப்புக்காக போதியளவு வேலைத் திட்டமொன்று மேற்கொண்டிருக்கவில்லை. முதலீட்டின் மூலம் இணங்கியிருந்த நலன்கள் கிடைத்திருக்காததுடன், முதலீட்டுத் தர்பபினர் 1993 ஆண்டு முதல் 20 வருட காலம் இந்த வளாகத்தில் வெளித்தரப்பினர் மற்றும் நிறுவனங்களுக்கு பல்வேறு களியாட்ட அலுவல்களுக்காக

ஏற்பாடுகளுக்கு இணங்க தெல்தெனிய நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 03 வழக்குரிய உரித்தினை தற்போது எமது அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதுடன், 78086 மற்றும் 78087 இலக்க வழக்குகளின் கட்டளைகள் 2024.10.18 திகதி வழங்கப்படவுள்ளது. இந்த வளாகத்தில் திரைக்கூடம் ஒன்று நிறுவுவதற்காக முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால் ஜனாதிபதி அலுவலகத்தின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி விடுவிக்கக்கூடாது என அறிவிக்கப்பட்டு 2023.11.03 திகதிய மீண்டும் அங்கீகாரம் இன்றிய கம்பனிக்கு 30 வருடங்களுக்கு குத்தகைக்கு கொடுப்பது தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கும் படி அறிவித்திருந்த போதிலும், அதிகாரசபைக்கு முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் வதிவிட வசதிக்காக வழங்கப்பட்டு வருமானம் உழைத்திருந்த போதிலும், அதிகார சபைக்கு எதுவித தொகையும் செலுத்தப்படாமல் பெற வேண்டிய தொகையென கணிக்கப்பட்ட நிலுவை குத்தகை தொகை ரூபா 4,500,000 தொகையாகும். | | | | |
| 23. | கொத்மலை பிரதேசத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ வீடொன்று கொத்மலை முகாம் வளாகத்தில் காணப்படும் கட்டிடம் ஒன்று மற்றும் தொரகல தோட்ட பங்களா கட்டிடங்களுடனான சுமார் 1.311 ஹெக்டயர் காணி பல சந்தர்ப்பங்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், முறையான குத்தகை உடன்படிக்கையொன்று கட்டிடங்களுக்காக அரசாங்க பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொண்டிருக்க வில்லை. கட்டிடங்களை ஒப்படைக்கும் போது அவற்றில் காணப்படும் பண்டங்கள் தொடர்பான பண்டப் பதிவுப் புத்தகம் ஏதும் நாளதுவரை ஆக்கப்பட்டு கோப்பில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த அனைத்துக் கட்டிடங்களிலும் 57 பீ இலக்கம் கொண்ட உத்தியோகபூர்வ வீட்டிலிருந்து மாத்திரம் | 2023 | குத்தகை உடன்படிக்கை மேற்கொண்டு அரச பெறுமதி மதிப்பீட்டின் மீது அந்தக் கட்டிடங்களை வாடகைக்கு கொடுத்து பண்டப் பதிவேடு தயாரிக்கப்பட்டு நிலுவைக் குத்தகை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்த வேண்டும். | முறையான குத்தகை உடன்படிக்கையொன்று இன்றி வதிவிட திட்ட முகாமையாளரின் கையொப்பத்துடனான நிபந்தனைகளுடனான காணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த கட்டிடங்களை ஒப்படைக்கும் போது கட்டிடங்களின் விபரம் பெற்றுக்கொண்டிருந்த போதிலும் பண்டப் பதிவேடொன்று காணப்படவில்லை. எதிர் காலத்தில் இந்தக் கட்டிடத்தில் காணப்படுகின்ற பண்டங்களை பதவு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். இலக்கம் 57 பீ கொண்ட உத்தியோகபூர்வ வீட்டுக்காக மாதாந்தம் ரூபா 3,000 தொகை வீதமும், பழைய தோட்ட பங்களாவிற்காக மாதாந்தம் ரூபா 10,000 தொகை வீதம் அறவீடு | கட்டிடங்களை வாடகைக்கு கொடுக்கும் போது குத்தகை உடன்படிக்கைக்கு அனுகியிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 3,000 தொகை மாதாந்த வாடகை அறவிடப்படுவதுடன், ஏனைய கட்டிடங்களிலிருந்து அதிகாரசபைக்கு வாடகைத் தொகை ஏதும் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 22 திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த ஆதனங்கள் நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்கள் எனவும், பெற வேண்டிய குத்தகைத் தொகை நிலுவை வருமானம் எனவும் இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | செய்வதற்கும் உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| 24. | பகமுன பஸ் தரிப்பிடம் நிர்மாணித்தல் ஒப்பந்த வேலை உடன்படிக்கையின் படி 2022 ஏப்ரல் 04 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 ஏப்ரல் 28 திகதி வரை அந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்திருக்காததுடன், நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தது. | 2022 2023 | திட்டமிடப்பட்ட கருமங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாண வேலை மூலப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்டிருந்த தீவிர அதிகரிப்பு மற்றும் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பண ஏற்பாடுகள் இன்மையால் இரு தரப்பினரின் இணக்கத்துடன், 2023.05.12 திகதி இரத்துச் செய்யப்பட்டது. மீதியான வேலைகளுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதுடன், பண ஏற்பாடுகள் 2025 ஆண்டில் பெற்றுக்கொள்ள முடியுமாயின் மீதியான வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. |
| 25. | கலவல யாய பிரதேசத்தில் மகாவலி | 2022 2023 | முற்பணத் தொகைகள் விரைவாக தீர்க்கப்பட | முற்பணம் தீர்க்காமை | முற்பணத் தொகைகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கிராமத்தில் பாதைகள் தயாரித்தல் மற்றும் வயற் காணிகளில் கரடு முரடான பகுதியை மிருதுவாக்குவதற்காக ரம்பகென்ஓய வதிவிட திட்ட முகாமையாலர் அலுவலகத்தினால் அம்பாறை நீர்ப்பாசன பணிப்பாளருக்கு 2013 – 2014 காலப் பகுதியில் 05 சந்தர்ப்பங்களில் ரூபா 11 மில்லியன் தொகை முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த முற்பணத் தொகையில் ரூபா 2.88 மில்லியன் தொகை 2024 ஏப்ரல் 28 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்பாக அவ்வப்போது கடிதங்கள் மூலம் நீர்ப்பாசன திணைக்களத்தினை அறிவுறுத்தப்பட்டு அந்தக் காலப் பகுதியில் கரடு முரடான பகுதியை மிருதுவாக்கப்பட்ட நிலப்பரப்பு 01 மற்றும் பொரு நிலப்பரப்பு 05 என்பனவற்றின் தகவல்கள் கிடைக்கப் பெற்ற பின்னர் தீர்த்தல் மேறகொள்ள முடியும் என அறிவிக்கின்றேன். | தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| 26. | எல் வலையத்தில் 02 மின் வேலிகள் நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 20.8 மில்லியனை விட கூடிய தொகையொன்று செலுத்தப்பட்டு 08 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் தீர்க்கப்படாத மீதியொன்றென கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் ரூபா 11,074,476 இற்கான தொகையொன்று மீதியாக காணப்படுகின்றதென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு அல்லது முற்பணத் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 2023 | முற்பணங்கள் தீர்க்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஒப்பந்தக்காரர் அனைத்துத் தகைமைகளும் (சாத்தியக்கூறு) பூரத்தி செய்திருந்தது. அவரை தெரிவு செய்யும் போது பெறுகை கோவையின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரரினால் இந்த இரண்டு ஒப்பந்த வேலைகளுக்குமாக ஒப்பந்த முகாமையாளர் என பொதுவான நபரொருவர் பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட ஒப்பந்த முகாமையாளர் களத்தில் இருக்க வேண்டிய நபரொருவராக காணப்படாமையால் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைக் குழு மூலம் அந்த | முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், ஒப்பந்தக்காரின் இணக்கப்பாட்டுடன் ஒப்பந்த முகாமைத்துவ சேவைக்காக செலுத்த வேண்டிய தொகையில் 30 சதவீதம் கழித்து ஒப்பந்த வேலை வழங்கல் மேற்கொள்ளப்பட்டது. | |
| 27. | வெளிஓய கஜபாபுரவிலிருந்து நெடுங்கேணி சந்தி வரையான பாதையை நிர்மாணிப்பத்றகாக ரூபா 390,085,714 தொகை 2018 ஆண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து கொடுப்பனவினை, தீர்க்கும் போது ரூபா 43,363,909 இற்கான மிகைக் கொடுப்பனவை வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் அறவீடு செய்வதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஏப்ரல் 18 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 2023 | முற்பணம் தீர்க்கப்பட வேண்டும். | வெளிஓய கஜபாபுரவிலிருந்து நெடுங்கேணி சந்தி வரையான பாதையை நவீனமயப்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 346,721,805 தொகையாக காணப்பட்டதுடன், மீதித் தொகையாகிய ரூபா 43,363,909 இற்கான தொகைக்காக வெளிஓய சம்பத் நுவரவில் இருந்து கஜபாபுர வரை பாதையினை 1.95KM இற்கான தூரம் காபட் பரப்பி அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது இடை நிறுத்தப்பட்டிருந்தது. மகாவலி அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய மீதித் தொகை இதுவரை கிடைத்திருக்கவில்லை. | முற்பணத் தொகை தீர்த்திருக்கவில்லை. |
| 28. | கந்தளாய் சூரியபுர மகாவலி கங்கையின் பாதுகாப்பு அணைக்கட்டுக்கு | 2023 | உடன்படிக்கையின் படி குறிப்பிட்ட கருமங்களுக்கு தேவையான | உடன்படிக்கையின் படி 06 மாத கால வரையறையுள் 103,128 கியுப் | நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சவால் ஒன்றாக படிந்திருந்த மணல் படிவு காரணமாக வெள்ள பாதுகாப்பு அணை அரிப்படைந்திருந்தது. அணைக்கட்டுக்கு எதிர்ப்பக்கமான தரையில் படிந்திருந்த மண் படிவினை அகழ்வு செய்து விற்பனை உழைக்கக்கூடிய இலாபத்திலிருந்து வெள்ள பாதுகாப்பு அணைக்கட்டை மறுசீரமைப்பதற்கான செயற்திட்டம் 2019 ஆகஸ்ட் 06 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி படிந்திருந்த 103,128 கியுப் மணலை அகற்றுதல் மற்றும் அதற்கு ஒத்த நிகழ்வாக வெள்ள பாதுகாப்பு சுவரினை மறுசீரமைத்தல் 06 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு இணங்கி 2022 ஜூலை 19 திகதி வரை பல சந்தர்ப்பங்களில் இந்த உடன்படிக்கை நீடிக்கப்பட்டிருந்தது. முக்கியமான கருமம் ஒன்றென 2019 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் 04 வருடங்களும் 07 மாதங்களும் கடந்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 07 திகதி வரை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். எண்ணிக்கைகள் சார் முரண்பாடுகளுக்காக அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | மணல் எண்ணிக்கையொன்று அகற்றுவதற்கு மற்றும் 03 அணைக்கட்டு பாதுகாப்புச் சுவர் நிர்மாணிப்பதற்காக இணங்கியிருந்தது. அவ்வாறாயினும், 2022 ஜூலை 19 திகதி அளவில் பல சந்தர்ப்பங்களில் உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2020, 2021 ஆண்டுகளின் போது ஏற்பட்ட கொரோனா தொற்றுநோய் மற்றும் எரிபொருள் நெருக்கடி எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்கு முடியாமல் போனது என குறிப்பிட்ட கம்பனியினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | ருக்கவில்லை. |
| 29. | மகாவலி வலையத்தினுள் காட்டு யானைகள் மற்றும் மனித மோதல்களை குறைப்பதற்காக மின் கம்பிகள் | 2022 2023 | புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி அதன் மேற்பார்வை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு அந்த நிர்மாண வேலை | பண்ணைகளை சுற்றி மின்வேலி நிர்மாணிப்பதற்காக அரச நிறுவனம் ஒன்றான “இலங்கை | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| தொங்கக்கூடிய விதமாக மின்வேலி நிர்மாணிப்பதற்காக மகாவலி அதிகாரசபை மற்றும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுடன் இணைந்து ஆரம்பத்தில் பீ வலையத்தில் அரலகம்வில, கந்தகாடு, சிங்கபுர இடையே மற்றும் சீ வலையத்தில் மகாவலி பயற்சி நிலையத்தை சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதற்காக முறையே ரூபா 4,844,272 தொகை, ரூபா 9,234,319 தொகை மற்றும் ரூபா 8,000,000 தொகையாக முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், இவ்வாறு ஒரு நிறுவனத்திற்கு ஒப்பந்த வேலை சாட்டுதல் மற்றும் கொடுப்பனவு செய்தல் மேற்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் மூலம் அங்கீகாரம் ஒன்று பெற்றிருக்கவில்லை. பெறுகை வழிகாட்டல் கோவையில் ஏற்பாடுகளுக்கு புறம்பாக மேற்கூறியவாறு ஒப்பந்த வேலைகள் வழங்குதல் மற்றும் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முன்னர் முற்பணம் என கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த யானை வேலிகள் உரிய முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என அதிகாரசபையின் தொழில்நுட்ப குழு | அலுவல்களை பூர்த்தி செய்ய வேண்டும். | புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு ” மகாவலி அதிகாரசபையின் பெறுகை வழிகாட்டல் கோவையின் மேல் ஒப்பந்த வேலை செய்முறை (Direact Contracting) கீழ் காணப்படும் பிரிவு 3.7.1 இற்கு இணங்க அந்த ஆணைக்குழுவிற்கு இலக்கம் 2021/04, 2021/04-16 கொண்ட 2021.04.23 திகதிய அங்கீகாரங்களின் கீழ் குறிப்பிட்ட முற்பணத் தொகைகள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அல்லது வேறு தரப்பினரால் உறுதிப்படுத்தியிருக்காமை மற்றும் உரிய முறையில் பில் பத்திரம் சமர்ப்பிக்கப்படாமையினால் முற்பணங்களை தீர்க்க முடியாதிருந்தது. மேலும், கணக்காய்வினால் பௌதீக ரீதியாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட இடங்களில் இந்த யானை வேலிகள் அழிவடைந்திருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது. | | | | |
